அலெக்சாண்டர் ரேக்கெம்சூக்

# பாட்டிசைக்கும் பையன்கள்

நாவல்



அலெக்சாண்டர் ரேக்கெம்சூக்

# பாட்டிசைக்கும் பையன்கள்

நாவல்

கபிலர் நூலகம்
சி, நா, 19

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா
தயாரிப்பு: வி. லெவின்ஸன்

АЛЕКСАНДР РЕКЕМЧУК

МАЛЬЧИКИ

*на тамильском языке*

© உரிமைப் பதிவு தமிழ் மொழிபெயர்ப்பு
''முன்னேற்றப் பதிப்பகம்'', 1974

Р $\frac{70302-331}{014(01)-74}$ 658-74

# முதற் பகுதி

கபிலர் நூலகம்
கி.நா 19

## 1

நான் பெரியவனாகி இந்தப் பெரிய உலகில் வாழ்க்கை தொடங்கியதும், சொந்தமாய்ச் சம்பாதிக்க ஆரம்பித்து எனக்கென ஓர் இருப்பிடத்தையும் பெற்றதும், முதற் காரியமாய் எனக்கு ஒரு நாய் வாங்கிக் கொள்வேன். ஏனென்றால் நாய்க்குக் கடன்பட்டவன் நான், சாகாமல் நான் உயிர் தப்பியதற்குக் காரணம் ஒரு நாய் தான்....

ஆனால் முடிவாய்ப் பார்க்கையில் என் உயிருக்காக உண்மையில் நான் என் பெற்றோருக்கே கடன்பட்டவன். என் தந்தை கென்னடி புரோஹரோவ் சேனையில் காப்டனாய் இருந்தார், என் தாய் தமாரா புரோஹரொவா சேனையில் டாக்டராய் இருந்தார். இரண்டாம் உலக யுத்தத்தின் போது இருவரும் மணம் புரிந்து கொண்டனர். யுத்தம் முடிவுற்றதும் இவர்கள் தமது படைப் பிரிவு இருந்து வந்த அஷ்ஹாபாத் நகரிலேயே தங்கி விட்டனர், நான் பிறந்தது அங்கேதான்.

1948 அக்டோபர் 6 ஆம் நாள் இரவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு அஷ்ஹாபாத் நகர் ஆட்டிக் குலுக்கப்பட்டது. நகரே நாசமாகிவிட்டது, என் பெற்றோரும் அடங்கலாய் எண்ணற்ற மக்கள் இடிபாடுகளுக்கு அடியில் புதையுண்டு உயிரிழந்தனர். யுத்தம் பூராவிலும் ஒரு தரம்கூட குண்டடிபடாமல் போராடிய என் பெற்றோர்

முடிவில் சமாதான காலத்தில் நள்ளிரவில் அமைதியாய்த் தூங்கிக் கொண்டிருக்கையில் திடுமெனத் தகர்ந்து விழுந்த சுவரால் நசுக்குண்டு மாண்டு போயினர்.

அப்படியானால் நான் மட்டும் தப்ப முடிந்தது எப்படி? நான் உயிர் தப்பி இந்தக் கதையை சொல்ல முற்படுவது எப்படி? அன்று இரவு நானும் அவர்களுடன்தான் அதே அறையில் என்னுடைய குழந்தைக் கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தேன். அந்தப் பயங்கர விபத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது, நிலநடுக்கத்தைப் பற்றியோ, அபாக்கியவாதிகளான எனது பெற்றோரைப் பற்றியோ, அதிசய முறையில் நான் உயிர் தப்பியது பற்றியோ எதுவுமே எனக்கு நினைவு இல்லை. அப்பொழுது நான் இரண்டு வயதுகூட ஆகாத குழந்தையாய் இருந்தேன்.

பிற்பாடுதான் அனாதைக் குழந்தை இல்லத்தில் என்னைப் பார்ப்பதற்காக வந்திருந்த ஓர் அன்னையிடமிருந்து முழு விவரத்தையும் தெரிந்து கொண்டேன். நடந்தது பூராவையும் நன்கு அறிந்தவர் அவ்வன்னை. ஏனெனில் அவர் எனது பெற்றோருடன் கூட அதே பிரிவில் வேலை செய்து கொண்டிருந்தவர்.

அவர் எனக்கு நிறைய தின்பண்டங்கள் கொண்டு வந்திருந்தார், பல வகையான மிட்டாய்களும் கேக்குகளும் கொடுத்தார். பிறகு இடையிடையே கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பின்வரும் கதையை என்னிடம் சொன்னார்.

எங்கள் குடும்பத்தில் மற்றோர் உறுப்பினராய் ரெக்ஸ் என்றொரு அல்சேஷன் நாய் இருந்ததாம். நாய்களுடைய இயற்கையான இயல்புக்கு ஏற்ப

இதுவும் தனது எஜமானர்களுக்கு உற்ற சேவகஞய் இருந்து வந்தது. நான் கைக் குழந்தையாய் இருந்த போதிலும் என்னிடம் அது தனிப் பாசம் கொண்டிருந்ததாம். என் பெற்ருேர் வெளியே செல்கையில் என்னை அதன் கவனிப்பில்தான் விட்டுச் செல்வது வழக்கமாம்.

அந்தப் பயங்கர நிகழ்ச்சி நடைபெற்ற இரவில் அஷ்ஹாபாத் நகரவாசிகள் தூங்கிக் கொண்டிருந்தபோது, நிலநடுக்கம் ஏற்படுவதற்குச் சில விஞடிகள் முன்னதாய், பூமியின் அடியாழத்திலிருந்து எழுந்த உறுமல் அந்த நாயின் காதில் விழுந்தது(மனிதர்களைக் காட்டிலும் முன்னதாகவே விலங்குகள் இப்படிப்பட்டவற்றைக் காதால் கேட்டு அபாயம் வருவதை நமக்கு முன்பே தெரிந்து கொண்டுவிடுகின்றன). உடனே அது என் கட்டிலுக்குள் தாவிப் பற்களால் என் சட்டையைக் கடித்து என்னைத் தூக்கிக் கொண்டு, இரவு புழுக்கமாய் இருந்ததென விரியத் திறந்து வைக்கப் பட்டிருந்த சன்னல் வழியே பாய்ந்து வெளியே ஓடிற்று. பிறகு சில விஞடிகளுக்கெல்லாம் வீடு தகர்ந்து இடிந்து விழுந்துவிட்டதாம்.

இவ்விதம் ஒரு நாய் என் உயிரைக் காப்பாற்றியது. அஷ்ஹாபாத் வாசிகள் அந்த நாயின் இந்த அதிசயச் செயலை இன்றுங்கூட தம்மிடையே ஒருவருக்கொருவர் கூறி வியந்து கொள்வதாய்ச் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஆனுல் இதன்பின் நடந்தது என்ன? நான் ஒரு குழந்தை இல்லத்துக்கு அனுப்பப்பட்டேன்—அஷ்ஹாபாதில் அல்ல, லீபெத்ஸ்கில் இருந்த ஓர் இல்லத்துக்கு அனுப்பப்பட்டேன். நிலநடுக்கத்தின் விளைவாய் என்னைப் போல் அஞதைகளாகி

விட்ட குழந்தைகள் ஏராளமாய் இருந்ததால் எங்களைப் பல்வேறு நகரங்களுக்கும் அனுப்பி எங்களுடைய பராமரிப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது.

என் பெற்றோருக்கு உறவினர்கள் சிலர் இருந்தது தெரிய வந்ததாம். நிலநடுக்கத்துக்குப் பிறகு இடிபாடுகளுக்கு அடியிலிருந்து மீட்கப் பட்ட சொற்ப உடைமைகளைத் தம்மிடையே பங்கிட்டுக் கொள்வதற்காக மாமாக்களும் அத்தைகளும் சிலர் அஷ்ஹாபாதுக்கு வந்தார்கள். ஆனால் இவர்களில் யாரும் என்னை அழைத்துச் சென்று வளர்க்க விருப்பம் தெரிவிக்க வில்லை. என்னை மதிப்புக்குரிய குடிமகனுக்கும் பொறுப் பைத் தம்மைக் காட்டிலும் அரசே திறம்பட நிறைவேற்றுமென அவர்கள் கருதினார்கள் போலும். அவர்கள் கருதியது அப்படி ஒன்றும் தவறாகிவிடவில்லை என்றே நான் சொல்வேன்.

என்னைப் பார்ப்பதற்காக லீபெத்ஸ்குக்கு வந்திருந்த அதே அன்னையிடமிருந்துதான் நான் இவர்களைப் பற்றி தெரிந்து கொண்டேன். மிட்டாய் களும் கேக்குகளும் மட்டுமின்றி அவ்வன்னை எனக்கு என் தாய்தந்தையரின் புகைப்படத்தை யும் கொடுத்துச் சென்றார். பதக்கங்களும் அடங் கலாய் இராணுவ உடுப்புகளில் என் பெற்றோர் இருவரும் இளம் வயதினராய், சிரித்த முகத் துடன் அருகருகே நிற்பதை இந்தப் புகைப்படம் காட்டுகிறது. நான் பெரியவனாகி எனது சொந்த ஊருக்குச் செல்லும்போது என் பெற்றோரின் சமாதிகளைப் பார்த்துவிட்டு வரும் பொருட்டு அவ்வன்னை, என் பெற்றோர் அடக்கம் செய்யப் பட்டிருக்கும் இடுகாட்டின் முகவரியையும் அவர்

களது சமாதிகளின் எண்ணையும் இந்தப் புகைப் படத்தின் பின்புறத்தில் குறித்துக் கொடுத்தார்.

அரிய பொக்கிஷமாய் நான் இந்தப் புகைப் படத்தைப் பாதுகாத்து வருகிறேன். காரணம் என் தந்தையையும் தாயையும் நினைவுபடுத்துவதற்கு இது ஒன்றுதான் என்னிடமுள்ளது என்பது மட்டு மல்ல; பள்ளிப் படிப்பை முடித்து நான் வேலை செய்ய முற்பட்டு நீண்ட பயணம் போய் வரு வதற்கு வேண்டிய பணத்தைப் பெற்றதும் நிச்சயம் அஷ்ஹாபாதுக்குச் சென்று என் பெற்றோரின் சமாதிகளைப் பார்க்க வேண்டுமென இருக்கிறேன் என்பது மட்டுமல்ல.

இல்லை, இதன்றி இன்னொரு காரணமும் இருக் கிறது. அனாதைக் குழந்தை இல்லத்தில் வளர்ந்த என்னைப் போன்றவர்கள் பெற்றோரைப் பற்றிய கேள்வியால் ஓயாமல் அலைக்கழிக்கப்படுகிறவர் கள். ஆரம்பம் முதற் கொண்டே வேறு எதைக் காட்டிலும் இந்தக் கேள்விதான் இவர்களை வருத்து கின்றது. அவர்கள் யார்? ஏன் அவர்கள் தமக்கு இல்லாமற் போனார்கள்? எங்கே போனார்கள்? தன்னைப் பெற்றவர்கள்—தன் தாயோ, தன் தந்தையோ—தம் குழந்தையைத் தொலைத்துக் கட்டிவிட்டுப் போயிருக்க முடியுமென, ரயில் நிலையத் தங்குமிடத்திலோ எங்காவது வெளிவாயி லிலோ விட்டொழித்துவிட்டு நடையைக் கட்டி யிருக்க முடியுமென நாங்கள் யாரும் நம்புவதில்லை, அப்படி நம்பும்படியான ஒரு நிலைக்கு வர முடிவ தில்லை. குழந்தை இல்லத்திற்கு வந்து சின்னஞ் சிறு மூட்டையை நீட்டி இதை வாங்கிக் கொள் ளுங்கள், எங்களுக்கு வேண்டாம், உங்களிடமே இருக்கட்டும், எங்களுக்கு வேறு திட்டங்கள் இருக்

கின்றன என்று கூறிச் சென்றுவிட முடியுமென நம்ப முடிவதில்லை.

இருப்பினும் உண்மையில் பார்ப்போமாயின், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இம்மாதிரியே நடைபெற்றிருக்கும். ஆனால் எங்களில் யாரிடமும் வந்து கைவிடப்பட்ட பிள்ளை என்பதாய் சாடையாய்க்கூட எங்களைப் பார்த்துச் சொல்லத் துணிகிறவரைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். சிறு குழந்தைகளாய் இருந்தால் உடனே உங்கள்மீது விழுந்து கடிப்பார்கள், கொஞ்சம் பெரியவர்களாய் இருப்பின் உங்கள் முகத்திலே ஓங்கி குத்து விடுவார்கள்.

உலகில் இப்படிப்பட்ட ஒரு துவக்கம் யாருக்கும் பிடித்தமாயில்லை: தொட்டில் பருவம் முதலாகவே மனித குலத்தின்மீது கசப்புணர்ச்சி கொள்ள யாரும் விரும்புவதில்லை.

எனவேதான் அனாதைக் குழந்தை இல்லத்தில் வளரும் குழந்தையானது எந்தக் கவலையுமின்றி பெற்றோர் வீட்டிலே வளரும் குழந்தைகளைக் காட்டிலுங்கூட அதிகமாய்த் தனது மூதாதையர் களைப் பற்றி தெரிந்து வைத்திருக்கிறது. இந்தக் குழந்தைக்குச் சிறு விவரங்கள்கூட விடாமல் யாவும் தெரிந்திருக்கின்றன: சிலர் யுத்தத்தின் போது பெற்றோரை இழந்துவிட்டனர், வேறு சிலரின் பெற்றோர் கடலில் உயிரிழந்தார்கள், மற்றும் சிலரது பெற்றோர் விஞ்ஞானச் சோதனைகளை மேற் கொண்டு அபாயகரமான மருந்துகளைத் தம்மீதே பயன்படுத்தியபோது சோதனைகள் துரதிர்ஷ்ட வசமாய் தவறிவிடவே உயிரிழந்துவிட்டனர்.

இந்தக் கதைகளில் பத்தில் ஒன்பது வெறுங் கற்பனையாகவே, இந்தக் குழந்தைகள் தாமே

உருவாக்கிக் கொண்டவையாகவே இருக்கும். இவர்களுடைய கற்பனைகளுக்கும் கனவுலகப் படைப்புகளுக்கும் வரம்பே இருக்காது.

இதையெல்லாம் இங்கு ஏன் கூறிக் கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் திகைப்படைய வேண்டாம்.

என்னுடைய கதை குறித்து எந்த சந்தேகத்துக்கும் இடம் இல்லாதபடி உறுதி செய்து கொள்ள வேண்டுமென்பதே எனது விருப்பம். என்னுடைய கதையும் இட்டுக் கட்டியதாகவே இருக்குமென சிலர் நினைக்கலாம். ஆனால் இதோ என்னிடம் புகைப்படம் இருக்கிறது, எப்பொழுதுமே இதை நான் வைத்திருக்கிறேன். இதன் பின்புறத்தில் சமாதிகளின் எண்ணும் முகவரியும் குறிக்கப் பட்டிருப்பதை நீங்கள் காணலாம்.

என்னைப் பார்ப்பதற்காக வந்திருந்த அந்த அன்னை என்னுடைய மாமாக்கள், அத்தைகள் ஆகியோரது முகவரிகளையும் எனக்குக் குறித்துக் கொடுத்திருந்தார். அவர்களுக்கு நான் கடிதம் எழுதும் பொருட்டும், விழா நாட்களில் அவர்களுக்கு வாழ்த்து அனுப்பும் பொருட்டும் அவர் இவற்றைக் குறித்துக் கொடுத்திருக்க வேண்டும்.

ஆனால் என் உயிரைக் காப்பாற்றிய அந்த நாய், ரெக்ஸ் என்று அழைக்கப்பட்ட அந்த அல்சேஷன் என்ன ஆயிற்று என்று அவ்வன்னையால் சொல்ல முடியவில்லை. இது நாள் வரை இதை நான் அறியாதவனாகவே இருக்கிறேன். இதைத் தெரிந்து கொள்ள பெரிதும் விரும்புகிறேன், இதற்காக எது வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன்.

அந்த நாய் என்ன ஆயிற்று?

நிலநடுக்கத்துக்குப் பிற்பாடு மிகக் கடுமையான அந்நாட்களில், வீடில்லாத மனிதர்கள் ஏராளமாய் இருந்த ஒரு நேரத்தில் வீடில்லாத நாய்களைப் பற்றி கவலைப்பட யாருக்கும் அவகாசம் இருந்திருக்காது. இவை குறித்து அப்பொழுது எவரும் நினைக்க முடியாதோராகவே இருந்திருப்பார்கள்.

ஆயினும் அந்த அருமையான நாய் அதன் எஜமானர்களை இழந்தபின் என்ன ஆயிற்று என்று நினைத்து நான் ஏங்குகிறேன். உண்ண உணவின்றி இரவில் ஊளையிட்டவாறு நகரெங்கும் அது அலைந்து திரிந்திருக்க வேண்டும்.... அன்பு உள்ளமுடையோர் யாராவது அதை அழைத்துச் சென்று வளர்த்திருப்பார்கள் என்று நினைத்துக் கொள்ள விரும்புகிறேன். அல்லது மலைகளிலுள்ள எல்லைக் காவலர்களோ, ஊர்க் காவல் படையினரோ அதை அழைத்துச் சென்றிருந்தால் இன்னுங்கூட நன்றாயிருக்கும். ஏனெனில் நாயை எப்படி வைத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிந்தவர்கள் இவர்கள். இப்படி நடந்திருந்தால் ரெக்ஸைப் பற்றி நினைக்கையில் என் மனத்துக்கு மகிழ்ச்சியாய் இருக்கும். ஆனால்.... கவனிப்பார் யாருமின்றி தெருக்களில் திரியும் நாய்களை நான் பார்த்திருக்கிறேன். நாறிப்போன குப்பைக் கூளங்களிடையே எதாவது கிடைக்காதா என்று அவை தேடியலையும். அருகே யாரும் வரக் கண்டதும், என்னைப் பார்த்து நீங்கள் பயப்பட வேண்டாம், நான் கடிக்க மாட்டேன், உங்கள் பாதையில் நீங்கள் போகலாம் என்று கூறுவது போல வாலைக் குழைத்துக் கொள்ளும்; அதே போது அருகே வருகிறவர் தம்மீது எறியும் பொருட்டு கல்லை

எடுப்பதற்காகக் குனிவாராயின் உடனே ஓட்டமாய் ஓடுவதற்குத் தயாராய் அச்சத்துடன் ஒதுங்கிச் சுவர் ஓரமாய்ச் செல்லும்.

நான் வேலை செய்ய ஆரம்பித்ததும் முதலாவது விடுமுறையை அஷ்ஹாபாதுக்குச் சென்று கழிப்பேன்; எனக்குக் கிடைக்கும் முதலாவது சம்பளத் தொகையை எனக்கு ஒரு அல்சேஷன் வாங்கிக் கொள்வதற்காகச் செலவிடுவேன், அல்சேஷன் குட்டியை வாங்கி அதற்கு ரெக்ஸ் என்று பெயரிடுவேன்.

* * *

இந்த வாய்ப்புக்காக இனி நான் அதிக காலம் காத்திருக்க வேண்டியதில்லை. பதினேழாவது வயதை நெருங்கி வந்துவிட்டேன். பள்ளிப் படிப்பை முடித்துச் சான்றிதழ் பெற வேண்டும், அதன்பின் என் விருப்பம் போல் எங்கு வேண்டுமானாலும் போகலாம்.

மாணவர் சேனையில் சேர முயற்சி செய்தால் சேர்ந்து கொள்ளலாம்தான்—சேர்த்துக் கொண்டு விடுவார்கள் என்றே நினைக்கிறேன். ஆனால் அப்பொழுது தொடர்ந்து மேலும் படித்தாக வேண்டும், மாணவர் விடுதி படுக்கைகளிடையே தொடர்ந்து இனியும் பொழுதைக் கழித்தாக வேண்டும், மாதம் இருபது ரூபிள் உதவித் தொகையைக் கொண்டு செலவுகளைச் சரிகட்டப் போராடியாக வேண்டும். போதும் அதெல்லாம், இவ்வளவு காலமாய் அனுபவித்தது போதும், மேலும் வேண்டியதில்லை.

அதற்குப் பதில் நெடுந் தொலைவுக்கு அப்பாலுள்ள அற்புதமான ஏதேனும் ஓரிடத்துக்குப்

புறப்பட்டுச் செல்லலாமென நினைக்கையில் எவ்வளவு கவர்ச்சியாய் இருக்கிறது! எனது பழைய நண்பன் ஒருவன் போய்க் குடியேறியிருக்கிருனே, அரிதாய் அவன் எழுதும் கடிதங்களில் எனக்குத் தெரிவிக்கிருனே, அது போல நானும் செய்தால் எவ்வளவு நன்ருயிருக்கும்! அங்கே வாழ்க்கை பிரமாதமாய் இருப்பதாகவும், அவனுடன் இருக்கும் பையன்கள் அற்புதமானவர்கள் என்பதாகவும், பெண்கள் வேருெரு உலகிலிருந்து வந்தவர்களாய் இருப்பதாகவும் அல்லவா எழுதுகிருன்! அது மட்டுமல்ல, மாதத்துக்கு இருநூற்று ஐம்பதல்லவா பெறுகிருனும்!

நானும் அம்மாதிரி செய்ய முடியாதா, என்ன? சிந்தையை அள்ளும் அதிசய அனுபவங்களைத் தேடிச் செல்லும் இளைஞனுகிய நான் இதற்குச் செய்ய வேண்டியதெல்லாம் ஓடிச் சென்று ரயிலில் ஏற வேண்டியதுதானே! பிறகு குப்-குப், குப்-குப்... கண்டறியாத விந்தைகள் எல்லாம் என் கண்ணெதிரே காட்சி அளிக்கும், பிறகு நான் எனது முதலாவ்து வெற்றி, முதலாவது சிறப்பு, முதலாவது காதல், முதலாவது ஏமாற்றம்... யாவற்றையும் காண்பேன்.

ஆம், சிந்தையை மயங்கச் செய்வதாய் இருக்கிறது அல்லவா?

ஆனுல், நீங்கள் நம்பினுலும் நம்பாவிட்டாலும், இந்த அனுபவங்கள் யாவும் ஏற்கனவே நான் அறிந்தவைதான்; பதினேழு வயதாகாதவனே என்ருலும் முன்பே நான் சுவைத்தவைதான்.

ஆம், யாவற்றையுமே சுவைத்திருக்கிறேன்.

தொலைதூரப் பயணங்கள், முதலாவது வெற்றி, முதலாவது சிறப்பு, முதலாவது ஏமாற்றம், முத

லாவது காதல்—யாவற்றையும், இரண்டாவது காதலையுங்கூடச் சுவைத்திருக்கிறேன்.

இன்னும் எனக்குப் பதினேழு வயதுகூட ஆகவில்லை என்றாலும், அதிர்ஷ்ட தேவி என்மீது சொரியக் கூடிய எல்லாப் பாக்கியங்களையும் ஏற்கனவே நான் சுவைத்திருக்கிறேன். எனக்கு இவை யெல்லாம் எதிர்காலத்தில் கிடைக்கப் போகிறவை அல்ல, கடந்த காலத்தில் நான் அனுபவித்தவையே!

வேடிக்கையாகவா இருக்கிறது? சில பேருக்கு அப்படி இருக்கலாம், ஆனால் எனக்கு ஒன்றும் வேடிக்கையாய் இல்லை. ஏன், இதெல்லாம் குறித்து நான் பேசுவதற்குக்கூட விரும்புவதில்லை.

அதற்குப் பதில் இசைத்தட்டைச் சுற்றவிட்டுப் பாட்டுப் பாட வைக்க விரும்புகிறேன். என்னுடைய இசைப்பெட்டி பெரிதாய்ச் சொல்லத் தக்கதாய் இல்லை, அதன் சுழல் வட்டில் கிரீச்சிடுகிறது என்பது மெய்தான். அது மட்டுமின்றி, இந்தப் பெட்டியுங்கூட என்னுடையதல்ல, பள்ளிக் கூடத்துக்கு உரியது. இசைத்தட்டும் சகிக்க முடியாதபடி தேய்ந்து போய், தொடக்கத்திலிருந்து இறுதி வரை கறகறக்கிறது, ஏனெனில் நான் அதை ஓயாமல் போட்டுக் கேட்கிறேன். ஆனால் இந்த இசைத்தட்டு எனக்கே உரியதாகும். இது சிறப்பான நாட்களைக் கண்டிருக்கிறது, நான்கு ஆண்டுகளுக்கும் அதிகமாய் அதை நான் போட்டுக் கேட்டு வருகிறேன். அப்படியும் அதன் பாட்டு இன்னமும் நீங்கள் கேட்கக் கூடியதாகவே இருக்கிறது.

இதோ கேட்டுப் பாருங்கள். முதலில் பீடிகை; பிறகு பக்க வாத்திய இசை ஆரம்பமாகிறது;

சூடு பிடித்து நடை துரிதமாகிறது; இசை அதன் உச்சி முகட்டுக்கு உயருகிறது. அதன்பின் வாய்ப் பாட்டு:

சடசடத்துச் சீறி
    இரையுது, இரையுது,
படபடத்து விசிறி
    சுழலுது, சுழலுது;
உச்சிவானை வெற்றி கொள்ள
அச்சமின்றி விண்ணுள் பாயுது...

பாடுகிறவர் எளிதில் சமாளிக்கக் கூடிய பாட்டல்ல இது. ஏனெனில் அவருடைய குரலின் வீச்சுக்கு மிகவும் அடி ஸ்தாயியில், மண்ணிலிருந்து எழுவது போல, ஆரம்பிக்கிறது. உச்ச ஸ்தாயிக் குரலுக்கு உச்ச சுரங்களிலிருந்து தொடங்குவதைக் காட்டிலும் கீழிருந்து தொடங்குவது கடினமாகும்.

பிறகு பின்னிசையின் தொனி உயருகிறது, அதே பண் உச்சத் தொனியில் மீண்டும் இசைக்கப்படுகிறது. அனேகமாய் யாருக்கும் எட்டாத உச்ச ஸ்தாயிக்கு—ஆண் குரலுக்கு எட்டாத உச்ச ஸ்தாயிக்கு—பண் உயர்ந்தெழுந்துவிடுகிறது. உச்சக் கட்டைக் குரல்கள் பலவற்றுக்கும் அந்த உச்ச ஸ்தாயி எட்டியிருக்காது. இங்குள்ள விவகாரமே இதுதான் — இந்தப் பாட்டு பெண்ணுல் பாடப்படுவதல்ல. ஆணின் துணிகர முயற்சியைப் பற்றிய இந்தப் பாட்டுக்குப் பெண் குரல் பொருத்தமற்றதாய் இருந்திருக்கும்.

ஓசையை நான் மட்டுப்படுத்த வேண்டுமென நினைக்கிறேன், ஏனென்ருல் அடுத்த அறையில் சிறு பையன்கள் தூங்கிக் கொண்டிருக்கிருர்கள்.

மூன்றும் படிவத்தைச் சேர்ந்த இச்சிறுவர்களுக்கு ஒய்வுநேரத்தின் போது நான் மேற்பார்வையாளனுய் இருக்க வேண்டியவன். பட்டப் பகலானுலும் ஒய்வுநேரம் என்ருல் இச்சிறுவர்களைப் படுக்கச் சொல்லித் தூங்க வைத்தாக வேண்டும். ஆனுல் இவர்கள் தூங்க விரும்புவதில்லை. மெள்ள எழுந்து குறும்பு செய்யத் தொடங்கிவிடுவார்கள், ஒருவருக்கொருவர் சிரிப்பு மூட்டிக் கொண்டு சிரிப்பொலி வெளியே கேட்காதபடி தலையணைகளில் வாயை வைத்தழுத்தி அடக்கிக் கொள்வார்கள். ஆனுல் நாம் உள்ளே நுழைந்ததும் அயர்ந்து தூங்குகிறவர்களைப் போல கண்களைக் கெட்டியாய் மூடிக் கொள்வார்கள், சிலர் குறட்டையுங்கூட விடத் தொடங்குவார்கள்.

இந்த முன்னணி இளைஞர்களுக்கு நான் பொறுப்பாளியாய் இருக்கின்றேன். தற்போது விடுமுறைக் காலம். அந்தோ, விடுமுறை நாட்கள் பறந்தோடி விட்டன, ஆகஸ்டின் கடைசி வாரம் வந்து விட்டது.

வெரெயா நகருக்கு அருகேதான் இவ்வாண்டு கோடையைக் கழித்தோம். இது பழங் காலத்துச் சிறு நகராகும். நீங்கள் இங்கு வந்ததில்லை, இந் நகரை உங்களுக்குத் தெரியாது. அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம், பெரிதாய் எதையும் நீங்கள் இழந்துவிடவில்லை. ஆனுல் இங்கு சுற்றிலுமுள்ள கிராமப்புறம் நன்ருகவே இருக்கிறது. புரொத்வா என்ருெரு சிறு ஆறு ஓடுகிறது. அதற்கு அப்பால் முடிவின்றி தோப்புகளும் வன வெளிகளுமாய் இருக்கின்றன. எங்களுடைய முன்னணி இளைஞர் முகாமின் பரப்பில் ஒரு பெரிய கனிச் சோலை இருக்கிறது.

என்னுடைய சன்னலுக்கு அடியிலேகூட ஆப்பிள் மரம் ஒன்று இருக்கிறது, இதில் ஆப்பிள்கள் பழுத்துவிட்டன. ஏராளமாய்க் காய்த்துப் பழுத்திருக்கின்றன, சிறுவர்கள் இவற்றைப் பறிக்க அனுமதி உண்டு. இந்த வாய்ப்பை நாங்கள் தக்கபடி பயன்படுத்திக் கொள்கிறோம், வயிறு புடைக்க வேண்டிய மட்டும் பறித்துத் தின்கிறோம். எந்நேரமும் நாங்கள் மென்று கொண்டு நிற்கிறோம். ஆயினும் நாங்கள் இம்மரத்தைத் தொடாமலே இருந்து வருவது போல இன்னமும் இதில் ஏராளமான ஆப்பிள்கள் பழுத்துத் தொங்குகின்றன, இவ்வருடம் அப்படி அளவின்றி காய்த்துப் பழுத்திருக்கின்றன. வெரெயா முழுதும், அதைச் சுற்றிலுமுள்ள கிராமப்புறங்கள் யாவற்றிலும், எங்கு பார்த்தாலும் கண்ணுக்கு எட்டிய மட்டும் ஆப்பிள் மரங்களாய் இருக்கின்றன. உள்ளூர்ச் சிறுவர்கள் கற்களுக்குப் பதிலாய் ஆப்பிள்களை விட்டெறிந்து விளையாடுகிறார்கள். புரொத்வா ஆற்றிலுங்கூட ஆப்பிள்கள் மிதந்து வருவதை எந்நேரமும் பார்க்கலாம்....

மண்ணுலகின் குரல்
விண்ணிலே ஒலிக்குது,
அன்தே,* அன்தே
என்றே அழைக்குது;
பண்ணொலி குறிக்கும்
சேதி கேட்டு
விண்ணதிரும் வண்ணம்
விரைந்து ஏகு...

---

* சரக்கேற்றிச் செல்லும் மிகப் பெரிய சோவியத் விமானம், 1960ஆம் ஆண்டுகளில் முதன் முதலாய்த் தயாரிக்கப்பட்டது.—[மொ-ர்].

நிற்க, என் சன்னலுக்கு அடியிலுள்ள ஆப்பிள் மரத்துக்கு வருவோம். கோடையின் தொடக்கத்தில் இங்கு நாங்கள் வந்தபோது ஆப்பிள் மரங்கள் எல்லாம் பூத்திருந்தன. என்னுடைய ஆப்பிள் மரத்திலும் வெண்ணிற மலர்கள் மண்டியிருந்தன. ஒவ்வொரு மலரும் காய்த்துப் பழமாகப் போகும் ஆப்பிளின் சின்னமாய் விளங்கிற்று. செவ்வொளி கலந்த அந்த வெண்ணிற மலர்ப் பந்தலை உற்று நோக்கிய போது இந்த ஒரு மரத்தில் மட்டும் எத்தனை ஆப்பிள் பழுத்துத் தொங்குமென நினைத்து மகிழ்ந்து வந்தேன். பிறகு பூக்கள் உதிர்ந்து அவற்றின் இடத்தில் சிறு உருண்டைகள் தோன்றின. விரைவில் இவை பருத்து சில நாட்களுக்கு எல்லாம் சின்னஞ்சிறு ஆப்பிள்களாயின. ஆனால் தின்பதற்கு அப்பொழுது அவை பக்குவ நிலையில் இல்லை, கண்கள் கலங்கும்படி அவ்வளவு கசப்பாய் இருந்தன. நாளொரு மேனியாய் இந்த உருண்டைகள் சிறுகச் சிறுகப் பெரிதாகிச் சென்றன.

ஆனால் ஆப்பிள்களாய் முற்றும் முன்பே இவற்றில் சிலவற்றை மரம் உதிர்த்துக் கழித்துக் கொண்டுவிடுவதைப் பிற்பாடு கண்ணுற்றேன். இரவு நேரத்தில் காற்று இலேசாகவுங்கூட வீசவில்லையென்றாலும் இவை உதிர்ந்து விழும் சப்தத்தை நான் தூங்குகையில் கேட்டு வந்தேன். காலையில் விழித்தெழுந்து பார்க்கையில், கிளைகள் நீண்டிருக்கும் தொலைவுக்கு மரத்தைச் சுற்றி இவை வளையமிட்டு இறைந்து கிடப்பது வழக்கம்.

சிறுவர்கள்தான் யாராவது சேஷ்டை செய்திருப்பார்கள், மரத்தை ஆட்டிக் குலுக்கி வேடிக்கை பார்த்திருப்பார்கள் என்று முதலில் நினைத்

தேன். மரத்தை ஆட்டியதும் இந்தக் கசப்பான பச்சைப் பிஞ்சுகள் சடசடவென கல் மாரி பொழிவது போல கொட்டுவது வேடிக்கையாகவே இருக்கும். ஆனுல் தமக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென எல்லாப் பையன்களும் உறுதியாய்க் கூறினர், இவர்களுடைய பேச்சை எப்பொழுதும் நான் நம்புகிறவன்.

ஒருவேளை இந்த மரம் எதாவது நோயால் பீடிக்கப்பட்டிருக்குமோ என்று இதன்பின் ஓர் எண்ணம் உதிக்கவே நான் கவலை கொண்டு தோட்டக்காரக் கிழவரிடம் சென்றேன். அவரை நாங்கள் ஏரபேயிச் என்று அழைத்தோம். நடந்ததைச் சொல்லி ஆப்பிள் மரத்தை வந்து பார்க்குமாறு அவரைக் கூப்பிட்டு வந்தேன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்று அவர் மரத்தையும் உதிர்ந்து கிடந்த பிஞ்சுகளையும் பார்த்துவிட்டுச் சொன்ஞர். ''இந்த மரத்துக்கு எந்தக் குறையுமில்லை, நன்ருய்த்தான் இருக்கிறது, கவலைப்படாதே'' என்ருர்.

''பிறகு ஏன் பிஞ்சுகள் இப்படி உதிர்ந்து வீணுகின்றன?''

''மகனே, சொல்கிறேன் கேள்'' என்று பெருமூச்செறிந்தவாறு எரபேயிச் பதிலளித்தார். ''எப்பொழுதுமே இயற்கை பல நிலைமைகளுக்கும் போதிய இடம் விட்டு வைக்கிறது. பலவாறும் நடைபெறக் கூடும்.... கொடுங் குளிர் தாக்கி மலர்களைக் கெடுத்துவிடலாம், ஆலங்கட்டி மழை பெய்து சேதப்படுத்திவிடலாம். பறவைகள் கொத்திப் பிஞ்சுகள் தோன்ற முடியாதபடி செய்யலாம். ஆனுல் இவ்வாண்டு கோடையில் இம்மாதிரி எதுவும் நடைபெறவில்லை, பருவநிலை நமக்கு மிகவும் சாதகமாய் இருந்துள்ளது.''

''ஆம்'' என்று தலையை ஆட்டி ஒத்துக் கொண்டேன்.

''எனவேதான் ஏராளமான பிஞ்சுகள் உதிர்ந்து விழ வேண்டியதாகிறது. எல்லாப் பிஞ்சுகளும் முற்றிப் பழுக்குமாயின், மரம் அதோகதியாகி விடும். பளு தாங்க முடியாமல் கிளைகள் முறிந்து விடும். அதனால்தான் உபரியாய் இருக்கும் பிஞ்சுகளை முன்கூட்டியே கழித்துக் கட்டிக் கொள்கிறது, பிற்பாடு பழங்களின் பளு அளவு மீறி விடாதபடி செய்து கொள்கிறது. புரிகிறதா, உனக்கு?''

''புரிகிறது'' என்றேன்.

''ஆகவே, எல்லாம் நல்லபடியாய்தான் இருக்கிறது'' என்று தோட்டக்காரக் கிழவர் இந்த உரையாடலின் முடிவில் கூறினார். ''நீ கவலைப் படாதே, யாவும் முறைப்படிதான் நடைபெறுகின்றன. உனக்கும் இங்குள்ள வாலுப் பசங்கள் எல்லோருக்கும் போதுமான ஆப்பிள் இந்த மரத்தில் கிடைக்கும், நீங்கள் விரும்பும் அளவுக்கு அதிகமாகவே கிடைக்கும். இவ்வருடம் கோடை சிறப்பானதாய் இருந்து வருகிறது.''

கிழவர் எரபேயிச் சொன்னது சரிதான்.

உபரியாய் இருந்த பிஞ்சுகளை ஆப்பிள் மரம் கழித்துக் கட்டியதும் சரிதான். முற்றிப் பழுத்து இனிய மணமும் சுவையும் கொண்டு செக்கச் சிவந்து பளிச்சிடும் பெரிய ஆப்பிள்கள் மரம் முழுதும் ஏகமாய் இன்னமும் தொங்குகின்றன.

அன்தே, அன்தே
என்றே அழைக்குது;
விண்ணதிரும் வண்ணம்
விரைந்து ஏகு...

இன்றைய பொழுதுக்கு இவ்வளவு போதும். இசைத்தட்டு கெட்டுவிடாமல் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும். இப்பொழுது இது கடைகளில் கிடைக்கக் கூடியதல்ல.

உரிமையுடன் என்னுடையது என்று இந்த இசைத்தட்டை நான் கூறிக் கொள்ளலாம். இசைப் பெட்டியைப் போல இது பள்ளிக்கூடத்துக்குச் சொந்தமானதல்ல என்ற பொருளில் இதை நான் சொல்லவில்லை, வேருெரு விதத்தில் என்னுடையது என்று சொல்லிக் கொள்கிறேன்...

இந்த இசைத்தட்டிலுள்ள குரல் என்னுடையது. ஆம், என்னுடைய சொந்த குரல்—ழேன்யா புரோஹறொவினுடைய குரல்.

## 2

லீபெத்ஸ்கிலுங்கூட நிறைய மரங்கள் இருந்தன. ஆப்பிள், செர்ரி, பறவைப் பூச் செர்ரி மரங்கள் என் நினைவில் இருக்கின்றன. ஆனுல் அந்நாட்களில் மரங்களை வேறுபடுத்தி இனங் கண்டு கூறத் தெரியாது எனக்கு. அப்பகுதியில் லிண்டன் மரங்களே மிகவும் மலிந்திருந்தன. லீபெத்ஸ்க் என்னும் பெயரே இம்மரத்திலிருந்துதான் (ருஷ்யச் சொல்லாகிய ''லீப்பா'' என்பதிலிருந்து தான்) வந்திருக்க வேண்டுமென நினைக்கிறேன்.

தலைக்கு மேலே வானத்தை மறைக்கும்படி விரிந்து பரந்த கிளைகளையுடைய அந்தப் பெரிய மரங்கள் இன்றும் தெளிவாய் என் நினைவில் இருக்கின்றன.

ஆனுல் குழந்தை இல்லத்தில் நான் கழித்த என் வாழ்வின் அந்தப் பகுதி குறித்து சிற்சில

அற்ப விவகாரங்களைத் தவிர எனக்கு இப்பொழுது அதிகம் நினைவில்லை.

''நினைவு இழை'' என்பதாய்ச் சொல்வார்கள். என்னைப் பொறுத்த வரை இந்த ''இழையின்'' துவக்கம் மிகமிக எளிமையானது—எங்களுடைய குழந்தை இல்லத்துக் கம்பளிப் போர்வைகளின் ஓரத்தை தைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்த வெள்ளை நூலே அன்றி வேறு எதுவுமல்ல அது. இரவில் நான் இந்தக் கம்பளிகளில் ஒன்றைத்தான் இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்குவது வழக்கம். பகலில் எங்களுடைய ஒரு மணி ஓய்வு நேரத்தின்போது (ஆம், படுக்கையிலே படுத்திருக்க வேண்டிய இந்த ஓய்வு நேரம் எங்கள் குழந்தை இல்லத்திலும் அனுசரிக்கப்பட்டு வந்தது) இந்த நூல் எனக்கு ஓர் அரிய பொழுதுபோக்கு உத்தியாய் அமைந்து அந்த ஒரு மணி நேரத்தை விரைவில் கழிப்பதற்கு உதவி செய்தது. அந்த வெள்ளை நூலை நான் இரகசியமாய்ப் பிரித்தெடுத்துக் கொண்டு கம்பளிக்கடியில் படுத்திருப்பது வழக்கம். அதைப் பிரித்தெடுப்பது எளிய காரியமல்ல, ஏனெனில் கம்பளியின் ஓரத்திலிருந்த அந்தத் தையல் சிக்கலான பின்னல் தையலாகும். நெடு நேரம் செய்ய வேண்டிய வேலை அது. ஒரு மணி ஓய்வு நேரத்தில் இரண்டு மூன்று தையல்களுக்கு மேல் என்னால் பிரித்தெடுக்க முடிந்ததில்லை. அந்தக் கம்பளியில் குறைந்தது நூறு தையல்களாவது இருந்திருக்கும்—அந்நாட்களில் எனக்கு நூறுக்கு மேல் எண்ணத் தெரியாது. அதோடு கம்பளியின் இரு ஓரங்களிலும் இந்தப் பின்னல் தையல்கள் போடப்பட்டிருந்தன. ஆகவே தலைப் பக்கத்து ஓரத்தைப் பிரித்தெடுத்தபின் கால் பக்

கத்து ஓரத்தில் வேலையைத் தொடங்கலாம். இந்த வேலை நெடுங் காலத்துக்கு, மிக நெடுங் காலத்துக்கு எனக்கு ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்குப் போதுமானதாய் இருந்திருக்கும். சிக்கல் வாய்ந்த இந்தப் பின்னல்களை ஓயாமல் தினமும் பிரித்தெடுத்து வந்த நான் கவலையின்றி எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்க முடிந்தது, அந்நாட்களில் எதிர்பாராத திடீர் மாற்றங்கள் ஏற்பட முடியுமென நினைக்க வழியில்லை.

ஆயினும் நான் வேலை தொடங்கிய அந்தக் கம்பளியிலிருந்து ஓரத் தையலை முழு நீளத்துக்கும் பிரித்தெடுக்க முடியவில்லை—தலைப் பக்கத்துத் தையலில் பாதி நீளம் மட்டும்தான் பிரித்தெடுத்தேன், அதற்குள் இந்த வேலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதாகிவிட்டது.

* * *

நாங்கள் எல்லோரும் ஒரு நாள் குழந்தை இல்லத்தின் பெரிய கூடத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டோம். விளையாடுவதற்கும் நடனமாடுவதற்கும் பாட்டுப் பாடுவதற்கும் நாங்கள் இந்தக் கூடத்தில்தான் கூடுவது வழக்கம். காலை உடற் பயிற்சிகளையும் இங்குதான் செய்து வந்தோம்.

அது ஒரு பெரிய அறை, பலநிறக் காகிதக் கொடிகளாலும் தோரணங்களாலும் சுவர்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. குழந்தைகளாகிய நாங்கள் கத்தரித்து ஒட்டித் தயாரித்தவை அவை. அங்கு சுவரில் விளதீமிர் உலியானொவின் படம் ஒன்றும் மாட்டப்பட்டிருந்தது. லெனினைப் போவது தெரிவதற்கு நெடுங் காலத்துக்கு முன்பு

சுருட்டை முடிச் சிறுவனுய் இருந்ததைக் காட்டிற்று அந்தப் படம்.

பியானேவும் இந்தப் பெரிய அறையில்தான் இருந்து வந்தது. வாய்ப்பாட்டு, நாட்டியப் பாடங்களின் போது எங்கள் இசை ஆசிரியர் ரோசா மிஹாய்லவ்னு இந்தப் பியானேவை வாசிப்பார். பாடம் முடிந்ததும் உடனே அது மூடிப் பூட்டப் பட்டுவிடும்.

ஆனல் முன்பெல்லாம் அது பூட்டப்படாமல் தான் இருந்து வந்தது. இந்தக் கூடத்தின் வழியே செல்லுகையில் எங்களில் யாருக்காவது அடங்காத ஆசை ஏற்பட்டுப் பியானே மூடியை உயர்த்திக் கட்டைகளைத் தட்டி லா-ல-ல-லா என்று இரண்டொரு மெட்டிசைப்பது வழக்கமாய் இருந்தது.

நானும் இவ்விதம் மெட்டிசைத்துப் பார்ப்பதுண்டு. ஆனல் கூடத்தின் வழியே செல்லுகையில் போகிற போக்கில் இதைச் செய்வதில்லை, அதற்குப் பதில் சுற்றும் ஆசனத்தில் ஏறி நன்ருய் அமர்ந்து கொண்டு முறைப்படி வாசிக்க முற்படுவது வழக்கம். வானெலியில் நான் கேட்டிருந்த பாட்டுகளை — எங்கள் படுக்கைக் கூடத்தில் இணைப்பு ஒலிபெருக்கி ஒன்று இருந்தது—ஒற்றை விரலால் கட்டைகளை அழுத்தி இசைக்க முயன்றேன். தக்க வெள்ளைக் கட்டைகளையும் கறுப்புக் கட்டைகளையும் தேடிப் பிடித்து அழுத்திச் சொற்களின்றி நாதங்களின் வடிவில் பாட்டை உருவாக்கி மெட்டை இசைக்க முடிந்தபோது, அது மெய் சிலிர்க்கச் செய்யும் அனுபவமாய் இருந்தது. ஆரம்பத்தில் அளவு மீறி உச்சியிலோ அடியிலோ தொனிக்கும் நாதத்தை எழுப்பி அடிக்கடி தவ

றிழைக்கவே செய்தேன். இவ்வாறு நேர்ந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் துணுக்குற்றுவிடுவேன், யாரோ என்னை நறுக்கெனக் கிள்ளியது போல, அல்லது தலையில் குட்டியது போலத் திடுக்குற்றுவிடுவேன்... எங்கள் குழந்தை இல்லத்தில் இம்மாதிரியான சேஷ்டைகள் சகஜமாய் நடைபெறும்.

ஆனால் சிறுகச் சிறுக இந்த எண்ணற்ற கட்டைகளிடையே எப்பொழுது எதை அழுத்த வேண்டுமென்பதைக் கற்றுக் கொண்டேன். அவை யாவற்றையும் ஒருவாறு அறிந்து கொண்டு, முடிவில் எந்தத் தந்தம் எப்படிப்பட்ட நாதமெழுப்புமென்பதை அதை அழுத்திப் பார்க்கும் முன்பே ஊகிக்கத் தெரிந்து கொண்டுவிட்டேன். பிறகு இன்னொரு அதிசயத்தையும் கண்டு கொண்டேன்: ஒரே மெட்டைக் கட்டை வரிசையின் வலப் பகுதி, இடப் பகுதி, நடுப் பகுதி ஆகிய எதிலும் வாசிக்கலாம் என்பதையும் கண்டு கொண்டேன். ஒரேயொரு வித்தியாசம் என்னவெனில், பியானோவின் இடக் கோடியில் வாசிக்கையில் அது தடித்த உருவமும் தாடியும் கொண்ட ஒருவர் பாடுவது போல தொனித்தது; வலக் கோடியில் வாசிக்கையில் அது மனித குரலாகவே இல்லாமல் ஏதோ குருவியின் கீதத்தைப் போல, கானரியை ஒத்தச் சின்னஞ் சிறு குருவியின் பாட்டைப் போல ஒலித்தது. ஆனால் நடுப் பகுதியில் வாசிக்கையில் தொனி மிகக் கச்சிதமாய் இருந்தது.

ஆனால் எவ்வளவு காலம்தான் ஒரே விரலைக் கொண்டு ஒவ்வொரு கட்டையாய் அழுத்திப் பாட்டிசைக்க முடியும்—எனக்கு அலுத்துப் போய் விட்டது. இன்னும் எத்தனையோ விரல்கள் இருக்

கின்றனவே, கைக்கு ஐந்து வீதம் இருக்கின்றனவே! இவையெல்லாம் ஏன் சும்மாயிருக்க வேண்டும்? ஆகவே யாவற்றையும் செயல்பட வைத்தேன். பத்து விரல்கள் சேர்ந்து செயல்பட்டால் பத்து கட்டைகளை அழுத்தி நாதங்களை எழுப்பிக் கும்மாளமடிக்கச் செய்யுமே. ஆனால் தொடக்கத்தில் என் முயற்சிக்கு ஏனையச் சிறுவரும் சிறுமிகளும் வாசித்த போது கிடைத்ததே அதே பலன் தான் கிடைத்தது. என்ன செய்கிறோம் என்று சிறிதும் கவலைப்படாமல் இவர்கள் உள்ளங்கைகளை வைத்தழுத்திக் காது அடைக்கும்படி பூம், பாமென்று கர்ணகடூர சப்தமெழுப்புவது வழக்கம்!

ஆனால் பாடுபட்டு முயற்சி செய்து இனங் கண்டு கொண்டு, படிப்படியாய் நான் முன்னேறினேன். சரியான கட்டைகளைத் தேடிப் பிடித்து ஒரு வகை நாத வரிசையில் அவற்றை இணைத்திட முற்பட்டேன். இங்கு இந்த நாதம் நன்றாயிருக்கிறது, ஆனால் இதோ இன்னொன்று ஒலிக்கிறதே இதை விலக்கியாக வேண்டும். சரி, இது எப்படி? ஆகா, அருமையிலும் அருமையாய் இருக்கிறதே! பண் பளிச்சிட்டு மின்னி இனிமையிலும் இனிமையானதாகி நிறைவு பெற எனக்கு வேண்டிய நாதம் அல்லவா இது!

கூடத்திலே இருந்து வந்த அந்த அதிசய இசைப் பொறியுடன் எனக்கு ஏற்பட்ட அந்த ஆரம்பப் பரிச்சயம் பிற்பாடு எப்படி வளர்ச்சியுற்றிருக்குமென நான் கூறுவதற்கில்லை. ஏனெனில் அது அகால முடிவுக்கு வர நேர்ந்தது. ரோசா மிஹாய்லவ்னா தான் இல்லாத போது குழந்தைகள் பியானோவைப் படாத பாடு படுத்துவதாய் எங்கள்

இல்லத்தின் முதல்வரிடம் புகார்செய்தார். இதன் பின் பியானே கெட்டியாய் மூடிப் பூட்டப்பட்டு விட்டது.... என்னை இது துயரில் ஆழ்த்திற்று, ஆனால் உயிரை விட்டுவிடவில்லை, மீண்டெழுந்து விட்டேன்.

நிற்க, நான் கூறத் தொடங்கிய விஷயத்துக்குத் திரும்பி வருகிறேன். அன்று நாங்கள் எல்லோரும் கூடத்துக்குள் அழைத்து வரப்பட்டு இரு வரிசையில் நிறுத்தப்பட்டோம். பிறகு ஒரு சிறு சாவியைக் கொண்டு ரோசா மிஹாய்லவ்னா பியானேவின் மூடியைத் திறந்து வைத்துவிட்டு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். எங்கள் இல்லத்தின் முதல்வராகிய வேரா இவானெவ்னாவும் கூடத்துக்குள் வந்தார். நாங்கள் பாடுவதைக் கேட்பதற்காகவும், ஆடுவதைப் பார்ப்பதற்காகவும் அடிக்கடி இங்கு வருகிறவரே ஆதலால் இப்பொழுது அவர் வந்ததில் விசேஷம் ஒன்றுமில்லை.

ஆனால் விசேஷமாய் இருந்தது என்னவெனில், அவர் தம்முடன் ஒரு ''பிரதிநிதியையும்'' அழைத்து வந்திருந்தார். எங்கள் குழந்தை இல்லத்துக்கு வரும் முதியோர் எல்லோருமே ''பிரதிநிதிகள்'' என்பதாகவே அழைக்கப்படுவது வழக்கம். ''இன்று பிரதிநிதி ஒருவர் வருகிறார், ஆகவே மதிய உணவு நேரத்தின்போது எல்லோரும் என்றையும்விட அமைதியாய் இருக்க வேண்டும், நல்லபடியாய் நடந்து கொள்ள வேண்டும்'' என்றே, ''குழந்தைகளே, இன்று படுக்கைக் கூடத்துக்குப் பிரதிநிதி ஒருவர் வந்து பார்வையிடப் போகிறார், தவறாமல் எல்லோரும் படுக்கைகளில் படுத்திருங்கள், கண்களைக் கெட்டியாய் மூடிக் கொண்டு, வலக் கையைக் கன்னத்துக்கு

அடியிலும் இடக் கரத்தை வெளியே போர்வை யின் மீதும் வைத்து முறைப்படித் தூங்குங்கள்'' என்றே அறிவிக்கப்படும்.

இந்தப் பிரதிநிதிகள் அவ்வப்பொழுது எங்கள் இல்லத்துக்கு வருகை தந்து எங்களுக்காக வைக் கப்பட்டிருக்கும் சாப்பாட்டைப் பார்வையிடுவார் கள், கண்களைக் கெட்டியாய் மூடிக் கொண்டு நாங்கள் தூங்குவதைக் காண்பார்கள். நாங்கள் நல்லபடி கவனித்துக் கொள்ளப் படுகிறேமா, சமையற்காரிகள் எங்களுக்குச் சரியானபடி சாப் பாடு போடுகிறர்களா என்பதைப் பார்த்துச் செல்லும் பொருட்டே இவர்கள் வருகை தந்தார் களென நினைக்கிறேன். ஆனல் அவர்கள் வந்து பார்வையிட்டுச் சென்றதில் அர்த்தம் இருந்த தாய் எனக்குப் படவில்லை. ஏனெனில் நாங்கள் நல்லபடியாகவே கவனித்துக் கொள்ளப்பட் டோம்; சமையற்காரிகள் எங்களுக்குரிய உண்டி களில் எதையும் சாப்பிட்டுவிடவில்லை—தனியே தமக்கு அவர்கள் சமைத்துக் கொண்டார்கள்.

ஆனல் அன்று வருகை தந்த பிரதிநிதி சமை யலறைக்குச் சென்று எங்களுடைய சாப்பாட்டைப் பார்வையிடவில்லை, எங்களுடைய படுக்கைக் கூடத்துக்கு வந்து எட்டிப் பார்க்கவில்லை. அதற்குப் பதில் நாங்கள் நடனமாடுவதற்காகவும் பாடு வதற்காகவும் கூடிய அந்தப் பெரிய கூடத்துக்கு வந்து நின்றர். நெடு நெட்டையாய் இருந்தார், வட்ட வடிவமுள்ள மூக்குக் கண்ணுடி போட்டிருந் தார். தலை நரைக்கத் தொடங்கியிருந்ததோடு கொஞ்சம் வழுக்கையாகவும் இருந்தது. ஏற் கனவே அகன்று பெரிதாய் இருந்த அவருடைய நெற்றியை மேலும் பெரிதாக்க விரும்பியது போல

அவருடைய நரை கலந்த முடிகள் பின்வாங்கிச் சென்று கொண்டிருந்தன. இந்தப் பிரதிநிதி சாம்பல் நிற உடுப்பணிந்து புள்ளித் திட்டுகளையுடைய நீல நிற டை கட்டியிருந்தார்.

அவர் எங்களுக்கு எதிரே ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். வேரா இவானொவ்னு இன்னொரு நாற்காலியில் அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு மெதுவாய் அவரை ஏதோ கேட்டார். பிரதிநிதி தலையை ஆட்டிப் பதிலளித்தார்.

உடனே ரோசா மிஹாய்லவ்னு பியானோ கட்டைகளின் மீது கைகளை ஓட்டிப் பின்னிசை வாசிக்க முற்பட்டார்.பாட்டுக் குழுவினராகிய நாங்கள் உச்சக் குரல்களில் பாடத் தொடங்கினோம்:

**சின்னஞ் சிறுமியவள் அங்குமிங்கும் சென்ருள்,**
**பைன்மரக் காடுதனில் நிற்காது நடந்தாள்,**
**கோடைப் பகலது வெய்யிலும் காய்ந்தது,**
**கூடை நிறைய பெர்ரிப்பழம் கிடைத்தது.**

இந்தப் பாட்டு நாங்கள் எல்லோரும் நன்கு அறிந்ததே என்ருலும், ஏனோ தெரியவில்லை, எங்களால் ஒருங்கிணைந்து பாட முடியவில்லை. ரோசா மிஹாய்லவ்னுவினுடைய பின்னிசையின் சுரத்தில் சில குழந்தைகள்தான் பாடினர், ஏனையோர் வேண்டுமென்றே விலகிச் செல்வது போலத் தோன்றும்படி பாடிக் கொண்டிருந்தனர்—சொற்கள் ஒன்றேதான் என்ருலும் பண் வேறென்ருய் ஒலித்தது. நாங்கள் ஒருவருக்கொருவர் ஒவ்வாதவர்களாய்க் குழப்படி செய்து வந்தோம். சின்னஞ் சிறியவர்கள், எங்களிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

சிறுமியையும் அவள் பறித்துச் சேர்த்த

பெர்ரிப் பழங்களையும் பற்றி நாங்கள் பாடிக் கொண்டிருக்கையில் எங்கள் எதிரே உட்கார்ந் திருந்த பிரதிநிதியின் முகம் கோணிச் சென்றதை யும் வேதனையால் நெற்றி நெளிந்ததையும் நான் கவனித்தேன். கடுமையான வலியைப் பொறுத்துக் கொள்ள தீரமாய்ப் போராடுகிருர் என்று நினைக்கும்படி அவர் வாய் பக்கவாட்டில் நீண்டு விரிந்தது.

நாங்கள் எல்லோரும் சேர்ந்து பாடிக் கொண் டிருந்ததால் குரல்களது அந்தக் குழப்படியில் எது யாருடையது என்று வேறுபடுத்தி இனங் காண் பது கடினம்தான். ஆயினும் பிரதிநிதியின் மூக்குக் கண்ணுடிக்குப் பின்ஞலிருந்து அவருடைய பார்வை திடுமென எங்களில் ஒரு குழந்தை மீதும் அதன்பின் இன்னென்றின் மீதும் படிவதை நான் கண்ணுற்றேன். எந்தக் குரல் யாருடையது என்று அவர் ஊகிக்க முயலுகிருரென நினைத்தேன்.

இடையில் அவர் பார்வை திடுமென என்மீது படிவது போலவும், அனைத்தையும் காண வல்ல அவரது வட்ட வடிவ மூக்குக் கண்ணுடிகள் அதன் பின் தொடர்ந்து பல கணங்களுக்கு என்னை விட்டு அசையாது அப்படியே குத்திட்டு நிற்பது போல வும் எனக்குத் தோன்றிற்று.

''இப்பொழுது சாஷா தியுனேவா மட்டும் பாடு வாள், ஏனையோர் சும்மாயிருப்பார்கள்'' என்று ரோசா மிஹாய்லவ்ஞ கூறினுர். அவருடைய கை கள் மீண்டும் கட்டைகளின் மீது வந்திறங்கின.

இதன்பின் பிரதிநிதியின் கண்கள் கொஞ்சம் பளிச்சிட்டு ஒளிர்ந்தன. சாஷா தியுனேவா பாடத் தொடங்கியதே அதற்குக் காரணம். அவளுடைய குரல் மெய்யாகவே இனிமையானது.

மொத்தத்தில் சாஷா தியுனேவா தங்கமானவள். நெடு நாட்களாய் நான் அவள் நண்பனாய் இருந்து வருகிறேன். உலாவச் செல்கையில் அவள் என்னுடன் ஜோடி சேர்ந்தது முதலாய் நண்பனாய் இருந்து வருகிறேன். உலாவுவதற்காக நாங்கள் அழைத்துச் செல்லப்படும்போது ஜோடிகளாய்க் கைகோத்துக் கொண்டுதான் நடக்க வேண்டும். ஆகவே நான் சாஷாவின் கையைப் பிடித்து அழைத்துச் செல்ல முற்பட்டேன். அதன்பின் எங்கள் நட்பு மேலும் வளரலாயிற்று. எப்பொழுதும் நாங்கள் இருவரும் சேர்ந்து விளையாடிக் கொண்டும் பேசிக் கொண்டும் இருப்பது வழக்கமாகி விட்டது. ஏனைய குழந்தைகளில் சிலர் கேலியாய்ப் பேசும் அளவுக்குச் சென்றனர். ஒரு தரம் நான் இக்குழந்தைகளில் ஒன்றுக்குத் தக்கபடி பதிலளிக்க வேண்டியதாயிற்று. இதற்காக ஆசிரியையிடமிருந்து நான் பேச்சு கேட்க வேண்டியிருந்தது. எதற்கும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதென்று இதன்பின் நாங்கள் இருவரும் ஜோடியாய் உலாவ வேண்டாமென்று ஏற்பாடாயிற்று. சாஷா தியுனேவா இன்னொரு பையனுடன் ஜோடி சேர்க்கப்பட்டாள், நான் ஸீனா கிவொஸ்தியோவாவுடன் இணைக்கப்பட்டேன். ஸீனா எந்நேரமும் சிணுங்கிக் கொண்டிருக்கும் சிறுமி, எப்பொழுதும் அவளுக்கு மூக்கு ஒழுகிக் கொண்டுதான் இருக்கும். கையால் மூக்கைத் துடைத்துக் கொள்வாள், உலாவுகையில் நான் பிடித்துச் செல்வதற்காக அதே கையை என்னிடம் நீட்டுவாள்.

சாஷா தியுனேவாவும் நானும் இதன் பிறகும் இணை பிரியாதவர்களாகவே இருந்து வந்தோம்.

அவள் பாடுவதைக் கேட்கையில் எனக்கு ஆனந்த

மாயிருக்கும். அவள் ஏனைய எல்லோரையும்விட —அதாவது ஏனைய எல்லாப் பெண்களையும்விட —நன்றாய்ப் பாடினாள். பையன்களைப் பொறுத்த வரை நானே யாவரிலும் சிறப்பாய்க் பாடக் கூடியவன். பெருமையடித்துக் கொள்கிறேன் என்று நினைக்கிறீர்கள்? சரி, கேளுங்கள் இதை....

''இப்பொழுது பாட்டி வளர்த்த வாத்துகளைப் பற்றிய பாட்டைப் பாடுவோம், ழேன்யா புரோஹரோவ் துவக்கி வைப்பான்...'' என்றார் ரோசா மிஹாய் லவ்னா.

நான் பலமாய் மூச்சை உள்ளுக்கு இழுத்துக் கொண்டேன். ரோசா மிஹாய்லவ்னா கட்டைகள் மீது கைகளை வைத்துப் பின்னிசையைத் தொடங்கும் வரை காத்திருந்துவிட்டுப்பாட முற்பட்டேன்:

**இரண்டே இரண்டு வாத்து,**
**பாட்டி வளர்த்த வாத்து,**
**இரண்டும் நல்ல வாத்து...**

பிறகு எல்லோரும் சேர்ந்து பாட்டைப் பாடிச் சென்றனர். எதனாலோ தெரியவில்லை எல்லோரும் அளவு மீறி அவசரப்பட்டு, சொற்களைச் சரியாய் உச்சரிக்காமல் முழுங்கியவாறு அடித்து மோதிக் கொண்டு ஓடுகிறார்களென நினைத்தேன். அவர்களைப் பின்தொடர்ந்து ரோசா மிஹாய்லவ்னாவின் கைகளும் கட்டைகளின் மீது வேகம் வேகமாய் ஓடின.

மெய்யாகவே இப்பாட்டு இப்படி வேகமாய்ப் பாடப்பட வேண்டிய பாட்டாகவே இருக்கலாம். ஆனால் நான் இதை அவசரமின்றி மெதுவாய்ப் பாட வேண்டுமென்று நினைத்தேன். உயிரெழுத்துக்களை நீட்டி இழுத்துப் பாட விரும்பினேன்.

நீண்டு தொனிக்கும் உயிரெழுத்துக்களை இந்தப் பாட்டுக்கு வேண்டிய அளவைக் காட்டிலும் அதிகமாய் நீட்டி இழுக்கும் பொருட்டு வேண்டு மென்றே சொற்களைச் சற்று திருத்தி உருமாற்றி ''பா-ஆ-ஆ-ட்டி வளர்த்த வா-ஆ-ஆ-த்து'' என்ப தாய்ப் பாடினேன்.

உண்மை என்னவெனில் என்னுடைய குரல் உச்சக் கட்டையில் ஒலிக்க வல்லது, சாஷா தியுனே வாவின் குரலைவிடவுங்கூட மேல் ஸ்தாயியில் ஒலிக்க வல்லது. பையனின் குரல் பெண்ணின் குரலைக் காட்டிலும் மேல் ஸ்தாயியில் ஒலிக்கக் காரண மில்லைதான், ஆனல் இயற்கையாகவே அப்படி அமைந்திருக்குமாயின் யார் என்ன செய்வது?

''இனி நமது பெண்கள் மல்தாவிய நடனம் ஒன்றை ஆடிக் காட்டப் போகிறார்கள்'' என்று அறிவித்தார் ரோசா மிஹாய்லவ்ன.

ஆனல் திடுமென இப்பொழுது பிரதிநிதி குனிந்து எங்கள் இல்லத்தின் முதல்வருடைய காதுக்குள் ஏதோ சொன்னர். அது சரியல்ல என் பதைக் குறிக்கும் முறையில் வேரா இவானெவ்ன புருவங்களை உயர்த்திக் கொண்டு பதிலளித் தார். ஆனல் பிரதிநிதி மேலும் தொடர்ந்து ஏதோ சொல்லவே வேரா இவானெவ்ன தோள் களை உலுக்கிக் கொண்டு மெள்ள எழுந்து நின்று ஒரு மாதிரியான குரலில் அறிவித்தார்:

''ரோசா மிஹாய்லவ்ன, இப்பொழுது நமக்கு நடனம் வேண்டாம். குழந்தைகளே, நீங்கள் வெளியே போய் விளையாடுங்கள், ஆனல் ழேன்யா புரோஹரோவ் மட்டும் இங்கேயே இருக்கட்டும்.

மகிழ்ச்சிக் கூச்சலிட்டுக் குழந்தைகள் யாவரும் நேரே கதவுகளை நோக்கி ஓடினர்.

வேரா இவாஞெவ்ஞ, ரோசா மிஹாய்லவ்ஞ, நான், மற்றும் பிரதிநிதியான அவர் ஆகிய நால்வர் மட்டும்தான் பெரிய அறையில் இருந்தோம். பிரதிநிதி இதற்குள் தாமே யாவரிலும் முக்கியமானவர் என்பதை வெளிப்படுத்திக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்.

''இங்கே வா'' என்று என்னை அழைத்தார்.

நான் சென்றேன்.

''ழேன்யா புரோஹறொவ்தான் உன் பெயரா?''

''ஆம்.''

''என் பெயர் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்'' என்று தம்மை எனக்கு அறிமுகப்படுத்திக் கொண்டார்; அடுத்த மூச்சிலேயே ''நமேஸ்தினிக்கவ்'' என்று தமது குடும்பப் பெயரையும் எனக்குத் தெரிவித்தார்.

''ழேன்யா, எனக்கு நீ வேறு எதாவது பாட்டு பாடிக் காட்டுவாயா?''

''ஓ, பாடுகிறேன்'' என்று பதிலளித்தேன். ''எல்லாப் பாட்டும் எனக்குத் தெரியும்.''

''எல்லாப் பாட்டுமா?''

''ஆம், எல்லாப் பாட்டும்.''

மெய்யாகவே நான் எத்தனையோ பாட்டுகளைத் தெரிந்து வைத்திருந்தேன். ஏற்கனவே நான் கூறியது போல எங்கள் படுக்கைக் கூடத்தில் வானெலி ஒலிபெருக்கி இணைப்பு இருந்தது. அந்தக் கறுப்பு ஒலிபெருக்கிப் பெட்டியிலிருந்து பெருக்கெடுத்தவை யாவற்றையும் நான் கவனமாய்க் கேட்பது வழக்கம். ஒலிபரப்பப்பட்ட எல்லாப் பாட்டுகளும், அதன் சொற்களும் பண்ணும் உடனுக்குடன் எனக்கு மனப்பாடமாகிவிடும். சில பாட்டுகளை ஒரு தரமும், வேறு சில பாட்டுகளை இரண்டு

தரமும் கேட்டால் போதும்—மூன்றும் தரத்துக்கும் மேல் நான் கேட்க வேண்டியதே இல்லை—அப்படியே ஆரம்பத்திலிருந்து கடைசி வரை பாடிவிடுவேன்.

''சரி, நீ என்னப் பாடப் போகிருய், சொல்.''

இதைக் கேட்டதும் ரோசா மிஹாய்லவ்னுவுக்கு முகம் சிவந்துவிட்டது, ''விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச், என்னுல் பின்னிசை வாசிக்க முடியாதே, இசை ஏடுகள் இல்லேயே என்னிடம்'' என்று அவர் கலங்கியவாறு சொன்னுர்.

''அதனுல் என்ன? கவலே வேண்டாம்'' என்று விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் பதிலளித்தார். ''பின்னிசை இல்லாமலே பாடலாம், முடியாதா உன்னுல்?'' என்று என்னேக் கேட்டார்.

உடனே நான் மூன்று அடி பின்னுல் நகர்ந்து தலேயை ஆட்டினேன்.

''நிகரில்லா என் எழில் மலர்'', ''புல்வெளியிலே செல்லும் சிறுமி'', ''தோணிகளில் வந்திறங்கும் மீன்கள்''—எனக்குப் பிடித்த இந்தப் பாட்டுகளே அவருக்குப் பாடிக் காட்டினேன்.

இந்தப் பாட்டுகளே நான் பாடிய போது விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சின் முகத்தில் புன்சிரிப்பும் சில சமயம் சுளிப்பும் தோன்றக் கண்டேன். சுளிப்பைக் காட்டிலும் புன்சிரிப்புதான் அடிக்கடி தோன்றிற்று. அவர் உருக்கமாய் எல்லாப் பாட்டுகளேயும் கேட்டுக் கொண்டிருந்தார்.

''இன்னும் ஒரேயொரு பாட்டு பாடட்டுமா?'' என்று சங்கடப்பட்டுக் கொண்டே அவரிடம் கேட்டேன்.

''பேஷாய்ப் பாடு'' என்று அவர் தலேயை ஆட்டினுர்.

''என்னப் பாட்டு அது?'' என்று கவலை தொனிக்கும் குரலில் வேரா இவானெவ்னு கேட்டார்.

''ஆனால் வானெலியில் இதைப் பாடுவது ஆணல்ல, ஒரு பெண் இந்தப் பாட்டைப் பாடுகிறார்''. இதை நான் அவரிடம் சொன்னபோது எனக்கு மிகவும் சங்கடமாய் இருந்தது. அதோடு இந்தப் பாட்டின் துவக்க வரிகள் மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தது. ஆனால் எனக்கு இது மிகவும் பிடித்திருந்தது.

''சரி, பாடு, பார்ப்போம்'' என்றார் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்.

மேலும் இரண்டு அடிகள் பின்னால் நகர்ந்தேன். பிறகு என் தொண்டையை அடைத்து கொண்ட துக்கத்தை முயற்சி செய்து விழுங்கிக் கொண்டேன். அந்தப் பாட்டை நினைத்ததுமே துக்கம் என் நெஞ்சில் கனத்துக் கொண்டு எழுந்தது. துயரம் தோய்ந்த பாட்டு அது.

**நித்தம் நாம் காத்திருந்த**
**தருணம் வருகுது,**
**இத்தனை நாள் எமை வதைத்த**
**கலியும் தீருது,**
**அலைகடலின் பரப்பிலொரு**
**கப்பல் தெரியுது,**
**தொலைவில் உதித் தெம்துயர் துடைக்க**
**கரைக்கு விரையுது...**

இந்தப் பாட்டை நான் கேட்கும் போதும் சரி, பாடும் போதும் சரி, நான் கண்டிராத கடலும் திரைப் படங்களிலே தவிர வேறு எங்கும் பார்த்தறியாத புகைக் கப்பலும் தெளிவாய் என் மனக் கண்ணெதிரே தோன்றக் காண்பேன். எழிலுரு கொண்ட ஒரு மங்கை கரையிலே காத்து நிற்ப

தாய், தொலேவில் உதிக்கும் கப்பல் எப்பொழுது கரைக்கு வருமெனக் காத்திருப்பதாய்க் கற்பனே செய்து கொள்வேன்.... அவள் எதிர்பார்ப்பது எங்கே நடைபெறப் போகிறது, ஏமாறவே போகிருள் என்பதாய் நான் நினேப்பது வழக்கம்.

நான் மேலே கூறியது போல இந்தப் பாட்டின் துவக்கம் மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தது. ஆனல் அதற்கு மேல் இந்தப் பாட்டைப் பாட வேண்டியிருக்கவில்லே. முதல் நான்கு அடிகளேப் பாடி முடிப்பதற்குள் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் திடுமெனத் தமது மூக்குக் கண்ணுடியைக் கழற்றி விட்டுப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்துக் கண்களேத் துடைத்துக் கொண்டார்: சிவந்து விட்ட அவற்றில் நீர் ததும்பிற்று. என்னேச் செய்து வந்தது போலவே அவரையும் இந்தப் பாட்டு துக்கமடையச் செய்ததென்பது தெரிந்தது.

'' 'மாடம் பட்டர்ஃபிளே' இசை நாடகத்தில் வரும் பாட்டு இது'' என்று ரோசா மிஹாய்லவ்ஞ இந்தப் பாட்டைப் பற்றி வேரா இவாஞெவ்ஞவிடம் சொன்ஞர்.

இதற்குள் வேரா இவாஞெவ்ஞவின் கண்கள் சாந்தமடைந்துவிட்டன, அவருடைய பதற்றம் தணிந்துவிட்டது. எங்கோ தெருவில் கேட்டுத் தெரிந்து கொண்ட பாட்டைப் பாடத் தொடங்கி விடுவேனே என்று அவர் ஆரம்பத்தில் திகிலடைந்திருக்க வேண்டும்.

ஆனல் இதோடு முடிவுற்றுவிடவில்லே.

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் மூக்குக் கண்ணுடியைச் சரி செய்து கொண்டு குதூகலமான குரலில் ''ழேன்யா, இப்படி வாயேன், சொல்கிறேன்...'' என்று என்னே அழைத்தார்.

அவர் பியானேவிடம் சென்ருர், உடனே ரோசா மிஹாய்லவ்ஞ சுழலும் ஆசனத்திலிருந்து எழுந்து நகர்ந்து செல்லவே அவர் அதில் உட்கார்ந்து கொண்டார். இந்தப் பிரதிநிதிக்குப் பியானே வாசிக்கத் தெரியுமா, என்ன? பியானே வாசிக்கக் கூடிய பிரதிநிதிகளே இதன்முன் நான் பார்த்த தில்லே!

''ழேன்யா, இப்பொழுது நான் ஒரு மெட்டு வாசிக்கிறேன்; நீ அதன் தாளத்தைத் தட்டிக் காட்டு, பார்ப்போம்.''

அவர் வாசிக்கவே, நான் கையால் தாளம் தட்டினேன்.

பிறகு அவர் வேருெரு மெட்டை வாசித்தார், அதன் தாளத்தையும் தட்டிக் காட்டினேன். பெரிய காரியமல்ல, அது மிக எளிய தாளம்: தாம்-தித்-தோம், தாம்-தித்-தோம்.

''நல்லது, இப்பொழுது நான் வாசிப்பதை நீ பாடிக் காட்டு, பார்க்கலாம்'' என்ருர் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்.

அவர் ஒரு சுரத்தை வாசித்தார், உடனே நான் அதைப் பாடினேன். பிறகு மேலும் உச்ச கட்டை யில் இன்னென்றை வாசித்தார், அதையும் பாடி னேன். பிறகு அதற்கு அடுத்த உயர்ந்த சுரமும் அதன்பின் அதற்கும் அடுத்ததும் வந்தன.

''அது சரியல்ல'' என்று மூக்குக் கண்ணுடிக்குப் பின்ஞலிருந்து என்னே எரித்து விடுவது போலப் பார்த்தவாறு திடுமென பலக்கக் கூறிஞர். ''தப்பு, தப்பு!'' என்ருர்.

''இல்லே, தப்பு இல்லே'' என்று நான் பதிலளித் தேன்.

''ஆம், தப்புதான்!''

''இல்லே.''

நான் சிறிதும் பயப்படவே இல்லே: அனுதைக் குழந்தை இல்லத்துச் சிறுவர்களாகிய எங்களேப் பார்த்துக் கூச்சலிட யாருக்கும் அனுமதியில்லே. எப்பேர்பட்ட பிரதிநிதியாகத்தான் இருக்கட்டுமே, அவரைச் சும்மா விடமாட்டார்கள்!

''சரி, திரும்பவும் ஒரு தரம் வாசிக்கிறேன், கவனமாய்க் கேள் நீ'' என்ருர்.

அதே சுரத்தைத் திரும்பவும் வாசித்தார். உடனே பியானே கட்டைகளின்மீது கவிழ்ந்து கொண்டு ஆவேசமாய்த் தடதடவென ஒரு கறுப்புக் கட்டையைத் தட்டினுர். கடுங் கோபங் கொண்டுவிட்டவரைப் போல் தோன்றினுர். ஆனுல் இப்பொழுது என் மீது அவருக்குக் கோப மில்லே. சட்டென ஆசனத்தில் சுழன்று திரும்பி ரோசா மிகாய்லவ்னுவையும் வேரா இவாஞெவ்ஞ வையும் வெறிக்கப் பார்த்தார்.

''பியானே சுதியைச் சரி செய்பவர் இங்கு வந்து எத்தனே ஆண்டுகள் இருக்கும்?'' என்று கேட்டார்.

''என்ன செய்வது? எங்கள் இல்லத்தின் வரவு செலவு இருந்து வரும் இக்கட்டான நிலேமையில்...'' என்று வேரா இவாஞெவ்ஞ பேசத் தொடங்கியவர் என்னேப் பார்த்தவாறு வாக்கியத்தை முடிக்காமலே நடுவில் நிறுத்திவிட்டு, ''பையனே இனி நாம் போகச் சொல்லலாமா?'' என்று கேட்டார்.

''சொல்லலாம்'' என்ருர் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்.

''ழேன்யா, வெளியே போய் விளேயாடு'' என்று வேரா இவாஞெவ்ஞ என்னிடம் சொன்னுர்.

வெளி முற்றத்தில் எல்லோரும் கூச்சலிட்டதும் ஒருவரையொருவர் பலத்த குரலில் கூப்பிட்டதும் நெடுநேரமாய் என் காதில் விழுந்துகொண்டுதான் இருந்தது. உள்ளே கூடத்தில் இருந்தது போலல்லாது வெளியே சன்னலுக்கு அப்பால் யாவும் சிரிப்பும் வேடிக்கையுமாய் இருந்தது தெரிந்தது.

''வணக்கம்'' என்று சொல்லி விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சிடம் விடை பெற்றுக் கொண்டு நான் வெளியே ஏனையோருடன் சேர்ந்து விளையாடுவதற்காக ஓடினேன்.

* * *

அன்று அந்திப் பொழுதுக்குப் பிற்பாடு நாங்கள் எல்லோரும் படுக்கையில் போர்வைகளுக்கு அடியில் சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்தபின், எங்கள் தாதிகளில் ஒருத்தியான தூன்யா உள்ளே ஓடி வந்தாள். இளமையானவளே என்றாலும் கொஞ்சம் பருத்துக் கனத்திருந்ததால் வந்த வேகத்தில் விருவிருத்துப் போய் அவளுக்கு மேல் மூச்சு வாங்கிற்று.

''ழேன்யா புரோஹரொவ்... வேரா இவானெவ்னு உன்னைப் பார்க்க வேண்டுமாம், வரச் சொல்கிறார்... சீக்கிரமாய்ப் புறப்படு!''

நான் படுக்கையை விட்டெழுந்து மீண்டும் உடுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

இரட்டை அடுக்குப் பலகைகளின் மேல் விரிக்கப்பட்ட படுக்கைகளில் நாங்கள் படுத்துறங்குவது வழக்கம். எனக்கு மேலிருந்த பலகையில் படுத்திருந்த பேத்கா சவருஹா கீழே எட்டிப் பார்த்து வியப்பு தொனிக்கும் குரலில் என்னை விசாரித்தான்:

''ஏன் உன்னைக் கூப்பிட்டு அனுப்பியிருக்கிறார்? இன்று நீ எங்கே போய் என்ன செய்து வைத்தாய்?''

''தெரியவில்லையே....''

மெய்யாகவே எனக்குத் தெரியவில்லை. தவறான காரியம் எதுவும் நான் செய்திருக்கவில்லை. அந்தப் பிரதிநிதியுடன் சரிக்குச் சரியாய் வாதாடினேனே, அதற்காக இருக்குமோ?

படுக்கைக் கூடத்துக்கு வெளியே நடையில் இருட்டாய் இருந்தது. ஆனால் முதல்வரின் கதவுக்கு அடியிலிருந்து மஞ்சள் ஒளி வெளியே வீசிற்று. கதவு சரியாய் மூடப்படாமல் இடுக்கு தெரிந்தது. ஆகவே நான் அந்தக் கதவருகே சென்று உள்ளே போவதா இல்லையா என்று தயங்கியவாறு நின்றேன். உள்ளிருந்து பேசிய குரல் காதில் விழுந்தது:

''...ஒரு குழந்தையின் எதிர்காலத்தைப் பற்றிய விவகாரம் இது. நீங்கள் சொல்வதைப் பார்த்தால், இதில் உத்தரவாதம் எதுவும் இருப்பதாய்த் தெரியவில்லையே. எந்த உத்தரவாதமும் இல்லாமல்....'' அது வேரா இவானொவ்னாவின் குரல்.

''நூற்றுக்கு நூறு உத்தரவாதமாய் அமையக் கூடியவை எவையும் இல்லையே.'' அது அந்தப் பிரதிநிதியின் குரல். ஓகோ, இன்னும் அவர் வீட்டுக்குப் போகாமல் இங்கேதான் இருக்கிறாரா?

உள்ளே செல்ல அச்சப்பட்டுக் கொண்டு நான் அவர்களுடைய பேச்சைக் கேட்டவாறு வெளியே நின்றிருந்தேன். அவர்கள் பேசியதில் ஒரு வார்த்தைகூட எனக்குப் புரியவில்லை. உத்தரவாதம், நூற்றுக்கு நூறு போன்றவற்றின் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை. இவை எனக்குப் புரியாவிடில்

எப்படி இவற்றை நான் நினைவில் வைத்திருக்க முடிந்தது? எனக்கு விளங்காத ஓர் உரையாடலை எப்படி இங்கு என்னால் திருப்பிக் கூற முடிகிறது? சரடா விடுகிறேன்? அல்லது வெறும் கற்பனையா? சமத்காரமான இந்த கதை பூராவுமே இட்டுக் கட்டியதாய் இருக்குமோ? நாயைப் பற்றிய பகுதியுங்கூடவா? இசைத் தட்டுங்கூட இப்படிப் பட்டதுதானா? அனாதைக் குழந்தை இல்லவாசி களாகிய நாங்கள் யாவரும் கதைகள் கட்டுவதில் இணையற்றவர்கள் ஆவோமே.

இல்லை, எதுவும் இட்டுக் கட்டப்பட்டதல்ல. நான் சரடு விடவில்லை, நடந்தை நடந்தவாறு எந்த மாற்றமுமின்றி அப்படியே கூறுகிறேன்.

ஆயினும் இப்பொழுது எனக்கு பதினேழு வயது ஆகப் போவதால் நான் மறந்துவிட்ட, என் நினைவை விட்டு நழுவிவிட்ட சில விவரங்கள் இருக்கவே செய்யும். கடந்த காலத்தின் ஒவ்வொரு நிமிடத்தையும், நாம் கூறியது அல்லது கூறக் கேட்டது ஒவ்வொன்றையும் அப்படியே நினைவில் வைத்திருப்பது முடியாத காரியம், அவ்வளவை யும் ஒன்றுவிடாமல் நினைவில் இருத்திக் கொள் வது யாருடைய ஞாபக சக்திக்கும் அப்பாற் பட்டது.

ஆதலால் கதவுக்கு வெளியே நின்று நான் கேட்ட இந்த உரையாடலும், பிற்பாடு நடை பெற்ற பேச்சுகளும் இப்பொழுது எனது கடந்த காலத்தை நான் நினைத்துப் பார்க்கையில் என் நினைவுக்கு வருவதை அப்படியே இங்கு எடுத்து ரைக்கிறேன் என்பதைத் தொடக்கத்திலேயே கூறிவிடுகிறேன். ஆனால் என்னவெனில் இவை நடைபெற்ற காலத்துக்குப் பிற்பாடு நான் எவ்

வளவோ பெரியவஞகி யிருக்கிறேன், அனுபவத்தி லும் அறிவிலும் வளர்ச்சியடைந்திருக்கிறேன்.... வேரா இவாஞெவ்ஞவின் இடத்தில் நான் இருந் திருந்தால் என்ன சொல்லியிருப்பேன் என்பதைத் தெளிவாய் என் மனத்துள் நான் பார்க்க முடி கிறது. அதே போல் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் நமேஸ்தினிக்கவின் இடத்தில் நான் இருந்திருந் தால் எங்கள் இல்லத்தின் முதல்வரது வாதங் களுக்கு என்ன பதில் அளித்திருப்பேன் என்பதை மனக் கண் கொண்டு என்ஞல் பார்க்க முடிகிறது.

''நூற்றுக்கு நூறு உத்தரவாதமாய் அமையக் கூடியவை எவையும் இல்லையே'' என்று அவர் பதிலளித்தார்.

''நான் என்ன சொல்கிறேன் என்ருல்...'' என்று வேரா இவாஞெவ்ஞ பெருமூச்சு விட்டார். ''நல்ல கடைசல்காரன் அல்லது மின்ஞளன் ஆகி விடுவான், முடிவில் பொறியாளனுங்கூட ஆகிவிடு வான் என்று எந்த சந்தேகமுமின்றி நிச்சயமாய்க் கூற முடியும். ஆனல் நீங்கள் சொல்லும் துறை யில்.... விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச், நெடுங்கால மாய் நான் போதனைத் துறையில் வேலை செய்து வருகிறேன், மேல் வகுப்பு மாணவர்களிடையே சிலருக்கு நேர்ந்த கதி என் நினைவுக்கு வருகிறது. வில்லாதி வில்லர்களாகப் போவதாகவும் பெய ரும் புகழும் பெறப் போவதாகவும் நினைத்துக் கொண்டு இவர்கள் யாவற்றையும் மறந்துவிட்டு சிறகு கட்டிக் கொண்டு விண்ணிலே பறந்து கொண்டிருந்தார்கள், இல்லாத எண்ணங்கள் எல்லாம் ஏனையோரால் இவர்களுக்கு ஊட்டப் பட்டு வானுச்சியில் சஞ்சரித்துக் கொண்டிருந்

தார்கள், முடிவில் சிறகு ஒடிந்து தரையிலே குப்புற விழ நேர்ந்தது....''

''நான் மறுக்கவில்லை, அடிக்கடி அப்படியும் நேர்வது உண்டுதான்.''

நாற்காலியின் கால்கள் தரையில் உராய்ந்து கர கரத்தன, காலடிச் சப்தம் கேட்டது. பிரதிநிதி எழுந்து அறையினுள் மேலும் கீழுமாய் நடை போடத் தொடங்கிவிட்டது தெரிந்தது.

''வேரா இவானெவ்னா, நீங்கள் இதை உணர்ந்து கொள்ள வேண்டும், மெச்சத்தக்க திறன் அரிதினும் அரிது! உலகில் இதைக் காட்டிலும் அரிதானது எதுவும் இல்லை! இந்த அருந் திறனை நாம் கவனியாது விடுவது, பயன்படுத்தாது வீணாக்குவது பெருங் குற்றமாகும். வியத்தகு திறன் படைத்தவன் ஒருவன் இங்கே உங்கள் கண்ணெதிரே இருந்து வருவதை....''

திடுமென எனக்குச் சுருக்கென்றது, சிறு குழந்தையே என்றாலும், ஒட்டுக் கேட்பது வெட்கப்பட வேண்டிய ஒரு செயலென்பது எனக்குத் தெரிந்திருந்தது. ஆகவே உடனே கதவைத் தட்டி விட்டு உள்ளே சென்று ''வணக்கம்'' என்றேன்.

வேரா இவானெவ்னா அவருடைய மேசைக்குப் பின்னால் அமர்ந்திருந்தார், ஆனால் விளதீமர் கன்ஸ் தன்டினவிச் நேரே என்னிடம் வந்து என் தோளைப் பிடித்துக் கொண்டு கேட்டார்: ''ழேன்யா, நீ சரியானபடி பாடக் கற்றுக் கொள்ள விரும்பு கிறாயா?''

நல்லாயிருக்கிறதே கேள்வி! அவமதிக்கப் பட்டது போல எனக்குக் கொஞ்சம் கோபங்கூட வந்துவிட்டது.

''எனக்குச் சரிவர பாடத் தெரியாதா, என்ன?'' என்றேன்.

''தெரியாது'' என்ருர் அவர். பிறகு அழுத்தம் திருத்தமாய்த் திரும்பவும் கூறிஞர்: ''தெரியாது தான்.''

இந்தக் கொடிய அநியாயத்தைச் சமாளிக்க எனக்கு ஆதரவு கிடைக்காதா என்று வேரா இவாஞெவ்ஞவின் பக்கம் திரும்பினேன். ஆஞல் அவர் என்னைப் பார்க்காமலே தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். என் கண்களை நேருக்கு நேர் சந்திக்க விரும்பாமல் வேண்டுமென்றே இப்படி உட்கார்ந்திருக்கிருரோ என்று நினைத்தேன்.

''நீ மாஸ்கோ போகப் போகிருய், அங்கே இசைப் பள்ளி ஒன்றில் சேரப் போகிருய்'' என்று என் தோளைக் கெட்டியாய்ப் பிடித்திருந்த கையை எடுக்காமலே விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் தொடர்ந்து கூறிஞர். ''மாஸ்கோவில் நீ எங்களுடைய சிறந்த பாட்டுக் குழுவில் சேர்ந்து பாடப் போகிருய். ஆயிரக் கணக்கான சிறுவர்கள் எங்கள் பாட்டுக் குழுவில் சேர விரும்புகிருர்கள், ஆஞல்....''

அவர் இன்னும் எதோ சொன்ஞர், ஆஞல் அது என் நினைவில் இல்லை. அதற்கு மேல் அவர் சொன்னது என் காதில் விழவில்லை. ''மாஸ்கோ'' என்பதைக் கேட்டதற்குப் பிற்பாடு வேறு எதைப் பற்றியும் என்ஞல் நினைக்க முடியவில்லை.

அப்படியல்ல, வேறு சிலவும் என் மனதில் தோன்றின. சில விவகாரங்கள் குறித்து நான் நினைத்துப் பார்த்ததும், சில நிபந்தனைகள் போட்டதும் என் நினைவிலிருக்கின்றன. ''சாஷா தியுஞேவாவும் மாஸ்கோவுக்கு வருகிருளா? அவளையும்

அழைத்துச் செல்லப் போகிறீர்களா?'' என்று அவரைக் கேட்டேன்.

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் வாடிய முக பாவத்துடன் தலையை அசைத்தார். ''அது சாத்தியமல்ல, நாங்கள் பையன்களை மட்டும்தான் சேர்த்துக் கொள்கிறோம். எங்களுடைய பாட்டுக் குழு பையன்களால் ஆனது'' என்று சொன்னார்.

அப்படியானால் ஒன்றும் செய்வதற்கில்லைதான்.

''உங்கள் பையன்கள் சண்டை போடுவது உண்டா?''

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் பிடியைத் தளர்த்தி என் தோளிலிருந்து கையை எடுத்து, தமது அகன்ற நெற்றியைத் துடைத்துக் கொண்டார். பிறகு பெருமூச்சு விட்டவாறு ''சில சமயம் சண்டை போடுவது உண்டுதான்'' என்றார்.

* * *

இதன்பின் முதல் வேலையாய் என்னை அவர்கள் ஏனைய எல்லோரிடமிருந்தும், எனக்கு நினைவிலிருந்த காலம் முதலாய் நான் சேர்ந்து வாழ்ந்து வந்த இவர்கள் எல்லோரிடமிருந்தும் பிரித்துத் தனியே இருக்கச் செய்தார்கள்.

மறு நாள் காலையில் எங்கள் தாதி தூன்யா என் கையைப் பிடித்து என்னை அவளுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். என்னை மாஸ்கோவுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு அவளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆகவே அவள் தேவையான தயாரிப்புகளைச் செய்ய முற்பட்டாள்.

யாருடனும் சேராமல் நான் தனியே தொத்துத் தடைக் காப்பில் இருந்தாக வேண்டுமென்று

தாதி தூன்யா எனக்கு நிலைமையை விளக்கினாள். பேராசிரியர் இப்படித்தான் செய்யச் சொல்லி யிருப்பதாய்க் கூறினாள். பிரதிநிதியான விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் ஒரு பேராசிரியரும் ஆவார் என்பதைத் தெரிந்து கொண்டேன். அப்பொழுது குழந்தை இல்லத்தில் யாரும் உடல் நலமின்றி இருக்கவில்லை. இருந்த போதிலும் நான் தனியே பிரிந்து தொத்துத்தடைக் காப்பில் இருக்க வேண்டு மென்று அவர் இங்கிருந்து புறப்பட்டபோது கூறிச் சென்றிருந்தார். நானும் எந்தக் குறையு மின்றி முழு உடல் நலமுடன்தான் இருந்தேன். ஆனால் பேராசிரியருடன் வாதம் புரிந்துப் பயன் உண்டா?

தாதி தூன்யா என் கையைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கைக்கு அடியில் ஒரு மூட்டையை வைத்தழுத்திக் கொண்டாள். பிறகு அவளுடைய வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றாள். நகரின் ஓரத்தில் தகர்ந்து போன ஒரு சிறிய மர வீட்டில் அவள் வசித்து வந்தாள். ஏங்கித் தவித்தவாறு அங்கு தொடர்ந்து மூன்று நாட்கள் தங்கியிருந் தேன். என்னால் சகிக்க முடியவில்லை. குழந்தை இல்லத்தின் என் சகாக்கள் இல்லாமல் ஆரம்பத் திலிருந்தே எனக்கு ஏக்கமாய் இருந்தது. எவ்வளவோ வேடிக்கையாகவும் ஆர்வமாகவும் இருந்த குழந்தை இல்லத்து வாழ்க்கையை விட்டுப் பிரிந்து இந்த வீட்டுக்கு வர நேர்ந்ததே என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

அந்த மூன்று நாட்களில் ஒரேயொரு தரம் தான் சிறிது நேரத்துக்குக் கொஞ்சம் வேடிக்கை யாய் இருந்தது.... ஒரு நாள் இருட்டிக் கொண் டிருந்த நேரத்தில் தூன்யாவின் வீட்டுக்கு ஓர் ஆள்

வந்தார். இராணுவ உடுப்புக்குரிய தோள் பட்டைகள், குல்லாய், பிரம்மாண்டமான பூட்சுகள் ஆகிய யாவற்றுடனும் கூடிய ஒரு படையாள் அவர். அதோடு அவர் கொஞ்சம் குடிபோதையில் இருந்ததாய் எனக்குப் பட்டது. ஆள் உள்ளே நுழைந்ததும் அறையில் ஒரு விநோத வகை வீச்சம் நிரம்பிவிட்டது. அவருடைய கால் சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு பாட்டிலின் கழுத்து வெளியே துருத்திக் கொண்டு தெரிந்தது.

வீட்டுக்குள் அந்தப் படையாள் நுழைந்ததும் தாதி தூன்யா சில கணங்களுக்குத் திகைத்துப் போய்த் தடுமாறினுள். என் கண்ணில் படும் முன்பு அந்த ஆளை வாயிற் கதவுக்கு வெளியே தள்ளிவிட வேண்டுமென முயன்ருள். ஆனல் படையாள் அதற்கு இடம் தரவில்லை, வந்தவனை இப்படியா வரவேற்பதென்று கூக்குரலிட்டார். பிறகு தூன்யா கோபமடைந்து படையாளின் காதுக்குள் குசுகுசுவென்று ஏதோ சொல்லிக் கண்டித்தாள், அந்த ஆள் திரும்பவும் தன் வீட்டுப் பக்கம் வர முடியாமற் போய்விடுமென்று பயமுறுத்திப் பார்த்தாள். ஆனல் இந்தப் பயமுறுத்தலும் பயனளிக்காமற் போகவே எதற்கும் மசியாத அந்த ஆளிடம் தூன்யா என்னைச் சுட்டிக்காட்டி ''தொத்துத்தடைக் காப்பு'' என்னும் மந்திரச் சொல்லை உச்சரித்தாள். அதைக் கேட்டதும் படையாள் உடனே வழிக்கு வந்து கையை உயர்த்திச் சலாம் போட்டுவிட்டு வெடுக்கெனத் திரும்பி வெளியே போய்ச் சேர்ந்தார்.

மறு நாள் தூன்யாவும் நானும் ரயில் நிலையத்துக்குச் சென்ருேம். எதிர்பாராத இனிய ஆச்சரியம் அங்கே எனக்காகக் காத்திருந்தது. தொத்துக்

தடைக்காப்பையும் மீறி என்னைத் தக்க முறையில் வழியனுப்பி வைக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். வேரா இவானெவ்னு நேரில் அங்கு வந்திருந்தார், அவருடன் சாஷா தியுனேவாவும் வந்திருந்தாள். பாட்டுக் குழுவில் பாட சாஷா தியுனேவாவையும் அழைத்துச் செல்வீர்களா என்று பேராசிரியர் நமேஸ்தினிக்கவிடம் நான் கேட்டதை அவர் நினைவில் வைத்திருந்து தம்முடன் சாஷாவையும் ரயில் நிலையத்துக்கு அழைத்து வந்திருந்தார் போலும்.

ரிப்பனில் கட்டப்பட்டிருந்த ஒரு பெரிய மிட்டாய்ப் பெட்டியை வேரா இவானெவ்னு தமது கைப் பையிலிருந்து எடுத்து என்னிடம் தந்தார். பிறகு சாஷா தியுனேவா தன் பையிலிருந்து ஒரு கைக்குட்டையை வெளியே எடுத்தாள். மூலையிலும் நான்கு ஓரங்களிலும் அவள் பூ பின்னியிருந்த அந்தக் கைக்குட்டையை என்னிடம் கொடுத்து "இதோ உனக்கு ஓர் அன்பளிப்பு, இந்தப் பூ பின்னல்கள் உனக்காக நான் செய்தவை" என்று சொன்னாள்.

"ழேன்யா, போய் வா!" என்றார் வேரா இவானெவ்னு. "நீ நல்லபடியாய் நடந்து கொள், நீ வளர்ந்த எங்களது குடும்பத்தை மறந்து விடாதே."

பிறகு தூன்யாவும் நானும் ரயில் பெட்டியினுள் ஏறி உட்கார்ந்து கொண்டு சன்னல் வழியே அவர்களுடன் பேசினோம். முடிவில் ரயில் புறப்பட்டது, வேரா இவானெவ்னுவும் சாஷா தியுனேவாவும் ரயில் நிலையமும் இவ்வளவு காலமாய் நான் வசித்து வந்த மரங்கள் அடர்ந்த லீபெத்ஸ்க் நகரும்

தொலேவிலே விடப்பட்டு நாங்கள் பிரிந்து சென்ருேம்.

இரவு முழுதும் சன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம் என்று தான் நான் திட்டமிட்டிருந்தேன். ஏனெனில் எனக்கு நினைவிலிருந்த காலத்தில் இப்பொழுது தான் முதன்முதலாய் ரயிலில் பயணம் செய்தேன், சன்னல் வழியே பார்ப்பதற்கும் வெளியே விரைந்தோடும் உலகை உற்று நோக்குவதற்கும் சந்தர்ப்பம் பெற்றேன்.

ஆனுல் ஏற்கனவே இருட்டாகி விட்டது, சன்னல் வழியே இந்த இருளையும் எப்பொழுதாவது தெரிந்த ரயில் நிலைய விளக்குகளையும் தவிர வேறு எதையும் பார்க்க முடியவில்லை. எனக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்றியது, விரைவில் தூங்கி விட்டேன்.

பொழுது விடிந்த போது நாங்கள் மாஸ்கோ வந்து சேர்ந்துவிட்டோம்.

* * *

மாஸ்கோ எப்படி இருந்தது?

உண்மையை மறைக்காமல் சொல்வதெனில் தலைநகரை முதன்முதலாய்ப் பார்த்தபோது என்னை ஆட்கொண்டுவிட்ட அந்த முதலாவது எண்ணத்திலிருந்து இது நாள் வரை நான் முழுமையாய் விடுபட முடியவில்லை.

மாஸ்கோ அனைத்தும் தரைக்கடியிலே இருக்கிறது என்பதுதான் என்னைப் பிரமிக்கச் செய்து என் மனத்துள் ஆழப் பதிந்துவிட்ட அந்த முதலாவது எண்ணம்.

தாதி தூன்யாவும் நானும் ரயிலை விட்டுக் கீழே

இறங்கியதும் நீர்ச் சுழி போலச் சுழன்று அடித்துச் சென்ற மக்கள் வெள்ளத்திலே சிக்கிக் கொண்டோம். இந்த வெள்ளம் எங்களையும் தன்னுடன் இழுத்துச் சென்றது. எங்கே?...

நாங்கள் போய்ச் சேர வேண்டிய இடத்தின் முகவரி குறிக்கப்பட்டிருந்த துண்டுக் காகிதத்தைத் தாதி தூன்யா கெட்டியாய்க் கையில் பிடித்துக் கொண்டிருந்தாள். விம்மிப் புடைத்தெழுந்த கூட்டத்தின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்காக என்னைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள். கூட்டத்தினரிடமிருந்த தடித்த பெட்டிகள் எப்படியாவது என் தலையிலே மோத வேண்டுமென முயலுவதாய் நினைத்தேன். சுற்றிலும் விரைந்து சென்றோரில் யாரையாவது நிற்கச் செய்து நாங்கள் எத்திசையில் போக வேண்டுமென்று அவரிடம் விசாரிப்பதற்காக தாதி தூன்யா ''ஐயா..., அம்மா...'' என்று கூப்பிட்டுப் பார்த்தாள். ஆனால் யாரும் செவி சாய்க்கவில்லை, அவள் கையிலிருந்த காகிதத்தை யாரும் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அதற்குப் பதில் எல்லோரும் போய்க் கொண்டிருந்த திசையில் எங்களையும் தள்ளியவாறு நிற்காமல் நடந்தார்கள். இதுவேதான் எங்களுக்கு வேண்டிய பதில் என்பது பிற்பாடு தெரிய வந்தது.

ஒரு சில நிமிடங்களுக்கு மட்டுமே தலைக்கு மேல் நீல வானத்தைப் பார்க்க முடிந்தது. பிறகு அது மறைந்து போய்த் தரைக்கடியில் அமைந்த மெட்ரோ ரயில் நிலையத்துள் புகுந்துவிட்டோம்.

என்னைப் போலவே இப்பொழுதுதான் முதன் முதலாய்த் தலைநகருக்கு வந்தவளான தாதி தூன்யா தன் கையிலிருந்த காகிதத்தில் குறிக்கப்

பட்ட முகவரி குறித்து விசாரிப்பதற்காக இங்கே மீண்டும் முயற்சி செய்தாள். ஆனால் நாங்கள் தள்ளியே செல்லப்பட்டோம்; சில்லறை மாற்றும் சன்னலுக்கும், பிறகு அடியெடுத்து வைத்து சும்மா நிற்கையில் உங்களைச் சரிவிலே கீழே அழைத்துச் செல்லும் அதிவினோத ஓடும் படிக் கட்டுக்கும் இழுத்து வரப்பட்டோம்.

நாங்கள் அடித்தளத்துக்கு வந்து சேர்ந்தோம். இதற்குள் வியர்த்து விருவிருத்துப் போய் ஒன்றும் புரியாமல் விழித்த தாதி தூன்யா, இவ்வளவு அவசரத்துக்கும் அமர்க்களத்துக்கும் இடையே மிக்வும் அமைதியாய் அங்கே செய்தியேடு படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தவரிடம் சென்று ''பெரியவரே, நாங்கள் கிராஸ்னோபிரேஸ்னென்ஸ்கயா நிலையத்துக்குப் போக வேண்டும், எந்தப் பக்கத்து ரயிலில் ஏறுவதெனச் சொல்லுங்கள்'' என்று கேட்டாள்.

''கிராஸ்னோபிரேஸ்னென்ஸ்காயாவா?'' என்று திருப்பிக் கேட்டு ''அந்தப் பக்கம்'' என்று அந்தக் கிழவர் கையைக் காட்டினார்.

அவர் காட்டிய பக்கத்தில் நாங்கள் செல்ல முற்பட்டதும் எங்களுக்குப் பின்னாலிருந்து திரும்பவும் கூறினார்: ''இந்தப் பக்கத்திலும் ஏறிச் செல்லலாம், எந்தப் பக்கத்தில் வேண்டுமானாலும் செல்லலாம், இரண்டும் ஒன்றுதான். இந்த ரயில் பாதை வட்டப் பாதை.''

நன்றி தெரிவிக்கும் முறையில் ''அட எழவே'' என்று முணுமுணுத்தவாறு தூன்யா என்னை இழுத்துக் கொண்டு ரயிலில் ஏறினாள்.

பிறகு நாங்கள் தரைக்கடியில் தடதடத்துச் சீறியவாறு சிறிது நேரம் விரைந்து சென்றோம்.

எனக்குக் கொஞ்சம் கவலையாய்த்தான் இருந்தது. இந்த மையிருட்டில் டிரைவரால் எப்படிச் சரியான பாதையில் ஓட்டிச் செல்ல முடியுமென்று எனக்குப் புரியவில்லை. தவருன பாதையில் திரும்பிவிட்டால் என்ன ஆவது, அல்லது இந்த இருண்ட சிக்கலில் வழி தெரியாமல் எங்கோ சென்று வெளியே வர முடியாத இடத்துக்குள் போய்விட்டால் என்ன செய்வது என்று நினைத்த போது எனக்கு அச்சமாகவே இருந்தது...

ஆனுல் அடிக்கடி ரயிலின் வேகம் குறைந்தது; ஒளி வெள்ளத்தில் மூழ்கிய ரயில் நிலையத்தில் வந்து நின்றது. எல்லா நிலையங்களும் நாங்கள் உள்ளே வந்து ஏறிய நிலையத்தைப் போன்றதாக வே இருந்தன வென்ருலும், ஒன்றுக்கொன்று வித்தியாசமாகவும் இருந்தன; எப்படியென்ருல் ஒவ்வொரு நிலையமும் அதற்குரிய தனி வகையிலான சுவர்களையும் அலங்கார முறையையும் பெற்றிருந்தது. கடைகளில் வாங்கிய பலவும் நிறைந்த பைகளைத் தூக்கிக் கொண்டு ஏராளமானேர் சாரை சாரையாய்க் கீழே இறங்கினர்கள். அவர்களுக்குப் பதில் மேலும் அதிக பைகளைக் கொண்ட ஏராளமானேர் சாரை சாரையாய் உள்ளே ஏறிக் கொள்ளவே காலியான இடங்கள் யாவும் உடனே நிரம்பிவிட்டன.

இதன்பின் கழிந்திருக்கும் பல ஆண்டுகளில் ஆசை தீர மெட்ரோவில் பல இடங்களுக்கும் போய் வர எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. விரைவில் நான் யார் உதவியுமின்றி தனியே மெட்ரோவில் பயணம் செய்யவும், தரைக்கடியில் அமைந்த பெருஞ் சிக்கலான பாதைகளில் ஓரிடத்திலிருந்து இன்னென்றுக்குச் செல்வதற்

கான குறுக்கு வழியைத் தேர்ந்தெடுக்கவும் தெரிந்துகொண்டுவிட்டேன். எல்லோரையும் போல மெட்ரோ போக்குவரத்தின் வசதிகளையும் அனுகூலங்களையும் நானும் போற்ற முற்பட்டேன். என்றாலும் ஆரம்பத்தில் என் மனத்துள் பதிந்து விட்ட ஒரு நினைப்பை என்னால் விட்டொழிக்க முடியவில்லை. மெட்ரோதான் யாவற்றுக்கும் முதலில் தோன்றியது, இதைப் பீடமாகவோ சலவைக் கல் அடித்தளமாகவோ கொண்டுதான் ஏனைய யாவும்—தரைக்கு மேல் இருக்கும் அனைத்து மாஸ்கோவும், கிரெம்ளினும் போல்ஷோய் மன்றமும், நொவதேவிச்சி மடமும், பூஷ்கின் சிலையும், கிரகமண்டலக் காட்சிசாலையும் அடங்கலான யாவும்—கட்டப்பட்டுள்ளன என்னும் இந்த நினைப்பு, ஆதியில் இருந்தது மெட்ரோதான் என்னும் இந்த நினைப்பு என்னை விட்டு அகல மறுக்கின்றது.

தூன்யா அப்படிப் பரபரப்படைந்து தவித்திருக்கத் தேவையில்லை, ஏனெனில் யாவும் எப்படி நடைபெறுமென்று கூறி எங்களை அனுப்பியிருந்தார்களோ அப்படியேதான் நடைபெற்றன. நெரித்துக் கொண்டு வந்த கூட்டம் எங்களையும் சேர்த்துத் தரைக்கடியில் இழுத்துச் சென்றதிலும் தவறில்லை, செய்தியேடு படித்துக் கொண்டிருந்தவர் எந்தப் பக்கத்தில் வரும் ரயிலிலும் ஏறலாமென்று கூறியதிலும் தவறில்லை. விரைவில் ரயிலினுள் சங்கநாதமிட்ட ''கிராஸ்னேபிரேஸ்னென்ஸ்காயா நிலையம்!'' என்ற அறிவிப்பு இதை மெய்ப்பித்தது.

இதுதான் நாங்கள் இறங்க வேண்டிய நிலையம். ஓடும் படிக்கட்டில் நின்று மேலே ஏறி, ஒரே இரைச்சலாய் இருந்த சாலைச் சந்திப்பில் வந்து

நின்றேம். கார்கள் விரைந்தோடின, டிராலிபஸ்கள் வீரிட்டுச் சென்றன, டிராம் வண்டிகள் தடதடத்துப் பறந்தன. போக்குவரத்துப் போலீஸ்காரர்கள் விசில்களை ஊதினர், பாதசாரிகள் நிற்க நேரமின்றி அங்குமிங்கும் விரைந்தனர்.

மாஸ்கோவா இது?! சுற்றிலும் பார்த்தேன்... வியப்புற்று வாயைப் பிளந்து கொண்டு நின்றேன்.

மெட்ரோ நிலையத்துக்குப் பின்னுல் கற்கட்டடத்தாலான மலை ஒன்று வானளாவி நின்றது. அதன் உயரம் மெய்யாகவே பயங்கரமாய் இருந்தது. வானுர உயர்ந்திருந்த அதன் சிகரங்கள் அது உண்மையில் இருந்ததைக் காட்டிலும் அதிக உயரமுள்ளதாய்த் தோன்றச் செய்தன. அது மட்டுமல்ல, அடிவாரக் குன்றுகள், கிளைத்தொடர்கள், பிளவுகள் ஆகிய யாவும் அடங்கலாய் பிரம்மாண்ட மலையாய் ஒரு பெரும் பரப்பை வியாபித்துக் கொண்டு நின்றது. இந்த மலை மக்கள் வசிக்கும் ஒரு பெரிய குடியிருப்பாம்! எங்கு பார்த்தாலும் சன்னல்கள்! எண்ணிக் கணக்கிட முடியவே முடியாது—அத்தனை சன்னல்கள்! லீபெத்ஸ்க் நகரம் பூராவையுமே அந்த மலையினுள் அடங்கச் செய்துவிடலாம் போலிருந்தது!

அந்த மலையின் உயரத்தை நாங்கள் பயணம் செய்துவிட்டு வெளியே வந்த மெட்ரோவின் ஆழத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க முற்பட்டேன். உடனே எனக்குத் தலை சுற்றியது, தூன்யாவின் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டேன்.

''ஐயோ, பாவம்! குழந்தைக்குப் பசிக்கிறது!'' என்று அவள் கூவினுள். ''விடிந்து இவ்வளவு நேரமாகிறது, இன்னும் நீ ஆகாரம் ஏதுமின்றி வெறும் வயிற்றுடன் இருக்கிருயே! போதும்

மாஸ்கோ, பித்து பிடித்துவிடும் போல் இருக்கிறது!'' என்ருள்.

ஆனுல் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள்! எங்களுக்கு எதிரே அதே இடத்தில் ஒருத்தி அப்பங்கள் விற்றுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். தூன்யா உடனே அவற்றில் சிலவற்றை வாங்கினுள். தங்க நிறமுள்ள சூடான, பிசுபிசுப்பான அப்பங்கள், அங்கேயே யாவற்றையும் மளமளவென்று தின்று விட்டு நாக்கால் உதடுகளேத் துடைத்துக் கொண்டோம் — அவ்வளவு ருசியாய் இருந்தன. மாஸ்கோ பணியாரங்கள் எவ்வளவு தின்ருலும் தெவிட்டுவதில்லே—அவ்வளவு இனிமையானவை!

இதன் பிறகு 4/6, பொல்ஷாயா குருஸீன்ஸ்காயா தெருவைத் தேடிச் சென்ருேம், அதிக சிரமமின்றி இம்முகவரிக்குப் போய்ச் சேர்ந்தோம். கம்பி அடைப்புக்குப் பின்னுல் தழைத்து வளர்ந்திருந்த நெட்டிலிங்க மரங்கள் அந்தப் பழைய இரண்டு அடுக்குக் கட்டடத்தை வெளியே அதிகம் தெரியாதபடி மறைத்திருந்தன.

எனது வாழ்க்கையில் அடுத்த பத்து ஆண்டுகளே இவ்விடத்தில்தான் கழித்தேன், இந்தக் கட்டடத்தைப் பற்றி பிற்பாடு அதிகம் சொல்வேன், இப்பொழுது வேண்டாம்....

அடுத்து நடைபெற்றதைச் சொல்கிறேன். நாங்கள் போய்ச் சேர வேண்டிய கட்டடம் இதுவல்ல, கண்ணுக்கினிய இந்தப் பழைய கட்டடத்தில்தான் சிறுவர்களின் வகுப்புகள் நடைபெற்றன, ஆனுல் அவர்கள் வசித்த இடம் இன்னும் கொஞ்ச தூரம் தள்ளி கிராஸ்னயா பிரேஸ்னியா வட்டாரத்தில் இருப்பதாய் எங்களிடம் சொன்னுர்கள்.

எனது வரவைப் பல நாட்களாய் எதிர்பார்த்துக்

காத்திருப்பதாய்ச் செல்லி விவரங்களை ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டு, புதிய முகவரி ஒன்றுக்கு நடையைக் கட்டுமாறு சொன்னார்கள். அவ்வாறே நாங்கள் நடையைக் கட்டினோம்.

நல்ல வேளையாய் அந்தப் புதிய முகவரி மிகவும் அருகாமையிலேயே இருந்தது. சோபையற்ற ஒரு கட்டடத்தின் வெளிமுற்றத்தைத் தாண்டி நடந்து கொல்லைப்புற வாயில் எங்கிருக்கிறது என்று தேடிச் சென்றோம் (நாங்கள் கொல்லைப்புற வாயிலில்தான் நுழைய வேண்டுமென்று தெளிவாய்ச் சொல்லியிருந்தார்கள்). அங்கே ஒரே இருட்டாய் இருந்ததால் வழி தெரிந்து உள்ளே போவதற்குள் பெரும் பாடாகிவிட்டது. எப்படியோ ஒருவாறு முதல் மாடியை அடைந்து கதவைத் திறந்து கொண்டு நடையறை ஒன்றினுள் நுழைந்தோம். சுவர்களில் ஒரு வகை மங்கல் நிறத் தைல வண்ணம் பூசப்பட்டிருந்தது.

வேலைநேர நீல மேலங்கி அணிந்த ஒரு கிழவி எங்கிருந்தோ தோன்றி எங்கள் முன்னால் வந்தாள், அவள் விடுதி பெருக்கும் பணிப் பெண் அல்லது தாதியாய் இருந்திருக்க வேண்டும். ''புதிய பையனா?'' என்று சர்வசாதாரணமான முறையில் அவள் விசாரித்தாள்.

''ஆம், புதிதாய் வந்திருக்கிறான், நான் அழைத்து வந்துள்ளேன்'' என்று தான்யா பதிலளித்தாள்.

''சரி'' என்று பெருமூச்சு விட்டவாறு ''பெயர் என்ன?'' என்று கேட்டாள்.

''ழேன்யா. சொன்னதைச் செய்கிறவன், எங்கள் ழேன்யா நல்ல பையன்!''

''எங்கள் பையன்கள் எல்லோருமே நல்ல பையன்கள்தான்'' என்று அந்தக் கிழவி சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த துடைப்பக் கோலே எடுத்துக் கொண்டு ''இங்குள்ளவர்கள் எல்லோருமே சொன்னதைச் செய்கிறவர்கள்தான்'' என்று கூறி முடித்தாள்.

''நான் உள்ளே போய்ப் பார்க்கலாமா...'' என்று தயங்கியவாறு தூன்யா கேட்டாள். ''இவன் வசிக்கப் போகும் அறையினுள், தூங்கும் இடத்தினுள் எட்டிப் பார்க்கலாமா?''

''போய்ப் பாரேன், அதோ அந்தக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போ.''

கிழவி காட்டிய கதவருகே தூன்யாவும் நானும் சென்று மெள்ள அதைச் சிறிதளவு திறந்து கொண்டு உள்ளே பார்த்தோம்.

''அடேயப்பா!'' என்று தூன்யா திகைப்புற்றுக் கூவினுள்.

அதன்முன் நான் கண்டிராத அளவுக்கு அவ்வளவு பிரம்மாண்டமான ஓர் அறை அந்தக் கதவுக்குப் பின்னுல் இருக்கக் கண்டேன். பெரும் பரிமாணமுடையதாயினும் ஒரு முனேயிலிருந்து எதிர் முனேவரை ஓரிடம் பாக்கியில்லாமல் இரும்புக் கட்டில்கள் போட்டு நிரப்பப்பட்டிருந்ததால் அறையினுள் ஒரே நெரிசலாய் இருந்தது. குறைந்தது நூறு கட்டில்களாவது அதனுள் இருந்திருக்குமென நினேக்கிறேன். (அந்த நாட்களில் எனக்கு நூறுக்கு மேல் எண்ணத் தெரியாதென்பதை தொடக்கத்திலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன், ஆகவே மிக அதிகமாய் இருப்பவற்றை நான் நூறு என்பதாய்ச் சொல்வது வழக்கம்.) சுத்தமாய் படுக்கை விரித்துப் போடப்பட்ட ஒரே

மாதிரியான கட்டில்கள்—நூறு இருக்கும்—வரிசையாய் இருந்தன. ஆனால் யாவும் காலியாகவே இருந்தன. அந்தப் பிரம்மாண்ட அறையில் ஓர் ஆத்மாவையுங்கூட காண முடியவில்லை. இல்லை, நான் சொல்வது சரியல்ல, தொலைக் கோடியில் ஓராளின் தலையும் கால்களும் தெரிந்தன.

''அட தெய்வமே'' என்று தூன்யா மீண்டும் வியந்து கொண்டாள் ''இதைப் பார்த்தால் நம்முடைய இடம் எவ்வளவோ...'' என்று எதோ சொல்ல ஆரம்பித்தவள், சொல்லாமல் கையால் வாயை மூடிக் கொண்டாள். அவள் என்ன கூற விரும்பினாளோ, என்னால் சொல்ல முடியவில்லை.

''பெண்ணே, போதும்! சிறுவனிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்படு'' என்று அந்தக் கிழவி உத்தரவிட்டாள். ''அன்னியர்கள் இங்கு அதிக நேரம் இருக்கக் கூடாது.''

''நான் ஒன்றும் அன்னியவளல்ல'' என்று தூன்யா கண்களைக் கசக்கியவாறு குறை பட்டுக் கொண்டாள். ''ஆனால், பாவம், எங்கள் சிறுவனை இங்கே தன்னந் தனியே விட்டுச் செல்ல எனக்கு மனம் வரவில்லை.''

''தன்னந் தனியேவா! இங்கு இவன் தன்னந் தனியே இருக்க தவங்கிடந்தாலும் சந்தர்ப்பம் கிடைக்காது! இவனைப் போன்ற சிறுவர்களின் ஒரு பெரும் பட்டாளமே இருக்கிறது இங்கு. எல்லோரும் அடித்து மோதிக் கொண்டு உள்ளே வரும்போது எப்படி இருக்கும், தெரியுமா?... காட்டுக் கூச்சலும் ரகளையும் சகிக்க முடியாது. ஆம், அன்னியர்கள் இங்கு அதிக நேரம் இருக்கக் கூடாது.''

அதற்கு மேல் நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை, விடை பெற்றுக் கொண்டோம்.

தாதி தூன்யா போய் வருவதாய்ச் சொல்லி விடை பெற்றுக் கொண்டபோது தனது பையிலிருந்த பெரிய மிட்டாய்ப் பெட்டியை—வேரா இவானெவ்னு ரயில் நிலையத்துக்கு எடுத்து வந்து கொடுத்த அதை—வெளியே எடுத்து என்னிடம் தந்தாள். பிறகு வேறு யார் கண்ணிலும் படக் கூடாதென்று இரகசியமாய் என் சட்டைப் பைக்குள் சில ரூபிள் நோட்டுகளைச் சொருகினுள்.

3

''உன் பெயர் என்ன?''

அவனிடம் சொன்னேன்.

''குடும்பப் பெயர் என்ன?''

அதையும் சொன்னேன்.

''எங்கிருந்து வருகிருய்?''

சொன்னேன்.

''சரி இப்படி வா. புரோஹரொவ், வா இங்கே.''

அவனிடம் சென்றேன்.

''உன்னைச் சந்திக்க நேர்ந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.'' இதைச் சொல்லிவிட்டு இரண்டு விரல்களை மட்டும் நான் பிடித்துக் குலுக்குவதற்காக என்னிடம் நீட்டினுன். படுக்கையில் போர்வைகளின்மீது கால்மீது கால் போட்டுக் கொண்டு படுத்திருந்தான்; அது மட்டுமல்ல, பூட்சுகளைக் கழற்ருமலே படுத்திருந்தான்.

நான் வசிக்கப் போகும் இந்த அறையினுள் தூன்யாவும் நானும் எட்டிப் பார்த்தபோது அறையின் தொலைக் கோடியில் ஓராளின் தலையும் கால்களும் தெரிந்ததாய் முன்பு கூறினேன்.

நெருங்கி வந்து பார்த்த போது அந்தத் தலையும் அந்தக் கால்களும் இரு வேறு நபர்களைச் சேர்ந்தவை என்பது தெரிந்தது. தலையானது படுக்கையில் உட்கார்ந்திருந்த ஒரு சிறு பையனுடையது. கரிய விழிகளையுடைய பழுப்பு நிறச் சிறுவனுன அவன் மிரண்டு நடுங்குவது போல் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான், என்னைப் போல அவனும் புதிதாய் வந்துள்ளவனுய்த் தோன்றினுன். கால்களானவை பூட்சைக் கழற்ருமலே படுக்கையில் படுத்திருந்த பையனுடையவை.

கொழுத்துப் பருத்துக் குண்டு போல் இருந்தான் அவன்!

அவனுக்குத் தலையுங்கூட இருந்தது.

விசாலமான அவன் முகத்தில் கன்னத்து எலும்புகள் எடுப்பாய்த் தெரிந்தன. இரு புறத்திலும் குத்துக் கோணத்தில் நீட்டிக் கொண்டிருந்த இருபெருங் காதுகள் அவனுடைய முகத்தை நீளத்துக்குச் சமமான அகலமுடையதாக்கின. இந்த நிலையில் அவன் இளிக்கத் தொடங்கிஞல், கேட்கவா வேண்டும்?...

''உன் கவிட்டியில் வைத்திருக்கிருயே, என்ன அது?''

''மிட்டாய்'' என்றேன்.

''ஆகா! சாக்லெட்டா?''

குண்டன் உடனே ஒரு தாவு தாவி எழுந்து நின்ருன், துருத்திக் கொண்டு வந்து விட்ட அவனுடைய இரு விழிகளும் தலையிலிருந்து வெளியே தாவிவிடும் போலிருந்தன.

''தம்பி, உன்னுடைய சாரீர நாளங்களுக்குச் சாக்லெட் நல்லதல்ல, தெரியாதா உனக்கு? இங்கே நீ எதற்காக வந்திருக்கிருய்? பாட்டுப் பாடக்

கற்றுக் கொள்ளவா, அல்லது சாக்லெட் தின்பதற்கா?

கூனிக் குறுகிவிட்ட நான் அப்படியே தரைக்கடியில் அழுந்திவிட்டால் தேவலையென நினைத்தேன்....

''அந்த எழவைக் கொடு என்னிடம்!''

மிட்டாய்ப் பெட்டியை அவனிடம் கொடுத்தேன். அவசர அவசரமாய் அவன் ரிப்பனை அவிழ்த்துப் பெட்டியைத் திறந்தான், உடனே கையை உள்ளே விட்டு ஒரு பிடி சாக்லெட்டை அள்ளிக்குகை போலிருந்த தன் வாய்க்குள் அவ்வளவையும் அடைத்துக் கொண்டான்.

பிறகு அவன் தாடைகள் வேலை செய்ய ஆரம்பித்தன. மன நிறைவுடன் கனைத்துக் கொள்ளப் போகும் பூனையைப் போல் கண்களைச் சுளித்துக் கொண்டான். அதேபோது அவன் விரல்கள் மிட்டாய்ப் பெட்டிக்குள் துழாவின.

சில கணங்களுக்குள் என்னுடைய மிட்டாய்ப் பெட்டியில் சோபையற்ற ஒரு சில மிட்டாய்களைத் தவிர ஏனைய யாவும் காலியாகிவிட்டன. அதற்கு மேல் வயிற்றில் இடமில்லாததால்தான் இந்த மிட்டாய்களை அவன் விட்டு வைத்திருக்க வேண்டும். பிறகு மிட்டாய்ப் பெட்டியை நகர்த்தி வைத்து ''நீங்கள் இருவரும் கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள்... ஆனால் நீங்கள் மிட்டாய் தின்பது இதுவே கடைசி தரம், ஞாபகம் இருக்கட்டும்!'' என்றான்.

அதற்குப் பிறகு தலையணைகள்மீது சாய்ந்து கால்களை நீட்டிக் கொண்டு படுத்து வயிற்றைத் தடவிக் கொண்டான்.

''மராத்'' என்று சாந்தமாய் அந்தக் கரு விழிச்

சிறுவனைக் கூப்பிட்டான். தன்னைத் தானே நொந்து கொள்கிருனே என்று நினைக்கும்படியான ஒரு விதப் பரிதாபம் அவன் குரலில் தொனித்தது. ''எங்களுக்கு ஒரு கிளாஸ் தண்ணீர் கொண்டு வாயேன். வெளியே நடையில் தண்ணீர்க் கலன் இருக்கிறது, கிளாசும் அங்கே இருக்கும்'' என்ருன்.

மராத் பணிவுடன் எழுந்து கதவை நோக்கிச் சென்ருன்.

''சரி, உன் பெயர் என்ன?'' என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவனைக் கேட்டேன். இது வரை நான்தான் அவனுக்கு அறிமுக மாயிருந்தேன், அவன் தன் பெயரைக் கூறிக் கொள்ளவில்லை.

''நிக்கலாய் இவானவிச் பிர்யுக்கோவ், என்னை நீ நிக்கலாய் இவானவிச் என்று அழைக்கலாம்.''

''எந்த வகுப்பு நீ?'' என்று துணிவுடனே கேட்டேன்.

''நான்காம் வகுப்பு'' என்று பதிலளித்தான். ''இவ்வருடம் நான்காம் வகுப்புக்கு வந்திருக் கிறேன்.''

அப்பொழுது எனக்கு இந்த விவரம் வியப் பூட்டுவதாய் இல்லை. நிக்கலாய் இவானவிச் என் பதாய்த் தன்னைக் குறிப்பிட்டுக் கொண்ட அந்தக் குண்டன் நான்காம் வகுப்பில்தான் இருக்கிருன், ஆகவே என்னைவிட மூன்று வயதே மூத்தவன் என் பது அப்பொழுது எனக்கு விந்தையாகவோ, வேடிக் கையாகவோ படவில்லை. இன்ருய் இருந்தால் நான் நிச்சயம் சிரித்திருப்பேன், ஆனல் அந்நாட் களில் நிலைமை வேறு விதமாய் இருந்தது. இம்மா திரியான ஒரு வித்தியாசம் வயது வந்தவர்களுக்

கும் வயது வந்தோராய்ச் சொல்லத்தக்கோருக்கும் மட்டுமே அற்பமானதாய்த் தோன்றும். ஆனால் குழந்தைகளாய் இருப்போருக்கு இது மிகப் பெரிய வித்தியாசமாகும். இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த மாணவன் முதல் வகுப்பு மாணவனை அறியாச் சிறுவனாய், பச்சைக் குழந்தையாய்க் கருதி மிக அலட்சியமாய் நடந்து கொள்வான். ஆனால் முதல் வகுப்பு மாணவன் நான்காம் வகுப்பு மாணவனை பெரும் பலம் படைத்த சூரனாய், தன்னை அச்சுறுத்தும் மூர்க்கனாகவோ ஏனையோரிடமிருந்து தன்னைப் பாதுகாக்கும் மல்லனாகவோ கருதுகிறான்.

நீளத்துக்குச் சமமான அகலமுடைய முகத்தையுடைய இவன், என் மிட்டாய்ப் பெட்டியைக் காலி செய்துவிட்ட இந்தக் குண்டன், என்னை அச்சுறுத்தும் மூர்க்கனாய் இருக்கப் போகிறானா, அல்லது பாதுகாக்கும் மல்லனாய் இருக்கப் போகிறானா என்பது அந்த நேரத்தில் இன்னும் எனக்குத் தெளிவாகவில்லை.

''நீ... பாடவும் செய்வாயா?'' என்று கேட்டேன்.

''என்-ன்-ன?''

மீண்டும் விழிகள் இரண்டும் வெளியே துருத்திக் கொண்டு வர நிக்கலாய் இவானவிச் பிர்யுக்கோவ் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தான்.

''என்ன கேட்டாய்? பாடவும் செய்கிறேனா என்று கேட்டாய்! நிக்கலாய் இவானவிச் பிர்யுக்கோவைத் தவிர இங்கு பாடுகிறவர்கள் வேறு யாரும் இருக்கிறார்களா என்று கேள் நீ. நிக்கலாய் பிர்யுக்கோவ்தான் இங்கு தலைமையான உச்சக் கட்டைப் பாடகன், பாட்டுக் குழுவின் முதன்

மையான தனிப் பாடகன்! பிர்யுக்கோவ் உச்ச ஸ்தாயியில் பாடினுன் என்ருல்... நேரே நிமிர்ந்து மூச்சை உள்ளுக்கு இழுத்து வாயைத் திறந்தான். உடனே கர்ண கடூரமான பயங்கரக் கூச்சல் கிளர்ந்தெழுந்தது.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது, ஆயினும் அந்தப் பயங்கரக் கூச்சல் நிக்கலாய் பிர்யுக்கோ வின் தொண்டையிலிருந்து எழுந்ததல்ல, விரியத் திறந்திருந்த சன்னலுக்கு அப்பாலிருந்தே ஒலித் தது என்பதை உணர்ந்து கொண்டேன்.

''என்ன சப்தம் இது?''

''அதுவா?'' என்று கூறி பிர்யுக்கோவ் சன்ன லிடம் ஓடி வெளியே எட்டிப் பார்த்தான். ''செந் நாரையின் கூச்சல் அது.''

''என்ன?'' என்று வியந்து கேட்டவாறு உந்திக் கொண்டு சன்னலுக்கு வெளியே எட்டிப் பார்க்க முயன்றேன்.

''செந்நாரை'' என்ருன் மீண்டும்.

''எப்படி இருக்கும் அது?''

''செந்நாரை தெரியாது என்ரு சொல்கிருய்? நமது விடுதி விலங்குக் காட்சிசாலேக்குப் பக்கத் தில் இருக்கிறது''.

அவன் என்னேக் கொஞ்சம் தூக்கவே நான் சன்னலுக்கு அப்பால் எட்டிப் பார்த்தேன். சன்ன லுக்கு அடியில் நூறு தப்படிக்குள் கான்கிரீட் சுவர் ஒன்றும் அதன் பின்னல் வரிசையாய் மரங் களும் இருந்தன. இவற்றின் இடுக்குகள் வழியே பளிச்சிடும் நீல நீர்ப் பரப்பு தெரிந்தது. அந்தத் தடாகத்தின் கண்ணுடி போன்ற பரப்பில் பல பறவைகள் தனித் தனியாகவும் கூட்டம் கூட்ட மாகவும் சாவதானமாய் அங்குமிங்கும் நீந்திக்

கொண்டிருக்கக் கண்டேன். வெள்ளையும் கறுப்பும் நீலமும் பச்சையும் இளஞ்சிவப்புமான வண்ணப் பறவைகள் நீரில் மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டுமிருந்தன; சிறகுகளை அடித்துக் கொண்டும் கீச்சிட்டும் கூவியும் கரகரத்தும் உஸ்ஸிட்டும் கத்திக் கொண்டிருந்தன. பரபரப்பான இந்தக் கூச்சலை மூழ்க்கடிக்கும்படி மறுபடியும் காதைத் துளைக்கும் அந்தக் கிரீச்சொலி எழுந்தது...

''அதோ பார், செந்நாரை'' என்று வியந்து போற்றும் குரலில் பிர்யுக்கோவ் கூறினான். ''அதி விநோதப் பறவை!'' என்றான்.

''விலங்குக் காட்சிசாலைக்கு நான் போய்ப் பார்த்ததில்லை.''

''ஒரு தரம்கூட போனதில்லையா?''

''இல்லை.''

''பையில் எதாவது வைத்திருக்கிறாயா?''

''பையிலா?... ஓகோ'' என்றேன், அவன் கேட்டதன் அர்த்தம் புரிந்ததும். தூன்யா என்னிடம் கொடுத்துச் சென்ற நோட்டை உடனே வெளியே எடுத்து ''இதோ இருக்கிறது'' என்றேன்.

''பிறகு எதற்காகக் காத்திருக்கிறோம்?'' என்று கூவியவாறு நிக்கலாய் இவானவிச் துள்ளிக் குதித்தான். என் கையிலிருந்த நோட்டை வாங்கிக் கொண்டு சந்தேகக் கண்ணுடன் என் உற்று நோக்கினான். ''உனக்கு இது எப்படி கிடைத்தது?''

''தாதி தூன்யா எனக்குத் தந்தாள்.''

''தாதி, வாழ்க நீ! தூன்யா, வாழ்க நீ!'' என்று நிக்கலாய் இவானவிச் ஆனந்தக் கூச்சலிட்டான்.

''நாம் விலங்குக் காட்சிசாலைக்குப் போகிறோம்'' என்று திடமான குரலில் அறிவித்தான். ''விலங்குகள் என்றால் குழந்தைகளுக்கு உயிர்தான். விலங்கு

கள்தான் நம் எல்லோருக்கும் மூதாதையர்கள்!''

கதவைத் திறந்து கொண்டு மராத் ஒரு கிளாசு டன் உள்ளே நுழைந்தான். தண்ணீர் சிந்தி விடாமல் இருக்கும் பொருட்டு கரு விழிக் கண்களைச் சுளித்துக் கொண்டு அடி மேல் அடி வைத்து நடந்து வந்தான்.

''மிக்க நன்றி'' என்று சொல்லி நிக்கலாய் இவானவிச் அவனிடமிருந்து கிளாசை வாங்கி, தலையைப் பின்னால் சாய்த்துக் கொண்டு ஒரே வாயில் அதைக் காலி செய்தான். பிறகு மராத்தின் சட்டையினுடைய காலரைக் கழுத்திலிருந்து விலக்கிக் கிளாசில் எஞ்சியிருந்த தண்ணீரை அவன் முதுகில் ஊற்றினான்.

* * *

அடுத்த மூன்று மணி நேரத்தை நாங்கள் விலங்குக் காட்சிசாலையில் கழித்தோம்.

யானைகளை, பெரிய யானை ஒன்றையும் குட்டி ஒன்றையும் பார்த்தோம். உச்சியில் கூர்முனைக் கம்பிகள் பதித்த கான்கிரீட் சுவரடைப்புக்குள் ஆழமான குழியினுள் வெள்ளைக் கரடிகள் இருக்கக் கண்டோம். ஒரு கரடி அங்கிருந்த குட்டையினுள் மூழ்கி மூழ்கி மேற்பரப்புக்கு வந்து நீரை உமிழ்ந்து கனைத்து உறுமிக் கொண்டிருந்தது. மற்றொன்று கரையிலே ஒரு பழைய கார் டயரை அழுத்தியும் கடித்தும் விளையாடிற்று. பிறகு நாங்கள் ஒரு நீர்யானையைப் பார்த்தோம். அதன் உடலை நாங்கள் பார்க்க முடியவில்லை, இரு கண்கள் மட்டும்தான் நீருக்கு மேல் துருத்திக் கொண்டிருந்தன, உடல் முழுதும் நீருக்கடியில் மறைந்திருந்தது. வேடிக்கை பார்த்தவர்கள் அதைப்

பல விதமாய்க் கூப்பிட்டும், ரொட்டியையும் பன்களையும் விட்டெறிந்தும் எவ்வளவோ முயற்சி செய்துங்கூட அது வெளியே வர மறுத்துவிட்டது. புலி, வரிக்குதிரை, சிறுத்தை, நீளமான பருத்த வாலுடைய கங்காரு, மரக் கட்டை போல மிதந்து பாசாங்கு காட்டிய முதலை, வாயரட்டையான கிளி ஆகிய பலவற்றையும் பார்த்தோம்.

இந்த விலங்குகளை எல்லாம் முதன்முதலாய் அப்பொழுதுதான் நான் பார்த்தேன். பன்முறைப் பார்த்துப் பழக்கப்பட்டவனுக்குரிய பாவனையுடன் நிக்கலாய் இவானவிச் என்னை ஒவ்வொரு கூண்டாய் அழைத்துச் சென்று காட்டினான். விலங்குக் காட்சிசாலையில் ஆங்காங்கே இருந்த கூட்டத்துக்கு அளவே இல்லை. யாவரையும் விட குழந்தைகள் ஏராளமாய் இருந்தனர், ஏனென்றால் அது கோடை விடுமுறையின் கடைசி நாள், என்னைப் போல் எண்ணற்ற பலருக்கும் முதன் முதல் பள்ளிக்கூடம் செல்லத் தொடங்குவதற்கு முந்திய கடைசி நாள்.

ஆயினும் காட்சிசாலையில் அனேகமாய் யாரும் இல்லாத மூலை ஒன்றைச் சென்றடைந்தோம். பலரும் அங்கே வந்தார்கள் என்றாலும் யாரும் அதிகம் நின்று அங்குள்ளவற்றைப் பார்க்கவில்லை. அக்கறை காட்டாது அவர்கள் நிற்காமல் நடந்து சென்றனர். காரணம் என்னவெனில் காட்சிசாலையின் இப்பகுதியில் கம்பியடைப்புகளுக்குப் பின்னால், தொலை தூர வெப்ப நாடுகள் அல்லது குளிர் நாடுகளிலிருந்து மாஸ்கோவுக்குக் கொண்டுவரப்பட்ட அரிய, அதிசய விலங்குகள் எவையும் இருக்கவில்லை. சாதாரண முயல், நரி, ஓநாய் முதலானவையே இருந்தன.

இவை யாவும் அமைதி இழந்து தவிப்பதாய் நினைத்தேன். எப்படியாவது தப்பித்து வெளியே ஓடிவிட வேண்டுமென்று தவிப்பது போல கூண்டு களுக்குள் சுற்றிச் சுற்றி ஓடி வந்தன. வேதனை நிரம்பிய கண்களுடன் வெளியே பார்த்தன. எதற் காக எங்களை இங்கே கொண்டு வந்து அடைத் திருக்கிறீர்கள் என்று கேட்பது போலிருந்தது அவை பார்த்த பார்வை. யானையைக் கொண்டு வந்து வைக்கிறீர்கள், புரிந்து கொள்ள முடி கிறது; அதே போல நீர்யானையை வைப்பதும் சரிதான்; ஒட்டகச்சிவிங்கியும் காட்சியில் வைக் கப்பட வேண்டியதுதான், அதன் கழுத்து ஒன்றுக் காக வேண்டியே பல தரம் அதைப் பார்த்துச் செல்லலாம். நாங்களுங்கூட இப்படிப்பட்ட விநோதப் பிறவிகளை இதன்முன் பார்த்ததில்லை... ஆனால் எங்களை ஏன் இங்கு கொண்டு வந்து அடைக்கிறீர்கள்? நாங்கள் வெளிநாட்டு விலங்கு கள் அல்லவே, இப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தானே. மானையுங்கூட, அசட்டு வெள்ளாட்டை யுங்கூட அல்லவா கம்பிகளுக்குப் பின்னால் அடைத்து வைத்திருக்கிறீர்கள்.... என்ன ஆட்கள், ஐயா, நீங்கள்!...

சோகமே உருவெடுத்தாற் போன்று உர்ரெனப் பார்த்தவாறு ஒரு ஓநாய் தனது இரும்புக் கம்பிக் கூண்டுக்குள் ஒரு முனையிலிருந்து எதிர் முனைக்கு ஓயாது ஓடிக் கொண்டிருந்தது. பிறகு களைத்துப் போய்க் கீழே படுத்துப் பாதங்களின்மீது தலையை வைத்துக் கொண்டது.

''நாயைப் போலவே செய்கிறதே'' என்றேன் நான்.

''நாயேதான் இது'' என்று நிக்கலாய் இவான

விச் சொன்னுன். ''இவை பொல்லாதவை, கொடியவை என்றெல்லாம் சொல்வது சுத்தப் பொய். இவை ஒன்றும் கொடியவை அல்ல. தாம் தாக்கப் படாத வரை இவை யாரையும் தாக்குவதில்லே. பலரும் இவற்றைத் தாக்கச் செல்கிருர்கள், பணம் கிடைக்கும், வெகுமதி பெறலாம் என்று தாக்குகிருர்கள். ஏன் நாய்களேத் தெருக்களிலிருந்து பிடித்துக் கொண்டு போய்க் கொடுப்போருக்குங்கூட பணம் தருகிருர்களே.''

''நாய்தான் என் உயிரைக் காப்பாற்றியது'' என்று நான் சொன்னேன்.

''உயிரைக் காப்பாற்றியதா, எப்படி?''

அல்சேஷன் நாய் ஒன்று எப்படி என் உயிரைக் காப்பாற்றியது என்று சுருக்கமாய்க் கூறினேன். நிக்கலாய் இவானவிச்சை கவனமாய்ப் பரிசீலித்தவாறு நான் இந்தக் கதையைச் சொன்னேன். அவன் இதை நம்புவாஞ, அல்லது சரடு விடுகிறேனென நினைப்பாஞ என்று எனக்குத் தெரியவில்லே. ஆஞல் நான் சொன்னதை நிக்கலாய் இவானவிச் காது கொடுத்து அனுதாபத்துடன்தான் கேட்டான். நான் கூறியது அனைத்தையும் அவன் நம்பியதாக எனக்குப் பட்டது. கதையை நான் சொல்லி முடித்ததும் தலையை ஆட்டிக் கொண்டான்.

இங்கே காட்சிசாலேயில் வன விலங்குகளும் சாதாரண விலங்குகளும் இருந்த கூண்டுகளுக்கு அருகே நிக்கலாய் இவானவிச் அங்கே விடுதியில் நான் கண்ணுற்ற இரக்கமற்ற குண்டனே, என்னுடைய மிட்டாய்ப் பெட்டியைக் காலி செய்து மராத்தின் காலரை இழுத்து முதுகில் தண்ணீரை ஊற்றிய முரடனேச் சிறிதும் ஒத்திருக்கவில்லே

என்பது தெரிந்தது. நான் இன்னும் கொஞ்சம் துணிவு பெறுவேஞயின் நிக்கலாய் இவானவிச் என்பதற்குப் பதிலாய்ச் சகஜமான முறையில் கோல்யா என்றே அவனே எளிதில் கூப்பிட முடியு மென்றுகூட நினைக்கலானேன்.

''வா, போய்க் குரங்குகளேப் பார்க்கலாம்'' என்று கோல்யா என்னே அழைத்தான்.

ஆகவே குரங்குகளிடம் சென்ருேம். குரங்குக் குடிலில் கூட்டம் தாங்க முடியவில்லே. கூண்டு களேச் சுற்றிலும் பெருந் திரளாஞேர் நெருக்கி யடித்துக் கொண்டு நின்றனர். பெரியவர்கள் ஒரு வர்மீது ஒருவர் தொத்திக் கொண்டனர், சிறு வர்கள் பெரியவர்களது கால் இடுக்கில் நுழைந்து உள்ளே சென்றனர்.

கோல்யா பிர்யுக்கோவ் இந்தக் கூட்டத்திடம் ஓடிவந்து தலேயைக் குனிந்து கொண்டு மக்கள் வெள்ளத்துக்குள் புகுந்து சென்ருன். அவனேப் பின்தொடர்ந்து நானும் சென்றேன். கூட்டத் தினுள் இடுக்கில் நுழைந்து முன்னே சென்ற நாங் கள் வெவ்வேறு திசைகளில் தள்ளிவிடப் பட்ட தால் விரைவில் நான் கோல்யாவிடமிருந்து பிரிக் கப்பட்டுவிட்டேன். ஆஞல் நான் கம்பி வலேக்குப் பக்கத்துக்குப் போய்ச் சேர்ந்தேன், வலேக்குப் பின்ஞல் குரங்குகள் சேஷ்டைகள் புரிந்து கொண் டிருந்தன.

வாலே மாட்டிக் சுற்றிக் கொண்டு தலேகீழே தொங்கின, ஊஞ்சல்களில் ஆடின, ஒன்றை யொன்று விரட்டிக் கொண்டு ஓடின. சில குரங்கு கள் ஒன்றையொன்று கட்டித் தழுவிக் கொண்டு கொஞ்சின, வேறு சில சண்டை போட்டன. வேடிக்கை பார்ப்போரின் கவனத்தைக் கவரும்

பொருட்டு புதுப் புது வழிகளைக் கையாண்டு பார்க்க முயலுவது போல அவை வயிற்றையும் பின் கழுத்தையும் சொறிந்து விட்டுக் கொண்டன. ஒரு கிழக் குரங்கு சிறுசு ஒன்றைத் தன் மடியிலே உட்கார வைத்து அதன் முடிகளுக்குள் கவனமாய்ப் பரிசீலித்துப் பேன்களை எடுத்து நசுக்கிற்று. தாய்க் குரங்கு ஒன்று சொன்னபடி கேட்காத குட்டியைப் பிடித்து இழுத்து வந்து சரியானபடி பூசை கொடுத்தது.

இதையெல்லாம் பார்த்து எல்லோரும் வயிறு குலுங்கச் சிரித்தார்கள், நானும் விழுந்து விழுந்து சிரித்தேன்.

குரங்குகளுடைய இந்த சேஷ்டைகள் யாவும் அவற்றின் அன்றாடக் குரங்கு வாழ்க்கையின் வழக்கமான செயல்களாகவே இருக்கலாம். ஆனால் குரங்குகள் வேண்டுமென்றே இவற்றைச் செய்வதாய் எனக்குத் தோன்றிற்று. சுற்றிலும் நின்று தம்மைப் பார்ப்போருக்கு வேடிக்கை காட்டி அவர்களை மகிழ வைப்பதற்காக இந்தக் குரங்குகள் இல்லாத குறும்புகளை எல்லாம் செய்வதாய் நினைத்தேன். தமது கூண்டுகளைச் சுற்றி இவ்வளவு அதிகமானோர் கூடியிருப்பது குறித்து இவை மனம் மகிழ்வது போல இருந்தது எனக்கு. விலங்குக் காட்சிசாலையில் வேறு எங்கையும்விட இங்கு பெருங் கூட்டம் கூடியிருந்தது. மக்கள் நெரித்துக் கொண்டு பக்கத்திலிருப்போர் பாதத்தை மிதிப்பதையும், சட்டைப் பொத்தான்கள் பலவும் பிய்க்கப் படுவதையும் கவனியாது நிற்பதையும், வயிறு குலுங்கச் சிரித்துச் சிரித்து கண்ணீர் வடிப்பதையும் கண்டு இக்குரங்குகள் ஆனந்தமடைவதாய் எனக்குப் பட்டது.

ஒரு மணி நேரத்துக்குக் குறையாமல் நான் குரங்குகளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தேன். மேலும் ஒரு மணி நேரமுங்கூட மகிழ்ச்சியுடன் அங்கேயே நின்றிருப்பேன். ஆனால் நெடு நேரமாய் கோல்யா பிர்யுக்கோவைப் பற்றிய அறிகுறி ஏதும் இல்லாமல் நான் கவலையடைந்து வந்தேன். என்னைப் போல் கோல்யாவுக்கு இந்தக் குரங்குகளைப் பார்த்துக் கொண்டு நிற்கப் பிடித்திருக்காதென நினைத்தேன். நான் இவற்றை இதன்முன் பார்த்திராதவன், ஆனால் அவன் எத்தனையோ தரம் இங்கு வந்து இவற்றைப் பார்த்திருந்தவன்.

கூண்டுக்கு அருகே வர எப்படிப் போராடினேனே அதே போல் நீண்ட நேரம் போராடி கூட்டத்துக்குள் முண்டியடித்துக் கொண்டு சென்று வெளியே வந்து சேர்ந்தேன்.

சுற்றிலும் பார்த்தேன், ஆனால் கோல்யாவைக் காண முடியவில்லை. அப்படியானால் இன்னமும் அவன் கூண்டுக்கு அருகேதான் இருப்பான், நான் அவனுக்காகக் காத்திருக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். ஒரு பெஞ்சில் அமர்ந்து கொண்டேன்... நெடு நேரம் அமர்ந்திருந்தேன். குரங்குகளையும் அவற்றின் குறும்புகளையும் கண்டு வேண்டிய மட்டும் சிரித்தவர்கள் அங்கிருந்து விலகிச் சென்றதும் உடனே அவர்களுடைய இடத்தில் புதிய பார்வையாளர்கள் வந்து நின்றனர். ஆனால் நிக்கலாய் இவானவிச்சைக் காணவில்லை.

மேலும் சற்று நேரம் காத்திருந்தேன், அப்பொழுதும் அவனைக் காணவில்லை. இனியும் அவனுக்காகக் காத்திருந்து பயனில்லை என்பது தெரிந்தது. எனக்காக அவன் நீண்ட நேரம் காத்திருந்துவிட்டு, இனி பயனில்லை, நான் எங்கோ போய்விட்

டேன் என்று எழுந்து போயிருப்பான் என்பதாய் நினைத்தேன்.

எனக்கு ஏழு வயதுதான் ஆகியிருந்தது, எனக்குத் தெரியாத மாஸ்கோவில் அதுதான் நான் கழித்த முதல் நாள். எனது இந்த முதல் நாளன்றே இப்படி நான் வெளியே வந்து தனியே சிக்கிக் கொண்டு விட்டேனே. பெஞ்சில் உட்கார்ந் திருந்த எனக்கு அழுகை வந்துவிட்டது, செறுமத் தொடங்கினேன்.

செறுமத் தொடங்கினேன் என்று சொன் னேன்? இல்லை, நான் ஒன்றும் செறுமவில்லை, இல் லவே இல்லை! அங்கே உட்கார்ந்து நான் செறு மியதாய் யாரும் நினைத்தால் அது மிகப் பெரும் தவறே ஆகும். அப்படி நினைப்பவர் அனாதைக் குழந்தை இல்லத்தவர்களாகிய எங்களைப் பற்றி அதிகம் தெரியாதவராகவே இருப்பார். ''பாவம், அனாதைகள்'' என்போராகிய நாங்கள் செய்யக் கூடிய காரியமல்ல இது. நாங்கள் சுயேச்சையான வர்கள், எப்படிப்பட்ட நிலையில் இருக்க நேர்ந் தாலும் நாங்கள் தைரியம் இழப்பவர்கள் அல்ல. என்ன நடந்தாலும் நாங்கள் அப்படிச் செய்யவே மாட்டோம்!

புறங்கையால் கண்ணீர்த் துளியைத் துடைத் துக் கொண்டு பெஞ்சிலிருந்து எழுந்தேன். மரங் களின் பச்சை முடிகளுக்கு மேல், காலையில் நான் கண்டு வியந்த கட்டடத்தின்—மலை போலிருந்த அந்தக் கட்டடத்தின்—சிகரம் தெரிந்தது. காலை யில் எனது வருகையை அறிவிப்பதற்காக தூன்யாவும் நானும் சென்றிருந்த அந்தப் பழைய இரண்டடுக்குக் கட்டடத்தையும் விலங்குக் காட்சி சாலையின் அடைப்புக் கம்பிகளுக்கு அப்பால் காண

முடிந்தது. ஆகவே தெருவுக்குச் சென்று நேரே நடந்து சந்திலே திருப்பினுல் நிச்சயம் விடுதிக்குப் போய்ச் சேர்ந்து விடுவேன்.

வெளி வாயிலே நோக்கி நடந்தேன். வாயிலுக்கு அருகே இருந்த பெட்டிக் கடையில் ஓர் அன்னே ஐஸ்கிரீம் விற்றுக் கொண்டிருந்தார். மாஸ்கோவில் யாவற்றுக்கும் மெச்சத் தக்கவாறு ஏற்பாடு செய்திருக்கிருர்கள், யாவும் உங்களுக்கு வேண்டிய நேரத்தில் தயாராய் எதிரே இருக்கின்றன. விலங்குக் காட்சிசாலேக்கு நுழைவுச் சீட்டுகள் வாங்கியபின் எஞ்சியிருந்த காசை எடுத்து எனக்கு ஒரு சாக்கலெட் ஐஸ்கிரீம் வாங்கிக் கொண்டேன். வெள்ளித் தாளே விலக்கிக் கொண்டு சாக்கலெட் கவசத்தைக் கடித்து உள்ளே ஜில்லிட்ட ஐஸ் கிரீமை நக்கினேன். பிரமாதமாய் இருந்தது!

ஐஸ்கிரீமிலிருந்து உருகி வழிந்து முதலில் ஒரு பக்கத்திலும் பிறகு மற்ருென்றிலும் ஓடிய இனிய கிரீமை நக்கியவாறு தெரு வழியே மெள்ள நடந்தேன்.

வழிமறித்து என் பாதையிலே நின்ற யாரோ ஒருவரது வயிற்றில் திடுமென முட்டிக் கொண்டேன். அவருடைய சாம்பல் நிறக் கோட்டும், அதற்கும் மேலே அவர் கழுத்திலே இருந்த புள்ளிகளேயுடைய நீல டையும், கவிட்டியில் அவர் இடுக்கிக் கொண்டு நின்ற தோல் பையும் தெரிந்தன.

பிறகு அவருடைய வட்ட வடிவ மூக்குக் கண்ணுடி ஆடாமல் என்னே உற்றுப் பார்ப்பதைக் கண்டேன்.

அவரேதான் அது. பிரதிநிதியேதான், விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் நமேஸ்தினிக்கவ்தான்.

''வணக்கம்'' என்று கூறி, நான்தான், அவர்

சொல்லிச் சென்றபடி இங்கு என்னைக் அழைத்து வந்து சேர்த்துவிட்டார்கள் என்று அவரிடம் சொல்வதற்காக வாயெடுத்தேன். ஆனால் எப்படி இந்தத் தெருவுக்கு வந்தேன், தனியே சுற்றித் திரிந்து இங்கு என்ன செய்கிறேன், அனுமதியின்றி ஏன் விடுதியிலிருந்து வெளியே வந்தேன்... என்றெல்லாம் என்னைக் கேட்டால் என்ன செய்வ தென்று பயந்து கொண்டு பேசாமல் நின்றேன்.

அவரும் ஆரம்பத்தில் ஒன்றும் சொல்லவில்லை. பேசாமல் எனது சாக்கலெட் ஐஸ்கிரீமில் என் கையில் எஞ்சியிருந்த பாதியை வாங்கிக் கொண்டு விட்டார். இதற்காகத்தானு இவ்வளவும், எனக்குத் தெரியாமல் போய்விட்டதே. இனி அவர் எனது ஐஸ்கிரீமை அப்படியே வாயில் போட்டுக்கொண்டு விடுவார், விடுதியில் அந்தக் குண்டன் செய்தது போலவே செய்துவிட்டு ஒரு கிளாஸ் தண்ணீர் கொண்டுவரும்படி என்னை அனுப்பிவைப்பார். இதற்காகத்தான் என்னை மஸ்கோவுக்கு அழைத்து வந்தார்களா, என்னிடம் இருப்பதை ஒன்று விடாமல் யாவற்றையும் யாராவது பிடுங்கிக் கொள்வதற்காகவா அழைத்து வந்தார்கள்?

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் சுற்றிலும் பார்த்து விட்டுக் குப்பைத் தொட்டி ஒன்றிடம் சென்று அருவருப்பை உணர்த்தும் பார்வையுடன் என்னுடைய சாக்கலெட் ஐஸ்கிரீமை அதுனுள் எறிந்தார். அங்கிருந்து திரும்பி வருகையில் கைக்குட்டையில் தமது விரல்களைச் சுத்தமாய்த் துடைத்துக் கொண்டார். பிறகு குனிந்து என்னிடம் ''நீ கடைசியாய்த் தின்றது அது, இனி எந்நாளும் நீ ஐஸ்கிரீமைத் தொடப் போவதில்லை, ஞாபகத்தில் வைத்துக் கொள்'' என்றார்.

## 4

எனது பள்ளிக்கூட வாழ்க்கை இப்படிதான் ஆரம்பமாயிற்று.

அதிகாலையில் விழித்தெழுந்து காலைக் கடன்களை முடித்து உடுத்திக் கொண்டதும் விடுதியிலிருந்து பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டோம். கிராஸ்னயா பிரேஸ்னியா தெருவிலிருந்து பொல்ஷாயா குருஸீன்ஸ்காயா தெருவுக்குச் சென்றோம், தூரம் அதிகமில்லையாதலால் நடந்தே சென்றோம். கூதிர்ப் பருவ மாதங்கள் கழிந்து குளிர் காலம் தொடங்கிய பிறகு இந்தக் காலை நேர நடை ஓர் இனிய அனுபவமாய் இல்லை. குளிர் கடுமையாய் இருந்தது, பள்ளிக்குச் செல்லும் வழி நெடுகிலும் அனேகமாய் ஓடியே போய்ச் சேரும்படி வைக்கும் அளவுக்கு உக்கிரமாய் இருந்தது. ஆயினும் இந்தக் குளிர் எங்களுக்கு ஒரு பெரிய வேதனையாய்த் தோன்றவில்லை. முகத்திலே வீசிய குளிர் காற்றோ, வழுக்கியடித்த நடைபாதைகளோ எங்களை அதிகமாய் வருத்தி விடவில்லை—இவை யாவும் அற்ப விவகாரங்கள். நல்ல இருட்டாய் இருக்கையிலேயே புறப்பட்டுச் செல்ல வேண்டியிருந்ததுதான் இந்தக் காலை நேர நடையில் மெய்யாகவே எங்களுக்கு மிகவும் துன்பகரமாய் இருந்தது. கோட்டுக் காலர்களைத் தூக்கிவிட்டுக் கொண்டு, குளிர் கால ரோமத் தொப்பிகளின் காது மடல்களைப் பிரித்து இழுத்துக் காதுகளை மூடிக் கொண்டு பிரேஸ்னியா தெருவிலிருந்து குருஸீன்ஸ்காயா தெருவுக்கு நாங்கள் ஓட்டமும் நடையுமாய் விரைந்த அந்த நேரத்தில் தெருவில் நள்ளிரவு போல இருட்டாயிருந்தது. தெரு விளக்குகளும்,

வீடுகளில் பிரகாசமாய் ஒளிர்ந்த சன்னல்களும், கார்களுடைய பின்புறத்தில் நெருப்பு போல் கனன்ற சிவப்பு விளக்குகளும், சவாரிக்குச் சென்ற டாக்சிக் கார்களின் முன்புறக் கண்ணுடியில் மினுக்கிட்ட பச்சை விளக்கொளியும் இருந்தது மெய்தான். அதோடு தெருக்களில் சாரை சாரையாய் மக்கள் வேலைக்குச் சென்று கொண்டிருந்தனர், அவசர அவசரமாய் மெட்ரோவை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்—பகற் பொழுது ஆரம்பித்து விட்டது, சந்தேகமே இல்லை.

ஆயினும் பார்வையை உயர்த்திஞல் போதும், அல்லது ஓரக் கண்ணுல் பார்த்தாலுங்கூட போதும், ஊடுருவ முடியாதபடி கறுத்துக் கனத்த இரவுதான், தூக்கத்தால் கண்ணைச் சொக்கச் செய்யும் இரவுதான் இன்னும் வானத்தில் குடி கொண்டிருந்தது என்பது தெரியும்.

ஆனுல் நாங்கள் உணருமுன்பே பள்ளிக்கூட வாயிற் கதவைக் கடந்து உள்ளே வந்து சேர்ந்து விடுவோம். உடனே உடுப்பறை முற்றுகைக்கு உள்ளாகிவிடுகிறது. எங்கள் மூக்கு நுனிகள் விஷயமறிந்து நமநமக்கின்றன, சாப்பாட்டுக் கூடத்திலிருந்து வீசும் மணங்களை இனமறிந்து உடனே அவை உணர்த்துகின்றன.

''இறைச்சிக் கோளங்களா?''

''ஆம்.''

''பையன்களே, இன்று நமக்கு இறைச்சிக் கோளங்கள்!''

நமது நுகர்வுணர்வுக்கும் செவியுணர்வுக்குமுள்ள இணைப்புக்கு விஞ்ஞான விளக்கம் என்னவென்று இது நாள் வரை எனக்கு விளங்கவில்லை. ஆயினும் இரண்டுக்கும் இப்படி ஓர் இணைப்பு

உண்டு என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. உதாரணமாய் எங்கள் பள்ளிக்கு குற்ற மற்ற சிறந்த தொனியுடைய சிறுவர்களாய்ப் பொறுக்கியெடுத்துக் கொள்கிருர்கள், அதாவது சுத்தமான சாரீரமும் இசையில் கூர் உணர்வு வாய்ந்த செவிப் புலனும் கொண்டவர்களே மட்டுமே எடுத்துக் கொள்கிருர்கள். ஆயினும் எனக்கும் எனது புதிய நண்பர்கள் எல்லோருக்கும்—என் பகைவர்களுக்குங் கூடத்தான் — கூர்மையான இசையுணர்வு படைத்த செவி மட்டுமின்றி, வியக்கத்தக்க அளவுக்கு நுகர்வுணர்வும் இருக்கிறது. நிலவறைச் சமையற்கட்டில் காலை உண்டிக்கோ, மதிய உணவுக்கோ, இரவு உண்டிக்கோ என்ன தயாரிக்கிருர்கள் என்பதை எப்பொழுதுமே எங்களால் பிழையின்றி சொல்ல முடிந்தது. சுரங்களை எப்படி உடனே இனங் கண்டு சொல்வோமோ, அதே போல இரண்டு மாடிகளுக்கு மேல் இருக்கையிலே மக்கரோனியுடனுன கறிக்கூட்டா அல்லது உருளைக்கிழங்கு மசியலுடனுன கறிக்கூட்டா என்று பிழையின்றி சொல்லிவிடுவோம்.

காலை உண்டிக்கு அடை சுடுவார்களாளுல்—அடிக்கடி சுடுவார்கள்—அதைத் தெரிந்து கொள்ள கூர்மையான நுகர்வுணர்வு தேவையில்லை. கண்களே போதும், அந்தப் பக்கம் சென்றதுமே கண்களில் நீர் ததும்ப ஆரம்பித்துவிடும். கண்ணைக் கரிக்கும் மெல்லிய புகை எல்லா மாடிகளிலும் நடைகளிலும் வகுப்பு அறைகளிலும் நிரம்பி நெடுநேரம் மறையாமல் நிலைத்திருக்கும். எங்களுடைய காலை நேரப் பாட்டுப் பயிற்சி நடைபெறும் அந்த புனித நேரத்தின் போது இந்தப் புகையின் நெடி மிகவும் குறிப்பிடத்தக்கதாய்

இருக்கும். நாங்கள் பாடிக் கொண்டிருக்கும் அறையினுள் இந்தப் புகை புகுந்து அங்கேயே தங்கி எங்கள் தொண்டையைக் கரகரக்கச் செய்யும்.

இந்தப் பாட்டுப் பயிற்சிகளைப் பற்றி பிற்பாடு அதிகமாய்ச் சொல்கிறேன்.... முதலில் பிற பாடங்கள் குறித்து, பள்ளிப் படிப்பின் அடிநிலையாய் எந்தப் பள்ளியிலும் போதிக்கப்படும் பாடங்கள் குறித்துச் சொல்ல விரும்புகிறேன்.

எண்ணும் எழுத்தும் கற்றுக் கொண்டோம். அ-ம்-மா, அ-ப்-பா—கீழே செல்கையில் கோடு தடித்துச் செல்ல வேண்டும், மேலே செல்கையில் மெலிந்து செல்ல வேண்டும்; இரண்டும் இரண்டும் நான்கு.

சாதாரணமாய் இவற்றைச் சொல்ல வேண்டியதில்லை—எல்லோரும் அறிந்தவையே, பள்ளிக் கூடத்தில் எல்லோரும் கற்றவையே இவை. ஆயினும் எங்கள் பள்ளியில் ஒரு முக்கிய வித்தியாசம்....

சாதாரண பள்ளிக்கூடங்களில் எழுத்துக்களின் சாய்வு ஒரே மாதிரியாய் இருக்கும் பொருட்டு குறுக்குச் சாய்வுக் கோடுகளிட்டு மூன்று நீள் கோடுகள் போட்டு எழுதக் கற்றுத் தருகிறார்கள். பிறகு குறுக்குக் கோடுகளிட்டு இரு நீள் கோடுகள் போட்டு எழுதுகிறீர்கள். இதற்குப் பிற்பாடு குறுக்குக் கோடுகளின்றி எழுதப் பழகிக் கொண்டு ஒற்றை கோட்டின் மீது எழுத முற்படுகிறீர்கள். இதற்கும் பிற்பாடு உங்கள் விருப்பம் போல் எப்படி வேண்டுமானாலும் எழுதும் நிலையை வந்தடைகிறீர்கள்.

ஆனால் நாங்கள் இவ்வாறு எழுத ஆரம்பிக்கவில்லை. மூன்றும் அல்ல, இரண்டும் அல்ல, ஐந்து

கோடுகள் வெள்ளைச் சாந்தில் தீட்டப் பெற்ற கரும்பலகையில் எழுத முற்பட்டோம். எங்கள் பள்ளியின் முதல் வகுப்பிலிருந்து இறுதி வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் இம்மாதிரி ஐந்து கோட்டு வரிச்சட்டங்கள் பலவும் வரைந்த ஒரே மாதிரியான கரும்பலகை இருந்தது.

இந்த வரிச்சட்டத்தில் முதலில் ஆசிரியர் சுரங்களை—ச, ரி, க, ம, ப, த, நி, ச—இசைக் குறிகளாய் வரைந்து காட்டினார். விரைவில் நாங்கள் இவற்றை அந்தக் கரும்பலகையில் எழுதக் கற்றுக் கொண்டு விட்டோம். கரும்பலகையில் நாங்கள் எழுதியவற்றை பிறகு இசைக் குறிகளைப் பார்த்துப் படிக்கும் பாடங்களின்போது பாடுவது வழக்கம். இசை இயக்கவும் கற்றுக் கொண்டோம்.

ஆனால் மேலே நான் குறிப்பிட்டது போல இசையைத் தவிர பிற பாடங்களும் நாங்கள் பயின்று வந்தோம். கணிதம், கையெழுத்துப் பயிற்சி, மற்றும் வழக்கமான ஏனைய பல பாடங்களும் இருந்தன.... ஆனால் ஒவ்வொரு வகுப்பிலும் இருந்த கரும்பலகைகளில் ஐந்து கோட்டு இசைக் குறிவரிச்சட்டங்கள் தீட்டப்பட்டிருந்தன.

எனவேதான் நாங்கள் முதன்முதன் கற்றுக் கொண்ட ஆனா, ஆவன்னா எழுத்துக்களையும்கூட இந்த ஐந்து கோடுகளின் மீது சுண்ணக் கட்டியால் எழுதி வந்தோம், இதற்குப் பெருமுயற்சி வேண்டியிருந்ததால் நாக்கை நாங்கள் வெளியே நீட்டிமுக்க வேண்டியிருந்தது. இதே ஐந்து கோடுகளின் மீது எழுதிதான் இரண்டாம் வாய்ப்பாட்டையும் கற்றுக் கொண்டோம். இடை நேரத்தின்போது இதே வரிச் சட்டங்களில் நாங்கள் பல வகையான விசித்திர முகங்களையும் வரைவது வழக்கம்.

வேறு வழியில்லை, ஏனெனில் இந்தக் கரும்பல கைகள் பெரிய ஆணிகளைக் கொண்டு சுவர்களில் பொறுத்தப்பட்டிருந்தன; ஒவ்வொரு பாடத்துக் கும் முன்பு இந்தப் பலகையை எடுத்துவிட்டு அதனிடத்தில் புதிய பலகையைப் பொறுத்துவது முடியும் காரியமல்ல!

தவிரவும் கரும்பலகைகளின் இந்த விவகாரத் தில் வேறு ஏதேவொரு திட்டம் இருந்ததாய், யாரோ ஒருவரால் ஆலோசித்து வகுக்கப்பட்ட திட்டமல்ல என்ருலுங்கூட தனி முக்கியத்துவம் வாய்ந்த எதோ ஒன்று இருந்ததாய் எனக்குத் தோன்றுகிறது.

எல்லாப் பள்ளிகளிலும் போலவே எங்கள் பள்ளியிலும் நாங்கள் எண்ணும் எழுத்தும் ஒரே ஆசிரியையிடம்தான் கற்றுக் கொண்டோம். கிசேனியா வசீலியெவ்ஞ என்ற அவர் அன்பு உள்ளம் கொண்ட தலை நரைத்த வயது முதிர்ந்த அன்னை. பள்ளிப் படிப்பு தொடங்கும் சிறு குழந் தைகளுக்கு இந்தப் பாடங்களை ஒரே ஆசிரியை சொல்லித் தரும்படி செய்வது நல்ல ஏற்பாடு தான். இல்லையேல் எந்த பாடத்தை எந்த ஆசிரியை கற்றுத் தருகிருர் என்பது புரியாமல் இந்தக் குழந் தைகள் குழம்ப வேண்டியதாகிவிடும். அது மட்டு மல்ல, பள்ளிப் படிப்பு முடிந்து விடை பெற்றுக் கொள்ளும் மாலை நிகழ்ச்சியின்போது ''எனது முதல் ஆசிரியை'' என்னும் பாட்டைக் கண்களில் கண்ணீர் ததும்பப் பாடுகிருர்களே, அப்பொழுது எந்த ஆசிரியை அவர்கள் மனத்துள் நினைத்துப் பாடுவது என்று தெரியாமல் பிரச்சினையாகிவிடும்.

இந்தப் பாட்டைப் பாடி நாங்கள் விடை பெற் றுக் கொள்கையில் யாரை நினைத்துக் கொள்வோ

மென்று எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் நான் பள்ளிப் படிப்பு தொடங்கியபோது எங்கள் வகுப்புக்கு கிசேனியா வசீலியெவ்ன மட்டுமின்றி, சுர வரிசை, பியானே, இசைத் தத்துவம், பாட்டுப் பயிற்சி இப்படிப் பலவற்றுக்குமாய் எங்களுக்குப் பல ஆசிரியர்கள் பாடம் சொல்லித் தந்தனர். எங்களுக்குப் படிக்கவும் எழுதவும் கணக்குகள் போடவும் கற்றுத் தருவதே கிசேனியா வசீலியெவ்னவின் வேலையாய் இருந்தது.

எங்களுக்கு இசைதான் யாவற்றுக்கும் முதலில் அமைந்திருந்தது. கரும்பலகைகளில் வரையப்பட்டிருந்த ஐந்து கோட்டு இசைக் குறி வரிச்சட்டங்களைப் போல் எப்பொழுதும் அது எங்கள் எதிரே இருந்து வந்தது, எப்பொழுதும் அருகே நின்று கொண்டிருந்தது. இசையே எங்களுக்கு யாவற்றுக்கும் அடிப்படையில், யாவற்றுக்கும் முதலாய், உலகிலே மிகவும் முக்கியமானதாய் இருந்தது என்பதை கணமும் நாங்கள் மறக்க முடியவில்லை. இதை நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்!

* * *

ஏற்கனவே நாங்கள் இதை நன்கு உணர்ந்து கொண்டுவிட்டோம்.

தினமும் பாட்டுப் பயிற்சியுடன்தான் எங்களுக்கு பொழுது விடிந்தது. எப்பொழுதும் குழுப்பாட்டு தான் முதலாவது பாடம். ஒரு சிறு கூடத்தில் நாங்கள் கூடிவிடுவோம். அங்கே ஒரு பியானே இருந்தது, இசை ஏடு தாங்கிகள் வைக்கப்பட்டிருந்தன. இந்த ஏடு தாங்கிகளுக்குப் பின்னல் உச்சாணிக் குரலினர் வலப்பக்கத்திலும், மேல் மையக் குரலினர் இடப்பக்கத்திலுமாய் எங்களுக்

குரிய இடங்களில் வந்து நின்ருேம். பாட்டுக் குழு ஆசிரியர் வந்து சேரும் முன்பே நாங்கள் 'இஷ் ஷிடத்' தொடங்குவது வழக்கம். எங்களுக்குப் பாடக் கற்றுத் தருவதாய்ச் சொல்லி அழைத்து வந்தார்கள், ஆனுல் இங்கே இப்படி இஷ்-இஷ்-இஷ் என்று 'இஷ்ஷிடச்' சொல்கிருர்களே என்று முதலில் இரண்டொரு நாட்களுக்கு எனக்கு விசித்திரமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது.

ஆனுல் விரைவில் நான் இப்படி 'இஷ்ஷிடுவதன்' முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டேன். ஒழுங்காய் மூச்சு விடத் தெரிந்து கொள்வதும் மூச்சைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்வதும் பாடகனுக்கு மிகவும் அவசியமென்பது புரிந்தது. காற்றை உள்ளுக்கு இழுத்து நெஞ்சை நிரப்பிக் கொண்டு, பிறகு சீராய், சிறுகச் சிறுக, எவ்வளவு மெதுவாய் முடியுமோ அவ்வளவு மெதுவாய் வாய் வழியே அதை வெளியே விடுகிறீர்கள். பிழையின்றி இதைச் செய்யக் கற்றுக் கொள்ளாத வரை எந்தப் பாட்டையும் உங்களால் சரிவரப் பாட முடியாது. ஏனெனில் துவக்க அடிகளிலேயே மூச்சு அனைத்தையும் செலவிட்டு விரயமாக்கிச் சொல்லின் நடுவில் திக்குமுக்காடத் தொடங்குவீர்கள், நீரிலிருந்து இழுத்து வெளியே போடப்பட்ட மீனைப் போலக் காற்றுக்காக திணறித் திண்டாடுவீர்கள்.

மூச்சைக் கட்டுப்பாடு செய்யும் கலை பற்றிய அதிசயக் கதைகள் பலவும் பிற்பாடு நான் தெரிந்து கொண்டேன். பழங் காலத்தில் பாடகர்கள் மெழுகு வத்தியைக் கொளுத்தித் தம் முகத்துக்கு முன்னுல் வைத்துக் கொண்டு, அதன் சுவாலை சிறிதும் அதிராமல், அதன் மேல் மூச்சே படாத

படி பாடப் பழகிக் கொள்ள வேண்டியிருந்ததாம். ஜால வித்தையா, அல்லது கோமாளித்தனமா? இல்லை, கோமாளித்தனம் ஒன்றும் இல்லை. முழு மூச்சுடன் பாட வேண்டிய பலத்த சுரத்தை தொடர்ந்து ஒரு நிமிடத்துக்கு—ஆம், ஒரு முழு நிமிடத்துக்கு—பாடக் கூடிய பாடகர்கள் இருந்திருக்கிறார்கள். ஐஸ்-ஹாக்கி ஆட்டக்காரர்கள் சில சமயம் ஒரே நிமிடத்தில் மூன்று கோல்கள் போடுவது உண்டு, மூச்சை உள்ளே இழுக்காமல் ஒரே மூச்சில் அவ்வளவு நேரம் பண்ணிசைக்கக் கூடியவர்கள், தொடர்ந்து பாடக் கூடியவர்கள் இருக்கிறார்கள்....

*அவர்கள் அல்லவா பாடகர்கள்!*

நாங்களும் இதே மாதிரி பாடுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டோம். மூச்சை இழுத்துக் சுவாசப் பைகளை நிரப்பிக் கொண்டு பிறகு மிருதுவாய் அதை வெளியே விட்டோம். பற்கள் வழியே காற்று மெதுவாய் வெளியே சென்றது. அப்படியானால் ‘இஷ்’ சப்தம் கேட்பது எப்படி? உண்மையில் இந்தச் சப்தம் தேவையில்லைதான். ஆனால் சிறு வயதில் பல சிறுவர்களுக்கும் முன்பற்களில் சில இருப்பதில்லை, எங்களது அரும்புப் பற்கள் ஒவ்வொன்றாய் விழும் வயது அது. ஆகவே அனேகமாய் ஒவ்வொருவருக்கும் வாயில் ஓட்டை இருந்தது. காற்றை வெளியே விடுகையில் இந்த ஓட்டைதான் எங்களை அப்படி இஷ்ஷிடச் செய்தது. நூறு வாய்கள், நூறு ஓட்டைகள், எனவேதான் ரயில் இஞ்சின் சப்தம் மாதிரி அப்படி இஷ்-இஷ்-இஷ்-இஷ் என்று கேட்கிறது.

பிறகு விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் நமேஸ்திணிக்கவ் உள்ளே வருவார்.

எங்களுக்கு வந்தனம் தெரிவித்துவிட்டு, பியானோ முன்னால் அமர்ந்திருக்கும் செர்கேய் பாவ்லவிச்சைப் பார்த்துத் தலையை அசைப்பார், உடனே நாங்கள் பாட ஆரம்பிப்போம்.

''ஃபோக்கின், வாயை நன்றாய்த் திற!''

''பெத்ரோவ், நெஞ்சு நிறைய மூச்சை இழு!''

''தொனி இன்னும் பளிச்சிடட்டும்!''

''மக்கவேயிவ், அடி வயிற்றை எக்கி மூச்சு விடு!''

''வாயால் மட்டும் பாடாதே, மனதாலும் பாடு!''

நாங்கள் சுரவரிசை பயின்று பயிற்சிகள் செய்து வந்த போதே இவ்வளவும் கூறினார்.

ஆரம்பத்தில் நான் பாடவில்லை, ஏனையோர் பாடுவதைக் கேட்டுக் கொண்டு சும்மாயிருந்தேன். புதிய பையன்களாகிய நாங்கள் பாட்டுக் குழுவில் சும்மா நின்றிருந்தால் போதுமெனக் கூறியிருந் தார்கள்.

''காளை காலை வேளையில் சாலையில் செல்லுது.''

''வேகமாய்ச் சொல்லுங்கள்!''

''காளை காலை வேளையில் சாலையில் செல்லுது.''

''விருது பெற வரும் குதிரையைப் பற்றி சொல் லுங்கள்.''

''சதிராடி விருது பெற வருது குதிரை.''

எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். புதிய பையன்களாகிய நாங்களும் சேர்ந்து கொண்டு சிரித்தோம். எனக்குப் பக்கத்தில் நின்ற என் வகுப்பு மாணவனாகிய மராத்தும் சிரித்தான். அவன் சீக்கிரமாகவே சிரித்துவிட்டான். உச் சரிப்பு திருந்துவதற்காக பிற்பாடு நாங்கள் குழறும் இந்த வாக்கியங்களை வேகம் வேகமாய்ச்

சொல்ல வேண்டிய நேரம் வரும்போது இவன் நிலை எப்படி இருக்குமென்று ஆலோசியாது சிரித்துவிட்டான். சொல்லப் போனால், காக்கசஸி லிருந்து வந்தவனை கரு விழி மராத் அலீயெவுக்கு ருஷ்யனில் சாதாரணமாய்ப் பேசுவதே அவ்வளவு சுலபமாய் இருக்கவில்லை.

''ஹைடினின் 'இளவேனிலின் தொடக்கம்'''.

வரப் போவதை எதிர்பார்த்து உடனே நான் பரபரப்படையலானேன். இளவேனில் தொடங்கு வதைப் பற்றிய இந்தப் பாட்டை இதற்கு முன்பு பல தடவை கேட்டிருந்தேன். இளவேனில் குறித்து இந்தப் பாட்டு தரும் சித்திரம் என்னை அவ்வள வாய்ப் பரபரப்படையச் செய்துவிடவில்லை, வெளியே இன்னும் குளிர் காலம் உச்ச நிலையில் இருந்த நேரத்தில் இளவேனிலை நினைத்து அதி கம் மகிழ முடியவில்லை. இளவேனில் வருவதற் குள் நானும் ஏனையோருடன் சேர்ந்து இந்தப் பாட்டைப் பாடத் தொடங்கி விடுவேன் என்னும் நினைப்புதான் என்னைப் பரபரப்படையச் செய் தது. இளவேனிலுக்குள் என்னைப் பாட்டுக் குழு வில் சேர்ந்து பாடச் சொல்லிவிடுவார்கள் என்று எண்ணி மகிழ்ந்தேன்—எவ்வளவு சீக்கிரமாய் இது நடைபெறுகிறதோ, அவ்வளவுக்கு நல்ல தென நினைத்தேன்.

உண்மையில் என்னுடைய பரபரப்புக்குக் கார ணம் இளவேனில் வரப் போகிறது என்பதோ, அதற்குள் நானும் ஏனையோருடன் சேர்ந்து பாடத் தொடங்கிவிடுவேன் என்பதோ அல்ல. இந்தப் பாட்டின் இனிமையை எதிர்பார்த்து ஆவலாய்க் காத்திருந்தேன்.

ஏடு தாங்கிகளில் சிறுவர்கள் இசை ஏடுகளைப்

பிரித்து வைத்துக் கொண்டார்கள். ஆனல் பியானேவின் எதிரே உட்கார்ந்திருந்த செர்கேய் பாவ்லவிச் தமது இசை ஏடுகளை மூடி வைத்து விட்டார். அவருக்கு அவை தேவையில்லை, இம்முறை பியானே பின்னிசை இல்லாமலே பாடப் போகிருர்கள். சிறுவர்களின் குரல்கள் மட்டும் தான் ஒலிக்கப் போகின்றன. பின்னிசை இல்லாத பாட்டுக்கு *a capella* என்று பெயர்—இதைப் பிற்பாடு நான் தெரிந்து கொண்டேன்.

தெளிவான நூறு குரல்கள் விண்ணேக்கி உயர்ந்தெழுந்தன. அந்தச் சிறு இசைப் பயிற்சிக் கூடத்தின் கரிய மேற்றளத்தை மட்டுமல்ல, வெளியே இருக்கும் நீல வானையே தொடும்படி, பறவைத் திரளைப் போல, ஒரேயொரு திரளல்ல, நான்கு திரள்களைப் போல—ஏனெனில் பாட்டுக் குழு நான்கு பிரிவுகளாய்ப் பிரிந்து பாடிற்று—உயர்ந்தெழுந்தன. நான்கு பிரிவுகளும் ஒரே நாதப் பிரவாளமாய் ஒன்றி ஒன்ருய் ஒலிக்கவில்லை, குரல்கள் தனித்து விலகியும் திரும்பவும் ஒன்றி இணைந்தும் ஒலித்ததால் ஒன்ருேடொன்று பின்னிப் பிணைந்திருந்தன. இந்த நான்குப் பிரிவுகளில் ஒவ்வொன்றும் தனித் தனிச் சிறுவர்களது குரல்களால் ஆனது. இக்குரல்கள் ஒன்றுசேர்ந்து சுத்தமான தனி இசைநாதமாய் ஒலித்தன. ஆயினும் இந்த தூய இசைநாதத்தில் மணி இழையாய்த் தனித்து ஒலித்த குரலைக் குறிப்பிட்டுச் சொல்ல முடிந்தது. இந்தக் குரல் யாருடையதாய் இருக்குமெனச் சுற்றிலும் நான் பார்த்தபோது யாரைக் கண்டேனென நினைக்கிறீர்கள்?—நிக்கலாய் இவானவிச் பிர்யுக்கோவ் வாயை விரியத் திறந்து கொண்டு முழு மூச்சுடன் பாடக் கண்டேன்.

''புள்ளினங்களே, இளவேனில் பிறக்கிறது! சோதரர்களே, இது இளவேனில்! கேள்மின், இதோ இளவேனில்!''

பிறகு திடீரென என் காதுக்குள் எதோ சுரீரென குத்தியதால் நான் துணுக்குற்றுப் போய், நிற்க முடியாமல் திணறினேன். விளதீமிர் கன்ஸ்தன் தீனவிச்சுங்கூட சற்று அதிர்ச்சியுற்றவராய்த் தோன்றக் கண்டேன்.

பாட்டுக் குழு கட்டுப்பாட்டுடன் முறைப்படி பாடிச் சென்றது, ஆனால் இயக்குநர் கையை நீட்டி, பாடுவதை நிறுத்தச் சொன்னார்.

நமேஸ்தினிக்கவ் சன்னல் பக்கம் வெடுக்கென திரும்பினார்: சன்னலுக்கு வெளியே கார் ஒன்று பீம்-பீமென கூவி அப்பொழுதுதான் ஓய்ந்தது. அந்த சன்னலுக்கு நேர் கீழே கார்களை நிறுத்தி வைக்கும் இடம் இருந்தது. எங்களுக்குப் பக்கத்துக் கட்டடத்தில் புவியமைப்பியல் அமைச்சகம் இருந்தது. கார் டிரைவர்கள் தாம் அழைத்து வந்த பயணிகள் திரும்பி வருவதற்காகக் காத்திருந்து பார்த்துவிட்டு, சில நேரங்களில் பொறுமை இழந்துவிடுவது வழக்கம்.

திறந்து வைக்கப்பட்டிருந்த காற்றோட்டப் புழையை விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் உற்றுப் பாத்தார். அதை மூடிவிட்டால் என்னவென்று அவர் நினைத்திருக்க வேண்டும். ஒவ்வாத நேரத்தில் திடுமென மீண்டும் காரின் கூவல் ஒலித்தால் என்னுவது... முடியாது, ஏற்கனவே அறையினுள் காற்றோட்டம் போதாமல் திணற வேண்டியிருக்கிறது, காற்றோட்டப் புழையை மூடக் கூடாது. தினமும் காலையில் எங்கள் பாட்டுப் பயிற்சி நடைபெற்று வந்த அந்தக் கூடம் மிகச் சிறியது. அத

னுள் நூறு குரல்கள் முழங்கிக் கொண்டிருந்தன— அதாவது நூறு வாய்கள், காற்று வேண்டுமெனக் கோரிய நூறு ஜோடிக் காற்றுப் பைகள் செயல் பட்டு வந்தன. சில நேரங்களில் காற்று போதா மல் சங்கடமாகிவிடும். நாங்கள் தொடர்ந்து பாட முடியாத நிலேயும் ஏற்படுவது உண்டு, எப்பொழு தாவது எங்களில் ஒருவன் மூர்ச்சித்து விழுவதும் உண்டு....

முடியாது, காற்றேட்டப் புழையை மூட முடியாது.

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் மீண்டும் பாட்டுக் குழுவின் பக்கம் திரும்பிக் கடுப்பு தொனிக்கும் கண்டிப்பான குரலில் கூறினர்: ''இது சரியல்ல, நண்பர்களே, இப்படி வேலே செய்து பயனில்லே! மீண்டும் வேலே தொடங்குங்கள்!... இந்தப் பகுதி சரியாய்ப் பாடப்படவில்லே, இதை நாம் அனு மதிக்கலாகாது.'' பிறகு உச்ச ஸ்தாயியில் அவர் ஓர் அடியைப் பாட முற்பட்டார். ''ஒவ்வொரு பிரிவாய்த் தனித் தனியே பாடுவோம். மேல் மையக் குரலினர் முதலில் பாடுங்கள், உச்சாணிகள் இப்பொழுது பாட வேண்டாம்... சரி, ஒரு மன துடன் கவனமாய்ப் பாடுங்கள்!''

இம்முறை நான்கு திரள்களாய்ப் புள்ளினங்கள் விண்ணேக்கி எழவில்லே, இரண்டு திரள்களாய் எழுந்தன. கீழ் மட்டத்தில் பறந்த இரண்டு திரள் கள் மட்டும் உயர்ந்தெழுந்தன. இசையும் முன்பு போலில்லே, இளவேனிலும் முன்பு போலில்லே, ஹைடினும் முன்பு போலில்லே.

இப்படித்தான் நாங்கள் சாதகம் செய்து வந்தோம்.

உச்சாணிகள் காத்திருக்க மேல்மையங்கள்

பாடிச் சென்றனர். மேல்மையங்களுக்கு உற்சாக மாகத்தான் இருந்தது, ஆனல் உச்சாணிகளுக்குப் பொறுக்க முடியவில்லே. உச்சக் குரல்கள் இல் லாமல் அவர்களுக்குச் சகிக்கவில்லே. மேல்மையங் கள் செங்குத்தாய்ச் சரிந்து கீழே வரும் இந்தக் கட்டத்தில் உச்சாணிகளின் குரல்கள் ஒலித்திருந் தால் இசை விண்ணேக்கி விம்மியெழுந்திருக்கும்.

என் பக்கத்தில் நின்ற சிறுவர்களில் யாரோ ஒருவனுக்கு இதற்கு மேல் பொறுக்கவே முடி யாமற் போகவே, அவன் வாய்க்குள் மெல்ல இசைக்க ஆரம்பித்துவிட்டான். பிறகு தயக்கத் துடன் இன்னெரு உச்சக் குரலும் சேர்ந்துகொண்டு இசைக்க முற்பட்டது....

''நிறுத்து! உச்சாணிகளேக் காத்திருக்கச் சொன்னேன். பாட்டுப் பயிற்சியிலிருந்து விலக் கப்பட வேண்டுமென விரும்பும் பையன் யாரோ இருப்பதாய்த் தெரிகிறதே, யார் அது?''

இதன் பிறகு உச்சாணிக் குரல் எதுவும் ஒலிக்க வில்லே. பயிற்சிக் கூடத்தை விட்டு வெளியே அனுப்பப்பட யாரும் விரும்பவில்லே. மேல்மை யங்களுடைய முறையின் போது, உச்சாணிகள் மௌனமாய் இருக்க வேண்டிய அந்த நேரத்தில், சிலர் காத்திருக்க முடியாமல் பாட விரும்பினர் என்பதன்றி வேறு ஒன்றுமில்லே.

புதிய பையன்களாகிய நாங்களும் பாடவே விரும்பினேம், ஆனல் அதற்குரிய காலம் இன்னும் வரவில்லே.

## 5

இவ்வாறுதான் வாழ்ந்து வந்தோம்—எந்நேர மும் இசையால் சூழப்பெற்று வாழ்ந்து வந்தோம். இசை மட்டுமின்றி மற்றும் மிகப் பலவும் எங்களேச்

சூழ்ந்திருந்தது மெய்தான், ஆனால் இவை குறித்துப் பிற்பாடு தக்க நேரத்தில் கூறுகிறேன். காதல் குறித்து, எத்தர்கள் குறித்து, திருட்டுத் தனமாய் நழுவி வெளியே செல்வது குறித்து —ஆம், பல வகையான சம்பவங்களும் நடைபெறவே செய்தன—பிற்பாடு பொருத்தமான இடத்தில் சொல்கிறேன்.

இப்பொழுது இசை குறித்துக் கூறியாக வேண்டும். இது மெத்தக் கடினமான வேலை, முடியாத காரியமென்றே சொல்லத்தக்கது என்றாலுங்கூட இதைப் பற்றி நான் கூறியே ஆக வேண்டும்.

இசை குறித்துப் பேசுவதும், அதைச் சித்திரிக்க முயலுவதும் சாத்தியமல்லதான். இசைக்குத் தனியொரு மொழி இருக்கிறது, வேறு எம்மொழியிலும் பெயர்த்துச் சொல்ல முடியாத மொழி அது. இந்நிலைமையை மாற்ற முடியாது, நாம் ஒன்றும் செய்வதற்கில்லை.

இசை குறித்துச் சொல்ல முடியாதவன், இதைச் சித்திரிக்க முடியாதவன் நான் மட்டும் தானா?... இல்லை, எல்லோரும்தான்.

மாபெரும் இசைஞன் அலெக்சாந்தர் ஸ்கிரியாபினை எடுத்துக் கொள்ளுங்களேன். மாபெரும் இசைஞருக்கெல்லாம் மாபெரும் இசைஞன் ஸ்கிரியாபின். எப்படியும் எனக்கு அவர் அப்படி தான். வாழ்வெல்லாம் அவர் தமது இசையை ஏனையோருக்கு விவரித்துச் சொல்லி அதன் சாரப் பொருளைச் சொற்கள் மூலம் எடுத்துரைக்க முயற்சி செய்தார். அவர் இசை 'சிம்பனி' புனைந்த ஒவ்வொரு தரமும் உடனே அதை விளக்கிக் கூற ஒரு புத்தகத்தையும் வெளியிட்டு வந்தார்;

எங்கே, எதை சொல்ல முயலுகிறேன் என்று விவரமாய் இதில் கூறி வந்தார். கவிதை வடிவில் தமது இசைக்குப் பொழிப்புரை கூறி விளங்க வைக்கலாமென்று அவர் கவிதை எழுது வதற்கும் கற்றுக் கொண்டார். ஆயினும் கவிதை கவிதையாய் இருக்க முடியுமே அல்லாது இசை யாகிவிட முடியாது. இரண்டுக்கும் மெய்யாகவே பொதுவானது ஒன்றும் இல்லை.

இவ்விடத்தில் தற்செயலாய் நான் ஸ்கிரியா பினைக் குறிப்பிட்டுவிடவில்லை, காரணத்தோடுதான் குறிப்பிட்டேன். இசைப் பள்ளியில் நான் சேர்ந்த தும், முதலாவது குளிர் காலத்திலேயே இசை விருந்துண்ண எங்களை இசைக் கல்லூரியின் மா மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். ஸ்கிரி யாபினின் இசையைப் பருக எங்களை அழைத்துச் சென்றார்கள்—பல ஆண்டுகளுக்குப் பிற்பாடு இப் பொழுது அதை நினைத்துப் பார்க்கையில் எனக்கு விநோதமாகவே இருக்கிறது. மேல்வகுப்பைச் சேர்ந்த முதிய மாணவர்களை அழைத்துச் சென்றார்கள். அது சரிதான், புரிந்து கொள்ளக்கூடி யதுதான் — ஸ்கிரியாபினாலுங்கூட அவர்களைத் திகைப்புறச் செய்திருக்க முடியாது; அவர்களால் இந்த ஆழத்தைச் சமாளிக்க முடியும். ஆனால் முதல் வகுப்பினரான நாங்கள்அப்படிஅல்லவே.... அக்காலத்தில் நாங்கள் எழுத்து இசையைச் சரி வர படிப்பதற்குக்கூட அறிந்திருக்கவில்லை, விரல் களைப் பாடாத பாடு படுத்தி ஒரு மாதிரியாய்ப் பியானோவில் அரிச்சுவடிப் பாடத்துக்குரிய ஆரம் பப் பாட்டுகள் சிலவற்றை இசைப்பதற்கு மேல் அதிகம் தெரியாதோராய் இருந்தோம்... இந் நிலையில் திடுதிப்பென ஸ்கிரியாபினுடைய இசை!

ஆயினும் இது பற்றி சிந்தித்துப் பார்க்கையில் உண்மையில் இது தவறுன போதனு முறை ஆகா தென்பதை இப்பொழுது உணருகின்றேன். குழந்தைகளுக்கு நீந்தக் கற்றுத் தருவதற்கு அவர்களை நீரிலே விட்டு நீந்திப் பார்க்கச் செய்வதுதானே சிறந்த முறை?

விட்ட இடத்துக்குத் திரும்பி வருகிறேன், ஸ்கிரியாபினுடைய இசை விருந்துக்கு எங்களை அழைத்துச் சென்ருர்கள். எங்கள் பள்ளியைச் சேர்ந்த நாங்கள் எல்லோரும், பாட்டுக் குழுவினர் அனைவரும் மாமண்டபத்துக்குச் சென்று ஒழுங்கு முறை தவருமல் மிகவும் அமரிக்கையாய் எங்களது இருக்கைகளில் அமர்ந்து கொண்டோம்.

கச்சேரி மண்டபம் மெய்யாகவே காணக் கண் கொளாத மாமண்டபமாய் இருந்தது. ஒரு மூனையிலிருந்து மறுமுனை வரை ஓரிடம் பாக்கியில் லாமல் வெண்பனி போல் தூய வெள்ளையாய் இருந்தது. பக்கச் சுவர்களில் எல்லாம் புகழ் பெற்ற இசையரசர்களுடைய உருவப் படங்கள் தொங்கின: ஒருவர் தாடியோடும் இன்னொருவர் மீசையோடும் மூன்ருமவர் நரை முடிகளோடும் நான்காவது ஒருவர் பரட்டைத் தலையோடும் காட்சியளித்தார். அப்பொழுது இவர்களில் யாரையும் எனக்கு உருவப் படத்தைப் பார்த்துப் பெயர் சொல்லத் தெரியாது, இவர்கள் பெயர் பெற்ற பெரியவர்கள் என்பதை மட்டும் உணர்ந்து கொண்டேன்.

மேடையில் ஏராளமான இசைவாணர்கள் இருந்தார்கள், நூறு பேருக்குக் குறையாது. திடுமென எல்லோரும் இசைக் கருவிகளை இசைக்கத்

தொடங்கிவிட்டனர். பக்கத்திலிருப்பவர் என்ன செய்கிறார் என்பதைக் கவனியாமலே அவரவரும் ஊதவும் கர்முர்ரென இழுக்கவும் முற்பட்டார். பிடில்களையும் குழல்களையும் சுருதி சேர்த்து இசைத்துச் சரி செய்து கொள்ள மறந்துவிட்டார்கள் போலும். இப்பொழுது அவசர அவசரமாய் சபையோருக்கு எதிரே இவ்வேலையைச் செய்தனர். சப்தம் எப்படிக் காதைத் துளைத்தது! பித்துப் பிடித்துவிடும் போலிருந்தது!

முடிவில் எல்லோரும் அமைதியாகிவிட்டனர். உயரமான மிதிகள் தரையில் தட்டி ஒலிக்க மேடையினுள் நடந்து வந்த ஒரு பெண் ''ஸ்கிரியாபினின் 'ஆனந்தக்களிப்பு' '' என்று அறிவித்துவிட்டு, வந்த அதே கம்பீர முறையில் திரும்பிச் சென்றார்.

அவர் மறைந்ததும் அதிவேகமாய் ஒருவர் உள்ளே வந்தார், ஓடி வந்தார் என்றே சொல்ல வேண்டும். அவருடைய நீளமான கறுப்புக் கோட்டு பின்புறத்தில் நடுவில் வெட்டிப் பிளக்கப்பட்டு இரு வால்களாக்கப்பட்டிருந்தன. தகதகக்கும் தூய வெண்ணிறச் சட்டையும் அதே போல தூய வெள்ளையாய்ப் பளபளத்த கழுத்துப் பட்டியும் அணிந்திருந்தார்.

உடனே சபையோர் கையொலி எழுப்பி வாழ்த்தினர். அவருடைய அந்த வயதில் வெடுக்கென தாவி மேடையின் மையத்திலிருந்த பீடத்தில் ஏறியதைத் தவிர, வேறு குறிப்பிடத்தக்கதாய் இன்னும் ஒன்றும் செய்துவிடவில்லை, அதற்குள் சபையோர் அவசரப்பட்டு இப்படிக் கையொலி முழக்கம் செய்து போற்றுகிறார்களே என்று நினைத்துக் கொண்டேன்.

இசை இயக்குநர் தம் கையிலிருந்த கோலை உயர்த்தியதும் நிசப்தமாகிவிட்டது. இசை ஆரம்ப மானதை நான் கவனிக்கத் தவறிவிட்டேன். நிசப்தம் எப்பொழுது முடிவுற்று இசை எப்பொ ழுது ஆரம்பமாயிற்று என்று தெரியாதபடி அவ் வளவு சன்னமாய் இசை ஒலித்தது. இவ்வளவு மெல்லிய இசை இசைக்கவா இத்தனை பேரைத் திரட்டி மேடையிலே கொண்டு வந்து அமர்த் தினர்கள், இயக்குநரையும் சேர்த்து மூன்றே பேர் போதுமே இதற்கு என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டேன். பொடியாய் ஒலித்த இந்த இசை எனக்கு அலுப்பு தட்டுவதாய் இருந்தது, நான் சுற்றிலும் பார்க்கத் தொடங்கினேன்.

இப்படி அலுத்துப் போனது நான் மட்டும் அல்ல என்பது விரைவிலே தெரிந்தது. பக்கத்து வரிசையில் மெலிந்த சிறு உருவினரான கிழவர் ஒருவர் கைகளை மடித்து வியிற்றின் மேல் வைத்துக் கண்களையும் கொஞ்சம் மூடிக் கொண்டு விட்டார். கிழவர் தூங்குகிறார் என்றே நினைத்தேன். வேடிக்கையான ஆள்தான்! வீட்டிலே இருந்தபடி நன்றாய்த் தூங்குவதற்குப் பதில் இந்தக் கச்சேரி யைத் தேடிக் கொண்டு இவ்வளவு தூரம் வந் திருந்தார்.

பிறகு நான் இன்னொரு பக்கம் திரும்பிப் பார்த் தேன். எனக்கு வலப் புறத்தில் ஒருவர் தடித்த புத்தகத்தைப் பிரித்து வைத்து ஊன்றிப் படித்துக் கொண்டிருந்தார். அப்புத்தகத்தின் பக்கங்கள் நிறைய இசைக் குறிகள் நெருக்கமாய் அச்சிடப் பட்டிருந்தன. பக்கங்களைப் புரட்டிப் படித்துக் கொண்டிருந்த அவர் இடையிடையே நிமிர்ந்து இசை இயக்குநரைப் பார்த்துவிட்டு மீண்டும்

படிக்க முற்பட்டார். அந்தப் புத்தகத்தில் இருந்ததை இசைவாணர்கள் எந்த மாற்றமுமின்றி அப்படியே இசைக்கிறார்களா, இயக்குநர் ஒழுங்காய்க் கோலை ஆட்டுகிறாரா, யாவும் முறைபடி நடைபெறுகின்றனவா என்று அவர் சரிபார்த்துக் கொண்டிருந்தார்—அதில் எனக்கு ஐயம் சிறிதும் இல்லை. கிழித்த கோட்டிலிருந்து இம்மியும் விலகக் கூடாதென்பதில் ஏன்தான் சிலருக்கு இப்படி ஒரு பிடிவாதமோ, தெரியவில்லை! மெல்லிழைப் பூக் காலர் சட்டை போட்டிருந்த ஸ்தூல உருவ அன்னை ஒருவர் நான் அங்குமிங்கும் திரும்பிப் பார்ப்பதைக் கண்டு விரலை ஆட்டிக் காட்டி என்னை எச்சரிக்கை செய்தார்.

அதன் பிறகு நான் திரும்பாமல் நேரே என் முன்னால் பார்த்தவாறு அமர்ந்திருந்தேன். ஆனால் அதிர்ஷ்டம் எனக்கு உதவிற்று, நான் கேட்கக்கூடியதற்கும் அதிகமாகவே உதவிற்று: நான் அதிகம் சலிப்படைந்து விடாமல் இருக்கும் பொருட்டு எனக்கு எதிரே ஓர் ஆள் உட்கார்ந்திருந்தார். அவர் தலையில் ஒரு முடிகூட இல்லை, அப்படி முற்றும் வழுக்கையாய் இருந்தது. அந்த வழுக்கைத் தலையின் மேல் அந்துப் பூச்சி ஒன்று வட்டமிட்டு ஓயாமல் பறந்து கொண்டிருந்தது. கம்பளி ஆடைகளைச் சுற்றிப் பறக்கும் சாதாரண அந்துப் பூச்சி. அசட்டுப் பூச்சி, அந்த ஆளின் வழுக்கைத் தலையில் எதைத் தேடி அப்படி வட்டமிடுகிறது? எதுவுமே இல்லாதபடி சுத்தமாய் வழுக்கையாகி விட்ட அந்தத் தலையில் என்ன கிடைக்கும், சுருட்டிச் சென்றுவிடலாமெனத் திட்டமிடுகிறது? என் மனத்துள் ஓடிய எண்ணங்களை அது தெரிந்து

கொண்டுவிட்டாற் போல ஏமாற்றத்துடன் அங்கிருந்து பறந்து விலகிச் சென்றது.

வாத்தியக் குழுவினர் பலக்க வாசிக்கத் தொடங்கிவிட்டதை அப்பொழுதுதான் நான் கவனித்தேன். பிடில்காரரர்கள் வில்லை முன்னும் பின்னும் இழுத்துக் கொண்டிருந்தார்கள். எக்காள இசை வாணரின் கன்னங்கள் உப்பிப் பருத் திருந்தன. முரசடிப்பவர் முரசின்மீது கவிழ்ந்து கொண்டிருந்தார்.

நான் உற்று கவனிக்க முயன்றேன். நான் இசை விருந்து பருக வேண்டுமென்று என்னை இங்கு அழைத்து வந்தார்களே அன்றி சுற்றிலும் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதற்கல்ல. ஆகவே நான் இசையைக் கவனமாய்க் கேட்க வேண்டும், பிற்பாடு நான் எனக்குப் பிடித்த மெட்டுகளைத் திருப்பிப் பாட வேண்டும். பிள்ளைப் பிராயம் முத லாகவே ஒரு முறை கேட்டதுமே மனத்தில் பதித் துக் கொண்டு மெட்டுகளைத் திருப்பிப் பாடுவதும் பிற்பாடு அவற்றைக் குழந்தை பள்ளிப் பியானோ வில் இசைக்க முயலுவதும் என் வழக்கமாயிற்றே. இங்கும் அதே மாதிரி செய்ய முயலலாம் அல்லவா? காதுகளைத் தீட்டிக் கொண்டேன். ஆனால் இந்த இசையில் எந்த மெட்டும் இருப்ப தாய்த் தெரியவில்லை. ஒலிகளும் நாதங்களுமான இந்தத் தடித்த வலைப்பின்னலிலிருந்து எவ்வளவோ முயன்றும் என்னால் எந்த மெட்டையும் தேடி யெடுக்க முடியவில்லை.

ஆனால் ஓர் எக்காளம் மிகவும் முன்னிலையிலே துணிவுடன் இசைத்ததை உணர்ந்தேன். வாத்தியக் குழுவின் ஏனைய கருவிகளிலிருந்து தனித்து நின்று தனக்கே உரிய நாதமாய் உச்ச ஸ்தாயியில்

''தா-தூ-தும், தா-தூ-தும், தா-தூ-தும்'' என்றும், கீழ் ஸ்தாயியில் ''தா-தா-தா-தா-தா'' என்றும், பிறகு மேலும் அழுத்தம் திருத்தமாய் ''தா-தூ-தும், தா-தூ-தும்'' என்றும் முழங்கிற்று.

ஆனால் இதை ஒரு மெட்டென்று சொல்ல முடியுமா? என்ன மெட்டு இது? நினைவில் வைத்துக் கொள்ள முயன்று பாருங்கள், ஒரு நாளும் முடியாது.

மேல் வகுப்பு மாணவர்கள் எனக்குச் சொல்லியிருந்தது அப்பொழுது என் நினைவுக்கு வந்தது. எக்காளம் ஊதுகிறவரிடம் எலுமிச்சம் பழத்தைக் காட்டினால்—தொலைவிலிருந்தபடி காட்டினாலும் போதும்—அவரால் ஊத முடியாமற் போய் ஊதுவதை நிறுத்திவிடுவார், ஏனெனில் புளிக்கும் எலுமிச்சம் பழத்தைப் பார்த்ததும் அவர் கன்னங்கள் சுருங்கத் தொடங்கிவிடும் என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். இதைச் செய்து பார்த்தால் எவ்வளவு வேடிக்கையாய் இருக்குமென்று நினைத்தேன், ஆனால் என்னிடம் எலுமிச்சம் பழம் இல்லை....

இதற்கிடையில் வாத்தியக் குழு ஒரேயடியாய் விருவிருப்படைந்துவிட்டது. மேலும் மேலும் அதிகமான குரல்கள் இந்த அட்டகாச ஒலிக் கூத்தில் சேர்ந்து கொள்ளத் தலைப்பட்டன. சில நேரங்களில் இந்தக் குரல்கள் எல்லாம் முட்டிமோதிக் கொண்ட போது உண்டான அதிர்ச்சி என்னை நடுங்கி ஆடச் செய்வதாய் இருந்தது.

இதற்குள் இயக்குநர் முதலில் ஒரு பக்கமும் பிறகு மற்றொரு பக்கமும் சாய்ந்து ஆவேசமாய்க் கைகளை ஆட்டி வீச ஆரம்பித்தார். ஆனால் அப்பொழுது நான் கண்ணுற்ற வேறொன்று என்

கவனத்தை வாத்திய இசையிலிருந்து திருப்பி விட்டது. இயக்குநரின் மூக்கு நுனியில் நீர்த் துளி ஒன்று வந்து நிற்கக் கண்டேன்.

மேடைக்கு அருகில் சற்றே பக்கவாட்டில் உட்கார்ந்திருந்தேன், ஆகவே இயக்குநரின் மூக்கு நுனியில் இருந்த அந்தத் துளியை நான் மிகத் தெளிவாய்ப் பார்க்க முடிந்தது. சரியாய் அவர் மூக்கின் நுனியிலே போய் அது தொங்கிக் கொண்டிருந்தது. அவர் நெற்றியிலிருந்து வழிந்தோடி வந்த வியர்வைத் துளியாய் இருக்கலாம். அட்டகாசமாய் அவர் கைகளை அப்படியும் இப்படியுமாய் ஆட்டி வீசிக் கொண்டிருந்தார். இம்மாதிரியான வேலை விரைவில் எவரையும் வியர்த்து விருவிருத்துப் போகத்தான் செய்யும். அல்லது அவருக்குச் சளிப்புப் பிடித்திருந்திருக்கலாம், ஏனெனில் அது குளிர் காலம், கச்சேரிக்கு வருகிற வழியில் குளிரால் தாக்குண்டிருக்கலாம்.

மூக்கு நுனியில் நீர்த் துளி தொங்குகிறதென்று இயக்குநருக்கும் தெரிந்துதான் இருக்கும். அதை அங்கிருந்து அகற்ற, உதறித் தள்ள அவர் விரும்பித்தான் இருப்பார். ஆனால் எப்படி இதைச் செய்வது? அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டாமா? இசைவாணர்கள் எல்லோரும் ஒரு கண்ணால் தமது இசை ஏட்டைப் பார்த்துக் கொண்டு மற்றொரு கண்ணால் இயக்குநரின் அங்க அசைவு ஒவ்வொன்றையும் கூர்மையாய்க் கவனித்துக் கொண்டிருந்தனர். அசைவோடு அசைவாய் இயக்குநர் திருட்டுத்தனமாய் மூக்கைத் தொட முயலுவதற்குக்கூட வழி இல்லையே, அவருடைய இம்முயற்சி உடனே வாத்தியக் குழுவினரைத் திகைக்கச்

செய்து எல்லோரையும் நிலை குலையச் செய் திருக்குமே. பிறகு யாவும் அதோகதிதானே!

இதன்பின் மீண்டும் அமைதி திரும்பிற்று. சில கணங்களுக்கு முன்பு நடைபெற்ற அமளி மறைந்து விட்டது. திணறித் தவித்த மேல் மூச்சுகள் மட்டுமே இப்பொழுது அந்த அமளியை நினைவு படுத்தின. அப்படி ஆவேசமாய் இசைத்தபின் மீண்டும் அமைதியாய் மூச்சு விடும் நிலைக்கு வருவது எளிய காரியமல்ல என்பதை என்னுடைய மூச்சே எனக்கு உணர்த்திற்று.

வாத்தியக் குழு அனைத்தையுமே மூழ்க்கடிக்கும் படி முழங்கிய எக்காளத்தின் ஒலி இப்பொழுது எங்கோ தொலைவிலே மறைந்துவிட்டது. ஆயினும் விடாப்பிடியாய் வலியுறுத்தி அழைத்த எக்காள முழக்கத்தின் எதிரொலி தற்போது நிலவிய உறக்கம் தரும் அமைதிக்கிடையிலும் இங்குதான் அருகில் வட்டமிட்டுக் கொண்டிருப்பது போல் எனக்குத் தோன்றியது.

ஆனால் இந்த அமைதி அதிக நேரம் நீடிக்க வில்லை. புதுத் தெம்பு பெற்று யாவும் திரும்பவும் ஆரம்பித்துவிட்டன. அந்த நூறு இசைவாணர் களில் ஒருவருங்கூட இப்பொழுது சும்மாயிருக்க வில்லை. பிடில்களிடமிருந்து குழல்களுக்கும் வயொ லாக்களிலிருந்து மேடையில் நேரே நிமிர்ந்த நின்று ஊதியவர்களது வேய்ங்குழல்களுக்கும் பிறவற்றுக்கும் பார்வையைத் திருப்புவதற்குக் கூட எனக்கு அவகாசம் கிடைக்கவில்லை. அப்படி எல்லா வாத்தியங்களும் ஏககாலத்தில் ஒரேயடி யாய் வாசிக்கப்பட்டன. திடுமென எனக்குக் கவலை யாயிருந்தது, இத்தனை ஒலிகளின் இந்தக் குழப் படியில், முனகியும் மணி நாதமிட்டும் கூச்சலிட்

டும் அமர்க்களம் செய்த இந்தப் பூதங்களிடையே எப்படி நான் வழி தெரிந்து கொள்ளப் போகிறேன் என்று எனக்குக் கவலையாயிருந்தது.

உடலைச் சுற்றிச் சுருட்டிக் கொண்டு ஆடிய பிரம்மாண்டமான மலைப் பாம்பு போன்ற ஓர் எக்காள இசைக் கருவியை என் கண்களல்ல, என் காதுகள் என் கவனத்துக்குக் கொண்டுவந்தன. விரியத் திறந்த அதன் வாய்க்குள்ளிருந்து திடுமென ஆவேசமானக் கூக்குரல் எழுந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் இந்தப் பேரொலி தணிந்து அதலபாதாளத்தினுள் மேலும் மேலும் அழுந்தி சென்று முடிவில் சட்டெனச் சின்னபின்னமாகிவிட்டது போலத் தனித்தனி சிறு அதிர்வுகளாய்ச் சிதறுண்டு போயிற்று. இந்த அதிர்வுகள் நம்மையடைந்து நம் செவிப் பறையைக் கணகணக்கச் செய்தன.

திகைத்துப் போய்க் கலங்கிய நிலையில் நான் அமர்ந்திருந்தேன். இதற்குள் நான் இசையைத் தவிர வேறு எதையும் உணர முடியாதவனுகிவிட்டேன். என்முன் உட்கார்ந்திருந்த அந்த வழுக்கைத் தலை ஆளும், மடியிலே இசையேட்டுப் புத்தகத்தைப் பிரித்து வைத்திருந்தவரும், மற்றும் அலங்காரக் கொத்து விளக்கும் சுவர்களும் சுவர்களிலிருந்த உருவப் படங்களும் ஏனைய யாவும் என் சிந்தையை விட்டு அறவே மறைந்துவிட இசை ஒன்றை மட்டுமே நினைத்தவனாய் அமர்ந்திருந்தேன்.

ஆனால் இதில் மெய்யாகவே வியக்கச் செய்வதாய் இருந்தது என்னவெனில், நான் கேட்டுக் கொண்டிருந்த இசை எனக்கு எதையும் நினைவுபடுத்தாததுதான். என் மனத் திரையிலே அது

எவ்விதச் சித்திரங்களையும் நிழலாடச் செய்ய வில்லை. முயற்சி செய்து என்னுள் எதாவது ஒன்றைக் கற்பனை செய்திருக்கலாம்தான். கடலில் புயல் வீசுவதையும் முறிந்து விழுந்த பாய்க் கம் பங்களையும் மக்கள் அவற்றைக் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டு உயிருக்காகப் போராடியதை யும் காட்டிய சித்திரத்தை, எங்கோ நான் பார்த் திருந்த அதை, மனத்துள் கற்பனை செய்திருக்க லாம்தான். அல்லது யுத்தம் அந்த இசைக்கு இன்னுங்கூட பொருத்தமாய் இருந்திருக்கும். ஆனால் இவை எல்லாம் இட்டுக்கட்டப்பட்ட கற்பனைகளாகவே இருந்திருக்கும், என்னை நான் ஏமாற்றிக் கொள்வதாகவே இருந்திருக்கும். இந்த இசை எந்த ஏமாற்றுமின்றி முழுக்க முழுக்க மெய்யான தூய இசையாகுமென்பதை ஏற்கனவே நான் உணர முடிந்தது. புயல்களையும் யுத்தத்தையும் கற்பனை செய்து கொள்வது பொருந்தாது....

(பிறகு என்னவாம் இது? அந்நாட்களில் இதற்கு என்னால் விடை காண முடியவில்லை. ஆனால் இப் பொழுது—சிறிதளவு நான் வாழ்க்கையைப் பார்த் தறிந்து கொண்டிருக்கிறேன், ''ஆனந்தக்களிப்பு'' இசையை நூறு தரம் கேட்டிருக்கிறேன், இது பூராவையும் என்னால் இயக்கிக் காட்ட முடியும், இருபத்து இரண்டு நிமிடங்களுக்கு இசைக்கப் படும் இவ்விசை முழுவதையும் கண்ணை மூடிக் கொண்டே, சிறு விரலையும் ஆட்டாமலே இயக்கிக் காட்டுவேன்—இப்பொழுது நான் அறிவேன், கடலில் எழும் புயலைக் கட்டிலும் பிரம்மாண்ட மான ஏதோ ஒன்று இந்த இசையில் இருக்கிறது,

மனித உணர்ச்சிகளின் வெள்ளப் பெருக்கே இந்த ஏதோ ஒன்று என்பதை அறிவேன்.)

ஏதோ கனவில் மணி அடிப்பதையும், ஆர்கன் இசைக் கருவி முனகுவதையும், பிறகு முரசங்கள் யாவும் ஒவ்வொன்ருய் இடியென முழங்கியதிர் வதையும் கேட்டது போலிருந்தது.

பிறகு யாவும் அமைதியடைந்து நிசப்தம் குடி கொண்டது. ஆனல் இதை என்னல் நம்ப முடிய வில்லை. எவராலுமே இதை நம்ப முடியவில்லை என்பதாகவே தோன்றியது, ஏனெனில் எல்லோ ரும் ஆடாமல் அசையாமல் கல்லாய்ச் சமைந்து அப்படியே உட்கார்ந்திருந்தார்கள்.

அவர்கள் செய்தது சரிதான், ஏனெனில் இசை இன்னும் முடிவடையவில்லை. நம்ப முடியாத அந்த அமைதி இசையைச் சேர்ந்த பகுதியே அன்றி, நிசப்த இசையே அன்றி வேறல்ல. வாத்தியக் குழுவினர் தம்மிடம் எஞ்சியிருந்த பலம் அனைத் தையும் திரட்டி திரும்பவும் இசைக்கலாயினர். ஒய்ந்து விட்ட இசைவாணர்களை இயக்குநர் எல்லாம் வல்ல தமது கோலைக் கொண்டு தட்டி யெழுப்பி ஒன்றுதிரட்டிச் செயல்பட வைத்தார். உறுதி வாய்ந்த இசைவாணர்கள் எங்கிருந்தோ புதுத் தெம்பு பெற்று இசையை அதன் இறுதி வரை இசைத்ததோடு அன்னியில் மகிழ்ச்சி பொங் கும் ஆரவாரச் சுர முழுக்கமிட்டு முத்தாய்ப்பு வைத்து இனிது முடித்தனர்.

அதன் பிறகு மண்டபமே அதிரும் வண்ணம் கரவொலி இடி முழக்கமெனக் கிளர்ந்தெழுந்தது. இயக்குநர் திரும்பி நின்று சபையோரை நோக்கித் தலை வணங்கினர். இம்முறை கரவொலி வாழ்த்து முன்பு தொடக்கத்தில் தோன்றியது போல் தகாத

தாய்த் தோன்றவில்லை, அவரை எவ்வளவு வாழ்த்திலுைம் தகும் என்பது இப்பொழுது ஐயமறத் தெரிந்தது.

வயலின்காரர்கள் தமது வில்களை இசை ஏடு தாங்கிகளில் தட்டி வாழ்த்தினர். ஆனல் இயக்கு நரைப் பார்த்து அவர்கள் இதைச் செய்யவில்லை, வாத்தியக் குழுவின் பின்வரிசையைப் பார்த்துச் செய்தனர். இயக்குநருங்கூட தமது குழுவின் பின்வரிசையில் யாரையோ பார்த்தவாறு கை தட்டத் தொடங்கினர்.

உயரமான பூட்ஸ் பாதங்கள் டக்-டக்கென ஒலிக்கத் திரும்பவும் அந்தப் பெண் மேடையினுள் வந்து அறிவித்தார்: ''இன்றைய இந்த 'ஆனந் தக்களிப்பு' இசை விருந்து, நாற்பாது ஆண்டு களுக்கு முன்பு வாத்தியக் குழுவில் சேர்ந்து கொண்ட நமது ஒப்புயர்வற்ற தனிப்பெரும் எக் காள வாத்திய இசைவாணர் திமீத்ரி குஸ்னெத் சோவின் அறுபதாவது பிறந்த தினத்தைக் குறிக்கும் சிறப்பு நிகழ்ச்சியாகும்.''

பிறகு பின்வரிசையிலிருந்து எக்காள வாத்தியம் ஊதியவர்—நான் எலுமிச்சம் பழத்தைக் காட்ட விரும்பினேனே அதே இசைவாணர்—எழுந்து நின்ருர். இசை ஏடு தாங்கிகளிடையே தட்டித் தடுமாறியவாறு நடந்து முன்னே வந்தார், வயலின்காரர்கள் வில்களால் தடதடவெனத் தட்டி அவருக்கு உற்சாகமூட்டினர்.

முன்னல் வந்து சங்கடப்பட்டுக் கொண்டு குனிந்து சபையோரை வணங்கினர். சபையோர் முன்னிலையில் இப்படிக் குனிந்து வணக்கம் செய்து பழக்கப்படாதவர் என்பது தெரிந்தது. உடனே இயக்குநர் தமது பீடத்திலிருந்து குதித்து அவர்

எதிரே வந்தார், இருவரும் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டார்கள்.

மீண்டும் நான் சுற்றிலும் திரும்பிப் பார்த்தேன். கிழித்த கோட்டிலிருந்து யாரும் விலகக் கூடா தென்று விரும்பிய அந்தப் பிடிவாதக்காரர் தமது இசை ஏட்டுப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு தலைகால் புரியாமல் கைதட்டியதைக் கண்டேன். இழைப் பின்னல் பூக் காலர் சட்டை அணிந்து கண்டிப்பு மிக்கவராய் இருந்தாரே அவ்வன்னை யின் கண்களில் கண்ணீர் துளித்திருந்தது.

என் முன்னால் அமர்ந்திருந்த வழுக்கைத் தலைப் பெரியவர் தமது பக்கத்திலிருந்தவரிடம் சாய்ந்து ''திமீத்ரி இனி ஓய்வு பெற்று வாத்தியக் குழு விலிருந்து விலகிக் கொண்டுவிடுவார். அவ்வளவு தான் ...எந்நாளும் நமக்கு இன்னொரு திமீத்ரி கிடைக்கப் போவதில்லை'' என்று கூறக் கேட்டேன்.

* * *

கச்சேரி முடிந்ததும் நாங்கள் எங்கள் விடுதிக்கு நடந்தோம். அதிக தொலைவில்லை. ஹெர்சன் தெரு வில் நடந்து சதோவயா வட்டச் சாலையைத் தாண்டினால் போதும், கிராஸ்னயா பிரேஸ்னி யாவும் எங்கள் பள்ளிக்கூடமும் வந்துவிடும்.

சாலையில் எங்களது அணி ஒரு முழு கட்டடத் தொகுதியின் நீளத்துக்கு நீண்டிருந்த ஆப்பு வடிவ முடையதாய் இருந்தது. இந்த ஆப்பு அணிவரிசை யின் தலையும் வாலும் எங்கள் கண்ணுக்குத் தெரியும்படி நடப்பதற்கு நாங்கள் எல்லோரும் முயற்சி செய்தோம்.

எல்லோரும் தம்மிடையே ஏதேதோ பேசிய வாறு நடந்து சென்றார்கள். இரு பையன்களிடையே

நடைபெற்ற வாக்குவாதம் என் காதில் விழுந்தது.

''அதனுல் என்னவாம்? ஷாஸ்தக்கோவிச்சின் ஐந்தாவது சிம்பொனியில் ஜால்ரா தனித்து முழங்கவில்லையா?''

''அது ஷாஸ்தக்கோவிச் இசையில், இந்தக் காலத்தில். ஆனுல் அந்தக் காலத்தில் பண்டை நாட்களில் இது ஓர் அதிசயமல்லவா? 'ஆனந்தக் களிப்பு' இசைப் புனைவை ரீம்ஸ்கி-கோர்சக்கொவ் கேட்டிருக்கிருர் என்பதை மறந்துவிடாதே.''

''இல்லை, அவர் ஒன்றும் கேட்டதில்லை.''

''கேட்டிருக்கிருர்! ஸ்கிரியாபின் இதை அவருக்குப் பியானேவில் வாசித்துக் காட்டினுர். ஆனுல் ரீம்ஸ்கி-கோர்சக்கொவுக்கு இந்த இசைப் புனைவு பிடிக்கவில்லை.''

வாக்குவாதம் புரிந்த இருவரும் மேல் வகுப்பு மாணவர்கள். அவர்களுடைய வாக்குவாதம் எனக்குப் புரியவில்லை. அவர்கள் இருவரையும் எனக்கு அதிகம் தெரியாது, மேல் வகுப்புகளைச் சேர்ந்தவர்களாதலால் அவர்கள் காலை நேரப் பாட்டுப் பயிற்சிக்கு வருவதில்லை.

விரைவில் நாங்கள் வஸ்தானியே சதுக்கத்துக்குள் வந்தோம். இப்பொழுது நான் நன்கு அறிந்து கொண்டுவிட்ட அந்த வானளாவிய கட்டடத்தின் விசுவ உருவம் இங்கு ஆதிக்கம் புரிந்து கொண்டிருந்தது. கட்டடத்தின் உச்சிச் சிகரம் அதைக் கடந்து சென்ற மெல்லிய மேகக் கணங்களுக்கிடையே பார்வையிலிருந்து மெள்ள மறைவதும், பிறகு திரும்பவும் வெளிப்படுவதுமாய் இருந்தது. இம்மேகங்கள் அதிவேகமாய் வானின் குறுக்கே பறந்தோடின. நகர விளக்கொளிகளின் வெளிச்சம் பட்டு இவற்றின் அடிப்புறம் மஞ்சளாயிருந்

தது. பிறகு கணப் பொழுதுக்கு இந்த மேகங்க ளிடையே தெரிந்த இடுக்கு வழியே பளிச்சிடும் விண்மீன்கள் நிறைந்த குளிர் கால வானத்தைக் கண்ணுற்றேன். மற்ெருரு மேகம் ஓடி வந்து மீண் டும் யாவற்றையும் மறைத்துக் கொண்டது.

''தா-து-தூம், தா-து-தூம், தா-தா-தா-தா-தா...'' என்ன அது?

எக்காள இசைக்கருவியின் முழக்கம்! முழு நேரமும் தன்னை முன்னிலையில் தனியே தெரியப் படுத்திக் கொண்டும் வாத்தியக் குழுவின் பிற உறுப்புக்களுடன் மோதிக் கொண்டுமிருந்த அந்த எக்காளம்தான்; சிறப்புக் கலைஞர் திமீத்ரி விடை பெற்றுக் கொண்ட இந்தக் கடைசிக் கச்சேரியில் அப்படித் தன்னிகரில்லாத முறையில் இசைத்த அதே எக்காளம்தான்!

ஆம், எக்காளத்தின் முழக்கம்தான் அது. ஆனுல் அதை ஒரு மெட்டெனச் சொல்ல முடி யுமா? அப்படித் திடுமென அவ்வளவு தெளிவாய் என் மனத்துள் அந்த எக்காள முழக்கம் உதித் தெழுந்தது எப்படி? மெட்டுகள் இல்லாதவற்றை யும் நினைவில் வைத்திருப்பது மெய்யாகவே சாத் தியம்தானு? அப்படியே நினைவில் வைத்திருந் தாலும் அதைத் திருப்பிப் பாடிக் காட்ட முடியுமா?

கம்பளி மப்ளரால் வாயை மூடிக் கொண்டு (வெளியே குளிரில் நான் பாடுவது யாருக்கும் தெரியக் கூடாது, தெரிந்தால் தக்கபடி பேச்சு வாங்க வேண்டியிருக்கும்), ஊதி இசைத்துப் பார்க்கத் தொடங்கினேன்.

''தா-து-தூம், தா-து-தூம், தா-தா-தா-தா-தா...''

''என்ன... எங்கே...?''

''என்ன, என்ன...?''

இரு பெரும் உருவங்கள் என் எதிரே வந்து நின்றன; இருவரும் ஷாஸ்தக்கோவிச்சைப் பற்றி பேசிய மேல் வகுப்பு மாணவர்கள்.

''எங்கே, திரும்பவும் இசைத்துக் காட்டு'' என்று இருவரும் எனக்கு உத்தரவிட்டனர்.

இருவருக்கும் இடையில் இடுக்கில் புகுந்து தப்பி ஓடலாமென்று பார்த்தேன்; பள்ளியின் முதல்வரிடம் போய் நான் குளிரில் பாடினேனெனச் சொல்லிவிடுவார்களோ என்று எனக்குப் பயம். ஆனால் அவர்கள் என் காலரைப் பிடித்துக் கொண்டு திரும்பவும் ஊதிக் காட்டும்படி உத்தர விட்டார்கள்.

வேறு வழியில்லை. ஏனைய எல்லோரும், எங்களை அழைத்து வந்த ஆசிரியர்களும் நெடுந் தூரம் போய்விட்டதைக் கவனித்தேன். உடனே எனக்கு தைரியம் பிறந்தது.

''தா-து-தூம், தா-து-தூம், தா-தா-தா-தா-தா ....தா-து-தூம், தா-து-தூம்!'' எக்காளத்தின் முழக்கத்தை இம்முறை சற்று பலமாகவே இசைத்துக் காட்டினேன்.

என் மூக்கிலே ஒரு தட்டு தட்டினர், வலிக்கவில்லை எனக்கு. விஷயம் அறிந்த முறையில் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''பையன் எப்படி? முன்னுக்கு வருகிறவன் தானே?'' என்று ஒருவன் கேட்டான்.

''முன்னுக்கு வந்துவிடுவான்'' என்று மற்றவன் பதிலளித்தான்.

மீண்டுமொரு முறை என் மூக்கில் தட்டிவிட்டு இருவரும் ஒன்றும் நடைபெறாதது போல் நடக்கமுற்பட்டனர். முதல் வகுப்புப் பையன்களுடன் போய்ச் சேர்ந்து கொள்வதற்காக நான் ஓட்டமாய் ஓடினேன்.

# இரண்டாம் பிரிவு

## 1

மாடிக்குச் செல்லும் படிக்கட்டில் நிலைக்கண்ணாடி ஒன்று இருந்தது, படிக்கட்டின் முதற் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்கும் இடையமைந்த நடையில் இருந்தது. பெரிய நிலைக்கண்ணாடி, கருங்காலிச் சட்டமிடப்பட்டது, நடையில் சுவரின் முழு நீளத்துக்கும் நீண்டு சென்றது. ஆனால் கண்ணாடி களங்கப்பட்டுக் கோடுகள் விழுந்து மங்கியிருந்தது, ஓரங்களில் ரசம் அரிக்கப்பட்டிருந்தது. அது தொன்மையானது, நூறு ஆண்டுக்கு முற்பட்டது.

ஆயினும் இன்னமும் அது தன் எதிரே வருகிறவரின் உருவத்தைக் காட்டிக் கொண்டுதான் இருந்தது. எனக்கு நினைவு இருக்கிறது, நான் இந்தப் பள்ளிக்கு வந்து முதல் வகுப்பில் சேர்ந்த போது படிக்கட்டின் முன்பகுதியின் உச்சிப் படிக்கு ஏறிய பிறகே என்னால் இந்தக் கண்ணாடியில் என்னைப் பார்க்க முடிந்தது.

ஆனால் இப்பொழுது ஆறு படிகள் ஏறியதுமே என் தலையின் உச்சி அதில் தெரிந்தது. பிறகு நெற்றி, மூக்கு, வாய், நீண்ட கழுத்து ஆகிய யாவும் ஒவ்வொன்றாய்த் தெரிந்தன. அதன்பின் தோள்களைக் கண்டேன், நான் நோஞ்சான் அல்ல என்றாலும் என் தோள்கள் கொஞ்சம் குறுகலாகவே இருந்தன. முடிவில் இடுப்பளவுக்கு என் உருவத்தைக் கண்ணாடியில் பார்க்க முடிந்தது.

இந்தக் கண்ணுடியின் எதிரே நிமிட நேரம் நின்று என் சீப்பிலே எச்சலைத் துப்பி தலையில் வாகைச் சரிசெய்து கொண்டேன். பிறகு எனது முன்னணி இளைஞர் கழுத்துக் குட்டையின் முடிச்சைச் சரிசெய்து கொண்டேன், உற்சாக மடைந்தவனுய் என்னை ஒரு முறை பார்த்துக் கொண்டேன்....

ழேன்யா புரோஹரொவ், வயது பன்னிரண்டு, ஆருவது வகுப்பு, வகுப்பில் முதல்வனல்ல என்ருலும் முதல் பத்து மாணவர்களில் ஒருவன்.

அன்றைய தினம் இதன்றி வேறு குறிப்பிடத்தக்கது என்ன? இசைக் கல்லூரியின் மாமண்டபத்தில் மற்ருெரு கச்சேரி நடைபெற இருந்தது. பள்ளியில் ஐந்து ஆண்டுகளை ஓட்டினேம், அதிகம் சொல்வதற்கு ஒன்றும் இல்லாமல் ஐந்து ஆண்டுகளையும் கழித்த பிறகு மறுபடியும் முதலாவது கட்டத்துக்கே திரும்பினேம் என்பதாகவா நினைக்கிறீர்கள்?...

அப்படியல்ல! அன்றைய தினம் மாமண்டபத்தில் நடைபெற இருந்தது வழக்கமான பழைய கச்சேரி அல்ல; அது **எங்கள்** கச்சேரி, சிறுவர் பாட்டுக் குழுவினரான நாங்கள் அளித்த கச்சேரி!

வழக்கம் போல் மிகவும் முன்னதாகவே டிக்கெட்டுகள் விற்பனையாகித் தீர்ந்துவிட்டன. டிக்கெட் விற்பனை இடங்களைச் சுற்றிக் காலையிலிருந்தே கூட்டங்கள் நின்றன, பல விதமான சிபார்சுக் கடிதங்களையும் வைத்துக் கொண்டு நிர்வாகியின் அலுவலகத்தினுள் மெள்ள நுழைய பலரும் முயன்றனர். பிறகு மாலையில் ஹெர்சன் தெரு நெடுகிலும் ''உபரி டிக்கட்டு இருக்கிறதா?'' என்று வருவோர் போவோரை எத்தனையோ பேர் விசாரித்துக்

கொண்டு நின்றனர். ''இருக்கிறது, குளிப்பு அறைக்கு டிக்கெட்டு'' என்று இவர்களுக்குக் குறும்பாய் பதிலளித்தோரும் உண்டு.

எங்கள் கச்சேரிகளை எப்பொழுதுமே மக்கள் மகிழ்ந்து போற்றுவது வழக்கம். உண்மையை ஒளிக்காமல் சொல்வதெனில் இந்தக் கச்சேரிகள் எங்களுக்கும் இனிய அனுபவமாகவே இருக்கும். கச்சேரி தொடங்குவதற்குச் சில மணிகள் முன்னதாய் எங்கள் விடுதியின் செவிலியர் சிறப்புக்குரிய ஒரு தனி அலமாரியின் பூட்டைத் திறந்து அதனுள் பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டு வந்த எங்களது சிறந்த உடுப்புகளை எடுத்துக் கொடுப்பார்கள். பிறகு சுத்தமாய்ச் சலவை செய்யப்பட்ட சட்டைகளையும் பொட்டி போடப்பட்ட டைகளையும் மற்றும் பூட்சுகளையும் எடுத்துத் தருவார்கள். இந்தப் பூட்சுகளுக்கு நாங்கள் பாலிஷ் போட்டு முகம் தெரியும்படி பளபளக்கச் செய்வது வழக்கம். பெருமண்டபம் நிறைந்து வழியும்படி அமர்ந்திருக்கும் மக்கள் கூர்ந்து கவனிக்கப் போகும் பூட்சுகள் என்பதால் எங்களுக்கு இவ்வேலை இனிதாகவே இருக்கும்.

தனியார் என்று குறிக்கப்பட்ட பஸ் எங்கள் பள்ளியின் வாயிலுக்குள் வரும்போது நாங்கள் பரபரப்படைவது வழக்கம். நாங்கள் அடித்து மோதிக் கொண்டு உள்ளே ஏறுவதற்காக பஸ்ஸின் கதவுகள் படபடத்துத் திறந்து கொள்ளும்.

எனக்குப் பன்னிரண்டு வயதாவதற்குள் எத்தனையோ கச்சேரிகள் நடைபெற்றிருக்கும். இவை கொட்டை எழுத்துக்களில் தொடங்கும் பெயர்களையுடைய மாபெரும் மண்டபங்களாகிய தொழிற்சங்க மாளிகையின் தூபி மண்டபம்,

இந்தக் கண்ணுடியின் எதிரே நிமிட நேரம் நின்று என் சீப்பிலே எச்சலைத் துப்பி தலையில் வாகைச் சரிசெய்து கொண்டேன். பிறகு எனது முன்னணி இளைஞர் கழுத்துக் குட்டையின் முடிச்சைச் சரிசெய்து கொண்டேன், உற்சாக மடைந்தவனுய் என்னை ஒரு முறை பார்த்துக் கொண்டேன்....

ழேன்யா புரோஹறொவ், வயது பன்னிரண்டு, ஆருவது வகுப்பு, வகுப்பில் முதல்வனல்ல என்ருலும் முதல் பத்து மாணவர்களில் ஒருவன்.

அன்றைய தினம் இதன்றி வேறு குறிப்பிடத்தக்கது என்ன? இசைக் கல்லூரியின் மாமண்டபத்தில் மற்ருெரு கச்சேரி நடைபெற இருந்தது. பள்ளியில் ஐந்து ஆண்டுகளை ஓட்டினேம், அதிகம் சொல்வதற்கு ஒன்றும் இல்லாமல் ஐந்து ஆண்டுகளையும் கழித்த பிறகு மறுபடியும் முதலாவது கட்டத்துக்கே திரும்பினேம் என்பதாகவா நினைக்கிறீர்கள்?...

அப்படியல்ல! அன்றைய தினம் மாமண்டபத்தில் நடைபெற இருந்தது வழக்கமான பழைய கச்சேரி அல்ல; அது **எங்கள்** கச்சேரி, சிறுவர் பாட்டுக் குழுவினரான நாங்கள் அளித்த கச்சேரி!

வழக்கம் போல் மிகவும் முன்னதாகவே டிக்கெட்டுகள் விற்பனையாகித் தீர்ந்துவிட்டன. டிக்கெட் விற்பனை இடங்களைச் சுற்றிக் காலையிலிருந்தே கூட்டங்கள் நின்றன, பல விதமான சிபார்சுக் கடிதங்களையும் வைத்துக் கொண்டு நிர்வாகியின் அலுவலகத்தினுள் மெள்ள நுழைய பலரும் முயன்றனர். பிறகு மாலையில் ஹெர்சன் தெரு நெடுகிலும் ''உபரி டிக்கட்டு இருக்கிறதா?'' என்று வருவோர் போவோரை எத்தனையோ பேர் விசாரித்துக்

கொண்டு நின்றனர். ''இருக்கிறது, குளிப்பு அறைக்கு டிக்கெட்டு'' என்று இவர்களுக்குக் கூறும் பாய் பதிலளித்தோரும் உண்டு.

எங்கள் கச்சேரிகளை எப்பொழுதுமே மக்கள் மகிழ்ந்து போற்றுவது வழக்கம். உண்மையை ஒளிக்காமல் சொல்வதெனில் இந்தக் கச்சேரிகள் எங்களுக்கும் இனிய அனுபவமாகவே இருக்கும். கச்சேரி தொடங்குவதற்குச் சில மணிகள் முன்னதாய் எங்கள் விடுதியின் செவிலியர் சிறப்புக்குரிய ஒரு தனி அலமாரியின் பூட்டைத் திறந்து அதனுள் பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டு வந்த எங்களது சிறந்த உடுப்புகளை எடுத்துக் கொடுப்பார்கள். பிறகு சுத்தமாய்ச் சலவை செய்யப்பட்ட சட்டைகளையும் பொட்டி போடப்பட்ட டைகளையும் மற்றும் பூட்சுகளையும் எடுத்துத் தருவார்கள். இந்தப் பூட்சுகளுக்கு நாங்கள் பாலிஷ் போட்டு முகம் தெரியும்படி பளபளக்கச் செய்வது வழக்கம். பெருமண்டபம் நிறைந்து வழியும்படி அமர்ந்திருக்கும் மக்கள் கூர்ந்து கவனிக்கப் போகும் பூட்சுகள் என்பதால் எங்களுக்கு இவ்வேலை இனிதாகவே இருக்கும்.

தனியார் என்று குறிக்கப்பட்ட பஸ் எங்கள் பள்ளியின் வாயிலுக்குள் வரும்போது நாங்கள் பரபரப்படைவது வழக்கம். நாங்கள் அடித்து மோதிக் கொண்டு உள்ளே ஏறுவதற்காக பஸ்ஸின் கதவுகள் படபடத்துத் திறந்து கொள்ளும்.

எனக்குப் பன்னிரண்டு வயதாவதற்குள் எத்தனையோ கச்சேரிகள் நடைபெற்றிருக்கும். இவை கொட்டை எழுத்துக்களில் தொடங்கும் பெயர்களையுடைய மாபெரும் மண்டபங்களாகிய தொழிற்சங்க மாளிகையின் தூபி மண்டபம்,

சோவியத் சேனையினது மத்திய மன்றத்தின் செங் கொடி மண்டபம், ரயில்வேத் தொழிலாளரின் மத்தியக் கலாசார மண்டபம், சைக்கோவ்ஸ்கி இசை மண்டபம் முதலானவற்றில்தான் நடை பெறுவது வழக்கம்.

இத்தனை ஆண்டுகளாய் இங்கிருந்து வரும் எனக்கு இதெல்லாம் பழக்கப்பட்ட மாமூலாகி யிருக்குமென நீங்கள் நினைக்கலாம். அதெல்லாம் இல்லை, ஒவ்வொரு தரமும் பரபரப்படையவே வேண்டியிருக்கிறது.

அன்றைய மாலை நான் பரபரப்படைவதற்கு இதன்றி தனிக் காரணம் ஒன்றும் இருந்தது. அன் றைக்குப் பதினைந்து நாட்களுக்கு முன்பு விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் ''அடுத்த கச்சேரியில் ழேன்யா புரோஹறொவ் 'தொப்ரீனியா நிக்கீத்திச் காவி யம்', 'இளம் பருந்து' ஆகிய இரண்டையும் தனிப் பாடகனாய்ப் பாடுவான்'' என்று அறிவித்திருந் தார்.

* * *

நடந்ததைத் தொடக்கத்திலிருந்து சொல்கி றேன்.

அன்று திங்கட்கிழமை, வாரந் தோறும் வரும் திங்கட்கிழமைதான். திங்கட்கிழமைகளில் நாங் கள் டாக்டரிடம், சரியாய்ச் சொல்வதெனில் காது-மூக்கு-தொண்டை டாக்டரம்மாவான மரீயா லியோன்தியெவ்னாவிடம் அழைத்துச் செல்லப்படுவது வழக்கம்.

எங்கள் பள்ளிக்கூட மனையினுள் ஒரு மூலையில் மிகப் பழைய சிறு குடில் ஒன்று இருக்கிறது. வெளிப் புறத்தில் அது பார்க்கச் சகிக்க முடியாமல்

அலங்கோலமாய் அழுக்கடைந்தும், உட்புறத்தில் பளிச்சிடும் தூய வெண்மையாய் மிகச் சுத்தமாக வும் பளபளக்கும் மருத்துவத் தளவாடங்களும் கருவிகளும் அடங்கலாய் யாவும் கொண்டதாக வும் இருக்கும்.

வலைத் துணிகள் தயாராய்ச் சிறு துண்டுகளாய் வெட்டி மடித்து வைக்கப்பட்டிருக்கும் தட்டினி டம் ஒவ்வொருவராய் நாங்கள் செல்ல வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு துண்டை எடுத்துக் கொண்டு அவரவர் முறை வந்ததும் அதற்கான தனி நாற் காலியில் உட்கார்ந்து நாக்கின் நுனியில் அந்தத் துண்டை வைத்து மூடி நாக்கைப் பிடித்து முடிந்த வரை வெளியே இழுத்து ''ஆ-ஆ-ஆ...'' என்று வாயை விரியத் திறந்து காட்ட வேண்டும்.

நாங்கள் பள்ளியில் சேர்ந்து மரீயா லியோன் தியெவ்னுவின் வாராந்தரச் சோதனைகளுக்குச் செல்லத் தொடங்கிபோது, அவர் எங்கள் தொண் டைக்குள் பார்க்கவில்லை, எங்களுக்கு வலைத் துணித் துண்டுகளைக் கொடுத்து விட்டு ஒரு பெஞ் சில் உட்கார்ந்து கொண்டுவிடுவார். நாங்கள் அசட்டுப் பிள்ளைகளைப் போல் நாக்கைப் பிடித்து வெளியே இழுத்துக் காட்டியவாறு அங்கே உட் கார்ந்திருக்க வேண்டும். அவரைப் பார்த்து நாங் கள் பயப்படாமல் இருக்கும் பொருட்டும் இந்த வாராந்தரச் சடங்கு எங்களுக்குப் பழக்கமாகும் பொருட்டும் இவ்வாறு செய்து வந்தோம். ஆறு வது வகுப்புக்கு வருவதற்குள் நாங்கள் சிறிதும் அச்சமற்றவர்களாகி இந்தச் சடங்குக்கு நன்கு பழகப்பட்டவர்களாகிவிட்டோம்.

மரீயா லியோன்தியெவ்னு தமது நெற்றியில் கட்டியிருந்த பட்டையில் வட்ட வடிவ முகக்

கண்ணுடி ஒன்று இருக்கும். அவர் எங்கள் வாய்க்கு எதிரே தூக்கிக் காட்டிய விளக்கிலிருந்து கண் கூசும்படி வீசிய ஒளியை இந்தக் கண்ணுடி எங்கள் வாய்க்குள் திருப்பியடிக்கும் பிறகு அவர் எங்கள் வாய்க்குள் குரல்வளைப் பரிசோதனைக் கருவியை நுழைப்பார்—ஒரு முனையில் சின்னஞ் சிறு வட்டக் கண்ணுடியைக் கொண்ட நிக்கல் பூசிய நீளமான காம்பு அது.

''ஆ-ஆ-ஆ....''

''நல்லது, ழேன்யா! நீ போகலாம். அடுத்த பையன்.''

நான் நாற்காலியிலிருந்து எழுந்து என்னுடைய வலைத் துணித் துண்டை தட்டில் போட்டேன்.

''ஆ-ஆ-ஆ...'' என்றுன் அடுத்த பையன்.

''சரிதான், சரிதான்!'' என்று சொல்லியவாறு மரீயா லியோன்தியெவ்ன குரல்வளைக் கருவியைத் தட்டில் வைத்துவிட்டு, கீழே குனிந்து பையனுடைய பூட்சுகளை உற்று நோக்கினர்.

''அலீயெவ், எங்கே போய் கால்களை நனைத்து ஈரமாக்கிக் கொண்டாய்? சேற்றிலும் தண்ணீரிலும் ஓடினுயா?''

''இல்லை, இல்லவே இல்லை'' என்று மராத் அலீயெவ் அவனுக்குரிய அந்த ஏக்கப் பார்வையோடு மரீயா லியோன்தியெவ்னவை உற்றுப் பார்த்தான்.

(அவன் சொன்னது பொய், எனக்குத் தெரியும். முந்திய நாளன்று சேற்றிலும் நீரிலும் அவன் ஓடியாடியதை நான் நேரில் பார்த்தவன்.)

''நீ ஓடியிருக்கிருய், இந்தக் கண்ணுடி எனக்குத் தெளிவாய்க் காட்டுகிறது'' என்ருர் டாக்டரம்மா. ''விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச், ஒரு

வாரத்துக்கு மராத் அலீயெவ் பாட்டுப் பயிற்சியில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது.''

எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் தமது மூக்குக்கண்ணுடியின் பின்னுலிருந்து மராத்தைக் கடுமையாய் உற்றுப் பார்த்தார்.

அதற்குள் மேல் வகுப்பு மாணவர்கள் உள்ளே வருவதற்காகக் கதவுக்கு வெளியே காத்துக் கொண்டு நின்ருர்கள். கோல்யா பிர்யுக்கோவின் முறை வந்தது. அவன் நாற்காலியில் போய் உட்கார்ந்தான். கோல்யா பிர்யுக்கோவ் எனக்கு நிக்கலாய் இவானவிச்சாய் இருந்த காலம் மாலேயேறி எத்தனேயோ ஆண்டுகளாகிவிட்டன. முன்னிலும் அவன் பிரம்மாண்ட உருவினனுய் வளர்ந்து விட்டான், அவனுடைய வாயும் என்றையும்விட அதிகமாய் அகன்று விரிந்திருந்தது.

''ஆ-ஆ-ஆ....''

தொலேவிலிருந்து நான் அந்தத் தொண்டையைப் பார்த்துப் பாராட்டிக் கொண்டிருந்தேன். மெய்யாகவே அருமையான தொண்டை! மெய்யாகவே அச்சம் தரும் வாய், அவ்வளவு பெரியது!

''விரியத் திற.''

''ஆ-ஆ-ஆ....''

அந்தத் தொண்டைக்குள் மரீயா லியோன்தியெவ்னு நெடுநேரம் உற்று நோக்கிவிட்டு விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சின் பக்கம் திரும்பி அவரையும் வந்து பார்க்கும்படிக் கூப்பிட்டார்.

விளக்கை அவர் சற்றுத் திருப்பிக் காட்ட விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் குனிந்து கோல்யாவின் தொண்டைக்குள் பார்த்தார்.

''ஆ-ஆ-ஆ....''

''தெரிகிறதா?''

''உம்... தெரிகிறது...''

மரீயா லியோன்தியெவ்ன குரல்வளைக் கருவியை வைத்துவிட்டு முடிவான குரலில் ''பாடக் கூடாது இவன்'' என்ருர்.

கோல்யா பிர்யுக்கோவ் வெடுக்கென வாயை மூடிக் கொண்டான், உதடுகள் கெட்டியாய் இறுகின, முகம் சுண்டிவிட்டது. பிறகு விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் தமது மூக்குக்கண்ணுடியைக் கழற்றிக் கைக்குட்டையால் சுத்தமாய்த் துடைத்தார். இதன்பின் அமைதியான குரலில்.

''மரீயா லியோன்தியெவ்ன, இருபத்தாரும் தேதியன்று கச்சேரி இருக்கிறது.''

''பிர்யுக்கோவ் பாடக் கூடாது, தனிப் பாடகளுய்ப் பாடுவது குறித்துப் பேசவே வேண்டியதில்லை.''

''இருபத்தாரும் தேதிக்குள் எனக்குத் தொண்டை சரியாகிவிடலாம்'' என்பதாய் நம்பிக்கை தொனிக்கும் முறையில் கோல்யா சொல்லிப் பார்த்தான்.

''அதெல்லாம் சரியாகாது. கோல்யா, நீ நெடு நாட்கள் காத்திருந்தாக வேண்டும்.''

முதல்வர் முகத்தைச் சன்னல் பக்கம் திருப்பிக் கொண்டார்.

பிர்யுக்கோவ் நாற்காலியிலிருந்து தாவியெழுந்து அறையை விட்டு வெளியே ஓடினுன்.

''அடுத்த பையன்.''

''ஆ-ஆ-ஆ....''

''நல்லது, இகார். நன்ருய் இருக்கிறது.... அடுத்த பையன்.''

''ஆ-ஆ-ஆ....''

''நல்லது.''

* * *

அவன் எவ்வளவு நன்ருய்ப் பாடுவான், தெரியுமா!

நாங்கள் எல்லோருமே பாடக்கூடியவர்கள் தான், இல்லையேல் எங்களை இந்தப் பள்ளியில் வைத்திருக்க மாட்டார்கள். உண்மையில் நாங்கள் எல்லோரும் நன்ருகவே பாடினேம். ஒவ்வொருவரும் வருங் காலத்தில் தனிப் பாடகனுய்ப் பாடுவதற்காகப் பயிற்சி பெற்று வந்தோம்.

ஆனுல் நேர்மையாய்ச் சொல்வதெனில், கோல்யா பிர்யுக்கோவ் வேறு எந்தப் பையனையும் விட நன்ருய்ப் பாடினுன். அவன் குரல் தனிச் சிறப்புடைத்தது. நான் இந்தப் பள்ளியில் இது வரை கழித்திருந்த காலம் முழுதும் எங்கள் தனிப் பாடகனுய்ப் பாடி வந்தவன் அவன். கோல்யா பிர்யுக்கோவ் எங்களுடைய பாட்டுக் குழுவின் கச்சேரிகளில் மட்டுமின்றி, வயது வந்தவர்களது பாட்டுக் குழு ஒன்று அளித்த கச்சேரியிலுங் கூட ஒரு தரம் தனிப் பாடகனுய்ப் பாடியவன். மாஸ்கோ நகரெங்கும் ''தனிப் பாடகன்—நி. பிர்யுக்கோவ்'' என்று அறிவித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததை நான் பார்த்தேன்.

ஆகவே ''இவன் பாடக்கூடாது'' என்று மரீயா லியோன்தியெவ்ன அளித்த அந்தக் கொடிய தீர்ப்பு கோல்யாவுக்கு எப்படிப்பட்ட அடியாய் இருந்திருக்கும் என்பதை உணர்வது கடினமல்ல. இதேபோல பாட்டுப் பயிற்சியின்போது ''அடுத்த கச்சேரியில் ழேன்யா புரோஹறொவ் 'தொப்ரீனியா நிக்கீத்திச் காவியம்', 'இளம் பருந்து' ஆகிய இரண்டையும் தனிப் பாடகனுய்ப் பாடுவான்''

என்பதாய் அறிவிக்கப்பட்ட அந்தச் செய்தி எனக்கு எவ்வளவு எதிர்பாராததாய் இருந்திருக்கும் என்பதை உணர்வதும் கடினமன்று.

இந்த இரு பாட்டுகளிலும் தனிப் பாடகனுக்குரிய அடிகள் கடந்த சில காலமாய் நான் பாடிப் பழகி வைத்திருந்தவைதான். ஆயினும் என் தலை கிறுகிறுக்கும் வரை இவற்றை நான் பாட்டுக் குழுவின் பயிற்சியின் போதும், பிறகு தனிப்பட செர்கேய் பாவ்லவிச்சுடனும் பாடிப் பழகிக் கொள்ள வேண்டியதாயிற்று. செர்கேய் பாவ்லவிச்சும் முன்னொரு காலத்தில் எங்கள் பள்ளியில் பாட்டுக் குழுப் பையனுய்ப் பயின்றவர்தான். அப்பொழுது எங்கள் பள்ளி மாஸ்கோவில் இல்லை, லெனின் கிராதில் இருந்தது. ஆதியில் எங்கள் பள்ளி லெனின் கிராதில்தான் நிறுவப்பட்டது. யுத்தம் ஆரம்பமாகி ஜெர்மானியர்கள் லெனின்கிராத் நகரை முற்றுகையிட்டபோது இந்தப் பள்ளியின் சிறுவர்கள் அங்கிருந்து வெளியே கீரொவ் நகருக்கு அருகிலுள்ள அர்பாழ் கிராமத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இந்தக் கிராமத்திலேயே தங்கி இங்கே தமது பாடங்களைக் கற்றும் பாட்டுப் பயிற்சியை நடத்தியும் வந்தனர். அங்கே உணவு நிலைமை எவ்வளவு மோசமாயிருந்தது என்பதையும் செர்கேய் பாவ்லவிச் எங்களிடம் சொன்னுர். லெனின் கிராது முனையிலிருந்து ஜெர்மன் படைகள் விரட்டியடிக்கப்பட்ட பிறகும் பையன்களை அங்கே திருப்பியழைத்துச் செல்ல முடியவில்லை. முற்றுகை முடிவுற்ற பின்னரும் அங்கே நிலைமை பயங்கரமாய் இருந்தது. அப்பொழுதுதான் இப்பள்ளி மாஸ்கோவுக்கு பொல்ஷாயா குருஸீன்ஸ்காயா தெருவுக்குக் கொண்டு வரப்பட்டது. இன்று

இரு பாட்டுக் குழுப் பள்ளிகள் இருக்கின்றன. மாஸ்கோ, லெனின்கிராத் இரு நகர்களும் தத்தமது சொந்த பள்ளியைப் பெற்றிருக்கின்றன. ஆண்டுகள் ஓடி மறைகின்றன, யுத்தங்கள் வந்து செல்கின்றன, ஆனால் பையன்கள் தொடர்ந்து பயின்றும் பாடியும் வருகிறார்கள்—இது மெய்யாகவே வியக்கத்தக்கதாகவே இருக்கிறது. ஒரு தொகுதி யுத்தங்களுக்குப் புறப்பட்டுச் செல்லும்போது இளந் தலைமுறையைச் சேர்ந்த இன்னொரு தொகுதி தொடர்ந்து பாடிக் கொண்டிருக்கிறது.

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சும்கூட முன்னொரு காலத்தில் சிறுவர் பாட்டுக் குழுவில் இருந்தவர் தான் என்பதையும் நான் தெரிந்து கொண்டேன். ஆனால் அது சமயச் சபையின் பாட்டுக் குழு. எங்கள் முதல்வர் சிறு பையனாய்ப் பாட்டுப் பயிற்சியில் பங்கு கொள்ளும் காட்சியையும், தாடியையுடைய இசை ஆசிரியர் அவரைப் பார்த்து ''நீதான், உன் பெயர் என்ன... நமேஸ்தினிக்கவ், இல்லையா? உச்ச சுரங்கள் இன்னும் சுத்தமாக வேண்டும்... தொனியின் பளபளப்பு போதாது!'' என்று கத்துவதையும் மனக் கண்ணால் காண்பது எனக்குக் கடினமாகவே இருந்தது.

ஒரே சிரிப்பாய் இருந்திருக்குமே.

வயது முதிர்ந்த எங்கள் நமேஸ்தினிக்கவ் ஏற்கனவே தலை நரைக்கத் தொடங்கிவிட்ட எங்கள் பக்க வாத்தியக்காரர் செர்கேய் பாவ்லவிச்சுக்கும் பாடம் சொல்லித் தந்தவர். எக்காரணத்தினாலோ செர்கேய் பாவ்லவிச் பெயர் பெற்ற பாடகராகவில்லை, புகழ் மிக்க பியானோ இசைஞருமாக வில்லை. யுத்தத்தின்போது அங்கே அர்பாழ் கிராமத்தில் சிறுவர்களுக்குக் கிடைத்த உணவுப் பங்கீடு

மிகச் சொற்பமாய் இருந்ததுதான் காரணமா? அல்லது அவர் பக்க வாத்தியக்காரராகி, தாம் இசை பயின்ற பள்ளியிலேயே வேலை செய்ய வேண்டுமென விரும்பியது காரணமா?

செர்கேய் பாவ்லவிச்சின் முன்னல் பாடி ஒத்திகை பார்ப்பது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர் நிறைய அறிந்தவர், மிகவும் நுட்பமான செவியுணர்வு படைத்தவர். நான் பாடும் ஒவ்வொரு சுரத்தையும் அவரும் தம்முள், அவரது அந்தச் சாம்பல் நிறக் கண்களின் அடியாழத்துக்குள் பாடிக் கொண்டிருப்பது போலத் தோன்றும் எனக்கு.

''இப்பொழுது நீ இந்த முக்கிய நிகழ்ச்சிக்கு முழுத் தயாரிப்பு செய்து கொண்டுவிட்டாய்'' என்று கச்சேரியின் முந்திய மாலையில் செர்கேய் பாவ்லவிச் கூறினர்.

நான் பாடியதைக் கேட்டபின் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சும் ''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்'' என்ருர்.

கச்சேரி மண்டபத்துக்குச் செல்வதற்காக நாங்கள் பஸ்ஸில் ஏறி அமர்ந்ததும் பின் வரிசையில் கோல்யா பிர்யுக்கோவ் இருப்பதைக் கவனித்தேன். தோள்களைக் கூனிக் கொண்டு, தலையிலிருந்த நீர்நாய்க் குல்லாவை நெற்றி மறையும்படி இழுத்து விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் என் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை, யார் பக்கமும் பார்க்கவில்லை, சன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

பாடக் கூடாதென்று கண்டிப்பாய்ச் சொல்லப் பட்டிருந்தும் அன்று மாலை அவன் ஏன் எங்களுடன் வந்தான் என்பது இது நாள் வரை எனக்கு விளங்

காத ஒன்று. அனுமதி பெற்று வந்திருந்தானோ, அல்லது எதையும் பொருட்படுத்தாமலே புறப் பட்டு விட்டானோ, தெரியாது. திடீரென நான் தைரியமிழந்துவிட்டால் அவசர நேரத்தில் அரு கில் இருக்கலாமென்றும் வந்திருக்கலாம். அல்லது நான் எப்படிப் பாடுகிறேன், எனது இந்த முதலா வது முயற்சியில் எப்படி நடந்து கொள்கிறேன் என்று பார்க்க வேண்டுமென்ற ஆவலால் உந்தப் பட்டும் வந்திருக்கலாம்.

மேலும் நான் குறிப்பிட வேண்டிய ஒன்று என்ன வெனில், கண்களின் மேல் குல்லாவை இழுத்து விட்டுக் கொண்டான் என்றாலும், கோல்யா பஸ்ஸில் இருந்ததை விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் கவனிக்கத் தவறிவிடவில்லை. பள்ளிக்கூட முதல்வர் உடனே அவனைக் கண்டு கொண்டார் என்றாலும் அவர் இது பற்றி ஒன்றும் சொல்லாமலே இருந்து விட்டார்.

ஒன்றைச் செய்வதற்குப் பழகிக் கொள்வதைப் போலவே, பழகிக் கொண்டதைச் செய்யாமல் இருப்பதும் சிரமமான காரியமாய் அல்லவா இருக்கிறது?

* * *

ஹைடினின் ‘‘இளவேனிலின் வருகை’’, மூவருக் கான பாஹ் இசை, லியாதவின் ‘‘தாலாட்டு’’, பாலெஸ்திரீனுவின் ‘‘விண்ணுலகில்’’, மற்றும் தற்கால இசைஞர்களது பல படைப்புகள் ஆகிய எங்களது வழக்கமான பாடல் வகைகளைத்தான் அன்று மாலையும் நாங்கள் பாடினோம். எங்கள் கச்சேரியின் தற்கால உருப்படிகளை நாங்கள் காலத்துக்குக் காலம் மாற்றிக் கொள்வது வழக்கம்,

புதிய இசைப் படைப்புகளை மக்களிடையே பரப்புவது எங்கள் பணியின் முக்கிய பகுதியாகும். ஆனால் பாஹும் லியாதவும் பாலெஸ்திரீனவும் எங்களது ஒவ்வொரு கச்சேரியிலும் தவறாமல் இடம் பெறுவர், வருங் காலத்திலும் இதே போல எப்பொழுதும் இடம் பெறவே செய்வர்.

ஜியோவானி பாலெஸ்திரீனவை எடுத்துக் கொள்ளுங்களேன். நானூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் அவர்; ஆம், நானூறு ஆண்டுகள்!... ''விண்ணுலகில்'' என்னும் அவரது பாட்டு அக்காலத்துச் சிறுவர் பாட்டுக் குழுவுக்கென எழுதப்பட்டது.

ஜியோவானி பாலெஸ்திரீன, உங்களை வாழ்த்துகிறேன்! இன்றும் உங்கள் பாட்டைப் பாடி வருகிறோம்.

மக்கள் அடங்காத ஆவலொடு அதைக் கேட்கிறார்கள். ஒரு தசைநாரையும் அசைக்கத் துணியாமல் கல்லாய்ச் சமைந்து போய் உட்கார்ந்திருக்கிறார்கள்.

கீழே சபையோர் மத்தியிலிருந்து எங்களுடைய பாட்டுக் குழுவை நான் பார்க்க முடியவில்லை, இது மிகவும் வருந்தத்தக்கது. ஒரே மாதிரியாய் ஆடைகள் அணிந்திருந்த சிறுவர்கள் வரிசை வரிசையாய் மேடையில் நிற்கும் காட்சியானது கண்ணுக்கினிய அரிய காட்சியாகவே இருந்திருக்கும். சிறு பையன்கள் முன்வரிசையிலும் உயரமானவர்கள் கடைசி வரிசையிலுமாய் உயரத்துக்கு ஏற்ப இந்த வரிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. (நான் நடு வரிசை ஒன்றில் இருந்தேன்.) சிறப்புக்குரிய இசைக் கல்லூரி ஆர்கன் இசைப்பெட்டியின் வெள்ளிக் குழல்கள் மிகவும் உயரமான

பையன்களுக்குப் பின்னால் கடைசி வரிசையின் இயற்கையான தொடர்ச்சியாய் எப்படி நெடிதுயர்ந்து தோற்றமளிக்கும் என்பதை கற்பனைக் கண் கொண்டு என்னால் காண முடிகிறது. சபையில் முன்னால் உட்கார்ந்திருந்தவர்கள் கடைசி வரிசையைச் சேர்ந்த சிறுவர்களையும் ஆர்கன் இசைப் பெட்டியையும் ஒன்றிணைந்த ஒரே முழுமையாகவே பார்த்திருப்பார்கள். இசைப்பெட்டிதான் உச்சக் கட்டையில் பொழிந்து தள்ளுகிறது என்பதாகவே அவர்களுக்குத் தோன்றியிருக்கும்.

ஏனைய எல்லோரையும் போலவே நானும் நான் பாட வேண்டிய பகுதியின் மீதே எனது கவனம் அனைத்தையும் செலுத்தி வந்தேன். ஆயினும் தனிப்பட்ட பலரது குரல்களையும் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது: பாடக் கூடாதென்று தடைவிதிக்கப்பட்டிருந்த ஒரு வாரக் காலத்தைக் கழித்துவிட்டு வந்திருந்த மராத் அலீயெவின் குரலையும், கோஷா வியாசெம்ஸ்கியின் குரலையும், மற்றும் வீத்யா தித்தரேன்கோவையும் கண்டு கொள்ள முடிந்தது. எல்லோரும் எனது வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

ஆனால் எவ்வளவு முயன்றும், மிகவும் பழக்கமான, யாவற்றிலும் எனக்குப் பிடித்தமான குரலான கோல்யா பிர்யுக்கோவின் குரல் என் காதில் விழவில்லை. பின்வரிசையில் ஏனையோருடன் அவன் தனக்குரிய இடத்தில் வந்து நிற்பதைக் கண்டிருந்தேன் என்றாலும் அவன் குரல் ஒலிக்கவே இல்லை.

அவனை அவர்கள் பாட விடவில்லை என்பது தெரிந்தது. அப்படியானால் நான்தான் தனிப் பாடகனுக்குரிய பாட்டுகளைப் பாடியாக வேண்டும்.

அருமைச் சபையோர்களே, கச்சேரி கேட்க வந்திருக்கும் பேரன்புமிக்கோரே!... தனிப் பாடகனாய் நான் பாட வேண்டுமென்று வற்புறுத்துகிறீர்கள்? என்னுடைய தனிக் குரலைக் கேட்க வேண்டுமென உங்களுக்கு ஏன் இந்த விருப்பம்? எங்கள் குழுவில் நாங்கள் எல்லோரும் இணைந்து லயித்து ஒருமித்த முறையில் பாடுவது இனிமையாய் இல்லையா? குழுவாய் இணைந்து பாடுவதிலுள்ள இசையின் அழகு எப்படிப்பட்டது தெரியுமா? நல்ல பாடகனின் சிறப்பெல்லாம் பாங்குற அமைந்த பாட்டுக் குழுவில் தன் நண்பர்களுடன் இணைந்து, வீத்யா தித்தரேன்கோ, கோஷா வியாசெம்ஸ்கி, மராத் அலீயெவ் முதலானோருடன் தோளிணைத்து இசைவாய்ப் பாடுவதில் அல்லவா இருக்கிறது?

இதை விட்டுத் தனிக் குரலாய்ப் பாட வேண்டுமென்று கேட்கிறீர்களே, ஏன்? தனிக் குரலின் பாட்டைக் கேட்காமல் இருக்க முடியாதா உங்களால்?

''அடுத்து 'தொப்ரீனியா நிக்கீத்திச் காவியம்' '' என்றது அறிவிப்பாளரின் குரல். ''ழேன்யா புரோஹரொவ் தனிப் பாடகனாய்ப் பாடுகிறான்'' என்றது.

தலை குனிந்து அழகான வரிசையில் எனக்குரிய இடத்திலிருந்து முன்னால் வந்தேன். நண்பர்களே, விடையளியுங்கள்...

எங்கள் பாட்டுக் குழுவுக்கு முன்னால் வந்து நின்றேன். இன்னும் சற்று முன்னால் சிறிதளவு பக்கவாட்டில் நின்றார் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச். பின்னால் பிளந்து இரு வால்களாக்கப்பட்ட நீள் கோட்டும் மொடமொடப்பான தூய வெண்

ணிறச் சட்டையும் தூய வெண்ணிறக் கழுத்துப் பட்டியும் அணிந்திருந்தார்.

என்மீது கவிழ்வது போல் கீழே குனிந்தார். கடந்த சில ஆண்டுகளில் எப்படி நான் வளர்ந்து ஒரே யடியாய் உயர்ந்து விட்டேன் என்று பெருமைப் பட்டுக் கொண்டல்லவா இருந்தேன். ஆனல் நான் கட்டை விரலின் அளவுக்கே இருந்தது போல இதோ எங்கள் இயக்குநர் நமேஸ்திஸிகவ் இப்படி குனிய வேண்டியதாகிவிட்டது. உண்மையில் நான் குட்டையாய் இருந்தல்ல காரணம், அவர் நம்ப முடியாதபடி அப்படிக் கம்பம் போல உயரமாகவும் குச்சியாய் மெலிந்தும் இருந்ததே காரணம்.

பிறகு அவர் எலும்பு விரல்களையுடைய தமது கைகளை என் பக்கம் நீட்டினர், அனேகமாய் அவை என் முகத்தைத் தொடும்படி நீட்டினர்....

இதற்குள் என் முட்டிக் கால்கள் நடுங்கியாடும் படி அப்படி அரண்டு போய் விட்டேன். சபையில் குடி கொண்டுவிட்ட நிசப்தத்தைக் காட்டிலும் என் எதிரே தெரிந்த நீளமான அந்தக் குச்சி விரல்கள்தான் என்னை அதிகமாய்ப் பீதியுறச் செய்தன. உண்மையில் பீதியுற்றுவிட்டதாய்ச் சொல்ல முடியாது, மேலிருந்து ஒலிக்கும் ஆணைக்குக் கீழ்ப்படிவது போல் நான் மறு பேச்சின்றி அந்த விரல்களுக்குக் கீழ்ப்படியப் பழகிக் கொண்டுவிட்டதன் விளைவே இது. நல்ல வேலையாய் இதன்பின் எனது முட்டிக் கால் உதறல் ஒரு வழியாய் மறையலாயிற்று. தொடர்ந்து அவை நடுங்கியிருந்தால் என் குரலும் நடுங்கியிருக்கும், இதன் இறுதி முடிவு ஆட்டுக் குட்டியின் பரிதாபக் கத்தல்களாகவே இருந்திருக்கும்.

நான் நன்கு அறிந்த அந்த வயோதிகக் கைகள் மெள்ள மேலே உயர்ந்தன....

**குனிந்து புவியைத் தொழும் பிர்ச் மரமல்ல,**
**கனிந்து தரையில் சாயும் பட்டுப் புல்லுமல்ல...**

பிழைத்தேன், முதலாவது அடியை எந்தச் சிக்கலுமின்றி ஒத்திகையில் பாடியது போல் சிறப்பாகவே பாடி விட்டேன். ஆனால் ஒத்திகைகளின் போது எங்கள் பள்ளியின் சிறிய கூடத்திலேதான் பாடி வந்தேன். இசைக் கல்லூரியின் மண்டபம் காரணமின்றி மாமண்டபம் என்று அழைக்கப்படவில்லை, இம்மாமண்டபத்தின் பெரும் பரப்பினுள் என்னுடைய குரல் இப்படித் தனித்து ஒலிக்க இதன் முன் கேட்டறியாதவன் நான். கடைசி வரிசைகள் பிரமிப்பு தட்டும்படி நெடுந் தொலைவுக்கு அப்பல் அல்லவா இருந்தன? உப்பரிகை எங்கோ தொலை உச்சியில் அல்லவா இருந்தது? ஆயினும் அந்தத் தொலைவிலும் உயரத்திலும் மக்கள் குழுமியிருந்தார்கள், பணம் கொடுத்துவிட்டு வந்தமர்ந்திருந்தார்கள். இவர்களுக்கு என் குரல் எட்டுமா என்று என்னுள் ஒரு கேள்வி எழுந்தது.

ஆயினும் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை, நிச்சயம் எட்டுமென்பதை உணர்ந்தேன். ஆகவே என் குரலை உயர்த்த வலிந்து நான் எந்த முயற்சியும் செய்யவில்லை. இப்படி ஒரு முயற்சியை ஒரு போதும் செய்யக் கூடாதெனக் கண்டிப்பாய் எங்களுக்குச் சொல்லியிருந்தார்கள். என் குரல் வியக்கத்தக்க நெடுந் தொலைக்குச் சென்று ஒலிக்க வல்லது, ஆகவே நான் பாடியது கடை கோடி வரிசைகளில் இருந்தோருக்கும் தெளிவாய்க் காதில்

விழும் என்பதில் எனக்கு ஐயமில்லை. மிகமிகச் சன்னமான குரலில் நான் பாடினுலுங்கூட அது எல்லோருக்கும் எட்டியிருக்கும். ஆம், ஒலி பெருக்கி இல்லாமலே எல்லோருக்கும் எட்டியிருக்கும்.

**பெற்ற தாயைத் தொழுது எழுகின்றான்,**
**பற்றுதலோடு மைந்தன் விடை பெறுகின்றான்...**

இயக்குநரின் கை அவருடைய நெஞ்சிலே தூய வெண்ணிறச் சட்டையின் மீது வந்து அழுந்திற்று. அதன் பொருளை உடனே உணர்ந்து கொண்டேன்: முதலாவதாக அது, ''ழேன்யா, அடி நெஞ்சிலிருந்து பாடு... அப்படித்தான், அருமையாய்ப் பாடுகிறாய் நீ'' என்றது; இரண்டாவதாக ''ழேன்யா, உணர்ச்சி ததும்பப் பாடு... **தாயிடமிருந்து மகன்** விடைபெறுகிறான் என்பதை நினைவில் கொண்டு பாடு'' என்றது; மூன்றாவதாக ''ழேன்யா, நெடில்களை நெடில்களாய் நீட்டி இழுத்து உச்சரி'' என்றது.

இவற்றை உடனே புரிந்து கொண்டு, சொன்னதைச் சொன்னபடி செய்ய முயன்றேன். அடி நெஞ்சிலிருந்து பாட முயன்றேன், எவ்வளவு ஆழத்திலிருந்து எனது சுரங்கள் உதித்தெழுகின்றன என்பதைச் சபையோர் கவனிக்கத் தவற மாட்டார்களென நினைத்தவாறு பாடினேன். மகன் தன் தாயிடம் விடை பெற்றுக் கொள்வதை என் மனத்துள் கற்பனை செய்து கொண்டேன். முன்னொரு காலத்தில் எனக்கும் ஒரு தாய் இருந்தாள், அந்தத் தாயிடம் நான் விடை பெற்றுக் கொள்ள முயன்றேன். நெடில்களை நீட்டி அவற்றை மணி நாதமிட்டு முழங்கச் செய்தேன்.

இதன்பின் பாட்டுக் குழு அனைத்தும் என்னுடன் சேர்ந்து பாடிற்று. முடிவில் பலத்த கையொலி கிளர்ந்தெழுந்தது. நான் தலை குனிந்து வணங்கினேன்—இம்முறை பாட்டின் சொற்கள் மூலமாய் அல்ல, மெய்யாகவே வணங்கினேன். கடந்த சில ஒத்திகைகளின் போது எனக்குக் கற்றுத் தந்த முறையில் குனிந்து சபையோருக்கு வணக்கம் தெரிவித்தேன்.

அடுத்த பாட்டு—போல்லியின் ''இளம் பருந்து''—அறிவிக்கப்பட்டது. உடனே செர்கேய் பாவ்லவிச் பியானோவின் முன்னால் வந்தமர்ந்தார். இந்தப் பாட்டுக்குப் பியானோ பின்னிசை இருந்தது. இது இக்காலத்துப் பாட்டு, சோவியத் இசைஞர் புனைந்தது. பழம்பெரும் இசைப் புனைவுகளை மகிழ்ந்து போற்றும் ரசிகர் பெருமக்களை இது கவரக் கூடியதா, யான்அறியேன். ஆனால் எங்கள் பள்ளியின் பையன்களுக்கு மிகவும் பிடித்த பாட்டு இது.

நான் தொடங்கினேன்:

**விண்ணோக்கி உயர்ந்தெழுந்து உலாவுகின்ற**
**இளம் பருந்தே,**
**மண்ணோக்கிப் பாரிங்கே யாம் வாழும்**
**வெளியதனை:**
**உழுதுண்டு வாழப் பிறந் தார்க்கில்லை இனி**
**பண்ணும் பாட்டும்,**
**பொழுதுமென் துயரன்றித் துணையேதும்**
**இல்லை எனக்கு...**

பிறகு திடுமென என் நெஞ்சுக்குள் யாவும் கனத்து இறுக்குவது போன்ற ஓர் உணர்ச்சி எழுந்தது. என் தொண்டையை எதோ அடைப்பது போலிருந்தது. ஆனால் தொண்டையை அடைப்பதாவது, அதற்கெல்லாம் அனுமதியில்லை

இப்போது! நான் பாடிக் கொண்டிருந்தேன், என் தொண்டை தடங்கல் ஏதுமின்றிக் கலகலப்பாய் இருந்தாக வேண்டும்! ஆனல் என்னுள் எழுந்த அவ்வுணர்ச்சிக்கு நானல்ல பொறுப்பு!

இந்தப் பாட்டை, கடுமையும் நேர்மையும் வாய்ந்த இதன் சொற்களை நான் உயிரனையதாய் நேசிக்கிறேன். பாட்டின் பண்ணும் அற்புதமானது. முதன்முதல் இப்பாட்டை நான் கேட்டதுமே மலைப்பு தட்டும்படி அது விம்மிப் புடைத்தெழுந்து உச்ச சுரங்களுக்கு உயருவதைக் கவனித்திருந்தேன்: சிறகடித்துப் பறப்பது போல உயர்ந்து எழுகிறது, பிறகு கீழே சரிகிறது, பிறகு இன்னும் உயரமாய் எழுகிறது....

''இளம் பருந்து'' என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பாட்டு. அடிக்கடி நான் அதைப் பற்றி ஆலோசிப்பேன், இசைஞர் எப்படி இந்த இசையைப் புனையலானுர் என்று வியப்புறுவேன். அதிர்ஷ்டவசமாய்த் திடுமென உள்மனத்தில் உதித்த ஒரு விந்தையா, அவருடைய ஆன்மா திடீரென ஆர்த்தெழுந்ததன் வெளியீடா? அல்லது பண்களின் அந்த அதிசய அமைவும், உச்ச சுரங்களது இந்த இசையாரமும், ஒரு கட்டையிலிருந்து இன்னேன்றுக்கு இசைவு குலையாது மாறிச் சென்று புரிந்திடும் இந்த நடமும் வேதனை மிகுந்த நீண்ட நெடியதொரு படைப்புப் பணியா?

நான் உணரும் முன்பே நாங்கள் ''இளம் பருந்'' தின் முடிவை வந்தடைந்துவிட்டோம்.

தனிப் பாடகனுய் நான் பாட வேண்டியதைச் சரியாகவே பாடினேன், கோல்யா பிர்யுக்கோவ் பாடுவதற்கு எவ்விதத்திலும் குறைவாகிவிடவில்லை என்பதாய் எனக்குப் பட்டது.

இதன் பின் ஏன்தான் சபையோரை அந்த ஆவேச உற்சாகம் அப்படிப் பிடித்து ஆட்டிக் குலுக்கிற்றோ, அறியேன்!... அதுவும் இசைக் கல்லூரியின் அந்த உன்னதமான, கண் கொள்ளா மாமண்டபத்தில்!

நான் குனிந்து வணங்கிவிட்டுப் பாட்டுக் குழுவிலே எனக்குரிய இடத்துக்குத் திரும்பிச் சென்றேன். ஆனால் தொடர்ந்து ஆவேசமாய்ச் சபையோர் கைதட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். மீண்டும் முன்னே சென்று குனிந்து வணங்குமாறு விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் எனக்கு ஜாடை காட்டினார். (ஆர்வக் கையொலி வாழ்த்து முழக்கங்களும், இன்னொரு தரம் பாடும்படி எழுப்பப்படும் ஆர்வ அழைப்புகளும் அவருக்குக் கொஞ்சமும் பிடிக்காதுதான். ஏனெனில் நமேஸ்தினிக்கவ் யாவற்றுக்கும் முதலாய் ஓர் ஆசிரியர், கத்துக்குட்டிகளான என் போன்ற சிறு பையன்களுக்குச் சபையோர் இப்படிப் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்து முழக்கமிடுவது எவ்வளவு தெரியாத்தனம் என்பதை மிகத் தெளிவாய் அறிந்தவர்).

இருந்த போதிலும் முன்னே சென்று திரும்பவும் ஒரு தரம் குனிந்து வணங்குமாறு எனக்கு ஜாடை காட்டினார், பணிவுடன் நானும் அவ்வாறே செய்தேன்.

அதே தருணத்தில் பின்வரிசைகளிலிருந்து ஒரு பெண் எழுந்து மேடையை நோக்கி மையப் பாதை வழியே ஓடி வந்தாள். இளஞ்சிவப்பு ஆடை அணிந்து தலையில் இளஞ்சிவப்பு ரிப்பன்கள் சூடியிருந்தாள். மலர்க் கொத்து ஒன்றை எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள், வெளிர் மஞ்சள் குவளை மலர்களென நினைக்கிறேன். எம்பி நின்று இம்

மலர்க் கொத்தை என் காலடியில், பளிச்சிட்ட என் பூட்ஸ் காலுக்கு முன்னால் வைத்து விட்டுத் தன் இடத்துக்குத் திரும்பி ஓடினாள்.

கலங்கிப் போன நான் தரையினுள் அப்படியே அழுந்தி மறைந்துவிட்டால் தேவலையென நினைத்த வாறு நின்றிருந்தேன்.

சபையோர் சளைக்காமல் கைதட்டினர், கைகள் கன்னிப் போகுமென நினைக்கும்படி அப்படிப் பல மாய்த் தட்டினர்.

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் முயற்சி செய்து இதமான புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு —சபையோருக்காக வேண்டி செய்து கொண்டது இது — எனக்கு மீண்டும் ஜாடை காட்டினார்: மலர்கள் தந்திருக்கிறார்கள், என்ன செய்வது, குனிந்து எடுத்துக் கொள், சீக்கிரமாய் எடுத்துக் கொண்டு உன் இடத்துக்குப் போய்ச் சேர்; பையனே, நாளைக்கு என் அறையில் உன்னுடன் நான் சில வார்த்தை பேசியாக வேண்டும் என்பதாய்க் கூறிற்று, இம்முறை அவர் காட்டிய ஜாடை.

இவ்வளவுக்கும் காரணமான அந்த மலர்களை நான் குனிந்து எடுத்தேன். எனக்கு அதிர்ச்சி தரும் விதத்தில் அதனுள்ளிலிருந்து சிறு சதுரமாய் மடிக்கப்பெற்ற துண்டுக் காகிதம் ஒன்று தரை யிலே விழுந்தது. எனக்கு முகம் செக்கச் சிவந்து விட்டது. ஆனால் சபையோர் இசைக் கல்லூரியின் மாமண்டபத்துக்குப் பதிலாய் சர்க்கஸ் கொட்ட கையில் கூடியிருந்தாற் போல் அப்படி விழுந்து விழுந்து சிரித்துக் கூச்சலிட்டனர்.

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் அமைதி குலையாத முகபாவத்துடன் என்னை உற்றுப் பார்த்தார்; அந்தப் பார்வை எந்த சந்தேகத்துக்கும் இடமின்றி

எனக்குத் தெளிவாகவே புலப்படுத்திற்று: இதெல்லாம் புரட்சிக்குப் பிற்பாடு இந்தக் காலத்தில் நடைபெருமல் அந்தக் காலத்தில் நடந்திருக்குமாயின் பையனே, பள்ளிக்குத் திரும்பியதும் உனக்குச் செம்மையாய்க் கிடைத்திருக்கும் என்றது அது.

தரையிலிருந்து காகிதத்தை எடுத்து அவசரமாய்க் கோட்டின் மார்புப் பையில் வைத்தழுத்திக் கொண்டு என் இடத்துக்குத் திரும்பி ஏனைய பையன்களின் முதுகுக்குப் பின்னுல் மறைந்து கொண்டேன்.

''அர்லாண்டோ லாசோவின் 'எதிரொலி' '' என்றது அறிவிப்பாளரின் குரல்.

* * *

கச்சேரிக்குப் பிற்பாடு தின்பண்டங்கள் கிடைத்தன.

எங்களுடைய கச்சேரிகளில் மக்கள் பெருந்திரளாய் வந்து குழுமிய போதிலும், எங்களுக்குச் சன்மானம் அளிக்கப்படுவதில்லே. வசூலில் குறிப்பிட்ட சதவீதம் எங்கள் இசைப் பள்ளிக்குத் தரப்பட்டிருக்கலாம் (எங்கள் கச்சேரிகளின் நிதி விவகாரங்கள் குறித்து எனக்கு அதிகம் தெரியாது), ஆனுல் பாட்டுக் குழுப் பையன்களாகிய எங்களுக்குச் சன்மானத் தொகைகள் தரப்படவில்லே. இது நியாயமே, அந்த இளம் வயதில் நாங்கள் சம்பளப் பட்டிகளில் கையெழுத்திட நேர்ந்திருந்தால் மெய்யாகவே அது விஞேதமாகவே இருந்திருக்கும்.

ஆனுல் ஒவ்வொரு தரமும் கச்சேரி முடிந்ததும்

எங்களுக்கு விழா நாள் விருந்துக்குரிய தின்பண்டங்கள் அளிப்பார்கள். கச்சேரியை யொட்டி நடைபெறும் புனிதச் சடங்கில் ஒரு பகுதியாய் இது நடைபெறும். வெள்ளை விரிப்பிடப்பட்ட நீளமான மேஜை நிறைய தட்டுத் தட்டாய் ஆரஞ்சுகளும், கேக்குகளும், சாசெஜ் சாண்டுவிச்சுகளும், பாலாடைக் கட்டி வில்லைகளும், கிண்ணம் கிண்ணமாய் மிட்டாய்களும், வரிசையாய்க் கிளாஸ்களில் சூடான தேநீரும் வைக்கப்பட்டிருக்கும். பார்த்ததும் வாயில் எச்சி ஊறும்.

பல காலமாய்ப் பட்டினி கிடந்தவர்கள் மாதிரி நாங்கள் இந்த இனிப்புகளை ஒரு கை பார்ப்பது வழக்கம். ஆயினும் உண்மையில் எங்களில் யாருக்கும் சாப்பாட்டுக்கு எந்தக் குறைவும் இருந்ததில்லை, பள்ளியில் தினசரி மூன்று வேளையும் நல்ல சாப்பாடு வயிறு நிறைய கிடைத்தது, இரண்டாவது தரம் கேட்டவர்களுக்கும் எதுவும் இல்லை யென்னாது தாராளமாய்க் கிடைத்தது.

தவிரவும் எங்கள் பள்ளிக்கூடத்தில் இருந்தவர்கள் எல்லோரும் என்னைப் போல் பெற்றோர் இல்லாமல் குழந்தை இல்லங்களில் வளர்ந்தவர்கள் அல்ல. சிலருக்குப் பெற்றோர் இருந்தார்கள், நோய் நொடியின்றி கொழுக்கு மொழுக்கென்று இருந்த இவர்கள் வெளி ஊர்களில் வசித்தனர், அங்கிருந்து தமது புதல்வர்களுக்கு தின்பண்டப் பொட்டலங்களை அனுப்பி வந்தனர். எடுத்துக்காட்டாய் மராத் அலீயெவுக்குக் காக்கசஸிலிருந்த அவன் பெற்றோரிடமிருந்து பெரும் பெரும் பொட்டலங்கள் வரும். எங்கள் விடுதியில், நாங்கள் எல்லோரும் நன்றாய் மொக்கிவிட்டு மராத்துக்கும் நிறைய பாக்கி வைப்பதற்கு போதுமான அளவில் அவற்

றில் பலவும் இருக்கும். இவர்களையும்விட பாக்கிய சாலிகளான பையன்களும் சிலர் எங்கள் பள்ளி யில் படித்தனர். இவர்களுடைய பெற்றோர் மாஸ்கோவிலேயே வசித்து வந்தனர், அன்றாடம் பாடங்கள் முடிந்ததும் இந்தப் பையன்கள் வீட் டுக்குச் சென்று இரவைக் கழித்துவிட்டு மறுநாள் பாடங்களுக்குக் காலையில் பள்ளிக்குத் திரும்பி வருவார்கள். நாங்கள் எல்லோரும் ஒரே மாதிரி யான சீருடையே அணிந்திருந்தோம் என்றாலும், இந்தப் பகற் பொழுது மாணவர்களை ஏனையோ ரிடமிருந்து எளிதில் நீங்கள் அடையாளம் கண்டு கொண்டுவிடலாம். இவர்களுடைய பூட்சுகள் எங் களுடைய மாமூல் வகைகளைக் காட்டிலும் கொஞ் சம் புதுப் பாணியில் இருக்கும், சட்டைகளும் இன்னும் சற்று வெளுப்பாகவும் பைகள் ஆடம் பரமாகவும் பேனாக்கள் கண்ணைப் பறிப்பனவாக வும் இருக்கும். இவற்றைக் காணும் நாங்கள் வீட்டில் இவர்கள் வகை வகையான பலவும் சாப் பிட்டு வளர்வதாய் நினைத்துக் கொள்வோம். மூக்கு புடைக்க சாசெஜும் பாலாடையும் தின்ப தாய்க் கற்பனை செய்து கொள்வோம். சாப்பாட்டு விவகாரத்தில் எங்களில் யாருக்கும் எந்தக் குறை யும் இல்லை என்றாலும், ஒவ்வொரு தரமும் கச்சேரி முடிந்து தின்பண்டங்களுக்கு வந்ததும் பாலைவனத் தீவிலிருந்து அப்பொழுதுதான் மீட்கப்பட்ட வர்கள் மாதிரி அடங்காத ஆவலொடு அந்தத் தட்டுகளிலிருந்தும் கிண்ணங்களிலிருந்தும் எடுத்து வாய் நிறையப் போட்டுக் கொண்டு அவசர அவசரமாய்த் தின்பது வழக்கம்.

பரிமாறும் பெண்கள் எங்களைப் பார்த்துப் பரிதாபப்பட்டவாறு ஒரு பக்கத்தில் நிற்பார்கள்,

நாங்கள் அள்ளியள்ளித் தின்பதைக் கண்டு மனம் உருகித் தலையை ஆட்டிக் கொள்வார்கள்.

உண்மையை ஒத்துக் கொள்கிறேன், நானும் எல்லோரையும் போல் காய்ந்த மாடு மாதிரி விழுந்துதான் ஆவேசமாய் அந்த சாண்டுவிச்சுகளை வாயில் அடைத்துக் கொண்டு தேநீரை விட்டுக் கட்டினேன். அன்று மாலை நான் நிக்கலாய் இவானவிச் பிர்யுக்கோவின் எதிரே உட்கார்ந்திருந்தேன். பிர்யுக்கோவ் வாயைத் திறந்து ஓரடிகூட பாடவில்லை என்றாலும் தின்பண்ட மேஜையில் அவனுடைய தடித்த முகவாய்கள் மிக மும்முரமாய் வேலை செய்தன. தின்பதற்காகத்தான் இங்கே எங்களுடன் புறப்பட்டு வந்தானோ, என்னமோ!...

கோல்யா பிர்யுக்கோவ் என்னை உற்று நோக்கினான், அவனுடைய முகவாய்கள் திடுமென அசையாமல் நின்றன. வியப்புற்றுவிட்ட நானும் அசை போடுவதை நிறுத்திக் கொண்டேன். விபரீதமாய்க் கோல்யாவின் புருவங்கள் மேலே உயர, கழுத்தைக் கொக்கு போல் முன்னால் நீட்டி வைத்த கண் வாங்காமல் என்னை உற்றுப் பார்த்தான். பரபரக்க நான் என் கன்னத்தைத் தடவிப் பார்த்தேன்: முகத்தில் எதையாவது அப்பிக் கொண்டுவிட்டேனா? ஆனால் அவன் ஏதோ கலவரமடைந்தாற் போல் தொடர்ந்து என்னை உற்று நோக்கினான்.

''ழேன்யா, அங்கே என்ன அது?''

''எங்கே?'' என்று கேட்டேன், இதற்குள் மெய்யாகவே மிரண்டு போன நான்.

''உனக்குத் தெரியும்....''

இவ்வாறு சொல்லியவாறு நிக்கலாய் இவானவிச் தனது நாற்காலியிலிருந்து சற்றே

எழுந்து மேஜையின் குறுக்கே என்னைப் பார்க்கக் குனிந்து முன்னிலும் பரபரப்படைந்தவனாய் என் முகத்தைப் பரிசீலித்தான்.

''என்ன இருக்கிறது என் முகத்தில்?'' என்று என் மூக்கையும் நெற்றியையும் விரலால் தடவியவாறு கேட்டேன் நான்.

அக்கணத்தில் கோல்யா பிர்யுக்கோவ் வெடுக்கெனக் கையை நீட்டி எனது கோட்டின் மார்புப் பைக்குள் விரல்களை விட்டு அதனுள் இருந்த காகிதக் குறிப்பை வெளியே எடுத்தான். நாசமாய்ப் போன அதே காகிதத் துண்டுதான்.... பைக்குள் வைத்ததை நான் மறந்து போய்ப் பார்க்காமல் இருந்துவிடவில்லை, சுற்றிலும் யாரும் இல்லாமல் தனியே அதை எடுத்துப் படித்துப் பார்க்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனக்கு.

துள்ளிக் குதித்தெழுந்து அதை அவன் கையிலிருந்து பிடுங்க எத்தனித்தேன். ஆனால் என் பின்னால் ஒருவன் தோன்றிக் கெட்டியாய் என் தோள்களைப் பிடித்துக் கொண்டுவிட்டான். வீத்யா தித்தரேன்கோதான் என்பது தெரிந்தது. அவனுடைய பிடியிலிருந்து யாராலும் தப்ப முடியாது, அவன் இரும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொள்கிறவன், வகுப்பிலே வலு மிகுந்தவன்.

அங்குலங்கூட நகர முடியவில்லை என்னால்.

அதற்குள் கோல்யா பிர்யுக்கோவ் அந்தப் பாழாய்ப் போன காகிதத் துண்டைப் பிரித்து உள்ளே எழுதப்பட்டிருந்ததை எல்லோரும் கேட்டு ரசிக்கும்படி பிரகடனம் செய்யும் பலத்த குரலில் படித்தான்: ''என் பெயர் மாயா. தொலைபேசி எண்....''

''இரு, இரு! படிக்காதே!'' என்று மேஜையின் எதிர் முனையிலிருந்து ஒரு குரல் எழுந்தது. கோஷா வியாசெம்ஸ்கியின் குரல் அது. சுருட்டை முடிகளும் செவ்விய கன்னங்களும் கொண்ட பையன் அவன், எங்கள் வகுப்பைச் சேர்ந்தவன்.

''படிக்காதே!'' என்று அவன் கட்டளையிடும் குரலில் சொன்னான்.

''என்ன வேண்டும் உனக்கு?'' என்று முகத்தைச் சுளித்தவாறு கேட்டான் நிக்கலாய் இவானவிச்.

''இப்பொழுது நான் 'டெலிபதி' செய்து காட்டுகிறேன்'' என்று அறிவித்தான் கோஷா. ''வேறொருவர் மனத்திலுள்ளதை அறிந்து கூறுகிறேன், அந்தக் காகிதத்தைப் பார்க்காமலே இங்கிருந்தபடி என்னால் அதிலிருப்பதைப் படிக்க முடியும். அதில் குறிக்கப்பட்டிருக்கும் தொலைபேசி எண்ணை என்னால் சொல்ல முடியும், முடியாதென்று நினைப்பவர்கள் பந்தயம் கட்டுகிறீர்களா? கிரீம் கேக்கைப் பந்தயம் கட்டத் தயாரா?''

''நான் பந்தயம் கட்டுகிறேன்'' என்று சொல்லிக் கோல்யா அந்தக் காகிதத்தைக் கைக்குள் வைத்துக் கெட்டியாய் மூடிக் கொண்டான். ''என்னுடைய கிரீம் கேக்கைப் பந்தயம் கட்டுகிறேன், நீ தோற்றால் பணமாய்த் தர வேண்டும், சரிதானா?''

''சரி'' என்று தலையை ஆட்டினான் கோஷா.

''நானும் பந்தயம் கட்டுகிறேன், உன்னால் தொலைபேசி எண்ணைச் சொல்ல முடியாது! கிரீம் கேக்கைப் பந்தயம் கட்டுகிறேன்'' என்று இடப் பக்கத்திலிருந்து சொன்னான் ஒருவன்.

''நானும் பந்தயம் கட்டுகிறேன்!'' என்றான்

வலப் பக்கத்திலிருந்து பரபரப்பாய் அறிவித்தான் இன்னொருவன்.

வீத்யாவின் பிடியிலிருந்து பிய்த்துக் கொள் வதற்காக தொடர்ந்து நான் முயற்சி செய்து பார்த்தேன்.

கோஷா தனது நெற்றியில் சரிந்திருந்த சுருள் முடிகளை ஒதுக்கிக் கொண்டான். பிறகு ஒரு கை யால் கண்களை மறைத்தவாறு இன்னொரு கையை முன்னால் நீட்டி ஐந்து விரல்களையும் விரித்துக் காற்றில் எதையோ தேடுவது மாதிரி துழாவி விட்டுக் கூறினான்: ''இரண்டு—ஐந்து—மூன்று....'' கோல்யா கையைத் திறந்து காகிதத்திலிருந்த எண்ணைப் பார்த்துக் கொண்டான்.

''சுன்னம்—சுன்னம்....''

இதற்குள் மேலும் இரண்டு மூன்று தலைகள் அந்தக் காகிதத்தின் மீது கவிழ்ந்து கொண்டு பார்த்தன.

''எண்பத்திரண்டு!''

மேஜையைச் சுற்றிலும் இருந்தோர் திடுக் கிட்டோராய் மௌனமாயிருந்தனர். கோஷா சரி யானபடி எண்ணை ஊகித்துச் சொல்லிவிட்டான் என்பது தெரிந்தது.

''மூன்று கிரீம் கேக்குகளையும் தயவு செய்து இப்படி அனுப்புங்கள்!'' என்றான் கோஷா.

கையிலிருந்த காகிதத்தை விரல்களுக்கிடையே ஆட்டிப் பெருமூச்செறிந்தவாறு கோல்யா இன் னும் கைப்படாத தனது கிரீம் கேக்கை தட்டி லிருந்த ஏனைய இரண்டுடனும் சேர்த்து வைத் தான். உடனே தட்டு மேஜையின் எதிர் முனைக்குப் போய்ச் சேர்ந்தது. இதன் பிறகுதான் வீத்யா பிடியைத் தளர்த்தி என் தோள்களிலிருந்து கையை எடுத்தான்.

கோஷா தனக்குப் பரிசாய் வந்து சேர்ந்தவை தன்னை விட்டகன்று விடாதபடி உறுதி செய்து கொள்வதற்காக மூன்று கேக்குகளின் முனைகளை யும் கடித்தெடுத்துவிட்டு வைத்தான்.

''இன்னொரு விவரத்தையும் சொல்கிறேன், குறிப்பை எழுதியவள் யாருமல்ல, என் தங்கை தான்'' என்று அறிவித்துத் தேநீரில் ஒரு வாய் குடித்தபின் மேலும் தொடர்ந்து ''அசட்டுச் சிறுமி'' என்றான்.

## 2

கச்சேரி நடைபெற்றது சனிக்கிழமை, இதன்பின் ஒரு வாரம் கழித்து ஞாயிறன்று காலை கோல்யா பிர்யுக்கோவ் என்னிடம் வந்தான். இந்த வாரம் முழுதும் அவன் என் அருகே வரவே இல்லை. பராமுகமாய் விலகியே இருந்து வந்தான்.

இப்பொழுது என்னிடம் வந்து, ''புரோஹ ரொவ், வா வெளியே போவோம், கொஞ்சம் சுற்றிவிட்டு வரலாம்'' என்றான்.

''எங்கே?''

''போய்ப் பறவைகள், மீன்கள், ஆமைகள் முதலியவற்றைப் பார்ப்போம்.''

''விலங்குக் காட்சிசாலைக்கா?'' என்று ஆவலில் லாதவனாய்க் கேட்டேன்.

விலங்குக் காட்சிசாலையைப் பார்த்துப் பார்த்து ஏற்கனவே எனக்கு அலுத்துப் போய்விட்டது. மாஸ்கோவுக்கு நான் வந்து சேர்ந்த முதல் நாளன்று நிக்கலாய் இவானவிச் எங்கள் சன்னல் களுக்கு அடியிலிருந்த அந்த அற்புத விலங்குக் காட்சிசாலைக்கு என்னை அழைத்துச் சென்று

காட்டியபின் நான் நூறு தரமாவது போய்ச் சுற்றிப் பார்த்திருப்பேன். மீண்டும் அங்கேயே கூப்பிடுகிறுனே!...

''இல்லை, விலங்குக் காட்சிசாலைக்கு நான் கூப்பிடவில்லை'' என்று தலையை அசைத்தவாறு கோல்யா பதிலளித்தான். ''பறவைச் சந்தைக்குப் போவோம், வருகிறுயா?''

''எங்கே இருக்கிறது அது?''

''காட்டுகிறேன் வா.''

''ஏன் அங்கே போக வேண்டும் என்கிறுய்?''

''சும்மாச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம்.''

''சரி'' என்றேன்.

போய்ச் சுற்றிப் பார்த்தால் என்ன? அன்று ஞாயிற்றுக் கிழமை, பறவைச் சந்தை இது வரை நான் பார்க்காத ஒன்று. மிகப் பல பொருட்காட்சி சாலைகளுக்கும் கிரகமண்டலக் காட்சிசாலைக்கும் போய் வந்திருந்தேன், ஆனுல் பறவைச் சந்தைக்கு நான் போனதே இல்லை.

''போய்ச் சுற்றிப் பார்ப்போம்'' என்றேன்.

நாங்கள் புறப்பட்டோம், மெட்ரோவில் ''தகான்ஸ்கயா''வுக்குச் சென்று அங்கே ஒரு டிராலிபஸ்ஸில் ஏறினேம். பிறகு இறங்கிச் சில நிமிடங்கள் நடந்ததும் பறவைச் சந்தைக்கு வந்து சேர்ந்தோம்.

அதற்குரிய பெயர் பறவைச் சந்தையல்ல என்பது தெரிய வந்தது. அதன் சரியான பெயர் கலித்னிக்கோவ்ஸ்கி சந்தை, எப்படியும் வாயிலில் அவ்வாறுதான் எழுதப்பட்டிருந்தது. இந்தச் சந்தை சனி ஞாயிறில் மட்டுமே நடைபெற்று வந்தது, ஏனைய நாட்களில் பூட்டப்பட்டிருந்தது என்பதையும் தெரிந்து கொண்டேன்.

ஆனால் சனி ஞாயிறில்... அடேயப்பா, சந்தையில் கூட்டம் நிரம்பித்தான் வழிந்தது.

நெரிசல் தாங்க முடியவில்லை, இடித்து மோதிக் கொண்டு எல்லோரும் அவசரப்பட்டனர். உள்ளே போவதற்குள் பெரும் பாடாகிவிட்டது. சந்தையினுள் செல்லச் செல்ல நெரிசல் மேலும் கடுமையாகி வந்தது. பறவைச் சந்தை பறவைகளுடன் எந்தச் சம்பந்தமும் கொண்டதாய்த் தெரியவில்லை. மீன் சந்தை என்பதாய்ச் சொல்லியிருந்தால் பொருத்தமாய் இருந்திருக்கும். எங்கு திரும்பினும் எங்கு பார்க்கினும் மீன்களையன்றி வேறு எதுவும் கண்ணில் படவில்லை. எல்லாக் கடைகளிலும் வரிசை வரிசையாய்க் கண்ணாடி ஜாடிகளாய் இருந்தன, கண் கவரும் சிறு மீன்கள் அவற்றில் நீந்தின, மிடுக்காய்த் திரும்பி வட்டமிட்டுச் சென்றன. சிவப்பு மின்கள், கரிய மீன்கள், வரிக் கோடுகளிட்ட மீன்கள் இப்படிப் பல வித மீன்களும் அவற்றில் இருந்தன.

கடைகளில் மட்டுமின்றி கூட்டத்தினரிடையிலும் வியாபாரம் விருவிருப்பாய் நடைபெற்றது. அனேகமாய் எல்லோரும், முதியோரும் சிறுவர்களும் கண்ணாடி ஜாடி வைத்திருந்தார்கள். சிறு வலைக் கரண்டியின் துணை கொண்டு ஒரு ஜாடியிலிருந்து இன்னொன்றுக்கு மீன்கள் மாற்றப்பட்டன, மின்னல் வேகத்தில் பணமும் கைமாறிற்று.

மீன்கள் மட்டுமின்றி மீன்களை வைத்துக் காப்பதற்கு வேண்டிய பல வகையான சாதனங்களும் பொருள்களும்—விதம் விதமான கிளிஞ்சில்களையும் கொண்டு அழகு செய்யப்பட்ட மீன் தொட்டிகளும், வளைந்தும் நெளிந்தும் கொத்துக் கொத்தாய்ச் சேர்ந்தும் துள்ளும் புழுக்களும் காய்ந்த

மீன் உணவு வகைகளும்—கைமாறிச் சென்றன. கடற் பாசியும் நத்தைகளுங்கூட இவர்களிட மிருந்து வாங்க முடிந்தது. இதற்கெனத் தயாரிக்கப் பட்ட மின்சாரக் காற்றுப் பம்புகளுங்கூட விற்கப் பட்டன. ஒருவர் மண் விற்பனை செய்து கொண் டிருந்தார். ஐம்பது கோப்பெக் வாங்கிக் கொண்டு சிறு பையில் அதைக் கொட்டிக் கொடுத்தார். இன்னொருவர் தண்ணீரை விற்றார் (என் கண்ணால் பார்த்தேன்)—அங்கிருந்த சாதாரண தண்ணீர்க் குழாயில் வாளியில் நீரைப் பிடித்து வந்து ''யாருக்கு வேண்டும்—கலப்படமில்லாத சுத்தமான ஏரி நீர்? நேரே ஏரியிலிருந்து கொண்டு வரப்பட்ட நீர்!'' என்று கூவியவாறு சந்தையெங்கும் சுற்றினார். இதைக் காசு கொடுத்து வாங்கியோரும் இருந்தார்கள், நான் பார்த்தேன்.

சுருங்கக் சொல்வதெனில் கோல்யாவும் நானும் மீன்களது உலகம் ஒன்றில் சுற்றிக் கொண்டிருந்தோம்.

தொலைவில் பின்பக்கத்து வேலி ஓரத்தில் ஒரு மூலையில் மட்டும்தான் மீன்கள் அல்லாத பிறவற்றைச் சிலர் விற்றுக் கொண்டிருக்கக் கண்டோம். கானரி, கோல்டுபின்ச் குருவிகளைக் கொண்ட கூண்டுகளும், ஒட்டுப் பலகைப் பெட்டிகளில் புறாக்களும் விற்பனையாயின. பிறகு முயல்களும் வெள்ளெலிகளும் அடைக்கப்பட்ட கூடுகளைப் பார்வையிட்டோம். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இவை யாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருந்தது. இரண்டு மணி நேரம் கோல்யாவும் நானும் சுற்றிப் பார்த்திருப்போம்.

''இனிமேல்தான் இருக்கிறது...'' என்று வியப்பு தொனிக்கும் குரலில் கூறி, கோல்யா என்னை

வெளியே செல்லும் வாயிலை நோக்கி அழைத்துச் சென்றான்.

''என்ன இருக்கிறது?''

''யாவற்றிலும் சிறப்பான காட்சியைப் பார்க்கப் போகிறோம்.''

''என்ன அது?'' என்று திகைப்புற்றவனாய் அவனைக் கேட்டேன். யாவற்றிலும் சிறப்பான காட்சியைக் காட்டுவதாய்ச் சொல்லி யாவற்றிலுமிருந்து வெளியே செல்லும் வாயிலுக்குஅழைத்துச் செல்கிறானே என்று திகைப்புற்றேன். வெளியே சென்றதும் வேலி ஓரமாய் இருவரும் நடந்தோம். பிறகுதான் அவன் எங்கே அழைத்துச் சென்றானென்று எனக்குப் புலபடலாயிற்று... நாய்களின் பிரிவுக்கு அல்லவா செல்கிறோம்?

நாங்கள் போய்ச் சேர்ந்த அந்தச் சந்தினுள் எல்லா சுருதிகளிலும் நாய்களின் குலைப்பும் உறுமலும் முனகலும் காதடைக்க ஒலித்தன. எல்லா வகையான நாய்களும் இருந்தன—முழு அளவுக்கு வளர்ந்த நாய்களும், இப்பொழுதுதான் கண் திறந்து தத்துப்புத்தென நடக்க முயன்ற குட்டிகளும், சதுர வடிவ மூக்குகளையுடைய ஜாதி நாய்களும், முடிகளையுடைய கலப்பினங்களும் இருந்தன. வேட்டை நாய்களும் செவ்விந்தியரது சின்னஞ்சிறு சிஹுவாஹுவா நாய்களும் அங்கிருக்கக் கண்டோம். திடுமென அந்தப் பல வண்ணப் பெருந் திரளிடையே விடப்பட்ட இந்நாய்கள் ரகளை செய்து கொண்டிருந்தன. ஒன்றின் மீது ஒன்று தாவிச் சண்டையிட்டன, ஒன்றையொன்று முகர்ந்து கொண்டு ஓடின, வேலியிலே எதனால் பின்னங் காலை அதிக உயரத்துக்குத் தூக்க முடியுமென போட்டி போட்டுக்கொண்டு முயற்சி செய்தன.

வாங்குவோரும் விற்போரும் இதே போல பரபரப்படைந்து இரைச்சலிட்டனர், சந்தைப் பேரம் பலமாய் நடைபெற்றது. நாய்களின் சாதிச் சான்றிதழ்களைச் சரிபார்க்கச் செல்வோரும், நாய்கள் கடிப்பதைப் பார்த்துக் கவனமாய்ப் பரிசீலப்போரும், அந்தந்த நாயின் நிறை குறைகள் குறித்து விவரமறிந்த முறையில் தலையை ஆட்டியசைத்து விவாதித்தோருமாய் ஏராளமானோர் ஓயாது வருவதும் போவதுமாய் இருந்தார்கள்.

எங்களருகே இரு முறை ஒரு பெண் நடந்து சென்றாள், அவளுடைய நீலக் கோட்டின் உச்சிப் பொத்தான் திறக்கப்பட்டிருந்தது: அந்த இடுக்கு வழியே சிவந்த மூக்குகளையுடைய சிறிய வெள்ளை முகங்கள் எட்டிப் பார்த்தன. வேடிக்கையான இனிய இரட்டைக் குட்டிகளின் முகங்கள் அவை. வெறும் அலங்கார நாய்கள் அல்லது விளையாட்டுப் பொம்மைகளே அன்றி, அவை மெய்யான நாய்களல்ல.

''அதோ பார்!'' என்று கூவி நிக்கலாய் என் விலாவில் குத்தினான்.

அவன் காட்டிய திசையிலே பார்த்தேன். சந்தின் தொலைக் கோடியில் பழுப்பு நிற வயிற்றுடன் மிகப் பெரிய கறுப்பு நாய் ஒன்று உட்கார்ந்திருந்தது. அகன்ற நெஞ்சும் கூர்மையாய் உயர்ந்த காதுகளும் கொண்ட அல்சேஷன் நாய் அது. அதன் கழுத்துப் பட்டியில் வரிசையாய்ப் பல பதக்கங்கள் தொங்கின, பத்துக்கு மேல் இருக்கும், யாவும் தங்கப் பதக்கங்கள். இரைச்சலாயிருந்த அந்த ஞாயிற்றுக் கிழமை காலையில் ஏனைய எல்லா நாய்களையும் போலல்லாது அது குலைக்காமல், அமளி செய்யாமல், தன் எஜமானன் பக்கத்

லிருந்து எதிர்ப் பக்கத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டு மிகவும் அமரிக்கையாய் அமர்ந்திருந் தது. அதன் எஜமானன் இருபது வயதான மொட் டைத் தலை இளைஞன். அவனும் தன் நாயைப் பார்க்காமல் முகத்தை வேறு எங்கோ திருப்பிக் கொண்டு நின்றான். நாயின் கண்களிலும் அதன் எஜமானின் கண்களிலும் துயரச் சாயல் படிந் திருந்தது.

பரிசுகள் பலவும் பெற்ற அந்த ஒப்பற்ற நாய் தன் எஜமானன் தன்னை விற்பதென முடிவு செய்து, விற்பதற்காக இங்கு தன்னை அழைத்து வந்திருக் கிறான் என்று உணர்ந்து கொண்டுவிட்டது. அது விற்கப்பட விரும்பவில்லைதான், யாராலும் தன்னை விற்க முடியுமென, அறியாத அயலான் ஒருவனிடம் தன்னைக் கொடுத்துவிட்டுச் செல்ல முடியுமென அதனால் கற்பனை செய்யவுங்கூட முடியவில்லை தான். ஆனால் தன் எஜமானன் தன்னை விற்க முடிவு செய்துவிட்டான் என்றால், முக்கியமான, தவிர்க்க முடியாத காரணங்கள் இருக்க வேண்டும், நாயா கிய தான் இங்கே விற்பனைச் சந்தையிலும் தன் எஜமானனுக்குப் பணிந்து அவன் சொல்வதைத் தட்டாமல் செய்ய வேண்டும் என்பதையும் தெரிந்து கொண்டுதான் இவ்வளவு அமரிக்கை யாய் உட்கார்ந்திருந்ததோ, என்னவோ.

நாயின் எஜமானனான மொட்டைத் தலை இளை ஞனும்கூட விசுவாசமிக்க தனது அரிய நாயை விற்க வேண்டியிருக்கிறதே என்று அழுது புலம் பும் நிலையிலேதான் இருந்தான். நாயை வைத்துக் கொள்ள இடமில்லாமற் போயிருக்கலாம், அவன் இராணுவ சேவைக்காக அழைக்கப்பட்டிருக்க லாம், அல்லது இந்த நாய் குலைத்துத் தொலைக்

காட்சியின் குரலை மூழ்க்கடிப்பதாய் அண்டை வீட்டுக்காரர்கள் காவல் துறையினரிடம் முறையிட்டிருக்கலாம். இல்லையேல், தாய் நோய் வாய்ப் பட்டுப் படுத்துவிட்ட காலத்தைச் சமாளிப்பதற்காகவோ, இதையொத்த வேறு காரணத்துக்காகவோ அவனுக்குப் பண முடை ஏற்பட்டிருக்கலாம். நாயை விற்பது எவ்வளவு நன்றி கெட்ட செயல், துரோகச் செயலென்றே கூறத்தக்கது என்ற போதிலும், வேறு வழியின்றி இந்த ஆகப் பெரிய தியாகத்தைச் செய்வதென அவன் முடிவெடுத்திருக்கலாம்.

நாயின் காலருடன் இணைக்கப்பட்ட வாரின் நுனியை இளைஞன் பிடித்துக் கொண்டிருந்தான். ஆனால் இந்த வார் தளர்ந்து தொங்கிற்று, இருவரையும் அது இணைத்திருந்ததென்றாலும், இது வெறும் வெளித் தோற்றத்துக்கான ஒன்றே என்பதாய்த் தோன்றியது. நாயும் இளைஞனும் ஒருவரையொருவர் பார்க்க விரும்பாதது போல், துயரம் தோய்ந்த தமது பார்வைகளை எதிர்த் திசைகளிலே திருப்பிக் கொண்டு காத்திருந்தனர்.

வைத்த கண் வாங்காமல் நான் அந்த அரிய நாயைப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

''பிரமாதமாய் இருக்கிறது அல்லவா?'' என்றான் கோல்யா.

''ஆம், அதன் பெயர் என்ன, தெரியவில்லையே'' என்றேன் நான்.

''அதன் விலை எவ்வளவு'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான், கோல்யா.

கணப் பொழுது ஆலோசித்துவிட்டு, கோல்யா அந்த மொட்டைத் தலைப் பையனிடம் சென்று ஏதோ கேட்டான். ஆனால் நாயின் உடைமையாளன்

ஓரக் கண்ணுல் அவனை ஒரு தரம் பார்த்த பின் தூவென்று துப்பிவிட்டுச் சுருக்கமாய் ஏதோ பதிலளித்தான். அவன் அளித்த பதில் மகிழ்ச்சிக் குரியதாய் இல்லை என்பது மட்டும் தெளிவாய்த் தெரிந்ததே ஒழிய, அது என்னவென்பது நான் நின்றிருந்த இடத்திலிருந்து எனக்கு விளங்க வில்லை.

மனம் புழுங்கியவாறு கோல்யா திரும்பி என்னிடம் வந்து என் கையைப் பிடித்து என்னை எல்லா நாய்களிடமிருந்தும் தூர இழுத்துச் சென்றுன்.

அந்த அல்சேஷனின் உடைமையாளன் குறித்துக் கோல்யா என்னிடம் கடிந்து கொண்டான்: ''முட்டாள், அசடன்! என்னிடம் பணமில்லை, அவனுடைய நாயை என்னுல் வாங்க முடியாதென நினைக்கிறுன்!''

''ஏன் முடியாது? நிச்சயம் முடியும்!'' என்று நானும்அவனுடைய செல்வச்செழிப்பில் நம்பிக்கை யில்லாதவனுய் அவனை ஏளனம் செய்தேன்.

கோல்யா உடனே தனது நடையை நிறுத்தி எச்சரிக்கையுடன் சுற்றிலும் பார்த்துக் கொண்டு தனது உள் சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு கட்டு நோட்டை வெளியே எடுத்தான். எனக்கு விழிகள் இரண்டும் துருத்திக் கொண்டு முன்னுல் வந்து விட்டன.

''எங்கிருந்து கிடைத்தது இவ்வளவு பணம்?'' என்று கேட்டேன்.

''என்னுடைய உதவித் தொகையிலிருந்து நான் மிச்சப்படுத்தியிருக்கும் பணம் இது, கடந்த ஓராண்டுக் காலமாய்ச் சேர்த்து வருகிறேன்'' என்று கோல்யா பெருமையாய்ச் சிரித்துக் கொண்டான்.

மேல் வகுப்பு மாணவர்களுக்கு (மிகவும் குறைவான மதிப்பெண் பெறுவோரையும் வகுப்புக்குச் செல்லாமல் மட்டம் போடுவோரையும் தவிர ஏனையோருக்கு) உதவித் தொகை கிடைத்தது மெய்தான். ஆனல் இத்தொகை அதிகமல்ல. இந்தச் சொற்ப தொகையிலிருந்து மிச்சப்படுத்திக் கோல்யா பிர்யுக்கோவால் இவ்வளவு பெருந் தொகையைச் சேர்க்க முடிந்ததை நினைத்த போது எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

''தெரிகிறதா? நினைத்தால் நான் ஒரு நாயை விலைக்கு வாங்கிக் கொள்ள முடியும்! நாம் பார்த்த அந்த நாயானலும் சரி, வேறு எந்த நாயானலும் சரி என்னல் வாங்க முடியும்!'' என்ருன் கோல்யா.

''ஆனல் நாயை நீ எங்கே வைத்துக் கொள்வாய்? விடுதிக்குள் நீ அதைக் கொண்டு வர ஒருநாளும் அனுமதிக்க மாட்டார்களே.''

''நான் ஒன்றும் விடுதிக்கு வரப் போவதில்லை! கிராமக் குடில் எதாவது ஒன்றில் குளிர் காலக் காவலாளியாய் எனக்கும் எனது நாய்க்கும் வேலை தேடிக் கொள்வேன். இல்லையேல், ரயிலில் ஏறி உலகின் தொலை முடுக்குகளுக்குச் செல்வேன். என்னிடம் பணம் இருக்கிறது, இப்பொழுது நான் என்ன வேண்டுமானலும் செய்யலாம்.''

''பள்ளியில் இன்னும் நீ இரண்டு ஆண்டுகள் படித்தாக வேண்டுமே'' என்று நினைவுபடுத்தி அவனை நிதான நிலைக்குத் திரும்பி வரச் செய்ய முயன்றேன்.

''பள்ளியில் படிக்க வேண்டுமா?'' என்று ஒளிவு மறைவற்ற பரிதாப உணர்ச்சியொடு

என்னை நோக்கியவாறு கோல்யா கேட்டான். பிறகு அந்த நாயின் உடைமையாளன் செய்தது போலவே தூவென்று தரையிலே துப்பினுன்.

''எதற்காகப் படிக்க வேண்டும்?'' என்று மேலும் கேட்டான்.

''எதற்காக என்று கேட்கிருய்?''

''ஆம், எதற்காகப் படிப்பதாம், சொல்லு.''

திகைப்பூட்டும் கேள்வியாக அல்லவா இருக்கிறது? எப்படி இதற்குப் பதில் சொல்வது? எதற்காகப் பள்ளியில் படிக்க வேண்டும் என்று கேட்கிருனே.... எல்லோருக்கும் தெரிந்தது தானே?... எல்லோரும் பள்ளியில்தானே படிக்கிருர்கள்?

அப்பொழுது நாங்கள் ஒரு சதுக்கத்தின் வழியே நடந்து கொண்டிருந்தோம். அங்கே சில பெஞ்சுகள் இருந்தன. அவை சற்று நனைந்து ஈரமாய் இருந்தபோதிலும், ''இங்கே உட்கார்ந்து பேசுவோம்'' என்று கோல்யா சொன்னுன்.

இருவரும் உட்கார்ந்ததும், ''ழேன்யா, சொல்கிறேன் கேள்...'' என்று ஆரம்பித்தான். ''தவருன முடிவுக்கு நீ வரக் கூடாது. ஆத்திரம் கொண்டு ஏட்டிக்குப் போட்டியாய் ஏதோ செய்கிறேனென நீ நினைப்பதாய்த் தெரிகிறது. ஆனுல் உண்மை இதற்கு நேர் மாருனது. சிறுவர்களாகிய நாம் ஏமாற்றப்படுகிருேம், அதற்கு நான் உடன்பட விரும்பவில்லை—அவ்வளவுதான்.''

''நாம் ஏமாற்றப்படுகிருேமா? நம்மை ஏமாற்றுவது யார்?

''அவர்கள்தான்.''

''நீ சொல்வது புரியவில்லை எனக்கு.''

''ழேன்யா, கொஞ்சம் விளக்கமாய்ச் சொன்

ஞலன்றி உனக்கு இது புரியாது.'' இதைப் பற்றி பேசவே தனக்குத் துன்பமாகவும் சங்கடமாகவும் இருப்பது போல நிக்கலாய் இவானவிச் முகத்தைச் சுளித்துக் கொண்டான். ''இது எளிய விவகாரமல்ல, கடுமையானது'' என்ருன்.

நான் தலையைக் குனிந்து கொண்டேன், மேற் கொண்டு அவன் சொல்லப் போவதைக் கவன மாய்க் கேட்பதற்கு என்னைத் தயார் செய்து கொண்டேன். கடுமையான பெரிய விவகார மெனில் விளக்கிச் சொல்லட்டும், கவனமாய்க் கேட் போமெனக் காத்திருந்தேன். ஆரம்ப வகுப்பு களைச் சேர்ந்த எங்களுடன் மேல் வகுப்பு மாண வர்கள் துவக்க விரும்பிய பல வித உரையாடல் களையும் இதற்குமுன் பல தரம் நான் கவனமாய்க் கேட்க வேண்டியிருந்தது. விவரம் தெரியாத பொடிப் பசங்கள் என்பதாய் எங்களை அவர்கள் கேலி செய்தவாறு பலவும் கூறுவார்கள்.... நாங் கள் யாரையும் நேருக்கு நேர் பார்க்கக் கூச்சப் படும்படியான பலவற்றையும் சொல்வார்கள். இவை குறித்து சிறு பையன்களான எங்களுக்கு வேறு யாரும் ஒன்றும் சொல்வதில்லை, இந்தக் கதைகளுக்குப் பதில் வேறு விளக்கம் எதுவும் கூறுவ தில்லை. ஆகவே நாங்களாகவே தெரிந்து கொள்ள வும், ஏனைய பையன்களிடமிருந்து அற்ப சொற்ப ஞானம் பெறவும் முயலுவதைத் தவிர எங்க ளுக்கு வேறு வழி ஏதும் இருக்காது.

கோல்யா இப்பொழுது எனக்குச் சில பயங்கர உண்மைகளைச் சொல்லப் போகிருன் என்பது தெரிந்தது. ஆதலால்தான் நான் தலையைக் கவிழ்த்து முகத்தைக் கைகளுக்குள் புதைத்துக் கொண்டேன், வெட்கத்தால் என் முகம் சிவந்து

போகுமேயானுல் அது அவன் கண்ணில் படக் கூடாதென விரும்பினேன்.

''நான் பாடக் கூடாதென்று சொல்லியிருக் கிருர்களே, ஏன் தெரியுமா? பூப்புப் பருவம்தான் காரணம். பூப்புப் பருவம் என்ருல் என்ன தெரியுமா? உனக்குத் தெரியாது... பூப்புப் பருவம் என்ருல் நமக்கு வயது வருவதைக் குறிக்கும் காளைப் பருவம். நீ இன்னும் அந்த நிலையை நெருங்கியாகவில்லை, ஆனுல் நான் மாறி வருகிறேன்.''

அதனுல் என்னுவாம்....

''பூப்புப் பருவம் வரும்போது நாம் பாடக் கூடாது, ஏனெனில் நமது குரல் முறிந்து நிலை பெறும் பருவம் அது. குரல் முறிந்து நிலை பெற நெடு நாளாகும், ஒரு முழு ஆண்டு வேண்டியிருக்கும். ஒரு வித நோய் என்று சொல்லலாம், ஆனுல் கிருமிகளால் உண்டாவதல்ல. இல்லை... இயற்கை விதி அது. இப்பொழுது உன் குரல் உச்சக் குரல், நீ பூப்பு எய்தியபின் அது கட்டைக் குரலாகிவிடும். இப்பொழுது மேல் மையக் குரலுடையவன் பிற்பாடு கீழ் மையக் குரலுடையவனுகிவிடுவான். புரிகிறதா?''

''சரி, அதனுல் என்னவாம்?'' என்று ஆர்வம் பிறந்தவனுய்க் கன்னங்களிலிருந்து கைகளை அகற்றியவாறு கேட்டேன். கலவரம் நீங்கி நான் நிம்மதி பெற முடிந்தது, பயங்கரமான எதையும் கோல்யா சொல்லப் போவதில்லை என்பதை உணர்ந்து கொண்டுவிட்டேன். ''அதனுல் என்னவாம்?'' என்று திரும்பவும் கேட்டேன். ''உனக்கும் எனக்கும் இப்பொழுது உச்சக் குரல், பிற்பாடு இது கட்டைக் குரலாகப் போகிறது. அது நல்லது தானே....''

எழுந்து நின்று வயிற்றை வெளியே தள்ளிக் கொண்டு அடித் தொண்டையால் பாட முற் பட்டேன்:

> ''பயங்கரச் சாவை என் போர்வாள்
> விரியத் தூவிச் செல்லும்...''

ஆனால் கோல்யா என்னைப் பார்த்துப் பரிதாபப் பட்டான் என்பது அவனுடைய பார்வையில் தெளிவாய்த் தெரிந்தது.

''இல்லை, அதெல்லாம் நடக்காது'' என்று கடுப் பான குரலில் சொன்னான் அவன்.

''என்ன சொல்கிறாய் நீ?''

''நமக்கு எந்த விதமான குரலும் இருக்கப் போவதில்லை என்கிறேன்.''

''என்ன? குரலே இருக்காதா?''

''குரல் இருக்கும், நம்மால் பேச முடியும், அதை நான் மறுக்கவில்லை. ஆனால் இம்-பே, இம்-பே என்று கத்தும் ஆட்டுக் குரலாகவே இருக்கும்.''

''பாடுவதற்குக் குரல் இருக்காதா?''

''ஆம், இசைக் குரல் நமக்கு இருக்காது.''

''ஏன் அப்படி?''

''இருக்காது, அவ்வளவுதான்! இயற்கை விதி அது!'' என்றான் நிக்கலாய் இவானவிச். ''எடுத்துக் காட்டாய் எனக்கு, இனி யாரும் கேட்கக் கூடிய குரல் இருக்கப் போவதில்லை. இதை என்னால் உணர முடிகிறது. ழேன்யா, உனக்கும் இம்மாதிரி தான் ஏற்படப் போகிறது.... நான் இப்படிச் சொல்வது குறித்துக் கோபப்படாதே, எதையும் மறைக்காமல் உன் நண்பன் என்ற முறையில் சொல்கிறேன். இப்படி நடைபெறும் முன்பே இது உனக்குத் தெரியும் பொருட்டுச் சொல்கிறேன்.''

''நீ சொல்வது மெய்யாகவே இருக்கலாம்'' என்று நான் ஆழ்ந்த சிந்தனை செய்தவாறு அவனிடம் சொன்னேன். ''ஆனால் பாடகர்கள் எங்கிருந்து தோன்றுகிறார்கள்? தேர்ந்த பாடகர்கள், ஒபேரா நாடகத்திலோ, வானொலியிலோ பாடுகிறார்களே, அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்?''

''நீ வினோதமானவன்தான்! அவர்கள் தொடக்கத்திலிருந்தே இப்படிப் பாடுகிறவர்களல்ல. பிற்பாடுதான், வயது வந்தவர்களாகிய பிறகுதான் அவர்கள் இப்படிப் பாடக் கூடிய குரலுடையவர்கள் என்பது தெரியலாயிற்று. பிற்பாடு வந்த குரல் வாழ்நாள் முழுதும் இவர்களிடமே இருக்கிறது. ஆனால், இப்படிப்பட்டவர்கள், அருமையான குரலுடைய இவர்கள், எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சற்று சிந்தித்துப் பார்! ஆயிரத்தில் ஒருவர் இருக்கலாம், அதுகூட எப்பொழுதும் இல்லை. நம்முடைய பள்ளியில் மொத்தம் இருநூறு பையன்கள், இவர்கள் ஒவ்வொருவரும் தமது குரலை இழக்காமலே இருப்பார்கள் என்றா நினைக்கிறாய்? இல்லை, எல்லோரும் இழக்கவே போகிறார்கள். ழேன்யா, இது இயற்கை விதி. நமது மேல் வகுப்புகளில் இப்பொழுது பாடும் குரலுடையவன் யாருமே இல்லை. ஏனையோரைவிட என்னால் அதிக காலம் பாட முடிந்தது, காரணம் என்னவெனில் என் குரல் காலம் தாழ்த்தி முறிந்து மாறத் தொடங்கியது. நானும் இப்பொழுது ஏனையோரைப் போல கரமுரவெனக் கரையத் தொடங்கிவிட்டேன்.''

''அப்படியானால் யாருக்குமே பிற்பாடு சரியான குரல் இருக்கப் போவதில்லையா?'' என்று நம்ப

முடியாதவனுய்த் தலையை வேகமாய் அசைத்த படி கேட்டேன்.

''அனேகமாய் யாருக்கும் இருக்கப் போவதில்லை'' என்முன் கோல்யா. ''எனக்குத் தெரிந்த வரை ஒரேயொரு பையன்தான் பிற்பாடும் குரலை இழக்காமல் பாடகனுய் வளர்ந்தான். அவன் நமது பள்ளியை அல்ல, லெனின்கிராத் பள்ளியைச் சேர்ந்தவன்.... ஆயிரத்தில் ஒருவன் அவன்.''

ஆயிரத்தில் ஒருவன்!

என் நண்பன் கோல்யா பிர்யுக்கோவின் நிலையை இப்பொழுது என்னுல் புரிந்துகொள்ள முடிந்தது. அவன் நிலையை நினைத்து நான் வருந்தினேன். அவனுக்கு இது ஒரு பெரிய இடியாகவே இருந்திருக்க வேண்டும். ஏனெனில் காலமெலாம் அவன் பாட்டிசைத்துக் கொண்டிருந்தவன், கச்சேரிகளில் தனிப் பாடகனுய்ப் பாடி வந்தவன், அவனுடைய பெயர் நகரெங்கும் கொட்டை எழுத்துகளில் சுவரொட்டிகளில் காணப்பட்டு வந்தது. பிறகு திடுதிப்பென இப்படி ஓர் இடி! யாரையும் இது கதி கலங்கவே செய்யும்.

அவனுக்குப் பதிலாய் இப்பொழுது நான் தனிப் பாடகனுய்ப் பாடியதையும், அவனுக்குப் பதிலாய் நான் புகழும் மலர் கொத்துகளும் பெற்றதையும் கண்டு கோல்யா உள்ளுக்குள் புகைந்து கொண்டிருக்க வேண்டுமென நினைத்தேன்.

அவனிடத்தில் நான் இருந்தால் நானும் மனம் பொருமல் கொதிப்புற்றுதான் இருப்பேன். எல்லாப் பையன்களாலும் பாட்டுக்குரிய தமது நல்ல குரலை வயது வந்தவர்களாகிய பிற்பாடும் இழக்காமல் இருத்திக் கொள்ள முடியாதென்பது முற்றிலும் உண்மையே. இது எனக்குத் தெரியா

தெனக் கோல்யாவிடம் நான் சொன்னது வெறும் பாசாங்கே அன்றி உண்மையல்ல. நெடுங் காலத்துக்கு முன்பே இது பற்றி கேள்விப்பட் டிருந்தேன். நான் இரண்டாவது வகுப்பில் இருந்த போதே பூப்படைவது என்ருல் என்னவென ஒரு பையன் என்னிடம் சொல்லியிருந்தான்.

ஆயிரத்தில் ஒருவஞ? என்னைப் பிரமிக்கச் செய்ய வேண்டும், என்ன ஆகுமோ என்ற அச் சத்தை உண்டாக்க வேண்டும் என்றே கோல்யா கொஞ்சம் இப்படி மிகைப்படுத்திச் சொன்ஞன். இருக்கட்டுமே, ஆயிரத்தில் ஒருவன்தான் என் பதாகவே இருக்கட்டுமே.... எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை, அந்த ஒருவன் யாராய் இருப் பான் என்று....

''அதோ பார்!'' என்று திடுமெனக் கோல்யா கூறிஞன்.

அந்த மொட்டைத் தலைப் பையன் அடிமேல் அடி வைத்து சந்து வழியே போய்க் கொண்டிருந் தான். அந்தப் பிரம்மாண்டமான கறுப்பு, பழுப்பு நிற நாய் அவன் பக்கத்தில் சென்றது. அதன் காது கள் சிலிர்த்துக் குத்திட்டு நின்றன, அதன் பதக்கங் கள் கிணுகிணுத்தன. சந்தையிலிருந்து பையனும் நாயுமாய்ப் போய்க் கொண்டிருந்தார்கள்.

பையனுல் தனது நாயை விற்க முடியவில்லை: மித மிஞ்சிய விலை கேட்டான் போலும். சரி, அவ் வளவு கடுமையான பணமுடை ஏற்பட்டுதானே நாயை விற்க வந்தான், இப்பொழுது பணம் இல் லாமலே திரும்புகிருனே, என்ன செய்யப் போகிருன்? அல்லது நாயை அழைத்துச் செல்ல முடியாத இடத்துக்குப் போக நேர்ந்ததால் அதை விற்க வந்தானெனில், இனி என்ன செய்வான்?

அல்லது அண்டை வீட்டார் காவல் துறையின ரிடம் புகார் செய்ததால் வந்தவனுய் இருந்தால், எப்படி சமாளிக்கப் போகிருன்? நிலைமை சங்கட மானதாயிற்றே....

ஆயினும் சந்து வழியே நடந்த பையன் அப்படி ஒன்றும் மனம் உடைந்து போனவனுய் எனக்குத் தெரியவில்லை. அவன் முகத்தில் கவலையின் சாயல் இன்னும் காணப்பட்டாலுங்கூட, அவன் கண்களில் முன்பு குடி கொண்டிருந்த அடங்காத் துயரம் அகன்றுவிட்டது. முன்பு வேலிக்கு அருகே நின்றிருந்த போது அவன் தோன்றியது போல் இப்பொழுது அவ்வளவு சோக உருவினனுய்த் தோன்றவில்லை — நிம்மதியடைந்து அன்பு பளிச் சிடுகிறவனுய்த் தோன்றினுன்.

எஜமானனுடன் கூட அமரிக்கையாகவும் பணி வோடும் சென்று கொண்டிருந்த அந்தப் பெரிய நாய் காண்போர் காரணம் புலப்படாது வியக்கு மாறு திடுமெனக் கீச்சுக் குரலெழுப்பிப் பின்னங் கால்களில் எழுந்து நின்று முன்னங் கால்களை அந்தப் பையனின் தோளில் வைத்து அவனுடைய கன்னத்தைத் தனது நீளமான செந்நாக்கினுல் நக்கிற்று.

''அருமையான நாய்'' என்று கோல்யா பாராட்டினுன்.

3

ஒரு நாள் வரலாற்றுப் பாடம் நடந்து கொண் டிருக்கையில் எந்த எச்சரிக்கையுமின்றி நான் பள்ளி முதல்வரின் அறைக்கு அழைக்கப்பட்டேன்.

ஏன் இந்த அழைப்பு என்று புரியாமல் முதல் வரது அறையின் உயரமான கதவுக்கு முன்னுல்

சென்று தட்டிவிட்டு உள்ளே நுழைந்தேன். அறைக்குள் அடியெடுத்து வைத்தவன் அசையாமல் நின்றுவிட்டேன்.

ஏனெனில் நான் நன்கு அறிந்த அந்த அறையினுள் சென்றதும், முதல்வர் அவரது மேஜைக்குப் பின்னல் உட்கார்ந்திருக்கக் கண்டேன், பிறகு உலகில் நடைபெறும் மிகச் சர்வசாதாரண நிகழ்ச்சி போல் தோன்றுமாறு அவருக்கு அருகே அமர்ந்திருந்தார் பித்ஹோவின்! எவரும் திகைத்துப் போய்க் தலை கிறுகிறுக்கும்படியான ஒரு காட்சி!

நான் உள்ளே நுழைந்ததைக் கவனியாது பரபரப்பான குரலில் பித்ஹோவின் எங்கள் முதல்வரிடம் தொடர்ந்து கூறிச் சென்றார்:

''...தண்ட விதிப் பந்தடியை அவனிடம் விட்டிருக்கக் கூடாது, அவன் உணர்ச்சி வயப்பட்டிருந்தான். எப்படியும் வயதில் மிகவும் இளையவன். தண்ட விதிப் பந்தடிகளை எபபொழுதும் முதிய ஆட்டக்காரர்களிடம் விடுவதுதான் நல்லது. அவன் உள்ளே செலுத்தியிருந்தானுயின் அது அவனுடைய பத்தொன்பதாவது கோலாகி அவனை இந்தப் பருவத்தின் உச்ச எண்ணிக்கையாளனுய்த் திகழச் செய்திருக்கும். அவனை உதைக்கச் சொல்லி ஆட்டக் குழு தனது பெருந் தன்மையை வெளிப்படுத்திற்று. நிச்சயமான கோலாயிருந்திருக்க வேண்டும் அது! இரு தரப்பும் சுன்னத்திலிருந்த அத்தருணம் ஆட்ட முடிவையே தீர்மானிக்கும் முக்கிய தருணம்!... இந்நிலையில் அவன் உணர்ச்சி வயப்பட்டது வியப்புக்குரியதல்ல, பரபரப்படைந்து பந்தைத் தயாராய்க் கோலில் காத்திருந்த யாஷினுடைய கைகளுக்குள் நேரே உதைத்துவிட்டான்...''

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் கவனமாய்க் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார், ஆனல் அவருடைய மனதில் ஒரு பாதிதான் இந்தக் கதையில் லயித்திருந்தது. எங்களுடைய முதல்வர் கால் பந்தாட்டத்தில் அதிகக் கருத்துடையவரல்ல என்பது எனக்குத் தெரியும். யார் இந்த யாஷின் என்று கூட அவருக்குத் தெரிந்திருந்ததோ, என்னமோ? இரண்டாவதாக பித்ஹோவினைப் போலல்லாது அவர், கதவருகே நான் நிற்பதைக் கவனித்திருந்தார்.

''வா உள்ளே'' என்று அழைத்து அங்கிருந்தவருக்கு என்னை அறிமுகம் செய்தார். ''இவன் தான் ழேன்யா புரோஹரோவ். ழேன்யா, உன்னிடம் எனக்கு நம்பிக்கை உண்டு....''

நிச்சயம் அவர் என்னை நம்பலாம், அவருடைய இசைப் பள்ளியின் மாணவஞன நான் ஒன்றும் தெரியாத அசடாய் விழித்துக் கொண்டு நின்று அவருக்கு இழுக்கு உண்டாக்கிவிட மாட்டேன். எனது இசையரசர்களை, எப்படியும் மாமேதைகளானேரையேனும் அவர்களது உருவப் படங்களின் மூலம் நான் அடையாளம் தெரிந்து கொள்ளக் கூடியவன்தான் என்பதில் அவருக்கு எந்தச் சந்தேகமும் வேண்டியதில்லை.

அங்கே நாற்காலியில் மெய்யான மாமேதை அல்லவா உயிர் பெற்று எழுந்து வந்து அமர்ந்திருந்தார்! மெலிந்து வெளுப்பாயிருந்த அந்த முகத்தையும் மெல்லிய உதடுகளையும் நெற்றியின் உச்சியில் சுருண்டு தவழ்ந்த முடிகளையும் உடனே நான் அடையாளம் கண்டு கொண்டுவிட்டேன்.

அந்த இசைஞர் என் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு ''உன்னைச் சந்திக்க நேர்ந்தது குறித்து

மனம் மகிழ்கிறேன். கச்சேரியில் நீ பாடியதை நான் கேட்டேன். உன்னுடைய அந்தக் 'காவியப்' பாட்டு எனக்குப் பிடிந்திருந்தது—மோசமாய் இல்லே.''

வெட்கத்துடன் நான் என் பார்வையைக் கவிழ்த்துக் கொண்டேன். இந்த மாமேதை எங்கே, நான் எங்கே—இவருடன் நான் வாதாட முடியுமா? மோசமாய் இல்லையாமே, நன்ருய் இருக்கிறது இவர் சொல்வது!

''ழேன்யா'' என்று என்னே அழைத்தவாறு அவர் தமது கைப்பையின் ஸிப்பை இழுத்துத் திறந்தார். ''நான் ஒரு புதிய பாட்டு எழுதியிருக் கிறேன், 'வழிக் குறியொலி' என்று பெயர். 'வழிக் குறியொலி' என்ருல் என்ன, தெரியுமா?''

''தெரியுமே...'' என்று சொல்லி எனது கலங் கிய சிந்தனேயை ஒருசேரத் திரட்ட முயன்றேன். ''அது என்னவென்ருல்....''

''ஆம், அதுவேதான்'' என்று அவர் தொடர்ந்து பேசினுர். ''அது வானெலிக் குறியறிவிப்பு. ஓயாமல் ஒரே மாதிரி ஒலிக்கும் குறியொலி. இரவில் வானுச்சியிலே பறக்கும் விமானம் அதன் பாதையிலிருந்து விலகிவிடாமல் இருப்பதற்காகத் தரையிலிருந்து மாருது ஒலிக்கும் குறியொலியை அது கேட்க வேண்டியிருக்கிறது. புரிகிறதா?''

''புரிகிறது.''

''ஆனுல் இங்கே பண்ணின் நுட்பத் திறனே அன்னியில், உருவகமும் முக்கியமானது. சோவியத் பாட்டு ஒன்று ஒரு வகை ''வழிக் குறியொலி யாய்'' அமையுமாயின் அது சிறப்பாயிருக்கும். இந்தப் பாட்டு பையனின் குரலில் பாடப்பட

வேண்டும். நீ இதை பாட வேண்டுமென ஆசைப் படுகிறேன்.''

இசைக் குறியேட்டுப் பிரதி ஒன்றை என்னிடம் தந்தார்.

''பாடிப் பார்ப்போமா?''

அவர் அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தார், ஆனால் முதல்வருடைய அறையில் பியானோ எதுவும் இல்லை, பழங் காலத்து ஆர்மோனியம்தான் இருந்தது.

''கீழே இசை அறைக்குச் செல்வோம்'' என்று விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் ஆலோசனை கூறினார்.

''வேண்டாம், இதுவே போதும்.'' இசைஞர் வேகமாய் ஹார்மோனியத்திடம் சென்று அதன் மூடியை உயர்த்தினார். '' 'ஹாபெர்க்' வாத்தியமா? நன்றாய் இருக்கிறதே....''

குனிந்து அதைப் பரிசீலித்தார். பிறகு அதன் எதிரே அமர்ந்து மிக்க மகிழ்ச்சியடைந்தவராய்த் துருத்தியின் மிதிகள் மீது பாதங்களை வைத்துக் கொண்டார். இதன்பின் என் பக்கம் திரும்பி ''சரி, தொடங்குவோம். இசைக் குறிகளைப் பார்த்துப் பாடுவாய் அல்லவா?'' என்று கேட்டார்.

''பாடுவேன்.'' பண்களையும் அவற்றுக்கடியில் அசைகளாய்ப் பிரிக்கப்பட்ட சொற்களையும் நோக்கியவாறு நான் தலையை ஆட்டினேன்.

''வேகமாய் வெள்ளோட்டம் நடத்திப் பார்ப்போம்'' என்றார்.

பழைய ஹார்மோனியத்தின் துருத்தி காற்றை ஊதி உஸ்ஸிட முற்பட்டது....

* * *

சுழல் வட்டு தனது பழுப்பு நிற நாடாச் சுருளைத் தன் பக்கத்திலுள்ள மற்றொரு வட்டினிடம் ஒப்படைக்க விரும்பாதது போல மெள்ளச் சுழன்றது.

ஒலிபெருக்கிகள் பரிசுத்த ஒலியை வாரி வழங்கின:

மண்ணொலியின் குரல்
விண்ணில் ஒலிக்குது,
அன்தே, அன்தே
என்றே அழைக்குது....

இவ்வாறுதான் என்னுடைய குரலை நான் முதன் முதல் கேட்கலானேன். அதை எளிதில் நான் அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. எவ்வளவுதான் நுண்ணுணர்வு படைத்தஒலிவாங்கி களாய் இருப்பினும், சிறிதும் குறைபாடின்றி ஒலிப்பதிவு செய்யப்பட்ட போதிலும், பாடுகிற வருடைய குரலின் இயற்கையான நாதம் இம்மி யளவேனும் உருத்திரிக்கப்படவே செய்யுமெனத் தெரிகிறது. ஆயினும் நான் ஓயாமல் கேட்டிருந்த அந்தக் குரல் எனக்குப் பிடித்திருந்தது, அந்தப் பாட்டும் பிடித்திருந்தது. இசைவு குலையாது ஆற்றொழுக்காய்ச் சென்ற வாத்தியப் பின்னிசை எனக்கு மிகவும் பிடித்திருந்தது, இப்படிப்பட்ட பின்னிசையோடு இதற்கு முன்பு நான் பாடிய தில்லை. இப்பொழுது நான் இருக்கக் கண்ட அந்தச் சூழலில் என் வாழ்வில் இதற்கு முன்பு நான் இருந்ததில்லை.

இதெல்லாம் எப்படி நேர்ந்தது என்று சொல் கிறேன். இசைஞர் எங்கள் பள்ளிக்கு வந்து சென்ற தற்கு இரண்டு நாட்களுக்குப் பிற்பாடு ஒலிப்

பதிவு மையத்துக்கு வருமாறு எனக்கு அழைப்பு வந்தது. மீண்டும் எனக்கு அன்றைய பாடங்களிலிருந்து விலக்கு அளித்தார்கள், (என் வாழ்க்கை எப்படிப்பட்டதாகி வந்தது பாருங்கள்!), இந்த மையத்துக்கு எப்படிப் போக வேண்டுமென்று விவரமாய் விளக்கிச் சொல்லி என்னை அனுப்பி வைத்தார்கள்.

அங்கே போவது எளிதாகவே இருந்தது. பள்ளிக்கூட மனையிலிருந்து வெளியே வந்து தெரு மூலைக்கு நடந்து சதோவயா வளையத்தைக் கடந்து இடப் பக்கமாய்ச் சென்றேன். பிறகு வலப் பக்கம் திரும்பி நடந்ததும் ஒலிப்பதிவு மையம் இருந்த கச்சாலவ் தெருவை அடைந்துவிட்டேன். தூரம் ஒன்றும் அதிகமில்லை. மொத்தத்தில் எங்கள் இசைப் பள்ளி மிகவும் வசதியான இடத்தில் இருந்தது. எங்கும் நாங்கள் எளிதில் போய்ச் சேர முடிந்தது, தத்தித் தாவி ஒரு குதி குதித்தால் போதும் நீங்கள் சேர வேண்டிய இடத்தை அடைந்து விடலாம்.

குறித்த நேரத்தில் நான் போய்ச் சேர்ந்தேன். நுழைவுக் கூடத்தில் ஒருவர் அன்று அங்கு வர விருந்தோரின் பெயர்கள் அடங்கிய நீண்ட பட்டியலில் என் பெயர் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு எனக்கு நுழைவுச் சீட்டு எழுதித் தந்தார்.

காண்போர் கலங்கும் படியான தோற்றம் கொண்ட காவல் துறை ஆள் ஒருவர் வாயிலில் நின்றிருந்தார். என் கையிலிருந்த நுழைவுச் சீட்டை வாங்கிப் படித்துவிட்டு அதை அப்படியும் இப்படியுமாய்த் திருப்பிப் பார்த்தார், ஐயுறவோடு என்னை மேலும் கீழுமாய் உற்று நோக்கினார், ஆனால் ஆட்சேபிக்கும் அளவுக்குச் செல்ல

வில்லை—யாவும் சீட்டில் ஒழுங்காகவே குறிக்கப் பட்டு முத்திரையும் இடப்பட்டிருந்தது. ஆகவே என்னை உள்ளே போக விட்டார், அதோடு எனக்கு ஒரு சலாமுங்கூட போட்டார். மெய்யாகவே குறிப்பிடத்தக்கது அல்லவா இது!

மிகப் பெரியதோர் அறைக்குள் போய்ச் சேர்ந் தேன். அறையே தாங்காமல் வெடித்துவிடுமோ என்று நினைக்கும்படி அவ்வளவு ஏராளமானோர் அங்கே காணப்பட்டனர்.

பணியாளர்கள் காகிதக் குறிப்புகளைப் படித்த வாறு அங்குமிங்கும் ஓட்டமும் நடையுமாய்ப் போய்க் கொண்டிருந்தார்கள். வயலின்காரர் களும் குழல் வாசிப்போரும் மிடுக்கான தமது வாத்தியப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு சென் றூர்கள். கான்டிராபாஸ் வாத்தியக்காரர் திமிங் கிலம் போன்ற தமது இசைக் கருவியை முதுகில் சுமந்து கொண்டு தரையில் கவிழ்ந்து குனிந்த வாறு நடந்தார். ஒரே மாதிரியான நீண்ட வெண் ணிற ஆடைகள் அணிந்த பெண்களது குழு வந்தது: ஏதேனும் ஒரு பாட்டுக் குழுவாகவே இருந் திருக்கும். வானொலியில் இப்பெண்கள் பாடும் பாட்டைக் கேட்க முடியுமே ஒழிய இவர்களைப் பார்க்க முடியாதே, இந்நிலையில் ஏன் இவர்கள் ஒரு மாதிரியான ஆடைகளில் இங்கு வர வேண்டு மென்று நான் வியந்து கொண்டேன். ஆனுல் ஒரே மாதிரியான சீருடையானது கட்டுப்பாட்டு உணர்ச்சி தரக் கூடியது, இது எனது சொந்த அனுப வத்தின் வாயிலாய் நான் அறிந்திருந்த ஒன்று.

பன்னிரண்டு மணிக்கு நான் பதிவுக் கூடத்துக்கு வர வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். இன் னும் ஐந்து நிமிடம் இருந்தது. பதிவுக் கூடமும்

பரப்பில் மிகப் பெரியது. ஒரு முழு இசைக்கோவை வாசிப்பதற்கு வேண்டிய எல்லா இசைக் கருவிகளையும் கொண்ட பெரிய வாத்தியக் குழு அங்கே இருந்தது. துளைக் கருவி வெளியிட்ட பலத்த 'த' சுரத்துக்கு இசைவாய் எல்லோரும் தத்தமது வாத்தியங்களுக்குச் சுருதி சேர்ப்பதில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தனர்.

இயக்குநர் ஏற்கனவே அவருடைய பீடத்தில் நின்றிருந்தார். அன்பு தவழ என்னை வரவேற்று என் தலையில் தட்டிக் கொடுத்து என் பெயர் என்னவென விசாரித்தார். நானும் அவரிடம் இதே கேள்வியைக் கேட்டு அவர் பெயரைத் தெரிந்து கொள்ள எனக்கு வெட்கமாயிருந்தது. வாத்தியக் குழுவுக்கு நேர் எதிரே சுவரில் அகலமான இரட்டைக் கண்ணாடி சன்னல் இருந்தது, அதற்குப் பின்னால் வழுக்கைத் தலையில் செவிப் பொறிகளை மாட்டிக் கொண்டு ஒருவர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

''தொடங்குவோம், ஒத்திகை நடத்திப் பார்ப்போம்'' என்று முழங்கிற்று, அகன்ற சன்னலுக்கு மேலிருந்த ஒலிபெருக்கியில் ஒரு குரல். வழுக்கைத் தலை ஆள்தான் அந்தக் கண்ணாடி அறையிலிருந்து இப்படி உத்தரவிட்டார் என்பதை உணர்ந்து கொண்டேன். அவர்தான் ஒலிப்பதிவுப் பொறியாளர்.

அதன் பிறகு நடைபெற்றவற்றை நான் விவரமாய்ச் சொல்ல வேண்டியதில்லை, தடங்கலின்றி நான் நன்றாகவே பாடினேன் என்று சுருக்கமாய்ச் சொல்லி முடிக்கின்றேன்.

நான் பாடிப் பதிவு செய்யப்பட்ட பாட்டு இப்பொழுது திருப்பியோட்டிக் காட்டப்பட்டது. சுழல் வட்டு மெள்ளச் சுழன்றது:

மண்ணெலியின் குரல்
விண்ணில் ஒலிக்குது,
அன்தே, அன்தே
என்றே அழைக்குது...

இயக்குநர், வழுக்கைத் தலை ஒலிப்பதிவுப் பொறியாளர், நான் ஆகிய எல்லோருமாய்ச் சேர்ந்து திருப்பியோட்டப்பட்ட நாடாவிலிருந்து வெளிவந்த பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தோம்.

பாட்டு முடிவடைந்தது, இயக்குநர் உடனே ஒலிப்பதிவுப் பொறியாளர் பக்கம் திரும்பி அவரைக் கேட்டார்:

''எப்படி இருக்கிறது? என்ன நினைக்கிறீர்கள்?''

''யாவும் நன்றாகவே அமைந்துவிட்டன'' என்றார் அவர்.

''ஆம், மோசமாய் இல்லை, நன்றாகவேதான் இருக்கிறது'' என்று இயக்குநரும் ஒத்துக் கொண்டார்.

பிறகு என்னைப் பார்த்து, ''ழேன்யா, நீ என்ன நினைக்கிறாய்? உனக்குப் பிடித்திருக்கிறதா?''

எனக்குச் சங்கடமாகிவிட்டது, என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தேன். பாடியது வேறு யாருமல்ல, நானேதான், என்னையே எப்படி நான் புகழ்ந்து கொள்வதென்று தயங்கினேன். மெய்யாகவே பிரமாதமாய் இருந்ததாய் நான் நினைத்தேன், ஆகவே தர்ம சங்கடமாய் இருந்தது எனக்கு. அலட்சியமான முக பாவனையைத் தருவித்துக் கொள்ள முயன்றேன், ஆனால் என் உதடுகளில் என்னையும் மீறி இன்பப் புன்னகை மலர ''ஆம், நன்றாயிருக்கிறது!'' என்று கூறி முடித்தேன்.

நல்ல வேளையாய் அந்த நேரத்தில் ஒலிப்பதிவு

அறையின் கதவு திறக்கப்பட்டு, ஓர் ஆணும் ஒரு பெண்ணும் உள்ளே வந்தனர்.

''வணக்கம்'' என்ருர் அந்த ஆடவர். அவரை நான் சரியாய்ப் பார்க்கக்கூட இல்லை, அதற்குள் அவர் குரலை அடையாளம் கண்டு கொண்டு துள்ளி யெழுந்துவிட்டேன்.

லேமிஷெவின் குரல் அது. புகழ் பெற்ற உச்ச ஸ்தாயிப் பாடகரான லேமிஷெவ் என் எதிரே இருக்கக் கண்டேன்! உடனே எனக்கு அடை யாளம் தெரிந்துவிட்டது. முதலில் அவருடைய குரலைக் கொண்டு, அரிய, யாருக்கும் வராத அந்த ஒப்பற்ற குரலைக் கொண்டு, ''வணக்கம்'' என்பதை யன்றி அது வேறு ஒன்றுமே சொல்லாவிட்டாலும் உடனே அதே கணத்தில் நீங்கள் தவருமல் யாருடைய குரலென தெரிந்து கொள்ளத்தக்க அந்தக் குரலைக் கொண்டு அடையாளம் கண்டு கொண்டேன். பிறகு அவருடைய முகத்தைக் கொண்டு தெரிந்து கொண்டேன். கச்சேரியிலோ, ஒபெரா நாடகத்திலோ லேமிஷெவைக் கண்டு களிக்கும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை. ஆளுல் ''இசைக் கதை'' என்னும் திரைப் படத்தை நூறு தரம் பார்த்திருந்தேன், லேமிஷெவ் இப் படத்தில் டாக்சி டிரைவர் பெத்யா கவர்க்கோ வாய் நடிக்கிருர். நடிப்பதோடு பாடவும் செய் கிருர். பழைய படம், யுத்தத்துக்கு முன்பு, நான் பிறந்ததற்கு முன்பு எடுக்கப்பட்டது என்ற போதி லும் இதை வெகுவாய்ப் போற்றி வந்தேன். ஒபெராப் பாடகராய் வளர்ச்சியுற்ற டாக்சி டிரை வர் பெத்யா கவர்க்கோவின் பாத்திரத்தை ஏற்று நடித்த அந்நாட்களில் இருந்ததைக் காட்டி லும் லேமிஷெவ் இன்று முகவும் முதியவராய்த்

தோற்றமளித்தார், ஆயினும் இப்பொழுதும் அவர் கண்ணுக்கு இனியவர்தான்.

இயக்குநர் ஓடிச் சென்று அவரை வரவேற்றார், ஒலிப்பதிவுப் பொறியாளர் நாற்காலியிலிருந்து எழுந்து வணக்கம் தெரிவித்தார். லேமிஷெவ் என்னைப் பார்த்துத் தலையசைத்து வாழ்த்தினார், அவருடன் வந்திருந்த பெண் என் தலையில் தட்டிக் கொடுத்தார். என்னமோ தெரியவில்லை அன்று எல்லோருமே என் தலையில் தட்டிக் கொண்டிருந் தார்கள். ஆனால் வருந்தத்தக்கது என்னவெனில் அந்தப் பெண் யார் என்று என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவர் பாடகி என்பது மட்டும் தான், விரைவில் நானே என் காதால் கேட்டுத் தெரிந்து கொண்டது போல மிகச் சிறந்த பாடகி என்பது மட்டும்தான் தெரிந்தது. இது நாள் வரை நான் அவருடைய முழுப் பெயரை அறியாதவனாகவே இருக்கிறேன். லேமிஷெவ் அவரைத் தான்யா என்றே அழைத்தார்.

''தொடங்குவோமா, தான்யா?''

''சரி.''

லேமிஷெவ், தான்யா, இயக்குநர் இம்மூவரும் ஒலிப்பதிவுக் கூடத்துக்குச் சென்றார்கள், நானும் ஒலிப்பதிவுப் பொறியாளரும் பதிவு அறையிலே இருந்தோம். என்னுடைய பாட்டை நான் பாடி விட்டேன், இனி இங்கு எனக்கு வேலையில்லை, புறப் பட வேண்டியதுதான்—இது எனக்குத் தெரியாத தல்ல. ஆனால் இன்னும் சற்று நேரம் தங்கியிருந்து பார்க்க வேண்டுமென்ற ஆசை என்னைப் பிடித்துக் கொண்டுவிட்டது.

''சற்று நேரம் நான் இங்கே இருக்கலாமா?'' என்று ஒலிப்பதிவுப் பொறியாளரிடம் கேட்டேன்.

''இருக்கலாமே'' என்றுர் அவர். திரும்பி என்னைப் பார்த்தவாறு மேலும் அழுத்தமாய் ''நன்ருய் இருந்து பார்த்துவிட்டுப் போகலாம்'' என்றுர்.

அகலமான இரட்டைக் கண்ணுடி சன்னலின் மூலம் நான் அந்த விசாலமான பதிவுக் கூடத்தைப் பார்க்க முடிந்தது. அங்கிருந்த வாத்தியக் குழுவினர் தெளிவாய்க் கண்ணுக்குத் தெரிந்தனர். வாத்தியக் குழுவினரின் எண்ணிக்கை முன்னிலும் அதிகமாகிவிட்டதைக் கவனித்தேன். இயக்குநரின் இசையேடு தாங்கியும் தெரிந்தது. நீள் கர ஒலிவாங்கிகள் நெடுநெட்டையாய் நிற்கும் கொக்குகளைப் போலிருந்தன.

இன்னெரு இசையேடு தாங்கியின் முன்னுல் லேமிஷெவும் தான்யாவும் அருகருகே நின்றிருந்தார்கள். முறைப்படி தான்யாவுக்குச் சிரம் தாழ்த்திய பின் லேமிஷெவ் தமது கோட்டைக் கழற்றி நாற்காலியின் பின்னுல் மாட்டினுர், கழுத்திலிருந்த டையின் முடிச்சைக் கீழே இழுத்துக் காலரைத் தளர்த்திக் கொண்டார். மெய்யாகவே கடினமான வேலையில் இறங்கப் போகிருரேன நினைக்கத் தோன்றியது. சட்டைக் கைகளையும் மடக்கிச் சுருட்டியிருந்தாராயின் சித்திரம் நிறைவு பெற்றிருக்கும்.

''யாக்கவ் நசோனவிச், வெள்ளோட்டம் இல்லாமல் நேரே ஆரம்பிப்போம்'' என்று இயக்குநரின் குரல் ஒலிபெருக்கியின் மூலம் ஒலித்தது. ''நேற்றைய மூன்ருவது ஒத்திகையின்படியே செய்து முடிப்போம்'' என்று அறிவித்தது.

''நல்லது, அப்படியே செய்வோம்'' என்று பதிலளித்தார் ஒலிப்பதிவுப் பொறியாளர்.

இயக்குநர் தமது கைக்கோலே உயர்த்திஞர், உடனே ஒலிப்பதிவுப் பொறியாளர் பதிவுப் பெட்டியில் பொத்தானை அழுத்திஞர்.

சுழல் வட்டு சுற்றத் தொடங்கிற்று. இது புதிய நாடாச் சுருளா? அல்லது சற்றுமுன் என்னுடைய பாட்டைப் பதிவு செய்து கொண்டார்களே, அதே சுருளா?—எனக்கு விளங்கவில்லே. என் பாட்டு பதிவு செய்யப்பட்ட சுருளில் காலி நாடா நிறைய இருந் தது.... என்னுடைய பாட்டை ஒரேயொரு ஒத் திகைக்குப் பிறகு பதிவு செய்து கொண்டார்கள், ஆனல் இவர்களுடைய பாட்டுக்கு மட்டும் மூன்று தரம் ஒத்திகை நடத்தியிருக்கிருர்களே, அதுவும் ஒலிப் பதிவுக்கு முன் தினமே நடத்தியிருக்கிருர் களே, ஏன் இது?

கூர்ந்து கேட்பதற்கு நான் தயாராய் உட்கார்ந் திருந்தேன்; ஆனல் இரட்டைக் கண்ணுடி சன்ன லுக்கு அப்பால் இயக்குநரின் கைக்கோல் இப்படி யும் அப்படியுமாய் ஆடத் தொடங்கிய பிறகும் இங்கே ஒலிப்பதிவுக் கூடத்தில் நிசப்தம் குடி கொண்டிருந்தது. வயலின்காரர்கள் தமது இசைக் கருவிகளின் மீது கன்னத்தை வைத்து அழுத்தி வயலின் வில்லே மேலும் கீழுமாய் இழுத்துக் கொண்டிருந்தார்கள். வயலின்செலோ வாத்தியக் காரர்கள் முழங்கால்களை விரியப் பரப்பிக் கொண்டு வைத்த கண் வாங்காது தமது இசை யேடுகளை உற்று நோக்கினர். ஹார்ப் இசை வாணர்கள் இசை நாண்களை மீட்டி விட்டுக் கொண்டிருந்தனர்.

ஆனல் எதுவும் என் காதுக்கு எட்டவில்லே, காது கள் இரண்டும் கெட்டியாய் அடைக்கப்பட்டால் எப்படியோ அப்படி இருந்தது. ஆட்கள் விழுந்

தடித்து ஓடுவதும் கூச்சலிடுவதற்காக வாயை விரியத் திறப்பதும் கைத்துப்பாக்கிகளைச் சுடுவதும் கண்ணுக்குத் தெரிய காதுக்கு எந்தச் சப்தமும் கேட்காத பேசாப்படம் பார்ப்பது போலிருந்தது எனக்கு.

நாற்காலியில் இருப்பு கொள்ளாமல் நான் தவிக்கத் தொடங்கிய நேரத்தில் ஒலிப்பதிவுப் பொறியாளர் தலையைத் திருப்பாமலே நான் தலையில் மாட்டிக் கொள்வதற்காக என்னிடம் மற்றொரு காதொலிக் கருவியைத் தந்தார். இது உபரி ஜதையாய் அவரிடம் இருந்திருக்க வேண்டும், அவருடைய ஜதையை அவர் ஏற்கனவே தலையில் அணிந்திருந்தார்.

தக்க தருணத்தில்தான் எனக்கு இதைக் கொடுத்தார், வாத்திய இசைப் பீடிகை முடிவடைந்து கொண்டிருந்தது. அடுத்து, ஒரு பெண்ணின் குரல், இல்லை நங்கையின் குரல் பாடக் கேட்டேன்:

**அச்சமேனோ ஆருயிரே, அது வானம் பாடியன்று,**
**நிச்சயமாய்ச் சொல்லுகிறேன், கூவியது இராக்குயில்**
**தான்...**

ஆடவனின் குரல் இதற்குப் பதிலளித்துப் பாடிற்று:

**குரலெழுப்பியது வானம்பாடி, வைகறைப்**
**பொழுதின் தூதன் அது;**
**இரவில் இசைக்கும் இராக்குயிலன்று...**

ரோமியோவும் ஜூலியத்தும் பாடும் இரட்டையர் பாட்டு. பொழுது புலரவில்லை இன்னும், இரவில் கூவும் இராக்குயில்தான் தோட்டத்தில் மாதுளை மரத்திலிருந்து பண்ணிசைக்கிறது, அஞ்

சாதே நீ என்று ஜூலியத் தனது காதலனுக்கு வற்புறுத்துகிருள். இல்லை, இன்னும் பொழுது புலரவில்லை, விடை பெற்றுப் பிரிய வேண்டிய நேரம் வரவில்லை என்கிருள்.

ஆனுல் புள்ளினங்களின் குரலை அறிந்து சொல்வதில் ரோமியோ தன் காதலியைவிட திறன் படைத்தவன். பாடியது வானம்பாடியே அன்றி இராக்குயிலல்ல என்பது தெரிகிறது அவனுக்கு. வானம்பாடி வைகறைப் பொழுதைக் குறிப்பதாகையால், இனி காதலர்கள் பிரிந்தாக வேண்டும், இல்லையேல் ரோமியோ உயிர் தப்ப முடியாது.

இது சைக்கோவ்ஸ்கியின் இசை, அவருடைய ரோமியோ-ஜூலியத்இரட்டையர் பாட்டு.ஒபெரா நாடகத்திற்காகப் புனையப் பட்டதல்ல, தனியே இரட்டையர் பாட்டாய்ப் புனையப்பட்டது. இது நான் நன்கு அறிந்த பாட்டு, வானெலியில் பல தரம் கேட்டிருந்தது. என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பண் என்பதன்னியில், வேருெரு காரணத்துக்காகவும் நான் இதைப் பாராட்டினேன். அதாவது இந்தப் புகழ் படைத்த கதையிலிருந்து சைக்கோவ்ஸ்கி ஒரேயொரு காட்சியை, உப்பரிகைக் காட்சியை எடுத்து, அதுவுங்கூட அந்தக் காட்சி முழுவதையும் அல்ல, காதலர் விடை பெற்றுப் பிரிவதைக் காட்டும் கடைப் பகுதியை மட்டும் எடுத்து இரட்டையர் பாட்டாய் இசையமைத்ததற்காகப் பாராட்டினேன். ஆனுல் நேர்மையொடு ஒத்துக் கொள்கிறேன், ரோமியோ-ஜூலியத் கதையைப் படிக்க எனக்கு நேரம் கிடைக்கவில்லை. படிக்க வேண்டுமென்று நூறு தரம் நினைத்ததுண்டு, ஆயினும் படிக்கவில்லை. ஆனுல் கதையின் சுருக்கத்தை, அதன்

பிரதான நிகழ்வுகளை அறிந்திருந்தேன். மான்டேகுகளையும் கப்புலெட்டுகளையும் எனக்குத் தெரியும். கதையின் முடிவும் தெரியும், எல்லோரும் ஒருவரை யொருவர் வெட்டி வீழ்த்திக் கொள்கிறார்கள், அல்லது விஷமிட்டுக் கொலை புரிந்து கொள்கிறார்கள் — இம்மாதிரியான முடிவுகளுக்குப் பெயர் பெற்றவர் ஆயிற்றே ஷேக்ஸ்பியர்!...

இந்தக் கொலைகாரச் சம்பவங்களை எல்லாம் ஒரு பக்கமாய் ஒதுக்கி வைத்துவிட்டு மிகவும் முக்கியமான, எழிலார்ந்த ஒன்றில்—காதலில், ரோமியோ-ஜூலியத்தின் காதலில் — முழுக் கவனம் செலுத்தியதற்காக நான் சைக்கோவ்ஸ்கியைப் பொற்றுகிறேன்.

இதற்குள் காதலர் இருவரும் தமது நிலைகளை மாற்றிக் கொண்டுவிடுகிறார்கள். பொழுது விடிகிறது, பாடியது இராக்குயிலல்ல, வானம்பாடி என்று உணர்ந்து கொண்டுவிடும் ஜூலியத், சீக்கிரமாய்ப் புறப்பட்டுச் செல்லும்படி ரோமியோவை வற்புறுத்துகின்றாள். ஆனால் ரோமியோவோ பொழுது புலரவில்லை, பாடியது இராக்குயிலே என்பதாய் ஜூலியத்திடம் சொல்கிறான்...

> சொல்கிறேன் நானும்: ஆங்கொளிர்வது
> புலரும் பொழுதின் விழிச்சுடரல்ல...

இரு குரல்கள் ஒத்திசைவாய் இணைந்து காதலரின் ஈருடலும் ஒருயிருமாய் ஒலிக்கின்றன.

தான்யாவின் குரல் இனிமையிலும் இனிமையாய் இருந்தது, எனக்கு மிக்கப் பிடித்திருந்தது. ஆயினும் என் கவனமெல்லாம் இன்னொரு குரலால், லேமிஷெவின் குரலால் கவரப்பட்டு வந்தது. எனக்கு மிக அருகில் ஒலித்தது அது, அடங்

காத ஆவலொடு அதன் ஒவ்வொரு நாதத்தையும் நயத்தையும் நான் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு இசை நாதமும் என்னைச் சொக்கச் செய்தது, லேமிஷெவின் குரல் சொற்களால் விவரித்துச் சொல்ல முடியாத ஒரு விந்தையாகும், விந்தையிலும் விந்தையாகும்.

பிறகு இருவரும் விடைபெற்றுக் கொண்டு பிரிகின்றார்கள்.... ரோமியோவும் ஜூலியத்தும் ஒருவரிடமிருந்து ஒருவர் பிய்த்துக் கொள்கிறார்கள்....

**போய்வருகிறேன்,**
**பிரியா விடை பெறுகிறேன்...**

அவ்வளவுதான். யாக்கவ் நசோனவிச் காதொலிக் கருவியைத் தலையிலிருந்து கழற்றி வைத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்தார். வழுக்கைத் தலையிலிருந்து வியர்வையைத் துடைத்துக் கொண்டார். களைத்து ஓய்ந்துவிட்டவராய்த் தோன்றினார். அவரேதான் வாத்தியக் குழு இயக்குநராய்ச் செயல் பட்டார், எல்லா வாத்தியங்களையும் இசைத்தார், ரோமியோ-ஜூலியத் இருவரின் பாட்டுகளையும் பாடினார், இசையையுங்கூட அவரேதான் புனைந்தார் என்பதாய் நினைக்கும் படி அப்படிக் களைத்துப் போய்விட்டார்.

நானும் காதொலிக் கருவியைக் கழற்றி வைத்தேன். புன்னகையால் முகம் மலர்ந்த தான்யா, அமைதியின் உருவான இயக்குநர், முகத்தில் கவலையின் குறிகள் தெரிந்த லேமிஷெவ் ஆகிய மூவரும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தனர். மூவரும் உட்கார்ந்து கொண்டு, ஒலிப் பதிவு செய்யப்பட்ட நாடாவை யாக்கவ் நசோனவிச் திருப்பிச் சுற்றுவதற்காகக் காத்திருந்தனர்.

நாடா திருப்பிச் சுற்றப்பட்டதும் 'கிளிக்' என்று சப்தம் கேட்டது. பிறகு சிறிது நேரம் நிசப்தம், மீண்டும் 'கிளிக்' சப்தம், உடனே வாத்திய இசைப் பீடிகை ஆரம்பமாயிற்று.

இதற்குள் நானும் சற்றுக் களைத்துப் போய்விட்டேன். என்னுடைய பாட்டு பதிவாகி முடியும் வரை மிக்க பரபரப்புற்ற நிலையில் இருந்தேன். பிறகு நான் சிறிதும் எதிர்பாராத விதமாய் இந்த உன்னதப் பாடகர் வந்து சேர்ந்தார். அதன்பின் சைக்கோவ்ஸ்கியின் இசை—சொக்கிப் போய்க் கரைந்துருகாமல் யாராலும் கேட்டுக் கொண்டு அமர்ந்திருக்க முடியாத இசை.

> **நாட்டமெலாம் இங்கேயே அன்றிப் போவதில்**
> **சித்தமில்லை எனக்கு,**
> **சாவே வா நீ! வரவேற்கிறேன்! ஜூலியத்தின்**
> **விருப்பம் இது.**

மெய்யாகவே நான் ஓய்ந்துவிட்டேன், பாடும் குரல்களையோ பின்னணி வாத்திய இசையையோ கவனமாய்க் கேட்கும்படியான நிலையில் இல்லை. தொடர்பில்லாத விநோத எண்ணங்கள் என மனத்துள் அலைமோத முற்பட்டன. ரோமியோவுக்கும் ஜூலியத்துக்கும் சோக முடிவே நேர்ந்ததென்றாலும் இருவரும் கணப் பொழுதுக்கு அந்த ஒப்பற்ற இன்பம் கிடைக்கப் பெற்றவர்கள் ஆயிற்றே, வாழ்வு அனைத்தையும் வேண்டுமானாலும் கொடுக்கலாமே இந்தக் கணப்பொழுதுக்காக என்று என்னுள் நினைத்துக் கொண்டேன்.... இந்நங்கை, இந்த ஜூலியத் சின்னஞ் சிறியவள், பதினான்கு வயதே ஆன சிறுமி என்று கேட்டிருந்தேன். பதிமூன்றாவது வயதை நெருங்கிக் கொண்

டிருந்தேன் நான், ஆனால் இப்படிப்பட்ட அரிய காதல் எனக்குக் கைவரப் பெறுமென என்னால் கன விலும் நினைக்க முடியுமா? என்னை, இந்த ழேன்யா புரோஹறொவை சொற்ப நேரத்துக்கேனும் எவளாவது காதலிப்பாள் என்றாவது நிச்சயமாய் என்னால் சொல்ல முடியுமா? ஆயினும் என்னால் காதலிக்க முடியும் என்றே சொல்வேன். நான் காதலிக்கப் போவது யாரென்று தெரியாது, ஆனால் என்னால் முடியும், ரோமியோவைப் போல இதைச் செவ்வனே செய்ய முடியும் என்பதாகவே நினைத்தேன்....

**என்னைப் பிடிக்கட்டும், இழுத்துச் செல்லட்டும்,**
**கொன்று வீழ்த்தட்டும்,**
**உன் விருப்பம் அதுவெனில், மகிழ்வொடு**
**உடன்படுவேன்.**

''இருங்கள், இருங்கள்! நிறுத்துங்கள்!''

நாற்காலியிலிருந்து லேமிஷெவ் துள்ளியெழுந்து, கண்டிக்கும் முறையில் கைகளை வீசினார்.

''நன்றாய் இல்லை, இது உதவாது!''

''ஏன், என்ன நன்றாய் இல்லை...'' என்று வியப் புற்றுத் தோள்களை உலுக்கியவாறு கேட்டார் இயக்குநர்.

''செர்கேய் யாகவ்லெவிச்...'' என்று கைகளை நெஞ்சில் வைத்து அழுத்தியவாறு கூவினாள் தான்யா.

''இம்-இம்'' என்று கனைத்துக் கொண்டு ஒலிப் பதிவுப் பொறியாளர் தமது வெள்ளைச் சட்டை யின் கையை விலக்கிக் கைக்கடிகாரத்தைப் பார்த் தார். மதிய உணவு அருந்த வேண்டிய நேரமென நினைத்தாரோ, என்னவோ.

''இது சரியல்ல, திரும்பவும் பாடியாக வேண்டும்!'' என்ருர் லேமிஷெவ்.

ஏனேயோருக்காகக் காத்திராமல் கதவை நோக்கி அவர் வேகமாய் நடந்தார். தான்யாவும் இயக்குநரும் ஒருவரையொருவர் பார்த்துப் பெருமூச்சுவிட்டனர், பிறகு வேறு வழியின்றி லேமிஷெவைப் பின்தொடர்ந்து வெளியே சென்றனர். சில விளுடிகளில் மூவரும் ஒலிப்பதிவு அறையினுள் இரட்டைக் கண்ணுடி சன்னலுக்குப் பின்னுல் வந்து நின்ருர்கள். திரும்பவும் லேமிஷெவ் கோட்டைக் கழற்றி நாற்காலில் மாட்டினுர்.

''நன்றி, போய்வருகிறேன்'' என்று ஒலிப் பதிவுப் பொறியாளரிடம் கூறிவிட்டு நான் புறப் பட்டேன்.

''நல்லது, நீ போய் வா'' என்ருர் யாக்கவ் நசோனவிச்.

அவருடைய கண்களில் ஒரு விதக் கடுப்பு தெரியக் கண்டேன். பையனே, உனக்கு ஒரேயொரு ஒத்திகையே வேண்டியிருந்தது, ஆளுல் தோழர் லேமிஷெவுக்கு நான்கு ஒத்திகை நடைபெற்றும் போதாது என்கிருர்... என்று கூறுவது போலிருந்தது அவர் பார்த்த பார்வை.

மதிய உணவுக்கு நேரமாகிறதே என்று அவர் கடுகடுத்துக் கொள்கிருரென நினேத்தேன். நானும் இன்னும் மதிய உணவு அருந்தியாகவில்லே.

* * *

''ஓடிவிட்டாளு?''

''ஆம், கோல்யா பிர்யுக்கோவ் ஓடிவிட்டான்.''

''அது எப்படி?''

''ஓடிவிட்டான், அவ்வளவுதான்.''

திடுக்குறச் செய்த இந்தச் செய்தி நான் ஒலிப் பதிவு மையத்திலிருந்து திரும்பி வருவதற்குள் பள்ளி முழுதும் பரவிவிட்டது: என்னைத் தவிர மற்றெல்லோருக்கும் செய்தி தெரிந்திருந்தது.

விடுதியில் பையன்கள் ஒரு படுக்கையைச் சுற்றிக் கூட்டமாய் நிற்கக் கண்டேன். எங்களுடைய பெரிய படுக்கைக் கூடத்தில் இருந்த மிகப் பல படுக்கைகளில் ஒன்று அது. இன்று காலை வரை நிக்கலாய் இவானவிச் பிர்யுக்கோவ் இதில்தான் படுத்து உறங்கினுன். படுக்கைக்கு அருகே இருந்த நிலைப்பெட்டியின் கதவை யாரோ ஒருவன் திறந்து பார்த்துவிட்டு, பெட்டி காலியாய் இருந்தது எல்லோருக்கும் தெரியும் பொருட்டு மூடாமலே வைத்திருந்தான்....

பட்டப் பகலில் கோல்யா பிர்யுக்கோவ் மாயமாய் மறைந்துவிட்டான்.

''விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சுக்குத் தெரியுமா இது?''

''தெரியும், அவர் இங்கே வந்து பார்த்துவிட்டுக் காவல் துறையினருக்கு டெலிபோன் செய்து அவனைத் தேடும்படிச் சொன்னுர்.''

எதிர்பாராத இந்த நிகழ்ச்சி எல்லோரையும் கலங்கச் செய்துவிட்டது. ஆயினும் என் மனத்துள் அதேபோதில் வேறொரு உணர்ச்சியும் மூண்டெழுந்தது. யாருக்கும் தெரியாமல் இப்படி இரகசியமாய் ஒரு துணிகரச் செயல் புரிந்து விட்டானே என்று அவனைப் பாராட்டினேன். பொறாமையெனச் சொல்லத்தக்கதாகவும் இருந்தது எனது இந்தப் பாராட்டு... எந்தப் பையனையும் கவரவல்ல வீரச் செயலல்லவா புரிந்துவிட்டான்?

''எங்கே போயிருப்பான், தெரியவில்லையே''

என்று வியப்பால் கண்கள் விரியக் கூறினான் மராத் அலீயெவ். ''காக்கசஸுக்கு, மலைகளுக்குப் போயிருப்பானோ?'' என்றான்.

''உன்னுடைய காக்கசஸுக்குப் போய் என்ன செய்ய முடியும் அவன்? என்ன இருக்கிறது அங்கே? நல்லவேளை உல்லாச விடுமுறைக்காக ஆரோக்கிய இடத்துக்குப் போயிருக்கிறான் என்பதாய்ச் சொல்லாமல் இப்படிச் சொன்னாயே'' என்று வீத்யா தித்தரேன்கோ அவனை ஏளனம் செய்தான். ''வெள்ளையர்களை எதிர்த்துப் போராடுவதற்குக் காங்கோவுக்குப் போக முயலுவான், நான் அப்படிதான் நினைக்கிறேன்.''

''ஆனால் கோல்யாவே ஒரு வெள்ளையன் ஆயிற்றே!''

''என்ன சொன்னாய்?'' என்று சீறினான் வீத்யா. ''கோல்யா ஒன்றும் வெள்ளையனல்ல, அவன் சிவப்பன். உன்னுடைய மர மண்டையில் இதை இருத்திக் கொள்! தோலைப் பற்றிய பிரச்சினை அல்ல இது!''

மறு பேச்சுக்கு இடமில்லாமல் வீத்யா இப்படி ஒரு போடு போட்டான், அவனுடைய அபார வல்லமை எங்களைப் பிரமிக்க வைத்து வாயடைக்கச் செய்துவிட்டது.

''ஆனால் அவனால் அங்கே போய்ச் சேர முடியாது'' என்று தலையை ஆட்டியவாறு கூறினான் கோஷா வியாசெம்ஸ்கி. கோஷா பகற் பொழுது மாணவன் என்றாலும், செய்தியைக் கேட்டதும் எங்கள் விடுதிக்கு ஓடி வந்துவிட்டான். ''எல்லையிலே தடுத்து நிறுத்திவிடுவார்கள், எல்லோரும் பிடிக்கப்படுவது எல்லையில்தான், ஆனால் எல்லை வரையிலுங்கூட அவனால் போக முடியாது, கையில்

சல்லிக் காசு இல்லாதவன், எப்படி அவ்வளவு தூரம் போவான்?''

இதைக் கேட்ட நான் உதட்டைக் கடித்துக் கொண்டேன். என்ன நடந்திருக்கும் என்பதை இப்பொழுதுதான் புரிந்து கொண்டேன். கோல்யாவுடன் நான் பறவைச் சந்தைக்குப் போயிருந்ததை இப்பொழுது முற்றிலும் மாறுன ஒரு புதிய கோணத்தில் பார்க்க முற்பட்டேன். ''புரோஹரொவ், சற்று நேரம் வெளியே போவோம், வா நீ'' என்று என்னை அவன் அழைத்ததும், பிறகு பள்ளியில் இன்னும் இரண்டு ஆண்டுகள் படித்தாக வேண்டுமே என்று நான் அவனுக்கு நினைவு படுத்தியபோது,''எதற்காகவாம்?..'' என்று அவன் கேட்டதும், முடிவில் அவன் ''சிறுவர்களாகிய நாம் ஏமாற்றப்படுவது எனக்குப் பிடிக்கவில்லை...'' என்று சொன்னதும் என் நினைவுக்கு வந்தன. ஆம், இவை யாவற்றையும் பறவைச் சந்தையில் என்னிடம் கூறினுன், கூறுமல் அவன் மனத்துள் வைத்திருந்த மற்றும் பலவும் இருந்திருக்க வேண்டும். ஏதும் அறியாத பச்சைக் குழந்தையைப் பார்ப்பது போலல்லவா முகத்திலே பரிதாப உணர்ச்சியொடு என்னைப் பார்த்தான். அப்படியாஞல் அதற்கு முன்பிருந்தே அவன் ஓடிவிடத் திட்டமிட்டு வந்திருக்க வேண்டும், இல்லையா? நானும் அவனுடன் சேர்ந்து ஓட வேண்டுமென விரும்பினுனே, என்னவோ? நேரடியாய் அதைச் சொல்லத் துணியாமல் மறைமுகமாய் என் நிலையை அறிந்து கொள்ள முயன்றிருக்கிறுன். ஆம், அப்படித்தான் இருக்கும், அதனுல்தான் நாய்களிடம் என்னை அழைத்துச் சென்றுன். ஒரு நாய் என் உயிரைக் காப்பாற்றியது என்பதும், சொந்தத்

தில் நான் ஒரு நாயை வளர்க்க விரும்பினேன் என்பதும் அவனுக்குத் தெரியுமே. அதனுல்தான் மொட்டைத் தலையனிடம் சென்று அந்த அல்சேஷனின் விலையை விசாரித்தான். ''அதை வாங்க என்னிடம் பணமில்லை என்று நினைக்கிருய்? என்னுல் வாங்க முடியும்!'' என்று சொல்லி, கத்தையாய்த் தன்னிடமிருந்த நோட்டுகளை எனக்குக் காட்டினுன். ஓகோ, திட்டமிட்டுதான் அவ்வளவும் செய்திருக்கிருன்!

கோஷா வியாசெம்ஸ்கியின் சட்டைக் கையை வெடுக்கென இழுத்து, வெளியே நடைக்கு என்னுடன் வருமாறு அவனிடம் ஜாடை காட்டினேன்.

இருவரும் வெளியே வந்ததும் ''என்ன அது?'' என்று கேட்டான் அவன்.

ஏனையோரிடமிருந்து தனியே நடையிலே குளிப்பறை வரை அழைத்துச் சென்று அவனிடம் சொன்னேன்:

''கோஷா, சொல்கிறேன் கேள்! இதை வேறு யாரிடமும் சொல்லாதே, சரிதானு?''

''சரி!''

''அவனிடம் பணம் இருந்தது, என் கண்ணுல் பார்த்தேன்.... கத்தையாய் நோட்டுகள் வைத்திருந்தான்.''

''எங்கிருந்து கிடைத்தது?''

''உதவித் தொகையிலிருந்து மீத்து வைத்திருந்தான். ஓராண்டாய் மீத்து வந்தான். புரிகிறதா உனக்கு? அவ்வளவு காலமாய் அவன் ஓடி விடுவதெனத் தீர்மானம் செய்து தயார் செய்து வந்திருக்கிருன், தெரிகிறதா?''

கோஷா சற்று நேரம் வரை ஒன்றும் சொல்லாமல் தலையை ஒரு பக்கமாய்த் திருப்பிக் கொண்டு,

நான் சொன்னதைப் பற்றிச் சிந்தித்தான். பிறகு எதிர்பாராத முறையில் திடுமெனக் கடுமையான குரலில் ''அவன் செய்தது சரிதான்'' என்முன்.

அவன் சொன்னதை நம்ப முடியாதவனுய் ''என்ன? சரிதானு?'' என்றேன்.

''ஆம், சரிதான்.''

மாயமாய் மறைந்துவிட்ட என் நண்பன் முன்பு பறவைச் சந்தையில் யாவும் அறிந்த பெரிய ஆளின் பாவனையொடு பார்த்து என்னைத் திகைக்க வைத்தானே, அதே மேல்நிலை மனேபாவம் கோஷாவின் பார்வையில் பளிச்சிடக் கண்டேன்.

''நானும் ஓடிச் செல்லவே விரும்புகிறேன்—ஆனல் என்னல் ஓட முடியாது. எனக்குப் பெற்ருேர் இருக்கிருர்கள், சித்தம் கலங்கிப் போய்விடுவார்கள்.''

சோகம் படர்ந்திருந்த கோஷாவின் முகம் திடுமென மலர்ந்துவிட்டது. என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தவாறு என் தோளில் கையைப் போட்டுக்கொண்டு, ''இதோ பார், என்ன நடந்ததென்ருல்...'' என்ருன்.

## 4

''இதோ பார், என்ன நடந்ததென்று சொல்கிறேன்'' என்ருன் கோஷா வியாசெம்ஸ்கி. ''என் தங்கை தனது பிறந்த தின விருந்துக்கு உன்னை வருமாறு அழைக்கும்படி என்னிடம் சொல்லியிருக்கிருள். அசட்டுப் பெண், உன்னைக் கண்டு மயங்கிவிட்டாள், தெரிகிறதா?''

நடந்ததை இப்பொழுது சிந்தித்துப் பார்க்கையில், இந்த உரையாடல் பிற்பாடுதான், கோடை

நெருங்கியதும் தான் நடைபெற்றிருக்க வேண்டுமென்பது தெரிகிறது, ஆம், மே மாதத்தில்தான் நடைபெற்றிருக்க வேண்டும். மே மாதம்தான், சந்தேகமில்லை—ஏனென்றால் மாயா* என்ற பெயருடையவள் சரியாய் மே மாதத்தில் பிறந்திருக்கிறாளே, அரிய ஒத்திசைவாய் இருக்கிறதே என்று நான் ஆச்சரியப்பட்டுக் கொண்டது நினைவுக்கு வருகிறது. பிற்பாடுதான், தலையை வாலாகவும் வாலைத் தலையாகவும் வைத்துக் குழப்படி செய்தேன், மே மாதத்தில் பிறந்தவளாதலால்தான் இவளுக்கு மாயா என்று பெயரிடப்பட்டது என்று உணர்ந்து கொண்டேன்.

கதையை வளர்க்காமல் சுருக்கமாய்ச் சொல்லி விடுகிறேன். முன்பு மலர்க் கொத்தும் துண்டுக் காகிதமும் கொண்டு வந்து கொடுத்து இசைக் கல்லூரியின் மாமண்டபத்தில் குழுமியிருந்தோர் அத்தனை பேருக்கும் முன்னால் என்னை அசடு போல விழிக்க வைத்தாளே, அதே மாயாதான் இவள். அவள் தந்த துண்டுக் காகிதத்தில் அவளுடைய தொலைபேசி எண் குறிக்கப்பட்டிருந்தது, ஆனால் நான் அதைப் பயன்படுத்தாமல்தான் இருந்து வந்தேன். அவள் மீது எனக்குக் கோபம்.

அதன்பின் சில மாதங்களாகிவிட்டன, என்னுடைய கோபமும் தணிந்துவிட்டது. அவளுடைய அழைப்பை கோஷா எனக்குத் தெரிவித்த போது நான் சால்ஜாப்பு சொல்லித் தட்டிக் கழிக்க முயலவில்லை.

---

* **மாயா**—மே மாதத்தைக் குறிக்கும் 'மாய்' என்னும் ருஷ்யச் சொல்லிலிருந்து வந்த பெயர். —**(மொழிபெயர்ப்பாளர்.)**

''சரி, வருகிறேன்; உங்கள் வீடு எங்கே இருக்கிறது?'' என்று கேட்டேன்.

''பக்கத்தில்தான், பெகொவாயாத் தெருவில்.''

திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது போல யாவும் எங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து கூப்பாடு தூரத்தில்தான் இருந்தன.

''ஆறு மணிக்கெல்லாம் வந்துவிடு'' என்றான் கோஷா.

''சரி.''

பிறந்த நாள் விழாவுக்குப் புறப்படுமுன் இரண்டு பிரச்சினைகள் எழுகின்றன: எம்மாதிரியான ஆடைகள் அணிவது? அன்பளிப்பதற்கு ஏதை எடுத்துச் செல்வது?

இரண்டாவது பிரச்சினைக்கு அதிக சிரமமின்றி நான் தீர்வு காண முடிந்தது.

ஒலிப் பதிவு மையத்துக்கு நான் போய் வந்த பின் இரண்டொரு மாதத்தில் அந்த இசைஞர் மீண்டும் எங்கள் பள்ளிக்கு வந்து சேர்ந்தார். மீண்டும் நான் முதல்வரின் அறைக்கு அழைக்கப் பட்டேன். அங்கே இசைஞர் எனக்குப் புத்தம் புதிய மூன்று இசைத் தட்டுகளைத் தந்தார். ஒரு இசைத் தட்டை அதன் உறையினுள்ளிருந்து வெளியே எடுத்தார். அதன் வட்டப் பெயர்க் குறிப்பில் ''வழிக் குறியொலி'' எனும் தலைப்பு இருக்கக் கண்டேன். அதனடியில் இசைஞரின் பெயரும், அதற்கும் அடியில் ''ழேன்யா புரோஹ ரொவ் பாடியது'' என்று கூறிய வரியும் இருந்தன. அவருடைய பெயர் கடுகளவு மேல் மட்டத்திலும் என் பெயர் கடுகளவு கீழ் மட்டத்திலும் இருந்ததென்றாலும், இரண்டும் ஒரே இசைத்தட்டில் அக்கம் பக்கத்தில் காணப்பட்டன என்பது மறுக்க முடியாதது.

இசைஞர் கோட்டுப் பையிலிருந்து பேனவை எடுத்துக் கணப் பொழுது ஆலோசித்துவிட்டுப் பெயர் குறிப்பின் குறுக்கே ''ழேன்யா புரோஹ ரொவுக்கு, நல்வாழ்த்துக்களுடன்'' என்று எழு தினர், பிறகு தடபுடலாய் நீட்டிச் சுழித்துக் கையெழுத்திட்டார்.

வாழ்த்துக் குறிப்படங்கிய இந்த இசைத் தட்டை என் வாழ்நாள் முழுதும் நானே வைத்துக் கொள்வது, இதன்மீது ஊசியுங்கூட படாதபடி இதைப் பேணிக் காப்பது என்று அக்கணமே தீர் மானித்துக் கொண்டுவிட்டேன். இந்த வாழ்த்துக் குறிப்பு இதை விலைமதிப்பற்ற பொக்கிஷமாக்கி விட்டது. ஆனல் இரண்டாவது இசைத்தட்டை நேரே நான் ஊழியர் குழுவின் அறைக்கு எடுத்துச் சென்று ஓயாமல் திரும்பத் திரும்ப நூறு தரம் போட்டுக் கேட்டேன். இதே இசைத்தட்டைத் தான் இன்றும் தொடர்ந்து போட்டுக் கேட்டு வந்தேன்.

இந்த இரண்டையும் அன்னியில் மூன்ருவது ஒன்று கைப்படாமல், கவர்ச்சியான உறைக்குள் இருந்து வருகிறதே! மாயாவுக்கு அதை அன் பளிப்பாய்த் தந்தால் போகிறது.

ஆகவே இந்த விழாவுக்குப் போவதற்காக முன் கூட்டியே தயார் செய்த நான், இந்த மூன்ருவது இசைத்தட்டை வெளியே எடுத்தேன். விடுதியில் யாரும் இல்லாத நேரமாய்ப் பார்த்து அதன் பெயர்க் குறிப்பில் ''மாயா வியாசெம்ஸ்காயா வுக்கு · நல்வாழ்த்துக்களுடன்'' என்று எழுதி னேன். இசைஞரைப் போலவே நானும் ஆடம் பரமாய் நீட்டிச் சுழித்துக் கையெழுத்திட்டேன்.

பூனையின் மீசை மாதிரி இருந்தது.

இரண்டாவது பிரச்சினை மிகவும் சிரமமானது, சோர்வடையச் செய்வதாய் இருந்தது. அங்கே போகும் நான் எதை உடுத்திக் கொள்வது? சிறுவர் நிலையம் அளிக்கும் உணவை உண்டு வாழ்வதும், எந்நேரமும் நிலையத்தின் சீருடையை உடுத்திக் கொண்டு அலைவதும் எவ்வளவு உபத்திரவமான பிழைப்பு என்பதை முதன்முதலாய் அப்பொழுதுதான் நான் உணரலானேன். யாவும் எங்களுக்குத் தயாராய் அளிக்கப்பட்டன, ஆயினும் எங்களிடம் எதுவும் இல்லை என்பது தெரிய வந்தது. உண்ண உணவும் உடுக்க உடையும் காலுக்குப் பாத அணியும் கிடைத்தன: வேறு என்ன வேண்டும்? ஒன்றுமில்லை. ஆயினும் திடுமெனப் பிறந்த நாள் விழாவுக்கு வருமாறு அழைப்பு வரும்போது உடுத்திக் கொள்ள ஏதுமில்லை என்பது தெரிந்தது. என்னுடைய கச்சேரி உடுப்புகளை ஓர் அந்திப் பொழுதுக்குத் தரும்படி தாதிகளில் ஒருவரிடம் கேட்டிருக்கலாம்தான். எனக்கு அனுமதி கிடைத்திருக்கும், அலமாரியைத் திறந்து தாதி அதை எடுத்துத் தந்திருப்பாள். ஆனால் கச்சேரி உடுப்பிலே அங்கே செல்வது நகைக்கத்தக்கதாய் அல்லவா இருக்கும் என்பது அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது. வாத்தியக் குழுவின் இயக்குநர் ஒருவர் பின்பக்கத்தில் இருவால்களாய்ப் பிளக்கப்பட்ட நீள் கோட்டும், விறைப்பான மார்புக் கோட்டும், தகதகக்கும் கருவண்ண பூட்சும் அணிந்து இசைக் கோலையும் ஆட்டி வீசிக்கொண்டு பிறந்த நாள் விழாவிலே போய் நின்றால் எப்படியோ அப்படித்தானே இருக்கும்—சரியான முட்டாள் என்றல்லவா பெயர் பெற வேண்டியிருக்கும்?

எனது பள்ளியின் சாதாரணச் சீருடையை உடுத்திக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. ஆடம்பரமில்லாத சாம்பல் நிறச் சீருடையை, தேய்ந்து நைந்து போன கைகளும் முழங்காலில் கசங்கித் தொளதொளக்கும் கால் சட்டையுமாகிய இந்தச் சீருடையை உடுத்திக் கொள்ள வேண்டியது தான். அம்மா அல்லது அப்பாவின் செல்லப் பிள்ளைகளான பலரும் புது மோஸ்தர்களில் அமைந்த சூட்டுகளும் வெளிநாட்டு ஸ்வெட்டர் களும் வெளியுலகத்திலிருந்து வந்த கூர்முனை பூட்சு களும் அணிந்து விழாவுக்கு வந்திருப்பார்கள். என்னைப் பார்த்து என் முதுகுக்குப் பின்னலிருந்து இவர்கள் சிரித்துக் கொள்வார்கள், தடிப் பசங் கள்....

சோர்வுற்றுவிட்ட நான் போகாமலே இருந்து விடுவோம் என்றே முடிவு செய்துவிட்டேன். பிறந்த நாள் விழாவாம், பிறந்த நாள் விழா! நாச மாய்ப் போக! விழா கொண்டாடும் பெண்ணும் சேர்ந்துதான்! நான் ஒரு முட்டாள், இசைத்தட் டில் வாழ்த்து எழுதி அதைப் பாழாக்கிவிட்டேன்!

பிறகு இருந்தாற் போலிருந்து ஒரு பெருமை உணர்ச்சி என்னைப் பற்றிக் கொண்டுவிட்டது. சாதாரணமான அசட்டுப் பெருமை அல்ல, கலைஞ னுக்குரிய கலைத் துறைப் பெருமை! நான் புத்த கங்களில் படித்திருந்த, அல்லது கதைகளில் கூறக் கேட்டிருந்த பெயர் பெற்ற இசை மேதைகள் என் நினைவுக்கு வந்தனர். இவர்கள் எப்போதும் தொளதொளப்பான கால் சட்டைகள் போட்டுக் கொண்டு, காய்ந்த ரொட்டியைத் தின்று கொண்டு, நிலவறைகளில் காலம் ஓட்டியவர்கள்தானே. கையில் அரைக் காசு இல்லாமல் இருந்தவர்கள்

தானே. ஆயினும் இவர்கள் தன்மானமும் கலைத் துறைப் பெருமையும் மிக்கவர்களாய் அல்லவா விளங்கினுர்கள். கலை ஞானமில்லாத படாடோ பக்காரர்களைச் சிறிதும் மதியாது அல்லவா எள்ளி நகையாடினுர்கள். இந்தப் படாடோபக்காரர்கள் அல்லவா இந்தக் கலை மேதைகளின் தயவை நாடிப் பல்லைக் காட்டுவார்கள்....

என் சஞ்சலங்கள் யாவும் மறைந்து திட முடிவுக்கு வந்தேன், உடனே என் பூட்சுகளுக்குப் பாலிஷ் போட்டுத் தேய்த்துப் பளபளப்பாக்கிக் கொண்டு, இசைத்தட்டைக் கக்கத்தில் வைத்து அழுத்திக்கொண்டு, பெகொவாயாத் தெருவுக்குப் புறப்பட்டேன்.

* * *

வியாசெம்ஸ்கி குடும்பத்தாரின் வீட்டுக்குள் அடியெடுத்து வைத்து மறுகணமே என்னுடைய அச்சமும் கவலையும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன.

என்னுடைய கோட்டின் தேய்ந்து போன கைகளையும் முழங்கால்களில் கசங்கித் தொள தொளப்பாய் இருந்த கால்சட்டைகளையும் யாரும் கவனிக்கவே இல்லை. பிறந்த நாள் கொண்டாடிய பெண்ணுக்கு நான் எடுத்துச் சென்ற அன்பளிப் பைக் கண்டதும் அவள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இருக்காது. விண்ணிலே உறையும் வெண் மதியைத் தட்டிலே வைத்து யாராவது அவ ளுக்கு அன்பளித்திருந்தாலுங்கூட, என்னுடைய அந்தச் சர்வசாதாரணமான இசைத்தட்டுடன் ஒப்பிடுகையில் அதை அவள் அற்பமானதாகவே

கருதியிருப்பாளெனத் தோன்றும்படி அப்படி ஆனந்தப்பட்டுக் கொண்டாள்.

பிறந்த நாள் விழாவின் நிகழ்ச்சி நிரல் இது தான்: நடனம், மாலை விருந்து, மீண்டும் நடனம்.

விருந்துணவை நான் விவரிக்க வேண்டியதில்லை —நன்றாகவே இருந்தது, பிறந்த நாள் விருந்து ஏதனுடன் ஒப்பிடத் தக்கதாகவே இருந்தது.

ஆனால் நடனம்... அதைப் பற்றி அப்படிச் சொல்வதற்கில்லை. ஏனென்றால் கோஷாவையும் என்னையும் சேர்த்து நாங்கள் மொத்தம் பதி னைந்து பையன்கள், ஆனால் பெண்களோ மூன்றே மூன்று பேர்தான். பிறந்த நாள் கொண்டாடிய வளை அன்னியில் இரண்டு பெண்களே இருந்தனர், இருவரும் சரியான அவலட்சணங்கள். பெயர்கள் எனக்கு நினைவில் இல்லை, பார்ப்பதற்கு எப்படி இருந்தார்கள் என்பது மட்டும்தான் நினைவில் இருக்கிறது—மெய்யாகவே இரண்டு அவலட்சண சகோதரிகள்.

பிற்பாடு மாயாவுக்கு என் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டுத் தலைகால் தெரியாமல் நான் ஆடத் தொடங்கியதும் ஒரு நாள் அவளைக் கேட்டேன்: பிறந்த நாள் விழாவில் பையன்கள் அத்தனை பேர் இருக்க பெண்கள் ஏன் இரண்டே இரண்டு பேர் மட்டும், அந்த அவலட்சண சோதரி கள் இருவர் மட்டும் வந்திருந்தார்கள் என்று கேட்டேன். சுற்றி வளைக்காமல் மிகவும் நேர்மை யொடு அவள் பதிலளித்தாள்: பெண்களைத் தன் னால் சகிக்க முடிவதில்லை, மெய்யாகவே அவர்கள் மீது தனக்கு வெறுப்பு என்றாள். எப்பொழுதும் பையன்களைத்தான் தனக்குப் பிடிக்கும் என்று சொன்னாள். கோஷாவையும் என்னையும் தவிர

அவள் அழைத்திருந்த எல்லாப் பையன்களும் பள்ளியில் அவள் வகுப்பைச் சேர்ந்தவர்கள். முன்பு ஆரம்ப அல்லது மேல் வகுப்புகளில் படிக்கையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒரு காலத்தில் நெருங்கிய சகாவாய் இருந்தாள். அவர்கள் தொடர்ந்து இன்னமும் அவளைத் தமது உயிரனையவளாய்க் கொண்டாடியே வந்தார்கள் என்றாலும், அவர்களுடைய சகவாசம் நெடுங் காலத்துக்கு முன்பே அவளுக்கு சலிப்பூட்டுவதாகி விட்டது. அந்த இரண்டு பெண்களைப் பொறுத்த வரை, மாயாவின் வகுப்பிலே அவர்கள் இருவர் மட்டும்தான் அவள் நெருங்கிப் பழகுவதற்குரிய தகுதியுடைய பெண்கள்: ஒருத்தி முன்னணி இளைஞர் குழுவுக்குத் தலைமை வகித்தவள், மற்றவள் வகுப்பின் சுவர்ச் செய்தியேட்டின் ஆசிரியையாய் இருந்தவள். பெண் குலத்தை ஒரேயடியாய் நிராகரித்து ஒதுக்கிய மாயா இவர்கள் இருவருக்கும் மட்டும் விதிவிலக்களித்து வந்தாள்.

ஆனால் முன்னணி இளைஞர் குழுவின் தலைவியும் சரி, சுவர்ச் செய்தியேட்டின் ஆசிரியையும் சரி, தமது அவலட்சணம் குறித்து அன்று மாலை எவ்விதத்திலும் மனம் வருந்த நேரவில்லை. அவர்களுக்குப் பெருங் கிராக்கி ஏற்பட்டுவிட்டது, ஏனென்றால் பிறந்த நாள் கொண்டாடிய மாயா முழு நேரமும் என்னுடன் மட்டுமே நடனமாடிக் கொண்டிருந்தாள்.

மாயாவும் நானும் டாங்கோ, பாக்ஸ்டிராட் போன்ற எல்லா வகையான அசட்டு நடனங்களும் ஆடினோம். இப்படி ஆடிய போது ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்—நெருங்கி நின்று இதன் முன் பார்த்துக் கொள்ளாதவர்கள்

ஆயிற்றே. நெருங்கி நின்று பரிசீலிக்கையில் அவள் மனதுக்கு நான் எப்படிப்பட்டவனுய்த் தோன்றி னேனே எனக்குத் தெரியாது. எப்படியும் நல்ல படி யாகவே தோன்றியிருக்க வேண்டும், இல்லேயேல் மாலேப் பொழுது முழுதும் என்னுடன் நடனமாடி யிருக்க மாட்டாளே.

மாயாவை அருகிலிருந்து பார்த்த நான் அவள் எழில் மிக்கவளாய் இருப்பதாய் நினேத்தேன். அவளுடைய அழகை விவரிக்க வேண்டுமென்று தான் விரும்புகிறேன், ஆனுல் முடியவில்லே. அழகு இசையைப் போன்றதாகும், சொற்களால் அதைச் சொல்வது சாத்தியமன்று. அவளுடைய கேசத் தையும் கண்களேயும் மூக்கையும் வாயையும் விவரித்துச் சொன்னுல், அதைக் கொண்டு நீங்கள் அவளுடைய தோற்றத்தை அறிந்து கொண்டு விட முடியாது, உங்கள் மனக் கண்ணுல் அவளேக் கண்டு கொள்ள முடியாது. யாராலும் அவ ளுடைய அழகைக் கற்பனே செய்து பார்க்க முடி யாது. இதற்குச் சான்று வேண்டுமாஞல் சொல் கிறேன், கேளுங்கள்: மாயா வியாசெம்ஸ்காயா அப்படியே அவளுடைய சகோதரன் கோஷா வியா செம்ஸ்கியின் பிரதியாய் அமைந்தவள். இரு வருக்கும் ஒரேயொரு வயதுதான் வித்தியாசம். ஆகவே மாயா எனது பள்ளிக்கூட நண்பனேயும் என்னேயும்விட ஒரு வயது இளேயவள். முடி, கண், மூக்கு, வாய்—இவற்றில் இருவரிடையிலும் எந்த வேறுபாடும் இல்லே. முழுக்க முழுக்க இருவரும் ஒரே மாதிரியே இருந்தனர். ஆயினும் கோஷா வியாசெம்ஸ்கியின் முகத்தைப் பற்றிச் சிறப்பாய்ச் சொல்வதற்கு ஒன்றுமில்லே, அவ்வளவு சாதா ரணமான முகம் அது. அவனுடைய முகத்தைப்

பார்ப்பீர்களானுல், அவன் பெற்ருேர் தினமும் அவனை வைட்டமின் மாத்திரை சாப்பிட வைத்தார்கள், அவன் வீட்டில் உயர்ந்த ரக சோப்பு உபயோகித்தார்கள் என்பதைத் தவிர உங்களால் வேறு எதுவும் சொல்ல முடியாது.

ஆனுல் மாயா வியாசெம்ஸ்காயா, அவனை அப்படியே உரித்து வைத்தது மாதிரி அவனது அசல் பிரதியாய் இருந்த போதிலும், சித்திரம் மாதிரி அவ்வளவு அழகாய் இருந்தாள்.

அவள் சகோதரன் கோஷா அவளை அசட்டுப் பெண்ணென்று கூறியது கொஞ்சங்கூட சரியல்ல. மாயா அழகானவள் என்பது மட்டுமின்றி கெட்டிக்காரியாகவும் இருக்கக் கண்டேன். நாங்கள் இருவரும் பேசத் தொடங்கியதுமே எனக்கு இது தெளிவாய்ப் புலப்பட்டது.

அவள் என்ன சொன்னுள் தெரியுமா? ''அன்று இசைவிருந்தில் நீ பிரமாதமாய்ப் பாடினுய்—மெய்யாகவே அற்புதமாய் இருந்தது!'' என்ருள்.

நான் மறுக்கவில்லை.

''உன்னுடைய குரலில் அலாதியான ஏதோ ஒரு சிறப்பு இருக்கிறது, இம்மாதிரியான ஒரு குரலை இதன்முன் நான் கேட்டதே இல்லை'' என்று மேலும் கூறினுள்.

அதையும் நான் மறுக்கவில்லை. அவள் கேட்டதில்லை என்ருல், அதில் சந்தேகத்துக்கு இடம் ஏது?

''இப்படி நினைப்பது நான் மட்டுமல்ல'' என்று மாயா தொடர்ந்து கூறிச் சென்ருள். நான் மௌனமாகவே இருந்தேன், எவ்விதத்திலும் தூண்டுதல் அளிக்கவில்லை; அப்படியும் அவள் தொடர்ந்து பேசினுள். ''அம்மா, அப்பா, எங்கள் நண்பர்கள்

—எல்லோருமே இப்படிதான் நினைக்கிறோம். நீ அபார ஆற்றலுடையவன் என்பதாய் எல்லோரும் சொல்கிறார்கள்'' என்றாள்.

நான் தலையை ஆட்டி ஆமோதிப்பு தெரிவித்தேன். எல்லோரும் சொல்கிறார்கள் என்றால், அது மெய்யாகத்தானே இருக்கும்....

ஆம், கோஷா இவளைப் போய் அசட்டுப் பெண் என்று சொல்லி சிறிதும் நியாயமில்லாமல் அல்லவா இப்படித் தூற்றி வந்திருக்கிறான். தூற்றினான் என்று இல்லாவிட்டாலுங்கூட எப்படியும் அவன் சொன்னது கொஞ்சங்கூட சரியல்ல. மாயா நல்ல கெட்டிக்காரப் பெண், அவளுடைய பெற்றோரும் நண்பர்களுங்கூட கூர்மதி கொண்டவர்கள் என்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன்....

இதற்கிடையில் மாயாவிடம் நான் ஒன்று கேட்க வேண்டுமெனத் துடித்துக் கொண்டிருந்தேன். நெடு நேரமாய் இது பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன், அவளிடம் இதைக் கேட்பதற்கு வேண்டிய தைரியத்தை வரவழைத்துக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தேன். இசைக் கல்லூரி மாமண்டபத்தில் முதன்முதலாய் நான் தனிப்பாடகனாய்ப் பாடிய அன்று மாலை, முதன்முதல் அவள் என்னை நேரில் பார்க்கவும் நான் பாடுவதைக் கேட்கவும் நேர்ந்த அன்று மாலை, என்னுடைய குரல் அப்படி அவளைக் கவர்ந்து விடும், என் மீது அவளுக்கு அப்படி ஒரு தனிப் பற்றுதல் உண்டாகிவிடுமென்று முன்கூட்டியே எப்படி அவளால் தெரிந்து கொள்ள முடிந்ததெனக் கேட்க விரும்பினேன். அகஸ்மாத்தாய் அவள் அன்று அந்த மலர்க் கொத்தை அங்கே எடுத்து வந்திருக்க முடியாதே; பாட்டுக் குழுப்

பையன்கள் பலரிடையிலும் நான் அவளுடைய பாராட்டுக்குரியவனாகிவிடுவேன் என்று முன்னதாகவே அவள் ஊகித்திருக்க முடியாதே. அல்லது தன் சகோதரன் கோஷாவிடமிருந்து என்னைப் பற்றிக் கேள்விப்பட்ட பிறகு, என்னை நேரில் பார்க்காமலே எனக்கு மனத்தைப் பறி கொடுத்து விட்டாளா, என்ன?...

மாயாவிடம் நான் இந்தக் கேள்வியைக் கேட்கப் போன நேரத்தில், அவள் தாய் நாங்கள் நடனமாடிக் கொண்டிருந்த அறைக்குள் வந்து பார்த்துவிட்டுக் கைகளைத் தட்டி வியப்பு தொனிக்கும் குரலில் கேட்டார்:

''இன்னுமா நடனமாடிக் கொண்டிருக்கிறீர்கள்? வந்தது முதலாய் இப்படி ஆடுகிறீர்களே, அலுக்கவில்லையா? எதாவது விளையாடக் கூடாதா?''

''என்ன விளையாடுவது?'' என்று கேட்டாள் பிறந்த நாள் கொண்டாடியவள். ''சீட்டு ஆட்டம் போடலாமா?''

''கால் பந்து ஆடலாமா?'' என்று கேட்டான் கோஷா.

''அட கடவுளே! ஏன் கால் பந்து?'' என்றார் பீதியுற்றுவிட்ட அவன் தாய். ''இம்மாதிரியான விழாக்களின்போது விளையாடுவதற்கு அபாயமற்ற எத்தனையோ ஆட்டங்கள் இல்லையா? நான் உங்கள் மாதிரி இருந்த காலத்தில் பறிமுதல் ஆட்டம் ஆடுவது வழக்கம்....''

''ஆமாம், பறிமுதல் ஆடுவோம்!'' என்று கத்தினாள் மாயா.

''பழங் காலத்தில் நம் முன்னோர்கள் ஆடியது போல ஆடலாம்'' என்றான் கோஷா.

நடையிலிருந்து அவன் ஒரு நீல நிறத் தொப்பியை எடுத்து வந்தான். எல்லோரும் எங்களுடைய பறிமுதல் பொருள்களை அதனுள் போட்டோம். அவரவரிடமும் இருந்த சில்லறைப் பொருள்கள் அதனுள் போடப்பட்டன. ஒருவன் பால்-பாயிண்ட் பேனுவைப் போட்டான், இன்னொருவன் கைக்குட்டையைப் போட்டான். அவலட்சண சோதரிகளில் ஒருத்தி தனது கைக்கடிகாரத்தைத் கழற்றித் தொப்பினுள் போட்டாள், இன்னொருத்தி புரூச்சைத் தந்தாள். நான் பிளாஸ்டிக் சீப்பைத் தர வேண்டியதாயிற்று. என்னிடம் வேறு ஒன்றும் இல்லை, சட்டைப் பைகளில் எல்லாக் குப்பைகளையும் நிரப்பிக் கொண்டு வெளியே செல்ல எனக்குப் பிடிக்காது.

மாயா ஒரு நாற்காலியில் இருக்கை கொண்டாள், கழுத்துக்குட்டையால் ஒரு பையன் அவள் கண்களைக் கட்டினுன். கோஷா அவளுடைய நாற்காலிக்குப் பின்னுல் நின்று கொண்டு தொப்பிக்குள்ளிருந்து பறிமுதல் பொருள்களை ஒவ்வொன்ருய் எடுக்க முற்பட்டான்.

''இந்தப் பறிமுதல் பொருளின் உடைமையாளர் செய்ய வேண்டியது என்ன?''

''சேவலைப் போல் கூவட்டும்'' என்று உறுதி தொனிக்கும் குரலில் உத்தரவிட்டாள் மாயா.

அவலட்சண சகோதரிகளில் ஒருத்தி கூவ வேண்டியதாயிற்று. சற்று நேரம் அவள் தயங்கிஞள், முகம் சிவந்துவிட்டது. தனக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்ற அவளுக்கு விருப்பமில்லை, இது நன்ருகவே தெரிந்தது. முன்னணி இளைஞர் குழுவின் தலைவி ஆயிற்றே! ஆயினும், என்ன செய்வது? அவள் அதிர்ஷ்டம் அப்படி,

எழுந்து நின்று சேவலைப் போல் கூவுவதைத் தவிர வேறு வழியில்லை.

எம்பி நின்று ''கொக்கரக்கோ-கோ!'' என்று கூவினாள்.

எல்லோரும் வயிறு குலுங்கச் சிரித்தோம். கோஷாவும் நானும், அவர்களுடைய தாயும் அவலட்சண சகோதரிகளில் இன்னொருவளும் எல்லோருமாய்ச் சேர்ந்து சிரித்தோம். யாராலும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

கண்கள் கட்டப்பட்டு நாற்காலியிலே உட்கார்ந்திருந்த மாயா மட்டும்தான் விதிவிலக்கு—விருப்பு வெறுப்பற்ற கடுமையான நீதித் தேவியாய் அசங்காமல் அமர்ந்திருந்தாள் அவள்.

''இந்தப் பறிமுதல் பொருளுக்கு அளிக்கப்படும் தீர்ப்பு என்ன?'' என்று கேட்டான் கோஷா.

''கைகளை ஊன்றி தலைகீழே நிற்கட்டும்.''

ஊதிப் பருத்த குண்டுப் பையன் ஒருவன் இருக்கையை விட்டு எழுந்தான். மாயாவின் வகுப்பிலிருந்து வந்திருந்த பையன்களில் அவன்தான் அலங்கோலமாய்க் கொழுத்துக் குண்டாய் இருந்தவன். என்ன செய்வதென்று திகைத்துப் போய்த் தோள்களை உலுக்கிக் கொண்டான்.

''எப்படிச் செய்வேன்... என்னால் முடியாதே!''

''சொன்னபடி செய்!'' என்று உத்தரவிட்டான் கோஷா. ''உன்னால் எது முடியும், எது முடியாது என்று தீர்மானிக்க வேண்டியது நீயல்ல, அது ஆண்டவன் செயல்!''

கத்தரிக்காய்க்குக் கால்கள் முளைத்தது மாதிரிக் கரளையாய் இருந்தவன் இரு கைகளையும் தரையில் வைத்து ஊன்றினான், அதற்குள் அவனுக்கு மேல் மூச்சு வாங்கிற்று. பிறகு கால்களை மேலே

உயர்த்த முயன்ருன், ஆனுல் குண்டுக் கால்கள் தரையிலே சாய்ந்து விழுந்தன. ஆகவே அவன் மீண்டும் தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டியதாயிற்று. இரண்டாம் தரமும், மூன்ரும் தரமும் முயன்று பார்த்தான். குட்டி எருது போல கால்களை வெடுக்கென மேலே எழுப்பி ஆட்டினுன், ஆனுல் நிலை குலைந்து பக்கவாட்டில் விழுந்து தரையிலே உருண்டான்.

திரும்பவும் எல்லோரும் ஒவெனச் சிரித்தார்கள்.

''இந்தப் பறிமுதல் பொருளின் உடைமையாளர் செய்ய வேண்டியது என்ன?'' என்று கோஷா பக்தி சிரத்தையுடன் கேட்டான். இந்தத் தடவை அவன் கேள்வி கேட்டபோது மாயாவின் பாதத்தை யாருக்கும் தெரியாமல் காலால் இடித்தது மாதிரி தெரிந்தது எனக்கு.

கணீரென ஒலித்த குரலில் மாயா தீர்ப்பு அளித்தாள்: ''பாட்டு பாடட்டும்!''

நான் துணுக்குற்றுவிட்டேன். விதியானது எனக்கு கருணை காட்டுவதாய் நினைத்தேன். சேவலைப் போல் கூவவோ கைகளை ஊன்றித் தலைகீழே நிற்கவோ சொல்லாமல் என்னைப் பாடச் சொல்லியிருக்கிறது என்று மகிழ்ந்து கொண்டேன். மகிழ்ச்சியொடு எழுந்து நின்று பாடியும் இருப்பேன், அங்கே பியானே இருந்தது, கோஷா எனக்குப் பின்னிசை வாசித்திருப்பான் ...

ஆனுல் கோஷா தன் கையில் உயர்த்திப் பிடித்துக் காட்டியது என்னுடைய பிளாஸ்டிக் சீப்பு அல்ல, யாருக்கோ சொந்தமான பால்-பாயிண்ட் பேனுவைக் காட்டுகிருன் என்பது தெரிந்தது. அதன் உடைமையாளன் நாற்காலி

யிலிருந்து எழுந்து, பரக்கப் பரக்கப் பார்த்தவாறு உச்சந் தலையைச் சொறிந்து கொண்டான். பிறகு வேதனை வாய்ந்த குரல் எழுப்பினான்:

ஏன் பிறந்தேன்,
வியாத்கா வாசியாய்
ஏன் பிறந்தேன்...

ஆனால் பிறந்த நாள் கொண்டாடியவள் அந்தக் குரலைக் கேட்டதும் கண்களிலிருந்து குட்டையை வெடுக்கென இழுத்தெடுத்துவிட்டுத் துள்ளி யெழுந்து அதால் தன் சகோதரனைப் பளீரென அடித்தாள்.

பிற்பாடுதான் நான் தெரிந்து கொண்டேன்— மாயாவின் கண்களை அவள் சகோதரன் கழுத்துக் குட்டையால் கட்டியபோது அவசரமாய் அவன் காதுக்குள் பேசி அவள் செய்திருந்த இரகசிய ஏற்பாட்டைப் பிற்பாடுதான் தெரிந்துகொண்டேன். என்னுடைய பறிமுதல் தொப்பியிலிருந்து எடுக்கப்பட்டதும் அவள் சகோதரன் காலால் அவள் பாதத்தை இடிக்க வேண்டும், யாரும் இதைக் கவனிக்காதபடியும், தனக்கு அதிகமாய் வலிக்காதபடியும் இடிக்க வேண்டுமென மாயா ஏற்பாடு செய்திருந்தாள். என்னுடைய பறிமுதல் எடுக்கப்பட்டது தெரிந்ததும் பாட்டு பாடும்படி தீர்ப்பளிப்பதெனத் தீர்மானித்திருந்தாள். நான் பாடுவதைக் கேட்க விரும்பிய அவள் இந்த ஆட்டத்தின் விதிகளை மீறிச் செல்லவும் சதி வேலை புரிந்து ஏமாற்றவும் தயாராயிருந்தாள். பிற்பாடு அவள் இந்த விவரங்களை என்னிடம் சொன்னாள்.

ஆனால் கோஷா அவளை ஏமாற்றி வேடிக்கை

பார்ப்பதென்று முடிவு செய்து வேண்டுமென்றே தவறான நேரத்தில் காலால் அவள் பாதத்தை இடித்தான். அதற்காகத்தான் அவனுக்குச் சரியானபடி கிடைத்தது.

மாயாவுக்கு வந்த கோபத்தில் அவள் முகம் நெருப்பாய்க் கனன்றது.

''இது அசட்டு விளையாட்டு, அதனால்தான் யாரும் இன்று இதை வியாடுவதில்லை!'' என்று இரைந்தாள்.''அவரவரும் தமக்குத் தெரிந்ததைச் செய்ய வேண்டுமே தவிர, தெரியாததைச் செய்ய முயலுவது அர்த்தமற்றது.''

மாயா அபாரக் கெட்டிக்காரி, சந்தேகமில்லை; கெட்டிக்காரி மட்டுமல்ல, கண்ணுக்கு இனிய சுந்தரவதியுங்கூட—கோபங் கொண்டு அவள் சீறி விழுந்த இந்த நேரத்திலுங்கூட அவ்வளவு அழகாய் இருந்தாள்.

அவளுடைய தாய், எதிர்பாராத இந்த ஆவேசத்தைக் கண்டு மனம் புண்பட்டவராய் அறையிலிருந்து வெளியே போய்ச் சேர்ந்தார்.

பிறகு மாயா இசைப் பெட்டியிடம் ஓடி ஒரு புதிய இசைத்தட்டைப் பாட வைத்தாள். மீண்டும் அவளும் நானும் நடனமாடத் தொடங்கினோம். கச்சேரிக்கு முன்பே அன்று மாலை எப்படி அவளால் தெரிந்து கொள்ள முடிந்ததென்று கேட்பதற்குத் திரும்பவும் நான் விரும்பினேன். மலர்க் கொத்துடன் தயாராய் வந்திருந்தாளே, எப்படி அது என்று கேட்பதற்கு மனதைத் தைரியப்படுத்திக் கொண்டேன். ஆனால் திடுமென என் கால்கள் தடுமாறின, நாங்கள் நடனமாடிய அந்த விநோத இசை என்னைத் தடுமாறித் திகைக்கச் செய்தது. கழுத்தை நீட்டிக் கொண்டு, இசைப்

பெட்டியில் சுழன்ற இசைத்தட்டை உற்று நோக்கினேன்.

''ஏன், உனக்குப் பிடிக்கவில்லையா இது?'' என்று மாயா கவலை தொனிக்கும் குரலில் கேட்டாள். ''மெய்யாகவே பிடிக்கவா இல்லை? எனக்கு இது மிகவும் பிடித்த இசையாயிற்றே....''

''எனக்கும் பிடித்தமான இசைதான், ஆனால் 33ல் சுழல வேண்டிய இசைத்தட்டை 78ல் அல்லவா சுழலவிட்டிருக்கிறாய்?'' என்று சங்கடப் பட்டுக் கொண்டு கூறினேன்.

''அப்படியா?'' என்று மாயா வியந்து கொண்டாள். ''வேகத்தை மாற்ற மறந்துவிட்டேன் போலிருக்கிறது.'' பிறகு பலமாய்ச் சிரித்தவாறு ''ஒழியட்டும் போ! இப்படியே பாடட்டும்!'' என்றாள்.

''ஒழியட்டும்'' என்று நானும் ஒத்துக் கொண்டேன்.

''இவர்கள் நடனமாட்டும், நாம் போகலாம், வா.''

''எங்கே?''

என் சட்டைக் கையைப் பிடித்து இழுத்தாள். இருவரும் கதவைத் திறந்து கொண்டு அறையிலிருந்து நழுவி வெளியே நடையில் சென்று இன்னொரு கதவைக் கடந்தோம், பிறகு மூன்றாவது கதவையும் கடந்து, முடிவில் நகருக்கு மேலே எங்கோ உயரத்தில் தொத்திக் கொண்டிருந்த ஓர் உப்பரிகையில் வந்து நின்றோம்.

ஏற்கனவே நான் கூறியது போல அது மே மாதம். புதிய மொக்குகளின் மணமும் பெட்ரோலின் வாசனையும் கலந்து காற்றிலே வீசின. நகர விளக்குகள் எரிய ஆரம்பித்துவிட்டன. மலை போல்

வஸ்தானியே சதுக்கத்தில் நின்ற கட்டடத்தை உடனே நான் கண்டு கொண்டுவிட்டேன். கையை நீட்டினல் தொட்டுவிடலாம் போலத் தோன்றும் படி அது நாங்கள் நின்ற இடத்திலிருந்து அவ் வளவு அருகாமையில் தெரிந்தது. அதற்கு சற்று அப்பால் ஸ்மொலேன்ஸ்கயா சதுக்கத்து வான் முகட்டுக் கட்டடமும் உக்ரேனியா ஓட்டலும் மாஸ்கோ பல்கலேக்கழகமும் தெரிந்தன. யாவும் எங்கள் உள்ளங் கையில் வைத்தமைத்தவை மாதிரி கண்ணெதிரே தெரிந்தன.

உப்பரிகைக்குச் சற்று வலப் புறத்தில் திகழொளியில் பளிச்சிட்ட தூண்களும் அவற்றின் மீது முன்னங் கால்களே வானேக்கி உயர்த்திக் கொண்டு நின்ற நான்கு வெண்கலக் குதிரைகளும் காட்சி யளித்தன. குதிரைகளுக்குப் பின்னல் வெண்கலத் தேர்ப்பாகன் லகான்களே இழுத்துப் பிடித்தவாறு நிற்பது தெரிந்தது. நான் பல ஆண்டுகளாய் மாஸ் கோவில் வாழ்ந்து நகரை நன்கு அறிந்தவனய் இருந்திராவிடில் நிச்சயம் அந்தக் கட்டடத்தை பொல்ஷோய் அரங்கென நினேத்திருப்பேன். ஆனல் நான் மாஸ்கோவை நன்கு அறிந்தவன், ஆகவே அந்தத் தூண்கள் மீது அமைந்த வெண் கலக் குதிரைகள் பொல்ஷோய் அரங்கைச் சேர்ந்த வையல்ல, குதிரைப் பந்தய மைதானத்துக்கு முன் இருப்பவை என்பது எனக்குத் தெரியும். நான் குதிரைப் பந்தயங்களே பார்த்தவனல்ல, ஆனல் இவை எப்படி இருக்குமென்று ஓரளவு தெரிந்தவனே. கோல்யா பிர்யுக்கோவ் எனக்கு விளக்கமாய்ச் சொல்லியிருந்தான்—முதலில் வரும் குதிரை எதுவென ஊகிக்க முடிந்தால், சிரமமே இல்லே, வெற்றி பெற்று பணத்தைத் தட்டிக்

கொண்டுவிடலாம் என்று சொல்லியிருந்தான். கோல்யாவும்கூட குதிரைப் பந்தயங்களுக்குச் சென்று பார்த்தவனல்ல, விவரமறிந்தோரிடமிருந்து கேட்டுத் தெரிந்து வைத்திருந்தான். குதிரைப் பந்தய மைதானம் கத்தை கத்தையாய்ப் பணம் பெறத்தக்க இடம் மட்டுமல்ல, கையிலுள்ள கடைசிக் காசையும் பறிகொடுக்க நேரும் இடமுமாகும்.

ஆயினும் வெளித் தோற்றத்தில் அது பொல்ஷோய் அரங்கைப் போன்றதாகவே இருந்தது. பல ஆண்டுகளாய் மாஸ்கோவில் வாழ்ந்து வரும் நானும்கூட இந்தத் தூண்கள் குதிரைப் பந்தய மைதானத்தின்முன் அமைந்தவையல்ல, பொல்ஷோய் அரங்கைச் சேர்ந்தவையே என்பதாகவும் முன்னங் கால்களை உயர்த்திக் கொண்டு நிற்கும் இந்தக் குதிரைகள் அனைத்து உலகிலிருந்தும் மாஸ்கோவுக்கு வந்து செல்வோர் நன்கு அறிந்த பொல்ஷோய் அரங்கின் நான்கு குதிரைகளே என்பதாகவும் நினைக்க விரும்பினேன்.

மாயாவும் நானும் வாய் பேசாமல் உப்பரிகையில் நின்று கொண்டிருந்தோம். நெடு நேரமாய் என்னை நச்சரித்து வந்த அந்தக் கேள்வியை அவளிடம் கேட்டதற்கு முடிவில் தக்க சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாய் நினைத்தேன். கச்சேரியைக் கேட்கு முன்பே அன்று மாலை அவள் தயாராய் மலர்க் கொத்தைக் கையில் எடுத்து வந்திருந்தாளே, எப்படி அது?

இதைக் கேட்டுவிடுவதென்று முடிவு செய்து வாயையும் திறந்துவிட்டேன். ஆனால் கடைசித் தருணத்தில் கேட்காமலே வாயை மூடிக் கொண்டுவிட்டேன். உண்மை என்னவென்றால், இதை

கேட்க எனக்கு அச்சமாயிருந்தது. அவள் என்ன பதில் சொல்வாளோ? யாருக்குத் தெரியும்? நான் அவளிடமிருந்து ஆவலாய் எதிர்பார்த்ததற்கு நேர் விரோதமான பதிலாய்ச் சொல்லிவிடுவாளோ என்று பயந்தேன்.

ஆகவே வாயைத் திறக்காமலே இருவரும் அந்த உப்பரிகையிலே நின்று கொண்டிருந்தோம். எனக்கு இன்பமாகவே இருந்தது. நான்கு வெண் கலக் குதிரைகள் பூட்டிய அந்தத் தேர் இரவு வானத்திலே பறந்தோடிற்று.

இடைக் குறிப்பாய் இதையும் சொல்ல விரும்பு கிறேன்—ஒரு தரம் எங்கள் பள்ளி மாணவர்கள் எல்லோரையும் பொல்ஷோய் மன்றத்துக்குக் காலே நேர ஆட்டத்துக்கு அழைத்துச் சென்றிருந் தார்கள். ஆட்டத்தின் முடிவில் அரங்க மேடை யில் மெய்யான குதிரைகளே பாய்ந்தோடி வந்து முன்னங்கால்களே உயர்த்தின. சரடு விடவில்லே, உண்மையைச் சொல்கிறேன்.

## 5

பிறகு ஏககாலத்தில் எனக்கு மூன்று கடிதங்கள் வந்தன.

எங்களுடைய பள்ளியின் முன்னறையில் படிக் கட்டுக்கு அருகே ஒரு சிறு மேஜையின் பின்னுல் பலீஞ ரொமானவ்ஞ என்ஞெரு வயதான அம்மா அமர்ந்திருப்பார். வாயிற்காவலரும் அல்ல, செய லாளரும் அல்ல அவர். வரவேற்பாளரான ஒரு வகைச் சேவகராய் இருந்தார் என்று சொல்ல லாம். இப்படிப்பட்ட உத்தியோகம் இல்லாது மறைந்து நெடுங் காலமாகிறது. ஆயினும் இப்

படி ஓர் உத்தியோகம் இருந்து வந்த அந்தப் பழங் காலம் முதலாய் பலீஞ ரொமானவ்ஞ இங்கு அமர்ந்திருந்தவர். பழங் காலத்தில் எங்கும் முன்னறையில் வயதான கிழவி உட்கார்ந்து கொண்டு பின்னிக் கொண்டும், உள்ளே வருவோரை நீங்கள் யார், எதற்காக இங்கே வர வேண்டும், யாரைப் பார்க்க வேண்டும் என்று விசாரித்துக் கொண்டும் இருப்பது வழக்கம்.

பின்வரும் விவரத்தையும் சொன்னுல், சித்திரம் முழுமையாகிவிடும்: எங்கள் பள்ளிக்கூடம் நடைபெற்று வந்த அந்தப் பழைய கட்டடத்தின் வாயிற் கதவின் உட்புறத்தில் ஒரு வெண்கல மணி தொங்கிக் கொண்டிருக்கும். இந்தப் பழைய கட்டடத்துக்கு நான் போதிய இடம் ஒதுக்கி விவரிக்க வேண்டுமென நினைத்துக் கொள்கிறேனே தவிர, இதைச் செய்ய முடியவில்லை. பழங்காலத்தில் இந்த வெண்கல மணி பயன்பட்டு வந்திருக்க வேண்டும்,உள்ளே வந்தவர்கள் தெருப் பக்கத்திலிருந்து மணியின் கயிற்றை இழுத்திருப்பார்கள், அவர்களுடைய வருகையை அறிவித்து மணி ஒலித்திருக்கும். அந்தக் காலத்தில் இப்படிதான் நடந்திருக்க வேண்டும். அந்தப் பழக்கம் மறைந்து எவ்வளவோ காலமாகிறது, மின்விசை இந்த மணியின் வேலையைச் செய்ய முற்பட்டுவிட்டது. ஆயினும் வெண்கல மணி இன்னமும் கதவுக்குப் பின்னுல் தொங்கிக் கொண்டிருந்தது, மணியை அங்கிருந்து அவிழ்த்து பழைய சமான்களை வாங்குவோரிடம் கொண்டு போய்க் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் இதுவரை உதிக்கவில்லை. யாருக்கும் இந்த மணி தீங்கு இழைத்துவிடவில்லை, அங்கேயே தொங்கிக்

கொண்டிருக்கட்டும் என்று விட்டு வைத்திருந் தார்கள்.

எங்களுடைய வரவேற்பாளர் பலீனு ரொமா னவ்னு குறித்தும் இவ்வாறே சொல்லலாம். அங்கே அவர் அந்தச் சிறு மேஜையின் பின்னுல் உட்கார்ந்து பின்னிக் கொண்டிருந்தார். புதிதாய் உள்ளே வருவோரை என்ன வேண்டுமென விசாரிப்பார்; படிக்கட்டில் பையன்கள் அதிகம் விளையாடாமல் பார்த்துக் கொள்வார். பிறகு தபால் வந்ததும் கடிதங்களைத் தன்னுடைய சிறு மேஜை யில் வரிசையாய் வைப்பார். சில பையன்கள் கொடுத்து வைத்தவர்கள், கடிதங்கள் மட்டு மின்றி சில சமயம் அவர்களுக்குப் பண அஞ்சல் கூட வருவது உண்டு.

ஆனுல் இந்த மேஜைக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இருந்ததில்லை. பண அஞ்சல்கள் அனுப்புவது இருக்கட்டும், கடிதம் எழுதுவோரும் கூட எனக்கு யாரும் இல்லையே. ஆகவே நான் இந்தச் சிறு மேஜையின் பக்கம் திரும்பிப் பார்ப் பதே இல்லை.

பிறகு ஒரு நாள் இந்த அதிசயம் நிகழ்ந்தது. முன்னறைக்குள் ஓடி வந்த நான் வயது முதிர்ந்த அந்த அம்மாளுக்கு அவசரமாய் முகமன் கூறி விட்டுப் படிக்கட்டை நோக்கி விரைந்தேன். அப்பொழுது திடுமென பலீனு ரொமானவ்னு என்னைக் கூப்பிட்டார்:

''ழேன்யா.''

''ஏன்?''

''உனக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன.''

''என்ன?''

''கடிதங்கள், மூன்று கடிதங்கள்.''

என் காதை நம்ப முடியாதவனாய் அந்தச் சிறு மேஜையிடம் திரும்பி வந்தேன். பிறகு அங்கே பார்த்தபோது எந்தச் சந்தேகமும் இல்லை, புரோ ஹறொவ் ழேன்யா என்று என்னுடைய முகவரி தீட்டப் பெற்றிருந்த மூன்று கடிதங்கள் அந்த மேஜையின்மீது இருக்கக் கண்டேன். என்னை ஏமாற்றி வேடிக்கைப் பார்க்க அல்லவா முயலு கிறார்கள், யாராய் இருக்கும் என்று உடனே நான் சிந்திக்கலானேன். எங்கள் பையன்கள் எந்நேர மும் யாரையாவது முட்டாளாக்கி வேடிக்கை பார்க்க விரும்புகிறவர்கள். ஆனால் மூன்று கடிதங் களிலும் தபால் தலைகள் ஒட்டப்பட்டு, தபால் முத்திரைகளும் சரியாகவே இடப்பட்டிருந்தன.

நான் வியப்புறாமல் என்ன செய்வது? என் வாழ் நாளில் இதுவரை என்றுமே எனக்குக் கடிதம் வந்ததில்லை, இது பற்றி நான் கவலைப்பட்டுக் கொண்டதும் இல்லை. பிறகு இருந்தாற் போல் இருந்து ஏககாலத்தில் மூன்று கடிதங்கள்! ஆனால் இன்னமும் எனக்குச் சந்தேகமாகவே இருந்தது —பையன்கள் குறும்பு செய்து வேடிக்கை பார்க் கிறார்கள், கடிதங்களைப் பிரித்துப் பார்த்தால் உள்ளே ஒன்றும் இல்லாமல் காலியாய் இருக்கும், அல்லது மண்டையோடும் எலும்புகளுமோ, இதே போன்ற வேறொரு அசட்டுச் சித்திரமோ வரையப்பட்ட காகிதம்தான் இருக்கும் என்று நினைத்தேன்.

ஆகவே நான் வகுப்பிலே இந்தக் கடிதங்களைப் பிரித்து, எல்லாப் பையன்களும் என்னைப் பார்த் துச் சிரிக்கும்படி வைத்துக் கொள்ள கூடாதென்று முடிவு செய்து கொண்டேன். மாலை வரைக் காத்

திருந்து, பிறகு ஒதுக்குப் புறமான ஒரு மூலையில் இவற்றைப் பிரித்துப் படித்தேன்.

இந்தக் கடிதங்களை இன்றும் நான் பத்திரமாய் வைத்திருக்கிறேன். முழு வாசகத்தை இங்கு அப்படியே தருகிறேன்.

முதலாவது கடிதம்:

அருமை ழேன்யா,

நீ அடைந்து வரும் முன்னேற்றத்தைக் கண்டு நாங்கள் எல்லோரும் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். நீ பாடிய பாட்டு ஒன்று வானொலியில் ஒலிபரப்பப்பட்டதாய் சிறிது காலத்துக்கு முன்பு ரோசா மிஹாய்லவ்னா எங்களிடம் சொன்னார். ஆனால் துரதிர்ஷ்டவசமாய் எங்களில் யாரும் இந்த வானொலி நிகழ்ச்சியைக் கேட்கவில்லை. பிறகு நாங்கள் உன்னுடைய பாட்டைத் திரும்பவும் ஒலிபரப்ப வேண்டுமென்று வானொலிக் குழுவினருக்குக் கூட்டாய்க் கடிதம் எழுதினோம். எங்களுடைய வேண்டுகோளின் படி இந்தப் பாட்டு இம்மாதம் பதினேழாம் நாள் காலையில் பத்தரை மணிக்கு ஒலிபரப்பப்படும் என்று அவர்கள் எங்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். குறித்த நேரத்தில் எல்லோரும் பெரிய கூடத்தில் கூடி வானொலிப் பெட்டியின் விசைப் போட்டுவிட்டுக் காத்துக் கொண்டிருந்தோம். முடிவில் அறிவிப்பாளரின் குரல் ஒலித்தது: ''பள்ளி வயதுக்கு முற்பட்ட குழந்தைகளுக்கான லீபெத்ஸ்க் குழந்தை இல்லத்தவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி இந்தப் பாட்டை அளிக்கின்றோம். இந்த இல்லத்தின் முன்னாள் மாணவனான ழேன்யா புரோஹரொவ் பாடும் 'வழிக் குறியொலி' என்னும் பாட்டு இது.'' மூச்சை அடக்கிக் கொண்டு நாங்கள் எல்லோரும் ஆவலொடு உன் பாட்டைக் கேட்டோம். பிறகு நெடு நேரம் கையொலி முழக்கமிட்டு உன்னை வாழ்த்தினோம். தற்போது

இங்கு இருக்கும் குழந்தைகள் புதியவர்கள், நீ இருக்கும் போது இருந்தவர்களல்ல. இவர்களில் யாரையும் உனக்குத் தெரியாது. இருந்த போதிலும் இப்பொழுது இவர்கள் உன்னைப் பற்றித் தெரிந்து கொண்டு, உன்னை நினைத்துப் பெருமை கொள்கிறார்கள்.

நீ முழுநேரப் பாடகனாகியதும் இங்கு வர வேண்டும், எங்கள் எல்லோரையும் சந்திக்க வேண்டும். உன்னுடைய பிள்ளைப் பருவ ஆண்டுகளில் நீ இருந்து வந்த இந்த இல்லத்துக்கு வருகை தருவாய் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

நீ முழு நலமுடன் இருக்க வேண்டும், ஊக்கமாய் முயற்சியெடுத்துப் படிக்கவும் பயிற்சி பெறவும் வேண்டும்.

என் வாழ்த்துகளையும் மனம் நிறைந்த நன்றியையும் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

உன் அன்புக்குரிய
**வேரா இவானொவ்னா**

பின் குறிப்பு: ரோசா மிகாய்லவ்னாவும் உனக்கு அன்பு கனிந்த வாழ்த்துகள் தெரிவிக்கிறார். ''வழிக் குறியொலி'' பாட்டை இப்பொழுது அவர் குழந்தைகளுக்குக் கற்றுத் தருகிறார்.

இரண்டாவது கடிதம்:

ழேன்யா,

லீபெத்ஸ்கிலுள்ள சாஷா தியுஞேவாவிடமிருந்து உனக்கு வரும் கடிதம் இது. அனேகமாய் என்னை உனக்கு நினைவு இருக்காது—குழந்தை இல்லத்தில் நீயும் நானும் ஒரே பிரிவில் ஒன்றாய் இருந்தோம். அதன் பிறகு எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன, என்றாலும்

உன்னை எனக்கு நன்றாய் நினைவு இருக்கிறது.

தற்போது நான் லீபெத்ஸ்க் போர்டிங் பள்ளியில் நான்காம் வகுப்பு மாணவி. சில சமயம் நாங்கள் இசை நிகழ்ச்சி நடத்துவது உண்டு. எங்களுக்குரிய பாட்டுகளைப் பாடி முடித்தபின் இசைத்தட்டு சங்கீதம் போட்டு நாங்கள் நடனமாடுவோம். ஆனால் இங்கே எங்களிடம் இசைத்தட்டுகள் அதிகம் இல்லை, ஆகவே கிடைத்ததைப் போட்டு நடனமாடுகிறோம். நேற்று ஒரு பெண் ஒரு புதிய இசைத்தட்டு கொண்டு வந்திருந்தாள். அதைப் பாட வைத்து விட்டு நான் ஸீனு கிவோஸ்தியோவாவுடன் சேர்ந்து நடனமாடினேன் (அவளும் நமது பிரிவில் இருந்தவள்தான், நினைவு இருக்கிறதா உனக்கு?).

அந்த இசைத்தட்டின் குரல் நான் நன்கு அறிந்த குரலாய் இருப்பது தெரிந்தது, ஆனால் யாருடையது என்று என்னால் ஊகிக்க முடியவில்லை. பாட்டு முடிவடைந்ததும் நான் ரேடியோகிராமிடம் சென்று, இசைத்தட்டை எடுத்துப் பார்த்தேன்.

அதில் உன்னுடைய பெயரைக் கண்டதும் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் இசைத்தட்டு என் கையிலிருந்து நழுவி கீழே விழுந்துவிடும் போலாகிவிட்டது. அதை நான் மீண்டும் பாட வைத்தேன், மற்றவர்கள் சிலர் ஆட்சேபித்ததைப் பொருட்படுத்தவில்லை. என்ன ஆயிற்று என்றால் நான் சொன்னதை இவர்கள் நம்பவில்லை, நாம் சிறு பிள்ளைகளாய் இருந்த காலம் முதலாய் உன்னை எனக்குத் தெரியும் என்பதை ஸீனு ஒருத்தியைத் தவிர வேறு யாரும் நம்பத் தயாராயில்லை. ஸீனுவும் நானும் சொல்வதை இது நாள் வரை இவர்கள் நம்ப முடியாதென்றே கூறி வருகிறார்கள்!

ழேன்யா, உன்னால் முடியுமானால், உனக்குள்ள பாடங்களுக்கும் கச்சேரிகளுக்கும் இடையே நேரம் கிடைக்குமானால், எனக்கோ

ஸீனுவுக்கோ நீ எழுத வேண்டும். இரண்டு வார்த்தை எழுது போதும், நாங்கள் கதை அளக்கவில்லை, உண்மையைத்தான் கூறுகிறோ மென்று இவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும் பொருட்டு எழுதச் சொல்கிறேன்.

நீ விரும்பினுல் இருவரும் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொள்வோம்.

நிற்க, இங்கே எங்கள் கச்சேரிகளில் சில நேரம் நான் பாடுகிறேன்; எல்லாம் கற்றுக்குட்டிப் பாட்டுகள்தான், வேடிக்கைக்காக வேண்டி பாடுகிறேன். யாராவது பாடியாக வேண்டுமே!

வாழ்த்துகளுடன்,

உனது பழைய தோழி
**தியுனேவா சாஷா**

மூன்ருவது கடிதம்:

ழேன்யா,

நான்தான் எழுதுகிறேன்! என்ன சேதி, எப் படி இருக்கிருய்? நான் நல்லபடியாகவே இருக் கிறேன். ஆனுல் யாரிடமும் எதையும் நீ சொல் லாதே. கடிதத்தின் உறையில் வேண்டுமென்றே தான் நான் அனுப்புவோன் பெயரையும் முகவரியையும் எழுதாமல் விட்டிருக்கிறேன், நான் எங்கே இருக்கிறேன் என்று யாருக்கும் தெரியக்கூடாதென்று. சுருக்கமாய்ச் சொல்வ தெனில், எனக்கு ஓர் இடம் தேடிக் கொண்டு விட்டேன்; மென்முடிப் பண்ணை ஒன்றில் வேலை செய்கிறேன், என்ன வேலை என்பது முக்கிய மல்ல. இங்கு நாங்கள் மென்முடிக் கீரிகள் வளர்க்கிருேம், உலகிலுள்ள எல்லா வித வண் ணங்களிலுமான கீரிகள்! அதியற்புதமானவை, ஆனுல் வருந்தத்தக்கது என்னவெனில் வளர்ந்து பெரியவையானதும் இவற்றை வெளிநாடு களுக்கு விற்க வேண்டியிருக்கிறது, வெளி

நாட்டுப் பணத்துக்காக! நம்மிடமிருப்பது அவர்களுடையதைப் போல் சிறப்பானதல்லவா, என்ன!

ழேன்யா, என்னைக் கண்டுபிடிப்பதற்காகத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். வி. க. என்னைத் தேடிக் கண்டுபிடிக்க முயலுகிறார். காவல் துறையினர் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் இங்கு இருப்போர் வேண்டுமென்றே அவர்களைத் தவறான திசையில் திருப்பிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள், ஏனென்றால் இன்னும் ஒரு மாதத்தில் எனக்குப் பதினாறு வயதாகிவிடும், அதன்பின் என்னை யாராலும் வலுக்கட்டாயமாய்த் திரும்பி வரச் செய்ய முடியாது. காலம் வந்ததும் நானே நேரில் வி. கவுக்கு எழுதுகிறேன், என்னுடைய அடையாளச் சீட்டைப் பெறுவதற்கு வேண்டிய எனது பத்திரங்களையும் சான்றிதழையும் அனுப்பும்படிக் கேட்டு எழுதுகிறேன்.

இங்கு எல்லோரும் அருமையானவர்களாய் இருக்கிறார்கள், நிலைமையைப் புரிந்து கொள்கிறார்கள். ழேன்யா, இப்பொழுது நான் சொந்தத்தில் ஒரு நாய் வைத்திருக்கிறேன், வடதுருவ இனத்து நாய். போன் என்று இதைக் கூப்பிடுகிறேன்.

நீ எனக்குப் பதில் எழுத முயல வேண்டாம். வேண்டுமென்றேதான் எனது முகவரியை இங்கு நான் குறிக்கவில்லை. என்னுடைய பத்திரங்கள் கிடைத்ததும் எல்லா விவரங்களையும் உனக்குத் தெரிவிப்பேன்.

இன்னும் நீ பாடுகிறாயா? முடியும்போதே முடிந்த முழு அளவுக்கும் ஆசை தீர பாடு!

நலமே வேண்டுகிறேன்.

கோ. பி.

## பிரிவு மூன்று

### 1

''வீத்யா! வீ-ஈ-த்யா! சீக்கிரம்!''

எல்லோரோடும் சேர்ந்து நானும் தொண்டை கிழிய கத்தினேன், பெஞ்சுமீது எம்பியெம்பிக் குதித்தேன். எதற்காக இவ்வளவும் என்று யாராவது கேட்டிருந்தால், கேள்வி நியாயமாகவே இருந்திருக்கும்!

முதலாவதாக, வீத்யா தலைக் குல்லா இல்லாமல்தான் நீந்தினுன் என்றாலும், எங்களுடைய ஆர்வக் கூச்சல் எதுவும் அவன் காதில் விழ முடியாது, ஏனென்றால் கவிழ்ந்து நீந்துகையில் உங்கள் காதுகள் பெரும் பகுதி நேரத்துக்கு நீருக்கடியிலே இருக்கின்றன. மூச்சு வாங்குவதற்காக தலையை ஒருக்கணித்துக் கொள்கிறீர்களே, அந்தக் கணப் பொழுதிலுங்கூட உங்கள் காதுகளில் நீர் அடைத்துக் கொண்டுதான் இருக்கிறது.

இரண்டாவதாக, முக்கால் வாசித் தொலைவைக் கடந்து இறுதிக் கோட்டிலிருந்து ஐம்பது கஜத்துக்கு வந்தபின் உங்கள் தசைநார்களையும் இருதயத்தையும் தவிர ஏனையவை யாவும் தற்போதைக்குத் தேவையற்றவையாய் ஒதுக்கி வைத்து விடுவீர்கள், எதையும் நீங்கள் பார்க்கவோ, கேட்கவோ கூடியவராய் இருக்கமாட்டீர்கள்.

மூன்றாவதாக, அவனை மேலும் விரையும்படி

வற்புறுத்துவதில் அர்த்தமில்லை, ஏனென்ருல் இனி வெற்றியை யாராலும் அவனிடமிருந்து தட்டிக் கொண்டுவிட முடியாது. தொடக்கத்திலேயே வீத்யா ஏனையப் போட்டியாளர்களைக் காட்டிலும் ஆறு அடி முந்திக் கொண்டு சென்றுவிட்டான், அந்த இடைவெளி விஞடிக்கு விஞடி அதிகமாகிச் சென்றது. இப்பொழுது வீத்யா இறுதிப் பகுதியின் பாதிக்கு வந்துவிட்டான், ஆஞல் ஏனையோர் தமது வெண்ணிறப் பாதங்கள் நீருக்கு மேல் பளிச்சிட தடாகத்தின் எதிர்முனையில் திரும்பிக் கொண்டிருந்தார்கள்....

ஆஞல் நாங்கள் ஓயவில்லை, இயற்கை அன்னை எங்களுக்கு இவ்வளவு பலமான பெரிய தொண்டையை அளித்திருக்கிருளே என்று மகிழ்ந்தவாறு கூச்சலிட்டோம், கைகளை ஆட்டி வீசிஞேம். ஏனென்ருல் அவன் **எங்களுடைய** வீத்யா, எங்கள் பள்ளியை, எங்கள் வகுப்பைச் சேர்ந்த வீத்யா தித்தரேன்கோ.

அவன் வெற்றி பெற்றுவிட்டான். நீச்சல் சந்துகளின் கோடியில் இவ்வளவு நேரம் குனிந்து கொண்டு நின்ற நடுவர்கள் ஒவ்வொருவராய் விசையழுத்த விஞடிக் கடிகாரங்களை நிறுத்திவிட்டு நிமிர்ந்தார்கள். பிறகு எல்லோரும் தம்மிடையே பரபரப்பாய்ப் பேசியவாறு நடுவர்களது மேஜையை நோக்கி நடந்தார்கள்.

**வீத்யா**, முறைப்படி அவன் செய்ய வேண்டியதற்கேற்ப, நீரில் மிதந்து சூடு தணிந்து நிதான மூச்சைத் திரும்பப் பெற முயன்று கொண்டிருந்தான். அவனுடைய எதிராளிகள் சந்துகளுக்கு இடையிலிருந்த நுரை-ரப்பர் வடங்களுக்கு அடியில் மூழ்கி அவனிடம் நீந்திச் சென்று அங்கேயே

நீரில் அவன் கையைப் பிடித்துக் குலுக்கியும் அவனைக் கட்டிப் பிடித்தும் தோளில் தட்டிக் கொடுத்தும் தமது போட்டியாட்டப் பெருந்தன் மையை வெளிப்படுத்திக் காட்டினர். அந்த இளம் வயதிலேயே அவர்கள் இதில் கொஞ்சமும் சளைக்க வில்லை.

''புரிவேஸ்தினிக் விளையாட்டுக் குழுவைச் சேர்ந்த வீக்தர் தித்தரேன்கோவுக்கே உரியது வெற்றி'' என்று முழங்கினர் அறிவிப்பாளர். ''தித்த ரேன்கோவின் நேரம்: இரண்டு நிமிடம் நான்கு விஞடி.'' பிறகு கணப்பொழுது தயங்கியபின் மேலும்தொடர்ந்தார்: ''தித்தரேன்கோவின்நேரம் விளையாட்டுப்போட்டி மாஸ்டர் பட்டமும் பெறு வதற்குரியதாகும்.'' பிறகு மீண்டும் தயங்கினர், முடிவில் சொல்ல வேண்டியதை எப்படிச் சொல்வ தெனத் திகைப்பது போல் தோன்றினர். ஒருவாறு சமாளித்துக் கொண்டு அறிவித்தார்: ''வீக்தர் தித்தரேன்கோவின் இரண்டு நிமிடம் நான்கு விஞடி நேரம் சோவியத் சாதனையாகும்!''

என்னென்பது! அதன்பின் அங்கு ஏற்பட்ட அமளி மாண்டோரையும் சமாதியிலிருந்து எழுப் பத்தக்கதாய் இருந்தது! வீத்யாவின் வகுப்பைச் சேர்ந்த நாங்கள் மட்டுமல்ல, எல்லோரும், நெடுந் தொலைவுகளிலிருந்து வந்தவர்களாய்த் தோன்றிய நாங்கள் அறியாதோர் எல்லோரு மாய்ச் சேர்ந்து கால்களைத் தட்டி, கை கொட்டி வாழ்த்தொலி எழுப்ப முற்பட்டனர். பதினைந்து வயதில் சோவியத் சாதனையை ஏற்படுத்துவதும், சட்டைக் காலரில் சிறப்புக்குரிய விளையாட்டுப் போட்டி மாஸ்டர் சின்னத்தை அணிந்து கொள் ளும் உரிமை பெறுவதும் சாதாரண காரிய

மல்லவே! பதினைந்தே வயதானவன் இதைச் செய்வது எவ்வளவு பெரிய சாதனை!

பூரித்துப் போய்விட்ட ஆசான் அவசரமாய் வீத்யாவின் தோள்களில் மேலங்கியைப் போட்டு மூடி அவனை உடுப்பு அறைகளுக்கு இட்டுச் சென்றார்.

''நாம் போய் அவனை வாழ்த்திவிட்டு வருவோம், வருகிறாயா நீ?'' என்று கேட்டான் பரபரப்படைந்துவிட்ட கோஷா வியாசெம்ஸ்கி.

''நூற்றுக் கணக்கானோர் அங்கே கூடியிருப்பார்களே'' என்று கூறி என் தயக்கத்தைத் தெரிவித்தேன்.

''அதனால் என்ன?''

''அவர்கள் நம்மை உள்ளே விடுவார்களோ, என்னமோ?''

''அவனுடைய வகுப்பைச் சேர்ந்தவர்கள் நாம், நிச்சயம் விடுவார்கள், வா!''

''பிற்பாடு பள்ளியில் நான் அவனைச் சந்தித்து வாழ்த்து கூறுவேன்.''

''சரி, உன் இஷ்டம்.''

எங்கள் இருவரையும்—என்னையும் மாயாவையும்—ஏளனம் செய்வது போல் ஒரு மாதிரியாய்ப் பார்த்துவிட்டு அங்கிருந்து ஓடினான் கோஷா. லுழ்னிக்கி நீச்சல் தடாகத்தைச் சுற்றியமைந்த பெஞ்சுகளில் ஒன்றில் நான் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். மாயா என்னுடனல்ல, அவள் சகோதரனுடன்தான் அங்கு வந்திருந்தாள். அவளும் அங்கு வருவதென்று நாங்கள் முன் கூட்டியே பேசி ஏற்பாடு செய்து கொண்டுதான் வந்திருந்தோம். வீத்யாவை உற்சாகப்படுத்தி முழங்கவே வந்திருந்தோம், அவன் பெற்ற வெற்றியைக்

கண்டு மெய்யாகவே உள்ளம் பூரித்துப் போனோம். ஆயினும் எங்களுடைய சந்திப்புதான் எங்களுக்கு யாவற்றினும் முக்கியமானதாய் இருந்தது.

கோடை அப்பொழுதுதான் முடிவடைந்திருந்தது. எங்கள் பள்ளியின் பையன்கள் எல்லோருடனும் நானும் புரொத்வா ஆற்றங் கரையிலிருந்த முன்னணி இளைஞர் முகாமில் கோடையைக் கழித்தேன். ஆனால் மாயா அவளுடைய பெற்றோருடன் கிரீமியாவுக்குப் போயிருந்தாள், பிறகு அங்கிருந்து வல்தாய் ஏரிகளில் ஒன்றின் அருகே தங்கியிருந்தாள். இந்த ஏரிகளும் தொலைவில் இருப்பவையே. ஆகவே மாயாவும் நானும் ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு ஒருவரையொருவர் பார்க்காமலே இருக்க வேண்டியதாயிற்று. நாங்கள் இப்படிப் பிரிந்திருக்க நேர்ந்தது இது முதலாவது கோடையல்ல, இரண்டாவது. நாங்கள் இருவரும் சேர்ந்து சுற்ற ஆரம்பித்தபின் முதலாவது கோடையில் நான் பிரிவாற்றாமையால் அப்படி ஒன்றும் பெரிதாய்த் துன்புறவில்லை. நீந்தியும், மீன்பிடித்தும், குடைக் காளான்கள் பொறுக்கியும் மற்றும் ஒன்றும் செய்யாமல் சுற்றித் திரிந்தும் பொழுதைக் கழித்தேன். சிற்சில நேரங்களில் மாயாவை அறவே மறந்தும் இருந்தது உண்டு.

ஆனால் இவ்வாண்டின் கோடை வேறு விதமாய் இருந்தது. சகிக்கவே முடியவில்லை, கோடை விடுமுறை அப்படி முடிவின்றி நீண்டு சென்றது. தவிரவும் ஓயாமல் மழை பெய்தது. வேறு ஒன்றும் செய்ய முடியாமற் போகவே நிறைய புத்தகங்கள் படித்தேன், பியானோவில் தட்டிக் கொண்டிருந்தேன். கடிதம் எழுத வேண்டாமென்று

மாயாவிடம் ஏன் அவ்வளவு கண்டிப்பாய்க் கூறி னேம் என்று என்னையே நான் நொந்து கொண் டேன். மாயாவின் கடிதங்கள் பள்ளியில் யார் கையிலாவது அகப்பட்டுக் கொண்டுவிட்டால் வாழ்க்கையே எனக்கு நரக வேதனையாகிவிடுமே என்று பயந்து அவளிடம் அவ்வளவு கண்டிப் பாய்ச் சொல்லியிருந்தேன்.

எப்படியோ இந்த இரண்டாவது கோடையை யும்கூட கடைசி வரை தைரியமாய் இருந்து ஒரு வாறு கழித்துவிட்டேன். பிறகு முடிவில் நீச்சல் போட்டி நடைபெற்ற நாளன்று நாங்கள் இரு வரும் திரும்பவும் சந்தித்தோம். இன்னொரு கோடையை இப்படி என்னுல் பிரிந்திருந்து வாழ முடியவே முடியாதென்பது இப்பொழுது மிகத் தெளிவாய் விளங்கிற்று.

கிரீமியாவிலும் வல்தாய் ஏரிகளிலும் தங்கி யிருந்துவிட்டு மாயா உருவில் வெகுவாய் மாறிப் போய்த் திரும்பி வந்திருந்தாள். சடைகளைக் கத் தரித்து எடுத்துவிட்டாள், இப்பொழுது அவ ளுடைய முடிகள் காதுகளின் அடி மடல் மட்டத் துக்குக்கூட வரவில்லை, பிடரி அளவுக்கே வந்தன. அதோடு அவை அசல் தங்கமாய்த் தகதகத்தன. வெயிலில் கன்றிப் போய்ப் பழுத்த மேனியளாய்த் தோற்றமளித்தாள். ஆனுல் இந்த மாற்றங்களுங் கூட என்னை அப்படித் திகைப்புறச் செய்யவில்லை. அந்தக் கோடை விடுமுறையைக் கழித்துவிட்டுத் திரும்பி வந்தவளை அடையாளம் தெரிந்துகொள் வதே கடினமாயிருந்தது. முன்பு நான் அறிந்திருந்த அதே மாயாதான் என்ருலும், முன்பு இருந்தது போல் இல்லை அவள். முன்பு போல் சிறுமியாய் இருக்கவில்லை, மாயா என்னும் பெயருடைத்த

பதினுன்கு வயது நங்கையாய் மாறியிருந்தாள். அவளைப் பார்த்ததும் நான் திகைத்துத் திக்கு முக்காட வேண்டியதாகிவிட்டது.

நீச்சல் தடாகத்தின் எதிரே அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்த எனக்கு மிகத் தெளிவாய் விளங்கிற்று: இனி நாள் தவருமல் தினமும் அவளை நான் பார்த்தாக வேண்டும், இல்லையேல் என்னுல் உயிர் வாழ முடியாது.

''ஆஸ்திரேலியாவில் ஒரு பெண் நீச்சல் போட்டியில் புதிய உலக சாதனை கண்டிருக்கிருளாம், தெரியுமா உனக்கு?'' என்று கேட்டாள் மாயா. '' 'காம்சமோல்ஸ்காயா பிராவ்தா'வில் இதைப் படித்தேன். தற்செயலான நிகழ்ச்சி அல்லவாம். இந்நாட்களில் சிறுவர் சிறுமியர் அதிவேகமாய் முன்னேறுகிருர்கள், முதியோரால் சமாளிக்க முடியவில்லை என்பதாய்ப் படித்தேன். அதனுல்தான் சொல்கிறேன், வீத்யாவின் சாதனையுங்கூட அகஸ்மாத்தானது அல்ல. பிரமாதமான வெற்றி பெற்றுவிட்டான்! என்ன சொல்கிருய்?''

''பிரமாதமான வெற்றிதான்'' என்று உடனே ஒத்துக் கொண்டேன்.

காதலானது மனிதனை மேம்படுத்துவது தெரிந்ததுதான். இதை நான் மறுக்கவில்லை. ஆயினும் அத்தருணத்தில் என் மனத்துள் வேருெரு எண்ணம் உருவாகி வந்ததை நான் மறைக்கலாகாது. காதல் மனிதனை மேம்படுத்துவது மறுக்க முடியாததே ஆயினும், அது மனிதனைக் கொஞ்சம் தரக் குறைவாகவும் நடந்து கொள்ள வைக்கக் கூடியதே என்பதாய் ஓர் எண்ணம் என்னுள் உதித்தது....

உடுப்பு மாற்றும் அறைகளுக்குச் சென்று

எங்கள் நண்பன் வீத்யா தித்தரேன்கோவுக்கு வாழ்த்துக் கூறுவதற்கு வரவில்லை என்று எப்படி கோஷாவிடம் கூற முடிந்தது என்னால்? எங்கள் நண்பன் பெற்ற வெற்றிக்காக, சோவியத் சாதனை கண்டு விளையாட்டுப் போட்டி மாஸ்டர் பட்டத்துக்கு உரியவனாகியதற்காக அவனுக்கு வாழ்த்துரைக்க வரவில்லையென எப்படி என்னால் கூற முடிந்தது? வெட்ககரமானதல்லவா இது? தரக் குறைவானதல்லவா? ஆயினும் இந்த வெட்ககரமான செயலை நான் மனதறிந்து வேண்டுமென்றே அல்லவா செய்தேன்?

வீத்யாவுக்கு வாழ்த்துரைப்பதற்காக நான் உடுப்பு மாற்றும் அறைகளுக்குச் செல்வதெனில், மாயாவும் எங்களுடன், அதாவது கோஷாவுடனும் என்னுடனும், அங்கே வந்தாக வேண்டுமென்பதை ஆரம்பத்திலேயே நான் உணர்ந்து கொண்டுவிட்டேன். (மாயா தனியே அங்கே பார்வையாளர் மேடையில் அமர்ந்திருப்பது முடியாத காரியம், ஏனெனில் அங்கே முரட்டு ஆட்களும் வெளியே தெரியாமல் மூவரும் நால்வருமாய்ச் சேர்ந்து பாட்டில்களைத் திறந்து வோத்கா குடித்துக் கொண்டிருந்த குடிகாரர்களும் சுற்றிலும் இருந்தார்கள்.) பிறகு நாங்கள் உடுப்பு மாற்றும் அறைகளுக்குச் சென்று மகிழ்ச்சியும் ஆர்வமும் பொங்க வாழ்த்துரைக்கையில் என்ன நடைபெறும் என்பதையும் என் மனத்துள் கற்பனை செய்து பார்த்தேன். மாயா, என்னுடைய மாயா, சோவியத் சாதனையை ஏற்படுத்திய புதிய வெற்றி வீரனாகிய வீத்யா தித்தரேன்கோவை, கண்ணைப் பறிக்கும் வனப்போடும் வெற்றிச் சுடர் மேனியோடும் திகழும் அவன் உடற்கட்டைக் காண

பாள்.... ''ஹலோ வீத்யா, பிரமாதமான வெற்றி! வாழ்த்து உனக்கு!'' என்று சொல்வாள்; கடந்த பதினெட்டு மாதங்களாய் எனக்கே உரிய தாய் நான் கருதி வந்த அந்த இன்பப் புன்னகை ஒன்றை அவன்மீது பொழிவாள். பிறகு அவன் கூச்சப்பட்டுக் கொண்டு, தன்னடக்கத்தோடு தனது சரிவுத் தோள்களை உலுக்கிக் கொள்வான்; பிறவியிலேயே நீச்சலாளன் என்பது அவனுடைய சரிந்தமைந்த அந்தத் தோள்களைப் பார்த்ததுமே பளிச்செனத் தெரியும்; வலிவு வாய்ந்த கரத்தை நீட்டி அவளுடன் கை குலுக்குவான்...

சந்தேகமில்லை, காதலானது மனிதனை மேம் படுத்துவது மெய்தான். ஆயினும் அவள் இங்கே பார்வையாளர்களது மேடையில் என்னுடன் பேசிக் கொண்டு உட்கார்ந்திருக்கட்டும், வீத்யா தித்தரேன்கோவுக்கு பிற்பாடு பள்ளியில் வாழ்த் துரைத்துக் கொள்ளவோம் என்று நினைத்தேன்.

''ஐஸ்-கிரீம்! சாக்லெட் ஐஸ், வனிலா ஐஸ்! யாருக்கு வேண்டும்?''

''இங்கே, இங்கே!'' என்று கூப்பிட்டேன்; விரல்களைச் சொடுக்கி ஐஸ்-கிரீம் விற்கும் பெண்ணை எங்களிடம் வருமாறு அழைத்தேன்.

பைக்குள் கையை விட்டுக் காசை எடுத்தேன். முன்பு போலில்லை, இப்பொழுது எனக்கு உதவிப் பணம் கிடைத்தது, இனி நான் டிக்கெட் வாங்காமலே டிராலி பஸ்ஸில் பயணம் செய்யத் தேவையில்லை. எப்பொழுதாவது பைக்குள் கையைவிட்டு ஐஸ்-கிரீமுக்கு வேண்டிய காசையும் எடுக்க முடிந்தது. ஆனால் ஒன்றே ஒன்றுதான், மாயாவுக்கு மட்டும்தான் வாங்கினேன். நான் ஐஸ்-கிரீம் சாப்பிடக் கூடாது, பாட்டுக் குழு பையன்

களாகிய எங்களுடைய தொண்டைகளுக்கு உதவாது அது.

''நன்றி'' என்று கூறிவிட்டு மாயா நாக்கை நீட்டி ஐஸ்-கிரீமைச் சுவைக்கத் தொடங்கினாள். ''நீச்சல் போட்டியில் மட்டுமல்ல, நடனப் பனிச் சறுக்கிலும் சிறுவர் சிறுமிகள்தான் முதன்மை நிலைகள் பெறுகிறார்கள்—ஷுவார்ஸ், கால்மா.... உடற்பயிற்சிப் போட்டிகளிலுங்கூட இப்படித் தான்....''

''ஆமாம், ஆமாம்'' என்று தலையை ஆட்டினேன், பிள்ளைப் பருவத்திலேயே வெற்றி வீரர் களாகிவிடும் இவர்களை நினைத்து உள்ளுக்குள் புகைந்து கொண்டேன்.

இன்னும் நான்கு போட்டிகள் பாக்கியிருந்தன. அவற்றுக்கு முன், இப்பொழுது இடைநேரம். ஒலிபெருக்கிகள் மெல்லிசையைப் பொழிந்து எல்லோரையும் இன்புறச் செய்தன. உடனே நான் என்னுள் நினைத்துக் கொண்டேன்: படுமோசமான, மிகவும் அபாயகரமான எனது எதிராளி இப்பொழுது எக்கணமும் என் எதிரே வந்து நிற்கப்போகிறான்...

அதே போலவே வந்து நின்றான்.

ஜ-மா-ய்-ய்க்-கா!...

அக்கணம் முதலாய் எல்லோரும் பேச்சு மூச்சின்றி அசையாமல் அமர்ந்திருந்தார்கள். இதே ''ஜமாய்க்கா'' பாட்டுக்கு, நீச்சல் போட்டி அரங்கில் மணிநாதமிட்டு ஒலித்த இதே குரலுக்கு இன்னும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்குப் பிற்பாடு, மதிப்புக்குரிய சபையோரின் எச்சில் சுரப்பிகள் எப்படிச் செயல்படுமோ, தெரியாது எனக்கு, தெரிந்து கொள்ள விரும்பவும் இல்லை

நான். ஆனால் இது வரை அவர்களுடைய மறி வினைகள் பிரமாதமாகவே செயல்பட்டு வந்தன. ‘‘ஜ-மா-ய்-க்-கா’’ என்றதுமே வாய் நிறைய அவர்களுக்கு எச்சில் ஊறிற்று.

எனது இந்த இளம் வாழ்க்கையில், இதற்குள் எத்தனையோ தரம் நான் இம்மாதிரியான வெகு ஜனப் பித்துக்குளித்தனத்தைப் பார்த்திருந்தேன். வேடிக்கையும் விளையாட்டுமான ஆளாகிய ஈவ் மன்தான் பாரிசிலிருந்து இங்கே வந்து, மாஸ்கோ அனைத்தையுமே காலைத் தட்டி ஆடிக் கொண்டு நிற்க வைத்தார். வான் கிலீபர்ன் தனது வாசிப் பாலோ, அல்லது தனது அதிவினோத முடியலங் காரத்தாலோ கூட்டத்தினரைப் புளகாங்கித மடையச் செய்தார். பெருவிலிருந்து வந்திருந்த இமா சுமாக் தமது குரலின் அபார வீச்சைக் கொண்டு எல்லோரையும் மயிர்க் கூச்செறியச் செய்தார்.

ஆனால் கடந்த ஓராண்டாய் ரொபர்ட்டினோ கோலோச்சி வந்தான்—என்னுடைய அதே வய துள்ள இத்தாலியப் பாடகனை ரொபர்ட்டினோ லொரெட்டி.

எங்கும் ரொபர்ட்டினோதான்! பேசுவதற்கு வேறு எதுவும் இல்லாதது போல எந்நேரமும் ரொபர்ட்டினோவைப் பற்றிய பேச்சுதான்! ரொ பர்ட்டினோ சோவியத் நாட்டுக்கு வந்து கச்சேரி நடத்தப் போகும் நாள் எப்போது வருமென்று எல்லோரும் ஏங்கித் தவித்தனர். விடிந்தது முதல் இரவு வரை பூங்காக்களிலும் சினிமாக்களிலும் சதுக்கங்களிலும் விளையாட்டு அரங்குகளிலும் ரயில்களிலும் ஆற்றுக் கப்பல்களிலும் குளிப் பிடங்களிலும் முடிதிருத்தகங்களிலும் ரொபர்ட்டி

ஞேவின் குரல்தான் ஒலித்தது. ரொபர்ட்டினோ வின் இசைத்தட்டுகள் விற்பனைக்கு வந்தபோது, அப்பப்பா, என்ன நெரிசல், என்ன களேபரம்!

மாஸ்கோ மாநகரே மந்திர சக்தியால் வயப் படுத்தப்பட்டுவிட்டதோ என்று நினைக்க வேண்டி யிருந்தது. ரொபர்ட்டினோ லொரெட்டியின் பாட்டுகளை நானும் நிறைய கேட்டிருந்தேன். பையனின் குரல் எனக்குப் பிடித்திருந்தது. பத்திரிகைகளில் அவன் புகைப்படத்தைப் பார்த் திருந்தேன். கரிய விழிகளும் முடிகளும் கொண்ட வன், பார்ப்பதற்கு எங்கள் மராத்தைப் போல் இருந்தான்.

ஆனால் சத்தியமாய்ச் சொல்கிறேன், ரொபர்ட் டினோ மீது எனக்கு ஒன்றும் பொறாமை இல்லை, பொச்சரிப்போ அல்லது பகை உணர்ச்சியோ கிடையாது. எனக்கு ஏற்பட்டு வந்ததெல்லாம் ஒரு வகை திகைப்பும் வியப்புமேதான். என்னுடைய குரல் என்ன, அந்த அளவுக்கா அவனுடையதைக் காட்டிலும் மட்டமானது? கடந்த பல மாதங்களாய்க் கச்சேரிகளில் நான் தனிப்பாட கனாய் நிறைய பாடியிருந்தேன், நான் பாடிய பாட்டு இசைதட்டாகக்கூட வெளிவந்திருந்ததே. ஆனால் என்னுடைய இசைத்தட்டை வாங்க யாரும் அடித்து மோதிக் கொண்டு ஓடவில்லை, நெரிசலோ, களேபரமோ ஏற்படவில்லை. என் னுடைய புகைப்படம் பத்திரிகைகளில் அச்சிடப் படவில்லை. இத்தாலிக்குச் சென்று கச்சேரி நடத்து மாறு இதுவரை எனக்கு அழைப்புகள் வரவில்லை.... இருந்த போதிலும், திரும்பவும் கூறுகிறேன், எனக்கு ரொபர்ட்டினோ லொரெட்டி மீது கடுப்பு சிறிதுமில்லை.

நான் மாயாவுடன் இருந்த தருணங்களில் மட்டுமே அவனை எனது எதிராளியாய்க் கருதினேன். அத்தருணங்களில் எச்சரிக்கை ஏதுமின்றி ரொபர்ட்டிஞேவின் ''ஐ-மா-ய்-ய்க்-கா'' திடுமென எங்கிருந்தாவது ஒலிக்கும்.

''ஸ்வீடனுக்குப் போகப் போகிருன்'' என்று என்னிடம் சொன்ஞள் மாயா.

நான் முகத்தைச் சுளித்துக் கொண்டேன். நன்ருய்ப் போகட்டுமே, போய் ஏரியில் வேண்டுமாஞலும் குதிக்கட்டுமே என்று நினைத்துக் கொண்டேன்.

அவசரமாய்ப் பின்பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு மாயா ஏதோ என் காதுக்குள் இரகசியம் சொல்லப் போகிறவள் மாதிரி என்னிடம் குனிந்தாள். இரகசியம் சொல்வதற்குப் பதில் உதடுகளால் என் கன்னத்தில் கொத்திஞள். சாக்லட் ஐஸ் தின்றபின் அவள் உதடுகளும் ஐஸ் மாதிரி ஜில்லிட்டன, அல்லது அவை ஜில்லிடுவதாய்த் தோன்றும்படி என் கன்னங்கள் அவ்வளவு சூடாய் இருந்தனவோ, என்னவோ.

''வெறும் புரளி'' என்ருள் மாயா.

''எது?''

''புத்தியைக் காட்டியிலும் உயரத்திலே தான் எல்லோரும் வேகமாய் வளர்கிருர்கள் என்னும் இந்தப் பேச்சு வெறும் புரளி. இல்லையேல், ஆங்கிலத்துக்கென்றும் பிற மொழிகளுக்கென்றும் கணிதத்துக்கென்றும் சிறப்புப் பள்ளிகள் எதற்காக நிறுவுகிருர்கள்? சிறு வயதிலேயே ஆரம்பிப்பது முக்கியம், இல்லையேல் தாமதமாகிவிடும் என்றுதானே இப்படிச் செய்கிருர்கள். உனக்குத் தெரியுமா, எங்கள் பள்ளியிலிருந்து ஐந்து ஆண்டு

களுக்கு முன்பு ஒரு பெண் திரைப்படக் கலைக் கல்லூரியின் நடிப்புப் பிரிவில் சேர்ந்து கொண்டாள். இப்பொழுது அவளுக்கு இருபத்து மூன்று வயதாகிவிட்டது. பள்ளியில் நடைபெற்ற கச்சேரிக்கு அவள் வந்திருந்தாள். 'நீ எப்படிப்பட்ட பாத்திரத்தை நடிக்க வேண்டுமென ஆசைப்படுகிறாய்?' என்று பள்ளிக்கூடப் பெண்கள் அவளைக் கேட்டனர். 'சிறுமி நத்தாஷா ரஸ்தோவாவாய் நடிக்க வேண்டுமென்பதே எனது ஆசை, ஆனால் இப்போது ஆஸ்திரோவ்ஸ்கியின் ''இடியும் புயலும்'' நாடகத்தில் வரும் கிழ மாமியாராகவே நான் நடிக்க வேண்டி வரும் போல் தெரிகிறது' என்று அவள் பதிலளித்தாள். எப்படி இருக்கிறது பார், அவளுக்கு இருபத்து மூன்று வயதுதான் ஆகிறது!''

மாயாவுக்கு அப்பொழுது இதுவே மிகவும் பிடித்தமான பேச்சுப் பொருளாய் இருந்தது. எந்நேரமும் இதைப் பற்றிதான் பேசிக் கொண்டிருந்தாள். நான் அவளுடன் இது பற்றி வாக்குவாதம் புரிய முற்படவில்லை.

ஆயினும் எதிர்காலத்துக்காக மாயா தனக்குத் தீட்டி வரும் திட்டங்கள் என்னவென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மூன்று ஆண்டுகளுக்குப் பிற்பாடு பள்ளிப் படிப்பு முடிவுற்று பரந்த உலகிலே விடப்பட்டதும் என்ன செய்யப் போகிறாள்? மாயா அப்பொழுது திருமணம் புரிந்து கொள்ள வேண்டுமென்று முடிவு செய்வாள் அல்லவா? அவள் யாரை மணந்து கொள்வாளென்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. என்னையன்றி வேறு யாரை மணந்து கொள்வாள்? இருந்த போதிலும் இதற்கு அவசியமானவை

யாவற்றையும் அதற்குள் நான் பெற்றுக் கொண்டுவிட முடியுமா? வசிப்பதற்கு வேண்டிய இடமும் மாதாமாதம் சம்பளமும் மற்றும் சமயல் பாத்திரங்களும் காரும் பிறவும் அதற்குள் எனக்குக் கிடைத்துவிடுமென நிச்சயமாய்ச் சொல்ல முடியுமா? முடியாதே.

## 2

''ழேன்யா, ழே-ன்யா!''

முயற்சி செய்து கண்களைத் திறந்து பார்த்தேன் நான். வகுப்புகள் முடிவுற்றபின் பிற்பகல் நேரம் அது. நான் விடுதிக்குத் திரும்பி வந்து பூட்சுகளைக் கழற்றிவிட்டு, படுக்கையில் படுத்து, செர்னி ஷேவ்ஸ்கியின் ''செய்ய வேண்டியது என்ன?'' புதினத்தைப் படிக்க முற்பட்டேன். அப்பொழுது இலக்கியப் பாடத்துக்காக இப்புத்தகம் உபயோ கிக்கப்பட்டு வந்தது. படித்துக் கொண்டிருந்த நான் தூங்கிவிட்டேன்.

பிறகு யாரோ என் தோள்களைப் பிடித்துக் குலுக்கவே விழித்துக் கொண்டேன்.

''உம்-ம்?''

என் படுக்கையின் பக்கத்தில் மூன்றுவது வகுப் பைப் சேர்ந்த உசச்சோவ் நிற்பதைக் கண்டேன். வேடிக்கையான சிறுவன் அவன், மிகப் பல ஆண்டு களுக்கு முன்பு நான் இந்தப் பள்ளிக்கு அழைத்து வரப்பட்டபோது இருந்தேனே அதே மாதிரியான சிறுவன். என்னைப் போலவே அவனும் உச்சக் குரலில் பாடினன், நன்ருகவே பாடினன். அந்த ஆண்டுக் கோடை முழுதும் நிழல் போல என் பின்னல் வந்து, ஓயாமல் அசட்டுக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தான். புற்றிலிருந்து கிளம்

பும் ஈசலைப் போல் முடிவின்றி வரிசையாய் இந்தக் கேள்விகள் அவனிடமிருந்து உதித்துக் கொண்டிருக்கும். பிறகு நான் சொல்லும் பதில்களை ஒரு வார்த்தைகூட தவறவிடாமல் வாயைத் திறந்து கொண்டு கவனமாய்க் கேட்பான். என்னைப் போல் அதே பெயருடையவன், அவனும் ஒரு ழேன்யா தான்— ழேன்யா உசச்சோவ்.

இப்பொழுது அவன் என் தோள்களைப் பிடித்து உலுக்கினான்.

''ழேன்யா, விழித்துக் கொள், ழேன்யா....''

''ஏன்?''

''யாரோ ஒருவர் உன்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறார்.''

''எங்கே?''

''வெளியே தெருவில் காத்துக் கொண்டிருக்கிறார்.''

''எப்படிப்பட்ட ஆள்?''

''இப்படிப்பட்டவர்...'' நெஞ்சைத் துருத்திக் காட்டி, உதடுகளைப் பிதுக்கி அவர் எப்படிப் பட்டவர் என்று காட்டினான்.

''என்ன வேண்டுமாம்?''

''அது எனக்குத் தெரியாது.''

என்னத் தொல்லையடா இது?—சற்று நேரம் தூங்கலாம், அல்லது படிக்கலாம் என்றால்கூட விட மாட்டார்கள் போலிருக்கிறதே.

பூட்சுகளை மாட்டிக் கொண்டேன்; உள்ளங் கையால் தலைமுடிகளை அழுத்தி விட்டுக் கொண்டேன், பிறகு படிக்கட்டில் இறங்கி ஓடினேன்.

எங்கள் விடுதியின் வெளிவாயிலுக்கு அருகே மெய்யாகவே ஓர் ஆள் அடிமேல் அடி வைத்து மேலும் கீழுமாய்த் தளுக்கு நடை போட்டு நடந்து

கொண்டிருந்தார். சிறுவன் ழேன்யா சொன்ன ஆள் இவராய்த்தான் இருக்குமென்று உடனே நான் ஊகித்துக் கொண்டேன். ஆள் பார்ப்பதற்குப் பிரமாதமாகவே இருந்தார், பெரிய முக்கியஸ் தராய்த் தன்னை நினைத்துக் கொண்டார் என்பது அவர் முகத்திலே எழுதி ஒட்டியிருந்தது. குறுகல் விளிம்புத் தொப்பி அணிந்திருந்தார். வாயில் ஒரு சுருட்டு இருந்தது; சிறுவன் ழேன்யா உதடுகளைப் பிதுக்கிக் காட்டி இதைத் தான் எனக்குத் தெரிவிக்க முயன்றிருக்க வேண்டும்.

ஆம், தெளிவாகவே விளங்கிற்று, இந்த ஆள் தான். வேகத்தைக் குறைத்துக் கொண்டு அவரை நோக்கி நடந்தேன். ஆனால் எப்படி அவர் என்னை அடையாளம் தெரிந்து கொள்ளப் போகிறார்? என்னை அவருக்கு யாரும் விவரித்துச் சொல்லி யிருக்க மாட்டார்களே.

ஆனால் நான் நெருங்கி வருவதைக் கண்டதும் தொப்பி அணிந்த அந்த ஆள் நெடு நாளைய நண் பனை வரவேற்பது போல் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டார். என்னை அடையாளம் தெரிந்து வைத்திருந்தார். ஆனால் இது வியப்புக் குரியதல்ல: கச்சேரியில் என்னைப் பார்த்திருக்கக் கூடும், அல்லது அம்மாதத்தின் தொடக்கத்தில் நாங்கள் அளித்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியிலும் பார்த்திருக்கலாம்.

கைகுலுக்குவதற்காகப் பருத்த கையை நீட்டி, ''ஹலோ, என் பெயர் வீக்தர் வீக்தரொவிச்'' என்றார்.

''ஹலோ'' என்று சற்றுத் தயங்கியவாறு பதிலளித்தேன் நான்.

(எந்த வீக்தர் வீக்தரொவிச்சையும் இது வரை

என் வாழ்நாளில் நான் கண்டதுமில்லை, கேட்டது மில்லை.)

''இருவருமாய்ச் சற்று நேரம் நடக்கலாம், வா'' என்றார் அவர்.

''நடக்கலாமே'' என்று ஒத்துக் கொண்டேன்.

நெரிசலான பிரேஸ்னியாத் தெருவை நோக்கி நடந்தோம்; பள்ளிக்கூடக் கட்டடத்தின் திசையிலல்ல, எதிர்த் திசையில் நடந்து பிறகு அமைதியான சந்து ஒன்றினுள் திரும்பினோம்.

வீக்தர் வீக்தரொவிச் தமது சுருட்டுத் துண்டை அருகிலிருந்த குப்பைத் தொட்டிக்குள் எறிந்தார்.

''ழேன்யா, கலை மக்களுக்கே உரியதென்பது தெரியுமா உனக்கு?'' என்று கேட்டார்.

''ஆம், மக்களுக்கு அல்லாமல் வேறு யாருக்காம்?'' என்றேன் நான்.

''மக்களுக்கே, வெகுஜனப் பகுதிகளுக்கே உரியது. இதை நீ ஒத்துக் கொள்கிறாயா?''

''நிச்சயமாய் ஒத்துக் கொள்கிறேன்.''

''கலைஞன் தன் கலையை விரிவான மக்கள் பகுதியோருக்கு எடுத்துச் சென்று அவர்களுடைய கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கடமைப்பட்டவன் அல்லவா?''

''கடமைப்பட்டவன்தான்'' என்று மீண்டும் ஒத்துக் கொண்ட நான், ''ஆனால் சுற்றி வளைக்காமல் என்ன வேண்டுமென்பதைச் சொல்வது நல்லதல்லவா?'' என்று கேட்டேன்.

''அப்படிச் சொல்லு, அதைத்தான் நானும் விரும்புகிறேன்'' என்று அவர் சிரித்துக் கொண்டார். ''நாளைக்கு அந்திப் பொழுதில் என்ன செய்யப் போகிறாய் நீ? வேலை எதாவது இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''பாடங்கள் இருக்கின்றன, ஆனால் அவை அவ்வளவு முக்கியமானவை அல்ல'' என்றேன்.

''அப்படிச் சொல்லக் கூடாது நீ, அது சரியல்ல'' என்று தலையை அசைத்து ஆட்சேபித்தார் வீக்தர் வீக்தரொவிச். ''பாடங்களை நீ முன்னதாகவே படித்து முடித்தாக வேண்டும். பிறகு சரியாய் மாலை ஐந்து மணிக்கு இங்கே வந்து இந்த மூலையில் காத்துக் கொண்டு நில். சரிதானா? பெரிய கார் ஒன்று வந்து உன் எதிரே நிற்கும், அதில் நான் இருப்பேன். நீயும் ஏறிக் கொள்வாய், உடனே வேகமாய்ப் போய்ச் சேருவோம்.''

''எங்கே போய்ச் சேருவோம்?'' என்று நான் ஆவலுடன் கேட்டேன்.

''மக்களிடம், வெகுஜனங்களிடம் போய்ச் சேருவோம். அதிக தூரமில்லை, இருபத்தைந்து மைல்தான். இரவு பனிரண்டு மணிக்குள் திரும்பி வந்துவிடலாம். ஆட்சேபம் இல்லை அல்லவா?''

''என்னைப் பொறுத்தவரை ஆட்சேபம் இல்லை. ஆனால் எங்கள் பள்ளியின் முதல்வரைப் பார்த்துப் பேசி ஏற்பாடு செய்யுங்கள், விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் சரி என்பாரானால் நான் தயார்தான்'' என்றேன்.

வீக்தர் வீக்தரொவிச் அப்படியே நின்றுவிட்டார். பிறகு கோட்டுக்குள் கையை நுழைத்து ஒரு புதிய சுருட்டை வெளியே எடுத்து அடிமுனையைக் கடித்துத் துப்பினார். லைட்டரால் சுருட்டைப் பற்ற வைத்தபின் என்னைப் பார்த்து முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

''இவ்வளவுதானா நீ!'' என்றார் அலட்சியம் தொனிக்கும் குரலில். ''வயது வந்த ஆளுடன் பேசுகிறோம் என்றல்லவா நினைத்தேன்!'' என்றார்.

''நினைக்கலாமா அப்படி? நாங்கள் வயது வராத அசட்டுப் பொடியன்கள் ஆயிற்றே'' என்று நான் பெருமூச்சு விட்டுக் கொண்டேன்.

''அதுதான் மிகத் தெளிவாய்த் தெரிகிறதே!''

நான் வெடுக்கெனத் திரும்பி அங்கிருந்து வேகமாய் நடந்தேன்.

''மேன்யா! போகாதே நீ! இதைக் கேள்!''

பரபரப்புற்று மூச்சு வாங்கும் நிலையில் என்னிடம் ஓடி வந்தார்.

''அடேயப்பா! பெரிய கோபக்காரனாய் இருக்கிறாயே நீ! நிதானமாய் இதைப் பற்றி பேசுவோம், வா. நீ இதைப் புரிந்து கொள்ள வேண்டும்....''

எதைப் புரிந்து கொள்வதாம்? நான்தான் நெடு நேரத்துக்கு முன்பே புரிந்து கொண்டு காதைக் கெட்டியாய் மூடிக் கொண்டுவிட்டேனே, இந்த ஆளைப் பார்த்த அதே கணத்தில், இவர் வாயைத் திறந்து பேச முற்பட்டதுமே முடிவு செய்து கொண்டுவிட்டேனே.

ஏதோ கள்ளத்தனமான காரியத்துக்கு என்னைச் சரிக்கட்டி இழுக்கப் பார்க்கிறார், இந்த வீக்தர் வீக்தரொவிச் என்று தொடக்கத்திலேயே நான் புரிந்துகொண்டுவிட்டேனே...சொகுசான தொப்பி அணிந்து வெளிநாட்டுச் சுருட்டைப் புகைப்பவராய் இருந்தால்தான் என்னவாம்? எவரும்தான் செய்யலாம்! உயர்ந்த ரக சுருட்டுகள் எல்லாம் இங்கு ஓரளவு மலிவான விலைக்குக் கிடைக்கின்றன, போர்டும் ரோல்ஸ் ராய்ஸும் இன்னும் பல பெரிய புள்ளிகளும் புகைக்கும் அதே வகைச் சுருட்டுகளை இங்கு எந்தக் கில்லாடியும் வாங்கிப் புகைக்க முடியுமே, தெரிந்துதானே இது.

மொத்தத்தில் கண்யக் குறைவான காரியத்தில் ஈடுபடும் ஆள் இவர், முடிவில் பத்திரிகைகளில் சந்திக்கு இழுக்கப்படுகிறுர்களே அப்படிப் பட்ட ஆளே இவர்—இதை நான் தொடக்கத்திலேயே கண்டு கொண்டுவிட்டேன். என்னுடைய உள்ளுணர்வு தவறிவிடவில்லை, இதன்பின் சரியாய் ஓராண்டுக்கெல்லாம் வீக்தர் வீக்தரொவிச் முதலில் பத்திரிகைகளில் அடிபடலாஞர், பிறகு உரிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார். நல்ல வேளை, அதற்கு முன்பே எனக்கு அவருடன் சம்பந்தம் இல்லாமற் போயிற்று. ஆரம்பம் முதற் கொண்டே அவருடன் நான் சம்பந்தப்படாமல் இருந்திருந்தால் இன்னும் நன்ருய் இருந்திருக்கும்.

ஆனல் தற்போது நாங்கள் இருவரும் பிரேஸ்னியாவுக்கு அருகே அமைதியான ஒரு சந்தில் யாருக்கும் தெரியாமல் நின்று பேசிக் கொண்டிருந்தோம்.

''நிதானமாய் இது பற்றி பேசுவோம்'' என்று திரும்பவும் சொன்ஞர் வீக்தர் வீக்தரொவிச். ''நீ இதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதை எனக்குச் சொல்லு: ஏன் இன்று எங்கு சென்ருலும் எந்நேரமும் நாம் அந்தப் பையனின் குரலையே கேட்க வேண்டியிருக்கிறது — அவன்தான், லொபர்ட்டினே?''

''ரொபர்ட்டினே'' என்று அவரைத் திருத்தினேன்.

''ஆம், அவன்தான், லொரெட்டி பையன்! எங்கு சென்ருலும் எந்நேரமும் ஏன் இப்படி? வெளிநாட்டுச் சரக்கு என்றதும் உடனே இப்படி பூஜிக்கிருர்களே, ஏன்?''

எனக்குத் தெரியவில்லையே என்று தோள்களை

உலுக்கிக் கொண்டேன். ஏன் இப்படி பூஜிக்கிறார்கள், என்ன காரணம்?

''போற்றத்தக்க குரலுடைய பையன்கள் இங்கே ருஷ்யாவில் இல்லையா, என்ன?'' என்று ஆத்திரம் தொனிக்கக் கூறிச் சென்றார். ''இன்று நம்மிடையே ஆற்றலும் வல்லமையும் வேண்டிய மட்டும் இல்லையா? நம் நாட்டிலேயே நாம் தேடிக் கொண்டுவிட முடியாதா, இந்த லொபர்ட்டினோவை?''

''ரொபர்ட்டினோ'' என்று மீண்டும் திருத்தினேன், என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

சரியான மக்கு ஆளாய் இருப்பார் போல் தெரிகிறதே என்று நினைத்தேன். சொகுசான தொப்பி அணிந்து உயர்ந்த ரக சுருட்டைப் புகைக்கிறார், ஆனால் இந்தப் பெயரைச் சரியாய் உச்சரிக்க முடியவில்லையே இவரால். ஆள் பெரிய எத்தராய் இருப்பினும், என்னுடன் இத்தகைய விவகாரங்கள் குறித்து இவர் விவாதித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கையில் கலை உலகுடன் இந்த ஆள் நேரடியாக இல்லாவிட்டாலும், எப்படியோ ஒரு வழியில் தொடர்பு கொண்டவராய் அல்லவா தெரிகிறது? ஆனால் கலை உலகுடன் சம்பந்தப்பட்டோரிடையே சரியான மக்குகளும் சிலர் இருக்கிறார்கள், இது வருந்தத்தக்கது. இவர்களுக்கு உரிய துறையில் நல்ல திறமைசாலிகளே என்றாலும், வயலின் அல்லது எக்காள இசை வாசிப்பதில் தேர்ந்த வித்துவான்களாய் இருப்பினும், வாய் திறந்து இவர்கள் ஒரு வார்த்தை பேசக் கேட்டாலே போதும்—வயிற்றைப் புரட்டிக் கொண்டு தான் வரும். வீக்தர் வீக்தரொவிச் இப்படி ''லொ

பர்ட்டினே, லொபர்ட்டினே'' என்று கூறிக் கொண்டிருந்ததை என்னுல் சகிக்கவே முடிய வில்லே.

எனக்கு மேலும் எரிச்சலூட்டுவதாய் இருந்தது என்னவெனில், அவர் கூற விரும்பியதில் பலவும் எனக்கு ஏற்புடையனவாய் இருந்ததுதான். இந்த ஆள் சொன்னது சரிதானே? வெளிநாட்டுச் சரக்கு என்றதும் எல்லோரும் இப்படி பூஜிக்கிறுர்களே, ஏன் இது? எந்நேரமும் ரொபர்ட்டினே, ரொபர்ட் டினே, ரொபர்ட்டினேதான்... வேறு எதுவுமே இல்லாதது போலல்லவா தலேயில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறுர்கள்!

''ழேன்யா'' என்றுர் வீக்தர் வீக்தரொவிச். நான் வழிக்கு வரத் தொடங்கி விட்டேன் என் பதை அவர் கண்டு கொண்டுவிட்டாரோ, என்ன மோ? ''நீ ஏன் வீணில் கவலேப்படுகிருய்? இந்தக் கலே நிகழ்ச்சியில் பங்கு கொள்ளப் போகிறவர் கள் நீ மட்டுமல்ல, ஒரு முழுக் கலேக் குழுவே வந்து கலே விருந்தளிக்கப் போகிறது. ஆனுல் இதில் கவர்ச்சி நட்சத்திரமாய் விளங்கப் போவது வேறு யாருமல்ல, நீயேதான்!''

ஆம், மெய்யாகவே இது அநியாயம்தான். இங்கு நடப்பதைப் பார்த்தால் ருஷ்யாவில் பாடத் தெரிந்தவர்கள் யாரும் இல்லே, நல்ல திற ளுளர்கள் யாரும் இல்லே என்றல்லவா நினேக்கத் தோன்றும்! ரொபர்ட்டினேவின் சாரீரத்தைக் காட்டிலும் சிறப்பான சாரீரமுடைய பையன்கள் எங்கள் பள்ளி ஒன்றில் மட்டுமே எத்தனேயோ பேர் இருப்பார்களே!

''ழேன்யா'' என்றுர் வீக்தர் வீக்தரொவிச். ''ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் உனக்கு இருபது

ரூபிள் கிடைக்கும். தற்போதைக்கு பத்து கச்சேரிகள் நடைபெறுவதாய் வைத்துக்கொள்வோம்.''

ஆம், எங்கள் பள்ளி ஒன்றில் மட்டும் ரொபர்ட்டினோ லொரெட்டியின் குரலுக்கு எந்த விதத்திலும் சப்பையில்லாத குரலுடையோர் குறைந்து இருபது பையன்களாவது இருப்பார்கள். இருநூறு பையன்களைக் கொண்ட ஒரு சிறு பள்ளியிலேயே இருபது பேர்!

''நாளைக்கு இங்கு நாம் சந்திக்கலாம் அல்லவா?'' என்று கேட்டார் வீக்தர் வீக்தரொவிச்.

''எத்தனை மணிக்கு?''

''மாலை 5 மணிக்கு, அதோ அந்த மூலையில்.''

''சரி.''

''பெரிய கார் ஒன்று வந்து நிற்கும்.''

இனி மேற்கொண்டு ஆக வேண்டிய காரியங்களைக் கவனிக்கலாம் என்னும் தோரணையில் என்னை அவர் மேலும் கீழுமாய்ப் பார்த்துவிட்டு, ''சரி, உனக்கு உடுப்புகள் வேண்டுமல்லவா? இம்முறை நாங்கள் தக்கவற்றைத் தேடி எடுத்து வருகிறோம். பிற்பாடு உனக்கு வேண்டியவற்றை நீயே பார்த்து வாங்கிக் கொள்வாய். கச்சேரியில் நீ இந்தப் பையனின் பாட்டுகள் சிலவற்றைப் பாட வேண்டும்—இந்தப் பையன் லொபர்ட்டினோவின் பாட்டுகள்....''

''ரொபர்ட்டினோவின் பாட்டுகள்.''

''ஆம், அவன்தான் லொரெட்டி. கச்சேரிக்கு வருவோர் இதைத்தான் விரும்புகிறார்கள்.... உனக்குத் தெரியுமல்லவா....''

நன்றாய்த் தெரியும்—ஜமாய்க்கா, கிளிகள், இத்தியாதி பாட்டுகள் யாவும் நான் நன்கு அறிந்தவையே. ஒரு சுரங்கூட, ஒரு நாதங்கூட தவறாமல்

அப்படியே என்னால் பாட முடியும். ஏற்கனவே நான் கூறியது போல, பிள்ளைப் பிராயத்திலேயே நான் எந்தப் பாட்டையும் ஒரு தரம் கேட்டதும் அப்படியே திருப்பிப் பாடி விடுவேன். அதன் பிறகு பள்ளியில் நாங்கள் பெற்ற பயிற்சிகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் சொல்லவா வேண்டும்? ஆனால் பாட்டின் சொற்கள் தெரியாதே, என்ன செய்வது?

''பாட்டுகளின் சொற்கள் தெரியாதே எனக்கு'' என்று அவரிடம் சொன்னேன்.

''நான் அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்று தமது திறமையை அறிவித்துக் கொள்ளும் முறையில் தலையை ஆட்டிக் கொண்டார், வீக்தர் வீக்தரொவிச். பிறகு கோட்டுப் பைக்குள்ளிருந்து காகிதங்கள் சிலவற்றை எடுத்தார், பாட்டுகளின் வாசகம் அவற்றில் எழுதப்பட்டிருந்தது.

''இந்தக் கையெழுத்து உனக்குப் புரியும் அல்லவா?''

''யாவும் இத்தாலிய மொழியில் அல்லவா எழுதப்பட்டிருக்கிறது!''

''ஆமாம், அசல் இத்தாலிய மொழியேதான், வேறு என்னவாம்?''

''எனக்கு இத்தாலியன் தெரியாதே, பள்ளியில் நாங்கள் ஜெர்மன்தானே கற்றுக் கொள்கிறோம்.''

''ஏன் அப்படி?''

யாருக்குத் தெரியும்? நானும் இதே கேள்வியைக் கேட்டு வந்தவன்தான். இசைஞர்கள் கற்க வேண்டியது இத்தாலிய மொழிதான் — இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். இத்தாலிய ஆசிரியர் கிடைக்கவில்லையோ, என்னவோ? எங்களுக்கு ஜெர்மன் கற்றுத் தரப்பட்டது.

என்ன செய்வதென்று புரியாமல் விழித்தவாறு வீக்தர் வீக்தரொவிச் அந்தக் காகிதங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டு நின்ருர். பிறகு முகத்தைச் சுளித்துக் கொண்டு, ''ஆனுல் எழுத்துக்கள் ஒரே மாதிரிதானே இருக்கும், இல்லையா? அந்நிய எழுத்துகளாய் இருந்தால் என்ன? பெரிய வித்தியாசமா ஏற்பட்டுவிடப் போகிறது?''

'அந்நிய' எழுத்துகளாமே! சரியான மக்காய் இருக்கிருரே, இந்த ஆள்!

''சரி'' என்று சொல்லிக் காகிதங்களை வாங்கிக் கொண்டேன்.

நாங்கள் பிரிந்து செல்லுமுன் ''மாலை ஐந்து மணிக்கு'' என்று எனக்கு நினைவு படுத்திஞர்.

''சரி, ஐந்து மணிக்கு.''

* * *

''மீண்டும் நாளை சந்திப்போம்'' என்று கூறிச் சென்றிருந்தார் அவர். இடையில் எனக்கு இருபத்து நான்கு மணிக்குச் சற்று அதிக நேரம் இருந்தது. யாவற்றையும் சிந்தித்துப் பார்ப்பதற்கும், சாதக, பாதகக் கூறுகளை அலசி ஆராய்வதற்கும், என் மனசாட்சியைச் செயல்பட வைப்பதற்கும், சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் இந்த அவகாசம் போதும். பெரிய காரில் வந்திறங்கி வாயில் அந்த அசட்டுச் சுருட்டை வைத்துக் கொண்டு அங்கே மூலையில் எனக்காகக் காத்திருக்கையில் எப்படி அந்த ஆள் சுற்றிச் சுற்றி ஓடி வருவார் என்று நினைத்துப் பார்த்தேன். அந்த மூலைக்கு அருகே ஓரிடத்தில் நான் ஒளிந்து நின்று அந்த ஆள் தவியாய்த் தவிப்பதைப் பார்த்துச் சிரிக்கலாமே என்றுகூட நினைத்தேன். ஏன், எங்கள்

பையன்களில் இன்னொருவனையும் கூட அழைத்துச் சென்றால், கோஷா வியாசெம்ஸ்கியையோ அல்லது வேறொருவனையோ கூப்பிட்டுச் சென்றால், இன்னும் வேடிக்கையாய் இருக்குமே என்று எண்ணினேன். அங்கே பார்க்கக் கூடிய காட்சி நிச்சயம் வயிறு குலுங்கச் சிரிக்கத் தக்கதாய் இருக்குமே!

ஆனால் உண்மையில் அப்படி ஒன்றும் நடைபெறவில்லை. வயிறு குலுங்கச் சிரிக்கும்படி ஆகவில்லை. சாதக, பாதகக் கூறுகளை நான் அலசி ஆராயவில்லை. என் மனசாட்சி எப்படி என்னைப் படுத்தி வைத்தது, இரவெல்லாம் எப்படி நான் தூக்கமில்லாமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன் என்பதையெல்லாம் சொல்ல எனக்கு வெட்கமாய் இருக்கிறது. என் செயலுக்கு நியாயம் கூற விரும்பவில்லை நான்—ஏனெனில் தம் செயலுக்கு நியாயம் கூறிக் கொள்வோரின் நோக்கம் ஏனையோர் தம்மீது இரக்கம் கொள்ளச் செய்ய வேண்டுமென்பதல்ல, தாமே தம்மீது இரக்கம் கொள்ளும்படிச் செய்வதுதான். நான் ஒரு பாவி, பாக்கியமில்லாதவன், பரிதாபத்துக்குரியவன்.... என்று தனக்குத் தானே கூறி இரக்கப் பட்டுக் கொள்ள வேண்டுமென்பதே இவர்களுடைய நோக்கம்.

என்னை இப்படி நான் சிறுமைப்படுத்திக் கொள்ளப் போவதில்லை. எப்படியும் யாவும் பழஞ் சரக்கு ஆகிவிட்டபடியால், நான் என்னைக் கேவலப் படுத்திக் கொள்ளப் போவதில்லை. அன்று இரவு என்னால் தூங்க முடியாமற் போனதற்குக் காரணம் நானல்ல; எங்கள் முதல்வர் விளதீமிர் கன்ஸ்தன் தீனவிச்சுதான் காரணம். என்ன ஆயிற்று என்றால்,

வீக்தர் வீக்தரொவிச்சை நான் சந்தித்துப் பேசிய அந்த துரதிர்ஷ்ட சம்பவத்துக்குப் பல நாட்களுக்கு முன்பு காவல் துறையிலிருந்து சூட்டிகையான இளம் சார்ஜன்டு ஒருவர் எங்கள் பள்ளிக்கு வந்திருந்தார். முதல்வரின் அறையில் இரண்டு மணி நேரத்துக்குக் குறையாமல் இருந்துவிட்டுச் சென்ருர். அவ்வளவு நேரமும் இருவரும் தனியேதான் இருந்து பேசினுர்கள். ஆயினும் இருவரும் விவாதித்தது என்னவென்பது எங்கள் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

கோல்யா பிர்யுக்கோவைப் பற்றியே இருவரும் விவாதித்தார்கள்! காவல் துறையினர் முடிவில் கோல்யாவைக் கண்டுபிடித்துவிட்டார்கள். அவன் ஓடிச் சென்று ஒளிந்திருந்த அந்த அரிய இடத்தை அவர்கள் தெரிந்து கொண்டுவிட்டார்கள். ஆனுல் நல்லவேளை அதற்குள் அவனுக்கு பதினுறு வயது ஆகிவிட்டது: முழு உரிமை பெற்ற குடிமகனுகி விட்டான், இனி அவனைக் கழுத்தைப் பிடித்து இழுத்து வந்து வீட்டில் ஒப்படைப்பது முடியாத காரியம். கோல்யாவைப் பற்றிய பத்திரங்களை வாங்கித் தற்போது அவன் வசித்து வந்த இடத்துக்கு அனுப்பி, அவனுக்கு அடையாளப் பத்திரம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்காகவே காவல் துறை சார்ஜன்டு எங்கள் முதல்வரிடம் வந்திருந்தார். (கோல்யா சொல்லியிருந்தபடியே யாவும் நடைபெற்றன, அவன் திட்டம் அப்படியே நிறைவேறியது. எங்கள் கோல்யா! அவன் பலே கைகாரன்!)

ஆனுல் இந்தக் காரியத்துக்கு அவர்கள் இருவரும் இரண்டு மணி நேரம் செலவிடத் தேவையில்லை, ஐந்தே நிமிடங்களில் யாவற்றையும்

முடித்திருக்கலாம். ஆயினும் இருவரும் இரண்டு மணி நேரம் தனியே பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசியது கோல்யாவின் பத்திரங்களைப் பற்றி மட்டுமல்ல, தகவல் அறிந்தவர்களிடமிருந்து இதை நான் தெரிந்து கொண்டேன். திரும்பவும் யாராவது ஒரு பையன் இம்மாதிரி ஓடி சோவியத் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் அவனை தேடும்படியான நிலைமை ஏற்படாமல் தடுக்க என்ன செய்யலாம் என்பது குறித்து காவல் துறை சார்ஜன்டு மெல்ல முதல்வரிடம் பேச்சு கொடுத்துப் பார்த்தார். பிர்யுக்கோவ் ஓடியது சாதாரணமாய் நடைபெறக் கூடியதல்ல, விதி விலக்கான ஒரு சம்பவம், உணர்ச்சி வயப்பட்ட நெருக்கடியால் விளைந்தது என்று முதல்வர் பதிலளித்தார். பிறகு காவல் துறை சார்ஜன்டு இம்மாதிரியான உணர்ச்சி வயப்பட்ட நெருக்கடி மீண்டும் ஏற்படாமலும் பையன்கள் குரல்கள் இழக்காமலும் தடுப்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாதா என்று நயமாய் விசாரித்தார். இதைக் கேட்டதும் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் கோபமடைந்து கூச்சலுங்கூட போட முற்படலானார். தாம் ஒன்றும் எல்லாம் வல்ல இறைவனல்ல, இருந்திருந்தால் நெடுங் காலத்துக்கு முன்பே யாவற்றையும் ஒழுங்கு செய்திருக்க முடியும் என்று இரைந்தார்.

பேச்சு அதோடு முடிவடைந்திருந்தால் வெளியே எங்களுக்கு இந்த விவாதத்தைப் பற்றி அதிகம் தெரிந்திருக்காது. தான் பாடுவதைக் கேட்டுப் பார்க்க வேண்டுமென்று அந்த சார்ஜன்டு கூச்சப்பட்டுக் கொண்டு தயங்கியவாறு கேட்டுக் கொண்டார். உச்ச கட்டைச் சாரீரம் தனக்கு

இருப்பதாய்ப் பலரும் சொல்வதாகவும் காவல் துறையினரது இசை நிகழ்ச்சிகளில் தான் பாடி வருவதாகவும் சொல்லி, தனது பாட்டுத் திறன் குறித்து பேராசிரியருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புவதாய்ச் சொன்னார்.

அவர்களுடைய உரையாடலின் இந்த விவரம் விரைவில் எங்கள் எம்லோருக்கும் தெரிந்து விட்டது. வதந்திகள் மட்டுமல்ல காரணம், காவல் துறை சார்ஜன்டு சைக்கோவ்ஸ்கியின் ''எவ்கெனி ஒனெகின்'' ஒபெராவிலிருந்து லென்ஸ்கியின் ஆரியாவைப் பாடியது வெளியே எங்கள் எல்லோர் காதிலும் விழுந்தது. இதன்பின் முகம் மலர்ந்து மகிழ்ந்தவாறு சார்ஜன்டு எங்கள் பள்ளியிலிருந்து வெளியே சென்றதை நாங்கள் கண்ணுற்ருேம்.

ஆனுல் அவர் வந்து சென்றபின் விளதீமிர் கன்ஸ் தன்தீனவிச் உடல் நலமின்றி படுக்க வேண்டிய தாகிவிட்டது. எப்பொழுதுமே அவருக்குக் கல்லீரல் கோளாறு உண்டு, இப்பொழுது அது மிகவும் கடுமையாகிவிட்டது. சார்ஜன்டுடன் நடை பெற்ற அந்த உரையாடலுக்குப் பிறபாடு அவர் மருத்துவமனையில் ஆறு வாரங்கள் இருக்க வேண்டியதாயிற்று.

எனவேதான் அன்று இரவு முழுதும் என்னுல் தூங்க முடியவில்லை. விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சைப் பற்றி நினைத்தவாறு, வீக்தர் வீக்தரொவிச்சைப் பற்றி அவர் என்ன சோல்லியிருப்பார் என்று நினைத்தவாறு படுத்திருந்தேன். மறு நாள் மாலை ஐந்து மணிக்கு ஏற்பாடாகியிருந்த இந்தச் சந்திப்பைப் பற்றி தெரிய வருமானுல் வயது முதிர்ந்த எங்கள் முதல்வர் என்ன கூறியிருப்பார் என்று என்னுள் நினைத்துப் பார்த்தேன். அதனுல்தான்

இரவு பூராவும் தூக்கமின்றி படுக்கையில் புரண்டு ரகாண்டிருந்தேன்.

ஆனால் மறுநாள் காலையில் புத்துணர்வு பெற்ற வனாய் எழுந்தேன். எந்தக் கவலையுமின்றி நிம்மதி யாய்த் தூங்கியது போல அவ்வளவு விறுவிறுப் பாய் இருந்தது. தலை மிக தெளிவாய் இருந் தது, கொஞ்சங்கூட கனக்கவில்லை, முற்றிலும் காலியோ என்று எண்ணும்படி அப்படி இலேசாய் இருந்தது.

3

நான் அன்றைய கலை நிகழ்ச்சியில் கவர்ச்சி நட்சத்திரமாய் இருந்ததால், கடைசி வரை மேடைக்கு அனுப்பப்படாமல் பின்னால் வைக்கப் பட்டிருந்தேன். இதனால் புறத்தே நின்று முழு நிகழ்ச்சியையும், ''பிரபல மாஸ்கோ கலைஞர்களின் கோலாகலக் கலைநிகழ்ச்சி'' அனைத்தையும்—அரசுப் பண்ணையின் கலாசார மன்றத்தின் வாயிலில் வைக்கப்பட்டிருந்த ஒட்டுப்பலகை அறிவிப்பில் அவ்வாறுதான் குறிக்கப்பட்டிருந்தது—கண்டு களிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

கலாசார மன்றம் சிறியதுதான், அதேபோல அதனுள்ளிருந்த நிகழ்ச்சிக் கூடமும் மேடையும் சிறியவையே. ஆனால் அந்த அரசுப் பண்ணை சிறி தல்ல என்பது தெரிந்தது, ஏனென்றால் கூடம் நிரம்பி வழியும்படி பெருங் கூட்டம் கூடியிருந் தது. ஆடவர், பெண்டிர், இளைஞர், முதியோர்— எல்லோருமே திரண்டெழுந்து இந்தக் கூடத்துக்கு வந்துவிட்டது போலிருந்தது. ''கோலாகலக் கலைநிகழ்ச்சி''யால் கவரப்பட்டு எல்லோருமே வந்து விட்டார்கள். பெயர் பெற்ற மாஸ்கோ

கலைஞர்கள் யாருமே நெடுங் காலமாய் இந்த அரசுப் பண்ணையின் பக்கம் வந்ததில்லை என்பது புலப்பட்டது. அன்றைய நிகழ்ச்சியின் பொறுப் பாளராகிய வீக்தர் வீக்தரொவிச் இம்மாதிரியான இடங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு தமது ''தனியார்'' முறையிலான கலைக் குழுவை அழைத்து வந்தார் என்பது தெரிந்தது. இந்தக் கலா சாரமன்றத்தில் ''தனியார்'' முறையிலான கலை நிகழ்ச்சியோ, முறைப்படியான கலைநிகழ்ச்சியோ நடைபெற்று எத்தனையோ ஆண்டுகள் ஆகியிருக் கும் போலிருந்தது. நிகழ்ச்சியின்போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சபையோர் ஆர்ப்பரித்து முழக்கமிட்டதிலிருந்து இது புலப்பட்டது.

குறிப்பிடப்பட்ட அந்த மூலையில் சரியாக ஐந்து மணிக்கு அந்தக் பெரிய கார் வந்து நின்றதும் நான் உள்ளே ஏறி அதனுள் இருந்தோருக்கு முகமன் கூறிவிட்டுச் சுற்றிலும் பார்த்தபோது என்னையும் டிரைவரையும் சேர்த்து நாங்கள் எட்டு பேரே இருக்கக் கண்டேன். அரசுப் பண்ணையின் கலாசார மன்றத்துக்குப் போய்ச் சேருமுன்பே, முழுநேரக் கலை நிகழ்ச்சிக்குப் போதுமா இது என்று நினைத்துக் கலங்கிக் கொண்டிருந்தேன். அங்கே வாயிலில் ஒட்டுப்பலகையில் எழுதப்பட்டிருந்த அறிவிப் பைப் படித்தபின் என்னுடைய கலக்கம் மேலும் அதிகரிக்கலாயிற்று. டிரைவரைச் சேர்க்கக் கூடாதாகையால் கலைஞர்கள் எனத்தக்கவர் களாகிய நாங்கள் ஏழே பேர்தான்! கோலாகலக் கலை நிகழ்ச்சியாமே....

ஆனல் இந்த அதியற்புத எழுவரின் ஆற்றலை நான் குறைத்து மதிப்பிட்டுவிட்டேன் என்பது பிற்பாடு தெரிய வந்தது. வீக்தர் வீக்தரொவிச்

ஒருவரை மட்டும் எடுத்துக் கொள்வோமே. ''தனியார்'' முறையிலான கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துப் பணம் பண்ணும் கில்லாடி, அவ்வளவுதான் என்பதாகவே ஆரம்பத்தில் நினைத்திருந்தேன். ஆனால் அவரே ஒரு பெரிய நட்சத்திரமாவார் என்பதைப் பிற்பாடு கண்டேன்! எல்லோருக்கும் முதலாய் மேடை ஏறியவர் அவர்தான். மேடையிலே தோன்றிச் சபையோருக்கு எல்லா விதமான நகைச்சுவைக் கதைகளும் துணுக்குகளும் சொல்ல முற்பட்டார். அவை மூன்றும் வகுப்பு மாணவனாய் இருந்த நாட்கள் முதலாய் நான் அறிந்தவையே. பிற்பாடு ''குரோக்கடில்'' விகட ஏட்டின் பழைய பிரதிகளில் அவற்றைப் படித்திருந்தேன். தரைக்கு மெருகிடுவோரையும் காவல் துறையினரையும், காசியர்களையும் விற்பனையாளர்களையும், அதனுரையும் ஐசன்ஹோவரையும் பற்றிய இந்த விகடக் கதைகளையும் துணுக்குகளையும் அங்கு கூடியிருந்தோர் பலரும் ஏற்கனவே கேட்டிருப்பார்கள். அவர்களும் பள்ளிகளில் படித்தவர்கள்தானே, எப்பொழுதாவது ஏடுகளும் இதழ்களும் படிப்பவர்கள்தானே.

ஆனால் வீக்தர் வீக்தரொவிச் தயக்கம் சிறிதுமின்றி இந்தப் பழைய விகடக் கதைகளுடன் தமது சொந்த சரடுகளையும் சேர்த்துத் தமக்கே உரிய பாணியில் அவற்றை மாற்றித் திரித்துக் கூறினார். யாவும் தனக்கோ, தனது நண்பர்களுக்கோ நேர்ந்தவற்றைக் கூறுவதாய்த் தோன்றும்படி இவற்றை எடுத்துரைத்தார். நடந்ததை நடந்தபடி கூறுகிறார் என்று எல்லோரையும் நம்பவைக்கும்படியான குரலில் யாவற்றையும் சொன்னார். இவரே, இந்த வீக்தர் வீக்தரொவிச்சே

தரைக்கு மெருகிடுவோரையும் விற்பனையாளர் களையும் பற்றிய இந்த விவகாரங்களில் சம்பந்தப் பட்டிருந்தார், காசியரோடும் காவல் துறையின ரோடும் தொடர்பு கொண்டிருந்தார், இவருடைய நெருங்கிய நண்பர்கள் ஐசன்ஹோவருடன் அன் னியோன்யமாய்ப் பழகியிருந்தனர் என்பதாய் எல்லோரும்—நானும் கூடத்தான்—நினைக்க வேண்டியிருந்தது.

சபையோர் குதூகலமாய்ச் சிரித்துக் கொண் டிருந்தார்கள். பிறகு சற்று நேரத்துக்கெல்லாம் வீக்தர் வீக்தரொவிச் அடுத்த நிகழ்ச்சியை அறி வித்தார். உடற் பயிற்சிக் கூத்தர்கள் இருவர்—ஓர் ஆணும் ஒரு பெண்ணும்—உடனே மேடை யிலே தோன்றினர்கள். தனிச் சிறப்புடைத்த அருஞ் செயல்கள் பலவும் செய்து காட்டினர்கள். எப்படியும் நான் இதற்கு முன்போ இதற்குப் பிறகோ இவர்களுக்கு நிகரான இரு உடற் பயிற்சிக் கூத்தர்களைக் கண்டதில்லை.

மேடையிலே வந்து நிற்கும் முன்பே, இருவரும் தமக்குரிய ஆட்ட உடுப்புகளை உடுத்திக் கொண் டிருந்த போதே—ஜிகினு பதித்த வெள்ளை உடுப் பைப் பெண்ணும், ஜிகினு பதித்த கறுப்பு உடுப்பை ஆணும் உடுத்திக் கொண்ட போதே—அட பாவமே, என்ன ஆகுமோ என்று நான் குழம்பி யது எனக்கு நினைவில் இருக்கிறது. ஏனெனில் அந்தப் பெண் திண் தோள்களும் தடித்த கால் களும் மென்முடிகளும் கொண்டு நெடிதுயர்ந்தவள், இளம் வயதினள்; ஆனால் அந்த ஆள் மெலிந்து நோய்ஞ்சலாய் இருந்தார், அந்தப் பெண்ணின் தோள் அளவுக்கே வந்தார், பார்ப்பதற்கு ஐம்பது வயதை நெருங்கியவரைப் போல் தோன்றி

ஞர். அருகிலிருந்து பார்த்த எனக்கு அவருடைய நரை முடிகளுக்கு அவருடைய உடுப்பின் நிறத்துக்கு இசைவாய் கறுப்புச் சாயமும், அந்தப் பெண்ணின் வெண்ணிற உடுப்புக்கு இசைவாய் தலை முடிகளுக்கு வெள்ளைச் சாயமும் இடப்பட்டிருந்தது தெரிந்தது.

நோய்ஞ்சலான இந்த ஆள் நெடிதுயர்ந்த பர்வதம் போன்ற இந்தப் பெண்ணைத் தரையிலிருந்து ஓரங்குலம் கூட தூக்க முடியாதே, பாவம் என்ன ஆகுமோ என்று நான் குழம்பிக் கொண்டிருந்தேன்.

ஆனால் அவர்களுடைய உடற் பயிற்சிக் கூத்தின் சிறப்பே இதில்தான் அடங்கியிருந்தது. இருவரும் ஓடிச் சென்று மேடையின் மையத்தில் நின்றதுமே அந்தப் பெண்—ஆம், பெண்தான்!—கையை ஒரு வீசு வீசி அப்படியே அந்த ஆளை அலாக்காய்த் தூக்கித் தன் தோள்களில் அமர்த்திக் கொண்டுவிட்டாள்.

சபையோர் திடுக்குற வேண்டியதாயிற்று.

பிறகு தசை நார்களைச் சற்றுப் புடைக்கச் செய்து கொண்டு அவள் —பெண்தான்!—அந்த ஆளை அப்படியே உயர்த்தித் தன் தலை மீது கைகளை ஊன்றிக் கொண்டு நிற்கச் செய்தாள்.

திகைத்துப் போய் எல்லோரும் வாயைப் பிளந்து கொண்டு உற்று நோக்கியவாறு உட்கார்ந்திருந்தார்கள்.

பிறகு அந்த ஆள் அவள் தலையிலிருந்து ஒரு கையை எடுத்துவிட்டு தனது மற்றொரு கைமீது நின்று சரி செய்து கொண்டு கால்களை ஒரு புறமாய் மெல்ல சாய்த்தார்.

கையொலி முழக்கம் கிளர்ந்தெழுந்தது.

இதன்பின் நடைபெற்றவை விவரிக்க இயலாதவை. அந்தப் பேரணங்கு அந்த ஆளைப் படுத்திய பாட்டை என்னென்பது! அப்படியே தூக்கி உயரக் காற்றிலே விட்டெறிந்து, பிறகு கீழே வந்து தரையில் விழும் தருணத்தில் அவரைப் பிடித்துக் கொண்டாள். அவர் கரங்களைப் பற்றிக் கொண்டு அவரைச் சுற்றிச் சுழற்றினாள். ஆளைத் திருகி விட்டுச் சுழன்று வரச் செய்தாள், முடி போடுவது போல வளைத்து இழுத்தாள், பந்தாய்ச் சுருட்டி உயரத் தூக்கி எறிந்து காற்றிலே வட்டமிட்டுத் திரும்பவும் தன் கைக்கு வந்து சேரச் செய்தாள்.

அந்த ஆளை வைத்துக் கொண்டு ஜாலங்கள் புரிந்து மேலும் மேலும் அதிசயங்கள் நிகழ்த்திச் சென்றாள், சபையோரும் மேலும் மேலும் ஆனந்தக் கூச்சலிட்டு வாழ்த்தினர். இதையெல்லாம் பார்த்த எனக்கு உள்ளுக்குள் உதறலாய் இருந்தது. இந்த வித்தைகளுக்குப் பிறகு நான் மேடைக்குச் சென்று பாடத் தொடங்கினால் சபையோரின் ஆர்வம் கரைந்து போய் விடாதா, என்னால் அதை வானுச்சியிலே தொடர்ந்து சஞ்சரிக்கச் செய்ய முடியுமா என்று பயந்தேன். மெய்யாகவே நான் ''கவர்ச்சி நட்சத்திரமாய்ச்'' செயல்பட முடியுமா என்ற சந்தேகம் என்னை வாட்டத் தொடங்கிற்று.

ஆனால் இதற்குப் பிற்பாடு வந்த நிகழ்ச்சிகள் —வீக்தர் வீக்தரொவிச்சின் அசட்டுப் பேச்சுகளும் அடங்கலாய்—எனக்குத் தெம்பளித்தன, ஏனெனில் இவை சோபையற்றவையாகவே இருந்தன.

சீலபோன் தனி இசையும் அதன்பின் ஜாலவித்தைகளும் நடைபெற்றன. இவ்விரு நிகழ்ச்சிகளில்

எதுவும் குறிப்பிடத்தக்கதாய் இல்லை; பல்சுவைக் கலைநிகழ்ச்சி எதிலும் காணக்கூடிய பழஞ் சரக்கே இவை. ஆனால் இரண்டே இரண்டு விவரங்கள் மட்டும் குறிப்பிடத்தக்கவை.

சீலபோன் இசை வழக்கம் போலவே இருந்தது. கறுப்பு உடை உடுத்திய ஆள் ஒருவர் மேடையிலே வந்து நின்று இரண்டு சிறு தட்டுக் குச்சுகளை எடுத்துக் கொண்டு ஷ்டிராவுஸ் இசைக் கதம்பம் அளிக்க முற்பட்டார். தமக்குரிய பங்கைச் செவ்வனே செய்து முடித்துத் தலை குனிந்து சபையோரை வணங்கிவிட்டுப் போய்ச் சேர்ந்தார். அவ்வளவு தான் என்றாலும், கறுப்பு உடை உடுத்திய இந்த இசைவாணர் நன்றாய் குடித்துவிட்டு தன்னுணர்வற்ற நிலையிலே இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பஸ்ஸில் நாங்கள் வரும்போது அடிக்கடி அவர் தமது கோட்டுப் பைக்குள்ளிருந்து ஒரு தட்டைக் குப்பியை எடுத்து ஒரு வாய் குடித்ததையும், அது தொண்டைக்குள் சென்றபோது உடலை உலுக்கி உதறிக்கொண்டபின் மனநிறைவோடு உதடுகளைச் சப்பிக் கொண்டு குப்பியை கோட்டுப் பைக்குள் திருப்பி வைத்ததையும் கவனித்து வந்தேன். அப்பொழுது அவருடைய கண்கள் மயங்கிப் போயிருந்தன. ஒன்றும் புரியாமல் அசட்டுத்தனமாய் தமக்குத் தாமே ஏதோ உளறிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

குடிபோதை தலைக்கேறி உணர்விழந்த நிலையில் இருந்த இந்த இசைவாணரை மேடைக்கு அனுப்ப வேண்டாம், சபையோருக்கு எதிரே அவர் அசட்டுத்தனம் புரிந்து கலைநிகழ்ச்சியையே பாழாக்கிவிடுவார் என்று வீக்தர் வீக்தரொவிச்

சிடம் நான் கூற விரும்பினேன். ஆனால் என்னைக் காட்டிலும் வீக்தர் வீக்தரொவிச் இந்த ஆளை நன்கு அறிந்தே இருப்பார், இவருடைய கோட்டுப் பையில் இருந்த குப்பியை கவனித்தே இருப் பார், ஆகவே நான் தலையிடுவதில் அர்த்தமில்லை என்று முடிவு செய்து கொண்டு பேசாமல் இருந்து விட்டேன். நான் செய்த முடிவு சரியானதே என்பது பிற்பாடு தெரிய வந்தது.

கறுப்பு உடை உடுத்திய இந்த ஆள் சீலபோன் தனி இசை அறிவிக்கப்பட்டதும் வெடுக்கென நிமிர்ந்து உடுப்பைச் சரிசெய்து கொண்டு தயக்க மோ தளர்வோ இன்றி மேடைக்குள் நடந்து தமது தட்டுக் குச்சிகளை எடுத்துத் தேர்ந்த வித்வானுக்குரிய முறையில் ஷ்டிராவுஸ் இசைக் கதம்பத்தை தடங்கலோ இம்மியளவு பிழையோ இல்லாமல் இசைத்தார். யாவும் முடிந்ததும் தட்டுக் குச்சிகளை அவற்றுக்குரிய இடத்தில் திருப்பி வைத் தார், உடனே குனிந்து வணக்கம் செய்துவிட்டு மேடையிலிருந்து உள்ளே நடந்தார்.

கலைஞர்களாகிய எங்களுடைய பணிக்குப் பயிற் சியும் வித்வத்துவமும் எவ்வளவு முக்கியமானவை என்பதற்கு எனக்கு இது தெட்டதெளிவான மற்றுமோர் எடுத்துக்காட்டாய் விளங்கிற்று.

ஆனால் ஜாலவித்தைக்காரர் முற்றிலும் நிதான நிலையிலேதான் இருந்தார். காண்போர் திகைக் கும் படியான எல்லா வித்தைகளையும் இவர் சபை யோரின் கண்ணெதிரே நின்று செய்து காட்டினார். அவருக்கு அருகில் புறத்தே ஒரு பக்கத்தில் சற்று பின்னால் நின்று யாவற்றையும் பார்த்து கொண் டிருந்த என்னாலுங்கூட எப்படி இவ்வளவையும் செய்தார், இவருடைய வித்தைகளின் மர்மம்

என்ன என்று கண்டுபிடிக்க முடியவில்லை. பலரும் பலவாறாய்ச் சொன்ன போதிலும், பெருந் திரளானோர் இம்மாதிரியான காட்சிகளுக்குக் கவர்ந்திழுக்கப்படுவதற்கு அவ்வளவாய் இந்த வித்தைகளல்ல காரணம்; வித்தைக்காரரின் கைச்சாதுர்யத்துக்குப் பின்னால் மறைந்திருக்கும் மர்மத்தைக் கண்டு கொண்டு ''ஓகோ, இதுதானா இரகசியம்! நண்பரே, இம்முறை யாவும் வெளிச்சமாகிவிட்டது!'' என்று ஆனந்தப்படுவதற்குச் சந்தர்ப்பம் கிட்டினாலும் கிட்டுமென்ற ஊக்கமே காரணம்.

ஆனால் வீக்தர் வீக்தரொவிச்சின் வித்தைக்காரர் இம்மாதிரியான சந்தர்ப்பம் யாருக்கும் கிட்டுவதற்கு இடந் தரவே இல்லை. செய்தியேட்டை அவர் சுக்குச் சுக்காய்க் கிழித்துக் கசக்கி யாவற்றையும் ஒரு பந்தாய்ச் சேர்த்து உருட்டினார், பிறகு இந்த உருண்டையை மெல்லப் பிரித்தார்—பாருங்களேன், செய்தியேடு முழுதாய் அப்படியே வந்து நிற்பதை! தலையிலிருந்த நெட்டைத் தொப்பியை எடுத்துக் காட்டிவிட்டு அதற்குள்ளிருந்து வரிசையாய்க் கைக்குட்டைகளையும், பெருங் குவியலாய் தரையில் குவிந்த பன்னிற ரிப்பன்களையும், மலர்க் கொத்துகளையும், இவை யாவற்றுக்கும் முடிவில் ஒரு பெரிய கோழியையும் வெளியே எடுத்தார். காலியாயிருந்த தொப்பிக்குள் கோழி எப்படிப் போய்ச் சேர்ந்தது, காணத் தவறிவிட்டோமே என்று நான் மலைத்துப் போனதோடு, பெருஞ் சப்தமிட்ட அந்தக் கோழியை வழி நெடுகிலும் பஸ்ஸில் எப்படி என்னால் கவனியாது வர முடிந்ததென்று பிரமித்துப் போனேன். எங்களுடன் பஸ்ஸில் கோழி எதுவும்

வரவில்லை என்று சத்தியம் செய்யத் தயாரா யிருந்தேன். பகவானுக்குதான் வெளிச்சம்!

ஆயினும் இந்த அதிசய வித்தைகளை எல்லாம் தூக்கியடித்துவிட்டது அவர் செய்து காட்டிய பண ஜாலம். சட்டையின் கைப் பட்டியை மேலே இழுத்து விட்டுக் கொண்டு கையை உயர்த்திஞர். பிறகு விரல்களை ஆட்டிஞர், உடனே ஒரு சிவப்புப் பத்து ரூபிள் நோட்டு உதித்தெழுந்தது. மீண்டும் ஆட்டிஞர், இன்ஞெரு பத்து ரூபிள் நோட்டு வந்தது. இப்படி ஒன்றன்பின் ஒன்ருய் ஓயாமல் நோட்டுகள் வந்து கொண்டிருந்தன, ஒவ்வொன்ருய் எடுத்துக் கோட்டுப் பைக்குள் வைத்துக் கொண் டிருந்தார். வித்தைக்காரரின் முகத்திலிருந்து மகிழ்ச்சிப் புன்னகை மறையவே இல்லை, பத்து ரூபிள் நோட்டுகள் முடிவின்றி வந்து கொண்டே இருந்தன....

இந்தப் பண வித்தைதான் யாவற்றிலும் கடின மானதா என்பது தெரியாது எனக்கு. காலித் தொப்பியிலிருந்து கோழியை எடுத்தாரே, அது இந்த வித்தையைக் காட்டிலும் பிரமாதமான தாய் இருந்திருக்கலாம். ஆயினும் சிவப்புப் பத்து ரூபிள் நோட்டுகள்தான் யாவற்றிலும் அதிக மாய்ச் சபையோரைத் திகைப்புறச் செய்தன. விரல்களை ஒரு தரம் ஆட்டியதும் வெற்றுக் காற்றிலிருந்து உதித்தெழுவது போல, எந்தச் சிரமமுமின்றி எங்கிருந்தோ பத்து ரூபிள் நோட்டு அல்லவா கையில் வந்து நின்றது!

எங்களது அதியற்புத எழுவர் குழுவின் கடைசி உறுப்பினரான அஸ்யாவைப் பற்றி நான் கூருமல் விடுவது நியாயமாகாது. அஸ்யாதான் எங்களுக்குப் பியாஞே வாசித்தார். அன்றைய கலைநிகழ்ச்சி

பூராவிலும் அவர் அரசுப் பண்ணைக் கலாசார மன்றத்தின் அந்த மிகப் பழைய பியானேவின் முன்னுல்தான் அமர்ந்திருந்தார், ஒரு தரம்கூட இருக்கையை விட்டு எழவே இல்லே. முதலில் திரை உயர்த்தப் பட்டதும் அவர் உற்சாகமான அணிவகுப்பு இசை வழங்கினுர். உடற் பயிற்சி யாளர்கள் இருவரின் கூத்துக்கும், பிறகு கோழியை எடுத்துக் காட்டிய ஜாலவித்தைக்காரருக்கும் முடிவில் என்னுடைய பாட்டுகளுக்கும் பின்னிசை வாசித்தார். வயது முதிர்ந்த அன்னே அவர், நூறு வயதை நெருங்கி வந்தவராய்த் தோன்றினுர். ஆயினும் சிறு பெண்ணைக் கூப்பிடுவது போல எல்லோரும் முதற் பெயரைச் சொல்லி அஸ்யா என்றே அவரை அழைத்தார்கள். அவருடைய முழுப் பெயரை என்னுல் தெரிந்து கொள்ள முடிய வில்லே. நான் அவருடன் பேசிய போதெல்லாம் பெயரைச் சொல்லி அவரைக் கூப்பிட நேராத படிப் பார்த்துக் கொண்டேன். கலேநிகழ்ச்சி ஆரம்ப மாகும் முன்பு, திரை இன்னமும் மேடையை மறைத்திருந்த அந்த நேரத்தில், அஸ்யாவும் நானும் வேகமாய் ஒத்திகை நடத்திப் பார்த்தோம்: நான் சப்தமின்றி மெல்லப் பாடினேன், உடனே பின்னிசையை அவர் தக்கபடி சரிசெய்து கொண் டார். எனவே பிற்பாடு மேடையில் இருவரும் எங்கள் இசைவு குறித்து கவலேப்படாமல் நம் பிக்கையுடன் செயல்பட முடிந்தது. அஸ்யா என்னே ஒருபோதும் தவிக்கவிட மாட்டார் என்பதைத் தொடக்கத்திலேயே தெரிந்து கொண்டுவிட் டேன்.

வீக்தர் வீக்தரொவிச் மேடையின் மையத்துக் குச் சென்று, மற்ருெரு விகடக் கதையைச் சொல்லி

சபையோருக்கு விறுவிறுப்பூட்டினர். பிறகு நெஞ்சை முன்னுல் தள்ளிக் கொண்டு பெருமிதத்தோடு அறிவித்தார்: ''இப்பொழுது உங்களுக்குப் பாட்டிசைக்கப் போவது ழேன்யா புரோஹரொவ்! நம் நாட்டின் லொபர்ட்டினே லொரெட்டி!''

அட எழவே! ஆயினும் அவருடைய இந்த அவமானகரமான பிழையை அங்கே குழுமியிருந்தோரில் எவரும் கவனித்ததாய்த் தெரியவில்லை, அல்லது இதை அவர்கள் பொருட்படுத்த விரும்பாததாய்த் தோன்றியது —இந்த அறிவிப்பைப் கேட்டதும் அப்படி எல்லோரும் பூரிப்படைந்து விட்டனர். நமது உலகில் இன்னெரு ரொபர்ட்டினே இருக்கிறுன், அதுவும் நமது சோவியத் நாட்டு ரொபர்ட்டினே ஒருவன் இருக்கிறுன், இப்போது இதே கணத்தில் இவனைப் பார்க்கப் போகிறோம், இவன் பாடுவதைக் கேட்கப் போகிறோம் என்பது அறிந்து அப்படி அவர்கள் மெய்மறந்துவிட்டனர்.

அப்படியானுல் நன்ருய்ப் பாருங்கள், பாடுவதைக் கேளுங்கள்! இதோ வருகிறேன் ழேன்யா புரோஹரொவ்!

*Sul mare luccica*
*L'astro d'argento...*

நான் பாடியது நன்ருயில்லாமற் போய்விடுமோ என்ற அச்சம் ஏதும் இல்லை எனக்கு. நான்ருகவே பாடுவேன் என்பது எனக்குத் தெரியும். நன்ருய்ப் பாடப் பழகியவனே நான். எனக்கு அச்சமளித்தது வேறென்று. மாலைப் பொழுது முழுதும் நான் அந்த இத்தாலிய பாட்டுகளை மனப்பாடம் செய்து வைத்திருந்தேன். பொருள் விளங்காத சொற்களை குருட்டுப் பாடமாய் நெட்டுரு போட்டு

வைத்திருந்தேன். ஆனால் பொருள் தெரிய வேண்டும் என்பதில்லை, சொற்களைச் சரியாய் உச்சரிக்கத் தெரிந்தால் போதும். அசட்டுத் தனமாய் ''லொபர்ட்டினே'' என்று சொல்லிக் கொண்டிருந்த வீக்தர் வீக்தரொவிச்சைப் போல் உச்சரித்து என்னை நான் நகைப்புக்குரியவனாக்கிக் கொண்டுவிடக் கூடாது. இதை நினைத்தபோது தான் எனக்கு அச்சமாய் இருந்தது. சொற்களைச் சரியாய் உச்சரிக்கிறேனா என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். பாட்டின் சொற்கள் யாவும் இத்தாலியன், இவற்றை நான் ஜெர்மன் சொற்களைப் படிப்பது போல் படித்து, ருஷ்ய பாணியில் உச்சரித்துக் கொண்டிருந்தேன். இச்சொற்களின் உச்சரிப்புக்குரிய தனி முறைகள் இருக்கலாம்; ஜெர்மன், ருஷ்யச் சொற்களின் உச்சரிப்புக்கு இருக்கும் தனி முறைகளைப் போல் இத்தாலியச் சொற்களுக்கும் இருக்கலாம். ஜெர்மானியர்கள் சொற்களை எழுதுவது ஒரு விதம், உச்சரிப்பது வேறொரு விதம். ஆங்கிலேயர்கள் இன்னும் ஒருபடி மேலே செல்வதாய்க் கேள்வி. மாயா எனக்குச் சொல்லியிருந்தாள் (பள்ளியில் அவள் ஆங்கிலம் பயின்று வந்தவள்): அவர்கள் ''மான்ச்சஸ்டர்'' என்று எழுதிவிட்டு ''லிவர்ப்பூல்'' என்று படிப்பார்களாம்! இத்தாலிய மொழியிலும் இப்படி விபரீதங்கள் இருந்தால், என் பாடு என்னவது?

ஆயினும் இங்கே கூடியிருந்தோரில் பன்மொழிப் புலவர்கள் பலரும் இருக்க முடியாது, உச்சரிப்பில் நான் இழைத்த தவறுகள் கவனிக்கப் படமாட்டா என்று மனதைத் தைரியப்படுத்திக் கொண்டேன்.

இன்னொரு விவரமும் என் மனதுக்குத் தெம்பளித்தது. ஏனைய சொற்கள் எப்படி ஆயினும் இரண்டு சொற்களைப் பிழையின்றி சரியாகவே உச்சரித்தேன், இதில் எனக்குச் சந்தேகமில்லை; இவ்விரண்டும்தான் பாட்டில் மிகவும் முக்கியமானவை, வெற்றி முழுக்கமிடும் பல்லவியில் வருகிறவை:

*Santa Lucia,*
*Santa Lu-u-ucia!...*

வீக்தர் வீக்தரொவிச்சின் நினைப்பு தவறுகிவிடவில்லை. அன்றைய கலைநிகழ்ச்சியில் நான் பாடிய பாட்டுகள்தான் கவர்ச்சிச் சிகரமாய்க் கொண்டாடப்பட்டன. எனக்குக் கிடைத்த ஆரவாரக் கையொலி முழக்கம் வேறு யாருக்கும் கிடைக்கவில்லை; உடற்பயிற்சிக் கலைஞர்களுக்கோ, ஜாலவித்தைக்காரருக்கோ கிடைக்காத முழக்கம் எனக்குக் கிடைத்தது—முடிவின்றி நெடுநேரம் ஒலித்தது. ஆரம்பத்தில் வழக்கம் போல் கைதட்டினர், பிறகு உள்ளங் கைகள் சுரந்து போனதும், இந்நாட்களில் செய்வது போல எல்லோருமாய் இணைந்து தாள இசைவோடு கைதட்ட முற்பட்டனர்—பாடு, மீண்டும், மீண்டும், மீ—ண்—டும் என்று கையொலி முழக்கமிட்டனர்!

மீண்டும் நாங்கள் என்ன பாடுவது? மூன்றே மூன்று பாட்டுகள் பாடுவதென்று அஸ்யாவும் நானும் முன்கூட்டியே எங்களுக்குள் ஏற்பாடு செய்து வைத்திருந்தோம், எனக்குத் தெரிந்த ஏனைய பாட்டுகள் அஸ்யாவுக்குத் தெரியாது, அஸ்யாவுக்குத் தெரிந்திருக்கக் கூடியவை எனக்குத் தெரியாது. ஆனால் அங்கே குழுமியிருந்தோர்

இன்னும் வேண்டும், பாடு, பாடு என்று அல்லவா விடாப்பிடியாய்க் கோரிஞர்கள்!

ஆகவே ஒரே பாட்டைத் திரும்பத் திரும்ப நான் பாட வேண்டியதாயிற்று:

*O dolce Napoli,*
*O suol beato...*

இதன்பின் அவர்கள் இசைவு குலேயாமல் ''சாந்தா லூசியா! சாந்தா லூசியா!'' என்று மீண்டும் முழுங்கினர்.

மேடையிலே நின்று ஓயாமல் குனிந்து குனிந்து தலே வணங்கினேன். வீக்தர் வீக்தரொவிச்சின் தந்திரப் பேச்சுகளேக் கேட்டு ஏன் மயங்கிஞேம், பள்ளிக் கூட விதிகளே மீறி இங்கே அரசுப் பண்ணேக் கலாசார மன்றத்துக்கு இரகசியமாய் ஏன் வந்தோம் என்று மனம் நொந்து கொள்வதை நிறுத்திக் கொண்டேன்.

ஆஞல் மூடி மறைக்கத் தேவையின்றி யாவும் பகிரங்கமாகவே நடைபெற்றிருந்தால் இன்னும் நன்ருயிருந்திருக்குமே; வீக்தர் வீக்தரொவிச் இல்லாதிருந்தால் இன்னும் சிறப்பாயிருந்திருக்குமே.

மாஸ்கோவுக்கு அருகில் அமைந்த அந்த அரசுப் பண்ணேயைச் சேர்ந்த விருந்தோம்பும் உயர் பண்பு வாய்ந்த, அன்புகெழுமிய, விசால உள்ளம் கொண்ட அம்மக்கள் வீக்தர் வீக்தரொவிச்சைப் போன்ற எத்தர்கள் ஏற்பாடு செய்த ''தனியார்'' முறையிலான கலேநிகழ்ச்சிகளேத் தவிர வேறு எதையும் காணும் சந்தர்ப்பமில்லாமற் போனதற்குக் காரணம் யார்?

* * *

இருபத்தைந்து மைல் தொலைவுதான் என்றாலும் திரும்பி வருவதற்கான அந்தப் பயணம் இருட்டிலே நடைபெற வேண்டியிருந்தது, அது முடிவற்றதாய்த் தோன்றியது.

பெருங்காரின் பின்பக்க இருக்கையில் ஒரு மூலையில் ஒடுங்கிக் கொண்டு உட்கார்ந்தேன். களைத்து ஓய்ந்து போயிருந்தேன், தூக்கம் என்னையும் மீறி என் கண்களைச் செருகிற்று. இடையிடையே விழித்துக் கொள்வதும் திரும்பவும் தூங்கி விழுவதுமாய் இருந்தேன். பயணத்துக்கு முடிவே இருக்காது போலத் தோன்றிற்று.

ஓரிடத்தில் விழித்துக் கொண்டபோது காரின் முன்விளக்குகளின் ஒளியில் பளிச்சிட்ட சிமெண்டுச் சாலை எங்களை நோக்கி ஓடி வரக் கண்டேன். சிமெண்டுச் சாலையின் இரு மருங்கிலும் பைன் மரங்கள் அடர்ந்திருந்தன.

மீண்டும் தூங்கியபின் விழித்துப் பார்த்தபோது அதே சிமெண்டுச் சாலை எங்களை நோக்கி ஓடி வந்ததையும் சாலையின் ஒரு பக்கத்தில் கரிய பைன் மரங்கள் நெடிதுயர்ந்து எழுந்ததையும் கண்ணுற்றேன்.

நான் விழித்து கொண்டு கண் திறந்து பார்த்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாறாத அதே காட்சியையே கண்டு வந்தேன்—இருள், சிமெண்டுச் சாலை, பைன் மரங்கள்.

## 4

''ஆ-ஆ-ஆ.''

''சரி, அடுத்த பையன்.''

''ஆ-ஆ-ஆ....''

''உசச்சோவ், நீ எழுந்து போகலாம். அடுத்த பையன்.''

அன்று திங்கட்கிழமை. பள்ளிக்கூடப் பையன்கள் எல்லோரும், ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ஒவ்வொரு பையனும், மருத்துவச் சோதனைக்கு உட்பட்டாக வேண்டிய நாள் அது. அதாவது காது-மூக்கு-தொண்டை டாக்டரான எங்களது அருமை மரீயா லியோன்தியெவ்ஞ எங்கள் ஒவ்வொருவரின் தொண்டையினுள்ளும் பார்க்க வேண்டிய நாள் அது.

''அலீயெவ்! மகனே, வந்து உட்கார்!''

''ஆ-ஆ-ஆ.''

''இன்னொரு தரம் காட்டு.''

''ஆ-ஆ-ஆ.''

''ஓ-ஓ! நன்ருய் இருக்கிறதே!''

''என்ன ஆயிற்று?'' கரு விழிகள் இரண்டும் பரபரக்க மராத் அலீயெவ் கேட்டான். அவன் நாக்கின் முனையில் வலைத் துணி தொங்கிக் கொண்டிருந்தது.

''ஒன்றுமில்லை, அதற்குள் நீ கவலைப்படத் தேவையில்லை'' என்ருர் மரீயா லியோன்தியெவ்ஞ. அதேபோது, அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சின் பக்கம் சட்டெனத் திரும்பி, பொருட் செறிவுடன் அவரைப் பார்த்துக் கொண்டார்.

''மராத், இனி எழுந்து போகலாம். அடுத்த பையன்.''

''ஆ-ஆ-ஆ....''

''நல்லது, அடுத்த பையன்.''

''வந்தனம், மரீயா லியோன்தியெவ்ஞ.''

''வந்தனம், ழேன்யா. சரி, வாயைத் திற, பார்ப்போம்.''

அவருடைய நெற்றியிலிருந்த வட்டக் கண்ணு டியில் பட்டுத் திரும்பிய பிரகாசமான மஞ்சள் ஒளியில் எனக்குக் கண் கூசிற்று. தொண்டை ஆய்வுக் கருவியின் ஜில்லிடும் உலோக வில்லே என் நாக்கின் அடிப் பகுதியில் படுவதை உணர்ந்தேன்.

''ஆ-ஆ-ஆ.''

''இன்னெரு தரம்.''

''ஆ-ஆ-ஆ.''

''மீண்டும்.''

''ஆ-ஆ-ஆ.''

''அவ்வளவுதான், போதும்.''

மரீயா லியோன்தியெவ்ஞ கையிலிருந்து உலோகக் கருவி தட்டில் கணீரெனத் தட்டும்படி வைத்துவிட்டு, நெற்றியிலிருந்த வட்டக் கண் ணுடியை ஒதுக்கி விட்டுக் கொண்டார்.

''மேன்யா, கொஞ்ச காலத்துக்கு நீ பாடாமல் குரல் வளேக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். உன் னுடையதைப் போன்ற குரல் வளேகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவை. நான் சொல்வது விளங்குகிறது அல்லவா, உனக்கு?''

குனிந்து அவர் என்னேப் பார்த்த பார்வை யில் அமைதியும் அன்பும் நிறைந்திருந்தன. ஆனுல் எனக்கு நாக்கும் தொண்டையும் வறண்டுவிட்ட தையும், நெற்றியில் வியர்வை துளித்ததையும் உணர்ந்தேன். பேசாமல் உட்கார்ந்திருந்தேன்.

''விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்'' என்று அமைதி குலேயாத இதமான அதே முகபாவத்துடன் கூறி ஞர் மரீயா லியோன்தியெவ்ஞ. ''புரோஹரொவ் இனி பாடக் கூடாது. உடனடியாயக் கச்சேரி எதாவது நடைபெற விருக்கிறதா?''

''இல்லே, தற்போதைக்கு ஒன்றும் இல்லே.

புதிய கலைநிகழ்ச்சிக்காகத் திட்டம் வகுத்து வருகிறோம். அதனால் என்ன, பாடக் கூடாதென்றால் பாடக் கூடாதுதான்.''

வெறிக்கப் பார்த்தவாறு விளதீமிர் கன்ஸ்தன் தீனவிச் மூக்குக் கண்ணாடியைக் கைக்குட்டையால் துடைக்க முற்பட்டார். டாக்டர் கூறியதைக் கேட்டு அவர் சற்று நிலைகுலைந்து விட்டது மாதிரி தெரிந்தது. என்றேனும் ஒரு நாள் இப்படி நடக்கவே செய்யும் என்பது அவருக்குத் தெரியாததல்ல. இருப்பினும் அவர் நிலைகுலைந்து விட்டவராகவே தோன்றினார். அதனால்தான் அப்படித் தீர்மானமாய் மூக்குக் கண்ணாடியைத் திரும்பவும் போட்டுக் கொண்டு கடுமையான குரலில் சொன்னார்:

''பாடக் கூடாதென்றால் பாடக் கூடாதுதான். ழேன்யா, அது போகட்டும், வடிவ கணிதத்தில் கடந்த சிறிது காலமாய் நீ மோசமான மார்க் வாங்கி வருகிறாய் அல்லவா?''

நான் ஒன்றும் சொல்லவில்லை, என்னால் பேச முடியவில்லை. வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தேன்.

''ஆம், வடிவ கணிதத்தில் நீ மோசமான மார்க் வாங்கி வருகிறாய், இதில் நீ அதிக கவனம் செலுத்த வேண்டும்.''

''சரி, அடுத்த பையன்'' என்றார் மரீயா லியோன்தியெவ்னா.

ஆனால் அப்பொழுது நான் நாற்காலியை விட்டு எழவில்லை. கைகால்களை என்னால் அசைக்க முடியவில்லை.

''ழேன்யா, இதற்காக இப்படி நீ குலைந்து போவது முட்டாள்தனம்'' என்று அவர் குனிந்து

தணிவான குரலில் என்னிடம் கூறினர். ''இயற்கை நிகழ்வு இது. வயது வரும்போது இப்படித்தான் நடைபெறும். நீ பெரியவனுகி வருகிருய், ஆகவே நீ பெரியவனைப் போல் நடந்து கொள்ள வேண்டும். எழுந்திரு!''

பிறகு குரலை உயர்த்திக் கொண்டு ''அடுத்த பையன்'' என்ருர்.

''ஆ-ஆ-ஆ.''

''நன்ருய் இருக்கிறது, அடுத்த பையன்.''

''ஆ-ஆ-ஆ....''

* * *

மூன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தது போல், வகுப்புகள் முடிந்ததும் அதே சந்தில் நாங்கள் சந்தித்துக் கொண்டோம். ''உலோகத் தொழிலாளர்களின் கலாசார மாளிகையில் இந்தத் தடவை ஏற்பாடாகியிருக்கிறது!'' என்று மகிழ்ச்சி பொங்கும் குரலில் அறிவித்தார் வீக்தர் வீக்தரொவிச். ''புதிதாய்க் கட்டி முடிக்கப்பட்ட மாளிகை. ஆயிரம் பேர் அமரக்கூடிய மண்டபம், பிரமாதமான ஒலிப்பியல்!''

''வீக்தர் வீக்தரொவிச்....''

''அறிவிப்புப் பலகைகள் தயாராகின்றன. நிகழ்ச்சி மாலை ஏழு மணிக்கு ஆரம்பிக்கும். இங்கிருந்து போவதற்கு ஒரு மணி நேரம் ஆகும், ஆகவே உன்னை அழைத்து செல்ல சரியாக நாங்கள்....''

''வீக்தர் வீக்தரொவிச்....''

''என்ன அது? ஓகோ, நான் மறந்தேவிட்டேன்: உனக்குத் தர வேண்டிய பணம்...'' என்று சொல்லிக் கையைக் கோட்டுக்குள் விட்டார். மகிழ்ச்சிப்

புன்னகை இன்னமும் அவர் முகத்திலிருந்து மறைய வில்லை.

''வீக்தர் வீக்தரொவிச், நான் வரப் போவ தில்லை.''

''என்ன?'' அவருடைய புருவங்கள் உயர்ந் தெழுந்தன, கோட்டுக்குள் விடப்பட்ட கை அசை வற்று அங்கேயே நின்றது, ''என்ன சொல்கிருய்? நீ வரப் போவதில்லையா?''

''என்ஞல் வர முடியவில்லை.''

''முடியவில்லையா? அதெப்படி? அறிவிப்புகள் செய்யப்பட்டுவிட்டன, டிக்கெட்டுகள் விற்பனை யாகி வருகின்றன. நீ என்ன அபத்தம் பேசு கிருய்!''

''அபத்தமல்ல. மெய்யாகவேதான் சொல்கி றேன்: நான் வர முடியாது.''

''அட கடவுளே, என்ன ஆயிற்று?''

கோபமாய் உறுமினுர் அவர்.

நான் என் பாதங்களைப் பார்த்தவாறு நின்றேன். எனக்குச் சங்கடமாய் இருந்தது, என் செயல் குறித்து எனக்குக் கொஞ்சம் வெட்கமாகவே இருந்தது.பாவம் வீக்தர் வீக்தரொவிச்சை இப்படிக் காலை வாரி விடுகிறேமே என்று வேதனையாய் இருந்தது. மெய்தான், ஆள் கொஞ்சம் மக்கு தான், அதோடு கில்லாடி என்றும் கூறத்தக்கவர் தான். ஆஞல் இவரும் ஒரு மனிதப் பிறவி அல்லவா? எந்நேரமும் ஓடியாடி தலை தெறிக்க அவ சர அவசரமாய் வேலை செய்து யாவற்றுக்கும் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். இவரைத் திண்டாட்டத்தில் விடலாமா? இப்படிக் காலை வாரிவிடலாமா? எனக்கு வெட்கமாய் இருந்தது.

''ழேன்யா, என்ன நடந்தது?''

''இனி நான் பாடக் கூடாது.''

''பாடக் கூடாதா?''

''பாடக் கூடாது. டாக்டருடைய உத்தரவு'' என்றேன். ''என்றென்றைக்கும் அல்ல, சிறிது காலத்துக்கு'' என்று அவசரமாய் அவருக்கு ஆறு தலளிக்க முயன்றேன்.

''ஓ, அப்படியா சேதி!'' கோட்டினுள் அசை வற்று நின்ற கைக்கு உயிர் திரும்பிற்று: ஒரு சுருட்டை வெளியே எடுத்தார். பிறகு அவ ருடைய லைட்டரின் 'கிளக்' சப்தம், அதன் பிறகு வாயிலிருந்து சுருட்டுப் புகை.

''ஓ, அப்படியா சேதி'' என்று சிந்தனை தொனிக்கும் குரலில் திரும்பவும் சொன்னார்.

''ஆம்'' என்று நான் தலையை ஆட்டினேன். ''தற்போதைக்குதான் இப்படி. அதிக காலமாகு மென நான் நினைக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் மிகவும் சிக்கிரமாகவே முடிவுற்றுவிடும்.''

''அவ்வளவுதானு உன் கதை?''

''என்ன?'' அவர் கூறியதன் அர்த்தத்தை நான் புரிந்து கொள்ளவில்லை.

''அவ்வளவுதான் உன் கதை'' என்றார் திரும்ப வும். இந்தத் தடவை கேள்வியாய்க் கேட்க வில்லை, விசாரிக்கும் தொனி இருக்கவில்லை, உண்மை விவரத்தைச் சொல்வது போல் சொன்னார்.

''அவ்வளவுதான் கதை என்றால் என்ன அர்த் தம்?'' வியப்புற்றவனாய் மீண்டும் கேட்டேன்.

மெய்யாகவே எனக்குப் புரியவில்லை. ஒன்றும் விளங்காத அசட்டு முறையில் இருவரும் பேசிக் கொண்டு நின்றதாய் நினைத்தேன்.

''ஆமாம், யேன்யா, அவ்வளவுதான், இனி நீ ஒன்றும் செய்ய முடியாது.''

ஒளிவு மறைவற்ற பரிதாபத்தோடு என்னை உற்று நோக்கியவாறு அவர் இதைச் சொன்னார்.

ஆள் என்ன சொல்ல முயன்றார் என்பது அப்பொழுதுதான் எனக்குப் புலப்பட்டது.

''இல்லை!'' என்று அவரைப் பார்த்துக் கூச்சலிட்டேன். பிரேஸ்னியாவுக்குப் பக்கத்தில் ஒரு சந்தில் நின்று நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். எந்நேரமும் கூட்டமும் கூச்சலும் வாகனங்களின் இரைச்சலுமாய் இருக்கும் பிரேஸ்னியாவைப் போலல்லாது இவ்விடம் சந்தடி இல்லாமல் அமைதியாகவே இருந்ததென்றாலும், ஆள் நடமாட்டமே இல்லாமற் போய்விடவில்லை. வயதான ஓர் அன்னை ஒரு பெரிய பையை எடுத்து கொண்டு எங்களைக் கடந்து சென்றார். எதிர்த் திசையிலிருந்து இரண்டு சிறுமிகள் வந்தனர், விலங்கினக் காட்சி சாலைக்குப் போவோராகவே இருந்திருக்க வேண்டும். இன்னும் சற்றுத் தள்ளி வோல்கா கார் ஒன்று நின்றது. திறந்த பானெட்டுக்கு அடியில் அதன் டிரைவர் குனிந்து இஞ்சினில் எதையோ சரி செய்து கொண்டிருந்தார்.

மொத்தத்தில் நிசப்தமாயிருந்தது. அந்த நிசப்தத்தைத் துளைத்துச் சென்றது, உச்சக் குரலில் நான் எழுப்பிய கூச்சல்:

''இ-ல்-லை!!!''

அத்தருணத்தில் என்னைச் சுற்றிலும் யாவுமே இருளில் மூழ்குவது போல எனக்குத் தோன்றியது. ஆயினும் வோல்கா காரின் பானெட்டுக்கு அடியிலிருந்து பரட்டைத் தலை ஒன்று நிமிர்ந்து வெளியே உற்று நோக்கியதையும், பெரிய பையை எடுத்துச் சென்ற வயது முதிர்ந்த அன்னை சட்டெனத் திரும்பிப் பார்த்ததையும்,விலங்கினக்

காட்சிசாலைக்குப் போய்க் கொண்டிருந்த சிறுமிகள் இருவரும் ஒவென்று சிரித்ததையும் நான் கவனிக்கத் தவறவில்லை.

வீக்தர் வீக்தரொவிச் கலக்க முற்றவராய் என் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

''வேண்டாம், வேண்டாம்!'' என்று முணு முணுத்தார். ''திடமாய் இருக்க வேண்டும் நீ....''

''நேரத்தைச் சொல்லுங்கள்'' என்று கேட்டேன்.

''என்ன நேரம்?''

''நான் இங்கு காத்திருக்க வேண்டிய நேரத்தைச் சொல்லுங்கள்'' என்றேன், நகங்கள் உள்ளங் கையில் அழுத்திக் குத்தும்படி கைகளைக் கெட்டியாய் மூடியவாறு அங்கே நின்று கொண்டிருந்த நான்.

''அப்படியானால், உன்னால் அங்கே வந்து பாட முடியுமா?'' அவருடைய வாடிய முகத்தில் நம்பிக்கை ஒளி பளிச்சிட்டது தெரிந்தது. அந்த முகத்திலே ஓங்கிக் குத்த வேண்டும் போலிருந்தது எனக்கு!

''நேரத்தைச் சொல்லுங்கள்.''

''நாளை மாலை ஐந்தரை மணிக்கு நமது வழக்கமான இடத்தில் வந்து நிற்க வேண்டும்.''

''சரி, வந்து நிற்கிறேன். வணக்கம்.''

''ஜேன்யா. கொஞ்சம் இரேன், சொல்கிறேன்.'' மீண்டும் அவர் தமது கோட்டுக்குள் கையை விட்டுத் தேட முற்பட்டார். ''இந்தா, இதை வாங்கிக் கொள்....''

ஆனால் நான் வெடுக்கென திரும்பி, அவரைப்

பார்க்காமலே எங்கள் விடுதியை நோக்கி நடந்தேன்.

* * *

''நம் நாட்டு ரொபர்ட்டினே லொரெட்டி!''

அடேயப்பா, இவ்வளவு காலமாயிற்று! அந்தப் பெயரைச் சரியானபடி உச்சரிக்கத் தெரிந்து கொண்டுவிட்டார்! நம்மால் இதையாவது அவருக்குக் கற்று தர முடிந்ததே என்று நினைத்துக் கொண்டேன்.

பிறகு மைக்கைக் கீழே தணித்து எனக்கு ஏற்ற படி ஒழுங்கு செய்தார், கரகரத்துப் படபடக்கும் சப்தம் கேட்டது.

இப்பொழுது நான் மேடைக்குள் சென்று, அவர் எனக்குச் சொல்லித் தந்திருந்தபடி நடித்துக் காட்டியாக வேண்டும். கூச்சத்தோடு, அறியாப் பிள்ளை போல புன்னகை புரிந்து, மேடையை ஒளிமயமாக்கிக் கண்களைக் கூசச் செய்த விளக்குகளாலும் அரைமனதான கையொலி முழக்கத்தாலும் மயக்குண்டதாய்ப் பாசாங்கு செய்து கொண்டு மேடைக்குள் நடந்தேன். மைக்கிடம் சென்று, முதலில் ஒரு பக்கத்திலிருந்தும் பிறகு இன்னொரு பக்கத்திலிருந்தும் அதை உற்று நோக்கினேன். பிறகு விரலால் அதன் கம்பியடைப்பு வாயில் தட்டிப் பார்த்துவிட்டு, எதற்காக இது இங்கே வந்து நிற்கிறது தெரியவில்லையே என்று கூறிக் கொள்ளும் பாவனையில் தோள்களை உலுக்கிக் கொண்டேன். இதன்பின் அந்த முழு அமைப்பையும் அப்படியே குண்டுக்கட்டாய்த் தூக்கி, நமக்கு வேண்டாம் இதெல்லாம் என்று சொல்லும் பாவனையொடு மேடையின் ஒரு பக்கத்துக்கு எடுத்துச் சென்று கீழே வைத்தேன்.

எப்பொழுதுமே இந்தக் கூத்து எல்லோரையும் விழுந்து விழுந்து சிரிக்க வைக்கத் தவறுவதில்லை. சபையில் உடனே குதூகலச் சிரிப்பொலி கிளர்ந் தெழுந்தது. நான் பாடத் தொடங்கும் முன்பே எனக்கு ஆர்வக் கையொலி முழக்கம் கிடைத்தது. களம் புகும் முன்பே பாதிப் போரை வெற்றிகர மாய் முடித்துக் கொண்டுவிட்டேன். வீக்தர் வீக்தரொவிச், நீர் அளித்த பயிற்சிக்காக நன்றி உமக்கு!

பிறகு அஸ்யாவின் பக்கம் திரும்பி இனிமை யாய்த் தலையை அசைத்தேன், இருவருமாய்த் தொடங்கினோம்.

நகரச் சுற்றுவட்டாரத்தில் அமைந்த அந்த உலோக ஆலைக் குடியேற்றத்தின் கலாசார மாளி கையின் மண்டபம் மெய்யாகவே முதல்தரமா னது. விசாலமாகவும் நெடிதுயர்ந்தும் இருந்தது, சுவர்களில் வேயப்பட்டிருந்த ரீப்பாச் சட்டங் களிலிருந்து பைன் மரங்களின் கந்தம் வீசுவ தாய் நினைத்தேன். அரைவட்ட வடிவிலிருந்த ஆசன வரிசைகள் மேலிருந்து கீழே மேடையை நோக்கிச் சரிவாய் அமைந்திருந்தன. எந்தப் பகுதி யிலிருந்தும் மேடையைத் தெளிவாய்ப் பார்க் கும்படியும் யாவற்றையும் நன்றாய்க் கேட்கும்படி யும் மண்டபம் வசதியாய் அமைந்திருந்தது.

ஒலிப்பியல் குறித்து வீக்தர் வீக்தரொவிச் கூறியிருந்தது மிகையல்ல என்பது தெரிந்தது. என்னுடைய குரல் எங்கும் தெளிவாய் ஒலித் ததை மேடையிலிருந்து நான் கேட்க முடிந்தது. தொனியின் ஒவ்வொரு சாயலும் கூறும் மண்ட பம் முழுதும் தவறாமல் ஒலித்தது. மிக மெல்லிய வேறுபாடுகளுங்கூட எல்லோருக்கும் கேட்டன.

"*Santa Lucia*" வைத் தொடர்ந்து "*Sole mio*" வும் "*Ritorna a Sorento*" வும் பாடி முடித்த போது எழுந்த ஆரவார முழக்கம், மண்டபத் தின் இந்த ஒலிப்பியல் சிறப்புகளின் விளைவாய்க் காது செவிடுபடும்படியிருந்தது. எல்லோரும் ஆவேச மாய் முழக்கமிட்டனர்.

அஸ்யா இசையேடுகளைப் புரட்டிய போது அதே கையால் யாருக்கும் தெரியாமல் தமது கண் களிலிருந்த துளிகளையும் துடைத்துக் கொண்டார். புறத்தே ஓரிடத்தில் நின்று கொண்டிருந்த வீக்தர் வீக்தரொவிச்சின்மீது நான் எனது வெற்றி முழக்கப் பார்வையை வீசியபோது அவர் வா யெல்லாம் பல்லாய்த் தெரிய அப்படிப் புளகாங் கிதமடைந்து இளித்துக் கொண்டார். மரீயா லியோன்தியெவ்ஞ கூறியிருந்தது முற்றிலும் தவ றென்பதை முடிவாய் நான் உணர்ந்து அக மகிழ்ந்து கொண்டிருந்த தருணத்தில் அந்தப் பார் வையை அவர்மீது வீசினேன். மெய்தான், மரீயா லியோன்தியெவ்ஞ நல்ல டாக்டர்தான், ஆனல் டாக்டர்களும் தவறிழைக்கக் கூடியவர்கள் தானே! என்னுடைய விவகாரம் இதற்குக் கண் கூடான எடுத்துக்காட்டு. ஆம், அவர் கூறியது தவறுதான், என் குரல் இன்னும் முறியத் தொடங்கவில்லை, சந்தேகமில்லை. அல்லது வேருெரு விதமாகவும் நடைபெற்றிருக்கலாம், அது இன் னுங்கூட சிறப்பானதாய் இருக்கும்—அதாவது, என் குரல் ஏற்கனவே முறிந்து போய் யாவும் முடி வுற்று கவலையெல்லாம் தீர்ந்து போயிருக்கலாம். சிலருடைய குரல் திடுதிப்பென நொடியில் முறிந்துபோய் புதுக் குரலாகிவிடுவது உண்டென்று பலரும் கூறக் கேட்டிருந்தேன். ஆனல் என் குரல்

இன்னும் பழைய குரலாகவே இருந்தது—இது அதிசயம்தான் என்றாலும், உலகிலும் வாழ்க்கையிலும் அதிசயங்களுக்கு அளவு ஏது? எப்படியும் ஒன்றில் மட்டும் சந்தேகமே இல்லை—மரீயா லியோன்தியெவ்னா என் விவகாரத்தில் கூறியது முற்றிலும் தவறு. நான் தடங்கலின்றி தொடர்ந்து பாடிச் செல்வேன். இதோ முழு முனைப்போடு பாடிக் கொண்டு இல்லையா நான்?

ஷூபெர்ட்டின் ''*Ave Maria*''வைப் பாடிக் கொண்டிருந்தேன். பிரார்த்தனையின் தொடக்கத்தில் அமைந்த அமைதியான நீண்ட ''ஆ-ஆ...'' சுரத்தை மூச்சை அதிகம் விடாமல் சீரான கதியில் இசைத்துக் கொண்டிருந்தேன். சிறப்பாகவே யாவும் நடந்தேறின. இனி நான் உச்ச சுரங்களுக்குச் சென்றாக வேண்டும்.

ஆனால் முதலாவது உச்ச சுரத்தின்போதே என் குரல் திடுமென நெறி தவறிச் சென்றது, குறி பார்த்தப் பந்தில் தட்டாமல் ஓரத்தில் வருடிச் செல்லும் பிலியர்டு கோலைப் போல் பிசகிச் சென்றது.

எப்படியோ சமாளித்து அந்தச் சுரத்தைத் தடம் புரண்டோடிவிடாமல் காப்பாற்றினேன். ஏதும் நடைபெறாதது போல தொடர்ந்து பாடிச் சென்றேன். ஆனால் துணுக்குற்றுவிட்ட அஸ்யா கணப் பொழுதுக்குப் பின்னிசையில் தடுமாற நேர்ந்தது. எனக்குத் தொண்டை நெரிக்கப்படுவது போல் இருந்தது. இந்தப் பிடியிலிருந்து தப்புவதற்காக கடும் பிரயத்தனம் செய்து இழுபறிப் போராட்டம் நடத்தினேன். அந்த பிடியை உதறிக்கொண்டு வெளிவந்துவிட்டேன், ஆயினும் அந்த முரட்டுப் பிடி என் தொண்டையில் தடம்

பதித்துச் சென்றுவிட்டது. என் குரலில் ஒரு கரகரப்பு தொனிக்க ஆரம்பித்தது.

அம்மண்டபத்தின் ஒலிப்பியல் சிறப்புகளை அப்பொழுது எப்படி நான் சபித்தேன் தெரியுமா? சன்னப் பொடியாய் ஒலித்த கரகரப்பு ஒலி ஒவ்வொன்றையும், சுரத்தில் தொனித்த ஒவ்வொரு சிறு சிராய்ப்பையும் அவை ஐந்து மடங்காகவும் பத்து மடங்காகவும் பெரிதுபடுத்தின; ஒவ்வொரு சிறு குறையையும் மூச்சுத் திணறலையும் மிகவும் எடுப்பாய்த் தெரியச் செய்தன.

சர்க்கஸில் கறுப்புத் துணியால் கண்களை கட்டிக் கொண்டு கண் தெரியாமல் கால் விரல்களால் தடவிக் கம்பியைத் தேடிப் பிடித்து பாதத்தை வைத்து அழுத்தி, கீழே காப்பு வலை இல்லாத நிலையில் அந்தரத்தில் கம்பியில் நடப்பதற்காக முதலாவது அடியை எடுத்து வைக்கையில் நிலவுமே அம்மாதிரியான அச்சம் தரும் நிசப்தம் மண்டபத்தில் குடிகொண்டுவிட்டது.

நான் வெளிறிட்டு வந்ததை என்னால் உணர முடிந்தது. முழு சக்தியையும் கொண்டு என்னுடைய குரல்வளையுடன் நான் நடத்திய அந்தப் பயங்கரப் போராட்டமும், என் உடலின் ஒவ்வொரு தசைநாரையும் வலியப் பிடித்திழுத்துப் பணிய வைப்பதற்காக நான் செய்த பெருமுயற்சியும் என்னைச் செக்கச் சிவந்துவிடச் செய்யுமென்றே நினைக்கத் தோன்றியது. ஆனால் நான் வெள்ளை வெளேரென வெளுத்துச் சென்றது என் உணர்வுக்கு தெரிந்தது.

ஆயினும் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் நமேஸ்தினிக்கவ் வீணில் எங்களுக்கு அந்த நீண்ட நெடிய கடும் பயிற்சியை அளித்து வரவில்லை. எந்த

நெருக்கடியையும் சமாளித்துக் கொண்டு கரையேறி வரும்படிச் செய்ய வல்ல பயிற்சியை அவர் அளித்திருந்தார். அந்தப் பயிற்சி இப்பொழுது எனக்கு உதவிற்று.

எனது பலமனைத்தையும் பிரயோகித்து, எனது குரலை உரிய பாதையிலே செல்ல வைத்து, எனக்கு எமனாய் வாய்த்த ''ஆ மரீயா'' வின் முடிவை வந்தடைந்தேன்.

* * *

எனது குரலும் அதோடு முடிவை வந்தடைந்தது.

## 5

பிற்பாடு அடிக்கடி நான் என்னுள் ஆலோசித்துப் பார்த்தேன்: அந்த இசைநிகழ்ச்சியில் என் குரலை நான் பாழாக்கிக் கொள்ளாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? நாசமாய்ப் போன அந்தக் கில்லாடியோடு என் தலைவிதி என்னை இணையச் செய்யாதிருந்தால் என்ன நடந்திருக்கும்? ''தனியார்'' முறையிலான அந்தக் கலை நிகழ்ச்சிகளில் எனக்குப் பழக்கம் ஏற்படாதிருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? எங்கள் அருமை டாக்டர் மரீயா லியோன்தியெவ்னாவின் சொற்படி நடந்து கொண்டிருக்கக் கூடாதா நான்?

அப்படி நடந்து கொண்டிருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? என் குரலை இழக்காதிருந்திருப்பேனா? அதாவது தொடர்ந்து பாடுவதற்கு ஏற்ற புதிய குரல் ஒன்று கிடைத்திருக்குமா? யார் கண்டது? கிடைத்தாலும் கிடைத்திருக்கலாம். நிச்சயமாய் சொல்லக் கூடியதயல்ல இது. ஆனால் இப்பொழுது

எனக்கு, நடக்கக் கூடாதது நடந்துவிட்டதால், ஒன்றும் புதிய குரல் கிடைத்திருக்காது, என்னுல் தொடர்ந்து பாடிச் செல்ல முடிந்திருக்காது என்று நம்புவதே உசிதமென நினைத்தேன். பறவைச் சந்தைக்கு சென்று கோல்யா பிர்யுக்கோவும் நானும் பேசிக் கொண்டிருந்தது உடனே என் நினைவுக்கு வந்தது.

''நமக்கு எந்தக் குரலும் இருக்கப் போவ தில்லை.''

''என்ன? எந்தக் குரலுமே இருக்காதா?''

''பேசுவதற்கு வேண்டிய குரல் இருக்கும்தான், இம்-பா, இம்-பா....''

கோல்யா சொன்னது சரிதான். இம்-பா, இம்-பா—இந்தக் குரல்தான் தற்போது என்னிடம் எஞ்சியிருந்தது. நிற்க, கோல்யாவுக்கு எதிர் பாராத நற்பேறு கிடைத்திருக்கலாம், அது சாத் தியமே. விதியானது அவனுக்குத் தயவு காட்டு மென நினைக்க இடமிருந்தது, ஏனெனில் அவன் தன் குரலைப் பாழாக்கிக் கொண்டுவிடவில்லை. சிறிது காலத்துக்கு அவன் தன் குரலுக்கு ஓய்வு கொடுக்க வேண்டுமென்று கூறியிருந்தார்கள். அவர்கள் சொன்னபடி அவனும் பாடாமல்தான் இருந்து வந்தான், பேச்சு மூச்சின்றி சுண்டெலி போல் இருந்து வந்தான். ஆனுல் ஓடுவதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். ''ஆயிரத்தில் ஒருவரான'' அதிர்ஷ்டசாலிப் பையனுகிவிடலாம் என்பதில் அவனுக்கு அதிக நம்பிக்கை இருக்க வில்லை என்பதைத்தான் இது காட்டிற்று.

வருங் காலத்தில் கிடைக்கப் போகும் குரலில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பவனுக்கு என்ன நடைபெறும்? தனக்குப் புதிய குரல் கிடைக்குமா,

கிடைக்காதா என்பதான உதவாக்கரை ஊகங்களில் சிந்தனை செலுத்தாமல் உறுதியாய் இருப்பவனுக்கு நடைபெறுவது என்ன? இப்படிப்பட்டவர்களுக்கு விதியானது கருணை காட்டுமா? அவர்களுடைய பொறுமையையும் நம்பிக்கையையும் பாராட்டி அவர்களுக்குச் சன்மானம் அளிக்குமா?

இதெல்லாம் எப்படியோ, எனக்குத் தெரியாது. பின்னால் நடக்கப் போவதைச் சற்று முன் கூட்டியே சொல்வதாய் இருப்பினுங்கூட, நான் சொல்லக் கூடியதெல்லாம் இதுதான்: பாட்டிசைக்கும் பையன்களைக் கொண்ட எங்களுடைய வகுப்பில் ஒரேயொரு பையனைத் தவிர ஏனைய எல்லோரும் முன்னொரு காலத்தில் பாட்டுகள் பாடினோம் என்பதை அறவே மறக்க வேண்டியதாகிவிட்டது. அதிர்ஷ்டசாலியான அந்த ஒரேயொரு பையன் மட்டும்தான் குரல் முறிந்தபின் திரும்பவும் பாடத் தொடங்க முடிந்தது. அவனால் மட்டும்தான், ஆயிரத்தில் ஒருவனாய் மாற முடிந்தது! அந்தோ, நானல்ல அந்த ஒருவன். யார் அவன்? பிற்பாடு, தக்க நேரத்தில் இந்த இரகசியத்தைச் சொல்வேன்.

விவேகமிக்கவனாகிய நிக்கலாய் இவானவிச் பிர்யுக்கோவ் இது இயற்கை விதியாகும் என்று முன்பு பறவைச் சந்தையில் முற்றிலும் சரியானபடியே சொல்லியிருந்தான். இயற்கை விதிகளை மீறிச் செல்ல முடியாது, அவை விதிகள் என்று அழைக்கப்படுவதற்கே இதுதான் காரணம்.

* * *

அதன் பிறகு நீண்ட காலம் ஆகிவிட்டதால், இப்பொழுது என்னால் அந்த நாசகாரக் கலைநிகழ்ச்

சியைத் தொடர்ந்து எனக்கு நேர்ந்தவை குறித்து நிலை குலைந்து போகாமல் நினைத்துப் பார்க்க முடிகிறது. ஆனால் இவையெல்லாம் நேர்ந்த அந்நேரத்தில் என் நிலை பயங்கரமான தாகவே இருந்தது.

முதலில் நான் பள்ளிக்கூட முதல்வரின் அறைக்கு வரும்படி அழைக்கப் பட்டேன். பிறகு இந்த விவகாரம் குறித்து விவாதிப்பதற்காக பள்ளிக்கூட அலுவலரின் கூட்டம் கூட்டப்பட்டது. முடிவில் காம்சமோல் கூட்டம் நடைபெற்றது. கலை நிகழ்ச்சிக்குப் பிற்பாடு முதலாவது திங்கட்கிழமை யன்று மரீயா லியோன்தியெவ்னாவிடம் நான் தொண்டைப் பரிசோதனைக்காகச் சென்றிருந்த போது, அவருக்குரிய வழக்கமான முறையில் ''எனது இந்தச் சிறு கண்ணாடி நடந்த கதை பூரா வையும் சொல்கிறதே எனக்கு'' என்று கூறினார். அதிலிருந்தே யாவும் ஆரம்பமாயின. பிறகு எங்கள் விடுதிப் பையன்களில் ஒருவன் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சிடம் சென்று கோட்சொல்லி யாவற்றையும் பகிரங்கமாக்கினான் (மெய்யாகவே வெட்கக் கேடான செயல், சந்தேகமே இல்லை). நான் வெளிநாட்டுக் கோட்டும் கால்சட்டையும் மற்றும் நைலான் சட்டையும் கழுத்துக் காலர் அணியும் வைத்திருக்கும் தகவலைத் தெரிவித்து விட்டான். பல தரம் புரோஹரொவ் விடுதி யிலிருந்து மறைந்துவிட்டதாகவும், இரவு நெடு நேரம் கழித்தே திரும்பி வந்ததாகவும் தாதி களிடமிருந்து தெரியலாயிற்று.

நான் எதையும் மறுக்க முயலவில்லை. தலைக்கு மேல் போனபின் சாண் போனாலென்ன, முழம் போனாலென்ன? ஏற்கனவே என் வேதனை வர்

ணிக்க முடியாததாய் இருந்தது, இனி என்ன நடந்ததால்தான் என்ன?

இசை வரலாற்று வகுப்பு நடந்து கொண்டிருந்தது. முகத்தை இரு கைகளாலும் ஏந்திப் பிடித்துப் கொண்டு உட்கார்ந்து, ஆசிரியர் கூறியதை கேட்டுக் கொண்டிருந்தேன்—இல்லை, கேட்பதாய்ப் பாவனை செய்து கொண்டிருந்தேன். எனக்குத் துயரம் நெஞ்சையடைத்தது. அதற்கு முந்திய நாளன்றுதான் காம்சமோல் கூட்டத்தில் என்னைக் கடுமையாய் எச்சரிக்க வேண்டுமென்றும் என்னுடைய காம்சமோல் பத்திரத்தில் இதற்காக எனக்கு நிந்தனைக் குறி போட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. எல்லாப் பையன்களும் வந்திருந்து இதற்கு ஆதரவாய் வாக்களித்தார்கள்—வீத்யா தித்தரேன்கொ, மராத் அலீயெவ், மற்றும் ஏனைய எல்லோரும்தான் (கோஷா வியாசெம்ஸ்கி மட்டும் விதிவிலக்கு; வேண்டுமென்றே கூட்டத்துக்கு வராமல் மட்டம் போட்டுவிட்டான்). இவர்கள் ஒருமனதாய் இப்படித் தீர்மானம் ஏற்றார்களே என்று நான் வேதனைப்படவில்லை. இதைப் பற்றி நான் குறைப்பட்டுக் கொள்ள முடியாது; நான் விதிகளை மீறியவன், குற்றம் புரிந்தவன், ஆகவே இப்பொழுது குற்றத்தை உணர்ந்து மனம் வருந்த வேண்டியவனே என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே என்னை இவர்கள் தண்டிக்கட்டும், குற்றம் புரிந்த எனக்கு இவர்கள் தண்டனை தரட்டும், காம்சமோல் பத்திரத்தில் நிந்தனைக் குறி போடுவதென்பதை விட்டிருக்கலாம் என்ற போதிலும், இவர்கள் செய்த முடிவு குறித்து நான் ஆட்சேபிக்கவில்லை.

ஆனல் குரலையே இழந்து யாவற்றிலும்

கடுமையான தண்டனையை ஏற்கனவே பெற்றுக் கொண்டுவிட்டேன் என்பதை இவர்களில் யாரும் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறியதை நினைத்த போதுதான் எனக்கு உள்ளம் குமுறியது. இனி வருங் காலத்தில் நல்லபடியாய் நடப்பதன் மூலம் காம்சமோல் பத்திரத்திலிருந்து நிந்தனைக் குறியை அகற்றிக் கொண்டு விடலாம், மன்னிப்பு பெற்றுக் கொண்டுவிடலாம். ஆனால் இழந்த குரலை ஒருநாளும் திரும்பப் பெற முடியாதே, முடியவே முடியாதே.... விடுமோட்சம் இல்லாத படி என்னை இது வீழ்த்திவிட்டதே. உயிரில்லாத வனாய், குரலில்லாதவனாய் அல்லவா குப்புற விழுந்து கிடந்தேன். தரையிலே கிடப்பவனிடம் போய் யாரும் கைவரிசையைக் கட்டலாமா? விளையாட்டுப் போட்டி மாஸ்டர் பட்டம் எல்லாம் பெற்றவன், இந்த வீத்யா தித்தரேன்கோவுக்கு இது தெரிந்திருக்க வேண்டாமா? ஆயினும் எதை யும் கவனியாமல் அவன்.... ஆனால், என்ன பயன்? இதையெல்லம் நினைத்துப் பார்த்துப் பயன் என்ன....

இசையரசர் பாஹைப் பற்றி ஆசிரியர் எங் களுக்குச் சொல்லிக் கொண்டிருந்ததை, என் சிந்தனை வேறு எங்கோ இருக்க ஒரு காதால் கேட்டவாறு அமர்ந்திருந்தேன். மேலே சுவரைப் பார்த்தேன். பாடம் நடைபெற்ற எங்கள் வகுப்பறையின் சுவரில் ஜொஹான் செபாஸ்டியன் பாஹின் உருவப்படம் இருந்தது. படத்தில் காட்டப் பெற் றிருந்த பாஹ் கைப்பட்டியில் வெண்கலப் பொத் தான்களுடன் கூடிய திறந்த மேலங்கியும் பொத் தான் போடப்படாத மார்புக் கோட்டும் அணிந் திருந்தார்; புருவங்களை நெரித்துக் கொண்டு

சற்று கடுமையான முகபாவத்துடன் பார்த்த அவர் உறுதியும் மேன்மையும் மிக்கவராய்த் தோன்றினூர். தலையில் பொசபொசப்பான வெண்ணிறத் தோப்பா அணிந்திருந்தார். ஒரு கையில் இசையேடு இருந்தது....

தன்னிகரில்லாத் தனிப் பெரும் இசையரசர்!

அந்தக் காலத்தில் பாஹின் இசையை நிறைய இசைத்தவன் நான். சிறு பிள்ளையாய் இருக்கையிலேயே அவருடைய அதிமதுர ''குழலூதியின் பண்'' ணும், மயங்கச் செய்யும் ''மெனியூட்டோ'' வும் இசைத்து வந்தவன். இவற்றைத் தொடர்ந்து ''இன்வேன்சியாக்களை'' யும், ''நற்குணக் கிளாவியரை'' யும், பிற்பாடு பக்கம் பக்கமாய் பிரெலூதிகளையும் ஃபியூகுகளையும் இசைக்க முற்பட்டேன்.

மணிக் கணக்காய் நான் பியானே வாசிப்பது வழக்கம். பாட்டு பாடி வந்த நாட்களிலுங்கூட—எல்லோராலும் மெச்சிப் புகழப்பட்டு ஆனந்தமாய் இருந்து வந்தேனே அந்த நாட்களிலுங்கூட—பியானேவை நான் மறந்துவிடவில்லை. மிகப் பல ஆண்டுகளுக்கு முன்பு லீபெத்ஸ்கில் குழந்தை இல்லத்தில் வசித்த காலத்தில் என் சிந்தையைக் கவர்ந்து கொண்டுவிட்ட அந்த இசைக் கருவியிடம் இப்பொழுதும் அளவிலா பற்றுதல் கொண்டவனுகவே இருந்து வந்தேன்.

இசைஞன் ஒவ்வொருவனுக்கும் பியானே வாசிக்கத் தெரிந்திருப்பது அவசியம். ஏனென்றால் பியானேதான் இசைக்கருவிகளின் மாமன்னன். இசைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வயலின், குழல், தாள வாத்தியம், வாய்ப்பாட்டு ஆகியவற்றில் எத்துறையில் தனித் தேர்ச்சி பெறுவோ

ராய் இருப்பினும், எல்லோரும் பியானோ வாசித்தாக வேண்டும். இது தவிர்க்க முடியாதது. இந்தக் கட்டாயப் பியானோ பயிற்சியைச் சிலர் தொல்லை பிடித்த அசட்டுப் பாடமாய்க் கருதுகிறார்கள். சிறிதும் அவசியமில்லாததாய்த் தோன்றும் ஒரு காரியத்தில் நேரம் செலவிட அவர்கள் விரும்பவில்லை. வயலின் வாசிப்பதில் அவர்கள் டேவிட் ஒய்ஸ்டிரஹை இல்லாவிட்டாலும், ஒய்ஸ்டிரஹின் மகனை ஈகரையாவது மிஞ்சிவிடும் நிலையில் இருந்தாலுங்கூட, பியானோ வாசிப்பதில் இன்னும் முதல் வகுப்பு மாணவரின் நிலையிலேயே இருந்து வருகிறார்கள்.

ஆனால் நான் பியானோவை எப்பொழுதுமே மிகவும் புனிதமான ஒன்றாய், மிகுந்த கருத்துக்குரிய ஒன்றாய்ப் போற்றி வந்தேன். பியானோவிடம் நெடுநேரம் செலவிட்டு வந்தேன். அந்த ஆண்டுகள் பூராவிலும் பாஹ்தான் எனது இடையறாத தோழராய், என் வழிகாட்டியாய் இருந்தவர். இடையிடையே ஏனைய இசையரசர்கள் என்னை மேலும் அதிகமாய் கவர்ந்திழுத்தது உண்டு, இவர்களை நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன், பிற்பாடு மீண்டும் இவர்களைப் பற்றிச் சொல்வேன். ஆயினும் பாஹ் எக்காலத்தும் என்னை விட்டு விலகாதிருந்தவர், எந்நேரமும் என் தோளுக்குப் பின்னாலிருந்து நான் செய்வதைக் கவனித்தவர் என்பதாய்க்கூட சொல்லலாம்.

நூலகத்தில் அவரைப் பற்றி என் கைக்குக் கிடைத்தவை யாவற்றையும் நான் படித்திருந்தேன். இசை வரலாற்றுப் பரிட்சைக்கு வேண்டியதைக் காட்டிலும் மிகவும் அதிகமாகவே அவரைப் பற்றி தெரிந்து வைத்திருந்தேன். அது

மட்டுமல்ல, ஜொஹான் செபாஸ்டியன் பாஹுங் கூட அந்தக் காலத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டு நிந்தனைக் குறிப்பு அளிக்கப்பட்டது பற்றியுங்கூட என்னுல் சொல்ல முடியும். அவருக்கு நிந்தனைக் குறிப்பு அளிக்கப்பட்டதென்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை, பிற்காலத் தலைமுறையினருக்கு இத் தகவல் தெரிய வேண்டுமென்று அந்த ஆவணம் பத்திரமாய்ப் பாதுகாத்து வைக்கப்பட்டது.

அப்பொழுது அவருக்கு மிக இளம் வயது, பதினேழு வயதுதான். அர்ன்ஷ்டாட்டில் கோயிலில் ஆர்கன் வாத்தியக்காரராய் வேலை பார்த்து வந்தார். பிரார்த்தனையின்போது உபநியாசத்துக்கு முன்னரும் பின்னருமாய் அவர் துதி இசை வாசித்தாக வேண்டும். உபநியாசம் சில சமயம் ஒரு மணிக்குக் குறையாமல் நடைபெறும். அந்த உபநியாசிகள் ஆரம்பித்துவிட்டார்களானுல் பிற்பாடு நிறுத்துவதற்குள் பெரும் பாடாகிவிடும். அவ்வளவு நேரமும் பாஹ் அங்கே வேலையின்றி விரலைத் திருகியவாறு கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பதெனில் எப்படி இருக்கும்? ஆகவே உபநியாசத்துக்கு முன்னரும் பின்னருமான இரு துதி இசைப் பாட்டுகளுக்கும் இடையே, அவர் அருகாமையில் இருந்த மதுவிடுதிக்குச் சென்றுவிடுவார். நண்பர்களுடன் பேசியவாறு பீர் அருந்திவிட்டு வருவதற்குப் போதிய அவகாசம் இருந்தது. உபநியாசம் முடியும் தறுவாயில் திரும்பி வந்து இரண்டாவது துதி இசைக்குத் தயாராய்த் தமது இடத்தில் அமர்ந்து கொண்டுவிடுவார்.

ஆனுல் அற்ப புத்தி கொண்ட ஆள் ஒருவர் இதைப் போய் சமயச் சபைப் பெரியவர்களிடம் சொல்லிவிட்டார். மதுவிடுதியில் பாஹுடன் மது

அருந்திய அதே ''நண்பர்களில்'' ஒருவராய்க்கூட இருந்திருக்கலாம் அவர்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் இளம் ஜொஹான் சபாஸ்டியன் தமது ஆரம்பக் காலத்திய இசைப் புனேவுகளில் சிலவற்றை வாசித்துக் காட்ட விரும்பி, இரவில் ஒரு பெண்ணைக் கோயிலுக்கு அழைத்து வந்திருந்தார். அவளை வேறு எங்கே அழைத்துச் சென்று இந்த இசைப்புனேவுகளை வாசித்துக் காட்ட முடியும்? வீட்டில் அவரிடம் பியானோ ஏது? ஒரு பெண்ணிடம் இளைஞன் தனது இசைத்திறனைக் காட்ட விரும்புவது இயற்கை தானே, இதில் என்ன தவறு?

திரும்பவும் சமயச் சபைப் பெரியவர்களிடம் யாரோ போய் கோள் சொல்லிவிட்டார். சமயச் சபையின் ஆட்சிக் குழுவிடம் வந்து, ஒழுக்கக் கேடான இவ்விரு செயல்கள் குறித்தும் விளக்கம் கூறுமாறு பாஹ் உத்தரவிடப்பட்டார்: முதலாவது செயல்—பிரார்த்தனையின்போது எழுந்து மதுவிடுதிக்கு ஓடியது; இரண்டாவது செயல்—''வெளியிலிருந்து ஒரு பெண்ணை'' இரவில் கோயிலுக்குள் அழைத்து வந்தது. (சமயச் சபையின் குறிப்பேடுகளில் காணப்படும் சொற்கள் இவை!) அவருடைய உறவுப் பெண்ணான மரீயா பார்பராவைத்தான் சமயச் சபைக் குறிப்பேடுகள் ''வெளியிலிருந்து அழைத்துவரப்பட்ட பெண்ணைக்'' குறிப்பிட்டன, இவளையேதான் பிற்பாடு பாஹ் மணம் புரிந்து கொண்டார். பாவம், இளம் வயதிலேயே இவள் இறந்துவிட்டாள்; ஆனால் மேற்கூறிய நிகழ்ச்சியைப் பற்றிய சமயச் சபைக் குறிப்பேடுகள் இன்றும் பத்திரமாய் இருந்து வருகின்றன.

உண்மையில் சமயச் சபைப் பெரியவர்களிட மிருந்தும், அவருடைய ''நண்பர்களிடமிருந்தும்'' பாஹுக்கு உண்டான தொல்லை மிக அற்பமா னது. ஆனால் வயோதிகக் காலத்தில் அவருடைய புதல்வர்களே அவரைக் கேலி செய்து துன்புறுத் தினர். பாஹ் அவர்களை மதிப்புக்குரியோராகவும் தேர்ந்த இசைஞர்களாகவும் ஆக்கிருந்தார். புதல்வர்கள் தமது உயர் நிலை, சிறப்பு ஆகிய யாவற்றுக்காகவும் முற்றிலும் தம் தந்தைக்கே கடன்பட்டிருந்தனர். இருந்த போதிலும் வயது முதிர்ந்த இத்தந்தையை அவர்கள் ''அசட்டுக் கிழவர்'' என்று கூறிச் சிரித்தார்கள்; அவரைக் காட்டிலும் தாம் நூறு மடங்கு வல்லமை வாய்ந்தவர்கள் என்பதாய்க் கருதி, பெருமை யடித்துக் கொண்டார்கள்....

தன்னிகரில்லாத் தனிப் பெரும் இசையரசர் பாஹ்!

அவர் அடக்கம் செய்யப்பட்ட சிறிது காலத் துக்கெல்லாம், விவஸ்தை கெட்ட அவர் ஊர்க் காரர்கள் அந்த இடுகாட்டின் வழியே சாலை போடுவ தென முடிவு செய்து, அவருடைய கல்லறையை வெட்டிச் சரளைக் கற்கள் கொண்டு தளமிட்டு மூடினர். இதன் விளைவாய் ஜொஹான் செபாஸ் டியன் பாஹின் புதையுடல் எங்கிருக்கிறதென்பது யாருக்கும் தெரியாமற் போய்விட்டது.

என் கண்கள் பனித்துவிட்டதை உணர்ந்த நான் இரு கைகளினுள் முகத்தை மேலும் ஆழ மாய்ப் புதைத்துக் கொண்டேன்.

பாஹுக்கு நேர்ந்ததை நினைத்து மனம் வருந்தினேன்.

* * *

''வேண்டாம், விடு'' என்ருன் கோஷா.

''ஏன்?''

''வீண் வேலே; வேண்டாம், விடு.''

''ஏனும்?''

''வேண்டாம்கிறேன்!''

இது என்ன, இப்படிச் சொல்கிருன் இவன்? மெட்ரொ நிலேயத்துக்கு வெளியே கோஷா வியாசெம்ஸ்கியுடன் நின்று கொண்டிருந்தேன். நான் தொலேபேசியில் பேச வேண்டியிருந்தது, ஆனுல் என் துரதிர்ஷ்டம் என்னிடம் இரண்டு கோப் பெக் காசு இல்லே. என்னென்னமோ எல்லாம் இருந்தது, ஆனுல் எனக்குத் தேவைப்பட்ட இந்தக் காசு மட்டும் இல்லே. ஆகவே தொலேபேசியில் பேச இரண்டு கோப்பெக் காசு தரும்படி அவனிடம் கேட்டுக் கொண்டிருந்தேன். இதை எனக்குத் தராமல் முகத்தைச் சுளித்தவாறு தலேயை எதிர்ப் பக்கம் திருப்பிக் கொண்டு ''வேண்டாம், விடு'' என்று சொன்ஞன் அவன்.

ஆனுல் நான் தொலேபேசியில் பேசியாக வேண் டும், எனக்கு இது ஜீவ மரணப் பிரச்சினேயாய் இருந்தது. நான் மாயாவைப் பார்த்து ஒரு வார மாகிவிட்டது. பள்ளி அலுவலர் கூட்டம், கம்சமோல் கூட்டம் இப்படித் தொடர்ச்சியாய் நடை பெற்றதால், முதலில் எனக்கு அவகாசமே இல்லாமற் போய்விட்டது. பிறகு சில நாட்களாய் அவள் வீட்டுக்குப் போன் செய்தபோது, ஒவ்வொரு தடவையும் வீட்டில் அவள் இல்லேயெனப் பதில் கிடைத்தது—நூலகத்துக்கோ, நாடகத்துக்கோ (அதுவும் என்னே விட்டுவிட்டு!), வேறு எங்கோ போயிருப்பதாய்ப் பதில் கிடைத்தது. ஒவ்வொரு தரமும் அவள் தாய்தான் மிக நயமாய்த்

தகவலைச் சொன்னார், எங்கே போயிருக்கிறாள் என்று விவரமாய்ச் சொன்னார். பள்ளியில் நடை பெற்றது தெரிந்ததும், என்னிடமிருந்து மகளைக் காப்பாற்ற வேண்டுமென மாயாவின் தாய் முடிவு செய்து கொண்டுவிட்டாரோ என்றுகூட நான் நினைக்கத் தொடங்கினேன். மொத்தத்தில் அந்தத் தாயிடம் எனக்குப் பிடிக்காதது ஏதோ இருந்தது. மாயா என் காதலி, கோஷா என் நண்பன், அவ்வன்னை இவர்கள் இருவரின் தாய் என்பதால் தான் நான் அவரை மதிப்புக்குரியவராய்க் கருதிப் பொறுமையுடன் இருந்து வந்தேன்.

தொடர்ச்சியாய் மூன்று நாட்களாய் முயற்சி செய்தும் தொலைபேசியில் என்னால் மாயாவுடன் பேச முடியாமற் போயிற்று. தொலைபேசியில் நான் கூப்பிட்ட ஒவ்வொரு தரமும் மாயாவின் தாய் தான் எனக்குப் பதிலளித்தார். ஆகவே இன்று நான் தந்திர முறையைக் கையாளத் திட்ட மிட்டேன். கோஷாவை உதவிக்கு அழைப்பதென முடிவு செய்து கொண்டேன். ஆனால் அவன் என் திட்டத்தை ஆமோதிக்காதவனைப் போல் பேசிய தோடு நிற்கவில்லை. பாழாய்ப் போன இரண்டு கோப்பெக் காசு எதுவும் தன்னிடம் இல்லை என்பதாய்ச் சாதிக்கும் அளவுக்குச் சென்றான்.

''பெரிய கருமியாய் இருக்கிறாயே! இந்தா, இதை எடுத்துக் கொள்!'' என்று கோபமாய் என்னுடைய ஐம்பது கோப்பெக் காசை அவனிடம் நீட்டினேன்.

இப்பொழுது அவனுக்கும் என்னைப் போலவே கோபம் வந்துவிட்டது. கோட்டுப் பைகளை எல்லாம் துடைத்துக் காலி செய்து உள்ளே இருந்த

வெள்ளி, செப்புக் காசுகளைத் திரட்டியெடுத்துத் தேடிப் பார்த்தான். முடிவில் அவற்றினிடையே இரண்டு கோப்பெக் காசு ஒன்று இருக்கக் கண்டதும், உடனே தொலைபேசிக் கூண்டுகளின் வரிசையை நோக்கி வேகமாய் நடந்தான்.

ஒரு கூண்டினுள் இருவரும் ஒண்டிக் கொண்டு நின்றோம். கோஷா தன் வீட்டு எண்ணை 'டயல்' செய்தான். ''அம்மா, நான்தான் பேசுகிறேன்... என்ன? வீட்டுக்கு இதோ வந்துவிடுவேன். சரி அம்மா, மாயா இருக்கிறாளா அங்கே? அவளைக் கூப்பிடேன்!''

பிறகு அவசரமாய் ஒலிவாங்கியை என்னிடம் கொடுத்தான்.

''என்ன அது?'' மாயாவின் கவலையில்லாக் குரல் எதிர்முனையிலிருந்து ஒலித்தது.

''ஹலோ'' என்றேன் நான்.

''உம்-ம்! யார் அது?''

''நான்தான், ஹலோ?'' என்று சிரித்தவாறு திரும்பவும் சொன்னேன்.

முதலில் பதில் ஏதும் இல்லை. பிறகு மெல்லிய குரலில்.

''ஹலோ'' என்றாள்.

அம்மா என்ன சொல்வாரோ என்று இவள் பயப்படுகிறாளென நினைத்தேன், மாயாவின் குரலில் கலக்கமும் குழப்பமும் தொனித்தன.

''ஹலோ'' என்றேன், மீண்டும். ''எப்பொழுது, எங்கே?'' என்று வழக்கம் போல் விசாரித்தேன்.

தொலைபேசியில் எங்கள் உரையாடல் எப்பொழுதுமே சுருக்கமாய்க் காரியார்த்த தோரணையில்தான் இருக்கும்: எப்பொழுது, எங்கே? வீண் ஆடம்பரம் எதுவும் இருக்காது. முக்கியமானவை

யாவற்றையும் நேரில் சந்திக்கையில் பேசுவதற்காகப் பத்திரப்படுத்தி வைத்திருப்போம்.

''தெரியவில்லையே, எனக்கு'' என்று முன்னிலும் மெல்லிய குரலில் தயங்கியவாறு பதிலளித்தாள்.

''இன்று சந்திப்போம், மயாகோவ்ஸ்கி சதுக்கத்தில்'' என்று நான் ஆவல் மிக்கவனாய்த் தொடர்ந்து பேசினேன்.

''இன்று முடியாது என்னால். வீட்டுப் பாடங்கள் நிறைய இருக்கின்றன. நாளைக்கு எங்களுக்கு ஒரு பரீட்சை வேறு இருக்கிறது.''

''சரி, நாளைக்குச் சந்திப்போம்'' என்று சற்று ஏமாற்றத்துடன் சொன்னேன். ''நாளைக்கு, அதே இடத்தில்.''

''நாளைக்கும் முடியாது என்னால்'' என்று அவள் பெரு மூச்செறிந்தவாறு பதிலளித்தாள். ''நாளைக்கு... நாளைக்கு நான் அம்மாவுடன் தையற்கடைக்குப் போகிறேன்.''

''அப்படீன்னா, நாளை மறுநாள்?'' என்றேன், இன்னும் நம்பிக்கை குன்றாத குரலில்.

''நாளை மறுநாளா?'' மாயாவின் குரல் முன் போலல்லாது இப்பொழுது அதிக உறுதியுடன் ஒலித்தது. ''நாளை மறுநாள் சனிக்கிழமை, நான் வர முடியாது, ஏனென்றால் சனிக்கிழமை நான் திரைப்படம் பார்க்கப் போகிறேன். என் சினேகிதி ஒருத்தி டிக்கெட் வாங்கியிருக்கிறாள், இரண்டே இரண்டு டிக்கெட், அவளுக்கும் எனக்கும்.''

அட பாவமே, இரண்டே இரண்டுதானா....

''சரி... ஞாயிறன்று சந்திக்கலாம்.'' என் குரல் சற்று தடுமாறியது, ஞாயிறு வருவதற்கு ஒரு

யுகம் இருக்கிறதே, எப்படிக் காத்திருப்பது என்று திகைத்தேன்.

''ஞாயிறன்று வீட்டுக்கு விருந்தினர்கள் வருகிறார்கள், ஆகவே ஞாயிறிலும் நான் வருவதற்கில்லை'' என்று அறிவித்தாள்.

''பிறகு எப்பதான் சந்திக்கப் போகிறோம்?'' வரிசையாய்ப் பலவும் குறுக்கிட்டு எங்களைச் சந்திக்க விடாமல் செய்யவே, இது என்ன துரதிர்ஷ்டம் என்று தவித்தேன்.

''தெரியவில்லை....''

நான் சிறுதும் எதிர்பாராத இந்தச் சொல்லுக்குப் பிறகு ஒலிவாங்கி ஓசையற்றதாகிவிட்டது. மூச்சு விடும் சப்தம்தான் எதிர்முனையிலிருந்து வந்தது, மாயா மூச்சு விடும் சப்தம்.

''மாயா!'' என்று நான் திகைப்பும் ஏக்கமும் மிக்க குரலில் கூப்பிட்டேன்.

ஆனால் துண்டிப்பு ஒலிதான் ஒலிவாங்கியில் கேட்டது.

ஒலிவாங்கியைத் திருப்பி வைத்த போதுதான் கோஷா வியாசெம்ஸ்கி கூண்டினுள் என்னுடன் இல்லை என்பதைக் கவனித்தேன். அவன் வெளியே நின்றிருந்தான். எப்பொழுது அவன் வெளியே போனான், எப்படி இதை நான் கவனிக்காமல் இருந்தேன், எதற்காக அவன் வெளியே போனான்? ஒட்டுக் கேட்க விரும்பாமல் வெளியே போனானா? அல்லது மனம் பொறுக்கமாட்டாமல் போனானா?

கூண்டிலிருந்து நான் வெளியே வந்தேன். என்னைக் கண்டிப்பது போலவும் எனக்காக வருந்துவது போலவும் முகத்தைச் சுளித்தவாறு கோஷா என்னை உற்று நோக்கினான்.

''வேண்டாமென்று அப்பொழுதே உன்னை எச்சரித்தேன், நீ கேட்க மறுத்துவிட்டாய்'' என்றான்.

''என்ன சொல்கிறாய்?''

''வீண் வேலை, இது வேண்டாம் என்று அப்பொழுதே சொன்னேன்.''

ஆம், அப்பொழுதே அவன் சொன்னான்தான்...

''உன் தாய்தான் மூல காரணம், இல்லையா?'' என்று கேட்டு, கண்களைச் சுளித்துக் கொண்டு அவனை உற்றுப் பார்த்தேன்.

''அம்மாவுக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை!'' என்று அவன் என்மீது சீறி விழுந்தான். ''அம்மாவை இங்கே இழுக்காதே நீ, தெரிகிறதா.... அம்மா செய்த குற்றம் ஒன்றே ஒன்றுதான். மாயா வீட்டில் இருக்கையில் இல்லையென்று உன்னிடம் சொன்னாரே, அது ஒன்றுதான். மாயாதான் அவரை இப்படி உன்னிடம் பொய் சொல்ல வைத்துவிட்டாள். அதுதான் நடந்தது, உண்மை நிலைமை என்னவென்று இப்பொழுது புரிகிறதா?''

''ஆனால் ஏன் இப்படி?''

அர்த்தமில்லாத கேள்வி, என்னை அறியாமலே அவனிடம் இதைக் கேட்டேன். கணப் பொழுது கூட ஆகியிருக்காது, அனைத்து உலகிலும் எதிலுமே துளியளவும் கருத்தில்லாதவனாய் மாறிவிட்டேன்.

கோஷா சற்று நேரம் முக்கி முனகிவிட்டு கடுப்பு தொனிக்கும் குரலில் என்னிடம் சொன்னான்:

''இப்பொழுது ஒரு புதிய மோகம் அவளை ஆட்டிப் படைக்க ஆரம்பித்திருக்கிறது. புதிதாய் ஒருவன் வந்திருக்கிறான்; ஒற்றை நாடிப் பையன், குச்சியாய் இருக்கிறான், சதுரங்கம் ஆடுகிறான்.'' பிறகு சற்று விறுவிறுப்பான குரலில் கூறினான்:

''திக்ரான் பெத்ரோசியானுடன் ஆடி வெற்றி தோல்வி யின்றி முடித்துக் கொண்டுவிட்டவன். முன்னணி இளைஞர் மாளிகையில் ஒருங்கே நாற்பது ஆட்டக்காரர்களுடன் பெத்ரோசியான் ஆடிய போது இது நடைபெற்றது. பாரேன், பதினைந்து வயதுப் பையன், பெத்ரோசியானுடன் வெற்றி தோல்வியின்றி சமாளித்துவிட்டான்....''

''போய் வருகிறேன்'' என்று சொல்லி நான் வேகமாய் நடந்தேன்.

''ழேன்யா...'' என்று கூப்பிட்டுக் கொண்டு கோஷா என் பின்னுல் ஓடி வந்தான். ''ழேன்யா, இன்று மாலை ஒரு விருந்து நடைபெறுகிறது! நான் போகப் போகிறேன், அங்கே அவர்களிடம் அதியற்புத டேப்-ரெக்கார்டர் இருக்கிறது—'குருன்டிக்' டேப்-ரெக்கார்டர்! நீயும் வா, நன்ருய் இருக்கும், இடையிடையே நடனமும் ஆடலாம், வருகிருயா?''

எதிர்த் திசையில் சதுக்கத்தின் குறுக்கே நடந்தேன் நான். விலங்கினக் காட்சிசாலையின் கிராதி அடைப்புக்குப் பின்னுல் இலைகளின்றி குச்சிகளாய் நின்றிருந்த மரங்களைப் பார்த்துக் கொண்டு நடந்தேன். குளத்தைச் சுற்றிச் சென்ற பாதைகளில் எப்பொழுதும் கூட்டமாய்ப் பலரும் காணப்படுவார்கள். ஆனுல் இப்பொழுது அங்கே யாரையும் காணேம். குளமும்கூட உயிரற்றதாய்த் தோன்றியது, நடுவில் திட்டிலிருந்த சிறிய மரக் குடிலைச் சுற்றி ஒரேயொரு ஜதை அன்னங்கள் மட்டும் நீரில் மிதந்து மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. தொலைவில் கரையில் சில வாத்துகள் தமது சிறகுகளிலிருந்து நீரை உதறிக் கொண்டு நின்றன, குளிரில் அடிபட்ட அவற்றைப் பார்க்கப் பரிதாப

மாயிருந்தது. ஏனைய பறவைகள் குளிரிலிருந்து பாதுகாப்பாய் உள்ளே அடைக்கப்பட்டிருந்தன. வெளியில் விடப்பட்டிருந்த அந்த ஒரு சில அன்னங்களும் வாத்துகளும்கூட இயற்கை விதிகளின்படி நெடுநாட்களுக்கு முன்பே வெப்ப மண்டலங்களுக்குப் பறந்து போயிருக்க வேண்டும்! ஆனால் இவை எங்கும் போகாமல் விலங்கினக் காட்சி சாலையிலேயே குளிர் காலத்தைக் கழிக்கப் பழகிக் கொண்டுவிட்டன; நான் கூறக் கேட்டிருந்த தகவல் மெய்யானால், இவற்றின் சிறகுகளை கத்தரித்து இவை எங்கும் போய்விடாதபடி உறுதி செய்திருந்தார்கள்.

ஆனால் எப்பொழுதும் போல் இவ்வாண்டின் இலையுதிர் காலத்திலும், விலங்கினக் காட்சிசாலையின் வாசிகளில் ஒரு சாராரின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கவாறு அதிகரித்திருந்தது. இவற்றுக்கு அடையாள வில்லைகள் தேவைப்படவில்லை. தாமே மனம் விரும்பி தற்போது இவை விலங்கினக் காட்சிசாலையில் வசித்து வந்தன: காவென்று கத்தும் இந்தக் காகங்கள் இலையில்லாத மரக் கிளைகள் கறுத்துவிடும்படி அவ்வளவு ஏராளமாய் உட்கார்ந்திருந்தன; கீழே திட்டுத் திட்டாய் மழைநீர் தேங்கியிருந்த நடைபாதைகளில் கூட்டம் கூட்டமாய்ச் சிட்டுக் குருவிகள் காணப்பட்டன.

ஆம், குளிர் காலம் நெருங்கி வந்துவிட்டது. மற்றுமோர் ஆண்டின் குளிர் காலம்.

விலங்கினக் காட்சிசாலையின் நுழைவாயிலில் கோட்டுக்குமேல் வெள்ளை மேலங்கி அணிந்த ஓர் அன்னை ஐஸ்கிரீம் விற்றுக் கொண்டிருந்தார். காற்று, மழை எதையும் பொருட்படுத்தாதவர்

அவர், எப்பொழுதும் அங்கே நின்று ஐஸ்கிரீம் விற்பவர்.

ஆனால் இத்தனை ஆண்டுகளாய் இவரை நான் கண்ணெடுத்துப் பாராதவனாகவே இருந்து வந்தேன். எத்தனையோ தரம் அவரைக் கடந்து சென்றிருப்பேன், ஆனால் நெருங்கிச் சென்று அவரைக் கவனித்ததில்லை. எப்படியோ அவர் என் பார்வையில் படாமலே இருந்து வந்தார். அவரையோ, அவர் விற்று வந்த ஐஸ்கிரீமையோ பார்ப்பதற்கு எனக்கு அனுமதியில்லை என்பது காரணமாய் இருந்திருக்கலாம். நுழைவாயிலின் அருகே அமைந்த அவ்விடத்தின் பக்கம் நான் போகக் கூடாதென்று மிகப் பல ஆண்டுகளுக்கு முன்பு விதிக்கப்பட்ட அந்த தடை இது வரையில் செயலில் இருந்து வந்தது.

இப்பொழுது நான், விலங்கினக் காட்சிசாலையின் நுழைவாயில் பக்கம் சென்றபோது, இவர் வெள்ளை மேலங்கி அணிந்து ஐஸ்கிரீம் விற்கும் அன்னையல்ல, மிகப் பல ஆண்டுகளாய் இங்கு நின்று ஐஸ்கிரீம் விற்று வருகிறவர் என்பதைக் கண்டேன்—கண்டுபிடித்தேன் என்றுகூட சொல்லலாம். உடனே எனக்கு அடையாளம் தெரிந்தது, வயது முதிர்ந்த அதே அன்னைதான். அதிசயம் என்னவெனில், இத்தனை ஆண்டுகளாகியும் அந்த அன்னை சிறிதளவும் மாற்றமின்றி, ஆரம்பத்தில் என் நினைவில் பதிந்திருந்த அதே அன்னையாய் இருந்தார்; ஆனால் நான் இந்த எட்டு ஆண்டுகளில் அடியோடு மாறிவிட்டேன். அவ்வன்னையால் என்னை ஒருபோதும் அடையாளம் தெரிந்துகொண்டிருக்க முடியாது.

ஏன், என்னையே என்னால் அடையாளம்

தெரிந்து கொள்வதுகூட கடினமாய் அல்லவா இருந்தது—மிகப் பல ஆண்டுகளுக்கு முன்பு, முதன் முதல் நான் மாஸ்கோ வந்து சேர்ந்து போது இருந்தேனே, அந்தச் சிறுவன் ழேன்யாவை மட்டுமின்றி, ஒரு வாரத்துக்கு முன்பு, இரண்டு நாட்களுக்கு முன்பு, ஒரேயொரு மணி நேரத் துக்கு முன்பு இருந்தேனே, அந்தப் பையனையுங்கூட அடையாளம் தெரிந்து கொள்வது கடினமாய் அல்லவா இருந்தது?

ஐஸ்கிரீம் விற்ற அந்த அன்னையிடம் சென்று எனது ஐம்பது கோப்பெக் காசை நீட்டி,

''எஸ்கிமோ-பை ஐஸ்கிரீம் ஒன்று'' என்றேன்.

## நான்காவது பகுதி

### 1

''ழேன்யா, இதை என்னல் புரிந்து கொள்ள முடியவில்லை'' என்ருர் அவர். ''முன்பு நீ வடிவ கணிதத்தில் மட்டமான மதிப்பெண் பெற்று வந்தாய், அது வேறு விவகாரம்... இருந்தாலும் அதுவும் அவமானகரமானதுதான்....''

''இப்பொழுது நான் வடிவகணிதத்தில் நல்ல மதிப்பெண் பெறுகிறேன்.''

''நல்லதுதான், ஆனல் இதைப் பார்'' என்று தமக்கு முன்னல் மேஜையிலிருந்த காகிதத்தை என் பக்கம் திருப்பி, தமது மெல்லிய விரலால் சுட்டிக் காட்டினர். ஆசிரியர் அனுப்பிய குறிப்பு அறிக்கை அது. ''இது என்ன?'' என்று கேட்டார்.

அது என்னவென்று அவருக்குத் தெரியவா இல்லை? தெட்டத் தெளிவாய்த் தெரிந்ததே, என் பெயருக்கு எதிரே ''C'' என்றும் ''D'' என்றும் குறிக்கப்பட்டிருந்தது தெளிவாய்த் தெரிந்ததே. இரண்டும் எனக்குக் கிடைத்த தர மதிப்புகள்—முதலாவது பியானே வாசிப்புக்காகக் கிடைத்தது, இரண்டாவது இசைத் தத்துவ பாடத்துக்காகக் கிடைத்தது. பிழையின்றி யாவும் சரியாகவே குறிக்கப் பட்டிருந்தன. கடந்த வாரத்தில் இவ் விரு பாடங்களிலும் நான் பெற்றுக் கொண்ட மட்டமான தர மதிப்புகள் அவை.

''ழேன்யா, இதன் அர்த்தம் என்ன?'' என்று கேட்டு, அமைதியான குரலில் கூறிச் சென்ருர்.

''எனக்கு இது புரியவில்லே, இதை நான் புரிந்து கொள்ள மறுக்கிறேன்!''

இது மட்டுமீறிச் செல்வதாகும். புரிந்து கொள்ளாதது ஒன்று, புரிந்து கொள்ள மறுப்பது வேறென்றல்லவா?

பள்ளிக்கூட முதல்வரின் மேஜைக்கு முன்னல் அமைதியாய் நிற்க முடியாதவனய், ஒரு காலிலிருந்து மற்றெரு காலுக்கு மாறியவாறு நின்றேன். இடையிடையே கோட்டின் கைகளே இழுத்து விட்டுக் கொண்டேன். இந்த அசட்டுப் பழக்கம் கடந்த சில வாரங்களாய் என்னே இறுகப் பற்றிக் கொண்டுவிட்டது. எந்நேரமும் கோட்டின் கைகளே இழுத்து விட்டவாறு இருந்தேன். கோட்டுக் கைகள் குட்டையாகிப் பற்ருமற் போய்விடவில்லே. அண்மையில்தான் எனக்குப் புதிய சீருடைக் கோட்டு தந்திருந்தார்கள், எனக்கு மிகக் கச்சிதமாய் இருந்தது. ஆயினும் நம்ப முடியாத வேகத்தில் நான் எந்நேரமும் வளர்ந்து கொண்டிருந்தேன். நான் வளர்ந்து உயரமாவதைச் சில நேரங்களில் நானே உணருவதாய் நினேத்தேன். என் கழுத்தும் அதன் உச்சியில் என் தலேயும் மேல் நோக்கிச் சிறிது சிறிதாய் முட்டிக் கொண்டு உயருவதாகவும், பூட்சுகளுக்குள் கால் விரல்கள் மேலும் மேலும் நெரிக்கப்படுவதாகவும், எனது கோட்டுக் கைகளே இழுத்து விட்டுக் கொள்ள வேண்டும் போல என் கரங்கள் நீண்டு செல்வதாகவும் நினேத்தேன்.

''இனி இப்படி ஆகாதபடி தக்க முயற்சிகளே எடுத்துக் கொள்வேன்.'' நிச்சயம் எடுத்துக் கொள்ளவே வேண்டும், இது குறித்து இரண்டு அபிப்பிரயங்களுக்கு இடமில்லே. நான் தக்க

முயற்சிகளை எடுக்காவிடில் அடுத்த ஆறு மாதங் களுக்கு எனக்கு உதவித் தொகை கிடைக்காமல் அல்லவா போய்விடும்?

''ழேன்யா, உட்காரு நீ.'' விளதீமிர் கன்ஸ்தன் தீனவிச் தர மதிப்பு அறிக்கையை மேஜையில் ஒரு பக்கமாய்த் தள்ளி விட்டு, ''இதற்கு நீ விளக்கம் தந்தாக வேண்டும்....'' என்றார்.

என்ன விளக்கம் தர முடியும்?

''தக்க முயற்சிகளை எடுத்துக் கொள்கிறேன்'' என்று மெலிந்த குரலில் மீண்டும் சொன்னேன்.

இசைத் தத்துவப் பாடத்தை நினைத்ததுமே எனக்கு வெறுப்பாய் இருந்தது, பியானோ பயிற்சி களும் கசப்பாகவே இருந்தன, இசையின் மீது எனக்கு வெறுப்பு உண்டாகிவிட்டது என்று அவரிடம் விளக்கிச் சொல்ல முடியவில்லை என்னால்.

* * *

அது சரியல்ல, மிகைப்படுத்திச் சொல்வதாகி விடும்—அப்படி ஒன்றும் எனக்கு வெறுப்பு உண் டாகி விடவில்லை. தற்போது என்னால் இவற்றில் நாட்டம் கொள்ள முடியவில்லை, அவ்வளவுதான். இப்பொழுது நான் பாட்டுப் பயிற்சிக்குச் செல்ல வில்லை, இனி நான் கச்சேரிகளில் பாடப் போகிற வனல்ல. திசை தெரியாமல் அலையும்படியான அந்த இருண்ட நிலைமையில் என் வாழ்வில் முதன் முதலாய் இப்பொழுது நான் இருக்கக் கண்டேன். இது என்னை நிலை குலைந்து தடுமாறச் செய்தது. வீட்டுப் பாடங்களா? தவறாமல் செய்ய வேண்டிய முக்கிய வேலையாய்க் கொண்டு முனைந்து உட்

காரலாம், அல்லது தலை போகிற காரியமல்ல என்று எழுந்தும் செல்லலாம். பியானோ பயிற்சிகளா? இவையும் அப்படிதான்: உட்கார்ந்து பயிற்சி செய்தாலும் செய்யலாம், அல்லது புறக்கணித்து விட்டு எழுந்து ஊர் சுற்றவும் போகலாம்.

நான் ஊர் சுற்றச் சென்றேன்....

ஊர் சுற்றச் செல்வோருக்கு மாஸ்கோவில் பார்ப்பதற்குச் சுவையான பலவும் ஏராளமாய் இருக்கின்றன. பிரேஸ்னியாவை விட்டு அப்பால் செல்லாமல் இங்கேயே சுற்றுவதென்றாலுங்கூட திரிவதற்கும் பார்ப்பதற்கும் எவ்வளவோ இருக்கின்றன.

பொல்ஷாயா குருஸீன்ஸ்கயா, மாலியா குருஸீன்ஸ்கயா தெருக்களில் அலைந்து அங்குள்ள பழங் காலக் கட்டடங்களை உற்று நோக்கினேன். மனித முகங்களைப் போல ஒவ்வொன்றும் தனித் தன்மையுடையதாய்த் தோன்றிய அவற்றின் முகப்புகளைக் கூர்ந்து கவனித்தேன்....

இருண்ட நிலைமையில் விடப்பட்ட நான் எனக்குக் கிடைத்த அந்த வேண்டாத ஓய்வு நேரத்தை இப்படிச் சுற்றியலைந்து கழிக்க முற்பட்டேன். வல்ஹோன்கா தெருவிலுள்ள கவின் கலைக் காட்சிசாலைக்கு அடிக்கடி போகலானேன். இசையில் கருத்திழந்து—எப்படியும் இசைத் தத்துவப் பாடத்தில் கருத்திழந்து—அலைந்து கொண்டிருந்த எனக்கு, அந்தக் காட்சிசாலையில் எக்காரணத்தாலோ தனி அக்கறையும் ஊக்கமும் பிறந்தன. மருந்தளவுக்குக்கூட அங்கு இசை இல்லை என்றாலும், கடந்த காலத்தில் இசை எனக்கு அளித்து வந்த அதே ஆனந்தம் அங்கே செல்லும் தோறும் எனக்கு ஏற்படக் கண்டேன்.

அந்த ஆனந்தத்தில் ஒரு வகைப் பிரகாசம், மெய்யாகவே யாவற்றையும் ஒளிமயமாக்கிய பிரகாசம் இருந்தது.

கிராமப்புறத்தில் நடந்து செல்லும்போது சில நேரம் நீங்கள் இதை அனுபவித்திருப்பீர்கள். ஒரு புறம் பசுமையான தோப்புகள், மறு புறம் நீல நிற அருவி. பயிர் நிலங்களிடையே வளைந்து நெளிந்து செல்லும் குறுகலான பாதையில் நடந்து செல்கிறீர்கள். தானியப் பயிர்கள் காற்றில் அசைந்தாடுகின்றன, இங்கும் அங்குமாய்த் தும்பைப் பூக்கள் கண்ணில் படுகின்றன. எங்கும் அழகு மிளிர்கிறது, காணக் கண் கோடி வேண்டு மென நினைக்கத்தக்க காட்சி. ஆனால் கதிரவனைக் காணோம், மேகங்களின் பின்னால் அவன் ஒளிந் திருக்கிறான். சல்லாத் துணியால் முகத்திரை இட்டது போல மெல்லிய நிழல் யாவற்றின் மீதும் கவிந்திருக்கிறது. பிறகு திடுமென —சிறிதும் எதிர்பாராத விதமாய், மின்னலைப் போல— மேகங்களுக்குப் பின்னாலிருந்து கதிரவன் எட்டிப் பார்க்கிறான், உங்கள் கண்ணெதிரே யாவும் மாயமாய் மாறிவிடுகின்றன.

தோப்புகள் முன்பு இருந்தது போல பசுமையாகவேதான் இருக்கின்றன, அருவி நீலமாகவும் தும்பைப் பூக்கள் வெண்மையாகவும்தான் இருக் கின்றன, ஆயினும் யாவும் மாற்றமடைந்துவிட் டன! பசுமை முன்பு போல் இல்லை, மாற்றமடைந் திருக்கிறது; அதே போல வெண்மையும் நீலமும் மாற்றமடைந்திருக்கின்றன. கதிரவனுடைய ஒளி வெள்ளத்தில் மூழ்கிப் பளிச்சிடும் புதிய உலகு உதித்தெழுந்துவிட்டது, யாவும் மாற்றமடைந்து விட்டன!

வல்ஹோன்கா தெருவிலுள்ள சித்திரக் காட்சிக் கூடத்தில் எனக்கு இம்மாதிரியான அனுபவம் தான் ஏற்பட்டது.

சாவதானமாய்ப் பார்த்தவாறு சுவர்களின் வளைவை ஒட்டினாற் போல் மெதுவாய் நடந்து ஒவ்வொரு கூடமாய்க் கடந்து சென்று கொண்டிருந்தேன். தப்படிக்குத் தப்படி வண்ண ஓவியங்கள் கண்ணுக்கு விருந்தளித்தன. தோப்புகள், வயல் வெளிகள், ஆறுகள், மலைகள், முகங்கள், கனிகளும் வேட்டையின்போது கிடைத்த பலவும் குவிக்கப்பட்ட மேஜைகள், கண்டும் கேட்டுமிராத நகரங்களின் தெருக்கள், சதுக்கங்கள்—இப்படி வரிசையாய்ப் பலவும் காட்சியளித்தன. சிற்சில சித்திரங்கள் குதிரைப் படையோரும் காலாட் படையோரும் மோதிப் பொருதுவதைக் காட்டின. மற்றும் சில காதல் மொழி பேசின. ஆயினும் விதிவிலக்கின்றி இந்த ஓவியங்கள் யாவற்றிலும் நிழல் கவிந்திருந்தது. மலைகளும் தெருக்களும் நிழலில் இருப்பதாய்த் தோன்றின. போர்களும் நிழலில்தான் நடைபெற்றன. காதலர்கள் நிழலில் முத்தமிட்டுக் கொண்டார்கள். மெய் தான், சில ஓவியங்களில் நிழல் கவிந்த இடங்களுக்கு அருகே கதிரவனின் ஒளியில் பளிச்சிட்ட இடங்களைக் காண முடிந்தது. ஆயினும்—எப்படி இதற்கு விளக்கம் கூறுவதெனத் தெரியவில்லை—கதிரவனொளியில் பளிச்சிட்ட இடங்களுங்கூட ஒருவகை நிழலில் அழுந்தியிருந்ததாகவே தோன்றின. முற்றிலும் நிழலில் இருந்த இடங்களைக் காட்டிலும் இவை சற்று பளிச்சென தெரிந்தன, அவ்வளவுதான்.

பிறகு நான் ஒரு புதிய கூடத்துக்குள்

சென்றதும் திடுமென யாவும் மாறிவிட்டன. நெடுநேரமாய் மேகங்களுக்குப் பின்னுல் மறைந் திருந்த கதிரவன் திடீரென வெளிவந்து எங்கும் ஒளிக் கதிர்களை அள்ளி வீசினுல் எப்படியோ அப்படி இருந்தது. எனக்குக் கண் கூசிற்று, என்னை அறியாமலே இரு கண்களையும் சுளித்துக் கொண்டு சுற்றிலும் பார்த்தேன். கவனமின்றி தவருன வாயிலில் சென்று விட்டோமோ, ஒரு கூடத்திலிருந்து இன்னெரு கூடத்துக்குப் போவதற்குப் பதில் அமைதியான அந்தி ஒளி யிலிருந்து வெளிப்பட்டு பிரகாசக் கோடையில் மூழ்கிய தெருவுக்கு வந்து விட்டோமோ என்று கூட கணப் பொழுதுக்கு நினைத்து மயங்கினேன்.

ஆனுல் கண்களை விரியத் திறந்து பார்த்த போது, இல்லை, காட்சிக் கூடத்தினுள்ளேதான் இருக்கிறேம் என்பது தெரிந்தது. இந்தப் புதிய கூடத்தின் சுவரிலிருந்த படங்களும் ஏனைய கூடங் களில் நான் பார்த்தவற்றை ஒத்த காட்சிகளைத் தான் காட்டின. தோப்புகளும் மலைகளும், பாலங் களும் கோயில்களும், முகங்களும் உடல்களும் மலர்களும் ஆகியவற்றையே, எண்ணற்ற ஓவியர் கள் வண்ணச் சித்திரங்களாய் வடித்துக் காட்டிய அதே காட்சிகளையே இவற்றிலும் கண்டேன்.

ஆனுல் எப்படிப்பட்ட திகழொளி இங்கு எல்லாக் காட்சிகளிலும் நிரம்பிப் பளிச்சிட்டது! வெயில் தெரிந்த திட்டுகளில் கண்ணையே அவிக் கும்படியான பிரகாசமல்லவா குடிகொண்டிருந் தது. நிழல்களில் விறுவிறுப்பும், கனிவு தரும் குளுமையும் அல்லவா இருந்தன. காற்று பட படத்து வீசிற்று, சிற்றலைகளை எழுப்பிச் சென்றது, மலர்களின் நறுமணத்தை எங்கும் பரப்பித் தலையை

கிறுகிறுக்கச் செய்தது. மரங்களில் இலைகள் சலசலத்தது காதில் விழுந்தது, கடல் பொங்கி யெழுந்து பாறைகளில் மோதி பேரிரைச்சல் போட்டது. மங்கையரின் கண்களில் தெளிவும் இதமும் ஒளிர்ந்தன. அப்பழுக்கற்ற தூய வண்ணங் களையும் துள்ளிக் குதித்தாடிய உயிர்த் துடிப்பை யும் என்னென்பது!

திடுமென நிகழ்ந்த இந்த ஞானோதயத்துக்குப் பிற்பாடு நான் மணிக் கணக்காய் இந்த ஓவியங் களைப் பார்த்துக் கொண்டு நின்றேன். இந்த அதி சயம் கைவரப் பெற்றது எப்படி, இதன் இரகசியம் என்ன என்பதைக் கண்டறிய முயன்றேன். ஒரு விவரம் விடாமல் இந்த ஓவியங்களைக் கவன மாய்ப் பரிசீலனை செய்தேன். நுணுக்கமாய் நெடு நேரம் ஆராய்ந்தபின் தூரிகை ஓட்டங்களது தனிச் சிறப்பான இயல்புகளைக் கண்டுணர முடிந் தது—மொனேயின் தாராள வீச்சுகளையும் வான் கொகின் படைப்புகளிலுள்ள வரிசையான வண்ணப் பொட்டுகளையும் ஒன்றிலிருந்து ஒன்றாய் வழிந்தோடும் ரெனுவாரின் வண்ணங்களையும் இனம் கண்டு கொண்டேன்...

* * *

கவின் கலைக் காட்சிக் கூடத்திலிருந்து வெளியே வந்து முன்வாயிலிலுள்ள தூண்களைக் கடந்து, கீழே புல்தரைக்குச் சென்ற விசாலமான படிக் கட்டில் சற்று நேரம் நின்றேன். பிறகு இந்தப் படிகளில் ஒன்றில் உட்கார்ந்தேன்.

வெயில் காய்ந்தது, தார்ச்சாலையின் சூடு பாதத்தைத் தீய்ப்பது போல வேகமாய் அடி யெடுத்து வைத்து எல்லோரும் விரைந்து சென்றார்

கள். அவர்களுடைய கோடை பருவ ஆடைகளின் வண்ண வகைகள் கண்ணைப் பறித்தன, பருத்தி ஆடைகளும் அரைக்கை சட்டைகளும் சேர்ந்து கோலச் சித்திரங்களாய்ப் பளிச்சிட்டன. இளம் வயதினரே மிகுதியாய் இருந்தார்கள்; ஏனெனில் பல்கலைக் கழகமும், மற்றும் லெனின் நூலகமும், நகரின் மிகப் பெரிய நீச்சல் தடாகமும் கூப்பிடு தூரத்தில்தான் இருந்தன. சாலையின் ஒரு பகுதி வடங்களிட்டுப் பிரிக்கப்பட்டிருந்தது, சிவப்பு, வெள்ளை வண்ணம் தீட்டப்பட்ட அடைப்புக்குப் பின்னால் சாலை பராமரிப்புக் குழுவைச் சேர்ந்த பெண்கள் கறுப்புத் தார்ச் சாலையின் வெள்ளைக் கோடுகளுக்கு வெண்ணிறம் பூசிக் கொண்டிருந் தார்கள். பச்சையும் நீலமும் மஞ்சளும் சம்பல் நிறமும் இளஞ் சிவப்புமான கார்கள் அவர்களைச் சுற்றிக் கொண்டு ஒற்றை வரிசையில் போக வேண்டியிருந்தது. போக்குவரத்துக் குறி விளக்கு கள் சிவப்பும் மஞ்சளும் பச்சையுமாய் ஒளிர்ந்து இக்காட்சிக்கு மேலும் வண்ணக் கோலமிட்டுக் கொண்டிருந்தன.

யாவும் பளிச்சென்றும் இரைச்சலாகவும் இருந் தன, விழாக் கோலம் பூண்டது போல் தோன்றின. ஆனால் நான் தன்னந் தனியனாய், சோக உருவின னாய் கவின் கலைக் காட்சிக்கூடத்தின் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தேன். என் குரலை இழந்துவிட் டேன், மாயாவையும் இழந்துவிட்டேன். எனக்குப் பின்புறத்தில் காட்சிக்கூடத்தினுள் உணர்வும் ஊக்க மும் ஊட்டும் ஓவியங்கள் இருந்தன, இவற்றைப் படைத்தவர்கள் மறைந்து நெடுங் காலமாகி விட்ட போதிலும் இவை உயிர் துடிப்பு மிக்கன வாய் இருந்தன. எனக்கு எதிரே சாலையில் விந்தை

மிகு அன்றாட வாழ்க்கை அலை மோதிக் கொண்டிருந்தது.

ஆனால் படிக்கட்டில் உட்கார்ந்திருந்த எனக்கு இவை யாவற்றிலுமிருந்து நான் துண்டிக்கப் பட்டுத் தனித்திருந்ததாய்த் தோன்றியது. நான் திக்கற்றவனாகிவிட்டேன், எனக்கு முக்கியமானவை யாவற்றையும் இழந்துவிட்டேன். நெடுநாட்களுக்கு முன்பு விலங்கினக் காட்சிசாலையில் நான் காணமற் போய்க் கலங்கி நின்றதை எனது தற்போதைய மன நிலைமை எனக்கு நினைவு படுத்திற்று. அன்று நான் சின்னஞ் சிறியவனாய் இருந்தேன், மாஸ்கோவில் எனது முதலாவது நாள் அது. முதலாவது நாளன்றே காணமற் போய் விட்டேன், அருகிலிருந்த பெஞ்சில் அமர்ந்து அழத்தொடங்கினேன். ஆனால் மெய்யாகவே அன்று நான் அழவா செய்தேன்? இல்லை, அழவில்லை, சட்டென எழுந்து சுற்றிலும் பார்த்தேன், பிறகு எனக்குரிய பாதையில் சென்றேன். அப்படிதான் செய்ய வேண்டும், அதுதான் சரி.

படிக்கட்டிலிருந்து எழுந்து எனக்குரிய பாதையில் செல்ல முற்பட்டேன். தார்ச் சாலை பூட்சுத் தோலையும் கடந்து சென்று பாதத்தைத் தீய்ப்பதாய் நினைக்கும்படி அப்படிச் சூடாய் இருந்தது. என் நடையைத் துரிதமாக்கிக் கொண்டேன். இப்பொழுது யாரும் என்னை தாண்டிக் கொண்டு முன்னே செல்லவில்லை. கூட்டத்தோடு சேர்ந்து நானும் நடந்து சென்றேன். வார நாட்களின் வேலை நேரத்தின்போது மாஸ்கோ பாதசாரிகளுக்கு உரியதான அந்தப் பரபரப்பான அதி வேகத்தில் நடைபோட்டேன்.

மனித வெள்ளம் என்னை மனேஷ்னயா சதுக்

கத்துக்கும் கோர்க்கித் தெருவுக்கும் செஞ் சதுக்கத்துக்கும் இட்டுச் சென்றது.

அப்பொழுதுதான் இருந்தாற் போலிருந்து அந்த ஓசை என் காதுக்குள் இரைந்தது. அதாவது காலடிச் சப்தத்தை, எனது காலடியும் என்னைச் சுற்றிலும் எல்லோரது காலடியும் எழுப்பிய சப்தத்தை நான் உணர்வு பூர்வமாய்க் கவனிக்க முற்பட்டேன். ஆனால் இப்பொழுது அவை வெறும் காலடிச் சப்தமாய் ஒலிப்பதற்குப் பதில், கட்டை ஸ்தாயி சுர வரிசையில் அமைந்த ஒலிகளாய் என் காதில் விழுந்தன: ''தத்தோம்-தொம்-தொம்-தொம்... தத்தோம்-தொம்-தொம்-தொம்....'' முதலில் உயர்ந்தெழுந்தும், பிறகு தணிந்தும், பிறகு திரும்பவும் உயர்ந்தெழுந்தும் ஒலித்தன. இதே அமைதியிலும் தாளத்திலும் இந்தக் கட்டை ஸ்தாயி சுர அடுக்குகள் தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருந்தன. ''பாசோ அஸ்தினட்டோ'' (பிடிவாதமான கட்டை ஸ்தாயி அடுக்குகள்)—இவற்றைக் குறிப் பதற்கு உபயோகிக்கப்படும் இந்த இசைப் பதம் இவற்றின் தன்மையை நன்கு புலப்படுத்துகிறது.

எனது இடக் கையின் சுண்டு விரலும் கட்டை விரலும் தாமாகவே ஒரு முழு சுர வரிசையின் அளவுக்கு அகன்று சென்று, என் காதில் ஒலித்த தாளத்துக்கு இசைவாய் மேலும் கீழுமாய்த் தத்திச் சென்றன. எனது இடக் கை இப்படிச் செய்து கொண்டிருந்த போது வலக் கை என்ன செய்தது?

நான் உற்றுக் கேட்டுப் பார்த்தேன், ஆனால் பண்ணை அப்பொழுது என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால் என் வலக்கை என்ன செய்ய வேண்டுமென்பதை அரைகுறையாய் ஊகிக்க

முடிந்தது. கட்டை ஸ்தாயியில் பிடிவாதமாய் ஒரே விதமாய் ஒலித்த அந்தச் சுர அடுக்குடன் மோதும்படியாய் இயங்கியாக வேண்டும் அதாவது எவ்வளவுதான் இடக் கை விடாப் பிடியாய் மாருத ஒரே அமைதியில் இயங்கிஞலும், இதைக் குலேத்து இந்த தாளத்தை உடைக்காமல் விடுவதில்லே என்று கங்கணம் கட்டிக் கொண்டு வலக்கை செயல்பட்டாக வேண்டும். உதாரணமாய், ''த-தா, த-தா, தா-தா...'' என்று குறுக்கிடலாம். அல்லது தந்தியடிப்பது போல மாருத உச்ச ஸ்தாயியில் வலக் கையின் ஐந்து விரல்களேயும் வரிசையாய் இயக்கி ''கட-கட்டு, கட-கட்டு...'' என்று தட்டிக் கொண்டிருக்கலாம்.

பிறகு யாவற்றையும் ஒருசேர இணேக்க வேண்டும்....

அப்பொழுது பயங்கரமாய் பிரேக்குகள் கிரீச்சிட்டன, போக்குவரவுக் காவலரின் விசில் பலக்க ஒலித்தது. ஒரு பஸ் தேய்த்துக் கொண்டு என் முகத்துக்கு முன்ஞல் வந்து அதிர்ந்து நின்றது. அட கடவுளே! இவ்விடத்தில் சாலேயைக் கடக்கக் கூடாதென்பதை மறந்துவிட்டு நான் சாலேயிலே இறங்கிவிட்டேன். அண்மையில்தான் இங்கு பாதாள வழி அமைத்திருந்தார்கள். போக்குவரவுக் காவலரைப் பார்த்து திறுதிறுவென முழித்துவாறு பாதாள வழியை நோக்கி ஓடினேன், பஸ் டிரைவர் என்மீது வசைமாரி பொழிந்தார்.

பாதாள வழியில் இறங்கி ஓடினேன். வேடிக்கை என்னவெனில் எனக்குக் கொஞ்சங்கூட திகிலாய் இல்லே, ஆனந்தமாகவே இருந்தது. அந்த அசட்டு பஸ் என் மீது மோதி என்னேக் கீழே தள்ளியிருந்தாலுங்கூட, நாற்புறமிருந்தும் பலரும்

ஓடி வந்து கூடியும், தொலைவில் ஆம்புலன்ஸ் காரின் சங்கு ஒலிக்கத் தொடங்கியும் விடும் அந் நேரத்தில் நான் நினைவிழந்து குப்புறக் கிடந்தாலுங்கூட, அப்பொழுதும் எனது இடக் கையின் விரல்கள் மாறுத அந்தக் கட்டை ஸ்தாயித் தாளத்தைத் தொடர்ந்து தட்டி கொண்டுதான் இருந்திருக்கும், எனது வலக் கையின் விரல்கள் ஒரே இடத்தில் நின்று தந்தியடிப்பது போல் தட்டிக் கொண்டுதான் இருந்திருக்கும்—இதில் எனக்குச் சந்தேகமே இருக்கவில்லை. என்னுடைய ஆனந்தத்துக்கு இதுவேதான் காரணம்.

## 2

உண்மையில் இதெல்லாம் இதற்கு முன்பே ஆரம்பமானதுதான். ஆனுல் முன்பு நான் இதைப் பெரிதாய் நினைக்காமல் இருந்துவிட்டேன்.

நான் குரலை இழக்காதிருந்த அந்நாட்களிலேயே ஆரம்பமாகிவிட்டது. அப்பொழுது கோடை விடுமுறை, வெரெயா ஆற்றிங் கரையில் முன்னணி இளைஞர் முகாமில் இருந்து வந்தோம். மாயாவை விட்டுப் பிரிந்திருக்க முடியாமல் நான் ஏங்கிக் கொண்டிருந்தேன். என் நினைப்பை வேறு திசையில் திருப்பும் பொருட்டு நான் நெடுநேரம் பியானே வசித்துக் கொண்டிருப்பது வழக்கம். தாழ்வாரத்திலிருந்த பழைய பெக்கர் பியானேவின் முன்னுல் அமர்ந்து பகற் பொழுது முழுவதையும் தனியே கழித்து வந்தேன். ஏனையோர் அருகாமையில் இருந்த ஆற்றில் நீந்தியும் வெயிலில் காய்ந்தும் வண்ணத்துப் பூச்சிகள் பிடித்தும்

பல உதவாக்கரை வேலைகள் செய்தும் பொழுதைப் போக்கினர் — அதாவது விடுமுறையின் போது பள்ளிக்கூட பையன்கள் வழக்கமாய்ச் செய்யும் பலவும் செய்து கொண்டிருந்தனர்.

ஆனால் நான் மட்டும் முழு நேரத்தையும் பியானோவின் முன்னால் கழித்து வந்தேன்.... அந்த நாட்களில் ஷொப்பேனும் ஸ்கிரியாபினும்தான் எனது இலட்சிய இசையரசர்கள். சரியாய்ச் சொல்வதெனில் எனது இரு இலட்சிய புருஷர்களில் ஒருவரை விட்டுத் துறந்து சிறிது சிறிதாய் இன்னொருவரிடம் — அதாவது ஷொப்பேனைத் துறந்து ஸ்கிரியாபினிடம்—முழு கவனத்தையும் செலுத்தலானேன். என்னிடம் இப்படி ஒரு மாற்றம் ஏற்படுவதற்குப் பெருமளவில் காரணமாய் இருந்தவர் ஸ்கிரியாபினேதான். அவருடைய இசைப்புனைவுகளை வாசிக்கையில் ஸ்கிரியாபினும் எப்படி ஷொப்பேனுடைய சர்வ வல்லமை வாய்ந்த செல்வாக்குக்கு உட்படலானார், பிற்பாடு எப்படி இதைக் கடந்து அப்பால் சென்றார் என்பதை நான் தெளிவாய் உணரலானேன். ஸ்கிரியாபினுடைய ஆரம்பக் காலப் புனைவுகளில் அவர் ஷொப்பேனுக்குப் பெரிதும் கடமைப்பட்டவராகவே இருக்கிறார். ஆனால் அவர் ஷொப்பேனிடமிருந்து கடன் வாங்கியதாய் ஒருபோதும் நான் கருதுவில்லை. இல்லவே இல்லை! உள்ளத்தின் உணர்வு நயத்திலும் ஆத்மார்த்திகக் கொந்தளிப்பிலும் இருவரும் வெகுவாய் ஒத்திருக்கிறார்கள் என்பதே இதற்குக் காரணம்.

ஆனால் ஸ்கிரியாபின் விரைவில் பிய்த்துக் கொண்டு தமது சொந்த பாதையில் சென்று தமக்குரிய தனிப் பாணியை வகுத்துக் கொண்டு

விட்டார். என்னையும் அவர் தம்முடன் அழைத்துச் சென்றுவிட்டார்.

என் விரல்கள் ஒடிந்து போகும் நிலையை அடையும் வரை நான் ஸ்கிரியாபினது மூன்றுவது சொனுட்டாவை ஓயாமல் வாசித்தேன்... அப்படியும் என்னுல் அதில் தேர்ச்சி பெற முடியவில்லை. அதை இசைப்பதற்கு என்னிடம் போதிய விரல்கள் இல்லை என்பதாய் நினைக்க வேண்டியிருந்தது. ஒரு வேளை என் கைகள் மிகச் சிறியனவாய் இருந்தனவோ? ஆனுல் அவரால் எப்படி இதைச் சமாளிக்க முடிந்தது. அவருடைய கைகளும் சிறியவையே, குழந்தைக் கைகளைப் போன்றவையே என்பது எனக்குத் தெரியும். அப்படியானுல் அவரும் கடும் போராட்டம் நடத்தியிருக்க வேண்டுமே. தாம் புனைந்த அந்தப் பயங்கர சுரத்தொகுதிகளைச் சமாளிப்பதற்கு அவர் தமது மணிக்கட்டுகளை படாதபாடு படுத்தி வைத்திருக்க வேண்டும்.

ஒரு தரம் அவர் விடாப்பிடியாய் மிகவும் கடுமையாய் முயற்சி செய்ததைத் தொடர்ந்து அவருடைய வலக்கை முடங்கிப் போய்விட்டது. இதன் பிறகுதான் அவர் ''இடக் கைக்குப் பிரெலூதியா'' என்னும் இசைப்புனைவை உருவாக்கினுர்.

நமக்கு வேண்டாம் அதெல்லாம், கை முடங்கிப் போகும்படி வாசித்துக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. பியானேக் கட்டைகளிலிருந்து கைகளை எடுத்து ஆட்டிக் குலுக்கிக் கொண்டேன், ஓய்ந்து போன தோள்களை உலுக்கிக் கொண்டேன். ஒரு பகற் பொழுதுக்கு இவ்வளவு போதுமென்று நினைத்தேன்.

ஆயினும் என்னையும் மீறி என் கைகள் மீண்டும்

கறுப்பு, வெள்ளைக் கட்டைகளை எட்டிப் பிடித்து வாசிக்க முற்பட்டன. எப்படிதான் ஸ்கிரியாபினல் அந்த சுரத்தொகுப்புகளை வாசிக்க முடிந்ததோ?

மத்திம 'ச'வுக்கு முன்னமைந்த 'க'வையும் அதற்கு அடுத்த எட்டாவது கட்டையான 'க'வையும் ஒருங்கே இசைத்துப் பார்த்தேன். எளிதாகவே இருந்தது, ஆனல் இந்த நாதம் சோபையற்றுச் சப்பென ஒலித்தது. ஆனல் முதலாவது 'க'வுக்குப் பதிலாய் அதற்கு முந்திய சுரத்தை இசைத்ததும் ஏற்பட்ட மாற்றத்தை என்னென்பது! ஒன்பது சுரங்களுக்கு இடைப்பட்ட இந்த இடைவெளிக்கு 'நோஞ' என்று பெயர்—அழகான பெயர், மங்கையின் பெயரைப் போலல்லவா இருக்கிறது! ஆயினும் காதுக்கு இதமாய் இல்லை.... இந்த நோஞவுடன் கூட வேறு மூன்று சுரங்களைச் சீராய் இடையமைத்து இசைத்ததும் அதிசயம் நிகழக் கண்டேன். காதுக்கு ஒவ்வாத இசைவின்மை திடுமெனப் பூரிப்புற்றுப் பளிச்சிட்டுக் காதுக்கு இனியதாகியது—நோஞக்கார்டாய் ஒலித்தது.

ஸ்கிரியாபின் இந்த நோஞக்கார்டுகளைப் பயன்படுத்த விரும்பினர், எனக்கும் இவை பிடித்திருந்தன....

தொடக்கத்திலிருந்து ஆரம்பித்து இரண்டு 'க'க்களையும், பிறகு பின்சென்று 'ரி'யையும், மேலே சென்று 'ம'வையும் இசைத்ததும்.... இரு, இரு! முதலாவது 'க'வைச் சற்றே குறைத்து, இரண்டாவதைச் சற்று நீட்டினல், அரிய தாள இலயமும் இன்னிசையும் அல்லவா உருவாகிற்று....

இன்னிசையா? ஆம்—இன்னிசைதான். எங்கிருந்து உதித்தது இது? தெரியவில்லையே. எட்டு,

ஒன்பது, பத்து சுரங்களுக்கு இடைப்பட்ட இடை வெளிகளைக் கொண்டு நான்கில் மூன்று கால அள வில் இசைத்துக் கொண்டிருந்தேன். வால்ட்ஸ் தாள அமைதியும் 'த' மைனரும் கிடைத்தன...

* * *

இசை இப்படித்தானு புனையப்படுகிறது? இசை தானு இது?

நான் அறியேன். இசைதான் என்று எப்படி நான் அடித்துப் பேசலாம்? இசை எப்படிப் புனை யப்படுகிறது, எப்படி அது உதிக்கிறது என்று யாராலும் விளக்கிச் சொல்ல முடியுமா? முக்கிய மாய் உங்கள் விரல் முனைகளிலிருந்தே அது உரு வாகி எழும்போது அதை விளக்கிச் சொல்ல முடியுமா?

ஆயினும் நடந்ததை நடந்தபடி இங்கு எடுத்து ரைக்க முயன்றுள்ளேன். என் விவகாரத்தில் இது இப்படிதான் நிகழ்ந்தது.

மதிய உணவருந்த வேண்டிய நேரம் நெருங்கிய தும் கோஷா வியாசெம்ஸ்கி எங்கிருந்தோ திடு திப்பென அங்கே வந்து சேர்ந்தான். பழம் போல் கனிந்து பழுத்திருந்தான், இடுப்பில் குட்டை நிஜாரும் கழுத்தில் ரோஜா பேர்ரி மாலையும் அணிந்திருந்தான். தாழ்வாரத்துக் கைப்பிடிச் சுவ ரின்மீது தாவி குதிரை சவாரி செய்வது போல் அமர்ந்து கொண்டான். அப்பொழுது நான் சிறி தும் தடுமாற்றமின்றி எனது ''நோனு-வால்ட்சை'' (அதற்குள் என் மனத்துள் இந்த பெயர் உருவாகி விட்டது) சரளமாய் வாசித்துக் கொண்டிருந் தேன்.

சற்று நேரம் இதைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு கோஷா கைப்பிடிச் சுவரின் வெளிப்புறத் தில் தொங்கிய காலையும் உட்புறத்துக்குக் கொண்டு வந்து தரையில் ஊன்றி என்னிடம் நெருங்கி, ''புர கோஃபியெவா?'' என்று கேட்டான்.

அவனுடைய இசை ஞானத்தை என்னென்பது!

''ஆமாம்'' என்றேன்.

மேலும் சற்று நேரம் கேட்டபின் பெரிய மனிதத் தோரணையில் ''நோனுகார்டுகள் நன்ருகவே இருக்கின்றன'' என்ருன்.

''ஆமாம்'' என்று ஒத்துக் கொண்டேன்.

இன்னும் சற்று நேரம் கேட்டிருந்துவிட்டு, ''மேன்யா, கணித வழியில் இதையெல்லாம் கணித்துவிட முடியும், தெரியுமா?'' என்ருன்.

''கணிப்பதாவது, எப்படி அது?'' என்று வியப் படைந்த நான் வாசிப்பதை நிறுத்திவிட்டு, அவனைக் கேட்டேன்.

''ஆம், கணிதத்தைக் கொண்டு யாவற்றையும் கணித்துவிடலாம்.... உதாரணமாய்ச் சண்ட வரிசையை எடுத்துக் கொள், அதிர்வுகளின் எண்ணைக் கொண்டு கணக்கிட்டோமாயின் இரண்டுக்கு ஒன்று விகிதாசாரம் கிடைக்கிறது. எளிய விகிதா சாரம் இது. ஆனல் ஒன்பதாவதை எடுத்துக் கொண்டால், சிக்கலாகிவிடுகிறது; என்ருலும் கணித வழியில் இதையும் கணக்கிட்டுவிடலாம். நோனுகார்டைப் பொறுத்தவரை எளிதில் இதைச் செய்ய முடியும். இசையில் எதையும் இவ்விதம் கணக்கிட்டுவிட முடியும்!''

''எதற்காக இப்படிக் கணக்கிட வேண்டும்?'' என்று கேட்டேன்.

''இரு, இரு, வருகிறேன்'' என்று தன்னுடைய

கருத்தால் கவரப்பட்டவனுய்க் கூறினுன் கோஷா. ''பியானே சுரவரிசை ஒன்றில் எத்தனை ஒலிகள் இருக்கின்றன?''

''பன்னிரண்டு...''

எனக்கு ஒரே வியப்பாயிருந்தது. இசைப் பள்ளியில் இத்தனை ஆண்டுகளாய்ப் படித்துக் கற்றுக் கொண்டது அனைத்தையும் இந்த கோஷா ஒரேயொரு கோடை விடுமுறையில் மறந்துவிட்டானு, என்ன? அல்லது வெயிலில் அதிக நேரம் படுத்துக் கிடந்ததால் வந்த வினையா? ஒரேயடியாய்ப் பழுப்பேறிப் போய் அல்லவா இருக்கிருன்....

''பன்னிரண்டுதானு!'' என்று அவன் கேலிச் சிரிப்பு சிரித்துக் கொண்டான். ''பன்னிரண்டு அல்ல, எண்பத்தைந்து! பண்டைக் கிரேக்கர்களுக்கு அது தெரிந்திருந்தது, பித்தகோரஸ் இதைக் கணக்கிட்டுச் சொல்லியிருந்தார். விழிக்காதே நீ. வாழ்க்கையை எளிதாக்கும் பொருட்டு பியானே கட்டைகளில் பன்னிரண்டு ஒலி வரிசைகள் வைத்தமைத்திருக்கிருர்கள்... எண்பத்தைந்தை வைத்துக் கொண்டு வாசிப்பதென்ருல் எப்படி அவஸ்தைப்பட வேண்டியிருக்கும்!''

''எதற்காக எண்பத்தைந்து?''

''எதற்காகவா? என்ன கேள்வி இது?''

''எனக்குப் பன்னிரண்டு போதும்.''

''எனக்குப் போதாது'' என்று கூறி, கோபமாய்த் தனது கழுத்து மாலையை இழுத்துவிட்டுக் கொண்டான் கோஷா. ''எண்பத்தைந்துகூட எனக்குப் போதுமா என்பது சந்தேகம்தான்....''

''என்ன ஆயிற்று உனக்கு?'' என்று அவனைக் கவலையுடன் பார்த்தவாறு கேட்டேன் நான். கோஷா வியாசெம்ஸ்கி அன்றைய தினம் ஒரு

மாதிரியாகவே பேசினுன். பையனுக்கு எதாவது ஆகிவிட்டதா, என்ன?

வெற்று உடம்போடு நிற்கிறேம் என்பதையும் கவனியது திடுமென கோஷா நிமிர்ந்து நெஞ்சைத் துருத்திக் கொண்டு வீராப்பான குரலில் அறிவித்தான்:

''இசையின் இசைவை நான் இயற்கணிதத்தைக் கொண்டு சரிபார்த்து வருகிறேன்!''

பிறகு நெற்றியைத் துடைத்துக் கொண்டு கணப் பொழுது சிந்தித்தபின் வாக்கியத்தைத் திருத்திக் கூறினுன்: ''இல்லே, அப்படியல்ல.... 'இயற்கணிதத்தால் இசையின் இசைவைச் சரி பார்த்து வருகிறேன்' தெரிகிறதா?''

''என்ன?'' என்றேன் நான், ஒன்றும் விளங்காதவனுய்.

''ஆமாம், பூஷ்கினுடைய 'மொசார்ட்டும் சலியேரியும்' என்னும் காவியத்தில் கூறப்படுவதைச் சொன்னேன். நி இதைப் படித்திருக்கிருயா?''

''சரி, அதற்கு என்னவாம் இப்போது?'' என்று கேட்டேன். உண்மையில் நான் அதைப் படித்திருக்கவில்லே. எங்கள் பாடத் திட்டத்தைச் சேர்ந்ததல்ல அது. ஓய்வு நேரத்திலும் நான் அதைப் படிக்காமலே இருந்துவிட்டேன். ஆயினும் அதைப் பற்றி ஓரளவு தெரிந்தே வைத்திருந்தேன். சலியேரி தமது சிறந்த நண்பரான மொசார்ட்டுக்கு விஷம் கொடுத்தது எனக்குத் தெரியும். இப்படிப்பட்ட நண்பர்கள் சிலரும் இருக்கவே செய்கிருர்கள்.

''சரி, அதற்கு என்னவாம்?'' என்று திரும்பவும் கேட்டேன்.

''என்னவென்பதைச் சொல்கிறேன் கேள்''

என்று கடுமையான குரலில் கோஷா பதிலளித்தான். ‘‘யாவற்றையும் விட்டுவிட்டு இயற்கணிதத்துக்கு மனதைப் பறிகொடுத்துவிட்டேன். ஆம், இசைக் கலப்பில்லாத சுத்தமான இயற்கணிதம். பல்கலைக்கழக பௌதிகவியல் பிரிவில் எனக்கு இடம் கிடைக்குமா என்று முயற்சி செய்து பார்க்கப் போகிறேன்.’’

‘‘சும்மா கதை அளக்காதே’’ என்று அவன் பேச்சை நம்ப முடியாமல் அலுத்துக் கொண்டேன்.

‘‘மெய்யா, எல்லாம் ஏற்கனவே தீர்மானம் செய்துவிட்டேன். ஒரேயொரு சிக்கல் என்னவெனில் சேர்வதற்குப் போட்டி மிகவும் கடுமையாய் இருக்கும்’’ என்று பெருமூச்சு விட்டுக் கொண்ட பின் மேலும் சொன்னான்: ‘‘இலையுதிர் காலத்தில் நான் மாலை நேரப் பள்ளியில் சேர்ந்து இதற்காகப் படித்தாக வேண்டும்.’’

## 3

அவ்வருடம் இலையுதிர் காலத்தில் என் வகுப்பைச் சேர்ந்த பல பையன்கள் மாலை நேரப் பள்ளியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தனர். நல்ல வேளை, அது மிகவும் அருகாமையிலேயே—எங்கள் விடுதி இருந்த அதே கட்டடத்திலேயே—இருந்தது, நுழை வாயில் மட்டும் எங்கள் விடுதியின் பக்கத்தில் இல்லாமல் எதிர்ப் பக்கத்திலிருந்தது. ஆயினும் இந்தப் பையன்கள் ஏற்றுக் கொண்ட சுமை இலேசானதல்ல; ஒருங்கே இரு இடங்களில் படித்துக் கொண்டும், இரு இடங்களி

லும் தரப்படும் வீட்டுப் பாடங்களையும் செய்து முடித்துக் கொண்டும் இருப்பது எளிய காரிய மல்ல.

கோஷா வியாசெம்ஸ்கியும் வீத்யாவும் குரலி ழந்த எங்கள் திருக்கூட்டத்தைச் சேர்ந்த மற்றும் சிலரும் மாலை நேரப் பள்ளியில் சேர்ந்து கொண் டார்கள். ஆனால் நான் இவர்களில் ஒருவனல்ல.

ஏற்கனவே ஒரு பள்ளியில் படிப்பவர்கள் இன் னொன்றில் சேர்ந்து மாலை நேர வகுப்புகள் சில வற்றுக்குச் சென்று ஏன் படிக்க வேண்டுமென சிலர் வியப்புறலாம். இவர்களுக்கு ஏன் இந்த மித மிஞ்சிய கல்வித் தாகம் என்று கேட்கலாம்.

நிலைமை அவ்வளவு எளியதல்ல என்றாலும்கூட, இந்தக் கேள்விக்கு பதிலளிப்பது எளிதுதான். இசைப் பள்ளியில் நாங்கள் பத்து ஆண்டுகள் படித்து முடித்ததும் எங்களுக்கு பள்ளிக் கல்வி நிறைவுச் சான்றிதழ் அளிக்கப்படுவதில்லை. ஏனெ னில் எங்களுடைய பள்ளி சாதாரண பள்ளியல்ல, சிறப்புப் பள்ளியுங்கூட அல்ல, எங்கள் பள்ளி இசைஞர்களைப் பயிற்றுவிக்கும் இசைப் பள்ளி. சாதாரண பள்ளிக் கல்வி நிறைவுச் சான்றிதழுக்குப் பதிலாய் எங்கள் பள்ளியின் இலச்சினை முத்திரை யுடன் கூடிய ஆவணம் எங்களுக்குத் தரப்படும், இந்த இசைப் பள்ளில் பத்து ஆண்டுகள் பயிற்சி பெற்று இசைஞர்களாய்த் தகுதி பெற்றிருக்கி றோம் என்பதாய் இதில் குறிக்கப்பட்டிருக்கும். ஏற்கனவே நாங்கள் தனிப் பயிற்சி பெற்றிருப் பதாகவும் ஏனையோருக்குப் பயிற்சி அளிக்கும் தகுதியுடையோராய் இருப்பதாகவும் இதில் கூறப்பட்டிருக்கும். இந்த ஆவணம் உடனே வேலை யில் அமர்வதற்கு, உதாரணமாய் பள்ளிக்கூடத்

தில் பாட்டு ஆசிரியராவதற்கு எங்களைத் தகுதியுடையோராக்கிற்று.

துரதிர்ஷ்டவசமாய்ப் பாட்டிசைப்பதைப் பள்ளியில் யாரும் முக்கியமான ஒன்றாய்க் கருதுவதில்லை. நாம் வாழும் தற்காலத்தில் யாரும் இதைப் பயனுடையதாய் நினைப்பதில்லை.

எடுத்துக்காட்டாய், விளாதிக் திசிபிரினுக்கு நேர்ந்ததை இங்கு குறிப்பிடலாம். கடந்த ஆண்டுக்கு முந்திய ஆண்டில் இவன் எங்கள் பள்ளியில் ஆவணம் பெற்றதும், மாஸ்கோ பள்ளிக்கூடம் ஒன்றில் பாட்டு ஆசிரியராய் வேலை ஏற்றான். பார்ப்பதற்கு விளாதிக் கம்பீர உருவமுடையவனல்ல; குட்டையாகவும் நோய்ஞ்சானாகவும் இருந்தான்; ஏதோ நோயில் அடிபட்டவன் மாதிரிகூட தோன்றினான் எனலாம்.

பள்ளிக்கூடத்தில் இவன் முதன்முதல் பாட்டு வகுப்பு நடத்தப் போயிருந்தான். ஐந்தாம் வகுப்பு மாணவர்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. வகுப்புக்குள் நுழைந்ததுமே பைத்தியக்காரர்களின் விடுதிக்குள் சென்றது போலிருந்தது அவனுக்கு. அந்த ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் வட்டசாட்டமான சிறுவர்கள், அவன் தலைக்கு மேல் நன்றாய் ஒரு சாண் அளவுக்கு உயரமாய்ப் பைல்வான்களைப் போல் இருந்தார்கள். அவனைக் கண்டதுமே வயிற்றைப் பிடித்துக் கொண்டு எக்காளமிட்டுச் சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். வகுப்பிலிருந்த சிறுமிகளும் சும்மாயிருக்கவில்லை; காணுததைக் கண்டுவிட்டது போல் கெக்கலித்துக் கொண்டதோடு நில்லாமல், பக்கத்திலிருந்த சிறுவர்களைத் தூண்டிவிட்டு ரகளை செய்யச் சொல்லி வேடிக்கை பார்த்தனர். விளாதிக் சற்று நேரம்

காத்திருந்து பார்த்தபின் பியானேவின் முன்னல் உட்கார்ந்து, ‘‘குழந்தைகளே, குழுவாய் ஒன்று சேர்ந்து பாட்டிசைக்கும் கலை மிகப் பழங் காலத்திலேயே தோன்றியதாகும்’’—என்று ஆரம்பித்தான். உடனே வகுப்பில் எல்லோருக்கும் பித்தம் தலைக்கேறி ஒரே அமளியாகிவிட்டது. பையன்கள் தரையில் கைகளை ஊன்றி தவழ்ந்து சென்று மியாவ் மியாவென்றும், வள் வள்ளென்றும், மற்றும் பலவாருகவும் கத்த முற்பட்டனர். விளாதிக் திசிபிரின் ஒழுங்கை நிலைநாட்ட முயன்று பார்த்தான்: ‘‘இந்தக் கோமாளித்தனத்தை உடனே நிறுத்துங்கள், இது பள்ளிக்கூட வகுப்பறை என்பது நினைவிருக்கட்டும்!’’ என்று கடுமையான குரலில் சொல்லிப் பார்த்தான். அப்படியும் பயனில்லை. பையன்களில் ஒருவன் பாக்கெட் டிரான்சிஸ்டரை முழுக் குரலில் கூச்சலிட வைத்துவிட்டு விரிய வாயைப் பிளந்து கொண்டு எல்விஸ் பிரெஸ்லியின் பாட்டு ஒன்றைப் பாடுவது போல் பாவனை செய்தான். அதே நேரத்தில் வேறு இருவர் வகுப்பறையின் நடுவில் ராக்-அண்டு-ரோல் நடனமாட முற்பட்டனர். அதற்கு மேல் பொறுக்க முடியாதவனுய் விளாதிக் எழுந்து நின்று உறுதியான குரலில் சொன்ஞன்: ‘‘இறுதியாய் எச்சரிக்கிறேன், நான் இரண்டு அடிக்கு மேல் அடிப்பவன் அல்ல: முதலாவது அடி தலையிலும் இரண்டாவது அடி சவப்பெட்டி மூடியிலும் விழும்.’’(குச்சி போல் மெலிந்த விளாதிக் வட்டசாட்டமான ஐந்தாம் வகுப்பினரைப் பார்த்து இப்படி மிரட்டினுன்!) அந்த நிலைமையில் அவன் வேறு என்ன செய்ய முடியும்? மந்திரத்தைப் போல் அவனுடைய மிரட்டல் உடனே பயனளித்தது: அமளி புரிந்

தோர் எல்லோரும் அடங்கிவிட்டனர், விளாதிக் அதற்கு மேல் தடங்கலின்றி பாடத்தை நடத்திச் சென்முன்.

ஆனுல் வாலுப் பையன்கள் நேரே தமது பெற்ரேர்களிடம் சென்று ஆசிரியர் தம்மை அடித்துப் போடுவதாய் மிரட்டியது பற்றி புகார் செய்யவே, கோபமடைந்த அப்பா அம்மாமார்கள் தலைமை ஆசிரியரிடம் ஓடி வந்தனர். இதன் விளைவு என்னவெனில், விளாதிக் திசிபிரின் மறு தினமே அந்தப் பள்ளியை விட்டு விலக வேண்டிய தாயிற்று. இப்பொழுது அவன் பிஸ்கெட் ஆலை ஒன்றில் பாட்டுக் குழுவுக்குப் பொறுப்பாளனுய் இருந்து வருகிருன்.

இசைப் பள்ளியில் படித்து ஆவணம் பெறுவோருக்கு இப்படிப்பட்ட அரிய அனுபவத்துக்கான வாய்ப்புகளோடு அன்னியில், இசைக் கல்லூரி அல்லது கினெசின் இசைக் கழகம் போன்ற மேற்கல்வி நிலையங்களில் சேர்ந்து தொடர்ந்து இசை பயிலும் உரிமையும் கிடைக்கிறது. இந்நிலையங்களில் எங்கள் பள்ளியின் பையன்களை மகிழ்ச்சியுடன் சேர்த்துக் கொள்வார்கள், ஏனெனில் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சின் மாணவர்கள் எவ்வளவு உறுதியான அடிநிலைப் பயிற்சி பெறுகிருர்கள் என்று அவர்களுக்குத் தெரியும். எங்கள் பள்ளியில் தமது இசைப் பயிற்சியைப் பெற்று முன்னிலைக்கு வந்த இசை இயக்குநர்களையும் பாட்டுக் குழு ஆசிரியர்களையும் கணக்கிட்டுப் பார்த்தீர்களானுல் நிச்சயம் மலைத்துவிடுவீர்கள், பெயரும் புகழும் பெற்றவர்கள் அத்தனை பேர் இருப்பார்கள்.

ஆகவே எங்கள் பள்ளியில் எங்களுக்குத் தரப்

படும் இந்த ஆவணம் மதிப்புக்குரியதே ஆகும். எங்களுக்கு அன்றாட உணவுக்கு உத்தரவாதம் அளித்த ஒரு முக்கிய ஆவணமாகும்.

* * *

இருந்த போதிலும் பல பையன்கள் அவ் வருடம் இலையுதிர் காலத்தில் மாலைநேர வகுப்பு களுக்குச் சென்று படிக்க ஆரம்பித்தார்கள். சா தாரண பள்ளிக்கூடக் கல்வி நிறைவுச் சான்றிதழ் வேண்டுமென்று இப்படி மாலைநேர வகுப்புகளில் சேர்ந்து கொண்டார்கள்.

நாங்கள் இப்பள்ளிக்கு அழைத்து வரப்பட்ட போது ஏழு, எட்டு வயதுகூட ஆகாத சிறுவர் களாய் இருந்தோம், வளர்ந்து ஆளானபின் என்ன செய்வதென்பது குறித்து எங்களில் யாரும் அந்தக் காலத்தில் அதிகம் கவலைப்படவில்லை. இப்பொழுது பெரிய பையன்கள் ஆனதும் இவர் களில் பலர் பாட்டுக் குழு ஆசிரியராவதில் அதிக ஆர்வமுடையோராய் இல்லை. எளிதில் நிர்வகிக்க முடியாத சிறுவர் சிறுமியருக்குப் பாட்டு பாடக் கற்றுத் தர வேண்டுமென்ற அடங்காத் துடிப்பு டையோராகவும் இல்லை, பிஸ்கெட் ஆலையில் தம் வேலைக் காலத்தைக் கழிக்கும்படி நேரும் ஒரு நிலைமையால் கவர்ந்திழுக்கப்படவும் இல்லை.

இப்பொழுதுதான் வீத்யா தித்தரேன்கோ தான் சேனையில் சேர விரும்புவதாய்த் திடுமென ஒரு நாள் அறிவித்தான்.

‘‘சேனை இசைக் குழு இயக்குநராய் ஆவதெனத் திட்டமிட்டிருக்கிறாயா?’’ என்று அவனைக் கேட் டேன்.

''அதெல்லாம் இல்லை, சும்மா தான் சேர வேண்டுமென விரும்புகிறேன்'' என்று சொல்லி வீத்யா என்ன காரணத்தாலோ சிரித்துக் கொண்டான். ''இராணுவக் கல்லூரியில் சேர விரும்புகிறேன்'' என்றான்.

''ஓகோ, அப்படியா சேதி? விண்வெளி வலவராகலாமென்ற திட்டமாக்கும்.''

''இல்லை, இல்லை'' என்று பலமாய்த் தலையை ஆட்டிவிட்டு ''காலாட் படையில் ஆபீசராகலாமென்பதே என் திட்டம்'' என்றான்.

''ஏன் அப்படி?'' என்று வியப்புடன் கேட்டேன் நான்.

''சேனையில் ஆபீசராக விரும்புகிறேன், இது புரியவில்லையா உனக்கு? ஏனென்று கேட்கிறாயே'' என்று சற்றுக் கடுப்பாகவே சொன்னான் அவன்.

''ஓ, அப்படிச் சொல்லு! இப்படிதான் புரிகிறது எனக்கு. மத்தியச் சேனை விளையாட்டுப் போட்டிக் கழகம் உன்னை புரெவெஸ்தினிக் கழகத்திலிருந்து இழுத்துக் கொள்ளப் பார்க்கிறதென்று சொல்லு!'' என்றேன்.

''உளறாதே நீ'' என்று என்மீது அவன் எரிந்து விழுந்தான். ''யாரும் என்னை இழுத்துக் கொள்ளப் பார்க்கவில்லை, நானாகவேதான் சேனைக் கழகத்தில் சேர்ந்து கொள்ள முயற்சி செய்யப் போகிறேன். இராணுவக் கல்லூரியில் அவர்கள் என்னுடைய மனுவைப் பரிசீலிக்கையில் இது எனக்கு அனுகூலமாய் இருக்குமென நினைக்கிறேன். இராணுவக் கல்லூரியில் ஏராளமானோர் சேர முயலுவது தெரியாதா உனக்கு?'' கணப் பொழுதுக்கு ஆலோசித்துவிட்டு மேலும் சொன்

ஞன்: ''அது மட்டுமல்ல, சாதாரண பள்ளிக்கூடத்தின் கல்வி நிறைவுச் சான்றிதழ் இல்லாமல் நம்மால் அங்கே சேர முடியாது. நம்முடைய பள்ளியின் ஆவணம் போதாது, ஏனென்ருல் இராணுவக் கல்லூரிக்குக் கணிதமும் பௌதிகவியலும் மிகவும் முக்கியமானவை, ஆனுல் நமது பள்ளியில் இவற்றில் நாம் அதிக கவனம் செலுத்துவதில்லை.''

''இசை என்னுவது?'' என்று கேட்டேன்.

வீத்யா தோள்களே உலுக்கிக் கொண்டானே தவிர பதில் ஒன்றும் சொல்லவில்லை.

கோஷா வியாசெம்ஸ்கி மாலைநேர வகுப்புகளுக்குச் சென்று பல்கலைக் கழக பௌதிகவியல், கணிதப் பிரிவின் நுழைவுத் தேர்வுகளுக்காக உயிரை விட்டுப் படிக்க முற்பட்டபோது அவனிடமும் நான் இதே கேள்வியைக் கேட்டேன். சாதாரண பள்ளிக்கூடக் கல்வி நிறைவுச் சான்றிதழ் மட்டுமின்றி சிறப்புத் தர மதிப்பும் பெற வேண்டுமென்று அவன் அரும்பாடு பட்டுப் படித்து வந்தான்.

''சிறப்புத் தர மதிப்பு இல்லாமல் பல்கலைக் கழகத்தில் சேர யாரும் முயலுவதில்லை'' என்று அவன் இதற்கு விளக்கம் கூறினுன். ''சிறப்புத் தர மதிப்பு பெற்றவர்களும்கூட எளிதில் சேர்ந்துவிட முடியாது, போட்டி அவ்வளவு கடுமையாய் இருக்கிறது'' என்ருன்.

''இசை என்னுவது?'' என்று கேட்டேன்.

''இசையா?'' என்று கேட்டு, கோஷா இளித்துக் கொண்டான். ''பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம், போதிய நேரம் கிடைக்கும். பல்கலைக்

கழகத்தில் சேர்ந்து கொண்ட பிறகு சிறிய ஜாஸ் இசைக் குழு ஒன்றைத் திரட்டிக் கொள்ள வேண்டும் என்றிருக்கிறேன். 'ஆடும் டான்ஜன்ட்'— எப்படி இருக்கிறது இந்தப் பெயர்? அமெச்சூர் போட்டிகளில் எல்லாப் பரிசுகளையும் தட்டிக் கொண்டுவிடுவோம்! பல்கலைக்கழக அதிகாரிகள் எப்பொழுதும் இதை வரவேற்கிறவர்கள். எங்கள் மாலை நேர வகுப்புகளில் ஒருவன் இருக்கிறான், அவனும் பௌதிகவியல், கணிதப் பிரிவில் சேரத் திட்டமிடுகிறான்—இம்மாதிரியான இசைக் குழு வேலைக்குச் சரியான ஆள், தானே பாட்டுகள் இயற்றி இசை அமைக்கிறவன். ழேன்யா, நீ அவனை சந்திக்க வேண்டும். நாங்கள் எல்லோரும் நாளைக்கு ஒன்றுகூடுகிறோம், என்னுடைய மாலை நேர வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் வருவார்கள்—அருமையான கோஷ்டி இது, பெண்களிலும் சிலர் ரொம்ப தமாஷானவர்கள்.... நீயும் வருகிறாயா?''

''தெரியவில்லை.''

''வா, இருவருமாய்ப் போவோம்.''

அவனுடைய கோஷ்டிகளின் கொண்டாட்டங்களுக்கு என்னை வருமாறு இப்படிதான் கோஷா விடாப்பிடியாய்க் கூப்பிடுவான், ஏனோ தெரியவில்லை!

''நீயும் வா, என்ன சொல்கிறாய்?''

''சரி, வருகிறேன்'' என்று முடிவில் ஒத்துக் கொண்டேன்.

இதே போல மறுநாள் அந்திப் பொழுதில் கோஷாவும் நானும் அவனுடைய சகாக்களின் கொண்டாட்டத்திற்குப் போயிருந்தோம். இதைப் பற்றி பிற்பாடு கூறுகிறேன். முதலில் நான்

இதைக் காட்டிலும் முக்கியமான வேறொரு விஷயத்தை மறக்காமல் சொல்லியாக வேண்டும்.

* * *

மராத் அலீயெவ்—ஆயிரத்தில் ஒருவனுக்கும் பாக்கியம் பெற்றவன் இவன்.

எங்கள் வகுப்பில் ஏனைய எல்லோருக்கும் முன்னதாய் இவனுக்குக் குரல் முறிய ஆரம்பித்தது. ஏனைய எல்லோரையும் காட்டிலும் அதிக காலத்துக்கு இவன் தன் குரலுக்கு ஓய்வு அளித்தான்—முழுதாய் இரண்டு ஆண்டுக்கு ஓய்வு அளித்தான். முடிவில் வாயைத் திறந்து மீண்டும் பாடியபோது இவன் குரல் மத்திமக் குரலாய் மாறியிருந்தது—எப்படிப்பட்ட மத்திமக் குரல் என்கிறீர்கள், அருமையிலும் அருமையானது! லிசித்சியானின் குரல் போல இருந்தது, நயத்தரத்தில். இன்னுங்கூட நாதச் செழுமை வாய்ந்ததாய் இருந்தது என்பேன்—பாவெல் லிசித்சியான் என்னை மன்னிக்க வேண்டும், நாங்கள் நினைத்தது தவறாய் இருந்திருக்கலாம், ஏனெனில் மராத் அலீயெவ் எங்கள் வகுப்பைச் சேர்ந்த பையன், எங்கள் விடுதியில் இருந்தவன் என்பதால் எங்களுக்கு அப்படி தோன்றியிருக்கலாம்.

மராத்தின் குரலைக் கேட்டு நாங்கள் புளகாங்கிதமடைந்துவிட்டோம். ஒவ்வொரு நாளும் தூங்கும் முன்பு அவன் குரலைக் கேட்க வேண்டுமென்று அவனைப் பாடச் சொல்லிக் கட்டாயப்படுத்தினோம். பாடாவிட்டால் நொறுக்கிவிடுவோம் என்று பயமுறுத்தினோம். ''தூக்கம் கண்ணைச் சொருகுது'' என்று அவன் சாக்கு சொல்லான், எங்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள பல வழி

களிலும் முயற்சி செய்வான். ஆனால் நாங்கள் விடுவதில்லை, ''உடனே பாடு, இல்லாவிட்டால்...'' என்று மிரட்டுவோம். பாவம், வேறு வழி யின்றி கம்பளியை இழுத்து மேலே சுற்றிக் கொண்டு பெருமூச்சு விட்டவாறு அப்படியே படுக்கைமீது எழுந்து நிற்பான், பிறகு கைகளைக் கட்டிக் கொண்டு முகவாயை உயர்த்திப் பாட ஆரம்பிப் பான்:

மணவிழாத் தேவனை
வாழ்த்துவோம்,
புகழ் சாற்றுவோம்...

சொக்கிப்போய் ஆடாமல் அசையாமல் நாங் கள் கேட்டுக் கொண்டிருப்போம், மராத்தின் குரல் அப்படி மந்திர சக்தி வாய்ந்ததாய் இருக் கும். குரலின் இனிமை எங்களுக்குப் புதியதல்ல, முன்னொரு காலத்தில் நாங்களும் இனிய குரலுடையவர்களாய் இருந்தவர்களே. ஆயினும் மராத்தின் குரல் எங்களை அப்படி அதிசயிக்கச் செய்து வந்தது.

பாட்டிசைத்துப் போற்றுவோம்,
நாட்டமுள்ள செல்வன் செல்வியை
கூட்டிவைத்து மணம்முடிக்கும்
தேவன் புகழ் சாற்றுவோம்...

இதற்குள் வெளியே நடையில் வெறுங் கால் களின் அரவம் கேட்கும், பக்கத்துப் படுக்கைக் கூடத்தின் பையன்கள் மராத்தின் பாட்டைக் கேட்பதற்காக எழுந்து எங்கள் கதவருகே வந்து விடுவார்கள். விரைவில் எங்கள் விடுதியின்

எல்லாப் பையன்களுமே மராத் அலீயெவின் ''கச்சேரி''யைக் கேட்டுக் கொண்டு வெளியே நிற்பார்கள்.

இதற்குள் மராத்துங்கூட மெய்மறந்து போய் மிகவும் உருக்கமாய் பாடத் தொடங்கிவிடுவான், தான் தூங்க விரும்பியதை மறந்துவிடுவான். அவனுடைய அகன்ற விழிகளில் உத்வேகமும் பரவசமும் மிளிரும். ருபின்ஸ்டைனின் ''எப்பிதலாமா''வைத் தொடர்ந்து எவ்கெனி ஒனெகினது காதல் பாடல்கள், ''வெதெனேத்சி விருந்தினன் கீதம்'' முதலானவற்றைப் பொழிய முற்படுவான். அல்லது ''பிகாரோ, பிகாரோ, பி-இ-காரோ...'' என்று கரைந்துருகிவான்...

முடிவில் எங்களாலேயே கண் விழிக்க முடியாமற் போய், யாருக்கும் தெரியாமல் கொட்டாவி விடத் தொடங்குவோம். ஆனால் மராத் அவனுடைய படுக்கையின்மீது நின்று கொண்டு தொடர்ந்து பாடுவான்.

பள்ளியின் அவனுடைய இறுதி ஆண்டுக்கு முந்திய கோடை விடுமுறையைத் தனது சொந்த ஊரில் கழித்துவிட்டுத் திரும்பி வந்திருந்தான். புதிய பள்ளி ஆண்டு ஆரம்பித்துச் சில நாட்களுக்கெல்லாம் நேர்த்தியான கருநிற 'சாய்க்கா'கார் ஒன்று எங்கள் பள்ளியின் வாயில் முகப்பில் வந்து நின்றது. அப்பொழுது இடைவேளையாதலால் நடந்தது அனைத்தையும் நாங்கள் எல்லோரும் பார்க்கவும் கேட்கவும் முடிந்தது.

மராத்தைப் போலவே கறுப்பு முடிகளும் அடர்ந்த கரிய புருவங்களும் அகன்ற கரிய கண்களையுமுடைய பழுப்பு நிறத்தவர் இருவர் கருநிற 'சாய்க்கா' காரிலிருந்து இறங்கினர். கறுப்பு

ஆடைகளும் கறுப்பு டையும் கறுப்பு அடிக்கால் பூட்சுகளும் போட்டிருந்தனர். அவர்களுடைய கோட்டுக் காலர்களில் வண்ணக் கொடிகள் போல் தோன்றிய வரிசையாய் பல முக்கிய இலட்சினைகள் குத்தப்பட்டிருந்தன.

இவர்கள் இருவரும் மராத்தின் தாயகக் குடியரசாகிய காக்கேசியக் குடியரசின் கலாசார அமைச்சரும் மாஸ்கோவிலுள்ள இக்குடியரசின் நிரந்தரப் பிரதிநிதியுமாவர் என்பது பிற்பாடு எங்களுக்குத் தெரிய வந்தது.

வந்த முக்கியஸ்தர்கள் படிக்கட்டில் ஏறிச் சென்று பள்ளிக்கூட முதல்வர். அறையின் உயரமான வெண்ணிறக் கதவுகளுக்குப் பின்னுல் மறைந்தனர். அவர்கள் உள்ளே சென்றதுமே நாங்கள் கதவருகே கூடி உள்ளே நடப்பதைக் காதைத் தீட்டிக் கொண்டு கேட்க முற்பட்டோம். என்ன நடக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் எங்களை அரித்துத் தின்றது. ஆனுல் அறையினுள் நடந்தை அந்தச் சந்தர்ப்பத்தில் வெளியிலிருந்து மிகவும் சுலபமாகவே கேட்க முடிந்தது. ஏனெனில் முகமன்கள் கூறிக் கொண்டபின் உரையாடல் பலத்த குரலில்தான் நடைபெற்றது.

''இல்லை, ஒருபோதும் முடியாத காரியம் அது. பள்ளிப் படிப்பைப் பையன் இங்கேதான் முடித்தாக வேண்டும்....''

''தோழர் முதல்வரே, அதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை, பள்ளிப் படிப்பை அவன் இன்னெரு இசைப் பள்ளியில் முடித்துக் கொள்வான்.''

''அவன் இங்கேதான் மாஸ்கோ அரசாங்க இசைக் கல்லூரியில் தொடர்ந்து படிப்பான்!''

‘‘எங்கள் குடியரசிலும் இசைக் கல்லூரி இருக்கிறது, அதுவும் அரசாங்கக் கல்லூரிதான், எல்லாச் சிறப்புகளையும் பெற்றது.’’

‘‘ஆனால் அவன் இங்கே அல்லவா பயிற்சி பெற்றான், நாங்கள்தானே அவனை ஆளாக்கினோம், இசைஞனாக்கினோம்....’’

‘‘தோழர் முதல்வரே, அவன் எங்கள் குடியரசில் பிறந்தவன் ஆயிற்றே, நாங்கள் அல்லவா அவனை இசைஞனாக்கப் போகிறோம்.’’

‘‘இதோ இப்போதே நான் எக்கத்தெரீனா அலெக்சேயிவ்னாவுக்குப் போன் செய்யப்போகிறேன்!’’ என்று முதல்வர் மிரட்டினார். அவருக்கு மூச்சு திணறிற்று, அப்படி அவர் பரபரப்படைந்து விட்டார்.

‘‘கலாசார அமைச்சரை நாங்கள் பார்த்து இதைப் பற்றி பேசிவிட்டுதானே இங்கே வந்திருக்கிறோம். எக்கத்தெரீனா அலெக்சேயிவ்னா உங்களுக்குத் தமது ஆர்வமிக்க வாழ்த்துகளைத் தெரிவிக்கச் சொன்னார்...’’ என்று வந்தவர்கள் சாவதானமாய்ப் பதிலளித்தனர்.

அதிகம் செல்வானேன், வந்த முக்கியஸ்தர்கள் மராத்தைக் கடத்திச் சென்றுவிட்டார்கள், தூக்கிக் கொண்டு ஓடிவிட்டார்கள். அதே கருநிற ‘சாய்க்கா’ கார் அவனை ஏற்றிக் கொண்டு எங்கள் பள்ளியிலிருந்து வினுக்கவோ விமான நிலையத்துக்குப் பறந்தோடிற்று.

இதற்கு அடுத்த ஆண்டு வசந்தத்தில் அவன் ஒரு சர்வதேசப் பாட்டுப் போட்டியில் முதற் பரிசைத் தட்டிக் கொண்டான்.

* * *

கோஷா வியாசெம்ஸ்கியின் நண்பர்களைப் பிறகு சில நாட்களுக்கெல்லாம் அவனுடைய எண்ணற்ற கொண்டாட்டங்களில் ஒன்றில் நான் சந்தித்தேன்.

அவர்கள் நேசமிக்கக் குதூகலக் கோஷ்டியினராய் இருக்கக் கண்டேன். எல்லோரும் கோஷாவின் மாலைநேர வகுப்புகளைச் சேர்ந்தவர்கள், கணிதத்தில் தனி ஆர்வம் கொண்டவர்கள். ஏனையோருடன்கூட, முன்பு கோஷா என்னிடம் சொல்லியிருந்த பையனையும், தனது ''டான்ஜன்ட்'' பாட்டுக் குழுவினுள் இழுத்துக் கொள்ள விரும்பிய அந்தப் பையனையும் சந்தித்தேன். மெய்யாகவே இந்தப் பையன் பெரிய ஆள்தான், தானே பாட்டுகள் புனைந்து இசையமைத்து வந்தான். அன்று மாலை முழுதும் நாங்கள் கேட்ட பாட்டுகள் யாவுமே அவனுல் புனையப்பட்டவைதான். அவை நன்ருகவே இருந்தன. ஒரு பாட்டு ஓயாமல் எப்போதும் தண்டவாளத்திலே ஓடி அலுத்துப் போன டிராம் வண்டியைப் பற்றியது. எவ்வளவு காலத்துக்குதான் இப்படியும் அப்படியுமாய்த் தண்டவாளத்தில் ஓடுவது என்று ஒரு நாள் தடம் புரண்டு தோப்புகளில் புகுந்து அங்கே பசும் புல்வெளியில் ஆசை தீர ஓடிற்று. இன்னொரு பாட்டு கால்பந்தைப் பற்றியது. எல்லோரும் இரக்கமின்றி அதை உதைத்து வந்தார்கள், கோலி மட்டும்தான் அதன்மீது ஒட்டியிருந்த மண்ணையும் தூசியையும் பொருட்படுத்தாமல் அதை நெஞ்சோடு வைத்து அணைத்துக் கொண்டான். மற்ருெரு பாட்டு....

முக்கியமான விவரம் என்னவெனில் இவை யாவும் அந்த பையனுல் புனையப்பட்டவை: பாட்டு

எழுதி இசை அமைத்ததோடன்றி தானே அவற்றைப் பாடி, கிதாரில் சிறப்பாய்ப் பின்னிசையும் இசைத்தான்.

''கிதார் வாசிக்க நீ எங்கே கற்றுக் கொண்டாய்?'' என்று நான் அவனைக் கேட்டேன்.

''எங்குமல்ல, நாளுகவே கற்றுக் கொண்டேன்.''

''இசையமைக்கக் கற்றுக் கொண்டது எங்கே?''

''அதுவும் நாளுகவேதான் கற்றுக் கொண்டேன்.''

''பாட்டு எழுதக் கற்றுக்கொண்டது எப்படி?''

''அதுவும் நாளுகவேதான், எழுத மட்டுமின்றி பாடவுங்கூட நாளுகவேதான் கற்றுக் கொண்டேன்.''

தாம் எப்படிப்பட்ட பாக்கியசாலிகள் என்பதைச் சிலர் உணர்வதில்லை! எல்லாம் இவர்களுக்கு இயற்கையாகவே வந்துவிடுகிறது. வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் பலவற்றையும் தாமாகவே கற்றுக் கொண்டுவிடுகிருர்கள், திருத்தமாகவே கற்றுக் கொண்டுவிடுகிருர்கள்.

அந்தக் கொண்டாட்டத்தில் நான் ஒரு பெண்ணையும் சந்தித்தேன். செம்பட்டை முடிகளைச் சேர்த்துக் குதிரை வால் போல் தொங்கவிட்டிருந்தாள், அவளை கோஷா எனக்கு அறிமுகம் செய்துவைத்தான், பிறகு விருந்து மேஜையின் முன்னல் எங்கள் இருவரையும் அருகருகே உட்கார வைத்தான். கொண்டாட்டம் முடிவடைந்த பின் நான் நோவியே குஸ்மீன்கி வட்டாரத்திலிருந்த அவளுடைய வீடு வரை அவளுடன் சென்றிருந்தேன். வீட்டின் வாயில் முகப்பில் இருவரும் ஒரு மணி நேரம் அரட்டையடித்துக் கொண்டு நின்ருேம். மறுநாள் சந்திக்க வருமாறு அவள்

சொல்லியிருந்தாள், ஆனால் நான் போய்ச் சேர வில்லை. ஏன் போகவில்லை என்று எனக்கே புரிய வில்லை.

4

''ழேன்யா, ழேன்யா!''

என் பெயருடையானை வாலுப் பையன் உசச் சோவ்தான் மீண்டும் என் தோள்களைப் பிடித்துக் குலுக்கினான். முன்பு வாண்டுவாய் இருந்தவன் அதற்குள் ஐந்தாம் படிவ மாணவனாகிவிட்டான்.

''என்ன வேண்டும் உனக்கு?''

படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்த நான் பெருமுயற்சி செய்து புரண்டேன். தூங்குமுன் நான் படித்துக் கொண்டிருந்த புத்தகம் கீழே தரையில் தொப்பென விழுந்தது. அந்த விடுதி யில் மனிதனுக்கு நிம்மதி இல்லை, நிம்மதியாய்ப் படுத்து நாவல் படிக்க விடமாட்டார்கள்.

''எழுந்திரு, ழேன்யா....''

''ஊ-ஊம்?''

''உன்னைப் பார்க்க வேண்டுமாம், ஓராள் வெளியே காத்திருக்கிறார்.''

''என்ன?''

அவசரமாய் உடனே எழுந்துவிட்டேன். மேற் கொண்டு விவரங்களை விசாரிக்காமலே ஓடிப் படிக் கட்டில் வேகமாய் இறங்கினேன். ஓடும்போது தானா கவே பொத்தான்கள் யாவற்றையும் போட்டுக் கொண்டுவிட்ட என் கைகள் என்னை அறியாமலே கெட்டியாய் இறுகி மூடிக் கொண்டன.

எத்திப் பிழைத்து வந்த அந்தப் பழைய கில் லாடி திடுமென இங்கே வர முடிந்தது எப்படி? அந்த ஆளின் தில்லுமுல்லுகளை அம்பலம் செய்த

கட்டுரையை நான் செய்தியேடுகளில் படித்து அதிக காலமாகவில்லையே, பிற்பாடு இவருக்கு மூன்று ஆண்டுத் தண்டனை கிடைத்ததாய் அறிவிக்கப்பட்டிருந்ததே. மூன்று ஆண்டுகள் அதற்குள் முடிவடைந்தது எப்படி? எதாவது சூது இருக்குமோ என்று நினைத்தேன்.

ஆனால் வெளியே ஓடி வந்தபின் வாயிலுக்கு அருகே வேறு யாரோ ஓராள் நின்று கொண்டிருந்ததைக் கண்டேன். தொலைவிலிருந்தே அது தெரிந்தது. தோல் கோட்டும் வண்ணக் கட்டங்களிட்ட பளிச்சிடும் சட்டையும் அணிந்து தோளில் காமிராவை மாட்டிக் கொண்டு தலையில் குட்டைக் குல்லாவுடன் சூட்டிகையான ஆள் அங்கே நிற்கக் கண்டேன்.

''யாராய் இருக்கும்?'' என்று உற்றுப் பார்த்தபடி நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டேன்.

தோல் கோட்டு அணிந்த அந்த ஆள் அதற்குள் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். வாயின் இரு முனைகளும் காதுகளைத் தொடும்படி அந்தப் புன்னகை அகன்று விரிந்து, அந்த முகம் திடுமென மாறி உயரத்தைக் காட்டிலும் பன்மடங்கு அதிக அகலமுடையதாகியது போல் தெரிந்தது.

''கோ-ஓ-ல்யா!'' என்று கூவிக் கொண்டு அவனிடம் ஓடினேன்.

ஒருவரையொருவர் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்டோம். நாங்கள் ஒருவரையொருவர் பார்த்து எத்தனையோ யுகங்கள் கழிந்துவிட்டது போலிருந்தது.

எங்களுடைய கோல்யா பிர்யுக்கோவேதான், என் எதிரே நின்று கொண்டிருந்தான்.

''நீ ஏன் உள்ளே வராமல் வெளியே காத்துக் கொண்டிருந்தாய்?'' என்று கேட்டேன் நான். ''உள்ளே வருவதற்குப் பாதையை மறந்தா விட்டாய்? வா உள்ளே, பையன்கள் எப்படி ஆனந்தப்பட்டுக் கொள்வார்கள்....''

''வேண்டாம், நான் இப்பொழுது வர முடியாது'' என்று முகத்தைச் சுளித்துக் கொண்டான். ''எனக்கு நேரமில்லை, இரண்டு ரயில்களுக்கு இடையே கிடைத்த அவகாசத்தில் இங்கே ஓடி வந்திருக்கிறேன். உனக்கு இப்பொழுது வேலை ஒன்றும் இல்லையே?''

''எனக்கா? வேலை ஒன்றுமில்லை.''

''நல்லது, வா என்னுடன்.''

உடனே திரும்பிக் கையை உயர்த்திச் சற்றுத் தொலைவில் நின்ற சாம்பல் நிற 'வோல்கா' டாக்சியை வருமாறு அழைத்தான். உடனே அதன் இஞ்சின் உறுமத் தொடங்கிற்று, அங்கிருந்து புறப்பட்டு அது எங்கள் அருகே வந்து நின்றது.

''எங்கே போகிறோம்?'' என்று கேட்டேன்.

''கீவ் ரயில் நிலையத்துக்கு.''

''கீவ் ரயில் நிலையத்துக்கா?'' என்றேன் வியப்புற்ற நான். ''இதோ பக்கத்தில்தானே இருக்கிறது, நடந்தே போகலாமே.'' (உண்மையில் கூப்பிடு தொலைவில்தான் இருந்தது, எங்கும் எளிதில் போய்ச் சேரும்படி வசதியான இடத்தில் அல்லவா அமைந்திருந்தது எங்கள் விடுதி.)

''உள்ளே ஏறு'' என்று டாக்சியின் கதவைத் திறந்து கொண்டு என் தோளில் தட்டினுன் கோல்யா. ''எனக்கு இருப்பது சொற்ப நேரம்

தான், ரயில் புறப்படுமுன் இடை நேரத்தில் வந்திருக்கிறேன்'' என்ருன்.

இருவருமாய் டாக்சியில் சென்ரேம். அவன் எங்கே போகிருன் என்பதே நான் கேட்ட முதற் கேள்வி.

''துருஸ்கவேத்சுக்கு, அங்குள்ள ஒரு சானட்டேரியத்துக்குப் போகிறேன்.''

''ஏன், உடம்புக்கு என்ன?'' என்று அவன் பக்கம் திரும்பி அவனுடைய வயிற்றைப் பார்த்துக் கேட்டேன். வயிற்றுக் கோளாறுடையவர்கள் தான் சிகிச்சைக்காக துருஸ்கவேத்சுக்குப் போவார்கள் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். இந்த இளம் வயதில் கோல்யாவுக்கு வயிற்றுக் கோளாரு, என்ன?

''உடம்புக்கு ஒன்றுமில்லே.'' அவன் என் அச்சத்தை அகற்றிஞன். ''எங்கள் தொழிற் சங்கக் கமிட்டியிடம் உபரியாய் விடுமுறைச் சீட்டு ஒன்று இருந்தது, யாரும் அதை உபயோகிக்காவிடில் வீணுகிவிடும். எனது விடுமுறை நெருங்கி வந்ததால், அங்கேதான் போவோமே என்று நான் அதை வாங்கிக் கொண்டேன். பொழுதே போகாது, தொல்லே பிடித்த இடம் என்று சொல்கிருர்கள்.''

ஐந்து நிமிடத்திற்குள் கீவ் ரயில் நிலேத்தை அடைந்துவிட்டோம். டிரைவருக்குக் கோல்யா பணம் தந்தான். ஐம்பது கோப்பெக் இனுமும் சேர்த்துக் கொடுத்ததைக் கவனித்தேன். கையில் அரைக் காசு இல்லாத அந்தப் பழைய விடுதி மாணவனின் வாழ்க்கையிலிருந்து நெடுந் தூரம் முன்னேறிச் சேன்றுவிட்டான் என்பது தெரிந்தது.

தங்கும் அறையைக் கடந்து நாங்கள் சிற்றுண்டி

சாலைக்குச் சென்றோம். அங்கே கூட்டமும் சப்தமுமாய் இருந்தது, பரபரப்பான குரல்களின் பேச்சும் வெங்காய வாசனையும் நிறைந்திருந்தன. கஞ்சி போட்டு சலவை செய்யப்பட்ட வெள்ளை விரிப்பு இடப்பட்ட ஒரு சிறிய மேஜையின் பின்னால் இருவரும் அமர்ந்தோம். ஜாடியில் வசந்த மலர்கள்—டாபடில்கள் என்று நினைக்கிறேன்—இருந்தன.

''சரி, நீ எப்படி இருக்கிறாய்?'' என்று முழங்கைகளை மேஜையின்மீது ஊன்றிக் கைகளில் முகவாயை வைத்துக் கொண்டு என் பக்கம் சற்றே சாய்ந்தவாறு கேட்டான் கோல்யா.

''நன்றாய்த்தான் இருக்கிறேன்'' என்று நான் பதிலளித்தேன்.

''பள்ளிப் படிப்பு அனேகமாய் முடிவடையும் தறுவாயில் இருக்க வேண்டுமே?''

''ஆமாம், இதுதான் கடைசி ஆண்டு எனக்கு.''

''இது எப்படி இருக்கிறது?...'' என்று தோண்டையைத் தொட்டுக் காட்டிக் கேட்டான் கோல்யா. ''இன்னும் இருக்கிறதா?''

''இல்லை'' என்று தலையை அசைத்தேன். ''அது மறைந்து போய் எவ்வளவோ காலமாகிவிட்டது.''

''அப்படியானால், இதன்பின் என்ன செய்யப் போகிறாய் நீ?''

தோள்களை உலுக்கிக் கொண்டேன். என்னுடைய உத்தேசங்களை, இன்னும் சரிவர உருவாகாத எனது திட்டங்களை அவனிடம் நான் சொல்லியிருக்கலாம்தான்.... ஆனால் அவற்றைப் பற்றி பேச எனக்குச் சங்கடமாய் இருந்தது, இப்படிப்பட்ட அற்ப விவரங்களைப் பற்றி பேசி, இருக்கும் சொற்ப அவகாசத்தை வீணாக்க நான் துணிய

வில்லை. சற்று நேரமே இருந்தது, ரயில் புறப்பட்டு விடும் என்று கோல்யா கூறியிருந்தானே. அவனுடைய வாழ்க்கை பற்றி கேட்க வேண்டும், இத்தனை ஆண்டுகளில் அவனுக்கு என்னவெல்லாம் நேர்ந்தென விசாரிக்க வேண்டும், இது மிகவும் முக்கியமானதாய்த் தோன்றியது எனக்கு. எதிர்பாராத இந்தச் சந்திப்பால் உண்டான வியப்பிலிருந்து இன்னும் நான் விடுபட்டாகவில்லை. கோல்யா பிர்யுக்கோவ் நேரில் வந்து என் எதிரே உட்கார்ந்திருக்கிறான், கோல்யா பிர்யுக்கோவே தான், மேஜைமீது முழங்கைகளை வைத்து முகத்தைக் கைகளால் தாங்கிக் கொண்டு முகத்தின் முழு அகலத்துக்கும் விரிந்த புன்னகை புரிந்தவாறு அமர்ந்திருக்கிறான் என்று நம்புவது எனக்குக் கடினமாய் இருந்தது.

அந்த நேரத்தில் மேஜைப் பணியாளர் எங்களுக்கு என்ன வேண்டுமெனக் கேட்பதற்காக வந்து நிற்கவே எங்கள் உரையாடல் தடைப்பட்டது. கோல்யா உடனே உண்டி விவரக் குறிப்பை எடுத்துப் பார்த்துவிட்டு, ''உப்பிலிட்ட கெண்டை, போர்ஷ் சூப், கறிச்சோறு—எல்லாம் இரண்டு இரண்டு'' என்றான்.

பிறகு என்னைப் பார்த்து மீண்டும் தொண்டையைத் தொட்டுக் காட்டி, ''இதற்கு என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''என்ன?''—அவன் கேட்டதன் அர்த்தம் முதலில் எனக்குப் புரியவில்லை, மீண்டும் என் குரலைப் பற்றி கேட்கிறானா என்று நினைத்தேன். பிறகுதான் பானம் எதாவது வேண்டுமா என்று கேட்கிறானென்பது விளங்கிற்று.

''வேண்டாம்'' என்று கொஞ்சம் கூச்சப்பட்டுக் கொண்டு சொன்னேன்.

''வேண்டாமா? அப்படியானால் எனக்கும் வேண்டாம்'' என்று சொல்லி, கையில் பென்சிலும் காகிதமும் வைத்துக் கொண்டு நின்ற பணியாளர் பக்கம் திரும்பி ''பானம் வேண்டாம், ஒரு பாட்டில் லெமனேட் மட்டும் போதும்'' என்றான்.

பணியாளர் விலகிச் சென்றதும் ''உன்னைப் பற்றிய சேதிகளைச் சொல்லு, அதே இடத்தில்தான் இருந்து வருகிறாயா?'' என்று விசாரித்தேன்.

''ஆமாம், என் வாழ்க்கை நன்றாகவே அமைந்து விட்டது. நான்கு ஆண்டுகளாய் அங்கேதான் இருந்து வருகிறேன். வடக்கே வேலை செய்வதற்கான கூடுதல் உதவித் தொகையும் கிடைக்கிறது. உனக்குத் தெரியுமா, ழேன்யா, இப்பொழுது எங்கள் மென்முடிப் பண்ணையின் தொழிற் சங்கக் கமிட்டிக்கு நான்தான் தலைவன்.''

''சும்மா சொல்கிறாய்!'' என்றேன் நான். அவன் சொன்னதை என்னால் நம்ப முடியவில்லை.

''இல்லை, மெய்யாகவேதான் சொல்கிறேன், என்னைத் தலைவனாய்த் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.''

ஆச்சரியம் தாங்க மாட்டாமல் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன், கோல்யா தொழிற் சங்கக் கமிட்டி தலைவனாக முடியுமென்று நம்புவது கடினமாயிருந்தது. இளைஞர்களுக்கு இவ்வளவு பொறுப்புள்ள பதவி தருவார்களா என்று எனக்கு வியப்பாயிருந்தது. கோல்யாவை இப்பொழுது மெய்யாகவே நிக்கலாய் இவானவிச்சாய் அல்லவா கருத வேண்டியிருந்தது.

போர்ஷ் சூப் வந்து சேர்ந்தது, சிவப்பாய்க்

கொதித்துக் கொண்டு வாசனை பிரமாதமாய் மூக்கில் ஏறிற்று. சாதாரணமான சூப்பல்ல, அரசனின் விருந்துக்கு ஏற்றதாய்த் தோன்றியது!

''உன்னுடைய நாய் எப்படி இருக்கிறது?'' என்று அடுத்தபடியாய்க் கேட்டேன்.

''போன்தானே?'' என்று கோல்யா தனது கைப்பையை எடுத்தான். அதனுள்ளிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து என்னிடம் தந்தான். படத்தில் குறும்புக்கார நாய் ஒன்று நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு என்னைப் பார்த்தது. கறுப்பு வண்ணத் திட்டுகளைக் கொண்ட வெள்ளை நாய், பரட்டையாய் இருந்தது, ஏனோ தெரியவில்லை, பார்ப்பதற்குச் சற்று கோல்யாவைப் போன்றதாய்த் தோன்றியது! முதல் தரமான நாய்.

''நான் எடுத்த புகைப்படம்'' என்று தனது காமிராவின் தோல் உறையைத் தட்டிக் காட்டிக் கூறினன் கோல்யா. பிறகு இன்னொரு புகைப் படத்தைப் பையிலிருந்து வெளியே எடுத்து என்னிடம் தந்து ''இதோ இன்னொன்று, இதுவும் நான் எடுத்ததுதான்'' என்ருன்.

இந்த இரண்டாவது படத்தில் நான் இதன்முன் பார்த்திராத ஒரு பெண்ணைக் கண்டேன். வாதுமை வடிவிலான கண்களும் உயரமான கன்னத்து எலும்புகளும் கொண்ட அவள் முகத்தில் அகன்ற புன்னகை பூத்திருந்தது, அவளுங்கூட கொஞ்சம் கோல்யாவைப் போன்றவளாகவே தோன்றினுள்.

''யார் இது?'' என்று கேட்டேன்.

''லியூபா, என் மனைவி'' என்பதாய்ப் பதில் கிடைத்தது.

ஒவ்வொரு நிமிடமும் முன்னிலும் பெரிய, புதிய

வியப்பாய் இருந்தது எனக்கு. தொழிற் சங்கக் கமிட்டித் தலைவன், லியூபா—என் மனைவி... இனி அடுத்தபடி என்ன?

''ஏன் உன் மனைவி உன்னுடன் துருஸ்கவேத்சுக்கு வரவில்லை?''

''இப்பொழுது அவள் பயணம் செய்யக் கூடாது'' என்றான் கோல்யா. ''ஏனென்றால்... மகன் அல்லது மகளை எதிர்பார்க்கிறோம்.''

இந்தத் தகவல் கோல்யாவையுங்கூட கொஞ்சம் கலக்கமடையச் செய்வதாய் இருந்தது. அவனுடைய மிகப் பெரிய காதுகளின் உச்சிகள் செக்கச் சிவந்துவிட்டன. உவகையும் பெருமிதமுமே அன்றி அவ்வளவாய்க் கூச்சமல்ல காரணம் என்பதாய் நினைத்தேன்.

ஆம், சந்தேகமில்லை, என் எதிரே இருந்தவன் மெய்யாகவே இன்பத்தில் திளைத்திருந்தான், என்னிடம் அவன் கூறியவை யாவற்றிலுமிருந்து வயது வந்த முழு ஆளாய்த் தோன்றினான். ஆயினும் இன்னும் முற்றிலும் முழு ஆளாகவில்லை என்பதும் தெரிந்தது, ஏனெனில் அவன் காதுகளின் உச்சிகளால் செக்கச் சிவந்து போக முடிந்தது. ஆனால் எப்படியும் தன் வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொண்டுவிட்டவன், தனக்கு வேண்டியதையும் தான் போகும் இடத்தையும் அறிந்தவன் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாகவே தெரிந்தது.

என் நிலைமை என்ன?.... என் எண்ணங்கள், கனவுகள், வருங் காலத்துக்கான திட்டங்கள் இவை யாவும் குறித்து எனது நெடுநாளைய நண்பனிடம் சொல்வோமா? சொல்ல வேண்டுமென்றே விரும்பினேன், ஏனெனில் என் மனத்துள்

இருப்பதை அவன் ஒருவனைத் தவிர வேறு யாரிடமும் நான் சொல்வதற்கில்லை. இசையில்லாமல் என் வாழ்க்கையை நான் நினைத்தே பார்க்க முடியவில்லை என்பதை அவனிடம் விளக்கிச் சொல்ல விரும்பினேன். பெத்ஹோவினை எடுத்துக் கொள்ளேன்—காது செவிடான பிறகும் அவரால் இசை இல்லாமல் வாழ முடியவில்லை. அல்லது ''இடக்கை இசைப் பிரெலுதியா''வைப் புனைந்த ஸ்கிரியாபினை எடுத்துக் கொள்—இரு கைகளும் சுவாதீனமற்றுப் போயிருந்தாலுங்கூட அவர் பியானேவை இசைக்க எதாவது ஒரு வழி கண்டு பிடித்திருப்பாரே, பியானேவும் அவரைக் கைவிட்டிருக்காதே!

இதை நான் திட்டவட்டமாய்ச் சொல்வேன், தொடக்கத்திலிருந்தே யாவற்றையும் நான் ஆரம்பிக்க நேர்வதாயினும், நூறு ஆண்டுகளுக்குப் பின்னுல் செல்ல நேர்வதாயினும், ஏங்கோ மூலையில் உறங்கிய அந்தச் சிரிய லீபெத்ஸ்க் நகரிலிருந்து புறப்பட்டு மாஸ்கோ சென்று ஆரம்பத்தில் அதிமதுரமான குரலுடையவனுய் ஆனந்தமடைவேன், பிறகு அதை இழந்து துயருறுவேன் என்பதெல்லாம் முன்கூட்டியே தெரிந்திருப்பினுங்கூட, என் விருப்பம் போல் முடிவு செய்து கொள்ளக் கூடியவனுய் இருக்கும் வரை நிச்சயம் இதே பாதையில்தான் புறப்பட்டுச் சென்றிருப்பேன், வேறு எதிலும் அல்ல என்பதைத் திட்டவட்டமாய்ச் சொல்வேன்.

பள்ளியில் படிப்பு முடிந்ததும் தொடர்ந்து இசைத் துறையிலேதான் ஈடுபடுவதென்று ஏற்கனவே நான் உறுதி செய்து கொண்டுவிட்டேன். வருங்காலம் குறித்து என்னிடமும் ஆர்வமிக்க

எண்ணங்கள் இருந்தன, என் மனத்துள் திட்டங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. இவையெல்லாம் குறித்து கோல்யா பிர்யுக்கோவிடம் சொல்ல வேண்டுமென்று பெரிதும் விரும்பினேன்.

ஆயினும் இவற்றை அவனிடம் சொல்ல எனக்குத் துணிவு வரவில்லை. ஏமாற்றமடைந்து துன்புற்றவர்கள் தமக்கு ஏமாற்றமாய் முடிந்தவை குறித்து சில சமயம் மிகுந்த கசப்புணர்ச்சி காட்டுவார்கள், தமக்குச் சரிப்பட்டு வராத ஒரு துறை குறித்து இழித்துப் பழித்து கூறுவதையன்றி வேறு எவ்வகையிலும் இவர்கள் பேச விரும்ப மாட்டார்கள்—கோல்யா பிர்யுக்கோவும் இம்மாதிரி செய்வானே என்று நான் அஞ்சினேன். இதனால்தான் முடிவில் நான் எனது திட்டங்களை அவனிடம் சொல்ல வேண்டாமென்று தீர்மானித்துக் கொண்டேன்.

இதற்குள் அடுத்த உண்டிகளும் வந்து சேர்ந்தன. கறிச்சோறும் அதனுடன் வதக்கிய உருளைக் கிழங்கும் ஊறிய வெள்ளரி வில்லைகளும் அடங்கிய தட்டுகள் எங்கள் முன்னால் இருந்தன. கீவ் ரயில் நிலையச் சிற்றுண்டிசாலையில் மெய்யாகவே சுவையான உணவு அளித்தனர், சந்தேகமில்லை!

''சரி, விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் எப்படி இருக்கிறார்?'' என்று கேட்டான் கோல்யா.

இந்தக் கேள்வியைக் கேட்டபோது கோல்யாவின் குரல் தொனித்த விதத்தை நான் கூர்மையாய்க் கவனித்தேன், அதோடு என் காது கூறியதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு நிமிர்ந்து அவன் முகத்தையும் உற்று நோக்கினேன். அவன் குரலில் கசப்போ காழ்ப்போ தொனித்ததா என்று கவனித்தேன். அப்படி எதுவும் தொனிக்க

வில்லை, மெய்யான ஆவலும் அக்கறையும் தான் அந்தக் கேள்வியில் தொனிக்கக் கண்டேன்.

''நன்ருய் இருக்கிருர்'' என்றேன். ''ஓயாமல் வேலை செய்கிருர். ஆயினும் இடையில் சில சமயம் உடம்பு சரியாயிருப்பதில்லை, கல்லீரலில் ஏதோ உபத்திரவம்.''

''கல்லீரலிலா?'' என்று பலக்கக் கூவினன் கோல்யா. ''கல்லீரல் கோளாறுள்ளவர்கள்தான் துருஸ்கவேத்சுக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டும். அங்குள்ள சானட்டோரியங்களில் ஒன்றுக்கு அவர் செல்வது அவசியமாகும். ஆனல் இவற்றுக்கான சீட்டுகளை வேண்டாத எங்களுக்கு அனுப்பி வைத்துவிடுகிருர்கள், என்ன செய்வது? அங்கே எனக்குப் பொழுது போகாது, தொல்லைப் படுவேன் என்பது தெரிந்த போதிலும் வேறு வழியின்றி நான் போக வேண்டியிருக்கிறது.''

''நீ திரும்பி வருகையில் பள்ளிக்கு வந்து அவரைப் பார்த்துவிட்டு போயேன்'' என்று ஆலோசனை கூறினேன். ''விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச்சை நிச்சயம் நீ பார்க்க வேண்டும். அவர் எப்படிப் பட்டவர் என்பது உனக்குத் தெரியும், நீ அப்படி மனம் ஒடிந்து போய் மாயமாய் மறைந்து போனது பற்றி நினைத்து இன்றும் அவர் வேதனைப்படுகிருர்.''

முதல்வரின் நறை முடிகளை அதிகமாக்கிய வேறு சில அடாத செயல்கள் குறித்து விவரிக்காமல் இருப்பதே மேலெனக் கருதி நான் அதோடு நிறுத்திக் கொண்டேன்.

''ஆம்... பள்ளிக்குச் சென்று நான் அவரைப் பார்க்க வேண்டும்தான்'' என்று இரண்டொரு கணம் இதைப் பற்றி சிந்தித்தபின் சொன்ஞன்

கோல்யா. ''திரும்பி வரும்போதுதான் சாத்தியம். திரும்பி வரும்போது நான் பலவும் செய்தாக வேண்டும்.... சரி, ழேன்யா'' என்று திடுமெனக் காரிய முனைப்புள்ள குரலில் விசாரித்தான்: ''மாஸ்கோவில் பியானோ நிலைமை எப்படி இருக்கிறதெனத் தெரியுமா, உனக்கு?''

''பியானோ நிலைமையா?''

''என்ன கேட்கிறேன் என்றால், நேரே கடைக்குப் போய் வாங்கி வந்துவிட முடியுமா, அல்லது பெயரைப் பதிவு செய்து கொண்டு காத்திருந்து பிற்பாடுதான் வாங்க வேண்டுமா?''

''எனக்குத் தெரியாதே, எனக்குச் சம்பந்தமில்லாத விஷயமாயிற்றே'' என்றேன். ''ஆனால் நீ ஏன் இதைக் கேட்கிறாய்?''

''வாங்க விரும்புகிறேன்.''

''உனக்கு ஏன் பியானோ?''

''எனக்கு இல்லை'' என்றான் கோல்யா, அவனுடைய காதுகளின் உச்சி மீண்டும் சிவந்துவிட்டன. ''எனக்கு இல்லை, எங்களுக்குப் பிறக்கப் போகும் மகன் அல்லது மகளுக்காக...''

''ஓ, அப்படியா?''

''நாங்கள் வசிக்கும் இடத்தில் இசைப் பள்ளி எதுவும் இதுவரை இல்லை. ஆனால் எங்கள் மகன் அல்லது மகளுக்கு நானே கற்றுத் தருவேன். ஆரம்ப காலத்துக்கு நானே போதும், எதையும் நான் மறந்துவிடவில்லை.'' பிறகு என் பக்கம் சாய்ந்து ஊடுருவும் பார்வையால் என்னை உற்று நோக்கியவாறு, ''எதையுமே நான் மறந்துவிடவில்லை'' என்று மீண்டும் கூறினான்.

அந்த நேரத்தில், லிவோவ் செல்லும் பயணிகள் உடனே பிளாட்பாரத்துக்கு வர வேண்டு

மென்று சிற்றுண்டிசாலை ஒலிபெருக்கியில் ஒரு குரல் அறிவித்தது. கோல்யா செல்ல வேண்டிய ரயில் அதுதான். அவசரமாய் லெமனேடைக் குடித்துவிட்டு நாங்கள் பிளாட்பாரத்துக்குப் புறப்பட்டோம்.

## 5

நேரே நான் கண் கொண்டு பார்த்தது போல அவ்வளவு தெளிவாய் என் கற்பனையில் தெரிந்தது அந்த காட்சி. பழிபாவமறியாத சிறுவர்களும் சிறுமிகளும் கொலைக்கூடத்துக்கு, விஷவாயுச் சாக்கூடத்துக்கு, திரெப்லீன்காவிலிருந்த அந்தப் பயங்கரச் சுடுகாட்டு உலைக்களத்துக்கு இட்டுச் செல்லப்பட்ட காட்சி என் மனக் கண்முன் தெரிந்தது. புகைக்கூண்டுகளிலிருந்து கொடூரமான கரும் புகைத் திரள் உயர்ந்தெழுவது தெரிந்தது.

சாக்கூடத்தை நோக்கி நடந்த அந்த அபலைக் குழந்தைகளது வரிசையின் இரு புறத்திலும், தோள்களில் துப்பாக்கிகளை மாட்டிக் கொண்டு தலையில் கவசத்தொப்பியும் கால்களில் சேறு படிந்த பூட்சுகளும் அணிந்த எஸ். எஸ். படையாட்கள் எமதூதர்கள் போல் செல்வதைக் கண்ணுற்றேன். இந்த வரிசையின் முன்னால் யானுஷ் கொர்சாக் செல்லக் கண்டேன். இந்தக் குழந்தைகளின் ஆசிரியரும் தோழருமான அவர் இவர்களுடைய இறுதி யாத்திரையிலும் கூடச் சேர்ந்து சென்றார். குழந்தைகளுக்கு எதிரே அடர்ந்த கரும் புகைத் திரள் மூண்டெழுந்தது. ஏற்கனவே இந்தக் குழந்தைகள் யாவற்றையும் புரிந்து கொண்டுவிட்டனர். இனி ஒரு சில நிமிடங்களில்

இவ்வுலகில் தமக்கு வாழ்வு முடிவுறப் போகிறது, அந்தக் கரும் புகையாய்த் தாம் எரிந்தொழியப் போகிருேம் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டனர்.

தெய்வமே, நான் ஏன் இப்படிக் காலங் கடந்து பிறந்தேன்? இருபது ஆண்டுகளுக்கு முன்னதாய்ப் பிறந்திருந்தால் கடந்த யுத்தத்தில் நான் பங்கு கொண்டிருக்கலாமே. உயிரிழந்த ஒரு நாஜிகூட என் கணக்கில் பற்றெழுதப்படவில்லையே, என் தந்தை வீழ்த்தியோரை அன்றி நான் நேரில் ஒன்றும் செய்ய முடியாமற் போயிற்றே!

ஆனுல் இனி இதை எண்ணி வருந்திப் பயன் ஏதுமில்லை.

என் மனதில் இந்த எண்ணங்கள் எழுந்து என்னை வருத்தக் காரணம் என்னவெனில், அப்பொழுது நான் ஓர் இசை நாடகம், குழந்தைகளது இசை நாடகம் எழுதுவதென முடிவு செய்திருந்தேன். விரைவில் நான் பள்ளிப் படிப்பு முடிந்து வெளியேறிவிடுவேன், என் வாழ்வில் பத்து ஆண்டுகளாய் நான் கழித்து வந்த கட்டடத்தை விட்டுப் பிரிந்துவிடுவேன் என்னும் எண்ணம் என் மனத்துள் இருந்து கொண்டு உறுத்திற்று. என் நினைவாய் எதையாவது விட்டு வைத்துச் செல்ல விரும்பினேன்; எனக்குப் பிற்பாடு இங்கு தொடர்ந்து பயிலப் போகும் சிறு பையன்களுக்கு ஏதேனும் விட்டு வைத்துச் செல்ல விரும்பினேன்.

தக்க கதைப் பொருள் வேண்டுமென நினைத்துக் கொண்டிருக்கையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மூன்ரும் படிவத்தின் முன்னணி இளைஞர் பிரிவுக்கு நான் பொறுப்பாளனுய் இருந்தபோது நடைபெற்றது என் நினைவுக்கு வந்தது. ஒரு நாள்

புரொத்வா ஆற்றங்கரையில் அமர்ந்து நாங்கள் வெயிலில் காய்ந்து கொண்டிருந்த போது கொர்சாக்கின் ''மன்னன் மாத்யூ''வைப் படித்துக் காட்டினேன். மன்னவனுகிய சிறு பையன் மாத்யூ, அவன் நண்பன் பெலெக், நீக்ரோச் சிறுமி குளூ-குளூ ஆகியோரைப் பற்றி அவர்களுக்கு நான் படித்துக் கூறிக் கொண்டிருந்தேன்.

அது அற்புதமான புத்தகம், சிறுவர்கள் எல்லோரும் மந்திரத்தால் மயக்குண்டோர் போல் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மாத்யூவை நகரக்குள் பின்தொடர்ந்து சென்று, அங்கே சதுக்கத்தில் ஒரு குழியின் ஓரத்தில் கம்பத்திலே அவன் கட்டப்படுவதையும் படையாட்கள் துப்பாக்கிகளில் குண்டுகளை வைத்துச் சுடுவதற்குத் தயார் செய்வதையும் பையன்கள் ஆத்திரமும் அச்சமும் கலந்த பார்வையொடு வாயைச் சற்று திறந்து கொண்டு கேட்டுக் கொண்டிருந்தனர். மாத்யூவின் மரண தண்டனை தீவாந்தர சிட்சையாய் மாற்றப்படுவதாய் அறிக்கப்படுவதைக் கேட்டதும் எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

புத்தகத்தை மூடியதும் நான் அந்தச் சிறு பையன்களை உற்று நோக்கினேன். குட்டை நிஜாரைத் தவிர வேறு உடுப்பு எதுவுமின்றி வெயிலில் மேனி பழுத்து உடம்பெல்லாம் மணல் ஒட்டியிருக்க ஆற்றங்கரையில் அமர்ந்திருந்த இந்த மூன்றும் படிவப் பையன்களை ஒத்த குழந்தைகளை அல்லவா நாஜிகள், ஆயுதமேந்திய படையாட்கள் காவல் புரிந்து இரு புறமும் வர விஷவாயுக் கொலைக் கூடத்துக்கு இட்டுச் சென்றார்கள், அந்தப் பயங்கரக் கரும்புகைத் திரளை நோக்கி அழைத்துச் சென்றார்கள் என்று திடுமென நான் நினைக்கவே

உடனே மயிர்க்கூச்செரிந்து துணுக்குற்றுவிட்டேன்....

அந்த நினைப்பு என்னை அடியோடு நிலைகுலையச் செய்துவிட்டது. யானுஷ் கொர்சக்குக்கும் அவர் பொறுப்பிலிருந்த குழந்தைகளுக்கும் நேர்ந்த கதியை அதன்பின் என்னால் அந்தச் சிறுவர்களுக்குச் சொல்ல முடியவில்லை. ஆயினும் அவர்களுக்கு இதை நான் சொல்லியிருக்க வேண்டும், தவறாமல் முழுக் கதையையும் சொல்லியிருக்க வேண்டும்.

ஆகவே ''மன்னன் மாத்யூ'' என்றொரு இசை நாடகம் எழுதுவதென இப்பொழுது நான் முடிவு செய்தேன். அது நேரடியான சாதாரண நாடகமாய் இராது, வேறு பொருத்தமான அடைமொழி இல்லாததால் ''இரட்டை'' நாடகமாய் இருக்கும் எனலாம். புத்தகத்திலுள்ள கற்பனைக் கதை நிகழ்ச்சிகளை எடுத்தாண்டு, இவற்றுடன் கூடவே, இவற்றுக்கு இணைவாய், அல்லது முறைப்படிச் சொல்வதெனில் இணைசுரமாய், திரேப்லின்காவில் உண்மையில் நடைபெற்ற அந்த பயங்கரத்தையும் சித்தரிப்பதெனத் திட்டமிட்டுக் கொண்டேன். அப்படிதான் இதை அமைத்திட வேண்டும்; இந்தக் கதைப் பொருளை இவ்வாறுதான் அணுக வேண்டும்; இதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால் இங்கு எழுந்த சிக்கல் என்னவெனில் கதை கவிதை நடையில் இல்லை, யானுஷ் கார்சாக்கின் புத்தகம் வசன நடையில் அமைந்தது. இசை நாடகத்துக்குக் கதையைக் கவிதை வடிவத்தில் எழுதியாக வேண்டும். இதைச் செய்யக் கூடியவர் யார்? சுட்டுப் போட்டாலும் எனக்குக் கவிதை

எழுத வராது; நான் அறிந்தவரை, கவிதை எழு தக்கூடியவர் எங்கள் பள்ளியில் யாருமில்லை. ஆனால் இதைப் பிறபாடு பார்த்துக் கொள்ள லாம், தற்போது இதற்கு வேண்டிய இசையில் கவனம் செலுத்தலாம் என்று முடிவு செய்து கொண்டேன். வாசகம் இல்லாமலே பாட்டுக் குழு வுக்கான இரு கீதங்களுக்கு இசை புனைந்தேன். முதலாவது கீதம் பீடிகை இசைக்குப் பதிலாய் அமையும் ஆனந்தக் களிப்பு அறிமுகமாகும், இரண்டாவது கீதம் அந்தக் குழந்தைத் தியாகி களைப் போற்றும் நினைவாஞ்சலியாகும். இரு குழுக் கீதங்கள் குழந்தைகளின் குரல்களுக்காக அமைந்தவை. இந்த இசை நாடகத்தை நான் முடித்தேனெனில் (முடிப்பதென உறுதி பூண் டிருந்தேன்) இந்தக் கீதங்களை எங்கள் பள்ளியின் பையன்கள் பாடுவதைக் கேட்கும் எவரும் நிச்சயம் பரவசமடைந்தே ஆக வேண்டும்.

அந்தி வேளையில் நான் இவற்றுக்கான இசையை அமைத்துக் கொண்டிருப்பது வழக்கம். பள்ளியில் இசைக் கருவிகளுக்குப் போதிய இடம் இல்லை. எங்களிடம் நிறைய இசைக் கருவிகள் இருந்தன என்றாலும், அவற்றை வைப்பதற்கு இடம் போதவில்லை. வகுப்பறைகளிலும் நடைகளிலும் வாத் தியங்கள் அடைசலாய் வைக்கப்பட்டிருந்தன. ஒரே நடையில் இரு எதிர் மூலைகளில் இரண்டு பியானோக்கள் வைக்கப்பட்டிருந்தன. சில சமயம் ஒரே நேரத்தில் இரண்டும் வாசிக்கப்படும். பள்ளி யில் அத்தனை பையன்கள் இருந்தனர், எல் லோரும் பயிற்சி செய்தாக வேண்டியிருந்தது. சில நேரம் ஒரு மூலையில் சுர வரிசையை ஒருவன் திருப்பித் திருப்பி வாசிப்பான், அதேபோது

எதிர் மூலையில் இன்னொருவன் மொசார்ட்டின் சொனாட்டாவை வாசிப்பான். ஒருவன் வாசிப்பதை இன்னொருவன் கேட்க முயலாமல் வாசிக்க வேண்டுமென்றுதான் இருவரும் முயற்சி செய்வார்கள், ஆனால் அது எப்படி சாத்தியம்? இசைக்குப் பதிலாய் குழப்பமும் கூத்துமாகிவிடும். இடப்பற்றாக்குறையே யாவற்றுக்கும் காரணம்.

எனவேதான் அந்திப் பொழுது வரை நான் காத்திருப்பது வழக்கம். எல்லோரும் வேண்டிய மட்டும் வாசித்துக் களைத்துப் போய்ப் படுக்கச் சென்றுவிடுவார்கள். அதன் பிறகு நான் வேலையைத் தொடங்குவேன். இசைக் கோடுகளிட்ட நோட்டுப்புத்தகத்தையும் பென்சில்களையும் பலகை மீது வைத்துக் கொண்டு பியானோவின் முன்னால் உட்காருவேன். பிறகு வாசிக்கத் தொடங்கி அவ்வப்பொழுது குறித்துக் கொள்வேன்.

எனது இசை முயற்சி ஓயாத தேடலாகிவிடும். சில சமயம் நெடு நேரத்துக்கு இழுத்தடித்துச் செல்லும். ஆனால் எனக்கு வேண்டியதை முடிவில் தேடிப் பிடித்து என் முன்னால் இருந்த காலி வரிச் சட்டங்களில் குறித்துக் கொள்வேன். அந்தப் பழைய கட்டடத்தில் அந்நேரத்தில் அசாதாரண அமைதி குடிகொண்டிருக்கும். வெளியே வெண்பனி விழும் குளிர் கால இரவு யாவற்றையும் பியானோக் கட்டைகளைப் போல் கறுப்பும் வெள்ளையுமாய் எடுப்பாய்த் தெரியச் செய்துவிடும்.

ஓரிரவு நடையில் காலடிச் சப்தம் கேட்கவே, இந்த அகால நேரத்தில் இங்கே வருவது யாராயிருக்கும் என்று வியந்தேன். என்னைத் தவிர இந்நேரத்தில் இங்கே வரக் கூடியவர் யார்? பலீனா ரொமானவ்னாவாய் இருக்குமோ? மாடிக்கு ஏறி

வர மாட்டாரே அவர், தவிரவும் காலடிச் சப்தம் அவருடையதைப் போல இருக்கவில்லையே. கத வருகே வந்ததும் சப்தம் நின்றுவிட்டது, பிறகு கதவு சிறிதளவு திறக்கப்பட்டது. உடனே நான் எழுந்துவிட்டேன்.

''உட்காரு, உட்காரு நீ. நள்ளிரவில் வேலை செய்கிறாயா? நீயாய்த்தான் இருக்குமென நினைத் தேன்.''

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் கனத்த குளிர் காலக் கோட்டும் வெல்வெட் தொப்பியும் அணிந்து கையில் கணுக் கம்பு வைத்திருந்தார். இவ்வளவு நேரம் வேலை செய்துவிட்டு அறையிலிருந்து வரு கிறாரா, என்ன? இருக்காது, எதையோ மறந்து விட்டுப் போய் திரும்பி வந்தவராகவே இருக்கும். அடிக்கடி இப்படிச் செய்பவர்தான் அவர். அல்லது காற்றாட சற்று நடக்கச் சென்றவர் சன்னலில் விளக்கொளியைக் கண்டதும் யாவும் சரியாய் இருக்கின்றனவா என்று பார்ப்பதற்காக வந்த வராகவும் இருக்கலாம்.

பெரிய பியானோவின் பக்கத்தில் நாற்காலியில் உட்கார்ந்து தலையிலிருந்து தொப்பியை எடுத்து வைத்துவிட்டுக் காலர் பொத்தானை அவிழ்த்து விட்டுக் கொண்டார்.

''சரி, காட்டு பார்ப்போம்'' என்றார்.

உடனே ஒரு பக்கத்தை எடுத்து அவரிடம் தந்தேன். இசை புனைய முயலுகிறேன் என்று அவருக்குத் தெரியும், என்னுடைய இசை நாடகம் குறித்தும் தெரிந்தே வைத்திருந்தார். பள்ளிக்கூடப் பையன்களாகிய எங்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியவை யாவும், எங்க

ளுடைய சிறு இரகசியங்கள் யாவும் அவருக்குத் தெரியும்.

''பாட்டுக் குழுக் கீதம் இல்லையா இது?'' என்று அந்த இசை ஏட்டின்மீது இடமிருந்து வலமும் அதே போது மேலிருந்து கீழும் கண்ணை ஓட்டிய வாறு என்னைக் கேட்டார். ''இம்-ம்-ம்....'' உச்சப் பகுதியையும் பிறகு நான்காம் பகுதியையும் வாய்க்குள் இசைக்க முற்பட்டார். ஆறு பகுதி களிலான குழு இசை அது.

''இம்-ம்-ம்.''

''நன்ருய் இல்லையா?'' சுற்றி வளைக்காமல் கேட்டேன் நான்.

''அப்படி ஏன் நினைக்கிருய் நீ? நன்ருகத்தான் இருக்கிறது. சுவையான பலவும் இதில் இருக் கின்றன.''

தன் எதிரே இருந்த ஏட்டை மீண்டும் அவர் பரிசீலிக்கத் தொடங்கினர். பிறகு என்னிடம் சொன்னர்:

''ஆனல் ஒன்று: இங்கே யாவும் இரண்டாய்ப் பிரிந்து செல்வதாய்த் தோன்றுகிறது பார்; இதோ இருக்கிறது வலக் கைக்குரியது, இதோ இருக்கிறது இடக் கைக்குரியது, பியானேவின் முன்னல் அமர்ந்து வேலை செய்திருக்கிருய் என்று உடனே தெரிகிறது. ஆனல் குழு இசை முற்றிலும் வேறு விதமானது. இதை நீ வேறு வழியில் அமைத் தாக வேண்டும், நீ பாட்டுக் குழுவில் பாடியவன் ஆயிற்றே.''

ஆம், நான் பாட்டுக் குழுவில் பாடியவன்தான், ஏனையோர் இல்லாமல் தனியாகவும் பாடியவன் தான். ஆனல் அதெல்லாம் நெடுநாட்களுக்கு முன்பு, பழங் காலத்தில். தரையைப் பார்த்த

வாறு நான் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

''ஆனல் இது ஒரு பெரிய குறைபாடல்ல, நீ சோர்வடைய காரணமே இல்லை'' என்று சிரித்துக் கொண்டே கூறினர் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச். ''இப்படிப்பட்ட அசட்டுப் பிழையைச் செய்தது நீ மட்டுமல்ல. ஸ்கிரியாபினுடைய முதல் சிம்பொனியை எடுத்துக் கொண்டால், அதன் குழுப் பாட்டு சரியானபடி அமையவில்லை. எப்படியோ அதைப் பாடிச் செல்கிறார்கள், ஆனல் அது குழு இசையல்ல.''

மீண்டும் நான் தலையைக் கவிழ்த்துக் கொண்டேன். இம்மாதிரி அபாண்டமான பேச்சை, ஸ்கிரியாபினைப் பற்றி குறை சொல்லிப் பேசுவதை என்னல் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை.

''அவருடைய 'புரோமெத்தியஸ்' இருக்கிறதே, அது முற்றிலும் வேறு விவகாரம். அதில் குழுப் பாட்டு அதியற்புதமாய் அமைந்திருக்கிறது'' என்று கிழவர் என் மீதும் ஸ்கிரியாபின் மீதும் இரக்கங் கொண்டவராய் மேலும் கூறிச் சென்றார். ''ழேன்யா, உனக்குத் தெரிந்திருக்கும், நான் ஸ்கிரியாபினை நேரில் பார்த்தவன், அவர் வாசித்ததை நேரில் கேட்டவன். ஆம், 1911ல் 'புரோமெத்தியஸ்' அரங்கேற்றப்பட்டபோது நடந்தது இது. குசெவீத்ஸ்கி இயக்குநராய் இருக்க, ஸ்கிரியாபின் பியானோ வாசித்தார். உருவத்தில் மிகச் சிறியவராய்த் தோன்றினர், எப்படியும் நான் வானுச்சியில் அமர்ந்திருந்த அந்த மூலையிலிருந்து பார்க்கையில்—நான் இசைக் கல்லூரி மாணவனய் இருந்த காலம்—அப்படிதான் தோன்றினர். ஆனல், ழேன்யா, எப்படி வாசித்தார் என்கிருய்!

அவருடைய வாசிப்பில் உண்மையில் அவ்வளவு பிரமாதமான சக்தி இருந்ததாய்ச் சொல்வதற் கில்லை, உதாரணமாய் ரஹ்மானினவின் வாசிப் பில் காணக்கூடிய அந்த சக்தி இருக்கவில்லைதான். ஆனால் உணர்ச்சித் துடிப்புள்ள பகுதிகளை அவர் வாசித்த முறை இருக்கிறதே, அது எவரையும் அப்படி கரைந்துருகச் செய்வதாய் இருந்தது.''

என் பக்கம் குனிந்து கொண்டு அவர் பேசினார். அவருடைய கண்களில் வலைப்பின்னல் போலிருந்து மெல்லிய சென்னிற நாளங்களை நான் தெளி வாய்க் காண முடிந்தது, அவர் பழைய நினைவு களைக் கூறியபோது இந்த வலைப்பின்னல் இன்னும் அடர்த்தியாகிச் சென்றதாய் எனக்குத் தோன்றி யது.

ஸ்கிரியாபினது வாசிப்பை இவர் நேரில் கேட்டவர் என்று நினைத்து போது எனக்குப் பிரமிப் பாகவே இருந்தது. இவ்வளவு வயதானவராய் இருப்பாரென நான் எண்ணியதே இல்லை.

பிறகு என் பக்கம் திரும்பி பியானோவுக்காக நான் புனைந்த புதிய இசை எதாவது இருக்கிறதா என்று கேட்டார். ''எடு உன்னுடைய இசைப் படையலை, பார்ப்போம்.''

எனது இசையேட்டுக் கோப்பு அட்டையைத் திறந்து எனது படையலாகிய 'இன்வேன்சியா' வை எடுத்து அவரிடம் தந்தேன். ஒரு வாரத்துக்கு முன்புதான் நான் புனைந்து முடித்திருந்த அது எனக்கு அளவிலா மகிழ்ச்சியளித்து வந்தது.

விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் மீண்டும் உன்னிப் பாய் எனது ஏடுகளைப் படித்துப் பார்த்துவிட்டு திரும்பவும் ''இம்-ம்-ம்'' என்று இழுக்கலானார்.

''ஏன், இதுவுங்கூட நன்றாய் இல்லையா?''

அதற்குள் நான அறவே நம்பிக்கை இழந்து மனம் ஒடிந்துவிட்டேன்.

''அதெல்லாம் இல்லே, என்னுல் இதைப் பற்றி சொல்ல முடியுமென்று நினேக்கிருய்?''

இரகசியம் பேச விரும்புகிறவரைப் போல மீண்டும் என் பக்கம் சாய்ந்து குனிந்து கொண்டு கூறிஞர்:

''எனக்கு எல்லாம் தெரியுமென்று நினேக் காதே!'' பிறகு தமது கனத்த குளிர்காலக் கோட்டில் இன்ஞெரு பொத்தானே அவிழ்த்து உள் ளிருந்த கழுத்துக் கம்பளியை வெளியே இழுத் தெடுத்தார். ''பாட்டுக் குழு இசை இருக்கிறதே, அதைப் பற்றி வேண்டுமாஞல் எனக்கு ஓரளவு தெரியும். வாண்டுகளேயும் வாலுகளேயும் கொண்டு வந்து வைத்து அவர்களே மதிப்புக்குரியவர் களாக்குவது எப்படியென்பதும் எனக்குக் கைவந்த கலேயே எனலாம், ஆனுல் இங்குங்கூட எப் பொழுதுமே நான் இதைச் செய்துவிடுவதாய்ச் சொல்வதற்கில்லே...'' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

அவர் எதைக் குறிப்பிடுகிருர் என்பது உடனே எனக்குப் புரிந்தது. சிறிது காலத்துக்கு முன்பு ஒன்பதாம் படிவப் பையன் ஒருவன் வோத்கா யைக் குடித்துவிட்டு ரகளே செய்துவிட்டான். ஒரு பாட்டில் வோத்காவை வாங்கி வந்து, என்ன ஆகிறது பார்க்கலாம் என்று அவ்வளவும் குடித்து விட்டான். ஆனுல் அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?

''ழேன்யா, நான் சொல்வதை நீ சரியாய்ப் புரிந்து கொள்ள வேண்டும். நீ புனேந்திருக்கும் இந்த இசை சாதாரண வகைப் பட்டதல்ல, என்

ஞல் சரிவர மதிப்பிட்டு இதைப் பற்றி கருத்துக் கூற முடியாது. பள்ளிக்கூடப் பதிவேட்டில் தர மதிப்பு குறிப்பது போன்ற விவகாரமல்ல இது. உன்னுடைய இந்த இசையைப் பற்றி கருத்துத் தெரிந்து கொள்ள வேண்டுமாஞல் வேருெரு வரிடம் செல்வதுதான் நல்லது. நான் சொல் கிறேன் கேள்: நீ போய்ப் பார்த்துவிட்டு வாயேன் அவரை.''

யார் அந்த அவர் என்று பெயரைக் குறிப்பிடா விட்டாலும் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் யாரைக் குறிப்பிட்டார் என்பது தெரிந்தது எனக்கு.

''நீ அவரிடம் போய் உன்னுடைய இசையைக் காட்டு, சில பகுதிகளே வாசித்துக் காட்டு. இதோ அவருடைய தொலேபேசி எண்ணேத் தருகிறேன்.'' விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் தமது கோட்டைத் திறந்து பைக்குள் தேடத் தொடங்கிஞர். ஆஞல் மறுகணமே தமது எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டார்.

''வேண்டாம், இப்படிச் செய்தால் சரிப்பட்டு வராது. ஆட்கள் கையில் சிக்காமல் தப்பித்துக் கொண்டுவிடுகிறவர் அவர்—இல்லேயேல் இசை புனேய அவருக்கு அவகாசமே இல்லாமற் போய் விடும். நான் நேரில் அவருடன் தொலேபேசியில் பேசி ஏற்பாடு செய்கிறேன்.''

* * *

குறித்த நேரத்துக்கு ஒரு மணி நேரம் முன்ன தாகவே நான் அந்த முகவரிக்குரிய வீட்டை அடைந்துவிட்டேன் என்பதைக் கூறத் தேவை யில்லே. கால தாமதம் ஏற்பட்டுவிடாதபடி இவ் வாறு நான் உறுதி செய்து கொண்டேன். ஆஞல்

நான் அறியாத ஒருவருடைய வீட்டுக்குக் காலத்துக்கு முன்னதாகவே போய் நிற்பதும் சரியல்ல. ஆகவே காத்திருப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை.

இசைஞர் வசித்த அந்த வீட்டின் வெளிமுற்றத்தில் வேலையற்றவனாய்ச் சுமார் ஒரு மணி நேரத்தைக் கழிக்க வேண்டியதாயிற்று. இந்த வீட்டில் வசித்தவர்கள் எல்லோருமே இசைஞர்கள், ஒருவரையொருவர் எளிதில் பார்த்துப் பேசிக் கொள்வதற்கும், நினைத்ததும் கூட்டங்கள் நடத்துவதற்கும் வசதியாய் ஒரே வீட்டில் இருந்தார்கள் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். அந்த முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் எல்லோருமே இசைஞர்களது குழந்தைகளாகவே இருக்க வேண்டும். அம்மாதிரியான எமகார வாண்டுகளை நான் பார்த்ததே இல்லை. அவர்களுடைய சேஷ்டைகளைப் பார்த்துக் கொண்டு ஒரு மணி நேரத்தைக் கழித்தேன். முடிவே இன்றி அப்படி அவர்கள் கூத்தடித்துக் கொண்டிருந்தார்கள்.

நுழைவாயில்களுக்கு எதிரே வரிசையாய்க் கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன. குளிர் காலத்தின் குளிர் மிகக் கடுமையாகிவிட்டதால் உபயோகிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் அவை. அந்தக் குளிரில் காரைக் கிளப்புவது எளிதில் நடைபெறும் காரியமல்ல. கார்களின் உச்சிகள் மீது சாண் உயரத்துக்கு மேல் வெண்பனி மூடியிருந்தது. வெண்பனியினுள் கார்களின் சக்கரங்கள் அழுந்தியிருந்தன.

நேர்த்தியான ஆடைகள் அணிந்த குழந்தைகள் அந்தத் தனியார் கார்களைச் சுற்றிக் கூட்டமாய்க் கூடி ஆசை தீர விளையாடிக் கொண்டிருந்

தார்கள். ஓடி வந்து அந்தக் கார்களின் உச்சி மீது ஏறி அமர்ந்து சறுக்கிச் சரிந்து கீழே வந்து குதித்தார்கள். அந்தக் கார்களில் சில மிகப் பழங் காலத்திய மாடல்களான ''பொபேதா''க்களும் ''மாஸ்க்விச்சு''களுமாகும், இவற்றின்மீது குழந்தைகள் ஏறி விளையாடியதைப் பற்றி நான் கவலைப் படவில்லை. ஆனால் இந்த வரிசையின் கடைசியில் ஒரு ''வோல்கா'' கார் நின்றது, அதன் மீதும் கனத்த வெண்பனி மூடியிருந்ததெனினும் அது புத்தம் புதிய கார், மிகப் புதிய மாடல் என்பது தெளிவாகவே தெரிந்தது. கண்ணுக்கு விருந்தளித்த ஓர் அதிசயமாய் விளங்கிற்று. பளபளப்பான இந்தப் புத்தம் புதிய கார் மீதும் அந்த வாலுகள் குதித்தேறிச் சறுக்கி விளையாடின.

எனக்கு வந்த கோபத்தில் சப்தம் போட்டு அவர்களை விரட்டியடிப்பதோடு கன்னத்திலே அறையவும் வேண்டும் போலிருந்தது. ஆனால் நான் அப்படி ஒன்றும் செய்துவிடவில்லை: கீழே நான் இந்தச் சைத்தான்களுக்குத் தக்க தண்டனை அளித்துக் கொண்டிருக்கையில் மேலே மாடியில் ஒரு சன்னல் திறக்கப்பட்டுக் கோபாவேசத் தந்தை ஒருவர் தலையை வெளியே நீட்டி ''யார் அது அங்கே! என் பையன்மீது கை வைக்காதே நீ! கார் என்னுடையது, குழந்தை அதில் விளையாடினால் உனக்கு என்னவாம்?'' என்று கூச்சலிடும் காட்சி திடுமென என் மனக் கண்முன் தோன்றவே நான் பேசாமல் இருந்துவிட்டேன்.

வாண்டுகள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டுமே, நமக்கு ஏன் இந்தத் தொல்லை? எப்படியும் எனக்கு இன்னும் ஐந்து நிமிடமே பாக்கியிருந்தது, இசைஞரைப் பார்ப்பதற்காக நான் உள்ளே

போக வேண்டும். ஆகவே அங்கிருந்து சென்று மாடியேறும் பொறியில் மேலே சென்று கத வருகே இருந்த பொத்தானை அழுத்தினேன்.

இசைஞரே நேரில் வந்து கதவைத் திறந்து என்னை வரவேற்ருர்: ''வா, தம்பி! உன்னைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.''

மெய்யாகவே அவர் என்னைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தவராய்த் தோன்றினுர். மலர்ந்த முகத் துடன் இனிமையாய் அவர் என்னை வரவேற்ற முறை ஏதோ நெடுநாளைய நண்பரைச் சந்திக் கிருேம் என்பது போன்ற உணர்ச்சியை எனக்கு அளிப்பதாய் இருந்தது. அவருடைய புன்னகை வெளித் தோற்றத்துக்காகத் தருவிக்கப்பட்ட தாய் இல்லாமல், நேரே இதயத்திலிருந்து உதித் தெழுந்ததாய்த் தோன்றியது.

''மேல் கோட்டைக் கழற்றி இங்கே மாட்டு.''

சாதாரணமான நிலைமையாய் இருந்தால் நான் அவருடைய குடித்தனப் பகுதியை விவரமாய்ச் சித்தரிக்க விரும்பியிருப்பேன். இசைஞரின் இல் லம் எப்படியிருந்தது என்பதை அறிய எவருக்கும் ஆவலாகவே இருக்கும். முக்கியமாய் எனக்கு மிக வும் ஆவலாகவே இருந்திருக்கும், ஏனெனில் மீண் டும் இந்தக் குடித்தனப் பகுதிக்குள் நான் அடி யெடுத்து வைக்க முடியுமோ, என்னமோ? ஆனுல் எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை நான். இல்லத் தலைவர் வழியில் வேறு எந்த அறைக்குள்ளும் அழைத்துச் செல்லாமல், எதையும் காட்டிப் பெரு மையடித்துக் கொள்ளாமல், நேரே தமது வேலை அறைக்கு என்னை அழைத்துச் சென்ருர். அந்த அறையிலுங்கூட பியானேவையும் இசைஞரையும்

தவிர எதையும் நான் காணும் திறனற்றவனுகவே இருந்தேன்.

அப்படி நான் படபடத்துப் போய்விட்டேன், குருட்டுப் பீதியால் பீடிக்கப்பட்டுவிட்டேன். எனது எதிர்கால வாழ்வுக்கு அந்தச் சந்திப்பு எவ்வளவு முக்கியமானது என்பதுதான் என் நினைவில் இருந்தது, சுற்றிலுமிருந்த எதையும் என்னுல் கவனிக்க முடியவில்லை.

நான் அண்ணுந்து அவரைப் பார்த்தேன், குனிந்து என்னை அவர் தமது தடித்த மூக்குக்கண்ணுடி வழியே பார்த்த அந்தப் பார்வை என்னைக் கல்லாய்ச் சமையச் செய்துவிடும் போலிருந்தது.

''பள்ளிக்கூடப் பாட்டுக் குழுவை விட்டு நீ விடை பெற்றுக் கொள்ளப் போவதாகவும், இசை புனைந்து வருவதாகவும் கேள்விப்பட்டேன்'' என்ருர் அவர். ''சரி, உனது இசையைக் கேட்கலாம், அதுவே நமது வேலையைத் தொடங்குவதற்கு சரியான வழியென நினைக்கிறேன். நீ என்ன நினைக்கிருய்?''

நான் தலையை ஆட்டி என் உடன்பாட்டைத் தெரிவித்தேன். இவ்வுலகில் நாம் மிக எளிதில் புரிந்து கொள்ளக்கூடியது இசையே என்பதாய் நினைத்தேன்.

''இப்படி உட்காரு'' என்று அவர் பியானோவைச் சுட்டிக் காட்டினுர். விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் குறை கூறியிருந்த எனது இசைக் குழுக் கீதங்களை முதலில் அவர் பார்வையிடுவார் என்று நினைத்திருந்தேன். ஆனுல் இதை அவரிடம் சொல்லத் துணிவின்றி, அவர் சொன்னபடி பியானோவின் முன்னுல் உட்கார்ந்தேன்.

''நாம் கேட்கப் போவது என்ன?''

''நோஞு-வால்ட்ஸ், எட்டுட், பாசோ அஸ்தி ஞுட்டோ, இன்வேன்சியா'' என்று நான் புனைந்து வைத்திருந்தவற்றை வரிசையை அடுக்கிச் சென்றேன்.

''இன்வேன்சியாவை வாசி பார்ப்போம்'' என்று உத்தரவிட்டார்.

ஈரமாய்ப் பிசுபிசுத்த என் உள்ளங் கைகளைக் கால் சடையில் துடைத்துக் கொண்டு பியானோக் கட்டைகளின் மீது கைகளை நீட்டினேன். சரியாய் அந்த நேரத்தில் தொலைபேசியின் மணி அடித்தது. அப்படிதான் ஆகும், வாழ்க்கை அப்படிப் பட்டது. எல்லாம் விதி....

''மன்னிக்க வேண்டும், இதோ வந்துவிடுகிறேன்'' என்று சொல்லி அவர் தொலைபேசியிடம் சென்றார். ''ஹலோ!'' என்று ஆரம்பித்து யாரோ சக இசைஞருடன் அரட்டையடிக்கத் தொடங்கி விட்டார். சரி, அதுவும் நல்லதுதான், பேரப் பிள்ளைகளிடம் சொல்வதற்குச் சுவையாய் இருக்கும். ''என்ன?... நானும் வந்திருந்தேனே. அதிசயத்திலும் அதிசயம்! நம்ப முடியாதது!''

நான் என் காதைத் தீட்டிக் கொண்டேன்.

''உள்ளுணர்வுதான். ஆயினும் அது உள்ளுணர்வு மட்டுமல்ல, யாவற்றுக்கும் முதலாய்ப் பழக்கத் திறன். பேராற்றல் வாய்ந்த ஆள்! உலகில் அந்த ஆளுக்கு இணை யாருமே இல்லை!''

வியப்புற்றுவிட்ட எனக்குப் பியானோவின் எதிரே இருக்கையில் இருப்புக் கொள்ளவில்லை. நீங்களே பாருங்களேன்! எனது இசையை நான் வாசித்துக் காட்டப் போகும் இவர் யாவரிலும் ஆற்றல் மிக்கவர் என்ற உறுதியான நம்பிக்கையோடு இங்கு வந்திருந்தேன். என்னிடமிருந்து

இரண்டு,மூன்று தப்படி தள்ளி நின்று தொலை பேசியில் பேசும் இம்மனிதருக்கு நிகர் யாருமில்லை என்பதாய் நினைத்திருந்தேன். ஆனால் இங்கே இவர் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்.

''ஆம், அந்த இரண்டாவது கோல் இருக்கிறதே, அது பிரமாதம்! குறுங் கோணத்திலிருந்து ஆட்டச்சில்லை அவர் தட்டியதை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்! இதன்முன் நான் பார்த்திராத ஒரு விந்தை!''

மேலும் இரண்டு நிமிடங்களுக்கு இந்த உரையாடல் நீடித்தது. பிறகு அவர் ரிசீவரைத் திருப்பி வைத்துவிட்டு என்னைப் பார்த்துத் தோள்களை உலுக்கியவாறு ''இடையில் வந்த இந்தத் தடங்கலுக்காக மனிக்க வேண்டும் நீ'' என்றார்.

சன்னலிடம் சென்று நின்றார் அவர். தொலை பேசியில் நடைபெற்ற உரையாடலில் இன்னமும் மூழ்கியவராய்த் தோன்றினார்.

''என்னுடைய இன்வேன்சியாவை வாசிக்கட்டுமா?'' என்று கேட்டு அவருக்கு நினைவு படுத்தினேன்.

''ஆரம்பி நீ'' என்றார்.

நான் வாசிக்க முற்பட்டேன், என் முழுக் கவனத்தையும் ஈடுபடுத்தி வாசித்துச் சென்றேன், ஏனெனில் நான் புனைந்ததுதான் என்றாலும் அது மிகவும் கடினமானது. இருப்பினும் என் விரல்களின் ஓட்டத்தை மட்டுமின்றி எனது இசையால் இசைஞரிடம் ஏற்பட்ட பாதிப்பையும் கவனித்த வாறு வாசித்தேன். என் பக்கம் முதுகைக் காட்டிக் கொண்டு சன்னல் முன்னால் நின்றிருந்தார். திடுமென அவர் முதுகு துடித்து விரைத்தது, தோள்கள் உயர்ந்தன. சன்னல் கண்ணாடியில்

முகத்தை வைத்து அழுத்தி வெளியே பார்த்தார், கோபமுற்று அவர் வெளியிட்ட மூச்சின் ஈரம் படிந்து கண்ணுடி மங்கிவிட்டது.

ஆத்திரத்தால் நான் பற்களைக் கடித்துக் கொண்டேன். யாவற்றுக்கும் காரணம் என்னவென்பது இப்பொழுது எனக்குப் புரிந்தது. என் ஐயமெல்லாம் அறவே நீங்கிவிட்டது. கீழே முற்றத்திலிருந்த புத்தம் புதிய 'வோல்கா' கார் யாருடையது என்பதில் இப்பொழுது எனக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. எனது இன்வேன்சியாவை நான் வாசித்துக் காட்டிய அந்த இசைஞரின் கண்ணுக்குக் கீழே முற்றத்திலிருந்து எவ்வளவு சுவையான காட்சி தெரிந்தது என்பதை நான் உணர முடிந்தது.

கீழே நான் நினைத்தபடித் தைரியமாய் அந்த வாலுப் பசங்களுக்கு அறை கொடுத்து விரட்டியடித்திருந்தால் எவ்வளவு நன்ருய் இருந்திருக்குமென்று நினைத்துக் கொண்டேன். அவர்களுடைய சேஷ்டைகளின் விளைவாய் இங்கே என் திட்டங்கள் யாவும் எரிந்து அல்லவா சாம்பலாகின்றன? இனி நான் வாசிக்க வேண்டியதில்லை, எழுந்து நடையைக் கட்டிவிடலாம்.

ஆயினும் நான் தொடர்ந்து வாசித்துச் சென்றேன். ஏனெனில் எனது இன்வேன்சியாவின் மிக முக்கிய பகுதியை அப்பொழுதுதான் வந்தடைந்திருந்தேன், இசையின் இழைகளால் கட்டுண்டுவிட்ட என் விரல்களை இனி என்னுல் பியானோ கட்டைகளிலிருந்து பிரித்தெடுத்திருக்க முடிந்திருக்காது.

திடுமென அவர் என் பக்கத்தில் பியானேவின் மீது முழங்கைகளை வைத்து அழுத்திக் கொண்டு

நின்று என்னை உற்று நோக்குவதைக் கண்ணுற் றேன். சன்னலிலிருந்து எப்பொழுது விலகி என்னருகே வந்தார் என்பதையே நான் கவனிக்கத் தவறிவிட்டேன். இப்பொழுது அவர் இங்கே என் பக்கத்தில் இருந்தார், அவருடைய மூக்குக் கண்ணுடியின் தடித்த வில்லைகள் ஆடாமல் அசையாமல் என்னை உற்று நோக்கின. இசையைக் கேட்பதற்கு அவர் அந்தக் கண்ணுடி வில்லைகளையும் பயன்படுத்திக் கொண்டார் என்பதாகவே நினைக்கத் தோன்றிற்று.

தொடர்ந்து கேட்டுக் கொண்டு அசையாமல் நின்ருர். வெளியே சிறுவர்கள் அவருடைய காரைத் தலைகுப்புறக் கவிழ்த்தாலுங்கூட அவர் தொடர்ந்து கேட்பார், நான் வாசித்து முடிக்கும் வரை கேட்டுக் கொண்டே இருப்பார் என்பது தெரிந்தது.

அவர் கேட்டுக் கொண்டிருக்க நான் வாசித்துக் கொண்டிருந்தேன், இசை முடியுமுன் தொலைபேசியின் மணி அடிக்குமோ என்று அஞ்சி நான் வேகத்தை அதிகரித்துச் சென்றேன். ஆனுல் தொலைபேசியின் மணியாலுங்கூட இனி அவருடைய கவனத்தைக் கலைக்க முடியாதென்பது தெரிந்து....

## 6

''ழேன்யா, ழேன்யா!''

பெரும்பாடு பட்டு ஒரு கண்ணைச் சிறிதளவு திறந்து பார்த்தேன். இன்னமும் கனவுகளின் பனி மூட்டத்தினுள்ளிருந்தே நான் பார்க்க வேண்டியிருந்தது. என்னை எழுப்பியது வேறு யாராய் இருக்க முடியும்—அவன்தான், அந்த ழேன்யா உசச்சோவ்தான்.

''ஒழுந்து போ'' என்று சபித்துவிட்டு நான் எதிர்ப்பக்கம் புரண்டு படுத்தேன்.

''இதைக் கேள், ழேன்யா!'' என்று என் தோளைப் பிடித்து உலுக்கினுன்.

அட எழவே, தூங்க விடாமல் ஏன் இப்படி என்னைப் படுத்துகிருர்கள்? இசைப் பள்ளியில் என் பயிற்சி ஏற்கனவே முடிவுற்றுவிட்டது, கனவுகளில் அல்ல, மெய்யாகவே முடிவுற்றுவிட்டது. நாளைக்கு எனக்கு இசைக் கல்லூரியின் நுழைவுத் தேர்வு ஆரம்பமாகிறது, முதாலாவது பரீட்சை மிகவும் முக்கியமான இசைப்புனைவு பரீட்சை, இதைத் தொடர்ந்து வரிசையாய் மற்றும் பலவும் இருந்தன. இரவு முழுதும் புத்தகங்களை வைத்து உயிரை விட்டுக் கொண்டிருந்தவன் என்னையும் அறியாமல் தூங்கியிருக்கிறேன்; இதோ என் கன்னத்துக்கு அடியிலுள்ள பண்ணிசைப் பாடப் புத்தகம் இதற்குச் சான்று பகரும்.

இரண்டு மணி நேரத்துக்கு மேல் தூங்கியிருக்க மாட்டேன், என் தலை கிறுகிறுத்துச் சுற்றியது. என்னதான் ஆகட்டுமே, இப்பொழுது நான் விழித்தெழப் போவதில்லை. கண்ணைத் திறக்காமல் குருட்டாம் போக்கில் காலால் எட்டி உதைத்தேன், ஆனுல் இலக்கின்மீது உதை விழவில்லை. தப்ப முடியாத அந்தச் சனியன் இப்பொழுது எனது இன்னொரு தோளைப் பிடித்து உலுக்கினுன்.

''ழேன்யா, ழேன்யா, எழுந்திரு சீக்கிரம்!''

பொடிப் பயல்! எப்பொழுதும் அவன்தான் என்னைத் தூங்கவிடாமல் உபத்திரவம் செய்தான். உசச்சோவ்தான், வேறு யாருமல்ல. அவனிடமிருந்து தப்பவே முடியாது. இங்கே மாஸ்கோவில் இவனுக்கு என்ன வேலை? முன்னணி இளைஞர்

முகாமில் இருக்க வேண்டியவன் இங்கே எப்படி வந்தான்? ஆரம்ப வகுப்பு மாணவர்கள் எல்லோரும் வெரெயா ஆற்றங் கரை முகாமில் அல்லவா ஒரு மாதமாய் இருந்து வந்தார்கள்? எல்லோரும் அவரவரது வழிகளிலே சென்று எத்தனையோ நாட்களாகிவிட்டன, விடுதியில் யாருமில்லாமல் காலியாய் இருந்தது. பள்ளிப் படிப்பை முடித் தோரில் இசைக் கல்லூரிக்கும் கினெசின் இசைக் கழகத்துக்குமான நுழைவுத் தேர்வுகளுக்காகத் தயார் செய்தவர்களாகிய எங்களுக்கு மட்டும் விளதீமிர் கன்ஸ்தன்தீனவிச் விலக்களித்திருந் தார்; இனி நாங்கள் இப்பள்ளியைச் சேர்ந்தவர் களல்ல, விடுதியில் தங்க உரிமையுள்ளவர்களல்ல என்ற போதிலும், இங்கு தங்க எங்களுக்கு அனு மதியளித்திருந்தார்.

ஆனால் ழேன்யா உசச்சோவ் எப்படி அதற்குள் இங்கே வந்து சேர்ந்தான்? முன்னணி இளைஞர் முகாமிலிருந்து யாருக்கும் தெரியாமல் ஓடி வந்து விட்டானா, என்ன? அப்படியும் செய்யக் கூடிய வன்தான். இல்லை, அப்போதுதான் எனக்கு நினைவு வந்தது, முன்னணி இளைஞர் முகாமிலிருந்து எல்லாப் பையன்களும் அன்று விடுதிக்குத் திரும்பி வருவார்கள் என்பதை எனது தூக்கத்திலும் அசதியிலும் நான் மறந்துவிட்டேன்.

ஆம், எல்லோரும் வெளிநாட்டுக்கு, போலந் துக்குப் போவதற்கு ஏற்பாடாகியிருந்தது. சிறுவர் இசை விழாவுக்கு வருமாறு போலந்திலிருந்து இவர்களுக்கு அழைப்பு வந்திருந்தது. இதற்காகப் புதிய உடுப்புகள் தயார் செய்வதற்காக ஆறு மாதங்களுக்கு முன்பே வேலை துவக்கப்பட்டது. மூன்று மாதங்களுக்கு மேலாய்ப பாட்டுப் பயிற்சி

நேரத்தின்போது இவர்கள் போலிஷ் பாட்டுகள் கற்று வந்தார்கள். போலந்தில் ரசிகர்களின் அபிமானத்தைப் பெறுவதற்காகத் தக்க திட்டங்கள் வகுத்து யாவற்றுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். ழேன்யா உசச்சோவ் தனிப் பாடகனுய்ப் பாடுவான். இப்பொழுது இவன்தான் பாட்டுக் குழுவின் தலைமையான தனிப் பாடகன்—நிக்கலாய் பிர்யுக்கோவ், பிறகு ழேன்யா புரோஹரொவ், இப்பொழுது ழேன்யா உசச்சோவ். இந்த வாண்டுப் பசங்கள், பாக்கியசாலிகள்தான், வெளிநாட்டுக்குப் போய்ச் சுற்றப் போகிறுர்கள்... அந்த நாட்களில் எங்களால் இத்தகைய சுற்றுலாக்கள் குறித்து நினைத்தே இருக்க முடியாது, உள்ளூரிலேதான் பாட்டிசைத்துக் கொண்டிருந்தோம். இப்போது இந்த வாண்டுகள் வெளிநாடுகளுக்குப் புறப்பட்டுவிட்டன.

''ழேன்யா, காது கேட்கவில்லையா உனக்கு? எழுந்திரு!''

இரு, இதோ வந்துவிட்டேன்! 'வெளிநாட்டுக்குப் புறப்படும்' உனக்குச் சரியானபடி தருகிறேன்! குதித்தெழுந்து நின்று நான் கூச்சலிட்டேன்:

''என்ன வேண்டும் உனக்கு?''

''உன்னைப் பார்க்க வேண்டுமாம், வெளியே ஓர் இளம் பெண் காத்திருக்கிறுள்.''

''யார் அவள்? எப்படி இருக்கிறுள்?''

''எனக்குத் தெரியாது... இம்மாதிரி இருக்கிறுள்'' என்று சொல்லி என்னைப் பார்க்க வந்தவளுடைய உருவத்தை அபிநயம் பிடித்துக் காட்டிஞன். முதலில் ரோஜா மொக்கு வாயையும் பிறகு வில் போன்ற புருவங்களையும் காட்டி, முடிவில் கைகளைக் குழைவாய் அசைத்து விம்மிப் புடைத்

தும், பிறகு குறுகிச் சிறுத்தும், மீண்டும் விரிந்து பருத்தும் சென்ற நெளிவரைகளால் அவள் உருவினை எனக்குச் சித்திரித்துக் காட்டினுன். ஐந்தாம் படிவச் சிறுவன், அதற்குள் எவ்வளவு தெரிந்து வைத்திருந்தான் என்கிறீர்கள்!

''அம்மாதிரியான இளம் பெண் யாரையும் எனக்குத் தெரியாது'' என்று சொல்லி மீண்டும் படுக்கையில் படுத்துக் கெட்டியாய்க் கண்களை மூடிக்கொண்டேன்.

''உனக்காக அவள் வெளியே காத்திருக்கிருள். ழேன்யா புரோஹறொவை வெளியே வரச் சொல்லும்படி என்னிடம் கூறினுள்.''

வேண்டுமென்றேதான் நான் தூங்குவதாய்ப் பாசாங்கு செய்தேன். கண்களை முடிக் கொண்டு படுத்திருந்த நான் அது யாராய் இருக்குமென்று ஆலோசிக்க முற்பட்டேன். மாயா வியாசெம்ஸ் காயாவாய் இருக்குமோ? புத்தி வந்து தன் செயலுக்காக வருத்தம் தெரிவிக்க வந்திருப்பாளோ? காத்திருந்து பார்த்துவிட்டுப் போகட்டுமே, நான் அதிலிருந்து விடுபட்டு எவ்வளவோ காலமாகிறதே. அதெல்லாம் முடிந்த போன கதை. அதோடு, மாயா தெற்கே ஆர்த்தெக் இளைஞர் முகாமுக்குப் போயிருப்பதாய் கோஷா சொல்லியிருந்தானே, அதற்குள் அவள் மாஸ்கோவுக்கு வந்திருக்க மாட்டாள். அவள் இல்லை என்ருல், வேறு யாராய் இருக்கும்? கோஷாவின் சாகாக்களுடைய கொண்டாட்டத்தில் நான் சந்தித்த அந்த செம்முடியாளாய் இருக்குமோ. நோவியெ குஸ்மீன்கி வரை அவளுடன் சென்று அவளுடைய வீட்டை அடைந்ததும் முத்தமிட்டேனே, அவள் இத்தனை நாட்களுக்குப் பிறகு திடுமென இங்கே வந்து நிற்

இதன்முன் நான் பார்த்திராத ஓர் இளம் பெண் என்பது தெரிந்ததும் பூரண அமைதியடைந்துவிட்டேன். கண்ணுக்கின வடிவழகியாய்த் தோன்றிய அவள் கண்ணைப் பறிக்கும் வெண்ணிற ஆடை அணிந்திருந்தாள், இவளை நான் இதன்முன் பார்த்ததில்லை என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இருக்கவில்லை. ஆகவே இவளால் இப்போது எனக்கு நேரடி அபாயம் இல்லை.

என்னைப் பார்த்ததும் கூச்சப்பட்டுக் கொண்டு தயங்கியவாறு புன்னகை புரிந்துவிட்டு, நான் அவளிடம் நெருங்கி வரும்வரைக் காத்திருந்தபின் ''ஹலோ, ழேன்யா'' என்றாள். இதைச் சொல்லி கையை நீட்டினாள், உடனே நான் அந்தக் கையைப் பிடித்துக் குலுக்கி ''ஹலோ'' என்றேன்.

''என்னை உனக்கு அடையாளம் தெரியவில்லை, அல்லவா?'' என்று வினவினாள்.

''ஏன் அப்படி நினைக்கிறாய்? நன்றாய்த் தெரிகிறதே'' என்று பதிலளித்தேன். கடவுள் என்னை மன்னிப்பாராக, இவளை நான் பார்த்ததே இல்லை.

''நீ பெரிதும் மாறியிருப்பினும் பார்த்ததும் உடனே அடையாளம் கண்டு கொண்டுவிட்டேன்'' என்றாள். பிறகு தான் அதிகமாய் மாறிவிட்டதாகவா நினைத்தேன் என்று என்னைக் கேட்டாள்.

''இல்லையே, கொஞ்சங்கூட மாற்றமின்றி அப்படியேதான் இருக்கிறாய்'' என்று நான் ஒரு போடு போட்டேன்.

ஊடுருவும் பார்வையால் என்னை அவள் ஆராய்ந்தாள். அவள் உதடுகள் மெல்லத் துடித்தன. அழத் தொடங்கிவிடுவாளோ என்று நான் பயந்து போனேன். அதெல்லாம் இல்லை, மீண்டும் புன்னகை புரிந்தாள்.

''என்னை உனக்கு அடையாளம் தெரியாதென நினைத்திருந்தேன். லீபெத்ஸ்கிலிருந்து வந்திருக்கிறேன், சாஷா தியுஞேவா நான், நினைவிருக்கிறதா?'' என்று கேட்டாள்.

* * *

லெனின் குன்றுகளிலிருந்து இருவரும் நகரின் மையப் பகுதிக்கு நடந்து வந்து கொண்டிருந்தோம். எங்களுக்கடியில் மாஸ்க்வா ஆறு ஓடிற்று. இடப் பக்கத்தில் ஆற்றங் கரை அகலமான வளைவில் துருத்திச் சென்ற இடத்தில் லுழ்னிக்கி ஸ்டேடியத்தின் வட்டக் குழிவு தெரிந்தது. அங்கிருந்து எழுந்த இரைச்சலிலிருந்து அங்கே கால்பந்தாட்டப் போட்டி நடந்து கொண்டிருக்க வேண்டுமென்பது புலப்பட்டது. இன்று ஞாயிறுகையால் மாஸ்கோவாசிகளில் பாதிப் பேர் இதைப் பார்ப்பதற்காக இங்கே கூடியிருப்பார்கள். வலப் பக்கத்தில் நெஸ்குச்சினி பூங்காவுக்கு அருகே இன்னெரு பாதிப் பேர் வெயிலில் காய்ந்து கொண்டும் நீரில் நீச்சலடித்துக் கொண்டும் இருந்தனர். எங்களுக்கு நேர் முன்னுல் பாலத்தில் எதிர் முனையில் லுழ்னிக்கி சந்தையின் கொடிகள் பளிச்சிட்டு காற்றில் படபடத்தன, அங்கும் பெருந் திரளான மக்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தார்கள்; மாஸ்கோ வழியே சென்றோரும், ஞாயிறு விடுமுறைக்காக மாஸ்கோ வரை வந்தோருமான இவர்களை மாஸ்கோவின் மூன்ருவது பாதிப் பேராய்ச் சொல்லலாம்.

வெளியிடத்திலிருந்து நகருக்கு வந்தோரில் ஒருத்தியான சாஷா தியுஞேவா என் பக்கத்தில் நடந்து, சற்றே பின்புறம் சாய்ந்து குன்றின்

சரிவிலே இறங்கிக் கொண்டிருந்தாள். லெனின் குன்றுகளின் ஓரத்தில் அமைந்த கைப்பிடிச் சுவர் பக்கத்தில் நெடுநேரம் பேசியபின் இருவருமாய்த் திரும்பி நடந்து கொண்டிருந்தோம். யாவும் குறித்து சாஷா என்னிடம் விவரமாய்ச் சொல்லியிருந்தாள். லீபெத்ஸ்க் சிலிக்கேட்டு ஆலையில் ஆய்வக உதிவியாளராய் அவள் வேலை செய்து வந்தாள், சிறப்புப் பயணக் குழு ஒன்றில் சேர்ந்து மாஸ்கோ வந்திருந்தாள். மாலைநேரப் பள்ளியில் இவ்வாண்டுதான் படிப்பு முடிந்து சான்றிதழ் பெற்றிருந்தாள். ஏற்கனவே நான் ஊகித்திருந்தது போல், படிப்பு முடிந்தவர்களுக்கான நடன விருந்தில் இதே வெண்ணிற ஆடையில் தோன்றி எல்லோரது கவனத்தையும் கவர்ந்துவிட்டாள். ஸீனு கிவொஸ்தியோவா மருத்துவத் தாதியாவதற்காகப் பயிற்சி பெற்று வருவதாகவும், வேரா இவானவ்னு இறந்துவிட்டதாகவும் கூறினுள்.

இதே போல நானும் என்னைப் பற்றிய தகவல்களை அவளிடம் சொன்னேன். சுருக்கமாகவேதான் சொன்னேன் என்ருலும் நடந்தவை யாவற்றையும் நடந்தபடியே சொன்னேன். பிற்பகல் மூன்று மணிக்கு மேலாகிவிட்டது, காலை உணவு அருந்தாமல் வந்திருந்த எனக்குப் பசி வயிற்றைப் பிடுங்கிற்று. இவ்வளவு நேரமாய் நாங்கள் நடந்த நடைக்குப் பிற்பாடு அவளுக்கும் நிச்சயம் பசியாகவே இருக்கும் என்பது தெரிந்தது. என் பைக்குள் எஞ்சியிருந்த சில்லறைக் காசு அதிர்ந்து கணகணத்தது. காம்சமோல்ஸ்கி பிரஸ்பேக்டிற்கு வந்ததும் அங்கிருந்த இளைஞர் சிற்றுண்டுசாலைக்குப் போகலாமென்று சாஷாவை அழைத்தேன். மசாலா கமகமக்கும் கபாபுகள் அங்கே கிடைக்கும்,

விலேயும் சரசமாயிருக்கும் என்பது எனக்குத் தெரியும். சாஷாவும் உடனே இசைவு தெரிவிக்கவே இருவருமாய் உள்ளே சென்ருேம். சிற்றுண்டிசாலே அனேகமாய்க் காலியாகவே இருந்தது, ஒரு சன்னலுக்கு அருகே ஒரு மேஜையின் முன்ஞல் அமர்ந்து கொண்டோம்.

எதிர் முனேயில் மேடையின் மீது சிவப்புச் சட்டை அணிந்த இளேஞர்கள் சிலர் இன்னும் நான்கு மணி ஆகவில்லே என்ற போதிலும் இசை யேடுகளே எடுத்து ஏடுதாங்கிகளில் வைத்து வாசிக்க முற்பட்டனர். கிளாரினட், சாக்சபோன், பாஸ் கித்தார், பியாஞே, முரசங்கள் ஆகிய ஐந்து வாத்தியங்கள் வாசிக்கப்பட்டன. ஜார்ஜ் கெர்ஷ்வினுடைய "என் காதலுக்குரியவன்" பாட்டை வாசிக்க முற்பட்டவர்கள் சற்று நேரத் துக்குள் நிறுத்திவிட்டுத் திரும்பவும் ஆரம்பத்தி லிருந்து தொடங்கிஞர்கள். அன்று மாலேயில் சிற்றுண்டிசாலே நிறைந்துவிடும் போது எல்லோர் முன்னிலேயிலும் வாசிப்பதற்காக இப்பொழுது இவர்கள் பயிற்சி செய்து வருகிருர்கள் என்பது புலப்பட்டது. பயிற்சிக்கு அவர்களுக்கு வேறு இடம் கிடைக்கவில்லே போலும். ஐந்து பேரும் இளேஞர்கள், சிவப்புச் சட்டை போட்டிருந்தனர்.

இம்மாதிரியான சிறிய அமெச்சூர் ஜாஸ் குழுக் களே எனக்குப் பிடிக்காது. ஒலெக் லுன்டுஸ்டிரீ மின் குழுவைப் போல் மிகப் பல வாத்தியங்களேக் கொண்ட பெரிய குழுக்களேத்தான் எனக்குப் பிடிக்கும். வெளிநாட்டுக் குழுக்களில், சிறிது காலத்துக்கு முன்பு மாஸ்கோ வந்திருந்த பென்னி குட்மன் குழு என்னேக் கவர்ந்திருந்தது.

மேஜைப் பணிப் பெண் அரிதாள் குழாய்

களிட்டு இரு கிளாஸ்களில் எங்கள் முன்னல் ஐங்கலவை பானம் கொண்டு வந்து வைத்தாள். விலை அதிகமில்லை, ஆனல் மிகவும் சுவையானது. அடியில் குவிந்திருந்த ஐஸ் சிறிது சிறிதாய்க் கரைந்து வந்ததால் குடிக்கக் குடிக்க கிளாசில் பானம் குறையாமல் இருந்து வருவது போல் தோன்றியது.

சிவப்புச் சடைக்காரர்கள் திரும்பவும் இசைப் பதை நிறுத்தி மீண்டும் அதே இடத்திலிருந்து பண்ணை வாசிக்க முற்பட்டனர். இப்படித் திரும் பத் திரும்ப வாசித்து மெருகேற்றிக் கொள்ள முயன்றூர்கள்.

''ழேன்யா, நீ ஏன் என்னுடைய கடிதத்துக்குப் பதில் எழுதாமல் இருந்தாய்?'' என்று என்னை உற்றுப் பார்த்தவாறு கேட்டாள் சாஷா. ''நான் எழுதிய கடிதம் கிடைத்தது அல்லவா?''

''கிடைத்தது, இன்னும் அதைப் பத்திரமாய் வைத்திருக்கிறேன்.''

''அப்படியானல் ஏன் நீ பதில் எழுதவில்லை?''

''எழுத வேண்டுமென்றுதான் இருந்தேன், ஆனல் எழுத முடியாமற் போய்விட்டது.''

''ஏன் முடியாமற் போயிற்று?''

''எனக்கு ஞாபகமில்லை, ஏதோ நடைபெற்று என்னை எழுத விடாமல் தடுத்து வந்தது.''

''அப்படி என்ன நடந்தது?''

அதை நினைவுக்குக் கொண்டு வர முயன்ற நான் நெற்றியைச் சுளித்துக் கொண்டேன். ''இப் பொழுது நினைவுக்கு வரவில்லை. ஏதோ நடை பெற்றது, என்னவென்று ஞாபகமில்லை. எவ் வளவோ காலமாகிவிட்டதே, மறந்துவிட்டேன்.''

''எதையுமே நீ நினைவில் வைத்திருப்பதாய்த்

தெரியவில்லையே, ஞாபக சக்தி இல்லை உனக்கு.''

''அதெல்லாம் இல்லை, ஞாபக சக்தி எனக்கு நிறைய உண்டு'' என்று நான் மறுப்புரைத்தேன். ''இசையைப் பொறுத்தவரை நான் எதையும் மறப்பதே இல்லை, ஆனால் கடந்த சில நாட்களாய் பரீட்சைக்காக உயிரை விட்டுப் படித்து வருகிறேன், எதையும் சரியாய்ச் சிந்திக்க முடியாத வனாகிவிட்டேன். அளவு மீறிக் கண் விழித்திருந்து விட்டேன் என்று நினைக்கிறேன்.''

''நாளைக்கு உனக்கு பரீட்சை இருக்கிறதா?''

''இருக்கிறது.''

சிற்றுண்டிசாலையில் மேலும் மேலும் கூட்டம் அதிகரித்துச் சென்றது. என் வயதுள்ள பையன்கள் சிலர் தமது பெண் துணைகளுடன் வந்தமர்ந்து, ஐங்கலவைப் பானம் கொண்டு வரச் சொன்னார்கள். மழிக்கப்படாத முகத்துடன் ஓராள் ஆடியசைந்து உள்ளே வந்து மதுபானம் அருந்திவிட்டு ஆடியசைந்து கொண்டு வெளியே போய்ச் சேர்ந்தார். ஆனால் சிற்றுண்டிசாலைக்கு வந்தோரில் மிகப் பெரும்பாலோர் இளைஞர்கள், இவர்கள் தனியாகவும் குழுக்களாகவும் வந்தார்கள். கால் பந்தாட்டப் போட்டிக்குச் சென்றுவிட்டு வருவோராக (ஸ்டேடியம் அருகாமையில்தான் இருந்தது) இருந்திருக்கும். சிறிய மேஜைகளைச் சுற்றிலும் அமர்ந்து இவர்கள் ழிகுலி பீர் கொண்டு வரச் சொன்னார்கள். பெண் துணைகளின்றி வந்தவர்களான இவர்கள் சிற்றுண்டிசாலையில் அமர்ந்திருந்த பெண்களை கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

என்னுடனிருந்த சாஷாவின்மீது இந்தக் கடைக்கண் பார்வைகள் அதிகம் விழக் கண்டேன்.

அவள் அணிந்திருந்த அந்த வெண்ணிற ஆடை அப்படி எடுப்பாய் அவளைத் தனித்துத் தெரியச் செய்தது. நடன விருந்துக்குப் போய் வருகிற வளாய், அல்லது மண விழாவுக்குச் செல்லும் மணப்பெண்ணாய் அவளைத் தோன்றச் செய்தது.

வெளியே தெருவில் சென்றவர்கள் சன்னல் ஓரத்திலிருந்த எங்களுடைய மேஜைக்கு எதிரே வந்ததும் கால்கள் அப்படியே தரையில் ஒட்டிக் கொண்டுவிட்டது போல் வெடுக்கென நின்றுவிடு வார்கள். சிகரெட் குடிக்கலாம் என்றால் சிகரெட் டப்பாவையும் தீப்பெட்டியையும் காணோமே, எங்கே போயின என்று கேட்பது போல் சட்டைப் பைகளைத் தடவ முற்படுவார்கள்.

இந்த ஆட்களை என்னென்று சொல்வது! பெரிய கால்பந்தாட்ட ரசிகர்களாம்! வருங்காலப் பெட் ரோசியான்களாம்! பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு பைகளைத் தடவுகிறார்கள்! இவளிடம் அப்படி என்ன கண்டுவிட்டார்கள்? அப்படியொன் றும் அசாதாரண அழகு இவளிடம் இருந்ததாய் நான் நினைக்கவில்லை.

''ழேன்யா, நான் உன்னிடம் சொன்னது உண்மையல்ல, பொய்.''

''பொய்யா! எது?''

''உல்லாசப் பயணக் குழுவில் மாஸ்கோ வந் திருக்கிறேன் என்று சொன்னேனே, அது பொய்.''

எதிர்பாராத இந்த அறிவிப்பைக் கேட்டு திகைப்படைந்த நான் சாஷாவின் பார்வையைச் சந்திக்க முடியாமல் என்னுடைய கிளாசின் அடியில் உருகிக் கொண்டிருந்த ஐஸ் துண்டுகளைப் பானக் குழாயால் குத்திக் கிளறினேன். அவள் கூறி யது உண்மையில் அப்படியொன்றும் நான் எதிர்

பாராததல்ல. அவள் உல்லாசப் பயணக் குழுவில் மாஸ்கோவுக்கு வந்தவளாய் இருக்காது என்ப தாய் முன்பே என்னுள் ஓர் எண்ணம் இருந்து வந்தது. உல்லாசப் பயணியாய் வந்தவளாய் இருந்திருந்தால் முன்பே அவளை லெனின் குன்று களுக்கு அழைத்துச் சென்றிருப்பார்கள், அங் கிருந்து நகரின் காட்சியைப் பார்த்திருப்பாள். நகருக்கு வருவோர் அழைத்துச் செல்லப்படும் முதலாவது இடம் அதுதானே. அன்று நான் அவளை அழைத்துச் சென்று அங்கிருந்து நகரின் காட்சியைக் காட்டியதற்கு முன்பு அவள் இதைப் பார்த்தவளல்ல என்பது தெளிவாகவே எனக்குத் தெரிந்தது. எனவேதான் அவள் நகரைப் பார்ப்பதற்காக வந்த உல்லாசப் பயணியல்ல, வேறு ஏதோ காரணமாய் வந்தவளாகவே இருக்கு மென நினைத்தேன். ஆனால் இவ்வளவு சீக்கிரமாய் சாஷா இதை என்னிடம் சொல்லிவிடுவாளென நான் எதிர்பார்க்கவில்லை.

''இன்னும் இரண்டு கிளாஸ் ஐங்கலவைப் பானம்'' என்று மேஜைப் பணிப் பெண்ணிடம் சொன்னேன்.

செஞ்சட்டை அணிந்த இளைஞர்கள் இன்னமும் தொடர்ந்து கெர்ஷ்வினது ''என் காதலுக்குரிய வன்'' பாட்டை இசைத்துக் கொண்டிருந்தார் கள். ஆனால் இப்பொழுது தடங்கல் எதுவுமின்றிச் சரளமாய் வாசித்தார்கள். வாசித்ததையே திருப்பி வாசிக்க வேண்டியிருக்கவில்லை. ஒத்திகையை முடித்துவிட்டிருக்க வேண்டும், அல்லது மாலை இசை விருந்துக்குரிய நேரம் இன்னும் வரவில்லை என்பதை அவர்கள் மறந்துவிடும்படி வாசிப்பு சூடு பிடித்திருக்க வேண்டும். விறுவிறுப்பான

தாளமும் மயக்கம் தரும் பண்ணும் அவர்களை மெய்மறக்கச் செய்துவிட்டன. இடையிடையே ஒவ்வொரு வாத்தியக்காரராய் வரிசையாய் முன் வந்து தனி இசை பொழிய முற்பட்டார். இந்தச் சிறிய ஜாஸ் வாத்தியக் குழுக்களை இந்த சுதந்திரமும் சொந்தக் கற்பனைக்குள்ள இந்த விரிவான வாய்ப்பும்தான் சோபிக்கச் செய்துவிடுகின்றன. கெர்ஷ்வினது ''என் காதலுக்குரியவன்'' கீதம் ஒரு நங்கையின் உள்ளத்திலுள்ள காதலின் வெளிப்பாடாய் அமைந்ததாகும்.

இத்தனை ஆண்டுகளாய் சாஷா என்னை மறவாது நினைவில் வைத்திருந்து இப்பொழுது இங்கு வந்திருக்கிறாளா, என்ன? என்னுடைய இசைத்தட்டு வெளிவந்து வானொலியில் அடிக்கடி ஒலி பரப்பப் பட்ட அந்தக் காலத்தில் நான் அவள் நினைவில் இருந்தது நியாயம்தான். ஆனால் அதற்குப் பிற்பாடும், எனது பாட்டிசைப்பு முடிவுற்ற பிறகும் எப்படி அவள் என்னை மறக்கமால் இருந்தாள்? ஒருவேளை நான் பாடாமல் ஓய்ந்து விட்டதையும், மறைந்துவிட்டதையும் கண்டு கவலை கொண்டு என்னைத் தேடி இங்கே மாஸ்கோவுக்கு வந்திருப்பாளோ? அவளுக்கு நான் அப்படியா வேண்டியவனாய் இருந்தேன்? நம்மை விரும்புகிறவர் ஒருவர் இவ்வுலகில் இருக்கிறார் என்னும் அந்த நினைப்பு மிகவும் இனிமையானது. ஆயினும் அந்தச் சின்னஞ் சிறு வயதில் தோன்றிய ஒன்று மெய்யாகவே இவ்வளவு காலமாய்....

''ழேன்யா, இப்பொழுது நீ நினைப்பது எனக்குத் தெரியும்'' என்று கருத்தூன்றிய முறையில் என்னைப் பார்த்துச் சொன்னாள் சாஷா. ''ஆனால் அது சரியல்ல'' என்றாள்.

''சரியல்லவா? இப்பொழுதுதானே நீ சொன்னாய்....''

''நான் சொன்னதை நீ சரியாய்ப் புரிந்து கொள்ளவில்லை. உல்லாசப் பயணக் குழுவில் நான் மாஸ்கோ வரவில்லை என்று சொன்னேன். ஆனால் நீ என்னென்னமோ நினைத்துக் கொண்டு விட்டாய்....'' இதைச் சொல்லி அவள் சன்னல் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு வெளியே பார்த்தாள். அவளுடைய உதடுகள் அன்று காலை நடுங்கியது போல சற்றே அதிர்ந்து நடுங்கின. ஆனால் உடனே அவள் மீண்டும் புன்னகை புரிந்த வாறு மேலும் சொன்னாள்: ''இதை நான் உன்னிடம் சொல்ல விரும்பவில்லை, நுழைவுத் தேர்வுக்காகவே நான் இங்கு வந்தேன். பொறியியல் கல்லூரி நுழைவுத் தேர்வுக்காக வந்தேன், ஆனால் முதலாவது பரீட்சையிலேயே கோட்டை விட்டு விட்டேன். இனி என்ன செய்தாலும் என்னால் அவசியமான குறைந்தபட்ச மதிப்பெண்களையும் கூட பெற முடியாது, ஆகவே மேற்கொண்டு பரீட்சைக்குப் போகாமலே நின்றுவிட்டேன்.''

''இனி என்ன செய்யப் போகிறாய்?''

''லீபெத்சுக்கு எனது வேலைக்குத் திரும்பிவிடு வேன், பிறகு அடுத்த வருடம் மீண்டும் முயற்சி செய்வேன்.''

ஓகோ, அப்படியா சேதி? எனக்குச் சற்று ஏமாற்றமாகவே இருந்தது. இந்த ஏமாற்றத்துக்கும் அந்த இன்னொரு விவகாரத்துக்கும் சம்பந்த மிருப்பதாய் நினைக்க வேண்டாம்... இந்த செப்டம்பரில் சாஷா தியூனெவாவால் பொறியியல் கல்லூரியில் சேர முடியாமற் போயிற்றே என்று தான் எனக்கு ஏமாற்றமாயிருந்தது.

''இப்படி உனக்கு அதிர்ஷ்டமில்லாமற் போயிருக்க வேண்டியதில்லை, ஆயினும் சோர்வடையாமல் துணிவாகவே நிலைமையைச் சமாளித்துக் கொள்கிருய்'' என்று அவளுக்கு உற்சாகமூட்ட முயன்றேன். ''நாளைக்குப் பரீட்சையில் நானும் தவறிவிட்டால் உன்னுடன் லீபெத்சுக்கு வந்து விடுகிறேன். உன்னுடைய ஆலையில் சேர்ந்து வேலை செய்வேன். என்னை எடுத்துக் கொள்வார்கள் இல்லையா?''

''எடுத்துக் கொள்ள மாட்டார்கள்''.

''ஏன்?''

''முதலாவதாக, நீ பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பயின்ருக வேண்டும் ....'' (பெரிய தொந்தரவு இது, பயிற்சி வகுப்பில் சேர்ந்து தேர்வுபெருமல் ஒருவன் இவ்வுலகில் எதுவும் செய்ய முடியாது.)

''...இரண்டாவதாக, பரீட்சையில் நீ தவறப் போவதில்லை. கல்லூரியில் உன்னைச் சேர்த்துக் கொள்வார்கள்.''

''அது உனக்கு எப்படித் தெரியும்?''

''எனக்குத் தெரியும்'' என்ருள் சாஷா.

கீவ் ரயில் நிலையச் சிற்றுண்டிசாலையில் கோல்யா பிர்யுக்கோவுடன் நான் உட்கார்ந்திருந்த போது எனக்கு ஏற்பட்ட அதே போன்ற ஓர் உணர்வு திடுமென இப்பொழுது ஏற்பட்டது. என் எதிரே இருந்த இவள் வாழ்க்கையில் தனக்குப் பாதையை வகுத்துக் கொண்டு விட்டவள், தான் எங்கே செல்ல வேண்டுமென்று தெரிந்தவள் என்பதை உணரலானேன். ஆனுல் முன்பு என் எதிரே இருந்தது கோல்யா பிர்யுக்கோவ், தொழிற்சங்கக் கமிட்டியின் தலைவனை

நிக்கலாய் இவானவிச். என்னைக் காட்டிலும் மூத்தவன் அவன், அதிக அனுபவமுடையவன், நான் அவனை முதியவனாய் மதிக்க முடிந்தது.

ஆனால் இங்கே என் எதிரே இருப்பவள் சிறு பெண், இவளுக்கு என் வயதுக்கு மேல் ஆகிவிட வில்லை. என்னைக் காட்டிலும் மிகவும் முதியவளாகி முதிர்ச்சியடைந்துவிட்டாற் போல எப்படி இவ ளால் பேச முடிந்தது? பெண்கள்—இவளைப் போல உருவில் சிறுமியாய் இருப்பினும்—ஆண் களைக் காட்டிலும் அதிக விவேகமுடையவர்கள் என்பது மெய்தானா? கீவ் ரயில் நிலையத்தில் கோல்யா பிர்யுக்கோவுடன் இருக்கையில் உண் டான அதே விருப்பம் மீண்டும் இப்பொழுது எனக்கு உண்டாயிற்று, என் உள்ளத்தில் இருந்த வற்றை அப்படியே சாஷாவிடம் சொல்ல வேண்டு மென்ற துடிப்பு எனக்கு உண்டாயிற்று.

அவள் சொல்லியபடி நடைபெற்று நான் இசைக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படுவே னாயின், அது எனது போராட்டத்தில் ஒரு பாதியே ஆகும். அவர்கள் என்னைச் சேர்த்துக் கொண்டு விடலாம், என் பாடங்களைத் தவறாமல் முடித்து நான் பட்டமும் பெறலாம். ஆயினும் அந்தப் பட்டச் சான்றிதழில் அதிகம் இருக்காதே ''பெயர் —புரோஹரொவ்; தகுதி—இசைப்புனைவாளர்'' என்பதற்கு மேல் ஒன்றும் இருக்காதே. மெய் யாகவே நான் இசை புனைகிறவன் என்பதை நிரூபித்தாக வேண்டுமே. எல்லாச் சிக்கலும் இதில் தானே இருக்கிறது, எத்தனையோ பேர் தமது ஆற்றலை வெளிப்படுத்திக் காட்ட முயலுகிறார் கள், ஆயினும் யாரையும் அவர்களால் நம்ப வைக்க முடிவதில்லையே. இவற்றை சாஷாவுக்கு

விளக்கிக் கூற விரும்பினேன். ஆனால் வேண்டா மென முடிவு செய்து கொண்டேன், ஏனெனில் சாஷா சொன்னது போல நான் சேர்த்துக் கொள்ளப்பட்டு விடலாம். ஆனால் கல்லூரியில் சேரத் தவறிவிட்டவளின் எதிரே அமர்ந்து இந்த விவரங்களைப் பேசுவது கொடுமையல்லவா?

''உன் பரீட்சை நடைபெறும் நேரம் என்ன?'' என்று கேட்டாள்.

''பத்து மணி.''

''நானும் வரட்டுமா?''

''எங்கே?''

''இசைக் கல்லூரிக்கு,சைய்க்கோவ்ஸ்கி சிலைக்கு அருகே வந்து காத்திருக்கிறேன்.''

''சரி, வாயேன்'' என்று தலையை ஆட்டினேன்.

* * *

அடர்த்தியான ஜூலை மாதத் தழைகளுக்கும் இசைக் கல்லூரிக் கிராதிக் கம்பிகளுக்கும் அப் பால் பியோத்தர் சைய்க்கோவ்ஸ்கி வீற்றிருந்த உயர் மேடையின் பக்கத்தில் வெண்ணிற ஆடை ஒன்று என் கண்ணுக்குத் தெரிந்தது. பத்து மணி எப்பொழுது அடிக்குமென்று நாங்கள் வாயிற் கதவருகே காத்திருந்தோம்.

வெண்ணிற மண்டபத்திலே எங்களுக்கு அன்று நுழைவுத் தேர்வு. வெண்ணிற மண்டபம், வெண் ணிற ஆடை—பொருத்தமான இந்த இணைவை நான் நல்ல அறிகுறியாய்க் கருதி மனம் மகிழ்ந்து கொண்டேன்.

முந்திய நாளன்று நான் மரத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டதற்காகவும் பரீட்சையன்று காலையில் வெண்ணிற இணைவைக் கண்டு மகிழ்ந்து

கொண்டதற்காகவும் என்னை யார்தான் குறை கூற முடியும்? எல்லாம் அசட்டுத்தனம்தான், ஆனால் ஓர் ஆளின் கதி நிர்ணயமாகும் இம்மாதிரி யான முக்கிய நாளன்று நம்மையும் அறியாமலே நாம் நமது பாதையில் கறுப்புப் பூனை குறுக்கே செல்லாதபடி கவனித்துக் கொள்கிறோம், பஸ் டிக்கெட்டின் இலக்கங்களைக் கூட்டி அதிர்ஷ்ட எண் கிடைக்கிறதா என்று பார்த்துக் கொள் கிறோம்.... மூடநம்பிக்கை இப்படி நம்மை அசடு களாக்கிவிடுகிறது! எதிர்காலமே தீர்மானிக்கப் படும் ஒரு சந்தர்ப்பத்தில் மூடநம்பிக்கை எல்லை மீறிவிடுகிறது.

தடித்த இசையேட்டுக் கட்டை வைத்துக் கொண்டு அங்கே ஒரு மூலையில் நின்றிருந்த ஆளின் தாடி என் கவனத்தைக் கவர்ந்தது. அவர் மீண் டும் மீண்டும் சுவர் பக்கம் திரும்பிக் காசைச் சுண்டி விட்டு தலை விழுகிறதா, பூ விழுகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தார்.

இசைப்புனைவுப் பரீட்சைக்கு இன்னும் கால் மணி நேரமே இருந்தது. நரை முடிகளையுடைய ஆடவரும் பெண்டிரும் வரத் தொடங்கினர்—எங்கள் கதியை நிர்ணயிக்கப் போகிறவர்கள் இவர்கள். நரை முடிகளில்லாத இளம் வயதினர் சிலரும் வந்தார்கள்—இவர்களும் எங்கள் கதியை நிர்ணயிப்பவர்கள்தான். கல்லூரியில் சேர விரும்பி யவர்களான நாங்கள் இவர்கள் போவதற்கு இடம் விட்டு ஒதுங்கிக் கொண்டோம். பணிவுடன் "வந்தனத்தைத்" தெரிவித்து இடைவெளி விட்டு நின்றோம்.

தலைமையானவராகிய அவர் வந்ததும் எங்க ளிடையே பயபக்தி மிகுந்த நிசப்தம் ஏற்பட்டது.

''வந்தனம், வந்தனம்...'' என்று முணுமுணுப்பு எழுந்தது.

மூக்குக் கண்ணாடியை எங்கள் எல்லோர் திசையிலும் ஒரு முறை திருப்பியவாறு சற்றே குனிந்து அவர் ''வந்தனம்'' என்ருர்.

முன்வரிசையை ஒட்டினுற் போல் நான் நின்றிருந்தேன், என்னை அவர் கவனிக்கத் தவறியிருக்க முடியாது. எல்லோரையும் அவர் கவனித்தார், ஆனுல் நான் எல்லோருக்கும் முதலாய்க் கண்ணில் படும்படி முக்கியமான ஓரிடத்தில் நின்றிருந்தேன். ஆனுல் என்னை அவர் கண்டு கொண்டதாய்த் தெரியவில்லை. எனக்கு ஏமாற்றமாகவே இருந்தது. ஆயினும் மறுகணமே இந்த நிலையிலிருந்து மாறி உற்சாகமடையலானேன், அவர் என்னை அடையாளம் தெரிந்து கொள்ளாதது நல்ல சகுனமே என்ற மூடிநம்பிக்கை நினைவுக்கு வந்தது. நான் வந்த காரியம் வெற்றி பெறும், கல்லூரியில் என்னைச் சேர்த்துக் கொண்டுவிடுவார்கள் என்று நினைத்து மகிழ்ச்சியடைந்தேன். மற்ருேர் எண்ணமும் என் மனத்துள் உதித்தது. வேண்டுமென்றேதான் அவர் என்னை அடையாளம் தெரியாதவர் போல் பாவனை செய்வதாய் எனக்குப் பட்டது. தேர்வாளர் குழுவின் உறுப்பினரான அவர் கல்லூரியில் சேர வந்திருந்த என்னைத் தமக்குத் தெரியுமென எல்லோருக்கும் முன்னிலையில் காட்டிக் கொள்வது நல்லதல்லவே.

கூட்டமாய் நின்றிருந்த நாங்கள் எல்லோரும் இதன்பின் கட்டடத்துக்குள் சென்ருேம். உள்ளே செல்லும் முன்பு நான் தலையைத் திருப்பிக் கிராதிக் கம்பிகளுக்கு அப்பால் பார்த்தேன். பியோத்தர் சைய்க்கோவ்ஸ்கி அங்கேதான் மேடையில்

வெண்கல நாற்காலியில் அமர்ந்திருந்தார், வாத்தியக் குழுவை அழைப்பது போலே அவருடைய கரம் உயர்ந்து அசையாது நின்றது. அவருடைய காலடியில் வெண்ணிற ஆடை இன்னமும் காற்றில் படபடத்துக் கொண்டுதான் இருந்தது.

சுண்டெலி போன்ற சிற்றுருவினளாகிய ஒரு பெண்தான் யாவருக்கும் முதலாய்ப் பரீட்சைக்காக உள்ளே அழைக்கப்பட்டாள். பரீட்சை அறைக்குள் அவள் சென்றதும் வெளியே பலரும் பெரிய மனிதத் தோரணையில் புன்னகை புரிந்து கொண்டார்கள். அவளுடைய சிற்றுருவல்ல இந்தப் புன்னகைக்குக் காரணம். அவளுக்கு வெற்றி கிட்டப் போவதில்லை, தொன்னெடுங் காலந் தொட்டு, இசைக் கலையின் வரலாற்றிலேயே இதுவரை பெரிய இசைப் புலவாளராய் எந்தப் பெண்ணும் இருந்ததில்லை என்பதே காரணம். எதனுலோ தெரியவில்லை, இத்துறையில் பெண்களால் முன்னிலைக்கு வர முடியவில்லை. நம் நாட்டில் ஏனைய எல்லாத் துறைகளிலும் தாய் வழி முறைமையே மேலோங்கிச் செல்வதாய்த் தோன்றுகிறது, ஆனுல் இசைப்புலவில் மட்டும் ஆடவர்களின் முதன்மை நிலை இன்னமும் அசைக்கப்பட்டாகவில்லை.

பருத்த இசையேட்டுக் கட்டை வைத்திருந்த அந்தக் தாடிக்காரர் என்னிடம் வந்து ''நீ என்ன கொண்டு வந்திருக்கிருய்?'' என்று கேட்டார்.

''ஒன்றுமில்லை, ஒரு எட்டூட், ஒரு வால்ட்ஸ்— அவ்வளவுதான்'' என்று சற்றுப் பரிதாபமான குரலில் சொன்னேன்.

''அவ்வளவுதாஞ?'' என்ருர், என் நிலைக்காக இரக்கம் தொனிக்கும் குரலில்.

''உங்களிடம் என்ன வைத்திருக்கிறீர்கள்?'' என்று மரியாதைக்காக வேண்டி அவரை விசாரித்தேன்.

''சிம்பொனி ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்'' என்றார் தாடிக்காரர். ''எனது இரண்டாவது சிம்பொனி.''

அப்படியானால் கடந்த ஆண்டில் அவர் தமது முதலாவது சிம்பொனியைச் சமர்ப்பித்து நுழைவுத் தேர்வில் தோல்வியுற்றிருக்க வேண்டும். ஐந்தாவது சிம்பொனியைக் கொண்டு வந்தாரானால் வெற்றி பெற்றுவிடுவார் என்று நினைத்துக் கொண்டேன். ஐந்தாவது சிம்பொனிகள் பொதுவாய்த் தரமாய் அமைந்துவிடக் கூடியவை.

இசைக் கல்லூரியின் சுவர்கள் தடியானவை, பழங் காலத்தில் கட்டினார்களே அம்மாதிரியானவை. கதவுகளும் சன்னல்களும் நன்றாய்க் கெட்டியாய் மூடிக் கொள்ளக் கூடியனவாய் இருந்தன. ஆகவே உள்ளே நடைபெற்றவை எங்கள் காதில் விழவில்லை, இருந்தாலும் அந்தக் கட்டடம் முழுதும் பல்வேறு வாத்தியங்களின் இசையும் வாய்ப்பாட்டுகளும் நிரம்பியிருந்ததை எங்களுடைய செவியுணர்வு தெளிவாய் உணர்த்திற்று. ஒவ்வொரு மாடியிலும் ஒவ்வொரு மண்டபத்திலும் அறையிலும் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. காலத்தால் சிறப்புற்றிருந்த அந்தப் பழம் பெரும் சுவர்களை இசையின் நாதம் அதிரச் செய்தன.

சுண்டெலி போன்றவள் உள்ளப் பூரிப்பால் முகம் பளிச்சிட்டுப் பிரகாசிக்க அறையிலிருந்து ஆனந்தமாய் வெளியே வந்தாள். என்ன இது?...

தொன்னெடுங் கால மரபுகள் தகர்க்கப்பட்டு விட்டனவா, என்ன?

வீல் மூக்குக் கண்ணுடி அணிந்த கடுமையான முகபாவமுள்ள அன்னை பரீட்சை அறைக்குள் வருமாறு எங்களில் ஒருவரை அழைப்பதற்காக வெளியே வந்தார். பரீட்சை தருவோரின் பெயர்ப் பட்டியலிலிருந்து அவர் அடுத்த பெயரை அறிவித்தார்.

தாடிக்காரர் பாய்ந்து தாக்கப் போகிறவரைப் போல் தலையைக் குனிந்து கொண்டு அறைக் கதவை நோக்கி விரைந்தார். அதன்பின் பூவேலைப் பாடு செய்யப்பட்ட உக்ரேனியச் சட்டை போட்டிருந்த ஓராள், இளமையின் முதற் பகுதியைக் கடந்துவிட்டவர், என்னிடம் வந்தார். (எல்லோரையும் விட்டுவிட்டு ஏன்தான் இவர்கள் என்னிடம் வந்தார்களோ!) ''நான் பாட்டுகள் கொண்டு வந்திருக்கிறேன், வெறும் பாட்டுகளை வைத்திருப்பவனுக்கு வாய்ப்பு உண்டா? நீ என்ன நினைக்கிருய்?'' என்று அவர் என்னைக் கேட்டார்.

அவருடைய கண்களில் ஏக்கம் குடிகொண்டிருந்தது. ''வாய்ப்பு உண்டுதான், பாட்டுகள் மிகவும் முக்கியமானவை ஆயிற்றே'' என்று உடனே நான் பதிலளித்தேன்.

''வெறும் பாட்டுகளை மதிப்பார்கள் என்று சொல்கிருய்?...''

நேர்த்தியாய்ப் பூவேலைப்பாடு செய்யப்பட்ட அவருடைய சட்டையைக் கவனித்தவாறு, நிச்சயம் மதிப்பார்கள் என்று அவரிடம் சொன்னேன். அவருடைய பாட்டுகளின் சிறப்பைக் கருதி அவரைக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளலாமே என்று கூறினேன். அவருடைய கண்களில் ததும்

பிய அந்த சஞ்சலம் அவருடைய பாட்டுகளிலும் இல்லையானுல் அவரைச் சேர்த்துக் கொள்ள ஏன் மறுக்கிருர்கள்?

இருபது நிமிடங்களுக்குப் பிற்பாடு தாடிக் காரர் வெளியே வந்தார். அவருக்கு நெடுநேரம் அளிக்க அவர்கள் தவறவில்லை, சிம்பொனி அல்ல வா கொண்டு வந்திருந்தார். ஆனுல் முன்பு நான் நினைத்தது பிழையாகிவிடவில்லை என்பதை அவ ருடைய முக பாவனை சந்தேகத்துக்கு இடமின்றி தெரியப்படுத்திற்று. ஐந்தாவது சிம்பொனி யுடன் வந்திருந்தாராஞல் நன்ருய் இருந்திருக்கும். அவரைப் பார்த்தபோது பாவமாயிருந்தது....

அடுத்தபடி போக வேண்டியது யார் தெரிய வில்லையே. எதற்கும் எச்சரிக்கையுடன் இருப்போ மென சன்னல் வழியே வெளியே பார்த்தேன், சைய்க்கோவ்ஸ்கி சிலையும் வெண்ணிற ஆடை யும் உரிய இடத்தில் இருக்கின்றனவா என்று கவனித்தேன். யாவும் இருக்க வேண்டிய இடத் தில்தான் இருந்தன.

வில் மூக்குக்கண்ணுடி அணிந்த அன்னை தமது பட்டியலைப் பார்த்துவிட்டு அறிவித்தார்:

''மேன்யா புரோஹரொவ்.''

## வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயைசெய்து “Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR” என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

*6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2*

**ஷோ-ரூம்**

*6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2*

**கிளைகள்**

*80, மேலக் கோபுர வீதி, மதுரை-1*
*87/89, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-1*
*சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி-8*
*பஸ் நிலையம், தஞ்சாவூர்*

## பிரசுரமாகியுள்ள நூல்கள்:

### இவான் துர்கேனிவ்
### **தந்தையரும் தனயர்களும்**
### நவீனம்

*''1860 ஆகஸ்டு மாதம்* **தந்தையரும் தனயர்களும்** *பற்றிய முதல் எண்ணம் என் மனத்தில் உதித்தது...'' என்று எழுதினர் துர்கேனிவ். ''என்னைப் பரவசத்தில் ஆழ்த்திய நாட்டுப்புற மருத்துவன் ஒருவனுடைய தனித்தன்மையே நவீனத்தின் பிரதான பாத்திரமான பஸாரவின் படைப்புக்கு அடிப்படையாக அமைந்தது... அப்போதுதான் அரும்பி இதழ் விரியத் தொடங்கி, பிற்பாடு நிஹலிஸம் என்று பெயர் பெற்ற கருத்து இந்த அருமையான மனிதனில் பருவடிவு பெற்றிருந்ததாக என் கண்களுக்குப் பட்டது...''*

*சிறந்த ருஷ்ய நூலாசிரியர் துர்கேனிவ் (1818-1883)* **தந்தையரும் தனயர்களும்** *என்னும் நவீனத்தில், 19ம் நூற்றுண்டின் 60க்களில் இருந்த ருஷ்ய சமூக வாழ்க்கையின் தெளிவான ஓவியத்தை மிகுந்த கலைத் தேர்ச்சியுடன் தீட்டியுள்ளார். அதன் சிக்கலான கொள்கைவாதப் போராட்டமும் கூரிய சமுதாய அரசியல் முரண்பாடுகளும் நவீனத்தில் துலக்கமாகச் சித்திரிக்கப்பட்டுள்ள. துர்கேனிவின் நுட்பமான காவிய எழில் வாய்ந்த எழுத்தாற்றலும் மனித உள்ளத்தின் சின்னஞ்சிறு இயக்கத்தையும் கூர்ந்து கவனிக்கும் திறனும் எப்போதும் போலவே இதில் காணக் கிடக்கின்றன.*

*பியோதர் தாஸ்தயேவ்ஸ்கி*

## வெண்ணிற இரவுகள்

*(கதைகள்)*

**குற்றமும் தண்டனையும், பைத்தியக்காரன், கரமாசவ் சோதரர்கள்** *போன்ற உலகப் புகழ் பெற்ற நாவல்கள் எழுதிய பியோதர் தாஸ்தயேவ்ஸ்கி அதியற்புத சிறுகதை ஆசிரியருமாவார். தாஸ்தயேவ்ஸ்கியின் கதைகளின் இந்தத் தொகுபில் மூன்று கதைகள் இடம் பெறுகின்றன. 1843க்கும் 1866க்கும் இடையில் எழுதப்பட்டவை இவை.*

**வெண்ணிற இரவுகள்** *என்பது உள்ளங் கவரும் ஒரு நங்கையின்பால் ஓர் இளங் கவிஞனுக்குள்ள சித்தி பெருக் காதலைக் கூறும் இன்னருங் கதை. இளைஞராய் இருந்த போது 1843ல் தாஸ்தயேவ்ஸ்கி எழுதிய இந்தக் கதை ஒப்பற்ற கவிதை நயத்துக்கும் இனிமைக்கும் பெயர் பெற்றது.*

**அருவருப்பான விவகாரம்** *(1862) ஒரு முக்கிய ஜாரிஸ்டு அதிகாரிக்கு நிகழ்ந்த நம்புதற்கரிய நிகழ்ச்சியைச் சித்திரிக்கிறது.*

**சூதாடி** *(1866)—இது ஒரு நாவல். சூதாடியை ஆட்டிப் படைக்கும் பைத்தியக்கார வெறியை ஆராயும் அரிய படைப்பு. கதைத் தலைவனை ஆட்கொண்டு விடும் சூதாட்டப் பித்து அவனது உள்ளத்தின் ஏனைய எல்லா உணர்ச்சிகளையும், தூய காதலையுங்கூட, தோற்கடித்து அடக்கியொடுக்குவதைக் காட்டுகிறது.*

# நவரத்தின மலே
# சோவியத் நாட்டு மக்கள் கதைகள்
## தொகுப்பு

''பாடல்கள் மக்கள் உள்ளத்தைத் திறந்து காட்டுகின்றன, கதைகள் அவர்களின் மூதறிவைக் காட்டுகின்றன'' என்பது முதுமொழி. **நவரத்தின மலே** என்னும் தொகுப்பில் சோவியத் நாட்டு மக்களின் ஒரு நாற்பது சிறந்த கதைகள் திரட்டித் தரப்பட்டுள்ளன.

மந்திரங்களும் மாயங்களும் நிறைந்த ருஷ்யக் கதைகள், உக்ரேனியர்களின் சாதுரியமான கதைகள், சோவியத் கிழக்குப் பகுதி மக்களின் வண்ணக் கோலங்கள் வாய்ந்த கதைகள், வட புலத்து மக்களின் தனிவகைக் கதைகள் ஆகியன இந்தத் தொகுப்பில் உள்ளன.

பிரபல ஓவியர் விளதீமிர் மினுயெவ் புத்தகத்துக்கு விளக்கப் படங்கள் தீட்டியுள்ளார். தொகுபில் இடம் பெற்றுள்ள பெரிய வண்ண ஓவியங்கள் தவிர ஒவ்வொரு கதைக்கு முன்பும் பேனுச் சித்திரம் வரையப்பட்டுள்ளது. இந்தக் கதை விளக்க ஓவியரின் தனிப் பாணியில் சுளுவாக, துலக்கமாக, கட்டின்றி வரையப்பட்டுள்ளன இந்தப் படங்கள்.